வெளியீடு : 6-9-2022 Issued: 6-9-2022

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினாறாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(SIXTEENTH ASSEMBLY)

புதன்கிழமை, செப்டம்பர் 8, 2021—தொகுதி 19—எண் 1

Wednesday, the 8th September 2021—Volume 19—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8–9–2021

உள்ளடக்கம்

		பக்கங்கள்
	ஆளுநரும் அமைச்சரவையும்	vii-xii
	Governor and Council of Ministers	xiii-xvii
	பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xix-xxii
	பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxiii-xxxii
1.	**வினாக்கள்—விடைகள்—**	1-28
	உடுக்குறியிட்ட வினாக்கள்	1-28
2.	**கவன ஈர்ப்பு—**	28, 37-43
	(அ) மண்பாண்டம் செய்தல் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக மண் எடுத்தல்	28, 37
	(ஆ) மேட்டூர் அரசு கலைக் கல்லூரி, ஆசிரியரல்லாத தற்காலிகப் பணியாளர்களின் பணியை வரன்முறை செய்தல்	37-43
	திரு. ஜி.கே. மணி	37-42
	*மாண்புமிகு முனைவர் க. பொன்முடி	38-43
3.	**தகவல் கோரல்—**	
	முந்தைய ஆட்சியில் உயர் கல்வித் துறையில் செயல்படுத்திய திட்டங்கள்	28-36
	திரு. கே.பி. முனுசாமி	29-30, 32-33
	மாண்புமிகு திரு. துரைமுருகன்	30-31, 34, 36

			பக்கங்கள்
3.	**தகவல் கோரல்**—தொடர்ச்சி		
	திரு. எடப்பாடி K. பழனிசாமி		32-33, 35-36
	மாண்புமிகு திரு. எ.வ. வேலு		34-35
4.	**அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—		43-46
	(அ)	*தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021*	43-44
		மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்	44
	(ஆ)	*தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021*	44-45
		*மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு	44-45
	(இ)	*தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021*	45-46
		*மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்	45
	(ஈ)	*தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2021*	46
		மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்	46
5.	**அரசினர் தீர்மானம்**—		
	பேரவை விதி 185(2)—ஐத் தளர்த்துதல்		
	மாண்புமிகு திரு. துரைமுருகன்		47

பக்கங்கள்

6. அரசினர் தனித் தீர்மானம்—

ஒன்றிய அரசின் இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019–ஐ இரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்துதல்	47-66
*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்	47-51, 66
மாண்புமிகு திரு. துரைமுருகன்	51, 64-66
திரு. தி. வேல்முருகன்	52-53
திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்	53-54
*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா	54-55
டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்	55-56
திரு. ட்டி. இராமச்சந்திரன்	56-57
*திரு. வி.பி. நாகைமாலி	57
*திரு. ம. சிந்தனை செல்வன்	58-59
திரு. நயினார் நாகேந்திரன்	59-61
திரு. ஜி.கே. மணி	61-62
திரு. கு. செல்வபெருந்தகை	62-64

7. விதி 110–ன்கீழ் அறிக்கை—

தமிழ்நாடு ஆதி திராவிடர்–பழங்குடியினர் நல ஆணையம் உருவாக்குதல், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள வழக்குகளை விரைவாக இறுதி செய்ய புதிதாக நான்கு நீதிமன்றங்கள் அமைத்தல் உள்ளிட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை	
*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்	67-70

		பக்கங்கள்
8.	**மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்**–*தொடர்ச்சி*	70-237, 238-426
	(அ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை *(ஆ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை*	70-237
	**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்*	70-71, 82, 202-223
	மாண்புமிகு திருமதி நா. கயல்விழி	76, 83, 179-202
	மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்	82-83, 223-235
	**திரு. மு. ஜெகன் மூர்த்தி*	84-94
	**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி*	95-111
	**திரு. ஜோசப் சாமுவேல்*	112-121
	**திரு. துரை. சந்திரசேகர்*	121-127
	முனைவர் த. இனிகோ இருதயராஜ்	127-137
	**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா*	137-153
	**திரு. மு. பாபு*	153-165
	திரு. கே. பொன்னுசாமி	165-170, 173-178
	**மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி*	170-173

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

8.	**மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்**–*தொடர்ச்சி*	
(இ)	*கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்– நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)*	238-426
(ஈ)	*கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை*	
(உ)	*கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை*	
	மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்	238,243, 256, 270-271, 357-360, 371, 402-424
	**மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்*	251, 256-257, 381-401
	**திரு. நத்தம் ஆர். விசுவநாதன்*	257-283
	**மாண்புமிகு திரு. கே.என். நேரு*	260, 264-266, 268
	மாண்புமிகு திரு. துரைமுருகன்	261, 281, 283, 296-298, 412
	**மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி*	267
	**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்*	273-274, 276-279

பக்கங்கள்

8. மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு 274, 367, 369

முனைவர் கோவி. செழியன் 276, 282-292, 294 , 298-305

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன் 279

திரு. எஸ்.பி. வேலுமணி 292-296, 298

*மாண்புமிகு முனைவர் க. பொன்முடி 293

*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 294

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான் 297-298

*திரு. ச. அரவிந்த் ரமேஷ் 305-331

*திரு. தி. ராமச்சந்திரன் 331-341

*திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர் 341-354

திரு. K. மாரிமுத்து 354-361

*திருமதி V. அமலு 361-366

திரு. மா. செந்தில்குமார் 367-381

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு 369-370

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன் 373-374

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 427-428

10. இணைப்புகள் 429-751

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் — மாண்புமிகு திரு. பன்வாரிலால் புரோகித்

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1.	முதலமைச்சர்	.. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, சிறப்பு முயற்சிகள், சிறப்புத் திட்ட செயலாக்கம், மாற்றுத் திறனாளிகள் நலன்
2.	நீர்வளத் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்
3.	நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:** நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்
4.	கூட்டுறவுத் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்
5.	உயர் கல்வித் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

6. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

பொதுப் பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

7. வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

8. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:**

வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை

9. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்

10. சட்டத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:**

சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்

11. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு, நகரத் திட்டமிடல், நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்

12. ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள்

13. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், குடிசை மாற்று வாரியம்

14. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்

15. சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

16. மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு

17.	**போக்குவரத்துத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:** *போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம்*
18.	**வனத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** *வனம்*
19.	**உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** *உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு*
20.	**மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு*
21.	**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** *கைத்தறி மற்றும் துணிநூல், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூதானம் மற்றும் கிராம தானம்*
22.	**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு*
23.	**வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** *வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு*

24. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:**

பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்

25. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:**

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள்

26. நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:**

நிதித் துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள்

27. பால்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:**

பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

28. சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்:**

சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃப் வாரியம்

29. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:**

பள்ளிக் கல்வி

30. சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

31.	**தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்:** *தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*
32.	**தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்:** *தகவல் தொழில்நுட்பத் துறை*
33.	**சுற்றுலாத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*
34.	**ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திருமதி நா. கயல்விழி:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR – HON'BLE THIRU BANWARILAL PUROHIT

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1.	**Chief Minister**	.. **The Hon. Thiru M.K. Stalin:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Other All India Service, District Revenue Officers, Police, Home, Special Initiatives, Special Programme Implementation, Welfare of the Differently abled persons
2.	**Minister for Water Resources**	.. **The Hon. Thiru Duraimurugan:** Irrigation Projects including small Irrigation, Legislative Assembly, Governor and Ministry, Elections and Passports, Minerals and Mines
3.	**Minister for Municipal Administration**	.. **The Hon. Thiru K.N. Nehru:** Municipal Administration, Urban and Water Supply
4.	**Minister for Co-operation**	.. **The Hon. Thiru I. Periyasamy:** Co-operation, Statistics and Ex-Servicemen Welfare
5.	**Minister for Higher Education**	.. **The Hon. Dr. K. Ponmudy:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology
6.	**Minister for Public Works**	.. **The Hon. Thiru E.V. Velu:** Public Works (Buildings), Highways and Minor Ports

7.	**Minister for Agriculture and Farmer's Welfare**	.. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Excise, Sugarcane Development and Waste Land Development
8.	**Minister for Revenue and Disaster Management**	.. **The Hon. Thiru K.K.S.S.R Ramachandran:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Disaster Management
9.	**Minister for Industries**	.. **The Hon. Thiru Thangam Thennarasu:** Industries, Tamil Official Language and Tamil Culture, Archeology
10.	**Minister for Law**	.. **The Hon. Thiru S. Reghupathy:** Law, Courts, Prisons and Prevention of Corruption
11.	**Minister for Housing and Urban Development**	.. **The Hon. Thiru S. Muthusamy:** Housing, Rural Housing, Town Planning projects and Housing Development, Accommodation Control, Urban Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority
12.	**Minister for Rural Development**	.. **The Hon. Thiru K.R. Periakaruppan:** Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

13.	**Minister for Rural Industries**	.. **The Hon. Thiru T.M. Anbarasan:** Rural Industries including Cottage Industries, Small Industries, Slum Clearance Board
14.	**Minister for Information & Publicity**	.. **The Hon. Thiru M.P. Saminathan:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Newsprint Control, Stationery and Printing, Government Press
15.	**Minister for Social Welfare & Women Empowerment**	.. **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Social Welfare including Women and Children Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development Scheme and Beggar Homes and Social Reforms & Nutritious Meal Programme
16.	**Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry**	.. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Fisheries, Fisheries Development Corporation and Animal Husbandry
17.	**Minister for Transport**	.. **The Hon. Thiru R.S. Rajakannappan:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
18.	**Minister for Forests**	.. **The Hon. Thiru K. Ramachandran:** Forests
19.	**Minister for Food and Civil Supplies**	.. **The Hon. Thiru R. Sakkarapani:** Food and Civil Supplies, Consumer Protection and Price Control

TRUTH ALONE TRIUMPHS

20.	**Minister for Electricity, Prohibition & Excise**	.. **The Hon. Thiru V. Senthilbalaji:** Electricity, Non Conventional Energy Development, Prohibition and Excise, Molasses
21.	**Minister for Handlooms and Textiles**	.. **The Hon. Thiru R. Gandhi:** Handlooms and Textiles, Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan
22.	**Minister for Health and Family Welfare**	.. **The Hon. Thiru Ma. Subramanian:** Health, Medical Education and Family Welfare
23.	**Minister for Commercial Taxes and Registration**	.. **The Hon. Thiru P. Moorthy:** Commercial Taxes, Registration and Stamp Act, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits and Registration of Companies
24.	**Minister for Backward Classes Welfare**	.. **The Hon. Thiru S.S. Sivasankar:** Backward Classes Welfare, Most Backward Classes Welfare and Denotified Communities Welfare
25.	**Minister for Hindu Religious and Charitable Endowments**	.. **The Hon. Thiru P.K. Sekarbabu:** Hindu Religious and Charitable Endowments
26.	**Minister for Finance and Human Resources Management**	.. **The Hon. Dr. Palanivel Thiaga Rajan:** Finance, Planning, Human Resources Management, Pensions and Pensionary benefits
27.	**Minister for Milk & Dairy Development**	.. **The Hon. Thiru S.M. Nasar:** Milk and Dairy Development

28.	**Minister for Minorities Welfare and Non Resident Tamils Welfare**	.. **The Hon. Thiru Gingee K.S. Masthan:** Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board
29.	**Minister for School Education**	.. **The Hon. Thiru Anbil Mahesh Poyyamozhi:** School Education
30.	**Minister for Environment - Climate Change and Youth Welfare and Sports Development**	.. **The Hon. Thiru Siva.V. Meyyanathan:** Environment and Pollution Control, Youth Welfare and Sports Development
31.	**Minister for Labour Welfare and Skill Development**	.. **The Hon. Thiru C.V. Ganesan:** Labour Welfare, Population, Employment and Training, Census, Urban and Rural Employment
32.	**Minister for Information Technology**	.. **The Hon. Thiru T. Mano Thangaraj:** Information Technology
33.	**Minister for Tourism**	.. **The Hon. Dr. M. Mathiventhan:** Tourism and Tourism Development Corporation
34.	**Minister for Adi Dravidar Welfare**	.. **The Hon. Tmt. N. Kayalvizhi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour Welfare

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. மு. அப்பாவு

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

மாற்றுத் தலைவர்கள்#

திரு. க. அன்பழகன்

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. S.R. இராஜா

திரு. தா. உதயசூரியன்

திரு. துரை. சந்திரசேகரன்

முனைவர் T.R.B. ராஜா

செயலாளர்

திரு. கி. சீனிவாசன்

16-8-2021 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

முக்கிய அலுவலர்கள்

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ. .. சிறப்புச் செயலாளர்

திரு. இரா. சந்திரசேகரன், எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. .. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல். .. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல். .. கூடுதல் செயலாளர்

திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல்., .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர்

திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர்

திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல். .. இணைச் செயலாளர்

திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. .. இணைச் செயலாளர்

திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். .. இணைச் செயலாளர்

திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல். .. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் (இணைச் செயலாளர் நிலை)

திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல்.	.. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணைச் செயலாளர்
திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல்.	.. குழு அலுவலர் (பொதுக் கணக்குக் குழு)
திரு. ஸ்ரீ.ரா. ரவி, எம்.காம்., பி.எல்.	.. குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை)
திரு. பா. ரவிச்சந்திரன், பி.எஸ்சி.	.. குழு அலுவலர் (பொது நிறுவனங்கள் குழு)
திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	.. தலைமை நிருபர்

திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. க.நா. வளர்வேந்தன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திருமதி செ. சாந்தகுமாரி, பி.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. ஜெ. பாஸ்கரன், பி.ஏ. .. தலைமை நிருபர்

திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. ஜெ. பாலசீனிவாசன், எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜிஎல். .. சார்புச் செயலாளர்

திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி. .. சார்புச் செயலாளர்

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பேரவை உறுப்பினர்கள்
(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு.	..	போளூர்
2.	அசன் மௌலானா, திரு. JMH.	..	வேளச்சேரி
3.	அசோகன், திரு. G.	..	சிவகாசி
4.	அசோக்குமார், திரு. கி.	..	கிருஷ்ணகிரி
5.	அசோக்குமார், திரு. N.	..	பேராவூரணி
6.	அண்ணாதுரை, திரு. கா.	..	பட்டுக்கோட்டை
7.	அப்துல் சமது, திரு. ப.	..	மணப்பாறை
8.	அப்துல் வஹாப், திரு. மு.	..	பாளையங்கோட்டை
9.	அப்பாவு, திரு. மு.	..	ராதாபுரம்
10.	அமலு, திருமதி V.	..	குடியாத்தம் (தனி)
11.	அமுல் கந்தசாமி, திரு. T.K.	..	வால்பாறை (தனி)
12.	அம்பேத்குமார், திரு. S.	..	வந்தவாசி (தனி)
13.	அம்மன் K. அர்ச்சுணன், திரு.	..	கோயம்புத்தூர் (வடக்கு)
14.	அய்யப்பன், திரு. பி.	..	உசிலம்பட்டி
15.	அரவிந்த் ரமேஷ், திரு. ச.	..	சோழிங்கநல்லூர்
16.	அருண்குமார், திரு. P.R.G.	..	கவுண்டம்பாளையம்
17.	அருண்மொழிதேவன், திரு. ஆ.	..	புவனகிரி
18.	அருள், திரு. இரா.	..	சேலம் (மேற்கு)
19.	அர்ஜுனன், திரு. பொ.	..	திண்டிவனம் (தனி)
20.	அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு.	..	திருச்செந்தூர்
21.	அன்பரசன், திரு. தா.மோ.	..	ஆலந்தூர்
22.	அன்பழகன், திரு. க.	..	கும்பகோணம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

23.	அன்பழகன், திரு. கே.பி.	.. பாலக்கோடு
24.	அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு.	.. திருவெறும்பூர்
25.	ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.	.. பல்லடம்
26.	இசக்கி சுப்பையா, திரு.	.. அம்பாசமுத்திரம்
27.	இராசேந்திரன், திரு. சபா.	.. நெய்வேலி
28.	இராமகிருஷ்ணன், திரு. நா.	.. கம்பம்
29.	இராமச்சந்திரன், திரு. ட்டி.	.. தளி
30.	இராமச்சந்திரன், திரு. K.K.S.S.R.	.. அருப்புக்கோட்டை
31.	இராஜா, திரு. S.R.	.. தாம்பரம்
32.	இராஜேந்திரன், திரு. இரா.	.. சேலம் (வடக்கு)
33.	இராஜேந்திரன், திரு. வி.ஜி.	.. திருவள்ளூர்
34.	இலட்சுமணன், டாக்டர் இரா.	.. விழுப்புரம்
35.	இளங்கோ, திரு. ரா.	.. அரவக்குறிச்சி
36.	இனிகோ இருதயராஜ், முனைவர் த.	.. திருச்சிராப்பள்ளி (கிழக்கு)
37.	ஈஸ்வரப்பன், திரு. J.L.	.. ஆற்காடு
38.	ஈஸ்வரன், திரு. ஈ.ஆர்.	.. திருச்செங்கோடு
39.	உதயகுமார், திரு. ஆர்.பி.	.. திருமங்கலம்
40.	உதயசூரியன், திரு. தா.	.. சங்கராபுரம்
41.	உதயநிதி ஸ்டாலின், திரு.	.. சேப்பாக்கம்—திருவல்லிக்கேணி
42.	ஊர்வசி அமிர்தராஜ், திரு. செ.	.. ஸ்ரீவைகுண்டம்
43.	எடப்பாடி K. பழனிசாமி, திரு.	.. எடப்பாடி
44.	எபினேசர் என்கிற ஜான் எபினேசர், திரு. ஜே.ஜே.	.. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
45.	எழிலரசன், திரு. சி.வி.எம்.பி.	.. காஞ்சிபுரம்

46.	எழிலன், டாக்டர் நா.	.. ஆயிரம் விளக்கு
47.	ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு.	.. இராயபுரம்
48.	ஐயப்பன், திரு. கோ.	.. கடலூர்
49.	கடம்பூர் ராஜூ, திரு.	.. கோவில்பட்டி
50.	கணபதி, திரு. க.	.. மதுரவாயல்
51.	கணேசன், திரு. சி.வெ.	.. திட்டக்குடி (தனி)
52.	கணேஷ், திரு. ஆர்.	.. உதகமண்டலம்
53.	கண்ணன், திரு. க.சொ.க.	.. ஜெயங்கொண்டம்
54.	கதிரவன், திரு. சீ.	.. மண்ணச்சநல்லூர்
55.	கந்தசாமி, திரு. V.P.	.. சூலூர்
56.	கயல்விழி, திருமதி நா.	.. தாராபுரம் (தனி)
57.	கருணாநிதி, திரு. இ.	.. பல்லாவரம்
58.	கருணாநிதி, திரு. ஜெ.	.. தியாகராய நகர்
59.	கருப்பணன், திரு. K.C.	.. பவானி
60.	கருமாணிக்கம், திரு. இராம.	.. திருவாடனை
61.	காதர்பாட்சா முத்துராமலிங்கம், திரு.	.. இராமநாதபுரம்
62.	காந்தி, திரு. ஆர்.	.. ராணிப்பேட்டை
63.	காந்தி, திரு. எம்.ஆர்.	.. நாகர்கோவில்
64.	காந்திராஜன், திரு. எஸ்.	.. வேடசந்தூர்
65.	காமராஜ், திரு. இரா.	.. நன்னிலம்
66.	கார்த்திகேயன், திரு. க.	.. ரிஷிவந்தியம்
67.	கார்த்திகேயன், திரு. ப.	.. வேலூர்
68.	கிரி, திரு. மு.பெ.	.. செங்கம் (தனி)
69.	கிருஷ்ணசாமி, திரு. ஆ.	.. பூந்தமல்லி (தனி)
70.	கிருஷ்ணமுரளி, திரு. செ.	.. கடையநல்லூர்
71.	கீதா ஜீவன், திருமதி பி.	.. தூத்துக்குடி

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

72. கோவிந்தசாமி, திரு. ஆ. .. பாப்பிரெட்டிப்பட்டி
73. கோவிந்தராஜன், திரு. டி.ஜெ. .. கும்மிடிப்பூண்டி
74. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
75. சக்ரபாணி, திரு. மு. .. வானூர் (தனி)
76. சங்கர், திரு. கே.பி. .. திருவொற்றியூர்
77. சண்முகையா, திரு. எம்.சி. .. ஒட்டப்பிடாரம் (தனி)
78. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (தனி)
79. சதாசிவம், திரு. S. .. மேட்டூர்
80. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
81. சந்திரசேகர், திரு. துரை. .. பொன்னேரி (தனி)
82. சந்திரன், திரு. S. .. திருத்தணி
83. சம்பத்குமார், திரு. வே. .. அரூர் (தனி)
84. சரவணக்குமார், திரு. கே.எஸ். .. பெரியகுளம் (தனி)
85. சரவணன், திரு. பெ.சு.தி. .. கலசப்பாக்கம்
86. சரஸ்வதி, டாக்டர் சி. .. மொடக்குறிச்சி
87. சாமிநாதன், திரு. மு.பெ. .. காங்கேயம்
88. சித்ரா, திருமதி கு. .. ஏற்காடு (ஆ.வ.)
89. சிந்தனை செல்வன், திரு. ம. .. காட்டுமன்னார்-கோவில் (தனி)
90. சிவகாமசுந்தரி, திருமதி க. .. கிருஷ்ணராயபுரம் (தனி)
91. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. .. திரு.வி.க. நகர் (தனி)
92. சிவகுமார், திரு. ச. .. மயிலம்
93. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
94. சின்னதுரை, திரு. மா. .. கந்தர்வகோட்டை (தனி)
95. சின்னப்பா, திரு. கு. .. அரியலூர்

96. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
97. சுதர்சனம், திரு. எஸ். .. மாதவரம்
98. சுந்தரராஜன், திரு. செ. .. சங்கரி
99. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
100. சுப்பிரமணியன், திரு. மா. .. சைதாப்பேட்டை
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிபாளையம்
102. செஞ்சி K.S. மஸ்தான், திரு. .. செஞ்சி
103. செந்தில்குமார், திரு. ஐ.பி. .. பழனி
104. செந்தில் குமார், திரு. கோ. .. வாணியம்பாடி
105. செந்தில்குமார், திரு. மா. .. கள்ளக்குறிச்சி (தனி)
106. செந்தில்நாதன், திரு. பெரி. .. சிவகங்கை
107. செந்தில்பாலாஜி, திரு. V. .. கரூர்
108. செல்வபெருந்தகை, திரு. கு. .. ஸ்ரீபெரும்புதூர் (தனி)
109. செல்வராஜ், திரு. க. .. திருப்பூர் தெற்கு
110. செல்வராஜ், திரு. A.K. .. மேட்டுப்பாளையம்
111. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (தனி)
112. சேகர், திரு. R.D. .. பெரம்பூர்
113. சேகர், திரு. S. .. பரமத்தி-வேலூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. .. துறைமுகம்
115. சேவூர் S. இராமச்சந்திரன், திரு. .. ஆரணி
116. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
117. தங்கப்பாண்டியன், திரு. எஸ். .. ராஜபாளையம்
118. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
119. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
120. தமிழரசி, திருமதி ஆ. .. மானாமதுரை (தனி)
121. தமிழ்செல்வம், திரு. T.M. .. ஊத்தங்கரை (தனி)

122.	தளபதி, திரு. கோ.	.. மதுரை (வடக்கு)
123.	தளவாய் சுந்தரம், திரு. ந.	.. கன்னியாகுமரி
124.	தனபால், திரு. ப.	.. அவினாசி (தனி)
125.	தாமோதரன், திரு. செ.	.. கிணத்துக்கடவு
126.	திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு.	.. திண்டுக்கல்
127.	தியாகராஜன், திரு. ந.	.. முசிறி
128.	திருமகன் ஈவெரா, திரு. இ.	.. ஈரோடு (கிழக்கு)
129.	துரைமுருகன், திரு.	.. காட்பாடி
130.	தேவராஜி, திரு. க.	.. ஜோலார்பேட்டை
131.	தேன்மொழி, திருமதி எஸ்.	.. நிலக்கோட்டை (தனி)
132.	நத்தம் ஆர். விசுவநாதன், திரு.	.. நத்தம்
133.	நந்தகுமார், திரு. A.P.	.. அணைக்கட்டு
134.	நயினார் நாகேந்திரன், திரு.	.. திருநெல்வேலி
135.	நல்லதம்பி, திரு. அ.	.. கெங்கவல்லி (தனி)
136.	நல்லதம்பி, திரு. A.	.. திருப்பத்தூர்
137.	நாகைமாலி, திரு. வி.பி.	.. கீழ்வேளூர் (தனி)
138.	நாசர், திரு. சா.மு.	.. ஆவடி
139.	நிவேதா எம். முருகன், திரு.	.. பூம்புகார்
140.	நீலமேகம், திரு. டி.கே.ஜி.	.. தஞ்சாவூர்
141.	நேரு, திரு. கே.என்.	.. திருச்சிராப்பள்ளி (மேற்கு)
142.	பண்ணாரி, திரு. அ.	.. பவானிசாகர் (தனி)
143.	பரந்தாமன், திரு. இ.	.. எழும்பூர் (தனி)
144.	பழனி நாடார், திரு. S.	.. தென்காசி
145.	பழனியாண்டி, திரு. மொ.	.. ஸ்ரீரங்கம்
146.	பழனிவேல் தியாக ராஜன், முனைவர்	.. மதுரை (மத்தி)

147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்
149. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (தனி)
150. பாண்டியன், திரு. K.A. .. சிதம்பரம்
151. பாபு, திரு. மு. .. செய்யூர் (தனி)
152. பாலசுப்ரமணியன், திரு. ஈ. .. சேலம் (தெற்கு)
153. பாலாஜி, திரு. S.S. .. திருப்போரூர்
154. பால் மனோஜ் பாண்டியன், திரு. .. ஆலங்குளம்
155. பிச்சாண்டி, திரு. கு. .. கீழ்பெண்ணாத்தூர்
156. பிரகாஷ், திரு. ஒய். .. ஓசூர்
157. பிரபாகரராஜா, திரு. எ.எம்.வி. .. விருகம்பாக்கம்
158. பிரபாகரன், திரு. ம. .. பெரம்பலூர் (தனி)
159. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்
160. புகழேந்தி, திரு. நா. .. விக்கிரவாண்டி
161. பூண்டி கே. கலைவாணன், திரு. .. திருவாரூர்
162. பூமிநாதன், திரு. மு. .. மதுரை (தெற்கு)
163. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
164. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
165. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ. .. மேலூர்
166. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் .. பொள்ளாச்சி
167. பொன்முடி, முனைவர் க. .. திருக்கோவிலூர்
168. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வ.)
169. மகாராஜன், திரு. ஆ. .. ஆண்டிப்பட்டி
170. மகேந்திரன், திரு. சி. .. மடத்துக்குளம்
171. மணி, திரு. ரா. .. ஓமலூர்

172.	மணி, திரு. ஜி.கே.	..	பெண்ணாகரம்
173.	மணிக்கண்ணன், திரு. A.J.	..	உளுந்தூர்பேட்டை
174.	மணியன், திரு. ஓ.எஸ்.	..	வேதாரண்யம்
175.	மதியழகன், திரு. தே.	..	பர்கூர்
176.	மதிவேந்தன், டாக்டர் மா.	..	ராசிபுரம் (தனி)
177.	மரகதம் குமரவேல், திருமதி கு.	..	மதுராந்தகம் (தனி)
178.	மனோ தங்கராஜ், திரு. த.	..	பத்மநாபபுரம்
179.	மாங்குடி, திரு. சா.	..	காரைக்குடி
180.	மாணிக்கம், திரு. இரா.	..	குளித்தலை
181.	மாரிமுத்து, திரு. K.	..	திருத்துறைப்பூண்டி (தனி)
182.	மார்க்கண்டேயன், திரு. G.V.	..	விளாத்திகுளம்
183.	மான்ராஜ், திரு. இ.மா.	..	ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி)
184.	முகம்மது ஷாநவாஸ், திரு. ஜெ.	..	நாகப்பட்டினம்
185.	முத்துசாமி, திரு. சு.	..	ஈரோடு (மேற்கு)
186.	முத்துராஜா, டாக்டர் வை.	..	புதுக்கோட்டை
187.	முருகேசன், திரு. செ.	..	பரமக்குடி (தனி)
188.	முனிரத்தினம், திரு. ஆ.மு.	..	சோளிங்கர்
189.	முனுசாமி, திரு. கே.பி.	..	வேப்பனஹள்ளி
190.	மூர்த்தி, திரு. பி.	..	மதுரை (கிழக்கு)
191.	மெய்யநாதன், திரு. சிவ.வீ.	..	ஆலங்குடி
192.	மோகன், திரு. M.K.	..	அண்ணா நகர்
193.	ரகுபதி, திரு. எஸ்.	..	திருமயம்
194.	ரகுராமன், திரு. A.R.R.	..	சாத்தூர்
195.	ரவி, திரு. சு.	..	அரக்கோணம் (தனி)
196.	ராதாகிருஷ்ணன், திரு. K.	..	உடுமலைப்பேட்டை
197.	ராதாகிருஷ்ணன், திரு. R.	..	விருத்தாசலம்

198. ராமசந்திரன், திரு. கா. .. குன்னூர்
199. ராமச்சந்திரன், திரு. தி. .. அறந்தாங்கி
200. ராமலிங்கம், திரு. பெ. .. நாமக்கல்
201. ராஜகண்ணப்பன், திரு. R.S. .. முதுகுளத்தூர்
202. ராஜகுமார், திரு. S. .. மயிலாடுதுறை
203. ராஜமுத்து, திரு. M. .. வீரபாண்டி
204. ராஜன் செல்லப்பா, திரு. வி.வி. .. திருப்பரங்குன்றம்
205. ராஜா, திரு. ஈ. .. சங்கரன்கோவில் (தனி)
206. ராஜா, முனைவர் T.R.B. .. மன்னார்குடி
207. ராஜு, திரு. கே. .. மதுரை (மேற்கு)
208. ராஜேஷ் குமார், திரு. செ. .. கிள்ளியூர்
209. ரூபி ஆர். மனோகரன், திரு. .. நாங்குநேரி
210. வரலட்சுமி, திருமதி ம. .. செங்கல்பட்டு
211. வானதி சீனிவாசன், திருமதி .. கோயம்புத்தூர் (தெற்கு)
212. வில்வநாதன், திரு. அ.செ. .. ஆம்பூர்
213. விஜயகுமார், திரு. க.நா. .. திருப்பூர் (வடக்கு)
214. விஜயதரணி, திருமதி S. .. விளவங்கோடு
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை
216. வெங்கடாசலம், திரு. A.G. .. அந்தியூர்
217. வெங்கடேசன், திரு. ஆ. .. சோழவந்தான் (தனி)
218. வெங்கடேஷ்வரன், திரு. எஸ்.பி. .. தருமபுரி
219. வெற்றிஅழகன், திரு. அ. .. வில்லிவாக்கம்
220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை
221. வேலு, திரு. த. .. மயிலாப்பூர்
222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்
223. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி

224. வைத்திலிங்கம், திரு. ஆர்.	..	ஒரத்தநாடு
225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச்.	..	பாபநாசம்
226. ஜெகன் மூர்த்தி, திரு. மு.	..	கீழ்வைத்திணான் குப்பம் (தனி)
227. ஜெயக்குமார், திரு. S.	..	பெருந்துறை
228. ஜெயசங்கரன், திரு. A.P.	..	ஆத்தூர் (தனி)
229. ஜெயசீலன், திரு. பொன்.	..	கூடலூர் (தனி)
230. ஜெயராம், திரு. கே.ஆர்.	..	சிங்காநல்லூர்
231. ஜோசப் சாமுவேல், திரு.	..	அம்பத்தூர்
232. ஜோதி, திரு. ஓ.	..	செய்யாறு
233. ஸ்டாலின், திரு. மு.க.	..	கொளத்தூர்
234. ஸ்டாலின் குமார், திரு. செ.	..	துறையூர் (தனி)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். சண்முகசுந்தரம்.. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 23, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 செப்டம்பர் 8, புதன்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு."

வந்த விருந்தினரை உபசரித்து அவர்களை வழியனுப்பி வைக்கும்போதே, மேலும் வரக்கூடிய விருந்தினரை ஆவலுடன் எதிர்நோக்கி நிற்பவனை, புகழ்வானில் இருப்போர் நல்ல விருந்தினன் என்று வரவேற்றுப் போற்றுவர்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

சீர்மிகு நகரம்

***2758—திருமதி வானதி சீனிவாசன்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் பணிகளின் விவரங்களை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

சீர்மிகு நகரத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி, குடிநீர் வழங்கல், பாதாளச் சாக்கடை, திடக் கழிவு மேலாண்மை, தெரு விளக்கு, சாலைகள், பேருந்து நிலைய மேம்பாடு, சந்தை மேம்பாடு, ஆற்று மேம்பாடு, ஏரி புனரமைத்தல், வாகனங்களின் நிறுத்துமிட மேலாண்மை, ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையம், மழைநீர் வடிகால் போன்ற திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படுகின்றது. சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் மொத்தம் 599 திட்டங்களுக்கு ரூ.10,538.18 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில், ரூ.10,292.63 கோடி மதிப்பிலான 586 திட்டங்களுக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய 11 மாநகராட்சிகளில் திட்டப் பணிகள் நடைபெறுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்திற்குத்தான் அதிகமான Smart city திட்டங்கள் கொடுக்கப்பட்டு, அதிகமான நிதி, 97 சதவிகித நிதி தமிழக அரசால் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த Smart city திட்டத்தில் அடிப்படையான கட்டமைப்பு வசதிகளில் மிக முக்கியமான ஒன்று Multi–level car parking ஆகும். என்னுடைய கோயம்புத்தூர் (தெற்கு) தொகுதியில் உள்ள நெருக்கமான, நெரிசல் மிகுந்த T.K. மார்க்கெட் மற்றும் டவுன்ஹால் பகுதிகளில் Multi–level car parking அமைக்க வேண்டும் என்பது எங்கள் தொகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை ஆகும்.

இரண்டாவதாக, நீர்நிலைகள், குளங்கள் ஆகியவற்றில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், இவைகளையெல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைக்கும் பணிகள் நடைபெறவில்லை. இந்தப் பணிகளெல்லாம் எப்போது நிறைவு பெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையைப் பொறுத்தவரையில்,* Multi–level car parking *அமைக்கும் பணி கிட்டத்தட்ட முடியும் நிலையில் இருக்கிறது. நானும் நேரடியாகச் சென்று பார்த்துவிட்டு வந்தேன். அதேபோன்று அங்குள்ள 10 குளங்களில், 9 குளங்கள் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மேலாண்மைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகளெல்லாம் விரைவில் முடியவிருக்கின்றன. கடந்த ஆட்சியில் கோவை மாநகரில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள், வெள்ளலூர் பேருந்து நிலையம் அமைக்கும் பணியாக இருந்தாலும் சரி,* (மேசையைத் தட்டும் ஒலி) *குடிநீர்த் திட்டப் பணியாக இருந்தாலும் சரி,* (மேசையைத் தட்டும் ஒலி) *அனைத்துத் திட்டங்களும் முறையாகத் தொடர்ந்து நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பணிகளை விரைந்து முடிப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிகளெல்லாம் குறிப்பிட்ட காலகட்டத்தில் முடியுமாறு நடவடிக்கை மேற்கொண்டு, அப்பணிகளை விரைவில் முடித்துத் தருமாறு கேட்டுக்கொண்டு, நன்றி கூறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நன்றி சொல்லிவிட்டார்களே! மாண்புமிகு அமைச்சர், சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி என்றால் நன்றிதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லிவிட்டார்கள்.* (சிரிப்பு) *நன்றி சொல்லிவிட்டார்கள் என்று கூறினேன்.*

[2021 செப்டம்பர் 8

வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

27—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***1764—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிணத்துக்கடவில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிணத்துக்கடவு தொகுதி அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தில் தற்பொழுது 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 7 அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 52 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் கிணத்துக்கடவில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் இப்பொழுது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.

முற்பகல் 10–05

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மட்டும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் 12, தனியார் மேல்நிலைப் பள்ளிகள் 14 என மொத்தமாக 26 பள்ளிகள் உள்ளன. அந்த 26 பள்ளிகள் அனைத்தும் கிராமப்புற பகுதியில்தான் உள்ளன. இதில் மொத்தமாக +2–வில் மட்டும் சுமார் 2,321 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றார்கள். இவர்கள் அனைவரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் பொள்ளாச்சி அல்லது கோவைக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. இவர்கள்

2021 செப்டம்பர் 8]

இருப்பிடத்திலிருந்து சுமார் 20 முதல் 30 கிலோ மீட்டர் தூரம் வரை பயணம் செய்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இவர்கள் பெரும்பாலும் ஏழையெளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளார்கள். இதனால், கிணத்துக்கடவிலேயே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ஆரம்பித்தால், இவர்கள் 5–லிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திற்குள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வந்து சேர முடியும். அதனால், கிணத்துக்கடவிலேயே ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துக் கொடுத்தால் கிராமப்புறங்களிலிருந்து வந்து படிக்கின்ற ஏழையெளிய மாணவ, மாணவிகளுக்குப் பேருதவியாக இருக்கும். அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிணத்துக்கடவிலேயே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுமே அவரவர்கள் தொகுதியிலே ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின் அடிப்படையில் உயர் கல்வித் துறை சார்பாக 10 கலைக் கல்லூரிகளும், கூட்டுறவுத் துறை சார்பாக ஒரு கல்லூரியும், இந்து சமய அறநிலையத் துறை சார்பாக 10 கல்லூரிகளும் ஆக மொத்தம் 21 கல்லூரிகள் இந்தக் கல்வியாண்டு முதல் புதிதாகத் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், குறிப்பாக அரசுக் கல்லூரிகளில் மொத்தம் 64,236 மாணவர்களின் சேர்க்கைக்கான இடங்கள் இருக்கின்றன. ஆனால், அதிலே காலியிடங்கள் மட்டும் 26,601 இருக்கின்றன. நீங்கள் சொன்னதைப்போல பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள், அவர்கள் பக்கத்திலே இருக்கின்ற கல்லூரிகளில் சேர வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணைக்கேற்ப, இந்த ஆண்டு 25 சதவிகித மாணவர்களை அதிகமாகச் சேர்க்க வேண்டுமென்று அரசுக் கல்லூரிகளுக்கு ஆணையிடப்பட்டு, அதுவும் நடைமுறைப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதிய கல்லூரி*

துவங்குவதை வலியுறுத்த வேண்டாமென்று அவரை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களே, இந்தக் கோரிக்கை என்பது நீண்ட நாள் கோரிக்கை. என்னுடைய பகுதியினுடைய மக்கள், மாணவ, மாணவிகளெல்லாம் அங்கே கல்லூரி வேண்டுமென்று கோரியிருக்கின்றார்கள். கிணத்துக்கடவு மற்றும் கிணத்துக்கடவு பகுதியைச் சுற்றியுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவிகள் மட்டும் 1,256 பேர் பயின்று வருகிறார்கள். அடுத்த ஆண்டு அந்த எண்ணிக்கை இன்னும் உயரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களில் பெரும்பாலானவர்கள், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவ, மாணவிகள், அதிகமாக பட்டியலினத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளார்கள். இந்த மாணவ, மாணவிகள், நன்றாகப் படித்து வருகிறார்கள். கடந்த ஆண்டு இதே பகுதியைச் சேர்ந்த பட்டியலினத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் இரண்டு பேர் 'NEET' தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்விக்கு வாருங்கள். College, உங்கள் பகுதிக்கு எப்படியும் தேவை என்பதைப் பற்றி அழகாகச் சொல்லிவிட்டீர்கள். மீண்டும் நீங்கள் மறு பரிசீலனை செய்யுங்கள் என்று ஒரு கேள்வியைக் கேளுங்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதில் சொல்லச் சொல்கிறேன். மறு பரிசீலனை செய்வீர்களா என்று கேள்வி கேளுங்கள்.

திரு. செ. தாமோதரன்: இல்லை, பேசுகிறேன். அரசுப் பள்ளிகளில் படித்த மாணவ, மாணவிகள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அரசின் மருத்துவக் கல்லூரியில் 7.5 சதவிகித ஒதுக்கீட்டின் மூலமாக, அரசு உதவியுடன் மருத்துவம் பயின்று வருகிறார்கள். இந்த அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவ, மாணவிகளின் குடும்பங்களில் பெரும்பாலானோர் நெடுந்தூரப் பயணம் கருதி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு செல்லவிடாமல் அரசு மேல்நிலைப் பள்ளிப் படிப்போடு அந்த மாணவிகளின் படிப்பை நிறுத்திவிடுகிறார்கள். எனவே, மாணவிகளின் நலன் கருதியாவது,

2021 செப்டம்பர் 8]

நம்முடைய அரசு, கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கிணத்துக்கடவிலே அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, கண்டிப்பாக கிணத்துக்கடவிலே ஒரு கல்லூரியை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கலைக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்றால், மாநகராட்சி எல்லைக்குள் என்றால் 2 ஏக்கர் நிலம் தேவை; நகராட்சி எல்லைக்குள் என்றால் 3 ஏக்கர் நிலம் தேவை; கிராமப் பஞ்சாயத்து எல்லைக்குள் என்றால் 5 ஏக்கர் நிலம் தேவை; அதுமட்டுமல்ல, கட்டடங்கள் கட்டுவதற்கு மட்டும் 12 கோடி ரூபாய் செலவாகும். அதேபோல, ஊதியத்திற்கு இரண்டே கால் கோடி ரூபாய் செலவாகும். இவைகளையெல்லாம் நீங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் நான் முன்பே சொன்னதைப்போல அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்களுடைய தொகுதியில் கல்லூரி கேட்டிருக்கின்றார்கள். அரசினுடைய நிதிநிலைக்கேற்ப படிப்படியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு ஆலோசனை செய்து, அரசு அதற்கான முயற்சிகளை வருங்காலங்களிலே மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

விருந்தினர் மாளிகை

***3037—திருமதி ஆ. தமிழரசி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடியில் விருந்தினர் மாளிகை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடியில் விருந்தினர் மாளிகை அமைப்பது குறித்து அரசின் நிதிநிலைமைக்கேற்ப செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.

முற்பகல் 10–10

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட இளையான்குடி பகுதியில் பொதுப் பணித் துறையின் வளாகத்திற்குள் 1950 ஆம் ஆண்டு இக்கட்டடம் 120.82 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. 1950–ல் கட்டப்பட்டதால் இக்கட்டடம் இடிந்து விழக்கூடிய சூழ்நிலையில் உள்ளது. எனவே, அந்தக் கட்டடத்தை இடித்துவிட்டு, அங்கு புதியதாக விருந்தினர் மாளிகையைக் கட்டித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இளையான்குடியில் பொதுப் பணித் துறை வளாகத்தில் 1950 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஓர் ஆய்வு மாளிகை இப்பொழுது இருக்கிறது. அதனுடைய பரப்பளவு 120.82 சதுர மீட்டராகும். அதனுடைய மேற்கூரை அந்தக் கால ஓடுகளின்மூலம் வேயப்பட்டது. இக்கட்டடமானது இன்றைக்குப் பயன்படுத்த முடியாத அளவிற்குப் பழுதடைந்த நிலையில் இருக்கிறது என்பது உண்மைதான். இந்தக் கட்டடத்தை இடித்துவிட்டு புதியதாக இரண்டு அறைகள்–suites–கொண்ட பொதுப் பணித் துறையின் ஆய்வு மாளிகை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு சுமார் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அரசின் நிதிநிலைக்கேற்ப, அடுத்த ஆண்டு செயல்வடிவம் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, நன்றி சொல்லி அமருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருகிறேன் என்று சொல்லிவிட்டார்.*

திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். ஏற்கெனவே ரூ.50 இலட்சம் செலவில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது. அதில் கூடுதலாக 2 அறைகள் கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதோடு மட்டுமல்லாமல், தமிழகத்தில் மொத்தம் எத்தனை விருந்தினர் மாளிகைகள் இருக்கின்றன; எத்தனை விருந்தினர் மாளிகைகளில் அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கிச் செல்லலாம் என்று அனுமதி இருக்கிறது. அவர்களைத் தவிர, மற்ற உயர் பொறுப்பில் இருக்கக்கூடியவர்கள் தங்கிச் செல்வதற்கான வசதிகள் உண்டா என்பதையும் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய பகுதியில்தான் கீழடி ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே தமிழ்நாட்டில் இருப்பவர்கள் மட்டுமல்ல; உலகத்தில் இருப்பவர்களெல்லாம் வந்து கண்டுகளிக்கக்கூடிய அளவிற்கு, பார்க்கக்கூடிய அளவிற்கு தமிழர்களுடைய பெருமையை நாட்டுக்குத் தெரிவிக்கிற அளவிற்கு இருப்பதால், அங்கு கூடுதலாக தங்கும் விடுதிகளைக் கட்டுகின்ற திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அதோடுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கீழடியில் இன்னொரு விருந்தினர் மாளிகை நிறுவ இருக்கின்ற சூழ்நிலையில், இரண்டு அறைகள் போதும் என்ற நிலையில்தான் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதிக்காக திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.*

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 126 விருந்தினர் மாளிகைகள் பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. சென்ற நிதியாண்டிலே விருந்தினர்

[2021 செப்டம்பர் 8

மாளிகையில் தோராயமாக, 2,721 விருந்தினர்கள் தங்க வைக்கப்பட்டு, அதன்மூலம் வசூலாகிய தொகை ரூ.5,45,973 ஆகும். விருந்தினர் மாளிகை என்பது தேவையின் அடிப்படையில்தான் கட்டப்படுகிறது. எனவே, அந்தத் தொகுதிக்கு விருந்தினர் மாளிகை தேவையென்று சொன்னால், அது குறித்து ஆராய்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு அதற்குத் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ், மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

வேளாண்மை விரிவாக்க மையம்

***439—திரு. க. செல்வராஜ்:**

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஒன்றியம், பெருமாநல்லூரில் வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டத்தில் 13 வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களும் மற்றும் 13 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் சேர்த்து மொத்தம் 26 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. திருப்பூர் வட்டாரம், பெருமாநல்லூரில் ஏற்கெனவே ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையம் செயல்பட்டு வருகிறது. அதன்மூலம் விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. தற்சமயம் பெருமாநல்லூரில் இயங்கிவரும் துணை வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் ரூ.40 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, பெருமாநல்லூரில் தற்போது

2021 செப்டம்பர் 8]

புதிய வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்கும் அவசியம் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள். மைக் இருக்கிறது, பேசுங்கள்.*

திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து, வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை மேற்கொண்ட தமிழக அரசுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள். ஒரு வரியில் கேள்வி கேளுங்கள்.*

திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி மட்டும்தான் சொல்கிறேன். கோவை கொங்கு மண்டலத்திற்கு நான் ஒருவன்தான் M.L.A. நன்றி சொல்லியாக வேண்டும். அதற்காக வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்குப் பேச வாய்ப்பு தருகிறேன்.*

திரு. க. செல்வராஜ்: *எங்கள் இயக்கத்தின் சார்பாக நன்றி சொல்லப் போகிறேன் என்றுதான் சொல்கிறேன். நீங்கள் எல்லாம் இருக்கிறீர்கள் என்றுதான் சொன்னேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது debate இல்லை. நீங்கள் கேள்விக்கு வாருங்கள். Demand–ல் பேசும்போது நிறைய பேசுங்கள். கேள்விக்கு வாருங்கள். கேள்வி paper–ஐ கையில் எடுங்கள்.*

முற்பகல் 10–15

திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 13 ஊராட்சிகளில், கணக்கம்பாளையம், காளிபாளையம், பெருமாநல்லூர், வள்ளிபுரம், மேற்குப்பதி, பட்டம்பாளையம், தொரவலூர், சொக்கனூர், பொங்குபாளையம், ஈட்டிவீரம்பாளையம் உள்ளடங்கிய 10 ஊராட்சிகள் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குள் வருகின்றன. ஆகவே, திருப்பூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட 10 ஊராட்சிகளைச் சேர்ந்த விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கையான,*

பெருமாநல்லூரில் உள்ள துணை வேளாண்மை அலுவலகத்தை நீக்கிவிட்டு, வட்டார வேளாண்மை அலுவலகத்தை அமைக்க வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமாநல்லூர் வட்டார வேளாண்மை அலுவலகம் இருக்கிறது. அதற்கு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கும் மேல் உறுப்பினர் என்ன கேட்கிறார் என்று தெரியவில்லை. ஒருங்கிணைந்த வேளாண்மை அலுவலகம் கேட்கிறாரா என்று தெரியவில்லை. அதற்கு விளக்கமாக, தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள்.

திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமாநல்லூர் நகரின் மையப் பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும், திருப்பூர் நகரில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும், அங்கே நபார்டு வங்கியின் சார்பாக கட்டடம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்டட மையத்திலே, துணை வட்டாரம் என்பதை எடுத்துவிட்டு, வட்டார மையமாக அமைக்க வேண்டும் என்பது விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கை. அதை நிறைவேற்றித் தந்தால், அந்த விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். தமிழக முதலமைச்சர் அவர்கள் அதை நிறைவேற்றித் தருவார்கள் என்று விவசாயப் பெருமக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒருங்கிணைந்த வேளாண்மை மையத்தை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். உழவர்களுக்கென்று தனி நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்த மாண்புமிகு முதல்வர் அவர்களை நாடே பாராட்டுகிறது, போற்றுகிறது. ஆகவே, இதனை அமைத்துத் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய கோரிக்கையை, எண்ணத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள். வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அளிக்க வேண்டுமென்பது விவசாயிகளின் நீண்ட நாள் கனவு. அதை நிறைவேற்றியவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய தாக்கம், எல்லா விஷயங்களிலும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை, விதிகளுக்கு உட்பட்டு, நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கேட்பதைக் கொடுப்பவர் இருக்கின்றார். நிச்சயமாக அதைக் கொடுப்பார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

வீட்டுமனைப் பட்டா

***409—திரு. கே.பி. சங்கர்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, 2–வது வார்டு, வள்ளுவர் நகர் மற்றும் எம்.ஜி.ஆர். நகர் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் வட்டம், வள்ளுவர் நகர் மற்றும் எம்.ஜி.ஆர். நகர் பகுதியானது கத்திவாக்கம் கிராமக் கணக்கில், புல எண்கள் 26, 27, 29 A, 240. மொத்த விஸ்தீரணம் 8.67.0 எக்டேர் ஆகும். இந்த இடம் கிராமக் கணக்கு வகைப்பாடுகளில் இரயில்வே நிலம் என தாக்கல் ஆகியுள்ளது. மேற்படி புலங்கள் இரயில்வே துறைக்குச் சொந்தமானது என்பதால், இரயில்வே துறை இசைவு வழங்கும்பட்சத்தில், பட்டா கோரும் கோரிக்கை தொடர்பான மேல் நடவடிக்கை தொடரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 40, 50 ஆண்டுக்காலமாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற அந்த மக்களுக்கு இது ஒரு வாழ்வாதாரப் பிரச்சினை. இப்போதெல்லாம் இரயில்வே துறை நிலங்களை விற்பதற்குத் தயாராக இருக்கிறது. எனவே, அரசே இதை முன்னெடுப்பு செய்து, நடவடிக்கை எடுத்து, அந்த வகையிலாவது, அந்த நிலங்களை வாங்கி அவர்களுக்குப் பட்டா வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பட்டா வழங்க வேண்டுமென்று கேட்கிறீர்கள் அவ்வளவுதானே? மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்வே துறைக்குச் சொந்தமான நிலமாக இருக்கின்ற காரணத்தினால், நாம் உடனடியாகப் பட்டா வழங்குவதற்கு வசதியில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, யோசனையை ஏற்று, இரயில்வே துறையிடம் பேசி, அதை முடிவுக்குக் கொண்டு வர முடியுமா என யோசித்து மேல் நடவடிக்கை எடுக்கிறோம்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 8]

31—

சிற்ப கலைக்கூடம்

***2441—டாக்டர் வை. முத்துராஜா:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் சிற்ப கலைக்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரில் சிற்ப கலைக்கூடம் அமைத்துத் தர அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள், இருக்கையில் இல்லை.*

மாண்புமிகு உறுப்பினர் கந்தர்வகோட்டை திரு. மா. சின்னதுரை அவர்கள்.

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், சிற்பக் கலையில் சிறந்து விளங்கக்கூடிய மாவட்டம். குன்னாண்டார்கோவில், நார்த்தாமலை, விராலிமலை, திருமயம் பகுதிகளில் மலைக் கோட்டைகள் அதிகமாக இருக்கின்றன. சிற்பக் கலையில், உலகத் தரம் வாய்ந்த இசையில், நாடகத்தில், ஓவியத்தில் சிறந்து விளங்கக்கூடிய ஒரு மாவட்டம். ஆகவே, அங்கு ஒரு நுண்ணியல் கலைக் கல்லூரி அமைத்திட தங்கள் வாயிலாகக் கோருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல நார்த்தாமலை, குன்னாண்டார்கோவில் பகுதிகளில் இருக்கக்கூடிய மலைப்*

பாறைகள் சிற்பம் செய்வதற்கான பாறைகள் அல்ல. அவை கோவில் கட்டுமானத்திற்காக இருக்கக்கூடிய பாறைகளாக, அடித்தளம் அமைக்கின்ற பாறைகளாக இருக்கலாம்; கற்பலகைகள் அல்லது நடைமேடைகள் போன்றவற்றைச் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, மண் மலை, பொன் மலை, பொம்மை மலை என்பது உள்ளிட்ட ஒன்பது வகையான மலைகள் அங்கே இருக்கின்றன என்பதை நான் அறிவேன். அதில் பார்த்தால், அங்கு இருக்கின்ற மலையின் மேல் பகுதியில் தீ மூட்டி, அதன்மூலம் வெப்பத்தை உருவாக்கி, அதன் வழியாக அந்தக் கற்களையெல்லாம் உடைத்து, அவர்கள் அந்த process செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கற்களை வைத்து சிற்பங்கள் செய்யக்கூடிய அளவிற்கு வாய்ப்பில்லை. நான் குறிப்பிட்ட வகையிலே கட்டடம் மற்றும் அடித்தளம் போன்றவற்றிற்கு அந்தக் கற்களை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் அந்தக் கற்களை வைத்து அங்கே சிற்ப கலைக்கூடம் உருவாக்குவதற்கான அடிப்படையான வாய்ப்பு இல்லை.

ஆனால், அரசின் சார்பிலே, மகாபலிபுரத்தில் சிற்பம் மற்றும் கட்டடவியல் கல்லூரி இயங்கி வருகிறது. அதன் வாயிலாக, மகாபலிபுரத்திலேயே அருமையான சிற்ப கலைக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி, மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

32—

மீனவர்களுக்கு வீடுகள்

***167—திரு. S.S. பாலாஜி:**

மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2021 செப்டம்பர் 8]

(அ) திருப்போரூர் தொகுதியில், திருப்போரூர், திருக்கழுக்குன்றம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மீனவர்களுக்கு இலவசமாகக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாமல்லபுரம், கொக்கிலமேடு, சதுரங்கப்பட்டினம் மற்றும் அகரம் ஆகிய மீனவக் கிராமங்களில் வசிக்கும் மீனவர்களுக்கு குடியிருப்புகள் கட்டி வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள். அழகாக, சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொக்கிலமேடு, செம்மஞ்சேரி குப்பம், கரிக்காட்டுக் குப்பம் ஆகிய பகுதிகளில் கடலரிப்பைத் தடுப்பதற்கு கிட்டத்தட்ட ரூ.30 கோடி அளவில் Fish landing centre–ஐ அமைத்துக் கொடுப்பதற்கு உத்தரவிட்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பகுதிகளில் எத்தனை பயனாளிகள் பயன்பெறுகின்றார்கள் என்ற விவரத்தைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

மாமல்லபுரம், கொக்கிலமேடு, சதுரங்கப்பட்டினம் மற்றும் அகரம் ஆகிய மீனவக் கிராமங்களில் 59 மீனவர்களுக்கு வீடுகள் கட்ட ஆணை வழங்கப்பட்டு, அவற்றில் 39 வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 20 வீடுகளுடைய கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிகள் தவிர இன்னும் உள்ள ஏனைய மீனவக் குப்பங்களில் வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றவாறு தகுதிவாய்ந்த மீனவர்கள், தகுதிவாய்ந்த இடங்கள் இருக்குமென்று சொன்னால் அந்த இடங்களிலும் வீடுகள் கட்டித் தருவதற்கான நடைமுறைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களுடைய அரசு செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

33—

பூங்கா

***1917—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, காரவள்ளி வனப் பகுதி நுழைவாயிலில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப் பகுதி காப்புக் காட்டினுள் வருகிறது. காப்புக் காட்டினுள் பூங்கா நிறுவுவது தமிழ்நாடு வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்கீழ் அனுமதிக்கப்படவில்லை. எனவே, காரவள்ளி காப்புக் காட்டுப் பகுதியில் பூங்கா அமைக்கும் வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

முற்பகல் 10–25

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரவள்ளி காப்புக் காட்டில், கொல்லிமலைக்குச் சுற்றுலா செல்லும் பயணிகள், காரவள்ளியைக் கடந்துதான் கொல்லிமலைக்குச் செல்ல வேண்டும். அப்படிச் செல்கிறபோது காரவள்ளி வனக் காப்புக் காட்டில் வனத் துறையின் மூலமாக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் பூங்கா அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியின் காரவள்ளி வனப் பகுதியின் நுழைவாயிலில் பல்வேறு வகையான மரங்களும், மூங்கில்களும் ஏற்கெனவே இயற்கையாகவே வளர்ந்து, எழில்மிகு தோற்றத்தை வழங்குகின்றன. காரவள்ளி வனப் பகுதியின் நுழைவாயிலில், ஒரு புதிய பூங்கா அமைக்கப்பட்டால், அப்பகுதியில் இயற்கைச் சூழல் மாறுபடும் என்று பொது மக்களால் கருதப்படுகிறது. மேலும் ஒரு காப்புக் காட்டில் பூங்காவை நிறுவுவது, தமிழ்நாடு வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்கீழ், வனம் சாராத பணியாகக் கருதப்படுவதால், அனுமதிக்கப்படவில்லை. இருப்பினும் கொல்லிமலை அறப்பளீஸ்வரர் கோயிலுக்கு 38 கி.மீ. தூரத்தில் உள்ள ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி சுற்றுலாத் தலத்தில் ஏற்கெனவே ஒரு பூங்கா வனத் துறையால் நிறுவப்பட்டுள்ளது.

எனவே, காரவள்ளி வனப் பகுதியின் நுழைவாயிலில், பூங்கா அமைக்கும் தேவை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலைக்குத் தினந்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். சக்திவாய்ந்த கோயில்கள், அறப்பளீஸ்வரர் கோயில், பெரியசாமி கோயில், எட்டுக்கையம்மன் கோயில், கொல்லிப்பாவை ஆகிய கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்கிறார்கள். சுமார், 150 அடி உயரத்திலிருந்து ஆகாய கங்கை, மூலிகை கலந்த நீர்வீழ்ச்சி, நேரடியாகக் கொட்டுகிறது. அதேபோன்று மாசிலா அருவி, நம் அருவி ஆகிய அருவிகளிலிருந்தும் நீர் கொட்டுகின்ற காரணத்தினால், சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகின்றனர். அதனால், காரவள்ளி வனப் பகுதியின் நுழைவாயிலில், வனப் பகுதியின் மூலமாகவே, ஒரு பூங்காவை அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, அது தேவைப்படின், நிச்சயமாக செய்து கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

புதிய திருத்தேர்

***3086—திரு. இரா. காமராஜ்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2021 செப்டம்பர் 8]

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் அருள்மிகு கோனேஸ்வரர் திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அருள்மிகு பிரஹன்நாயகி உடனுறை அருள்மிகு கோனேஸ்வரர் திருக்கோயிலுக்கு புதியதாகத் திருத்தேர் செய்வதற்காக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். கோரிக்கை வைப்பதற்கு முன்பாகவே, வரம் கொடுக்கும் அரசு, இந்த அரசு என்பதற்கு எடுத்துக்காட்டாக, (மேசையைத் தட்டும் ஒலி) 29 இலட்சம் ரூபாய் செலவில், ஒப்பந்தம் கோரப்பட்டு, வருகின்ற 17–9–2021 அன்று, ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படவுள்ளது. நீங்கள் விரும்பிய அந்தத் திருத்தேரை இயக்கும் பணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு கூடிய விரைவில் நிறைவேற்றப்படும். ஓடாத திருத்தேரை ஓட்டியவர் தலைவர் கலைஞர் என்றால், இன்றைக்கு புனரமைக்கப்பட வேண்டிய திருத்தேர்களைப் புனரமைத்து, தேவைப்படுகின்ற இடங்களில் தேர்களை உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆணையிட்டிருக்கின்றார்கள். அந்த வகையில் கூடிய விரைவில், இந்தத் திருக்கோயில் திருத்தேர் ஓடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக் கோரிக்கை மன்றத்திற்கு வருவதற்கு முன்பாகவே ஒப்பந்தம் கோரப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். உண்மை. நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Good. போதுமே!

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், 2019–2020 ஆம்

[2021 செப்டம்பர் 8

ஆண்டில் 11–வது அறிவிப்பில், பல்வேறு தேர்கள் அறிவிக்கப்பட்டன. அவற்றில், இந்தத் தேரானது 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தற்போது ரூ.24,37,378 என்கிற அளவில்தான், அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது. எனவே, 37 இலட்சம் ரூபாய் அளவில் அந்தத் தேரைச் செய்ய வேண்டும். ஏனென்றால், அது பிரசித்தி பெற்ற கோயில். பிரளய காலத்தில் சிவபெருமான் குடத்திற்குள்ளே உயிர்களை அடக்கி, அந்த உயிர்களை பிரளயம் முடிந்தபின் வெளியேற்றுகிறபோது, ஓர் அம்பு விடப்பட்டபோது அந்தக் குடத்தின் மூடி, அதாவது, குடத்தின் வாயில் இருந்த மூடி விழுந்த இடம் குடவாயில் எனவும், கழுத்து விழுந்த இடம் சாக்கோட்டை எனவும், கும்பம் விழுந்த இடம் கும்பகோணம் எனவும் சொல்வார்கள். அந்தவகையில், மிகவும் பிரசித்தி பெற்ற திருக்கோயில் அது. அந்தக் கோயில் தேரினை நீங்கள் 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். தற்போது tender விட்டதற்கு நன்றி. நீங்கள், 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அந்தத் தேரினை அமைத்துக் கொடுத்தால், அந்தத் தேர் சிறப்பானதாக இருக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்ட நிதியைப் பற்றி விரிவாகப் பேசினால், கேள்வி நேரங்களில் குற்றச்சாட்டு எழும். அதற்குத் தேவைப்படுகின்ற நிதியே, 28.00 இலட்சம் ரூபாய்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–30

நீங்கள் ஏற்கெனவே அறிவித்ததாகச் சொன்னீர்கள். அந்த அறிவிப்பு வந்தபிறகு கிட்டத்தட்ட 9 மாதங்களுக்கு மேலாக நீங்கள்தான் ஆட்சியில் தொடர்ந்து இருந்தீர்கள். நீங்கள் அறிவித்த திட்டம் என்றாலும், இது பக்தகோடிகளுக்கு, இறை அன்பு உள்ளவர்களுக்கு இன்பத்தைச் சேர்க்கின்ற திட்டம் என்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக திருத்தேர் செய்வதற்குண்டான அனுமதியை வழங்கச் சொல்லியிருக்கின்றார். இதற்கு 28 இலட்சம் ரூபாயே போதுமானது. தேவைப்படின்,

2021 செப்டம்பர் 8]

கூடுதலாக நிதி ஒதுக்குவதற்கும், தாராள மனம் கொண்ட எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கின்றார் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. 28 இலட்சம் ரூபாய் அல்ல. 24 இலட்சத்து 37 ஆயிரத்து 378 ரூபாய்க்குத்தான்* tender *வந்திருக்கிறது. மதிப்பீடுகள் கூடுதலாக இருந்தால், தேர் பெரியதாக இருக்கும். வேறு ஒன்றுமில்லை. மதிப்பீடு கூடுதலாக இருப்பதனால் அந்தக் காலகட்டத்தில் அறிவித்திருப்பது தவறு என்று சொல்ல முடியாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே நீங்கள் சொல்லிய அந்த தேர்தான்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில், அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியில் 194 தேர்கள் புனரமைக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டன. 100 ஆண்டுகள் ஓடாத தேர் எல்லாம் ஓட்டப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலில் 100 ஆண்டுகளாகத் தேர் ஓடவில்லை. நான் அறநிலையத் துறை அமைச்சராக இருந்தபொழுது உத்தரவிட்டு நானும், அன்றைக்கு மாண்புமிகு அமைச்சராக இருந்த திரு. வைத்திலிங்கம் அவர்களும் சேர்ந்து அந்தத் தேரை வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 37 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அத்தேரைச் செய்து தருவதற்கு வாய்ப்பிருந்தால் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள், பணம், அதிகமாக வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்களா? மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம், திருப்பாம்புரம், ராகு, கேது இரண்டும்*

சேர்ந்து இருக்கின்ற ஸ்தலம். திருநாகேஸ்வரம், நாகநாத சுவாமி கோயிலில் ராகு சாமி மட்டும் இருப்பார். ராகுவும், கேதுவும் சேர்ந்து இருக்கின்ற ஸ்தலம் திருப்பாம்புரம். திருவாரூர் மாவட்டம், வடுவூர், கோதண்டராமசுவாமி திருக்கோயிலுக்கும், திருப்பாம்புரம் கோயிலுக்கும் மற்றும் பூவனூர் சதுரங்க வல்லபநாதர் திருக்கோயிலுக்கும் இந்த ஆண்டு தேர் அமைத்துத் தருவதற்குரிய வாய்ப்புகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையினுடைய அறிவிப்பை முழுமையாக அவர் படிக்கவில்லை என்று கருதுகிறேன். இந்த ஆண்டு மாத்திரம், திருவாரூர் மாவட்டம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய நன்னிலம் சட்டமன்றத் தொகுதியிலே கிட்டத்தட்ட 11 கோயில்களுக்கு திருப்பணிகள் எடுத்துக்கொள்வதற்குண்டான அனுமதியை வழங்கியிருக்கின்ற அரசு, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலே இருக்கின்ற அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்லாமல், தேர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் 1,287 தேர்கள் இருக்கின்றன. இதுவரை நாங்கள் 200 தேர்களை கள ஆய்வு மேற்கொண்டோம். நீங்கள் சொல்லலாம், கொரோனா நோய்த் தொற்று என்பதால் ஓடவில்லை என்று. இதில் பல தேர்கள், 10 ஆண்டுகள் கடந்தும்கூட இயக்கப்படாத தேர்கள் என சென்னையிலே இதுவரையில் 16 தேர்களைக் கண்டறிந்திருக்கின்றோம். அதோடுமட்டுமல்லாமல், இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், முதல் அறிவிப்பிலேயே திருத்தேர்கள், தெப்பக்குளங்கள் போன்றவற்றிற்கு என 100 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, தாராள மனதோடு அறநிலையத் துறைக்கு நிதி வழங்கினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, இந்த ஆண்டு 9 திருத்தேர்களைப் புதுப்பிக்கின்ற பணி 2 கோடி ரூபாயிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

2021 செப்டம்பர் 8]

அதுபோல, திருத்தேர்களின் கொட்டகைகள் பாதுகாப்பற்றதாக இருப்பதால், மழைக் காலங்களில் தண்ணீர் உள்ளே புகுந்து, அந்தக் காலத்து தேர்களில் மரத்தாலான சிற்பங்கள் பழுதடைந்து இருந்ததை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், முழுமையாக கள ஆய்வு செய்து, அந்தத் திருத்தேர்களைப் பாதுகாக்க கொட்டகைகள் அமைப்பதற்கு மாத்திரம், ரூ.10.00 கோடியை இந்த ஆண்டே ஒதுக்கீடு செய்திருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, 18 திருத்தேர்கள் பழுதடைந்திருக்கின்றன. ஓடாதத் திருத்தேர்களையும் ஓட்டுகின்ற அரசு, இந்த அரசு என்பதை நிரூபிக்கின்றவகையில், ஓடாத அந்தத் திருத்தேர்களுக்கான திருப்பணிகளை ரூ.8 கோடி செலவில், இந்த ஆண்டு மேற்கொள்ள உத்தரவிட்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக பக்தர்கள் மனநிறைவோடு இருக்கின்றார்கள். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்றில்லாமல் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் மன மகிழ்ச்சியோடு இருக்கின்றார்கள். கேட்க வேண்டுமே என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைக் கேட்க வேண்டாம், (மேசையைத் தட்டும் ஒலி) மனநிறைவோடு நன்றி கூறுங்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

35—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***3282—திரு. ரூபி ஆர். மனோகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு, பத்மநேரி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு விடையளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை நாங்குநேரி தொகுதி, களக்காடு, பத்மநேரி அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, களக்காடு பத்மநேரி என்பது ஒரு குக்கிராமம். இங்கு விவசாயம் செய்கின்ற மக்கள்தான் அதிகமாக வசிக்கிறார்கள். பத்மநேரியிலிருந்து களக்காடு பகுதிக்கு வருவதற்கு bus வசதி சரியாக இல்லை. அதனால், பத்மநேரி பள்ளியைத் தரமுயர்த்த வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கேட்டுக்கொண்டிருப்பதால், ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 ஆம் தேதியன்று மாண்புமிகு ஆலங்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் விவரமாக பதில் அளித்திருக்கிறேன். பொதுவாக நாம் consider செய்ய வேண்டியது, இந்த மூன்று அரசாணைகளைத்தான். G.O. No. 235, No. 379 and No. 49–ஐத்தான், நாம் பார்க்க வேண்டியுள்ளது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொன்னபடி G.O. No. 235–ன்படி

பார்த்தோம் என்றால், 10 ஆம் வகுப்பில் 100 மாணவர்கள் இருக்க வேண்டும். ஆனால், 34 மாணவர்கள்தான் இருக்கின்றார்கள். அடுத்த ஒரு மேல்நிலைப் பள்ளி 8 கிலோ மீட்டர் distance–ல் இருக்க வேண்டும். ஆனால், 8 கிலோ மீட்டருக்குள்ளாகவே களக்காடு மற்றும் இடையன்குளத்தில் இரண்டு பள்ளிகள் இருக்கின்றன. இதோடுமட்டுமல்லாமல் G.O. No. 379–ன்படி ரூபாய் இரண்டு இலட்சம் பணம் கட்டியிருக்க வேண்டும். அத்தொகை இன்னும் கட்டப்படாமல் இருக்கின்றது. G.O. No. 49–ன்படி 3 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். ஆனால், இரண்டு ஏக்கர் நிலம்தான் இருக்கின்றது. ஆகவே, இந்த நெறிமுறைகளை meet out செய்யாத ஒரு சூழ்நிலையில்தான் நான் இந்தப் பதிலைச் சொல்லியிருக்கிறேன்.

இன்று World Literacy Day ஆகும். இருந்தாலும், உறுப்பினர் மாணவர்கள்மீதுள்ள அக்கறையில் கேட்டிருக்கிறார்கள். கண்டிப்பாக நான் CEO–விடம் தெரிவித்து அங்குள்ள நிலைமை என்ன என்பதை அறிந்து, கலந்தாலோசித்து, அவசியம் வேண்டுமெனில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று ஆவன செய்வதற்குப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றி. அது கிராமம் என்பதால், நீங்கள் கண்டிப்பாக, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கண்டிப்பாக வேண்டும் என்று கேட்கிறீர்கள். நன்றி சொல்லி முடித்து விடுங்கள்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: ஆமாம், கண்டிப்பாக வேண்டும். (குறுக்கீடு) நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்காக மட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர் மூர்த்தி அண்ணன் அவர்கள்கூட Model School கேட்டிருக்கிறார்கள்.

அதுபோன்று நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அரகண்டநல்லூரில் ஓர் அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது; அது ஆண்கள் மற்றும் பெண்கள் (Co–Ed.) பள்ளியாகும். அதனைப் பிரித்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள்.

செஞ்சி தொகுதியைச் சார்ந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அனந்தபுரம் மேல்நிலைப் பள்ளியை பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகப் பிரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார். இதுபோன்று பள்ளிக்கூடங்களுக்கு என்னென்ன தேவையோ, விதிமுறைகளுக்கேற்ப உடனடியாக சம்பந்தப்பட்ட CEOs மூலமாக ஆய்வு செய்யப்பட்டு, உள்ளபடியே நெறிமுறைகளுக்குள் வருகிறபட்சத்தில் கண்டிப்பாக இந்த ஆண்டே செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

(அ) மண்பாண்டம் செய்தல் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக மண் எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. எடப்பாடி K. பழனிசாமி, எதிர்க்கட்சித் தலைவர், திரு. கே.பி. அன்பழகன், திரு. ஆ. கோவிந்தசாமி, (குறுக்கீடு)

3. தகவல் கோரல்

முந்தைய ஆட்சியில் உயர் கல்வித் துறையில் செயல்படுத்திய திட்டங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோ அல்லது எதிர்க்கட்சிக் கொறடா அவர்களோ என்னிடம் வந்து, (குறுக்கீடு) சொல்லிவிடுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோ அல்லது எதிர்க்கட்சிக் கொறடா அவர்களோ, என்னிடம் வந்து பேச அனுமதி கேட்டார்கள். நான்

9–00 மணிக்கே வந்து காத்திருந்தேன். நீங்கள் என்ன விஷயம் என்பதை என்னிடம் கேட்டுவிட்டு வந்து கேள்வி எழுப்பினால் நன்றாக இருக்கும். நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன். இன்றைக்கு (குறுக்கீடு) Subject–ஐ பற்றி ஒரு நிமிடத்தில் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஆட்சி வரலாற்றில் ஆறு முறை, தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகம் இந்திய துணைக் கண்டத்தில் முதன்மை மாநிலமாக விளங்கக்கூடிய வகையில் அனைத்து திட்டங்களையும் வழங்கியவர், எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள், விஷயத்திற்கு வாருங்கள். நீங்கள் அரசியல் மேடைபோல் இதனை தயவுசெய்து பயன்படுத்த வேண்டாம். நீங்கள் என்ன விஷயம் என்பதைச் சொல்லுங்கள். என்ன விஷயம் என்பதை மட்டும் சொல்லுங்கள். ஆரோக்கியமாக இந்தச் சபை நடக்க வேண்டுமென்று நீங்கள் சொன்னது, பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆரோக்கியமாக கேள்வியை மட்டும் கேளுங்கள். நான் சொல்கிறேன்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியும் ஆரோக்கியமான கேள்வி என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேளுங்கள். ஒரு வரியில் கேளுங்கள்.

திரு. கே.பி. முனுசாமி: இன்று இந்திய துணைக் கண்டத்தில், தமிழகம் முதன்மையான மாநிலமாக உருவாவதற்கு அடிப்படைக் காரணம் கல்வி. அந்தக் கல்வியில், உயர் கல்வியில் 54.1 விழுக்காடு மாணவர்கள் சேர்வதற்குரிய உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கேட்கிறேன். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியைக் கேளுங்கள். நான் 9–00 மணியிலிருந்து இருக்கிறேன். 9–30 மணிக்குள்ளாக வந்து என்னிடம் கேட்டிருக்க வேண்டும். அதையும் தாண்டி, உங்களுக்காகச் சொன்னேன். உங்களுடைய

ஆட்சியின் சாதனைகளைப் பேச வேண்டுமென்றால், உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசலாம். நீங்கள் பேசும்போது பேசலாம். தவறு இல்லை. கேள்வி என்ன என்பதை நீங்கள் சொன்னீர்கள் என்றால், அதற்கு உண்டு, இல்லை என்று ஒரு பதில் சொல்வேன். சொல்லுங்கள்.

முற்பகல் 10–40

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு சிறப்பு வாய்ந்த முதலமைச்சர் கொண்டு வந்த பல்வேறு திட்டங்கள், இன்று இந்த ஆட்சியாளர்களால் ** அதுமட்டுமல்ல, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் தவறுதலாக எடுத்துக்கொள்ளக் கூடாது, (குறுக்கீடு) நீங்கள் தப்பாக எடுத்துக்கொள்ள வேண்டாம், நீங்கள் தவறுதல் என்று சொல்கிறீர்கள். அது இருந்தால் என்னிடத்தில் கொடுங்கள். அதனைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கிறேன். தற்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி K. பழனிசாமி அவர்களும், (குறுக்கீடுகள்) அவர்கள் பேசி முடிக்கட்டும் (குறுக்கீடுகள்) அனைவரும் அமைதியாக இருங்கள்.*

(மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் எழுந்து நின்று ஏதோ பேசினார்.)

நான் சொல்கிறேன், (குறுக்கீடுகள்) அதாவது நீங்கள் முதலமைச்சராக இருந்தவர். (குறுக்கீடுகள்) கேளுங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) முழுவதுமாகக் கேளுங்கள்; நான் சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள் சொல்கிறேன். அதாவது, ஒரு நடைமுறை இருக்கின்றது (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள், முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் கல்வித் துறையில் கொண்டுவந்த திட்டங்களையெல்லாம் இந்த ஆட்சி ** என்று*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

பொத்தாம்பொதுவாக ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டை இந்த ஆட்சிமீது சுமத்தியிருக்கிறார். எந்தெந்த திட்டங்களை இந்த ஆட்சி ** என்பதை ஆதாரத்தோடு சொல்ல முடியுமா என்பதை முதலில் அவர் தெரிவிக்கட்டும். அதற்கு நாங்கள் பதில் சொல்கிறோம். One, two, three என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் கூறிய அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். எல்லோருக்கும் ஒன்றைச் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். கேட்டுக்கொள்ளுங்கள். ஒரு மரபு இருக்கிறது. சட்டப் பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் 9–30 மணிக்கு முன்பு ஒரு விஷயத்தைச் சொல்லி, இதுகுறித்து நான் அவையில் பேசப்போகிறேன் என்று சொல்லி, சரி பேசுங்கள் என்றும், நான் அமைச்சர் அவர்களிடத்தில் பதில் சொல்லச் சொல்கிறேன் என்றும் சொன்னால் அது நியாயம். எதுவுமே இல்லாமல், நீங்கள் இங்கே வந்து நின்றுகொண்டு, வினாக்கள்–விடைகள் நேரம் முடியக்கூடிய நேரத்தில் கொறடா சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) கேளுங்கள், Zero hour–ல் யார் வேண்டுமானாலும் பேசலாம் என்று சொல்லி அனுமதித்தால், சபையை நடத்த முடியாது. இன்றைக்கு மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியுள்ளது. நீங்கள் முன்கூட்டியே கேட்டிருந்தால் அதற்கு அமைச்சர்களைப் பதில் சொல்லச் சொல்லி, அவர்களைத் தயார் செய்திருப்பேன். நீங்கள் போகின்றபோக்கில் எல்லாத் திட்டங்களையும் ** என்று சொன்னால் உயர் கல்வித் துறை மானியத்தில் நீங்கள் இதுகுறித்துப் பேசியிருக்கலாமே? என்னென்ன திட்டங்கள் ** என்று. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் எல்லா திட்டங்களும் ** என்று சொன்னார். அந்த அம்மையார் அவர்களின் ஆட்சியில், கல்வித் துறையில் ஒரு திட்டத்தையும் கொண்டுவரவில்லை என்று நான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களுக்கு நேரம் தந்துவிட்டேன். அதை விடுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தலைவர் அவர்கள் பேசுங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. இதனை மாண்புமிகு உறுப்பினராகிய நீங்கள்தான் கொண்டுவந்துள்ளீர்கள். திரு. எடப்பாடி K. பழனிசாமி, எதிர்க்கட்சித் தலைவர், . . .

திரு. எடப்பாடி K. பழனிசாமி: Zero hour–ல் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zero hour–ல் அனுமதி பெற்றுத்தான் பேச வேண்டும் என்பது மரபு. (குறுக்கீடு) அது 9–30 மணிக்குள் கேட்க வேண்டும் என்பது உங்களுக்கு தெரியும். (குறுக்கீடு) நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்கிறேன். நீங்களும் சொன்னீர்கள். கொறடாவும் சொன்னார்கள். நான் பேசச் சொல்கிறேன். அப்படி பேசச் சொன்னபோது நீங்கள் கடந்த காலத்தில் உங்களது ஆட்சியில் செய்த சாதனைகளைச் சொல்லுங்கள். அது தவறில்லை. அதற்கு Zero hour தான் கிடைத்ததா? நீங்கள் என்ன கேள்வி கேட்கிறீர்களோ அந்த ஒரு கேள்வியைக் கேட்டு, பதிவு செய்து அத்துடன் முடித்துக்கொள்ள வேண்டும். அந்தக் கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அந்தக் கேள்வியை மட்டும் சொல்லுங்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் நான் கூறிய கருத்துகளை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் Debate வேண்டாம். நீங்கள் என்ன பேச வந்தீர்கள் என்பதை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) கொறடா அவர்கள் நீங்கள் சொன்னதற்கு (குறுக்கீடுகள்) அதை முன் வரிசையில் இருப்பவர்கள் பார்த்துக்கொள்வார்கள். நீங்கள் இப்போது என்ன பேச வந்தீர்கள்? அதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. கே.பி. முனுசாமி: பல திட்டங்கள் **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி நீங்கள் பொத்தாம்பொதுவாகச் சொல்லாதீர்கள். (குறுக்கீடுகள்) எது என்று சரியாகச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2021 செப்டம்பர் 8]

திரு. கே.பி. முனுசாமி: *ஸ்கூட்டி திட்டம் ** புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஸ்கூட்டி திட்டம் நீங்கள் அறிவித்த திட்டம். அதற்கு நீங்கள் நிதி ஒதுக்கி வைத்திருப்பதை, நிறுத்தி வைத்திருந்தால் என்னவென்று பதில் சொல்லச் சொல்லியிருக்கிறேன். நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன். இத்துடன் போதும். நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள்.*

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்புமீது மட்டும் பேசுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். பாதிக்குப் பாதியிலேயே நீங்கள் cut செய்துவிடுகிறீர்கள் என்றால் எப்படி முழு நிகழ்வுகளையும் பேச முடியும்? நாங்கள் சொல்ல வந்ததையே நீங்கள் இடையில் மறிக்கும்போது கவனம் திசைதிரும்பிப் போகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், ஒரு வார்த்தை சொல்லிவிடுகிறேன். அதாவது, நீங்கள் ஸ்கூட்டி வாங்கி வைத்திருந்ததையோ நிதி ஒதுக்கி வைத்திருந்ததையோ அவர்கள் கொடுக்காமல் வைத்திருந்ததையோ அது ஒரு முக்கியமான பிரச்சினை. ஒவ்வொரு அரசும், ஒவ்வொரு திட்டத்தினைக் கொண்டுவரும். அதை நீங்களும் கொண்டுவரலாம், ஆளும் கட்சியும் கொண்டுவரலாம். அது உங்கள் விருப்பம். இந்தத் திட்டத்தில் எதை நிறைவேற்றலாம், நிறைவேற்றக் கூடாது என்பது அவர்கள் விருப்பம். நீங்கள் அவர்களிடத்தில் கேட்டீர்கள் என்றால், தினமும் 34 இலட்சம் பேர் பேருந்துகளில் free ஆகப் போகிறார்கள். அதனால் ஸ்கூட்டி தேவையில்லை என்பார்கள். அது விவாதம் அல்ல. (குறுக்கீடு) விவாதம் அது அல்ல. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[*2021 செப்டம்பர் 8*

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய திட்டங்களை நாங்கள் ** என்று சொன்னார்கள். ஒவ்வொரு துறை பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறையில் இந்தெந்த திட்டங்களை நாங்கள் ** என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது கூறியிருக்கலாம். நான் அவர்களுக்கு திடமாக, தெளிவாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விழைகிறேன். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் மக்களுக்குக் கொடுப்பதற்காக வாங்கப்பட்ட கலர் டி.வி.–க்களை அவர்களுக்குக் கொடுக்காமல் (மேசையைத் தட்டும் ஒலி) வீணடித்து, கோடிக்கணக்கான ரூபாயை நஷ்டம் செய்தவர்கள் அவர்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விழைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அதையும் சேர்த்து சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) இரண்டையும் சேர்த்து சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைபெற்ற சட்டசபைகளில், அதாவது,* Zero Hour*–ல் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் பதில் இருந்தால்தான் ஒரு பிரச்சினையை எழுப்ப முடியும் என்று சபாநாயகர் ஏற்கெனவே கொடுத்த* rulings *இருக்கிறது. ஏனெனில், திடீரென்று ஒரு கேள்வி கேட்டால், சம்பந்தப்பட்ட அமைச்சரால் பதில் சொல்ல முடியாது; அது* Zero Hour *ஆக இருந்தாலும்கூட. அதிகப்படியாக போனால்,* mention *செய்யலாம் என்று சொல்வார்கள், அவ்வளவுதான்.* Mention *செய்ய வேண்டும் என்று சொல்ல வேண்டும். அவர்கள் அதை* mention*–ம் செய்யவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Mention *செய்வதற்கு என்னிடம் அனுமதி கேட்க வேண்டும்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *அவர், அந்த ஆட்சியினுடைய சாதனைகளையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார். எப்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களால் பதில் சொல்ல முடியும்? எனவே, ஒரு வரியில் அவர்* mention *செய்யலாம். அந்த அளவில்தான் இதுவரைக்கும் அனுமதித்திருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்கள்* mention *செய்த கருத்துக்கள் அவைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டுவிட்டன.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *அந்த அரசினுடைய சாதனைகளையெல்லாம் சொல்ல முடியாது. அப்படியெல்லாம் இதுவரைக்கும்* ruling *இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், சொல்லுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் சில கருத்துகளைச் சொல்ல முன்வந்தார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zero Hour*–ல் கருத்து சொல்லக் கூடாது.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அவையில்* Zero Hour *என்பது ஒரு முக்கிய நிகழ்வு. அப்போதுதான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர முடியும்.* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் முதல்வராக இருந்தவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் ஏற்கெனவே முடிந்த பிரச்சினையைப் பற்றி இன்றைக்குப் பேசுகிறீர்கள். என்ன நோக்கத்திற்காக இதைப் பேசுகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.* (குறுக்கீடு) *இல்லை, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் இன்றைக்கு என்ன நோக்கத்திற்காக இந்தப் பிரச்சினையை எழுப்புகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிற குற்றச்சாட்டுகளெல்லாம் இந்த அவையிலே ஏற்கெனவே எழுப்பப்பட்டு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் பொன்முடி அவர்களால் மிக விளக்கமாக பதில் சொல்லப்பட்டது. அதைக் கேட்டு, அவர்கள் அமைதியாக அமர்ந்துவிட்டார்கள். இன்று ஏன் கேட்க வேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அனைத்துப் பிரச்சினைகளையும் இத்துடன் முடியுங்கள். இப்போது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றது. (குறுக்கீடு) Zero Hour–ல் உங்கள் கருத்துகளை mention செய்துவிட்டீர்கள். அதற்கு நான் வாய்ப்புக் கொடுத்துவிட்டேன்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான், நீங்கள் ஒரு நோக்கத்தோடு வந்திருக்கிறீர்கள்; அதைத்தான் சொன்னேன். ஏதோ ஒன்றை smell செய்துவிட்டீர்கள். நீங்கள் அவையிலிருந்து வெளியே செல்ல வேண்டும்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் திட்டமிட்டு, வெளிநடப்புச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்துவிட்டீர்கள். (குறுக்கீடு) அதற்கு நீங்கள் வேறு காரணம் சொல்லியிருக்கலாமே? (குறுக்கீடு) இதைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் வெளிநடப்புச் செய்வதற்கு எத்தனையோ நல்ல விஷயங்களைச் சொல்லலாம். (குறுக்கீடு) போய்விட்டு வாருங்கள். (குறுக்கீடு) Right.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

(அ) மண்பாண்டம் செய்தல் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக மண் எடுத்தல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எடப்பாடி K. பழனிசாமி, (குறுக்கீடு) போய்விட்டு வந்துவிடுங்கள். நீங்கள் பேச வேண்டியிருக்கிறது. திரு. கே.பி. அன்பழகன், திரு. ஆ. கோவிந்தசாமி மற்றும் திரு. வே. சம்பத்குமார் ஆகியோரில் ஒருவர், (குறுக்கீடு) நான் பேரவைத் தலைவர் என்கிற முறையில், அன்போடு கேட்கிறேன், நீங்கள் போய்விட்டு மீண்டும் பேச வாருங்கள்.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள், இருக்கையில் இல்லை. என்னுடைய அனுமதி இல்லாமல் Zero Hour*–ல் பேசப்பட்ட அனைத்து வார்த்தைகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.*

(ஆ) மேட்டூர் அரசு கலைக் கல்லூரி, ஆசிரியரல்லாத தற்காலிகப் பணியாளர்களின் பணியை வரன்முறை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

முற்பகல் 10–50

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 2006 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நாள் முதல் 15 ஆவது ஆண்டாக ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் தற்காலிகமாக பணியாற்றி வரும் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஆசிரியர் அவர்களுக்கு ஒரு சிறிய வேண்டுகோள். அந்த நிகழ்ச்சிநிரலில் இருப்பதை மட்டும் வாசித்துவிட்டு உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: அதுதான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, படியுங்கள்.

திரு. ஜி.கே. மணி: ஆசிரியர் அல்லாத பணியாளர்களை பணி வரன்முறை செய்து அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு முனைவர் க. பொன்முடி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையில் வைக்கப்பட்டுள்ள கணினியில் கவன ஈர்ப்பு என்ற தலைப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அறிக்கை

சேலம் மாவட்டம், மேட்டூரில், 2006–2007 ஆம் கல்வியாண்டில் பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி தொடங்கப்பட்டது. மூன்று இளநிலை பாடப் பிரிவுகளுடன் தொடங்கிய இக்கல்லூரியில் தற்போது ஏழு இளநிலை பாடப் பிரிவுகள், ஒரு முதுநிலைப் பாடப் பிரிவு மற்றும் ஒரு ஆய்வியல் நிறைஞர் பாடப் பிரிவு ஆகியன பயிற்றுவிக்கப்படுகின்றன.

பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்பட்டபோது தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில், அரசால் நிரந்தரப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படும் வரை தற்காலிகப் பணியாளர்கள் அப்பணியிடங்களிலேயே தற்காலிக அடிப்படையில் பணிபுரிய அனுமதி அளித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேட்டூர் கல்லூரிக்கு 68 ஆசிரியர் பணியிடங்களும், 17 ஆசிரியரல்லாப் பணியிடங்களும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

2021 செப்டம்பர் 8] [முனைவர் க பொன்முடி]

மேட்டூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தற்போது ஆய்வக உதவியாளர் (4), நூலக உதவியாளர் (1), பெருக்குபவர் (3) ஆகிய 8 நபர்கள் தொகுப்பூதிய அடிப்படையிலும், மேலும், பெருக்குபவர் (1), இரவுக் காவலர் (2), பகல் காவலர் (1) துப்புரவுப் பணியாளர் (1), ஆக 5 நபர்கள் தினக்கூலி அடிப்படையிலும் தற்காலிகமாகப் பணிபுரிந்து வருகின்றனர்.

அரசுக் கல்லூரியாக மாற்றப்பட்ட 41 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளுக்குண்டான செலவினங்களை அரசின் நிதிப் பற்றாக்குறை காரணமாக, சார்ந்த பல்கலைக்கழகங்களே ஏற்றுக் கொள்ள அறிவுறுத்தப்பட்டது. தற்போது கோவிட் 19–ன் தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள கூடுதல் நிதி நெருக்கடி சூழலில் பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியிலிருந்து அரசு கல்லூரியாக மாற்றப்பட்ட மேட்டூர் அரசு கலைக் கல்லூரியில் தற்காலிகமாக 14 ஆண்டுகளாகப் பணியாற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்வது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருந்தாலுங்கூட, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது, மேட்டூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 2006 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அந்தக் கல்லூரி தொடங்கப்பட்ட நாள் முதல் இன்றுவரையில் ஆசிரியர் அல்லாத பணியாளர்களாக அலுவலக உதவியாளர்கள், நூலக உதவியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், இரவுக் காவலர்கள் என 15 ஆண்டுகளாக மிகக் குறைந்த ஊதியத்தில் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு அப்போது பணி நியமனம் வழங்கப்பட்ட காலத்தில் அது பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாக இருந்தது. அதற்குப் பிறகு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக மாற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் அவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு இப்போது வயது மூப்பு அடைகிற நிலையில் இருக்கிறார்கள்.ஆகவே, இந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கு பணி நிரந்தரம் வழங்கப்படவில்லையென்றால், ஊதிய உயர்வு வழங்கப்படவில்லையென்றால், அவர்களுடைய

வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும் என்ற அடிப்படையில்தான் அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதோடு இந்த அவைக்கு ஒரு முக்கியமான தகவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது. அதை அடுத்ததாக வைத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பல்கலைக்கழகங்களினுடைய உறுப்புக் கல்லூரியாக கலைஞர் ஆட்சியில் 2006–2007–ல் உருவாக்கப்பட்ட கல்லூரிகளில் இதுவும் ஒன்று. 2018–2019–ல் உறுப்புக் கல்லூரிகளாக இருந்த இந்தக் கல்லூரிகளை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் கடந்த ஆட்சியிலே கோரப்பட்டு, அரசுக் கல்லூரிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அப்போது, பல்கலைக்கழகப் பணியாளர்கள்தான் அங்கே நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அதிலே, மேற்படி கல்லூரிகளில் பணிபுரிந்து வந்த முறையான ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் முறையே அவர்கள் சார்ந்த பல்கலைக்கழகங்களின் துறைகள் மற்றும் நிருவாகப் பணியிடங்களில் தக்க வைக்கப்படுவார்கள். Regular ஆக இருப்பவர்கள் அங்கேதான் இருப்பார்கள். தற்காலிகமாக அப்போது நியமிக்கப்பட்டவர்கள்தான் அந்தக் கல்லூரிகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இதுவரையில் தற்காலிகமாக இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டிலே பல்வேறு இடங்களிலே Guest Lecturers என்று அந்தக் காலம் முதல் நியமிக்கப்பட்டு ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களெல்லோரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம்கூட கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். கடந்த ஆட்சியிலே, Guest Lecturers-ஐ தேர்வு செய்வதற்காக ஒரு குழுவைப் போட்டபோது அதன் மூலமாக தவறுகள் நடந்ததாகச் சுட்டிக்காட்டப்பட்டன. அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். வெளிப்படையாகத்தான் அவர்கள் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று சொல்லி, அதுவும் தனியாக குழு போட்டு தேர்ந்தெடுப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். அதெல்லாம்

2021 செப்டம்பர் 8] [*முனைவர் க. பொன்முடி*]

இல்லாமல், TRB–Teachers Recruitment Board *மூலமாக இந்த ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதேபோல் ஆசிரியர் பணியல்லாதவர்கள் பற்றியெல்லாம்தான் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அந்த ஆசிரியர் பணியில் இல்லாதவர்கள்* TNPSC *மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆகவே, மேட்டூர் அரசு கலைக் கல்லூரியில் மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள மற்ற கல்லூரிகளிலேயும் இதுபோன்ற நிகழ்வுகள் கடந்த காலங்களில் நிறைய இருக்கின்றன. அரசினுடைய நிதி நிலைமையையும் நீங்கள் பார்க்க வேண்டும். இந்த நிதி நிலைமைக்கேற்ப நிச்சயமாக வெளிப்படையான தேர்வு அனைவருக்கும் நடைபெறும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே* TRB*–யின் மூலமாகவும்,* TNPSC*–யின் மூலமாகவும் அவர்களெல்லோரும் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, இதுவரை ஆற்றியிருக்கிற பணி மூப்பிற்கான தகுதிகளும் மதிப்பெண்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டு அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் கவனத்திற்கு ஒரு முக்கியமான செய்தி. தமிழ்நாட்டில் 2006–க்கு முன்பு அரசுக் கல்லூரி துவங்கப்படவில்லை. சுயநிதிக் கல்லூரிகளாகவே இருந்தன. அந்த நேரத்தில், இதே மாமன்றத்தில் நானும் கோரிக்கை வைத்து, 'மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களே, உங்களிடத்தில் கருணையும் இருக்கிறது, நிதியும் இருக்கிறது, ஏழை மாணவர்களின் கல்வி நலன் கருதி அரசுக் கல்லூரி துவங்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, அன்றைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இன்றைய உயர் கல்வித் துறை அமைச்சர், அன்றும் உயர் கல்வித் துறை அமைச்சராக இருந்த அவர்களிடத்திலே சொல்லி அந்த ஆண்டு, முதல் 5 கல்லூரிகள் துவக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டவுடனே, அதில் ஜி.கே. மணி தொகுதிக்கு ஒன்று என்று அறிவித்த கல்லூரிதான் மேட்டூரில் முதன்முதலாக தொடங்கப்பட்ட கல்லூரி. இதில் பணியாற்றக்கூடியவர்கள் அப்பொழுது ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டார்கள்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்லூரியைத்தான் ஆரம்பித்துத் தருவேன் என்று சொன்னார்களே தவிர, இருக்கின்றவர்களுக்கெல்லாம் சம்பளம் தருவேன் என்று சொல்லவில்லை. தர வேண்டுமென்று கேட்டு, உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: அதனுடைய பெருமையைத்தான் சொல்கிறேன். ஆகவே, அவர்கள் தேர்வாணையம்மூலம் தேர்வு செய்யப்பட்டு, மீண்டும் பணி நிரந்தரம் என்று சொல்வதற்கு, கால அவகாசத்திற்கு வாய்ப்பில்லை. காரணம், இப்போது வயது கடந்துகொண்டிருக்கின்ற சூழல். 15 ஆண்டுக் காலம் பணியாற்றிவிட்டார்கள். நேற்றுகூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து, கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறார்கள். 15 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்களை வெளியிலே அனுப்பினால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும், கேள்விக்குறியாகிவிடும் என்பது ஒன்று. அதே கல்லூரிகளிலும், மற்ற கல்லூரிகளிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல கௌரவ விரிவுரையாளர்கள்–Guest Lecturers அவர்களும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, இவர்களையெல்லாம் கவனத்திலே எடுத்துக் கொண்டு, அவர்களுடைய பணியை வரன்முறை செய்து, ஊதிய உயர்வு வழங்குவது பொருத்தமாக இருக்கும். அதை நிறைவேற்ற வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கல்லூரியில், University–லிருந்து Government–க்குப் போகும்போது 68 ஆசிரியர் பணியிடங்களும், 17 ஆசிரியரல்லாப் பணியிடங்களும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. Government–னுடைய நிதிநிலை அறிக்கை கடந்த 10 ஆண்டுகளாக எப்படி இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும். இப்போதும் அது

2021 செப்டம்பர் 8] [*முனைவர் க. பொன்முடி*]

எப்படி இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, அந்த நிதிநிலைமைக்கேற்ப நான் என்னுடைய பதிலிலேயே சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், வருகின்ற காலங்களிலே அவர்கள் வெளிப்படையாக TRB *மூலமாகவும், மற்றும்* TNPSC *மூலமாகவும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அது மேட்டூர் கல்லூரியாக இருந்தாலும் சரி, நீங்கள் சொன்னதைப்போல கௌரவ விரிவுரையாளர்களாக இருந்தாலும் சரி, மேட்டூர் கல்லூரியில் தற்காலிக அடிப்படையில் உள்ளவர் எவரையும் இப்பொழுது நீக்குவது மாதிரி இல்லை. அவர்கள் இருக்கிறார்கள், இருக்கின்றவரை அவர்கள் அதேமாதிரி இருப்பார்கள். நிதிநிலைமைக்கேற்ப அவ்வப்போது நான் சொன்னதுபோல, உரிய முறைகளின் மூலமாக* TRB, TNPSC*–ன் மூலமாக உரிய காலங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு நிரந்தரப் பணி வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இதைத் தெரிவித்திருக்கிறோம். அவரும் இதை நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்று சொல்லலாம். ஆனால், நிதிநிலைமை பற்றி உங்களுக்குத் தெரியாதது கிடையாது. தமிழக அரசினுடைய நிதிநிலைமை எப்படி இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அந்த நிதிநிலைமைக்கேற்ப படிப்படியாக இவர்களுக்கு நிரந்தரப் பணிகள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11–00

5. அரசினர் தீர்மானம்

பேரவை விதி 185(2)-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். பேரவை விதி 185(2)–ஐத் தளர்த்தக் கோரும் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழியலாம்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவை விதி 185(2)–ஐத் தளர்த்தி, இன்று (8–9–2021) நிதி அலுவல்களுக்கு முன்னர் அரசினர் தனித் தீர்மானம் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

6. அரசினர் தனித் தீர்மானம்

ஒன்றிய அரசின் இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019-ஐ இரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியுரிமை என்பது ஒவ்வொரு மனிதரின் சட்டபூர்வமான உரிமை. இந்திய நிலப்பரப்புக்குள் தங்கள் இருப்பிடத்தைக் கொண்ட அனைவருக்கும் குடியுரிமை வழங்கிட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 14–வது பிரிவின்படி, இந்திய நிலப்பரப்புக்குள் எந்த நபருக்கும், எந்தக் குடிமகனுக்கும் சட்டப்படியான சமத்துவம், அனைவருக்கும்*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2021 செப்டம்பர் 8

சட்டப்படியான பாதுகாப்பு ஆகிய அம்சங்களை அரசு மறுக்க முடியாது. 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின்படி, குடியுரிமை பெற மதம் ஒரு அடிப்படையாக இல்லை. ஆனால், இன்றைய ஒன்றிய அரசு கொண்டுவந்த திருத்தத்தில், மதத்தை ஒரு அடிப்படையாக மாற்றுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், இந்தியாவை மதச்சார்பற்ற அரசு என்கிறது. அதன்படி பார்க்கும்போது, மதத்தை அடிப்படையாகக் கொண்டு எந்தச் சட்டத்தையும் கொண்டு வர முடியாது. அதனால்தான் இந்தச் சட்டத்தை எதிர்க்க வேண்டியுள்ளது. இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், இந்திய நாடாளுமன்றத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 19 ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது. இதற்கு இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019, [Citizenship (Amendment) Act, 2019] என்று பெயர் சூட்டப்பட்டது.

பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் இந்தியாவிற்கு புலம்பெயர்ந்து குடியேறிய இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் கிறித்தவர்கள் ஆகியோருக்கு இந்தச் சட்டம் குடியுரிமை வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. இஸ்லாமியர் இதில் திட்டமிட்டு, தவிர்க்கப்பட்டுள்ளனர். இது மக்களை மதரீதியாகப் பிரிக்கிறது என்பதால், இந்தச் சட்டத்தை ஆரம்ப நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சட்டமானது, நமது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு, குறிப்பாக மதச்சார்பற்ற தன்மைக்கு முற்றிலும் எதிரானதாகும் என்ற காரணத்தினாலும், அது நாட்டு நலனுக்கு உகந்ததல்ல என்பதாலும் எதிர்ப்பைத் தெரிவித்தோம். இச்சட்டத்தினை எதிர்க்கும் வகையில், அது நிறைவேற்றப்படுவதற்கு முன்பே, அதனை எதிர்த்து இந்த மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றி, ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென கோரிக்கை வைத்தோம். ஆனால், அக்கோரிக்கை முந்தைய அரசால் ஏற்கப்படவில்லை. எனினும், இச்சட்டத்திற்கு எதிராக நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும், தோழமைக் கட்சிகளும் வாக்களித்திருக்கின்றன.

2021 செப்டம்பர் 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

அகதிகளாக வருபவர்களை சக மனிதர்களாகப் பார்க்க வேண்டும்; மத ரீதியிலோ, இன ரீதியிலோ, எந்த நாட்டிலிருந்து வருபவர்கள் என்ற ரீதியிலோ அவர்களைப் பிரித்துப் பார்க்கக் கூடாது என்பதுதான் சரியான பார்வையாக இருக்கும். வாழ்க்கையை இழந்து, சொந்த நாட்டில் வாழ முடியாமல், வேறு நாட்டுக்கு வருபவர்களிடம் பாகுபாடு காட்டுவது, அகதிகளுக்கு நன்மை செய்வது ஆகாது. இது ஏற்கெனவே துன்பப்பட்ட மக்களை மேலும் துன்பத்துக்கு ஆளாக்கிப் பார்ப்பதாகும். அரசியல்ரீதியான பாகுபாட்டை, சட்டரீதியான பாகுபாடாக உறுதிப்படுத்துவது மிக மிகத் தவறானது ஆகும். அதிலும் குறிப்பாக, இலங்கைத் தமிழர்கள் இந்தச் சட்டத்தின் மூலமாக வஞ்சிக்கப்படுகிறார்கள். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்க தேசத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் வரலாமென்றால், இலங்கையைச் சேர்ந்தவர்கள் வருவதற்குத் தடை விதித்தது ஏன்? இதுதான் இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகம். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால்தான் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறோம். இலங்கைத் தமிழர்கள் அந்த நாட்டில் வாழ முடியாமல் தமிழகம் தப்பி வந்து முகாம்களிலும், வெளியிலும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் மீண்டும் இலங்கைக்குத் திரும்ப நினைக்காதவர்கள், இங்கு குடியுரிமை பெற்று வாழலாம் என்று நினைப்பவர்களது உரிமையை இந்தச் சட்டம் பறிக்கிறது. ஒன்றிய அரசு இலங்கைத் தமிழர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை என்பதைவிட, வஞ்சனையுடன் செயல்படுகிறது. அதனால்தான் இதனை எதிர்க்க வேண்டி உள்ளது.

முற்பகல் 11–05

அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புக்கு மாறானது இந்தச் சட்டத் திருத்தம். இந்தச் சட்டத் திருத்தம், இந்தியாவில் மொழி, இனம், மதம், நிறம், வாழ்விடச் சூழல் எனப் பல்வேறு வகைகளில் வேறுபட்டிருந்தாலும், இணைந்து வாழும் மக்களைப் பிரித்து வைக்கும் ஒன்றாக அமைந்திருக்கிறது.

உலகில் மிகப் பெரிய மக்களாட்சி நாடாக இன்றும் இந்தியா மிளிர்வதற்குக் காரணம் "வேற்றுமையில் ஒற்றுமை" எனும் தத்துவம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு மொழிகள், பல்வேறு இனங்கள், பல்வேறு மதங்கள், பல்வேறு கலாச்சாரங்கள் கொண்ட நாடாக இருந்தாலும், நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற உணர்வோடு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். மதம், இனம்,

மொழி, மாநில வேற்றுமைகளைக் கடந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தியாவின் சுதந்திரம் என்பது, அனைவரும் சேர்ந்து போராடியதால் கிடைத்தது. இமயம் முதல் குமரி வரையிலான ஒற்றுமையால் அடைந்த வெற்றியாகும். இத்தகைய உன்னதமான நல்லிணக்க மரபிற்கு ஊறு விளைவிக்கும் வகையில், இந்திய மக்களிடையே பேதத்தைத் தோற்றுவிக்க வழிவகை செய்யும் இந்தச் சட்டத் திருத்தம் தேவையற்றது; இரத்து செய்யப்பட வேண்டியது என நாம் கருதுகிறோம். மேலும், இச்சட்டத்தின் நீட்சியாக தேசிய மக்கள்தொகைப் பதிவேடு (National Population Register) தயாரிக்கும் பணியினையும், அதனடிப்படையில் தேசிய குடிமக்கள் பதிவேடு (National Register of Citizens) தயாரிப்பதையும் ஒன்றிய அரசு முழுவதுமாகக் கைவிட வேண்டும் எனவும் நாம் கருதுகிறோம்.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில், இணக்கமாக ஒன்றிணைந்து வாழும் இந்திய மக்களிடையே மத, இனரீதியான பாகுபாடுகளை ஏற்படுத்தி, இந்திய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் கேள்விக்குறியாக்கும், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டுமென ஒன்றிய அரசை இம்மாமன்றம் வலியுறுத்தி, பின்வரும் தீர்மானத்தினை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்தத் தீர்மானத்தைத் தற்போது அவையில் முன்மொழிகிறேன்.

தீர்மானம்

"ஒன்றிய அரசு கடந்த 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019, இந்திய நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் வகுத்தளிக்கப்பட்டுள்ள மதச்சார்பின்மை கோட்பாட்டிற்கும், நம் நாட்டில் நிலவி வரும் மத நல்லிணக்கத்திற்கும் உகந்ததாக இல்லை என்று இப்பேரவை கருதுகிறது. மக்களாட்சித் தத்துவத்தின்படி ஒரு நாட்டின் நிருவாகம் என்பது, அந்நாட்டில் வாழும் அனைத்து மக்களின் கருத்தினையும் உணர்வுகளையும் உணர்ந்து அமைந்திருக்க வேண்டும். ஆனால், இந்தக் குடியுரிமைத் திருத்தச் சட்டமானது அகதிகளாக இந்நாட்டிற்கு வருபவர்களை அவர்களின் நிலை கருதி அரவணைக்காமல், மத ரீதியாகவும், எந்த நாட்டிலிருந்து

வருகிறார்கள் என்பதைப் பொறுத்தும் பாகுபடுத்திப் பார்க்கும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

எனவே, இந்திய நாட்டின் ஒற்றுமையையும், மத நல்லிணக்கத்தையும் போற்றிப் பாதுகாக்கவும், அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதச்சார்பின்மை கோட்பாட்டினை நிலைநிறுத்தவும், ஒன்றிய அரசின் இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019–ஐ, இரத்து செய்திட ஒன்றிய அரசினை இப்பேரவை வலியுறுத்துகிறது."

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தின்மீது பேசுகின்றவர்கள், ஒன்றிரண்டு வார்த்தைகளில் பேசி முடிக்கும்படி, நேரத்தின் அருமை கருதி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகள் ஏன் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள் என்று இப்போது தெரிகிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான், எந்த நோக்கத்திற்கு நீங்கள் போகிறீர்கள் என்றும் கேட்டேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இந்தத் தீர்மானத்தை எதிர்க்கின்ற தைரியம் இல்லை. ஆகையினால் வெளியிலே ஓடிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள், இந்தத் தீர்மானத்தை எதிர்க்கின்ற தைரியம் எதிர்க்கட்சிக்கு இல்லையென்று குற்றம் சாட்டினார். ஆதரிக்கிற தைரியம் இல்லை. அதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசு 2019–ல் கொண்டுவந்த இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம் என்பது இந்தியாவில் வாழ்கின்ற, இந்தியாவின் விடுதலைக்காக இன்னுயிரைத் தியாகம் செய்தவர்கள், இந்தியாவின் விடுதலைக்காக தங்களுடைய உடல், பொருள், ஆவி அத்துணையையும் தியாகம் செய்த எனதருமை இஸ்லாமிய சகோதரர்களைக் குறிவைத்து கொண்டுவரப்பட்ட ஒரு மோசமான மக்கள் விரோதச் சட்டம், இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், CAA, NRC, NPR என்பன. இந்திய நாட்டின் ஒரு குடிமகனாக இஸ்லாமியர் தன்னை மீண்டும் ஒருமுறை நிரூபித்துக்கொள்வதற்காக, அவர்கள் கேட்ட 14 ஆவணங்களும் எந்த இந்திய நாட்டின் இஸ்லாமியராலும் தர முடியாத ஒரு மோசமான சட்டத்தின் உட்பிரிவாகும்.

முற்பகல் 11–10

அதை கடந்த காலத்தில் ஒன்றிய பாரதிய ஜனதா அரசு கொண்டுவந்ததோடு மட்டுமல்லாமல், அதனை எதிர்த்துப் போராடியவர்களை அடக்குமுறைச் சட்டங்களைக்கொண்டு, அடக்கியது; கைது செய்தது; சிறைப்படுத்தியது. குறிப்பாக, இந்தச் சட்டத்தை எதிர்த்து, நூற்றுக்கும் மேற்பட்ட போராட்டங்களில் பங்கெடுத்தவன் என்கிற முறையிலும், 40–க்கும் மேற்பட்ட வழக்குகளைச் சுமந்து பல்வேறு நீதிமன்றப் படிக்கட்டுகளை ஏறி, இறங்கியவன் என்ற அடிப்படையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் 'இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019–ஐ இரத்து செய்ய வேண்டும்' என்கிற இந்தத் தனித் தீர்மானத்தை தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

அதேபோன்று, இந்த மண்ணில் வாழ்கின்ற எமது ஈழ உறவுகளையும், தனிமைப்படுத்திப் பார்க்கின்ற, பிரித்துப் பார்க்கின்ற மோசமான சட்டத்தின் உட்கூறு இதில் அமைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு தெளிவாகச் சுட்டிக்காட்டியமைக்காகவும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திபெத்தியர்களின்மீதான ஒன்றிய அரசின் பார்வை ஒரு மாதிரியாகவும், திபெத்திய அகதிகளும், திபெத்திற்காகப் போராடியவர்களுக்கு ராஜ கம்பளமும், சிவப்புக் கம்பளமும் விரிப்பதும், எனதருமை இஸ்லாமியர்களையும், தொப்புள்கொடி உறவுகளையும் மாற்றான் தாய் மனப்பான்மையோடு அணுகுவதற்கும், ஒரு சம்மட்டி அடி கொடுப்பதுபோல், சுயாட்சித் தத்துவத்தின்கீழ் இயங்குகிற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் வழிவந்த அண்ணன் தளபதி அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை மனதார வரவேற்று, பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானம் இந்திய தேசத்தினுடைய ஒற்றுமையை நிலைநாட்டுகின்ற தீர்மானம். சட்டங்களை இயற்றலாம்; ஆனால், அந்தச் சட்டங்கள் ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும். எந்த ஒரு சாராரையும் துன்புறுத்துவதாக, கஷ்டப்படுத்துவதாக ஓர் உள்நோக்கத்தோடு சட்டங்கள் இருக்கக் கூடாது. 1980–களிலே இரண்டு ஆண்டுகள் நான் அசாமிலே வாழ்ந்தவன். அசாமின் அரசியலை உள்நோக்கமாகக் கொண்டு இந்தச் சட்டத்தை ஒன்றிய அரசு கொண்டு வந்தது என்று அப்போது நான் கருதினேன். ஏனென்றால், அசாமிலிருக்கிற நிலைமை எனக்குத் தெரியும். அன்று அசாம், இன்று தமிழகத்தினுடைய நம்முடைய நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சற்று சுருக்கமாக முடியுங்கள். விளக்கமாகப் பேச வேண்டாம். இன்றைக்கு பிற்பகல் 2–00 மணிக்குள் அவை நடவடிக்கைகளை முடிக்க வேண்டும். மூன்று மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்ற வேண்டும். தயவு செய்து, சுருக்கமாகப் பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தின்மீது இரண்டு வார்த்தைகள் சொல்லிவிட்டு, உட்காருங்கள். (குறுக்கீடு) அசாமுக்கெல்லாம் போனால், இங்கே வருவதற்கு late ஆகும். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) இந்நேரத்திற்குள் உரையை முடித்திருப்பேன். 1980–லேயே வந்துவிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ‘இலங்கைத்

தமிழர்கள், அவர்கள் வாழ்கின்ற இடத்தை அகதிகள் முகாம் என்றுகூட அழைக்கக் கூடாது, அவர்கள் அகதிகள் அல்ல' என்ற மனிதாபிமானத்தைக் கொண்டவர். அப்படிப்பட்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்திய நாட்டினுடைய ஒற்றுமைக்காக, மனிதாபிமானத்தோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார். இதனை முழு மனதோடு ஆதரிக்கின்றோம். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். ஓராயிரம் மேடைகளில் பேசியிருப்பீர்கள். அவ்வளவையும் சுருக்கி ஒரே வரியில் சொல்லுங்கள் பார்ப்போம்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** ஆயிரம் மேடைகளில் பேசினாலும், இந்த மாமன்றத்தில் பேசுவது வேறு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை மத்திய அரசு, ஒன்றிய அரசு, இரத்து செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றியபோது, ஒன்றிய அரசு எதேச்சதிகார மனப்போக்குடன் இந்தக் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றது என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைத்தார்கள். அரசியல் சாசனச் சட்டத்தினுடைய விழுமியங்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வுள்ள அனைவரின் சார்பாக முதலில் நான் வரவேற்கின்றேன்.

நாட்டின் பன்முகத் தன்மைக்கும், சகோதரத்துவத்திற்கும், சமூக நல்லிணக்கத்திற்கும் கேடு செய்ய வந்த, குடிகெடுக்கும் இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019–க்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படக்கூடிய நாள் ஒரு பொன்னாளாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று சட்டமன்றப் பேரவையில் இந்தத் தீர்மானத்தை முன்மொழியும் அந்தக் காட்சியைப் பார்க்கும்போது. டிசம்பர் 23, 2019–ல் சென்னை மாநகரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்களுடைய தலைமையிலே மத்திய அரசு கொண்டு வந்த இந்த எதேச்சதிகாரச் சட்டத்திற்கு எதிராக நடைபெற்ற அந்த வரலாற்றுச் சிறப்புமிகுந்த பேரணி என்னுடைய நினைவலைகளில் வந்து செல்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல்

அந்தப் பேரணிக்குத் தலைமை தாங்கி நடத்தியவர், இன்று அவரே நடத்திக் காட்டும் இடத்திற்கு வந்துள்ளதை நெகிழ்ந்தும், மகிழ்ந்தும் மனமார வரவேற்கின்றேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனவரி 24, 2020 அன்று அண்ணா அறிவாலயத்தில், மாண்புமிகு தளபதி அண்ணன் அவர்கள் தலைமையில், அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், CAA–க்கு எதிராக மட்டுமல்ல, CAA அடிப்படையில், NRC, NPR சட்டங்களையும் தமிழகத்தில் அமல்படுத்துவதற்கு, நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தக் காட்சி வருகிறது; இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள இந்தத் தீர்மானத்தில், CAA–ன் அடிப்படையில், NRC, NPR சட்டங்களையும் இங்கு அமல்படுத்தக் கூடாதென்று ஒன்றிய அரசிடம் கேட்கக்கூடிய இந்தத் தீர்மானம் மிகச் சிறப்பான தீர்மானம். அது மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக, தமிழ்நாட்டினுடைய பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று இந்த CAA என்ற எதேச்சதிகார அரசியல் சாசனத்திற்கு விரோதமான சட்டத்திற்கு எதிராக, 2 கோடி கையெழுத்துக்களை, தெருத் தெருவாகச் சென்று, வீதிவீதியாகச் சென்று, (மேசையைத் தட்டும் ஒலி) அன்று பெற்ற மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சராக, அந்தச் சட்டத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுகிறார் என்றால், இதற்கு நன்றி சொல்வதற்கு எனக்கு வார்த்தையே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) உணர்ச்சிப்பெருக்கில் நான் பேசிக்கொண்டிருக்கின்றேன். இந்த நேரத்தில், நான் பாதிக்கப்பட்ட சிறுபான்மையின முஸ்லிம்களின் சார்பாகவும், ஈழத் தமிழர்களின் சார்பாகவும், நெஞ்சார உளமார இந்தத் தீர்மானத்தை ஏகோபித்து, ஆதரித்து அமர்கின்றேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள். எப்போதும் சுருக்கமாகச் சொல்வீர்கள், அப்படியே சொல்லிவிடுங்கள்.(சிரிப்பு)

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி, நம்முடைய மாண்புமிகு முதல்வர்

[டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்] [*2021 செப்டம்பர் 8*
அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை, நான் முழுமனதோடு ஆதரிக்கிறேன். ஏனென்றால், நமது நாடு ஒரு மதச்சார்பற்ற நாடு. நாடிழந்து, வீடிழந்து, சொந்தபந்தங்களையெல்லாம் இழந்து, அடைக்கலம் தேடி வந்த ஏதிலியர்களை நாம் ஆதரிக்க வேண்டியது, நம் தலையாய கடமை. அப்படிப்பட்ட கடமையில் இருக்கின்ற நம்முடைய மதச்சார்பற்ற நாடு ஒரு குறிப்பிட்ட இனத்தவரையோ, மதத்தவரையோ இங்கு குடியேறக் கூடாது என்று அப்படியொரு சட்டத்தைக் கொண்டுவந்தது, மிகவும் வன்மையாகக் கண்டிக்கக்கூடியது. அது மிகவும் அநீதியான சட்டம்; ஆகவே, அதை இரத்து செய்வதற்கு நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், நான் ஆதரிக்கிறேன், நன்றி கூறிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசு கொண்டுவந்திருக்கின்ற, இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019-ன்படி இஸ்லாமியர் அல்லாத மற்ற மதத்தினர், 5 ஆண்டுகளுக்கு மேலாக சட்ட விரோதமாக இந்தியாவில் குடிபெயர்ந்தால், அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும் என்பது, ஒரு மதத்திற்கு எதிராக கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, தொடர்ந்து எதிர்த்துப் போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். அதேபோன்று இன்றைக்கு, மதச்சார்பின்மை நாட்டில், மதச்சார்பின்மை முகத்தைச் சிதைக்கின்ற செயல், டாக்டர் அம்பேத்கர் அவர்களால் உருவாக்கப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. இந்தச் சட்டத்தை எதிர்த்து, இன்றைக்கும் வட கிழக்கு மாநிலங்களிலும், காஷ்மீரிலும் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கின்ற இந்தவேளையில், சிறுபான்மையின மக்களின் பாதுகாவலராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய வாரிசு தான் என்பதை நிரூபிக்கும்வகையில், இன்றைக்கு இந்திய நாட்டிலுள்ள முஸ்லிம்கள் மட்டுமின்றி, உலகெங்கும் வாழ்கின்ற சிறுபான்மையின மக்களின் வயிற்றில் பால் வார்க்கின்ற வகையில், நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை, இந்திய கம்யூனிஸ்ட்*

2021 செப்டம்பர் 8] [திரு. ட்டி. இராமச்சந்திரன்]

கட்சியின் சார்பாக, மனப்பூர்வமாக வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

***திரு. வி.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின்மீது, எங்களுடைய உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த கொஞ்சம் அவகாசம் தரும்படி உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்களுக்குக் கொடுத்த நேரம் உங்களுக்கும் உண்டு.

முற்பகல் 11–20

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாடு, பல்வேறு மொழிகள், பல்வேறு இனங்கள், பல்வேறு கலாச்சாரங்கள், பல்வேறு பழக்க வழக்கங்கள், பல்வேறு உணவுமுறைகள் ஆகியவற்றைப் பின்பற்றி வாழ்கிற மக்களைக் கொண்ட நாடு. நமது நாடு ஒரு வண்ணக் கலவை. பல்வேறு மலர்கள் பூத்துக்குலுங்கும் மலர் தோட்டம். இதற்கேற்றாற்போல், நமது அரசமைப்புச் சட்டம் டாக்டர் அம்பேத்கர் தலைமையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மதம் மற்றும் கலாச்சார ஒற்றுமையைக் கட்டிக்காத்து, காலங்காலமாக, வாழ்கிற மக்கள் மத்தியில் ஒற்றை கலாச்சாரத்தை திணித்து, மக்களைப் பிளவுபடுத்துகிற சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதை நாம் கவலையோடு பார்க்க வேண்டியுள்ளது. அந்தவகையில், மக்களை மதரீதியாகப் பிளவுபடுத்துகிற சட்டம்தான் ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019. ஆகவே, நம் நாட்டிற்கு எந்தவகையிலும் பொருந்தாத இந்தச் சட்டத்தை இரத்து செய்திட வேண்டுமெனக் கோரி, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை, இந்தச் சட்டத்தை எதிர்த்து, வீதிகளிலே நின்று போராடியவன் என்ற முறையிலும், பல்வேறு வழக்குகளைச் சந்தித்தவன் என்ற முறையிலும், உணர்வுபூர்வமாக எனது சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் வரவேற்று, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

*__திரு. ம. சிந்தனை செல்வன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான தீர்மானத்தை, அச்சட்டத்தை திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துகிற தீர்மானத்தை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே மனப்பூர்வமாக வரவேற்கிறோம். எப்பொழுதும் தமிழகத்திற்கு ஒரு மரியாதை உண்டு. ஆட்சிகள் மாறினாலும்கூட, தமிழகம் ஒரு சமூக நீதிக்கான கருத்தியலைக்கொண்ட பகுதி என்று பிற மாநிலத்தவரால் போற்றப்படக்கூடிய நிலையைத் தக்க வைத்திருந்தது. ஆனால், இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, இந்தச் சட்டத்திற்குத் தேவையான இறுதிப் பெரும்பான்மையை, இறுதியாக அதற்குத் தேவைப்பட்ட கூடுதல் பெரும்பான்மையை தமிழகத்திலே அப்பொழுது ஆண்டு கொண்டிருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அளித்ததுதான் இந்தச் சட்டம் நிறைவேறுவதற்கு வாய்ப்பாக இருந்தது என்பது, இந்திய அளவிலே தமிழகத்திற்கு ஒரு தலைகுனிவை உருவாக்கியது என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்வது என்னுடைய கடமை. அந்த அடிப்படையிலே தமிழகத்தின்மீது சுமத்தப்பட்ட அந்தக் களங்கத்தை இன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் துடைத்தெறிந்திருக்கிறார்கள். எப்பொழுதும் இது சமூக நீதிக்கான மண் என்பதை உறுதி செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் போராடுகிற களத்தில் நின்று பேசுகிறபோதும் அதே கொள்கைதான்; ஆட்சி அதிகாரத்திலே இருக்கிறபோதும் அதே கொள்கைதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மீண்டும் மீண்டும் அவர் உறுதிபடுத்தியிருக்கிறார். பன்மைத் தன்மைக்கு எதிரான இத்தகைய பாசிசப் போக்கிற்கு நாம் எல்லோரும் முடிவு கட்டுகிற வகையிலே, இரண்டாவது விடுதலைப் போராட்டத்தை நடத்த வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த 3 ஆண்டுக் காலமாக எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, அகில இந்திய அளவிலே இருந்த தலைவர்களை ஒருங்கிணைத்துப் போராடினார். அதை அவர்தான் மீண்டும், இந்திய அளவிலே தலைமையேற்று நடத்த வேண்டிய வரலாற்றுப் பாத்திரத்தை தாங்கியிருக்கிறார்.

2021 செப்டம்பர் 8] [திரு. ம. சிந்தனை செல்வன்]

அதைச் செய்வார் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆகவே, காவேரிக் கரையிலே, இதற்கு எதிராக எழுச்சித் தமிழர் நடத்திய போராட்டத்திலே, அணிவகுப்பிலே கலந்துகொண்ட விடுதலை சிறுத்தைகளில் நானும் ஒருவன் என்கிற அடிப்படையிலே நெஞ்சார, மனதார, மதம் என்கிற அடிப்படையிலே இஸ்லாமியர்களையும், இனம் என்கிற அடிப்படையிலே தமிழர்களையும் ஒதுக்குகிற இந்தக் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்கிற தீர்மானத்தை வரவேற்று, ஆதரித்து நன்றி கூறி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். ஒன்றும் யோசிக்காதீர்கள். (சிரிப்பு)*

திரு. நயினார் நாகேந்திரன்: *நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், என்ன சொல்ல வேண்டுமென்று நினைக்கிறீர்கள் என்று தெரியவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம், நூற்றுக்கு நூறு இந்தியாவில் வசிக்கின்ற எந்த இஸ்லாமியர்களுக்கும் எதிரான சட்டம் கிடையாது. இது ஒன்று.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தச் சட்டம் என்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற சட்டத்தைச் சொல்கிறீர்களா? 'எந்த இஸ்லாமியர்களுக்கும் எதிரான சட்டம் இல்லை' என்று சொல்கிறீர்கள். (சிரிப்பு) நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற சட்டத்தைச் சொல்கிறீர்கள்.*

முற்பகல் 11–25

திரு. நயினார் நாகேந்திரன்: *மத்திய அரசு கொண்டுவந்த சட்டம். 1950 ஆம் ஆண்டு* Nehru – Liaquat Ali Khan *ஒப்பந்தம் போடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்தியாவில் வசிக்கின்ற எல்லா சிறுபான்மையினர்களும், அதேபோல* Pakistan*–ல் வசிக்கின்ற எல்லா சிறுபான்மையினர்களும் கல்வி, அரசியல் மற்றும் சமூகத்தில் எல்லா இடங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் சமமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்* Nehru – Liaquat Ali Khan *ஒப்பந்தம் போடப்பட்டது. அதை இந்தியாவில் இன்றும் அப்படியேதான் நாம் கடைப்பிடிக்கிறோம். மாண்புமிகு*

[திரு. நயினார் நாகேந்திரன்] [2021 செப்டம்பர் 8

முதலமைச்சர் அவர்கள் கூறியதுபோல் unity in diversity– வேற்றுமையில் ஒற்றுமை. இன்றைக்கு நாம் அதைத் தொடர்ந்து கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், பாகிஸ்தானைப் பொறுத்தமட்டிலும், பாகிஸ்தான் சுதந்திரம் அடையும்போது இருந்த இந்துக்களின் எண்ணிக்கை 20 சதவிகிதம். ஆனால், இன்றைக்கு அங்கு இருக்கக்கூடிய இந்துக்களின் எண்ணிக்கை 3 சதவிகிதம். ஆக, பெரும்பான்மை சமுதாயம், சிறுபான்மை சமுதாயம் ஆகியவை இந்தியாவில் பாதுகாக்கப்படுகிறது. ஆனால், பாகிஸ்தானில் பாதுகாக்கப்படுவதில்லை. ஆக, எப்போதும் ஒரு majority சமூகம் இருக்கும்போது, அந்த majority சமூகத்திற்கு நிச்சயமாக ஒரு பாதுகாப்பு இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இந்தியாவிற்கு வாருங்கள். இப்போது ஆப்கானிஸ்தானில் ஒரே சமூகம்தான், ஆனால் இருக்க முடியவில்லை. அது வேறு விஷயம். நீங்கள் இந்த CAA சட்டத்தைப் பற்றி பேசுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: அது தீவிரவாத தாக்குதல். அதற்குள் நாம் போகக் கூடாது. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் வசிக்கின்ற minority சமூகமாக இருக்கின்ற, பாதிக்கப்படுகின்ற கிறித்தவர்கள், பார்சி, பௌத்தர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜனநாயக அமைப்பில் இருக்கக்கூடிய எந்த நாட்டிலும் மக்கள் கூடிக்கொண்டே இருப்பார்கள். ஜனநாயக அமைப்பு, இந்தியா, அதுவெல்லாம் வேண்டாம் என்பதுதான் கருத்து. சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: Majority சமூகத்தில் பாதிப்பு ஏற்பட நிச்சயமாக வாய்ப்பில்லை. உதாரணத்திற்கு, இங்கு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் 120 பேர் இருக்கிறார்கள். இவர்களுக்குள் எந்தவிதமான பாகுபாடும், பேதமும் ஏற்பட வாய்ப்பே கிடையாது. எங்கிருந்து பாதிப்பு வரும் என்றால், இங்கிருந்துதான் பாதிப்பு வரும். ஏனென்றால் இங்கு majority இருக்கிறது. அதனால், நான் என்ன சொல்கிறேன் என்றால், நிச்சயமாக (குறுக்கீடு) அது வேறு விஷயம், இருந்தாலும் நான் சொல்வது என்னவென்றால், அந்த majority சமூகம் என்பது அவர்களுக்கு அந்தப் பாதிப்பு இல்லை. பாதிப்பு யாருக்கு என்றால், கிறித்தவர்களுக்கு, பௌத்தர்களுக்கு,

2021 செப்டம்பர் 8] [திரு. நயினார் நாகேந்திரன்]

சமணர்களுக்கு, ஜெயினர்களுக்கு, இந்துக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. அவர்கள் இங்கு வரும்போது 2014, டிசம்பர் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முடிவிற்கு வாருங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: அவர்களுக்குக் குடியுரிமை கொடுக்க வேண்டுமே தவிர, இதில் இஸ்லாமியர்களுக்கு எந்தவிதமான * பாதிப்பும் மத்திய அரசு கொண்டு வந்த சட்டத்தில் எந்த இடத்திலும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் சொல்கிறேன். (சிரிப்பு) நன்றி.

திரு. நயினார் நாகேந்திரன்: இல்லை, தவறுதலாகச் சொல்லிவிட்டேன். திருத்திக்கொள்ள வேண்டும், இஸ்லாமியர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. (சிரிப்பு) எந்தப் பாதிப்பும் இல்லையென்பதை, நீங்கள் தயவுசெய்து புரிந்துகொள்ள வேண்டும். யாரேனும், எங்கேயாவது ஓர் இடத்தில் மத்திய அரசு கொண்டு வந்த சட்டத்தில், இஸ்லாமியர்களுக்கு எதிராக இருக்கிறது என்று சொன்னால், தமிழக பாரதிய ஜனதா கட்சி சார்பாக குரல் கொடுக்க நாங்கள் நிச்சயமாக தயாராக இருப்போம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை எதிர்த்து, பாரதிய ஜனதா கட்சி வெளிநடப்புச் செய்கின்றது.

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைத் தனியாக விட்டுவிட்டுப் போய் விட்டார்கள் பார்த்தீர்களா! (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசின் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தில் சுட்டிக்காட்டியிருப்பது, உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்கள் ஒரு தனி மனிதருக்கு அல்லது தமிழ் இனத்திற்கு ஆபத்து என்று சொன்னால், ஓங்கி குரல் கொடுப்பது, எதிர்பார்ப்பது தாய் தமிழ்நாட்டைத்தான். இலங்கையில் மிகப் பெரிய கொடுமையும்,

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

கொடூரமும் நடந்த காலத்தில், தாய் தமிழ்நாட்டை எதிர்பார்த்துக் கொண்டு அங்கே இலங்கைத் தமிழர்கள் தாய் தமிழ்நாட்டிற்குச் செல்ல வேண்டுமென்று ஓடி வந்திருக்கிறார்கள். தமிழக அரசு எல்லா வகைகளிலும் பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. கடந்த வாரம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுவரை இல்லாத அளவிற்கு 317 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்திருக்கின்றார்கள். அப்படி இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ்நாட்டில் வாழ்வதற்கான, இந்திய திருநாட்டில் வாழ்வதற்கான உரிமையில்லை என்று மறுக்கப்படுவது நமக்கு பேரதிர்ச்சியாக இருக்கிற காரணத்தினால், நடுவண் அரசு கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தின்மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவில் பாதுகாப்பு இல்லையென்பதைக் கருதி, இலங்கைத் தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Rowlatt சட்டத்தைவிட மோசமான ஒரு சட்டத்தை எதிர்த்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மனமார வரவேற்கிறோம். நாங்கள் ஆதரிக்கிறோம். இப்போதுதான் தெரிகிறது, சூரியன் எப்போதெல்லாம் உச்சத்திற்கு வருகிறதோ, அப்போதெல்லாம் ஒரு சிலர் அச்சத்தில் இருக்கிறார்கள், அது ஏன் என்று தெரியவில்லை? சூரியன் மறைந்தாலும், அதை மறைக்க முடியாது; அடுத்த கண்டத்தில் வெளிச்சம் கொடுத்துக்கொண்டிருக்கும். இப்போது புரிகிறது, சிறுபான்மையின மக்களுக்காக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, விளிம்புநிலை மக்களுக்காக எப்போதெல்லாம் ஒரு தீர்மானம் வருகிறதோ, அப்போதெல்லாம் நாங்கள் எதிர்க்கவும் மாட்டோம், ஆதரிக்கவும் மாட்டோம், நடுநிலையில் இருப்போம் என்று கூறாமல், புறமுதுகிட்டுப் போகிறவர்களை இந்த அவை இன்று கண்டு கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானத்தை ஏன் நாங்கள் முழு மனதுடன் ஆதரிக்கிறோம் என்றால், இந்தச் சட்டத்தில் மிகப் பெரிய சூழ்ச்சி இருக்கிறது, வஞ்சகம் இருக்கிறது.

2021 செப்டம்பர் 8] [திரு. கு. செல்வபெருந்தகை]

முற்பகல் 11–30

இஸ்ரேலில் ஒரு சட்டம் கொண்டுவந்தார்கள். அந்த இஸ்ரேலின் சட்டம் என்னவென்றால், யூதர்கள் எல்லாம் அந்த நாட்டிற்கு வரும்போது அவர்களை அரவணைப்பதற்காக முதல் குடியுரிமை பதிவேடு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தின் பெயர் Halakhah என்பது. அதேபோன்று கடந்த 2019 பாராளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி வாக்குறுதி ஒன்றைக் கொடுத்தது. அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், உலகத்தில் உள்ள இந்துக்களுக்கெல்லாம் இதுதான் மையமான இடம், உங்களை வரவேற்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், தேர்தலில் வெற்றிபெற்ற பிறகு, இந்தக் குடியுரிமை திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். நாங்கள் அடிக்கடி சொல்கிறோம், தமிழகத்திற்கு எதிரான கட்சி பாஜக கட்சி; எப்பொழுதும் தமிழர்களுக்கு எதிரானவர்கள்; தமிழினத்திற்கு எதிராக இந்த ஒன்றிய அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என்று சொல்கிறோம். ஏனென்றால், இலங்கையில் போரினால் அடிபட்டு, உதைபட்டு, வஞ்சிக்கப்பட்டு வந்திருக்கின்ற தமிழர்களுக்கு அதில் ஒன்றும் கூறவில்லை. குறிப்பாக, மலையக தமிழர்கள். அவர்களைப் பற்றியும் ஒன்றும் சொல்லவில்லை. எதற்காக பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தோனேஷியாவை இவர்கள் சேர்க்கிறார்கள்? என்ன காரணம் என்றால், (மணியடிக்கப்பெற்றது) பாகிஸ்தானில் இருக்கின்ற Ahmadiyya என்ற இஸ்லாமியர்கள் இன்றும் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்தான் முதன்முதலில் நபிகள் நாயகத்தை இறைதூதராக ஏற்றுக்கொண்டவர்கள். அவர்கள் அங்கு நசுக்கப்படுகிறார்கள். இந்தச் சட்டத்திலே, அவர்களுக்கு என்ன தீர்ப்பு இருக்கின்றது? முதன்முதலில் Jamia Millia Islamia University, Shaheen University ஆகியவைகளின் 110 நாட்கள் போராட்டத்தில் தொடர்ந்து எங்களது தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்கள் பங்கேற்றபோது, அங்கே ஒன்றிய அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் என்பவர் எப்படியெல்லாம் அந்த மக்களுக்கு எதிராக அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டார் என்பதை இந்த நாடு புரிந்துகொண்டிருக்கிறது. உச்ச நீதிமன்றம் தலையிட்ட பிறகும் ஒன்றிய அரசு இதை நிறைவேற்றாமல் விடமாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கின்றது என்றால், நீங்கள் நிறைவேற்றுகின்றீர்களோ இல்லையோ, நாங்கள் அதைத் தடுத்து நிறுத்துவோம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே குரல் கொடுத்திருக்கிறார். இந்தத் தீர்மானத்தை நாங்கள் மனமார வரவேற்கிறோம். ஒருவேளை இந்தக் கொரோனா

[திரு. கு. செல்வபெருந்தகை] [2021 செப்டம்பர் 8

தொற்று வரவில்லை என்றால் Shaheen Bagh–ல் என்ன நடந்திருக்கும்? அது பெண்களால் உருவாக்கப்பட்ட போராட்டம். உலகமே திரும்பிப் பார்த்தது. உலக நாட்டு அதிபர்கள் எல்லாம் குரல் கொடுத்தார்கள். இந்தப் போராட்டம் என்பது நியாயமான போராட்டம், ஒருசாராரை நீங்கள் ஒதுக்குகிறீர்கள். புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் எழுதிய இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தெளிவாகச் சொல்கிறார். இந்த நாடு யாருக்கான நாடு? எல்லா மதமும் வாழ்கின்ற நாடு. எல்லா சாரார்களும் ஒற்றுமையாக வாழ்கின்ற நாடு. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, இதை நீங்கள் சிதைக்கக் கூடாது என்று எங்கள் தலைவர் ராகுல் காந்தியும் விரும்புகிறார். முதலமைச்சரும் விரும்புகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: இன்று மாண்புமிகு முதல்வராகப் போராடி சட்டத் திருத்தத்தை எதிர்க்கிறார். அன்று மாண்புமிகு முதல்வராக இல்லாதபோதும் இதற்காகப் போராடினார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்களிப்பு என்பது தமிழகத்தில் மிகப் பெரிய பங்களிப்பு என்பதை நான் பதிவு செய்கிறேன். அதுபோல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் கூறிக்கொள்வதெல்லாம், எங்கள்மீது பல வழக்குகள் உள்ளன, NRC, CAA, இந்த வழக்குகளையெல்லாம் திரும்பப்பெற வேண்டும். குறிப்பாக, சுதந்திரப் போராட்ட வீரரும், பொதுவுடைமைக் கட்சியின் தலைவருமான ஐயா நல்லக்கண்ணு அவர்கள்மீதும், என்மீதும் போராடியதற்காக வழக்குப் போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த வழக்குகளைத் திரும்பப்பெற வேண்டும் என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை முற்போக்குச் சிந்தனை உள்ள இயக்கங்கள் எல்லாம் ஆதரித்திருக்கிறார்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் எதிலும் அவசரப்பட்டு ஒரு முடிவு எடுக்காது. எடுத்துவிட்டால் அதில் உறுதியாக நிற்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தீர்மானத்தின் மையக் கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வந்திருக்கின்றது. எங்கள்

2021 செப்டம்பர் 8] [திரு. துரைமுருகன்]

பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இந்தக் குரலை எதிரொலித்தார்கள். அதுமட்டுமல்ல சட்டமன்றத்தில் இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் 2020 ஜனவரி மாதத்தில் ஒரு தீர்மானத்தினைக் கொடுத்தார்கள். அந்தத் தீர்மானத்தை எடுக்கவில்லை. உடனே நமது தலைவர் அவர்கள், "பிப்ரவரி 7 ஆம் தேதியில் நான் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன், அது என்னவாயிற்று?" என்று கேட்டார். உடனே அன்றைக்கு இருந்த சபாநாயகர் அவர்கள் 'எனது ஆய்வில் இருக்கின்றது' என்று சொன்னார்கள். இரண்டு, மூன்று தினங்களுக்குப் பிறகு நான் எழுந்து 'என்னவாயிற்று?' என்று கேட்டேன். 'ஆய்வில் இருக்கின்றது' என்று சொன்னார். ஆய்வில் இருக்கின்றதா? ஆராய்ச்சியே கிடையாதா என்று கேலி பேசிவிட்டு விட்டுவிட்டோம். ஆனால் நெடுநேரம் வாதாடி எடுக்கவில்லை. பிறகு பிப்ரவரி மாதம் 17 ஆம் தேதி ஒரு முடிவோடு எழுந்து எடுத்துக்கொள்கிறீர்களா. இல்லையா என்று மிகப் பெரிய அளவில் வாதத்தைச் செய்து பார்த்தோம். அன்றைக்கும் அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. இதனால், ஆளுகின்ற கட்சி, மத்திய சர்க்காருக்கு அனுசரணையான கட்சி என்றும் நாங்கள் நினைக்கவில்லை. இதன்மூலம் மத்தியில் இருக்கின்ற அரசாங்கத்தை எதிர்க்கிறோம் என்றும் இல்லை. மத்திய அரசை எதிர்ப்பதென்பது வேறு; நம்முடைய கொள்கையை வற்புறுத்துவது என்பது வேறு. அதைத்தான் கலைஞர் அவர்கள், "உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கை கொடுப்போம்" என்று அழகாகச் சொன்னார். நாங்கள் என்ன மத்திய சர்க்காரை எதிர்த்து தடி தூக்கிக்கொண்டா நிற்கின்றோம்? இல்லை, ஆனால், எதை ஆதரிக்க வேண்டுமோ அதை ஆதரிக்கிறோம். எதை எதிர்க்க வேண்டுமோ அதை எதிர்க்கிறோம். இது எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய பாணி.

முற்பகல் 11–35

இது ஒரு Communist, Secular State என்று சொல்கிறீர்கள், Communal harmony என்று சொல்கிறீர்கள். ஆனால், Citizenship Act–ல் ஒரு amendment–ஐக் கொண்டுவந்தது, அரசமைப்புச் சட்டத்துக்கும், Citizenship Act–க்கும் அதாவது, குடியுரிமைச் சட்டத்துக்கும் நேர்மாறாக–contradict ஆக இருக்கிறது, அதைத்தான் நாங்கள் தீர்மானத்தில் சொல்கின்றோம். இப்படி ஓர் அரசமைப்புச் சட்டத்தினுடைய கருத்தை மீறி எந்தச் சட்டமும் இருக்கக் கூடாது. அதுதான் இந்தியாவின் சட்டமே. ஆனால், அரசமைப்புச் சட்டத்திற்கு எதிர்ப்பாகவே, அந்த

[திரு. துரைமுருகன்] [2021 செப்டம்பர் 8

secularism–ஐ உடைக்கின்ற அளவிற்கு, Communal harmony–யைக் கெடுக்கின்ற அளவிற்கு இப்படியொரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களே, இது மிகப் பெரிய அளவில் சிறுபான்மையின சமுதாயத்தைப் பாதிக்கின்றது. ஒரு கண்ணில் வெண்ணெய், ஒரு கண்ணில் சுண்ணாம்பு வைப்பதுபோல், 'நீ மட்டும் உள்ளே வா, நீ வராதே' என்று சொல்வது கடைந்தெடுத்த மத வெறிக்குச் சமம். ஆகையினால்தான் இச்சட்டத்தினை நாங்கள் எதிர்க்கிறோம். ஒன்றை நினைத்துக்கொள்ளுங்கள். அன்று எதிர்க்கட்சியாக இருக்கின்றபோதும் இந்தக் கொள்கையில் தலைவர் அவர்கள் உறுதியாக இருந்தார். பிறகு தேர்தல் அறிக்கையிலும் இந்தக் கொள்கையை விடாமல் வற்புறுத்தினார். ஆளுங்கட்சியாக இருக்கின்றபோதும் நிமிர்ந்து, கம்பீரத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கின்றார். அதற்குப் பெயர்தான் கலைஞர் அவர்களுடைய மகன், மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் என்பது. இது எங்கள் திராவிட பாரம்பரிய இரத்தத்தில் ஊறிய கொள்கையின் மேம்பாடு. நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டுமென்கின்ற தீர்மானத்தை நான் முன்மொழிய, இங்கே பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்கள் அதை வழிமொழிந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றி. எனவே, இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக உங்கள் அனைவரையும் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

7. விதி 110—ன்கீழ் அறிக்கை

தமிழ்நாடு ஆதி திராவிடர்-பழங்குடியினர் நல ஆணையம் உருவாக்குதல், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள வழக்குகளை விரைவாக இறுதி செய்ய புதிதாக நான்கு நீதிமன்றங்கள் அமைத்தல் உள்ளிட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எப்போது அமைகின்றதோ, அப்பொழுதெல்லாம் அது ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும், ஒதுக்கப்பட்டவர்களுக்காகவும் பாடுபடுகிற அரசாக விளங்கியிருக்கிறது. சமூகத்தில் சதிகளாலும், சாதிகளாலும் புறக்கணிக்கப்பட்டவர்களை அன்புக்கரம் கொண்டு அரவணைத்து, அவர்கள் தங்களிடம் தேங்கிக் கிடக்கும் திறமைகளையும், அவர்களால் சமூகம் பெறத்தக்க பங்களிப்புகளையும் வெளிக்கொண்டு வருவதில் அதிக அக்கறையை எப்போதும் காட்டி வரும் கொள்கைப் பிடிப்பைக் கொண்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.*

இந்தியாவிலேயே முதன்முறையாக ஆதி திராவிடர்களுக்கு கான்கிரீட் கூரையிலான தொகுப்பு வீடுகள், இரட்டைக் குவளை முறை ஒழிப்பு, சமத்துவபுரங்கள், சமத்துவ மயானத்திற்கு ஊக்கத் தொகை, உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தவே முடியாமலிருந்த பாப்பாரப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய இடங்களுக்கு உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, சமத்துவப் பெருவிழா கொண்டாடியது போன்ற எண்ணற்ற செயல்பாடுகளை இதற்கு எடுத்துக்காட்டாக இயம்ப இயலும்.

முற்பகல் 11—40

முதலமைச்சர் தலைமையில் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் ஆறு

மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டுமென்பது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் இடம்பெற்றிருக்கும் முக்கிய விதி. இதில் முன்பெல்லாம் ஆளுங்கட்சி மக்கள் பிரதிநிதிகளையும், ஆதரவுக் கட்சி மக்கள் பிரதிநிதிகளையும் மட்டுமே அழைத்து நடத்தப்பட்ட கூட்டம்போல் இல்லாமல், அனைத்து இயக்கங்களையும் சார்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட குழு உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவினை அமைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அரசாணையை நாங்கள் வெளியிட்டோம். அவர்களையெல்லாம் அழைத்து ஆகஸ்டு மாதம் 19 ஆம் நாள் கூட்டம் நடத்தப்பட்டது. அனைத்துத் தரப்பு கருத்துகளையும் உள்ளடக்கி, ஒருங்கிணைந்த பார்வையை மக்கள் பிரச்சினைகளில் செலுத்தி, தீர்வுகாண வேண்டும் என்பதே நம்முடைய நோக்கம். பேரறிஞர் அண்ணா 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று சொல்லியதை இதயத்தில் ஏற்றி, ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்து எங்கிருந்து வந்தாலும் அதை வரவேற்று செயல்படுத்தி, எளிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதுதான் நம்முடைய நோக்கம். அந்த அடிப்படையில், அந்தக் கூட்டத்திலே பல நல்ல கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. முதல் கட்டமாக, அவற்றில் சிலவற்றைச் செயல்படுத்த வேண்டும் என்று எண்ணி இம்மாமன்றத்தில் அறிவிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, மாநில அளவில் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருடைய சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், 'தமிழ்நாடு ஆதி திராவிடர்–பழங்குடியினர் நல ஆணையம்' என்கிற புதிய அமைப்பு ஒன்றை தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் உருவாக்க இந்த அரசு சட்டம் இயற்றும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான வரைவு சட்டமுன்வடிவு இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே தாக்கல் செய்யப்படும்.

இரண்டாவதாக, அக்கூட்டத்தில் ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளை பொது நீரோட்டத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்கிற ஒரு கருத்தும் முன்வைக்கப்பட்டது. முதற்கட்டமாக, அப்பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள், அறிவுத்திறன் வகுப்பு, கணினிப் பயிற்சி போன்றவை பள்ளிக் கல்வித் துறையின்

வழிகாட்டுதலின்படி செயல்படுத்தப்படும். ஆனால், பள்ளிகளை நிருவகிப்பது தொடர்ந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கைவசமே இருக்கும். பள்ளிகளில் காலிப் பணியிடங்களை நிரப்புதல், பணி அமைப்பை நிர்வகித்தல், நிருவாகப் பணிகளைக் கையாளுதல் போன்றவற்றை அத்துறையே செயல்படுத்தும். பள்ளிக் கல்வித் துறை அவற்றில் தலையிடாது.

மூன்றாவதாக, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள வழக்குகளை விரைவாக இறுதி செய்வதற்கு தற்சமயம் தமிழ்நாட்டில் 18 சிறப்பு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மேலும், நான்கு புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகஸ்டு திங்கள் நடைபெற்ற மாநில அளவிலான விழிப்புணர்வுக் கூட்டத்தைத் தொடர்ந்து, இன்னும் நான்கு புதிய நீதிமன்றங்களை சேலம், கிருஷ்ணகிரி, மதுரை, திருநெல்வேலி என வழக்குகள் அதிகம் நிலுவையில் உள்ள மாவட்டங்களில் நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மதுரையிலும், திருநெல்வேலியிலும் ஏற்கெனவே சிறப்பு நீதிமன்றங்கள் இருந்தாலும், இந்த நான்கு மாவட்டங்களில் அதிக அளவில் வழக்குகள் நிலுவையில் இருப்பதால் கூடுதல் நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

நான்காவதாக, வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரை சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகி, முறையான நிவாரணம், வளமான எதிர்காலத்திற்கான உத்தரவாதம் ஆகியவற்றை வழங்குவதற்குத் தேவையான விழிப்புணர்வுப் பயிற்சிகள் 'சமத்துவம் காண்போம்' என்கிற தலைப்பில் காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்களுக்கு நடத்தப்படும்.

ஐந்தாவதாக, தமிழ்நாட்டில் பல கிராமங்களில் சாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் பயன்பாட்டில் உள்ளன. இறுதிப் பயணத்திலும் பிரிவினைகள் இருக்கக் கூடாது என்பதில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் இத்தகைய சிற்றூர்களுக்கு ஊக்கத் தொகையாக வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த அரசு சார்பில் 10 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆறாவதாக, வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கேற்றவாறு, 85,000 ரூபாயிலிருந்து 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வரை தற்சமயம் நிவாரணமாக வழங்கப்பட்டு

வருகிறது. இனி இத்தொகை பாதிக்கப்பட்டவர்களுக்குக் குறைந்தபட்சமாக ஒரு இலட்சம் ரூபாயும், அதிகபட்சமாக 12 இலட்சம் ரூபாயும் மாநில அரசு நிதிமூலம் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

விழிப்புணர்வுக் கூட்டமே தேவையில்லை என்கிற நிலையை அடைவதே நம் இலக்கு. தமிழ்நாட்டு மக்களின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தி, நாம் அனைவரும் அய்யன் திருவள்ளுவர் கூறியதற்கேற்ப 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற ஒப்பற்ற தத்துவத்தின்படி இணைந்து வாழ அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்று உங்கள் அனைவரையும் கேட்டு அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

8. மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 4—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

(அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1043, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2616, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2963, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4039, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1160, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1810, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2862, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2904, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3846, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4312, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4486, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2149, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2180, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2920, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3725, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2236, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2282, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. *ஜெயராமன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2658, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. *இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2710, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3002, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. *கந்தசாமி, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 3195, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3238, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3312, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்டோருக்கான (BC) தமிழக அரசின் இட ஒதுக்கீட்டை அதிகரிக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4670, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்தில் படிக்கும் மாணவர்கள் நலன் கருதி ஏலகிரி, இண்டூர் ஆகிய இரண்டு பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்குப் புதிய மாணவர் விடுதிக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1048, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2600, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2964, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4009, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2150, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2181, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2938, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2261, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2852, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2905. மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3847, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

2021 செப்டம்பர் 8]

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4271, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4468, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3724, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 738, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1770, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில் பழங்குடியின மக்கள் விளைவிக்கும் பொருட்களுக்கு தகுந்த சான்றிதழ் அளித்து சந்தைப்படுத்துதலுக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் தகுந்த அங்காடிகள் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2237, மாண்புமிகு திரு. ஆ. அருண்மொழிதேவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2281, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2304, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2380, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2659, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2782, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3003, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3193, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3239, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3270, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

2021 செப்டம்பர் 8]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர்களை பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் சேர்க்காமல் ஆதி திராவிடர் பிரிவில் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3800, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கந்தர்வகோட்டை தொகுதியில், ஆதி திராவிடர் குடியிருப்புகளை மறு சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4573, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4606, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@@நான் இந்த மாமன்றத்திலே

@ 429 முதல் 467 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 468 முதல் 503 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசையிலுள்ள கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதில் தமிழிலே கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @ இந்த மன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் பொன்னாடை போர்த்தினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது நன்றாக இருக்கின்றது.

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 504 முதல் 573 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று முற்பகல் இரண்டு மானிய கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். இப்போதே 11 மணி 50 நிமிடங்கள் ஆகிவிட்டன. மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டி இருக்கின்றது. 8 உறுப்பினர்கள் பேச வேண்டும். முதல் மூன்று உறுப்பினர்கள் 15 நிமிடங்கள் வீதமும், மீதியிருக்கின்ற 5 உறுப்பினர்கள் தலா 10 நிமிடங்கள் வீதமும் பேச வேண்டும். கண்டிப்பாக 2 மணிக்குள் இன்று காலை நடைபெறுகின்ற சட்டமன்றக் கூட்டத் தொடர் நிறைவுபெற்று மாலையில் 5 மணிக்கு மீண்டும் கூட இருக்கிறது. ஆகவே, அதை மனதில் வைத்து குறித்த நேரத்தில் பேசி முடிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.

***திரு. மு. ஜெகன் மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் இரண்டாவது முறையாக உறுப்பினராகி பேசுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 16–வது சட்டப் பேரவையில் நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் E.P.S. அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முன்னாள் துணை முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் O.P.S. அவர்களுக்கும், கட்சியின் கொறடா முன்னாள் அமைச்சர் மாண்புமிகு அண்ணன் எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கே.வி. குப்பம் தொகுதியில் என் வெற்றிக்காகப் பரப்புரை செய்த, கூட்டணியில் அங்கம் வகிக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் இளைஞரணித் தலைவர் அண்ணன் டாக்டர் அன்புமணி அவர்களுக்கும், புதிய நீதிக் கட்சியின் நிறுவனத் தலைவர் அண்ணன் டாக்டர் ஏ.சி. சண்முகம் அவர்களுக்கும், பரப்புரை செய்த என் மகள் செல்வி சாருலதா அவர்களுக்கும், மனைவி மற்றும் உறவினர்கள், புரட்சி பாரதம் கட்சியின் மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக தொண்டர்கள் மற்றும் கூட்டணிக் கட்சியினுடைய பொறுப்பாளர்கள், தொண்டர்கள் மற்றும்

2021 செப்டம்பர் 8] [திரு. மு. ஜெகன் மூர்த்தி]

கே.வி. குப்பம் தொகுதியில் வெற்றி பெறச் செய்த அனைவருக்கும் என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வடநாட்டுப் பெரியார், பேரறிவாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களையும், தென்னாட்டு அம்பேத்கர், பகுத்தறிவு பகலவன், தந்தை பெரியார் அவர்களையும் வணங்குகிறேன். தலித் மக்களின் கல்வி, பொருளாதாரம் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்திற்குப் போராடியவரும், ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவனாகவும், தாயாகவும், தந்தையாகவும், தலைவனாகவும், வழிகாட்டியாகவும், புரட்சி பாரதம் இயக்கத்தின் நிறுவனருமான என் சகோதரர் டாக்டர் பூவை மூர்த்தி அவர்களை வணங்கி, என் உரையைத் துவங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையில் பேச அனுமதி தந்த தங்களையும் வணங்குகின்றேன். தமிழக அரசு கடந்த 1980–1981 ஆம் ஆண்டு முதல் சிறப்பு உட்கூறு திட்டத்தின் மூலமாக ஒவ்வோர் ஆண்டும் நிதியொதுக்கீடு செய்து இப்பொழுதுவரை கடைப்பிடித்து வருகிறது. 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிட மக்கள்தொகை 1.19 கோடி. இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 20 சதவிகிதமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர்கள் அவரவர் இருக்கையில் உட்காருங்கள்.*

முற்பகல் 11–55

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *எனவே ஒவ்வோர் ஆண்டுக்குமான திட்ட நிதி ஒதுக்கீட்டில், சிறப்பு உட்கூறு திட்டத்தின் பங்கு 20 சதவிகிதத்திற்கும் குறையாமல் இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும். சமீபத்தில் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு 2021–2022 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் ஆதி திராவிடர் நலத் துறைக்கு 3,588.87 கோடி ரூபாயும், பழங்குடியினர் நலத் திட்டங்களுக்காக 543.42 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறப்பு உட்கூறு திட்டம் என அழைக்கப்பட்டுவந்த ஆதி திராவிட துணைத் திட்டத்தின்கீழ் 14,696.60 கோடி ரூபாயும், பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் 1,306.02 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியை முழுவதுமாக பட்டியல் சமூக மக்களின் முன்னேற்றத்திற்காக*

செலவிட வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும். ஏனென்றால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே இந்த நிதி ஒதுக்கீட்டின் திட்டமாகும். மக்களுக்கு 100 சதவிகித கல்வியறிவு, ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளில் தூய்மையான குடிநீர், மின்சாரம், பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள், மாணவர்களின் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவது ஆகியவை இதன் நோக்கமாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் கல்வித் தரம் மிகவும் பின்தங்கியுள்ளது. இதனைப் போதுமான அளவிற்கு மேம்படுத்தவும், ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்புகளைப் பூர்த்தி செய்வதற்கும், ஆதி திராவிடர் பெண்களின் கல்வியில், பள்ளிகளில் அவர்களின் சேர்க்கையை அதிகப்படுத்தவும், மாணவர்களின் இடைநிற்றலைக் குறைப்பதற்கும், ஏற்கெனவே பல சமூக சிக்கல்களைக் கடந்து, பட்டியல் வகுப்பைச் சேர்ந்த இலட்சக்கணக்கான பட்டதாரிகள் படித்து முடித்து தகுந்த வேலையின்றி தவிப்பதைத் தடுப்பதற்கும், பட்டியல் வகுப்பைச் சார்ந்தவர்கள் தொழில் துவங்கவும், வீடின்றி தவிக்கும் பட்டியலின சமூகத்திற்கு வீட்டுமனைப் பட்டா மற்றும் வீடு கட்டிக்கொள்ள உதவுவதற்கும், நம்முடைய தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மொத்த மக்களில் 50 சதவிகிதத்தினருக்கும் அதிகமான பட்டியல் சமூக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடுவதற்கும் இந்த நிதியை முழுவதுமாகச் செலவிட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களில் செயல்படுவதுபோல், நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தவுடன், அதாவது ஜூன், ஜூலை மாதங்களில் அந்தந்த துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை அனுப்பி, பிறகு, ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் அதற்கான அறிக்கையை மற்றும் அடுத்த நிதியாண்டிற்குத் தேவையான நிதியைக் கேட்டறிந்து செயல்படுத்தினால், இத்திட்டம் சிறப்பாக நடைபெறும் எனவும் கருதுகிறேன்.

ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கப்படும் சிறப்பு உட்கூறு திட்டத்தின் முழு நிதியையும் ஆதி திராவிட நலத் துறையின் செயலாளர் அவர்களிடம் வழங்கி, அவர் மூலமாக மற்ற

நலத் துறைகளுக்கு நிதியைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது பொறுப்பேற்றிருக்கும் சமூக நீதியின் பெயரால் இயங்கும் இந்த ஆட்சியில் ஆதி திராவிட மக்கள் வாழ்வில் முன்னேற்றம் காண்பதற்காக இந்தச் சிறப்பு உட்கூறு திட்டத்தைப் புனரமைப்பு செய்து, அண்டை மாநிலங்களில் வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற சில திட்டங்களை நாமும் செயல்படுத்தினால், ஆதி திராவிடர் மக்கள் முழுவதுமாகப் பயன் பெற்று, இந்தச் சிறப்பு உட்கூறு திட்டம் என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை முற்றிலுமாக நிறைவேற்ற முடியும் என்று நான் நம்புகிறேன். அதன்படி, பட்டியலின விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் நலனை மேம்படுத்தும் வகையில், நிலமற்ற ஏழை பட்டியலின விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்தில் 2 ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 3 ஏக்கர் புஞ்சை நிலம் வழங்குவதற்கு திட்டம் வகுக்க வேண்டும். ஆண்டிற்கு 3,000 பேருக்கு தலா ரூ.15 இலட்சம் வழங்க வேண்டும்.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் டிராக்டர் மற்றும் பவர் டில்லர் போன்ற விவசாய உபகரணங்கள் 90 சதவிகித மானியத்தில் வழங்கப்பட வேண்டும் மற்றும் பட்டியலின பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு 100 சதவிகித மானியத்துடனும், பெண்களுக்கு விவசாய உபகரணங்கள் சுமார் 10 இலட்சம் ரூபாய் வரை 90 சதவிகித மானியத்துடனும் வழங்கப்பட வேண்டும். காய்கறிகள் மற்றும் பழங்களை விளைவிப்பதற்கு பசுமை வீடுகள், அதாவது polyhouses தற்போது 50 சதவிகித மானியத்துடன்கூடிய திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இது பட்டியலினத்தவருக்கு 90 சதவிகித மானியத்துடன் உயர்த்தி வழங்கப்பட வேண்டும். ஆண்டிற்கு ஏக்கருக்கு ரூ.10 இலட்சம் வீதம் 1,000 ஏக்கருக்கு வழங்க வேண்டும். கிராமங்கள்தோறும் நிலமற்ற பட்டியலின கூலி விவசாயிகளை ஒருங்கிணைத்து, குழுக்களை உருவாக்கி, அரசு நிலத்தை ஒப்படைத்து, விவசாயக் கூட்டுப் பண்ணைகளை உருவாக்க வேண்டும். ஆண்டிற்கு 100 பண்ணைகளை உருவாக்க வேண்டும். பட்டியலின குறு, சிறு விவசாயிகளின் நிதிச் சுமையை தணிக்கும் வகையில் வட்டியில்லா பயிர்க் கடன் 1 இலட்சம் ரூபாய் முதல் 3 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்பட வேண்டும் என்றும், தொழில் தொடங்குவதற்கு 1 கோடி ரூபாய் வரை 30 சதவிகித மானியத்துடன்கூடிய தடையில்லா வங்கிக் கடன் வழங்கப்பட வேண்டும். தாட்கோமூலம் பட்டியலின விவசாயிகளுக்கு

ஆண்டிற்கு 1,500 பேருக்கு இலவச விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. அதை ஆண்டிற்கு 3,000 ஆக உயர்த்த வேண்டும் எனக் கோருகிறேன்.

தாட்கோ மூலமாக மக்கள் அதிகளவு பயன்பெறும் வகையில், வழிமுறைகளை எளிதான முறையில் மாற்றிட வேண்டும் என்றும், தாட்கோவிற்கு என புதிய வங்கி, அதாவது தாட்கோ வங்கி என்ற வங்கியை வட்டந்தோறும் துவங்கி, பட்டியலின மக்கள் பொருளாதாரத்தில் எளிதில் முன்னேற வழிவகை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன். பட்டியலினத்தவர் 40 சதவிகிதத்தினருக்குமேல் வசிக்கும் கிராமங்கள் சுமார் 4,000 உள்ளன. ஆண்டிற்கு 1,000 என 4 ஆண்டுகளுக்கு திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு சமூக நலக் கூடங்கள் அமைத்துத் தர வேண்டும். தமிழ்நாட்டில் மாநகரத்தில் வசிக்கும் பட்டியலின குடிசைவாசிகளுக்கு மாநகராட்சி எல்லைக்குள் 500 சதுர அடி கொண்ட இரண்டு படுக்கை அறைகள் வசதி கொண்ட வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பட்டியலின, பழங்குடியினர் நிருவாக ஒதுக்கீட்டில் சேருவதைத் தடுக்கும்விதமாக, இரத்து செய்யப்பட்ட அரசாணைகள் 51 மற்றும் 52 ஆகியவற்றை திரும்பப் பெற வேண்டும். தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில், பட்டியலின, பழங்குடியினருக்கான பின்னடைவு காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று அறிவித்ததை உடனே செயல்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12–00

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் நலன் மேம்படும்வகையில் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து அனைத்து பட்டியலின மாணவர்களின் விடுதிகளிலும் கணினிப் பயிற்சி மற்றும் ஆங்கிலம் பேசும் பயிற்சி அதாவது Computer course and English Speaking course பட்டியலின பட்டதாரி மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் மாவட்டந்தோறும் போட்டித் தேர்வுகளான TNPSC–Group–I, Group–II, Group–IV மற்றும் Banking தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் அமைக்கவும் மற்றும் தகுதித் தேர்வுகளான TOEFL, IELTS, GRE, GMAT தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறும் வகையில் புகழ்பெற்ற பயிற்சி நிறுவனங்களின்மூலம் பயிற்சி அளிக்கவும் வழிவகை செய்ய வேண்டும்.

பட்டியலின சமூக மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.2½ இலட்சம் என்று நிர்ணயிக்கப்பட்டதை ரூ.8 இலட்சமாக உயர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசின் தற்போதைய திட்டத்தின்படி, பட்டியலின துணை திட்ட நிதியிலிருந்து ஒவ்வோராண்டும் 100 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அயல்நாட்டில் படிக்க வைக்க அனுப்பப்படுகிறார்கள். இதை 500 மாணவர்களாக உயர்த்திட வேண்டும்.

சட்டக் கல்லூரியில் பயின்று முடித்து Bar Council–ல் பதிவு செய்த பட்டியலின வழக்கறிஞர்களுக்கும், முனைவர் பட்டப் படிப்பை மேற்கொள்ளும், பட்டியலின மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கும், புதிதாகத் தொழில் துவங்கும் பட்டயக் கணக்கர்கள் (Chartered Accountants), செலவுக் கணக்கர்களுக்கும் (Cost and Works Accountants) பட்டதாரிகளுக்கும் தற்போது வருடத்திற்கு வழங்கப்படுகின்ற ரூ.50,000/–ஐ ரூ.3,00,000/– ஆக உயர்த்திட வேண்டும்.

மத்திய அரசின் UPSC முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் SC/ST மாணவ, மாணவியருக்கு சிறப்புப் பயிற்சிக்காக வழங்கப்படும் தொகை ரூ.50,000/– ஐ, ரூ.2,00,000/– ஆக உயர்த்தித்தர வேண்டும்.

பட்டியலினத்தைச் சார்ந்த பேராசிரியர்கள் பதவி உயர்வு பெறுவதற்கும், கல்லூரி முதல்வர் ஆவதற்கும், துணை வேந்தர்களாக ஆவதற்கும், சுழற்சி முறையிலோ அல்லது இட ஒதுக்கீட்டின் மூலமாகவோ பணியமர்த்தப்பட வேண்டும். பணியில் அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும்.

தொடர்ந்து பட்டியலினத்தைச் சார்ந்தகல்லூரிப் பேராசிரியர்கள் கல்லூரி முதல்வர்களால் அவமானப்படுத்தப்படுவதும், மரியாதையில்லாமல் நடத்தப்படுவதும், ஏதாவது காரணத்தைக் கூறி மிரட்டப்படுவதும், கல்லூரியை விட்டு இடமாற்றம் செய்வதும் தொடர்கதையாகி வருகின்றது. உதாரணத்திற்கு, சென்னையிலுள்ள காயிதே மில்லத் கலைக் கல்லூரியில் பட்டியலினப் பேராசிரியர்கள் கல்லூரி முதல்வரால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றேன். உடனே அந்தப் பேராசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கொரோனா ஊரடங்குக் காலத்தில் கல்வி கற்பிக்கும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் online வகுப்புமூலம் பாடம் நடத்துகின்றனர். அவர்கள் ஊதியம் பெற்று வருகிறார்கள். ஆனால், உடற்கல்வி பயிற்சி online வகுப்புமூலம் எடுக்க முடியாத நிலை உள்ளதால் பல தனியார் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். எனவே, தமிழ்வழிக் கல்வி பயின்ற உடற்கல்வி ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள், தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் தமிழக அரசு பணி நியமன ஆணை வழங்கி அவர்கள் வாழ்வாதாரத்தை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் முழு உருவச் சிலை தமிழகத்திலுள்ள 14 அரசு சட்டக் கல்லூரிகளிலும் மற்றும் அனைத்து நீதிமன்றங்களிலும் நிறுவப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பழங்குடியினர் நலம்பெறும் வகையில், பழங்குடியினத்தோர் அல்லாதோர், பழங்குடியினர் என்று போலிச் சான்றிதழ் வைத்துள்ளனர். அதை உடனே கண்டறிந்து அந்தச் சான்றிதழை இரத்து செய்ய வேண்டும். போலியானவர்களுக்கு பழங்குடியினர் சான்று வழங்கிய அதிகாரிகளைக் கண்டறிந்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கால்நடைகள் வழங்கும் திட்டத்தின்கீழ் பால் அதிகம் கொடுக்கும் நாட்டு மாடுகள் வாங்குவதற்கு 80 சதவிகிதம் மானியத்துடன்கூடிய பசு மாடுகள் வழங்க வேண்டும். பழங்குடியின, விவசாயப் பகுதிகளில் கால்நடை மருத்துவமனைகள் அமைக்கப்பட வேண்டும். பழங்குடியின பாரம்பரிய கலாச்சார பண்பாட்டு விழா நடத்துவதற்கு திட்ட நிதியிலிருந்து ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் வரை ஒதுக்கித்தர வேண்டும்.

பழங்குடியினர் அதிகம் வசிக்கும் மாவட்டமான நீலகிரி மாவட்டத்தில் கல்வியியல் கல்லூரி, துணைத் திட்ட நிதியிலிருந்து துவங்கப்பட வேண்டும். பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் 500 சதுர அடியில் இரண்டு படுக்கை அறைகள் வசதி கொண்ட வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும். துணைத் திட்ட நிதியிலிருந்து அரசின் மூலதனத்துடன் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் பழங்குடியின மக்களை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுறவு வங்கிக் கிளைகள் துவங்கி கடன் வழங்க வேண்டும். 4 மாவட்டங்களிலுள்ள 5 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 1.5 கோடி மதிப்பீட்டில் இருக்கை வசதிகளுடன்கூடிய

நூலகங்கள் அமைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நிதியிலிருந்து செலவழிக்கப்பட்ட விவரத்தையும், பயனாளிகளின் விவரத்தையும் வரும் ஆண்டுகளின் இறுதியில் வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டுமென்றும் கோரிக்கை வைக்கிறேன்.

பிற்பகல் 12–05

பட்டியலினத்தவர் மீதான சாதி வன்முறைகளை ஒழிக்கும்வகையில், பெரியாரின் கொள்கைகளைத் தூக்கிப் பிடிக்கும் இதே தமிழ் மண்ணில் சாமானிய மக்கள் மட்டுமின்றி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் சாதியக் கொடுமைகளுக்கு ஆளாவதையும், இழிவுப்படுத்தப்படுவதையும் இன்றும் கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: சரி. எனவே, இனிவரும் காலங்களில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் சாதியின் பெயரால் அவமதிக்கப்படாதவண்ணம் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் பட்டியலினச் சமூக மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். பட்டியலினத்தவர்மீது நடைபெறும் சாதி வன்கொடுமைகளைத் தடுக்கும்விதமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் தலைமையில் சிறப்பு cell அமைக்கப்பட வேண்டும் மற்றும் சாதிய வன்கொடுமைகளைத் தடுப்பதற்குத் தனியாக மாநிலம் முழுவதும் உள்ள காவலர்கள், ஆய்வாளர்கள், கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு சிறப்புப் பயிற்சி அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத்தானே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள், good.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: வறுமைக் கோட்டிற்குக்கீழ் மிகவும் பாதிக்கப்பட்டு வந்த பட்டியலினச் சமூக மக்களின் நிலையறிந்து, நில உரிமையே இவர்களின் நிலையை மாற்றும்

என்று ஒரு வெள்ளையர் யோசித்தார். அவர்தான் அன்றைய செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியராக இருந்த Thiru. James Henry Apperley Tremenheere. இவர் தமிழகத்தில் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு நிலம் வழங்கிடக் கோரி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார். அதனடிப்படையில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஆதி திராவிட மக்களுக்கு நிலம் வழங்குவதற்காக அரசாணை எண் 1010–ன்கீழ் 30–9–1892 ஆம் தேதியில் தமிழகத்தில் 12 இலட்சத்து 61 ஆயிரத்து 13 ஏக்கர் நிலங்களை வழங்கியது. இந்த நிலமே Depressed Class Land (DC land) பஞ்சமி நிலம் என அழைக்கப்பட்டது. சமீபத்தில் அவையில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினரின் கேள்விக்கு பதிலளிக்கையில், தமிழகத்தில் மொத்தம் 1 இலட்சத்து 47 ஆயிரத்து 296 ஏக்கர் பஞ்சமி நிலங்கள் உள்ளதாகவும், மீட்டுத் தருவதாகவும் உறுதியளித்தது எங்களுக்கு மகிழ்ச்சியே. ஆனால், மீதமுள்ள 11 இலட்சத்து 13 ஆயிரத்து 717 ஏக்கர் நிலத்தைக் கண்டறிந்து கையகப்படுத்தி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: பிரிட்டிஷ் அரசாங்கம், ஆதி திராவிட மக்களின் வாழ்வை மேம்படுத்த வழங்கிய மொத்தம் 12 இலட்சத்து 61 ஆயிரத்து 13 ஏக்கர் நிலங்களை பஞ்சமர்களுக்கே அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: ஒரே ஒரு நிமிடம். புரட்சி பாரதம் கட்சியின் வெகு நாள் கோரிக்கையான கூட்டுறவுச் சங்கத் தேர்தல் மற்றும் தனியார் துறைகளில் இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்து தமிழக அரசு சமூக நீதியை நிலைநாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள். ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசிப் பக்கத்தை எடுங்கள். தொகுதிக் கோரிக்கைகளைப் பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: கே.வி. குப்பம் தொகுதியில் பல ஆண்டுகளாக குடிநீருக்காகப் போராடும் மக்களுக்காக காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்றும்,

பல ஆண்டுகளாக தொகுதி மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான இடமும் இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தொகுதி சார்ந்த கோரிக்கைகளைக் கொடுங்கள். அதை நான் அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்கிறேன். நன்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: ஒரே ஒரு நிமிடம். வேப்பூருக்கும், சித்தாத்தூருக்கும் இடையே கடக்கும் கவுண்டன்ய மகாநதியின்மீது தரைப் பாலம் கட்டித் தர வேண்டும். கே.வி. குப்பத்தில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தி, வட்ட அளவில் அரசு மருத்துவமனையாக உருவாக்க வேண்டும். என்னுடைய தொகுதி விவசாயம் நிறைந்த தொகுதி என்பதால், வேலையில்லாமல் சிரமப்படும் இளைஞர்கள் 150 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பெங்களூருவுக்கும், சென்னைக்கும் வேலைக்குச் செல்லும் அவல நிலையிருக்கிறது. எனவே, இளைஞர்களுக்கு தொகுதியிலேயே தொழிற் பூங்கா SIPCOT அல்லது SIDCO அமைத்துத் தர வேண்டும். மோர்தானா அணையிலிருந்து வரும் நீரை பாக்கம் ஏரிக்கு அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அம்மணாங்குப்பம் ஏரியில் குடியாத்தம் நகரிலிருந்து வரும் கழிவுகள் மற்றும் கழிவு நீரை அகற்றி, குடிநீருக்குப் பயன்படுத்த வேண்டும். கே.வி. குப்பத்திற்கும், பரதராமிக்கும் பேருந்து நிலையம் கட்டித் தரப்பட வேண்டும். குடியாத்தம் ஒன்றியத்தில் உள்ள பரதராமி ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும். அந்நிலையத்திலிருந்து குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு வருவதற்கு ஒரு மணி நேரமாகிறது. அதற்குள் நோயாளிகளின் நிலை கவலைக்கிடமாக ஆகிவிடுகிறது. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 108 ஆம்புலன்ஸ் வழங்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும், போதும் நன்றி சொல்லுங்கள். தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளைக் கொண்டு வந்து கொடுங்கள். பதிவு செய்துகொள்ளலாம்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிந்துவிட்டது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *குடியாத்தத்தில் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். கே.வி. குப்பம், குடியாத்தம் வட்டத்தில் அடங்கிய ஆறுகொள்ளப்பள்ளி, கொட்டம்பெட்டா, சைனாகுண்டா, மோடிக்குப்பம் போன்ற பகுதிகளில் ஒற்றை யானை ஆந்திர எல்லையான மலைக் காடுகளில் இருப்பதால் விவசாயப் பயிர்களை நாசம் செய்வது தொடர் கதையாகி வருகிறது. நேற்றுக்கூட அந்த யானை, வாழை, கரும்பு போன்ற பல ஏக்கரில் பயிரிடப்பட்டவற்றை நாசம் செய்திருக்கின்றது. இதனால் விவசாயிகள் நஷ்டமடைவதும், மன உளைச்சலுக்கு ஆளாவதும் தொடர்கிறது. எனவே, வனத் துறை உடனடியாக நடவடிக்கை எடுத்து, விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், நன்றி சொல்லுங்கள்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *முடித்துவிட்டேன், முடித்துவிட்டேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நன்றி சொல்லவில்லையென்றால், நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைப்பேன்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *நன்றி சொல்கிறேன். எங்கள் தொகுதி முழுக்க முழுக்க கிராமப் பகுதியாக இருப்பதனால், இந்தத் தொகுதியில் நகராட்சியோ, பேரூராட்சியோ இல்லாமல் ஒட்டுமொத்தமாக ஊராட்சியாகவே இருக்கின்ற காரணத்தினால், முழுவதும் கிராமமாக இருக்கின்ற காரணத்தினால் நான் கேட்டிருக்கின்ற இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றி அரசு உதவிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். நன்றி.* (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

2021 செப்டம்பர் 8]

***திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவரை வணங்கி என் உரையை தொடங்குகிறேன். தமிழகத்தை முன்னாளில் 5 முறை ஆண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'பள்ளியறை ஆள வேண்டிய வயதில் சிறையறை ஆண்டதாலும், கனவுகளை எண்ணவேண்டிய வயதில் காயங்களை எண்ணியதாலும், கனிவு, பணிவு, துணிவு இவை யாவும் கொண்ட ஆற்றல் மறவராக, காலம் அவரைக் கனிய வைத்திருக்கிறது' என்று கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சொன்ன பாராட்டு வரிகளுக்கேற்ப, நெருக்கடி நிலை என்னும் நெருப்பில் புடம் போட்ட தங்கமாக, பகைவரும் போற்றுகின்ற பண்பு கொண்ட தலைவராக விளங்கி, கடைநிலை தொண்டனான என்னை இரண்டாவது முறையாக இந்த அவையிலே அமர்வதற்கு வாய்ப்பளித்து என் வெற்றிக்கு வித்திட்ட கழகத்தினுடைய ஒப்பற்ற தலைவர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆருயிர் அண்ணன் தளபதி அவர்களுக்கு என் முதல் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சட்டமன்றத்தில் பொன்விழா கண்டு, மாணவரணியில் பணியாற்றிய என்னை, மாணவரணிச் செயலாளராக இருந்து நெறிப்படுத்திய, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களுக்கும், வயதில் குறைந்த இளையோரை அரவணைக்கும் பாங்கும், வயதில் மூத்தோரிடம் பரிவு காட்டும் பண்பும், வியக்க வைக்கும் அறிவும், மலைக்க வைக்கும் ஆற்றலும் கொண்டிருந்தாலும்கூட, தனித்துவத்தை விரும்பாமல், ஆனால், அதே நேரம் தனித்துவமிக்க மனிதராய் திகழ்ந்து கொண்டிருக்கின்ற ஆற்றல் வாய்ந்த எங்கள் இளைஞரணிச் செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) இளைஞரணியை சீரிய முறையில் வழிநடத்திக் கொண்டிருக்கிற, எதிர்காலத்தில் இந்த இயக்கத்தையும் வழிநடத்தவிருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) ஆருயிர் சகோதரர் என்னுடைய வெற்றிக்காக பிரச்சாரம் மேற்கொண்டு நான் இந்த அவைக்கு வருவதற்குக் காரணமாகவும் இருந்த அன்புச் சகோதரர் திருமிகு. உதயநிதி அவர்களுக்கு என் வணக்கம்.

சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தின் செயலாளர், தலைவரின் எண்ணத்தை ஈடேற்றும் ஆற்றலாளர் மாண்புமிகு

[திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி] [2021 செப்டம்பர் 8

அமைச்சர் ஆருயிர் சகோதரர் மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும், சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்தின் செயலாளர், தன்னுடைய தொகுதியின்மீது காட்டிய அக்கறையைவிட, என்மீதும், என்னுடைய வெற்றியின்மீதும் அக்கறை காட்டிய பண்பாளர், எனக்கு மட்டுமல்ல, அம்பத்தூர் தொகுதியினுடைய வேட்பாளர் கொரோனாவால் தாக்கப்பட்டு பிரச்சாரம் செய்ய முடியாத நிலை நீடித்தபோது, கழகத்தினுடைய தலைவர் இட்ட கட்டளைக்கேற்ப, தன்னையே ஒரு வேட்பாளராக ஆக்கிக்கொண்டு அங்கும் சென்று பணியாற்றிய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அண்ணன் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும் என் வணக்கம். 55,013 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெற வைத்து, இந்த அவைக்கு அனுப்பி வைத்த திரு. வி.க. நகர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், திரு.வி.க. நகர் தொகுதியில் அடங்கிய வடக்கு மற்றும் தெற்குப் பகுதி கழகத்தினுடைய அனைத்து நிர்வாகிகளுக்கும் இந்த நேரத்தில் நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நான் மகிழ்ச்சிப் பெருக்கோடு நின்று கொண்டிருக்கிறேன். காரணம், எந்தத் தலைவர் இந்திய குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து தமிழகத்தின் வீதியெங்கும் சென்று முழங்கினாரோ, எந்தத் தலைவர் இந்திய குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக 2 கோடி மக்களின் கையெழுத்துக்களைப் பெற வேண்டுமென்று தீர்மானம் போட்டு செயல்படுத்தினாரோ, அதே தலைவர், இன்றைக்கு ஆட்சிக்கு வந்து (மேசையைத் தட்டும் ஒலி) அதே சட்டத்தை இரத்து செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றிய இந்த நாளில் இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்பதில் நான் பெருமை அடைகிறேன். காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், மரணப் படுக்கையிலே இருந்த காயிதே மில்லத் அவர்களைச் சென்று சந்தித்தபோது, கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்கள் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் கரங்களைப் பற்றிக்கொண்டு, இனி இஸ்லாமியப் பெருமக்களைக் காக்க வேண்டியது உன் பொறுப்பு என்று சொன்னபோது, அதைக் கடமை உணர்வோடு தன்னுடைய வாழ்நாளின் கடைசிவரை நிறைவேற்றிக் காட்டியவர் தலைவர் கலைஞர். (மேசையைத்

தட்டும் ஒலி) அவர் வழிவந்த கழகத்தின் ஒப்பற்ற தலைவர், ஆருயிர் அண்ணன் தளபதி அவர்கள் ஒரு பத்தாண்டுக் காலத்திற்கு முன்னால், சென்னை அசோகா ஓட்டலில் நடைபெற்ற இப்தார் நோன்பு திறக்கும் விழாவில் பங்கேற்று உரையாற்றுகின்றபோது ஓர் அற்புதமான கருத்தைப் பதிவு செய்தார். அந்த நிகழ்ச்சிக்காகப் போடப்பட்டிருந்த அழைப்பிதழைக் கையில் வைத்துக்கொண்டு, கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்; இந்த அழைப்பிதழிலே என்னுடைய பெயரைப் அச்சிட்டு, என்னுடைய பெயருக்கு முன்னால் சிறப்பு விருந்தினர் என்று அச்சடித்திருக்கின்றீர்களே! இது தவறு. நான் சிறப்பு விருந்தினர் அல்ல, என்றும் உங்களோடு இருப்பவன், உங்கள் சகோதரன் என்று பதிவு செய்தார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்த உணர்வோடுதான் இன்றையதினம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றார்.

அன்றையதினம் தமிழ்நாடெங்கும் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் எந்தவித தயக்கமும் இல்லாமல், கலைஞர் வழி வந்தவர் என்பதை நிரூபிக்கும்வண்ணம், சைதை பனகல் மாளிகையில் நடைபெற்ற அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று, அந்த ஆர்ப்பாட்ட மேடையில் குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக முழக்கமிட்டு, அந்தச் சட்டத்தின் நகலை எதைப் பற்றியும் கவலைப்படாமல் மேடையிலேயே கிழித்தெறிந்து கைதானவர்தான் நம்முடைய இளைஞர் அணிச் செயலாளர் அன்புச் சகோதரர் திரு. உதயநிதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, அந்த நிலையில், இந்தத் தீர்மானம் நிறைவேற்றிய நாளில் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் பங்கேற்று என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்கின்ற தருணத்தில், என் எண்ணமெல்லாம் சற்று பின்னோக்கிச் செல்கிறது. சாதாரண குடும்பத்தில் பிறந்து, கால்நடைத் துறையிலே பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. பழனிவேல், திருமதி சௌந்தரி அம்மாள் அவர்களுக்கு மகனாகப் பிறந்த நான், இந்தத் தருணத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடமும், கழகத்தின் ஒப்பற்ற தலைவர் அவர்களிடமும், கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களிடமும் எப்படியெல்லாம் ஈர்க்கப்பட்டேன் என்பதை ஒருகணம் எண்ணிப் பார்க்கின்றேன்.

1976 ஆம் ஆண்டில், தமிழகத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் தலைமையிலான ஆட்சி, அன்றைக்கு இருந்த ஒன்றிய அரசால் கலைக்கப்பட்டு, நெருக்கடி நிலை அமல்படுத்தியிருந்த நேரம். அதற்கு மறு ஆண்டு 1977 ஆம் ஆண்டு, 12 வயதே நிரம்பிய நிலையில் ஏழாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த சிறுவன் நான். அப்போது, தலைவர் கலைஞர் அவர்கள் முரசொலியில் தொண்டர்களுக்கு மடல் ஒன்றைத் தீட்டினார், நிதி தாரீர் என்று. கழகத் தொண்டர்களும் கோபாலபுரம் இல்லத்தில் குவிந்து, தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் நிதியினைத் தந்தார்கள். அப்போது என் உடன் பிறந்த அண்ணன் கஜேந்திரன் அவர்களும் தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்து நிதி கொடுக்கச் சென்றபோது, 7 ஆம் வகுப்பு படித்து கொண்டிருந்த நான், நானும் வருகிறேன் என்று சொல்லி, என் அண்ணனுடன் சென்றேன். செல்லுகின்றபோது, என்னுடைய தந்தை தினம், தினம் தின்பண்டம் வாங்கி சாப்பிட கொடுத்த, ஒரு காசு, இரண்டு காசுகளை மண் உண்டியலிலே சேர்த்து வைத்திருந்தேன். கோபாலபுரம் செல்லுகின்றபோது, அந்த மண் உண்டியலையும் எடுத்துக்கொண்டு சென்றேன். தற்போது கோபாலபுரம் இல்லத்தில் லிப்ட் அமைந்திருக்கின்ற இடத்திற்கு நேர் எதிரில் ஒரு மர மேசையின்மீது தலைவர் கலைஞர் நின்றுகொண்டு, வரிசையாக வந்து கொண்டிருந்த தொண்டர்களிடம் நிதியினைப் பெற்றுக்கொண்டு புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தார். இன்றும்கூட எனக்குப் பசுமையாக நினைவிருக்கிறது. வரிசையில் நின்று கொண்டிருந்த நான், மெல்ல தலைவர் கலைஞர் அவர்களின் கால்களுக்கு அருகே சென்று, அவரின் கால்களைச் சீண்ட, தலைவர் கலைஞர் அவர்கள் குனிந்து பார்த்து, என் தலையிலே தட்டி என்னவென்று கேட்டபோது; நான் கையில் வைத்திருந்த உண்டியலை உயர்த்திக் காட்டினேன். தலைவர் கலைஞர் அவர்கள் அருகில் இருந்த உதவியாளரிடம் அது என்னவென்று பார் என்று சொன்னபோது, அந்த உதவியாளரும் அந்த மண் உண்டியலை அங்கிருந்த மேசையிலே தட்டி, எண்ணிப் பார்த்தபோது, சரியாக ஒரு ரூபாய் இருந்தது. அதை தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் சொன்னபோது; அதை அவனிடத்திலே கொடு என்று சொல்லிவிட்டு, என்னை அருகிலே அழைத்து அந்தக் காசுகளைப் பெற்றுக்கொண்டு புகைப்படம் எடுத்தார். அந்தப் புகைப்படம் மறுநாள் முரசொலி நாளேட்டிலே வந்தது.

2021 செப்டம்பர் 8] [திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி]
பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைய காலகட்டத்தில் முரசொலியிலே 'கரிகாலன் கேள்வி–பதில்' என்ற ஒரு பகுதி வந்தது. அதில் தொண்டர்களுக்குப் பதிலளிப்பதை முத்தமிழறிஞர் அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தார். அப்பொழுது என் உடன் பிறந்த மற்றொரு அண்ணன் தயாநிதி அவர்களை உடன் வைத்துக்கொண்டு நானும் ஒரு கேள்வி எழுதி பதில் கேட்டு கடிதம் எழுதினேன். அது என்னவென்று சொன்னால், 'பள்ளி மாணவனான நான், தங்களிடம் நிதியாக ரூ.1/-ஐத் தந்தபோது, தங்கள் மனம் என்ன எண்ணியது?' என்று எழுதிவிட்டு, அடைப்புக்குறிகளுக்குள்ளே இரண்டு வரிகள் எழுதினேன். 'இந்தக் கேள்விக்குக் கண்டிப்பாக பதிலளிக்கவும். அப்பொழுதுதான் என்னுடைய மனம் நிம்மதியடையும்' என்று எழுதினேன். ஆனால், கேள்வி கேட்டது சின்னஞ்சிறு சிறுவன் என்று எண்ணி என்னைப் புறந்தள்ளாமல், என்னுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்த தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மறு நாள் முரசொலியிலே என்னுடைய கேள்விக்குப் பதில் எழுதி அதனை வெளியிட்டிருந்தார். அது என்ன பதிலென்று சொன்னால், 'நாளைக்கு எங்கேயாவது பார்த்தால்கூட அடையாளம் கண்டுகொள்ள முடியாத இளம் கொழுந்துக்கு என்மீது எவ்வளவு அன்பு என்று பூரிப்பு கொண்டேன்' என்று தலைவர் கலைஞர் எழுதியிருந்தார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நெருக்கடி நிலை காலகட்டத்திலே கருப்பு, சிவப்பு நிறத்தைக் கண்டாலே கைது என்று இருந்த அந்தக் காலகட்டத்தில் சைதாப்பேட்டையில் அமைந்திருக்கின்ற 'தாயகம்' என்று பெயர் பொறிக்கப்பட்ட என் வீட்டு மாடியிலே கருப்பு, சிவப்பு கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருக்கும். நாளடைவில் என்னுடைய வீடு 'கொடி பறக்கிற தாயகம் வீடு' என்றாகிப் போனது. அந்தக் காலகட்டத்தில் என்னுடைய தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. து. புருஷோத்தமன் அவர்களும், திரு. ஆர்.எஸ். ஸ்ரீதர் அவர்களும் ஆண்டுக்கு ஆண்டு தலைவர் கலைஞரை பொங்கல் விழாவில் சந்தித்து வாழ்த்து பெறச் செல்லும்போது நானும் உடன் செல்வது வழக்கம். அப்போது, அவ்விருவரும் முத்தமிழறிஞர் தலைவரிடத்திலே என்னை அறிமுகப்படுத்துகின்றபொழுது, 'சைதாப்பேட்டையில் கொடி பறக்குமே அந்த தாயகம் வீட்டுப்

பையன்தான் இவன்' என்று அறிமுகப்படுத்துவார்கள். 1986 ஆம் ஆண்டு நந்தனம் கலைக் கல்லூரியில் நான் மாணவர் பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று, தலைவர் கலைஞரை அழைத்து, மாணவர் பேரவையைத் துவக்க வேண்டுமென்று எண்ணி, அன்றைக்கு மாணவரணிச் செயலாளராக இருந்த அண்ணன் துரைமுருகனிடம் சொல்ல, அவரும் தேதியைப் பெற்றுத் தந்தார். நான் அந்த மாணவர் பேரவை துவக்க விழாவில் வரவேற்புரை ஆற்றுகின்றபொழுது, 1977 ஆம் ஆண்டு நான் தந்த ஒரு ரூபாய் கதையைச் சொல்லிவிட்டு, நிறைவாக தலைவர் கலைஞர் அவர்கள் என்னுடைய கேள்விக்கு எழுதிய பதிலையும் குறிப்பிட்டுச் சொன்னேன். 'அன்றைக்கு உங்களால் குறிப்பிடப்பட்ட அந்த இளங்கொழுந்து வேறு யாருமல்ல; இதோ உங்கள் முன்னால் பேசிக் கொண்டிருக்கின்ற நான்தான்' என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய உரையை நிறைவு செய்தபோது, தலைவர் கலைஞர் அவர்கள் என்னை அருகிலழைத்து முதுகிலே தட்டிக்கொடுத்துவிட்டு, உரையாற்றச் சென்றார். சரியாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தலைவர் கலைஞர் உரையாற்றுகின்றபோது, முதன் முதலாக என்னுடைய பெயரை 'தாயகம் கவி' என்றழைத்தது (மேசையைத் தட்டும் ஒலி) நான் பயின்ற அந்தக் கல்லூரியில்தான். அந்தப் பெயரே நாளடைவில் அனைவரும் அன்போடு அழைக்கின்ற பெயராக மாறிப் போய்விட்டது. அன்றைக்கு எம்.ஜி.ஆர். அரசாங்கம் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஆதிக்க இந்தியை எதிர்த்து, தாய்மொழி தமிழைக் காக்க நாடெங்கிலும் போராட்டங்கள் நடைபெற்றபொழுது, மாணவர் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அப்பொழுது நானும் கைது செய்யப்பட்டேன், கைது செய்யப்பட்ட என்னை சைதாப்பேட்டை கிளைச் சிறைச்சாலையில் அடைக்க கொண்டு சென்றபொழுது, எனக்கு முன்னாலேயே ஒரு மெல்லிய உருவம் நீல நிறச் சட்டை, வெள்ளை வேட்டி அணிந்து சைதாப்பேட்டை கிளைச் சிறைச்சாலையின் வாயிலில் நின்றுகொண்டிருந்தது. அந்த உருவம் வேறு யாருமல்ல. இன்றைக்கு சபையிலே தமிழகத்தின் முதலமைச்சராக வீற்றிருக்கின்ற ஆருயிர் அண்ணன் தளபதி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) என்னைப் பார்த்து ஆறுதல் சொல்லி வழியனுப்பினார்கள். அதற்குப் பின்னால், அந்த நேரத்தில் "தராசு" என்ற ஒரு பத்திரிகை தலைவர் கலைஞரிடத்தில் பேட்டியெடுத்தபோது, என்னுடைய கைது குறித்தும், கேள்வி கேட்டார்கள். அப்பொழுது தலைவர் கலைஞர்

சொன்னார். 'நந்தனம் கலைக் கல்லூரியினுடைய மாணவர் பேரவையைத் துவக்கி வைக்க என்னை அழைத்ததுதான் தம்பி தாயகம் கவி செய்த மிகப் பெரிய தவறு' என்று தலைவர் கலைஞர் சொன்னார். அதனைத் தொடர்ந்து நாங்கள் விடுதலை செய்யப்பட்டோம். விடுதலை செய்யப்பட்டவுடன், நான் பயின்ற கல்லூரியில் வரலாற்றுத் துறையின் சார்பில் ஒரு பட்டிமன்றம் நடத்தப்பட்டது. அதனை நடத்தியவர் டாக்டர் சாமிநாதன் என்கின்ற வரலாற்றுப் பேராசிரியர். அவர் என்னிடத்திலே இரண்டு தலைப்புகளைத் தந்தார். தலைப்புகளைத் தந்து, 'ஏதாவது ஒரு தலைப்பிலே நீ பேசு' என்று சொன்னபோது, நான் அந்த இரண்டு தலைப்புகளையும் எடுத்துக்கொண்டு, ஒரு நாள் மாலை வேளையில் கோபாலபுரம் சென்றேன். அப்போது அங்கே அண்ணன் தளபதி அவர்கள், அண்ணன் மு.க. தமிழரசு அவர்களோடு அந்தத் தாழ்வாரத்திலே பேசிக்கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் அருகில் அழைத்து என்னவென்று கேட்க, நான் அந்த இரண்டு தலைப்புகளையும் நம்முடைய கழகத் தலைவர் ஆருயிர் அண்ணன் தளபதியிடத்திலே கொடுத்து, 'நான் எந்தத் தலைப்பிலே பேசுவது' என்று கேட்டபோது, சற்றும் தாமதிக்காமல் மாணவர்களுக்கு அரசியல் தேவையா, தேவையில்லையா என்ற அந்த இரண்டு தலைப்புகளையும் பார்த்தவுடன், கழகத்தினுடைய ஒப்பற்ற தலைவர் சொன்னது, 'அரசியல் தேவை என்று பேசு' என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு கழகத் தலைவர் எனக்கு இட்டதை நான் தலைப்பாக எண்ணாமல், ஒரு கட்டளையாக எண்ணிக்கொண்டு, இன்றுவரையில் அவர் காட்டிய திசையில், என்னுடைய பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றேன். கழக இளைஞரணிச் செயலாளர், ஆருயிர் சகோதரர், உதயநிதி அவர்களின் சீரிய தலைமையில், இளைஞரணியில் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசுகின்ற இத்தருணத்தில், என் எண்ணமெல்லாம் பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய கவிதை வரிகளை நோக்கிச் செல்கிறது.

"நூலைப்படி—சங்கத்தமிழ்
நூலைப்படி—முறைப்படி
நூலைப்படி,
காலையிற்படி கடும்பகல்படி
மாலை, இரவு பொருள்படும்படி
நூலைப் படி
கற்பவை கற்கும்படி
வள்ளுவனார் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வதெப்படி? நூலைப்படி!
சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படி தெரிந்தபடி
தீமை வந்திடுமே மறுபடி நூலைப்படி!
பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ளநூற்களை ஒப்புவதெப்படி நூலைப்படி!

என்ற பாவேந்தர் எழுதிய கவிதை வரிகளுக்கேற்ப, அவரின் சிந்தனைக்கேற்ப, சாதி வேற்றுமையால் தீமைதான் வந்துசேரும் என்பதைக் கருத்தில்கொண்டு, சாதி வேற்றுமையைக் களைந்து, மத வேற்றுமைகளைக் களைந்து, சமத்துவம் மிக்க சமுதாயத்தை உருவாக்கிக் காட்ட வேண்டுமென்று, தலைவர் கலைஞர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் செய்திட்ட சாதனைகள் ஏராளம். அந்தச் சாதனைகளை இங்கே சொல்லுகின்ற இத்தருணத்தில், சாதனை என்பது என்ன? பத்தோடு, பதினொன்று என்று கூட்டிச் சொல்வதா சாதனை? இல்லை, இல்லை. பத்தில் இல்லாததை, புதுமையானதாகவும், சமூகத்திற்குப் பயனுள்ளதாகவும் ஆக்கிக் காட்டுவதுதான் சாதனை. அந்தவகையில் பார்க்கப்போனால், ஒடுக்கப்பட்ட மக்களின் ஏக்கத்தைப் புரிந்து, ஒடுக்கப்பட்ட மக்களுடைய மனக் குமுறலைப் புரிந்துகொண்டு, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று கலைஞர் கொண்டுவந்த சட்டத்தை, நடைமுறைப்படுத்திக் காட்டினாரே, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத்

தட்டும் ஒலி) அது சாதனை! ஆதி திராவிட மக்களுக்கு, 16 சதவிகித இட ஒதுக்கீடு என்றிருந்ததை, 18 சதவிகிதமாக உயர்த்திக் காட்டினாரே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், அது சாதனை! தந்தை பெரியாரின் பிறந்த நாளை, சமூக நீதி நாளாக அறிவித்தாரே, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அது சாதனை. 1987 ஆம் ஆண்டு நடைபெற்ற இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில், உயிர் நீத்த தியாகிகளை நினைவுகூரும் வண்ணம், விழுப்புரத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தாரே, அது சாதனை. இன்றையதினம், இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கெதிராக, தீர்மானம் கொண்டு வந்து, அதனை இரத்து செய்ய வேண்டுமென்று தீர்மானம் போட்டாரே, அது சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) தந்தை பெரியாருடைய சீர்திருத்தக் கருத்துகளுக்கு, தந்தைப் பெரியாரின் பகுத்தறிவு சிந்தனைக்கு, அடிப்படையாகத் திகழ்ந்திட்ட அயோத்திதாசர் பண்டிதருக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று சொன்னாரே, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அது சாதனை.

எனவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் செப்டம்பர் 8 ஆம் நாள். இந்த செப்டம்பர் 8 ஆம் நாளைத்தான், உலக அமைப்பான UNESCO நிறுவனம், 'உலக கல்வியறிவு நாள்' ஆக அறிவித்திருக்கின்றது. 1966 ஆம் ஆண்டு அறிவித்திருந்ததை இன்றுவரை தொடர்ந்து கடைபிடித்து வருகிறது. ஒருவன் கல்வி பெற்றால்தான், சமூகம் முன்னேறும். ஒருவன் கல்வி பெற்றால்தான், பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைய முடியும் என்ற நோக்கத்திற்காக, UNESCO அமைப்பு, இந்த நாளை உலக கல்வியறிவு நாளாக அறிவித்திருக்கிறது. இந்த நாளில் நான் எண்ணிப் பார்க்கிறேன்; பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர், ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனுக்காக, நம்முடைய ஒப்பற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உவந்தளித்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளைப் பார்க்கும்போது, உண்மையிலேயே மனம் பூரித்துப்போகிறது. காரணம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்க்கைக்காக, இந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியில் 77.88 சதவிகிதம், கல்விக்காக மட்டுமே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கின்றார். அது மாத்திரமல்ல, சிறுபான்மையினர்

நலனுக்காக, சிறுபான்மையினர் மக்கள் கல்வி பெற வேண்டும் என்பதற்காக, சிறுபான்மையின மக்களின் வாழ்க்கைத் தரமும், கல்வியின் தரமும் உயர வேண்டும் என்பதற்காக, ரூ.114.65 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும், மாலை 5 மணிக்கு மானியக் கோரிக்கை இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுருக்கமாக உரையை முடிக்க வேண்டும்.

பிற்பகல் 12–30

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே, ஆதி திராவிடர், பழங்குடியின மாணவர்களின் மேன்மைக்காக, Matric கல்விக்கு பின்னால் தரப்படுகின்ற கல்வி உதவித் தொகை திட்டத்தில் 1,884.70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல, வெளிநாடு சென்று பயில்கின்ற ஆதி திராவிட மாணவர்களுக்கு, கடந்தகால ஆட்சியிலே ஒவ்வோர் ஆண்டும் 30 இலட்சம் ரூபாய் மாத்திரமே ஒதுக்கப்பட்ட நிலையில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்பேரில் தயாரிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையில், கடந்தகால ஆட்சியில் ஒதுக்கப்பட்டதோ 30 இலட்சம் ரூபாய்! அதையும் தாண்டி ஒவ்வோர் ஆண்டும் இனி 5 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார். அதுமாத்திரம் அல்ல, முனைவர் பட்டப் படிப்பிற்காக, கடந்தகால ஆட்சியில் 50,000/– ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், நம்முடைய கழகத் தலைவரினுடைய ஆட்சியிலே இன்றையதினம் அது 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இப்படி பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் மேன்மைக்காக பல்வேறு தளங்களில் நின்று போராடிக்கொண்டு, பல்வேறு சாதனைகளைப் படைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அருந்ததியர் இன மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை சீர்தூக்கிவிட வேண்டும், கை தூக்கிவிட வேண்டும் என்பதற்காக அவருடைய ஆட்சிக் காலத்தில், 3 சதவிகித

2021 செப்டம்பர் 8] [திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி] *உள் ஒதுக்கீடு அளித்தார். அப்படி உள் ஒதுக்கீடு அறிவிக்கப்பட்ட காரணத்தினால், அந்த ஒதுக்கீடு அறிவிக்கப்படுவதற்கு முன்னர் வரை, அருந்ததியர் இனத்திலே பிறந்த மாணவர்கள் மருத்துவக் கல்லூரியிலே பெற்ற இடம் என்பது வெறும் 29 தான். ஆனால், ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டதற்குப் பின்னால், அதே அருந்ததியர் இன மாணவர்கள் அந்தக் கல்வியாண்டில் பெற்ற இடங்கள் எவ்வளவு என்று பார்த்தால் 56. அதைப்போலவே பொறியியல் கல்லூரியில் ஒதுக்கீடு தருவதற்கு முன்னால் பெற்ற இடங்கள் 774. ஆனால், ஒதுக்கீடு தந்ததற்குப் பின்னால் கிடைத்த இடங்கள் என்பது 1,165. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்த இட ஒதுக்கீடு 2009 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரைப் பார்க்கின்றபோது, ஒட்டுமொத்தமாக அந்த அருந்ததியின மக்கள் அனைத்துக் கல்வி நிலையங்களிலும் பெற்ற இடங்கள் எவ்வளவு என்று பார்க்கின்றபோது, மருத்துவக் கல்லூரிகளில் 991, பல் மருத்துவக் கல்லூரிகளில் 254, பொறியியல் கல்லூரிகளில் 28,521, சட்டக் கல்லூரிகளில் 2,223, பாலிடெக்னிக் கல்லூரிகளில் 21,109,* I.T.I. *படிப்பில் 10,223. அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பெற்ற இடங்கள் எவ்வளவு என்று பார்க்கின்றபொழுது, 19,689. அனைத்து கலைக் கல்லூரிகளிலும் பெற்ற இடங்கள் 1,09,156.* (மேசையைத் தட்டும் ஒலி) *ஆக மொத்தம், அந்த 12 ஆண்டுகளில் அருந்ததியின மாணவர்கள் கல்வி நிலையங்களில் பெற்ற ஒட்டுமொத்த இடங்கள் 1,92,166.* (மேசையைத் தட்டும் ஒலி) *இது கழகத் தலைவர் அவர்கள் செய்திட்ட சாதனை.* (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *அதைப்போலவே, கடந்த 10 ஆண்டுகளில் நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில், ஆதி திராவிடர் நலத் துறைக்கு என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்க்கின்றபொழுது, ஒன்றுமே இல்லை என்று நினைக்கின்றபோது, மனம் வேதனைப்படுகிறது. காரணம், கடந்த 5 ஆண்டுக்கால ஆட்சியில், அ.தி.மு.க. ஆட்சியின் தொடக்கத்தில், 2016–2017 ஆம் ஆண்டு இந்த நலத் துறையின்மீது வெளியிடப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம் பக்கம் எண் 4–ல் இந்த நலத் துறையின் சார்பில் இயங்குகின்ற பள்ளிகளின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தப் பக்கம் எண் 4–ல் குறிப்பிடப்பட்டிருப்பது, இந்த நலத்*

துறையின் சார்பில் இயங்குகின்ற பள்ளிகளின் எண்ணிக்கை 1,440 என்றும், அந்த 1,440 பள்ளிகளில் பயில்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 1,46,653 என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுவே, அந்த ஆட்சியின் இறுதிக்கட்டத்தில், 2019–2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் 4 ஆம் பக்கத்தில் இந்த நலத் துறையின் சார்பில் இயங்குகின்ற பள்ளிகளின் எண்ணிக்கை 1,135 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த 1,135 பள்ளிகளில் பயில்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று பார்த்தால், 92,756 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, கடந்த கால அதிமுக ஆட்சியின் தொடக்கத்தில் 1,440 ஆதி திராவிடப் பள்ளிகள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த ஆட்சி முடிவடையும் தருவாயில் 1,135 பள்ளிகள் என்று குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்க்கின்றபோது, 305 பள்ளிகள் கடந்தகால ஆட்சியில் மூடப்பட்டிருக்கின்றன. அப்படி 305 பள்ளிகள் மூடப்பட்டதனால் எத்தனை மாணவர்கள் பள்ளிக்கே வராமல் போனார்கள் என்று பார்த்தால், 53,897 பேர், கடந்த கால ஆட்சியில் கல்வி கற்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இது பள்ளிகளைப் பொறுத்தவரை. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 25 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: விடுதிகள் என்று எடுத்துகொண்டால், கடந்த 2016–2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மானியக் கோரிக்கை புத்தகம் பக்கம் 27–ல் இந்தத் துறையின் சார்பில் இயங்கி வருகின்ற விடுதிகளின் எண்ணிக்கை 1,662 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த விடுதிகளிலே தங்கியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 1,31,754 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுவே 2019–2020 ஆம் ஆண்டுகளில் அந்தத் துறையின்கீழ் இயங்குகின்ற விடுதிகளின் எண்ணிக்கை 1,324. அந்த 1,324 விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 98,539 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12–35

ஆக, கடந்த கால ஆட்சியில் மூடப்பட்ட மாணவர்கள் விடுதிகளின் எண்ணிக்கை 338. அந்த விடுதிகள் மூடப்பட்டதால், விடுதிக்கு வர முடியாமல் போன மாணவர்களின் எண்ணிக்கை 33,215. இந்த மாணவர்கள் விடுதிக்கு வர முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றார்கள். எனவேதான், அந்த விடுதிகளை

மேம்படுத்த வேண்டும், அந்த விடுதியில் தங்கி பயில்கின்ற மாணவர்களின் தரத்தைச் சீர்படுத்த வேண்டுமென்பதற்காக இந்த நிதியாண்டில் சிறப்பு மூலதனக் கூறாக 25 கோடி ரூபாய் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை முடித்துவிடுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 26 நிமிடங்கள் ஆகிவிட்டன. நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: இந்தத் தருணத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் நான் வைக்கின்ற ஒரே கோரிக்கை என்னவென்றால், பிறப்பால் ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் மதம் மாறுகின்ற காரணத்தினால், உதாரணமாக கிறித்தவ மதத்திற்கு மாறுகின்றபோது, அவர்களுடைய சாதிச் சான்றிதழ்களிலே B.C. Christian என்று குறிப்பிடப்படுகிறது. அப்படி B.C. Christian என்று குறிப்பிடப்படுவதால் ஆதி திராவிடர்களின் உரிமைகள் அத்தனையையும் பெற முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. நான் சொல்ல வருவது, மதம் என்பது அவர்களுடைய மனம் சார்ந்த செயல். அப்படி மதம் மாறினாலும்கூட, இன்றைக்கு இருக்கின்ற உரிமைகளை அவர்கள் பெறுவதற்கு ஏதுவாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதற்குத் தீர்வு காண வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் மதம் மாறினால், அவர்களுக்கும் இதே நிலைதான். எனவே, மதம் மாறுகின்ற ஆதி திராவிட மக்களாக இருந்தாலும், பிற்படுத்தப்பட்ட மக்களாக இருந்தாலும் அவர்களுக்குரிய சலுகைகளை அவர்கள் பெற மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஒரே ஒரு கோரிக்கை. கடந்த கால ஆட்சியில், சட்டமன்றத்திலே இருக்கின்ற ஒவ்வோர் உறுப்பினருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டது. கடந்த கால ஆட்சியில் அப்படி வழங்கப்பட்டபோது, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் பெயரையும் குறிப்பிட்டு, அந்தப் பெயருக்குக் கீழே அவர்களின் தொகுதியும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், தனித் தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினரின் அடையாள அட்டையில், அவரது

[திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி] [2021 செப்டம்பர் 8

பெயருக்குக் கீழே தொகுதியைக் குறிப்பிட்டுவிட்டு, Scheduled Caste என்பதன் சுருக்கச் சொல்லான S.C. என்று குறிப்பிட்டு அந்த அடையாள அட்டை தந்திருந்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வைக்கின்ற கோரிக்கை, அந்த அடையாள அட்டையில், உறுப்பினரின் பெயரும், அவர் சார்ந்திருக்கும் தொகுதியும் இருந்தால் போதுமானது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொகுதியின் அடைப்பு குறிக்குள் S.C. என்று போடுவது அந்தத் தனித் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்களைத் தனிமைப்படுத்துவதைப்போல் இருக்கிறது. எனவே, தங்களுடைய சமூக நீதிக்கான சிந்தனையின் ஓட்டத்தில், வழங்கப்படுகின்ற அடையாள அட்டையில் பெயர் இருந்தால் போதுமானது என்று சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—40

ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நிலுவையில் இருக்கின்றன. அந்த விண்ணப்பப் படிவங்களைப் பரிசீலனை செய்து அனைத்து ஆதி திராவிட மக்களுக்கும் இலவசமாக வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடிக்கும் இத்தருணத்தில், 1977 ஆம் ஆண்டு நம்முடைய இளைஞரணிச் செயலாளர் அவர்கள் பிறந்த மறுதினம் மத்திய சிறைச்சாலையில் இருந்த நம்முடைய கழகத்தினுடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் நம்முடைய தலைவர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தின் வரிகளை மாத்திரம் சொல்லிவிட்டு நான் எனது உரையை நிறைவுசெய்கிறேன். 28—11—1977 ஆம் ஆண்டு கருப்புக் கொடி போராட்டத்தில் பங்கேற்ற தலைவர் கலைஞர் அவர்கள் மத்திய சிறைச்சாலையிலிருந்து நம்முடைய இளைஞரணிச் செயலாளர் பிறந்த செய்தி கேட்டு கழகத் தலைவர் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்களுக்கு மறுநாள் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில், "1953 ஆம் ஆண்டு விலைவாசி உயர்வு போராட்டத்தில் பங்கேற்ற நான் ஆறு மாத காலம் திருச்சி சிறையில் இருந்தபோது என்னைக் காண்பதற்கு வீட்டார் வந்தபோது, குழந்தையாக இருந்த நீயும் வருவாய். 23 ஆண்டுகள் கழித்து நீ மத்திய சிறைச்சாலையில் மிசா கைதியாக அடைபட்டிருந்தபோது நான் வந்து உன்னைப் பார்த்தேன். இப்போதும் நான் சிறையில் இருக்கிறேன். புதியதாக பிறந்திருக்கின்ற என் பேரன் என்னைக் காண வருவான் என்ற

2021 செப்டம்பர் 8] [திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி]

நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என்று எழுதிவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்கள் எழுதியிருப்பார்; ஒரு அற்புதமான நிகழ்வு இது. "பொது வாழ்வு என்பது எளிதானது அல்ல. புயலுக்கு ஒப்பானது" என்று போட்டுவிட்டு, "புதிய பேரனுக்கு எனது வாழ்த்துக்கள்" என்று எழுதியிருப்பார் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்ல வருகின்ற செய்தி, பொது வாழ்க்கையில் புயலை எதிர்கொண்டு தன் பயணத்தைத் தொடர்ந்த தலைவர் கலைஞர் அவர்கள் ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினருக்கு என்றென்றும் பாதுகாப்பாக இருந்தார். அவர் வழி வந்த நம்முடைய கழகத்தினுடைய தலைவர், தமிழக முதலமைச்சர் சிறுபான்மையின மக்களை, ஆதி திராவிட மக்களை, பிற்படுத்தப்பட்ட மக்களை, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களை, சிறுபான்மையினரைக் காக்கின்ற பொறுப்பினை ஏற்றார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள். (குறுக்கீடு)*

திரு ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *முடித்துவிடுகிறேன். அவரைத் தொடர்ந்து அவர்களது வழி வந்த இளைஞரணிச் செயலாளர் ஆருயிர் சகோதரர் உதயநிதி அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கிப் பிடிப்பார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன் நன்றி, வணக்கம். எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகளை இந்த அவையின்முன் வைக்கிறேன்.*

தொகுதிக் கோரிக்கைகள்:

1) மழைக் காலத்தில் ஜமாலியா, மேட்டுப்பாளையம், பட்டாளம், ஓட்டேரி போன்ற பகுதிகளில் மழைநீர் தேங்கி வெளியேற வழியில்லாமல் உள்ளது. எல்லா கால்வாய்களையும் தூர்வாரி கரையைப் பலப்படுத்த வேண்டும்.

2) ஓட்டேரி பகுதியில் தொழில் முனைவோருக்கான பயிற்சி மையமும், தொழிற்கடன் பெற வழிவகையும் செய்து தர வேண்டுகிறேன்.

3) திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி முழுவதும் உள்ள கழிவுநீர் கால்வாய் குழாய்கள் அனைத்தும் 25 ஆண்டுகளுக்கு

[திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி] [2021 செப்டம்பர் 8

முன்பு அமைக்கப்பட்டவை. அவற்றை அகற்றிவிட்டு புதிய குழாய்கள் பதித்துத்தர வேண்டுகிறேன்.

4) திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு கலை, அறிவியல் கல்லூரி அமைத்துத்தர வேண்டுகிறேன்.

5) அருந்ததியர் மக்களுக்கான செருப்புத் தைக்கும் கூடம், குடியிருப்புகள் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் பகுதியில் குடிசை வீடுகளை அகற்றி புதிய குடியிருப்புகளை அமைத்துதர வேண்டுகிறேன்.

6) சென்னை பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் 70–வது வட்டத்தில் குமாரசாமி–பெரம்பூர் சந்திப்பில் புதிய பம்பிங் ஸ்டேஷன் அமைத்துத்தர வேண்டும்.

7) சென்னை மாநகராட்சி 70–வது வட்டம் காந்தி பூங்கா பின்புறம் அமைந்துள்ள விளையாட்டுத் திடலை விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தும்வண்ணம் அமைத்துத்தர வேண்டும்.

8) செருப்பு தைக்கும்போது குப்பைகளாகச் சேருகின்ற தோல் கழிவுகளை அகற்றவும், சுகாதாரமாகவும் வாழ சாலை வசதி மற்றும் கழிப்பிட வசதிகளை மேம்படுத்தித்தர வேண்டும்.

9) விளையாட்டு வீரர்கள் அதிகம் வாழும் பகுதியான பெரம்பூர் பாலம் அருகில் பூங்காவின் காலியிடத்தில் இறகு பந்து விளையாட்டரங்கம் அமைத்துத்தர வேண்டும்.

10) 71–வது வட்டம், மங்களபுரம், ஏகாங்கிபுரம் பகுதியில் கால்வாயைத் தூர்வாரி சுற்றுச்சுவர் அமைத்துத்தர வேண்டும்.

11) மங்களபுரம், சந்திரயோகி சமாதி சாலை ஆகிய பகுதிகளில் உடற்பயிற்சிக்கூடம் அமைத்துத்தர வேண்டும்.

12) 71, 72, 73, 74, 75, 76 ஆகிய வட்டங்களில் நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடம் அமைத்துத்தர வேண்டும்.

13) 77–வது வட்டம் கன்னிகாபுரம் உள்ளடங்கிய பத்திற்கும் மேற்பட்ட பகுதிகளில் குடிநீருடன் கழிவுநீர் கலக்காமல் இருப்பதற்காக புதிய குடிநீர்க் குழாய் மற்றும் புதிய வடிகால்வாய்கள் அமைத்து மக்கள் சுகாதாரமாய் வாழ வழிவகை செய்ய வேண்டும்.

14) 73–வது வட்டம் நாச்சாரம்மாள் தெருவில் மழைநீர் கால்வாயைப் புதுப்பித்துத் தர வேண்டும்.

15) 73–வது வட்டம் வாழைமாநகர் பகுதியில் சமூக நலக் கூடம் அமைக்க வேண்டும்.

16) 74–வது வட்டம் சத்தியவாணி முத்து நகரில் உள்ள பிளாக்குகளில் அனைத்து பகுதிகளுக்கும் தார்ச்சாலை மற்றும் கழிவுநீர் வசதி செய்து தர வேண்டும்.

17) 74–வது வட்டம் புதிய தலைமைச் செயலக குடியிருப்பு, ரங்கநாதபுரம் பகுதியிலும் கழிவுநீர் கால்வாய் மற்றும் புதிய தார்ச்சாலை அமைத்துத்தர வேண்டும்.

18) 75–வது வட்டத்தில் வெங்கட்டம்மாள் சமாதி தெரு பகுதியில் இளைஞர்களின் நலனைக் கருத்தில்கொண்டு உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத்தர வேண்டும்.

19) செல்லப்பா தெரு, வள்ளுவன் தெரு, பிரிக்கிளின் சாலை, தேவிபவானி அம்மன் தெரு ஆகிய பகுதிகளில் புதிய குடிநீர்க் குழாய் அமைத்து, புதிய மின் விளக்குகள் அமைக்க வேண்டும். செல்லப்பா தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்தைப் புதுப்பித்துத் தர வேண்டும்.

20) 76–வது வட்டத்தில் ஸ்டாரன்ஸ் ரோடு, அங்காளம்மன் கோயில் தெரு, வெங்கடேசன் பத்தன் தெரு, சச்சிதானந்தம் தெரு, தேவராஜ் தெரு, ராமானுஜம் தெரு, கந்தசாமி கோயில் தெரு, ஹாஜி முகம்மது அப்பாஸ் தெரு சந்திப்பு ஆகிய பகுதிகளில் புதிய தார்ச்சாலைகளை அமைத்துத்தர வேண்டும்.

21) இளைஞர்கள், மாணவர்கள் வேலைக்குச் செல்லும் மகளிர் நலனைக் கருத்தில்கொண்டு கூடுதல் பேருந்துகளை அதிகம் இயக்கினால் இப்பகுதி மக்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

22) புளியந்தோப்பு பகுதியில் உள்ள இறைச்சிக்கூடமான ஆடுதொட்டி மற்றும் மாடுதொட்டியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.*

***திரு. ஜோசப் சாமுவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது அன்புகலந்த வணக்கங்கள். பகுத்தறிவு பகலவன் வெண்தாடி வேந்தன் பெரியார், காஞ்சி தந்த பேரறிஞர் அண்ணாவை வணங்கி, திகட்டாத பைந்தமிழ், திராவிடச் சூரியன், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் உறங்கும் திசை நோக்கி வணங்கி, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, உடன்பிறப்புகளின் உரிமைக்குரலாகப் போராடு, உடன் இருப்பேன் நான் என்று முத்தமிழால் பற்ற வைத்த தீபமாய் தமிழகத்தின் பத்து ஆண்டுக்கால இருளைப் போக்க பாடுபட்டுக்கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்கள். சட்டமன்ற வரலாற்றில் பொன்விழா கண்ட மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர், அவை முன்னவர் அவர்களுக்கு எனது அன்புகலந்த வணக்கம்.

தேர்தல் நேரத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் பிரச்சாரம்கூட செய்ய முடியாமல் நான் இருந்தபோது, வாழையடிவாழைதான் ஏழைக்கும் பயன் அளிக்கும் என்பதற்கேற்ப அம்பத்தூர் தொகுதி முழுக்க தேர்தல் பிரச்சாரம் செய்யும்போது, மாண்புமிகு அண்ணன் உதயநிதி அவர்கள் எனக்குத் தெரிந்து மருத்துவமனையில் படுத்துக்கொண்டே ஜெயித்தவர்களில் இரண்டாவதாக இருப்பவர் ஜோசப் சாமுவேல் மட்டுமே என்றும், இவர் குடும்பத்திற்காவது நீங்கள் வாக்களியுங்கள் என்றும், அம்பத்தூர் தொகுதியில் நானே வேட்பாளர் என்றும், வாக்களியுங்கள் என்றும், ஊக்கத்தோடும், பரிவோடும், உரிமையோடும் பிரச்சாரம் செய்து, என்னை சுமார் 42,146 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த மரியாதைக்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் கழக இளைஞர் அணிச் செயலாளர், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினரான அண்ணன் உதயநிதி அவர்களுக்கு என் சார்பிலும், என் குடும்பத்தார் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். தளபதியாரின் கண்ணசைவில் காரியமாற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர், உறங்காது தினமும் உழைத்துக்கொண்டிருக்கும் அன்பு அண்ணன் பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும் என் இதயம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அறுவை சிகிச்சை செய்து கால் நடக்கக்கூட முடியாத நிலையிலும் கால்கடுக்க அம்பத்தூர்

வீதிகளில் சென்று, கழக வெற்றிக்கு கால்கோள் இட்டவரும், கழகப் பொருளாளரும், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. T.R. பாலு அவர்களுக்கும் இந்தத் தருணத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு கொறடா அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், என்னுடன் சேர்ந்து பயணிக்கும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றிகலந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என் வெற்றிக்காக அயராது உழைத்த தோழமைக் கட்சிகளின் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், திராவிட முன்னேற்றக் கழக பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்களுக்கும், பல்வேறு அணிகளின் நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், கழகத் தலைவர்மீதும், என்மீதும் நம்பிக்கை வைத்து வாக்களித்த அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் மற்றும் எனது தாயார், மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நேரத்தில் என் நினைவில் வாழும் என் தந்தை ஜோசப் அவர்களை நினைவுகூர்ந்து வணங்குகிறேன். என் நினைவில் வாழும் கழக மூத்த முன்னோடி மிசா ப. ரவைக்கண்ணன், முன்னாள் நகரச் செயலாளர் அவர்களையும், அவர்களது கழக உழைப்பையும் இத்தருணத்தில் நான் நினைவுகூர்ந்து வணங்குகின்றேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கன்னித் தமிழ் ஈன்றெடுத்த புதல்வன், முத்தமிழறிஞர், அரசியல் ஆசான் கலைஞர் போன்றோர் வீற்றிருந்த அவையில், மக்களின் முதல்வராய், தளபதியார் தலைமையேற்று நடத்துகின்ற மாபெரும் அவையில் எனது முதல் பேச்சினைப் பதிவிடுவதை என் வாழ்நாளில் பெரும்பேறாகக் கருதுகின்றேன்.

நான் ஒரு சாதாரண எளிய குடும்பத்தில் எந்த அரசியல் பின்புலமும் இல்லாத தந்தை ஜோசப், தாய் மேரி அவர்களின் மகனாகப் பிறந்து வளர்ந்து, தன்னலமில்லா சேவை மனப்பான்மையோடு மக்கள் பணியாற்றும் தளபதி என்ற கழகப் போர்வாளால் கவரப்பட்டு, அம்பத்தூர் பகுதியில் வட்ட இளைஞர் அணிச் செயலாளர், அம்பத்தூர் நகரப் பொருளாளர், அம்பத்தூர் நகர துணைச் செயலாளர், அம்பத்தூர் நகரச் செயலாளர், சென்னை மாநகராட்சியுடன் இணைந்தபின்பு, பகுதிக் கழகச் செயலாளர், அம்பத்தூர் நகரமன்றத் துணைத் தலைவர், 3 முறை நகரமன்ற உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் சென்னை மாநகராட்சியின் 7–வது மண்டலக் குழு தலைவராகவும் இருந்தேன். அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட ஒரு சில நாட்களிலேயே கொரோனாவால் பாதிக்கப்பட்டேன். பாதிக்கப்பட்ட என்னைப் பற்றி, மாவட்ட செயலாளர், கழக நிர்வாகியிடம் விசாரித்து, வெற்றி பெற வேண்டிய அனைத்துத் தரப்பிலும் உறுதுணையாக இருந்து சட்டப் பேரவைக்கு உறுப்பினராகவும் என்னை வெற்றி பெறச் செய்து, இம்மாபெரும் அவையில் என்னை அமரச் செய்து அழகு பார்க்கும் தாயுள்ளம் கொண்ட கழகத் தலைவர், என் குடும்பத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது சார்பாகவும், என் குடும்பத்தின் சார்பாகவும் பணிவான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மக்களின் நினைவில் மறையாமல் நிற்பவர்கள் எக்காலமும் வாழ்ந்திருப்பார்கள், எப்போதும் சாவதில்லை என்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் விட்டுச்சென்ற பணியினைத் தொடர்ந்து செவ்வனே செய்துகொண்டிருக்கும் மாண்புமிகு நம் தமிழக முதல்வர் வெறும் வாய்ச்சொல் வீரர் அல்ல, “சொல்வதைத்தான் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்” என்று தமிழகம் முழுவதும் சூறாவளிப் பயணம் மேற்கொண்டு, மக்கள் மனதை வென்று காட்டியவர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களையும், இட ஒதுக்கீட்டையும் வழங்கி, வாழ்வில் நல்ல நிலையை அடையச் செய்தவர்களில் இச்சட்டமன்றம் முத்தமிழறிஞர் கலைஞரைவிட யாரையும் கண்டிருக்க முடியாது.

2021 செப்டம்பர் 8] [திரு. ஜோசப் சாமுவேல்]

இப்படி தமிழக மக்களின் வாழ்க்கையை உயர்த்த, தன் ஆயுள் முழுக்க இருந்து இட ஒதுக்கீட்டில் வென்று காட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். இறந்தும் இட ஒதுக்கீட்டில் நீதிமன்றம் வரை சென்று, வென்று காட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

1989–ல் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவிகித இட ஒதுக்கீடும், தனித் துறையும் கழக அரசால்தான் முதன்முதலில் ஏற்படுத்தப்பட்டது. முதல்வராய் பொறுப்பேற்ற 100 நாட்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் வன்னியருக்கு 10.5 விழுக்காடும், 1987–ல் நடைபெற்ற இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த 21 பேரின் நினைவாக விழுப்புரத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்றும், செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன், ஆங்கிலேய குடியை உடைத்த வ.உ.சி. அவர்களின் 150–வது பிறந்தநாளையொட்டி 14 அறிவிப்புகளை மாண்புமிகு நமது முதல்வர் தளபதி அவர்கள் அறிவித்திருப்பது வரலாற்றில் ஒரு மைல் கல்.

பிற்பகல் 12–50

மேலும், சமூக மற்றும் கல்விரீதியாக பின்தங்கிய பிரிவினரின் முன்னேற்றத்தைப் பாதுகாக்கவும், தமிழ்நாட்டில் வழங்கப்படும் 69 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தொடர்ந்து பாதுகாக்கவும், தற்போதைய வருமான வரம்பினை 8 இலட்சம் ரூபாயிலிருந்து, 25 இலட்சம் ரூபாயாக உயர்த்தவும் ஒன்றிய அரசை வலியுறுத்த தளபதியாரின் தலைமையிலான அரசு உறுதிபூண்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மேம்பாட்டிற்காக 7,43,853 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையும், 3,77,286 மாணவர்களுக்கு இலவச மிதிவண்டிகளும் வழங்கிய நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய முயற்சியால் உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் வழக்குகள் தொடுத்து, இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கு அகில இந்திய அளவில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கும் 27 சதவிகித இட ஒதுக்கீட்டை அமல்படுத்த வலியுறுத்தியதால் நடப்புக் கல்வியாண்டிலே இதனைச் செயல்படுத்திட ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் சமூகநீதி பாதுகாக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், ஆதி திராவிடர்

நலனில் என்றென்றும் உறுதுணையாக இருக்கும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெரியார், அம்பேத்கரின் முன்னோடி தமிழ்த் தேசியத் தந்தை அயோத்திதாசப் பண்டிதரின் 175–வது ஆண்டு விழாவின் நினைவாக வட சென்னை பகுதியில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பது வரலாற்றில் ஒரு மணிமகுடம்.

அரசுப் பணிகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான நிரப்பப்படாத காலியிடங்களை சிறப்பு நியமனம்மூலம் நிரப்பவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி முன்னேற்றத்திற்கு 1,884.70 கோடி ரூபாயும், தாட்கோ வாயிலாக ஆதி திராவிடர்களை தொழில் முனைவோர்களாக ஊக்கப்படுத்த ஒட்டுமொத்த நிதியாக 4,142.33 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்து, ஆதி திராவிடர் நலனில் கவனம் செலுத்தும் அரசாக மாண்புமிகு முதல்வர் தளபதியார் அவர்களின் தலைமையிலான அரசு விளங்குகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 16 சதவிகிதமாக இருந்த இட ஒதுக்கீட்டை 18 சதவிகிதமாக உயர்த்தியது; 2007–ல் அருந்ததியின மக்களுக்காக கல்வி, வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு வழங்கி ஆணையிட்டது கழக அரசுதான்.

1974–ல் அண்ணா சாலையில் உள்ள அரசினர் மகளிர் கல்லூரிக்கு ‘காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி’ என பெயர் சூட்டியதும், 1999–ல் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்பட்டதும் கழக அரசால்தான். உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை நடத்தும் சிறப்பு அதிகாரியாக திரு. அலாவுதீன், IAS.,–ஐ நியமித்தது என சமூகத்தில் அனைவரும் உயர்ந்த நிலையை அடைய கழக அரசு செய்த பணிகள் ஏராளம். 2021–2022 ஆம் ஆண்டில் சிறுபான்மையினருக்காக ரூ. 4.25 இலட்சம், சிறுபான்மையின பள்ளிகள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு 114.65 கோடி ரூபாய் நிதியைப் பகிர்ந்தளிக்கவும், 2021–2022 ஆம் ஆண்டுகளில் இஸ்லாமியப் பெண்கள் உதவிச் சங்கங்களுக்கு 4.15 கோடி ரூபாயும், கிறித்தவ பெண்கள் உதவிச் சங்கங்களுக்கு 2.97 கோடி ரூபாய் நிதியும் வழங்கப்படுமென அறிவித்து மாண்புமிகு தளபதியார் சிறுபான்மையினர் நலன் காக்க சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். மேலும், மசூதி மற்றும் தேவாலயங்களைப் புதுப்பிக்க 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சிறுபான்மையினர் 7,000 பயனாளிகளுக்கு 50 கோடி ரூபாய் மேம்பாட்டு கடனுதவியாக வழங்கப்படும் என்று, மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களின் தலைமை கொண்ட அரசு

அறிவித்திருப்பது சிறுபான்மையினரின் வாழ்வை மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

கல்வி,பொருளாதார மேம்பாட்டு வசதிகளை சிறுபான்மையினர் எளிதில் பெறவும், வக்ஃப் வாரியத்தின் நலன்களைப் பாதுகாக்கவும் மாண்புமிகு முதல்வர் தளபதியார் அவர்களின் தலைமையிலான அரசு கொள்கை முடிவுகளைக் கொண்டுள்ளது. மேலும், இந்த நேரத்தில் மக்களின் கோரிக்கைகளாக அன்புள்ளத்தோடு ஏற்று, அரவணைக்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடம், சிறுபான்மையினரான கிறித்தவர்களும், இஸ்லாமியர்களும் சந்திக்கும் மிக முக்கியமான இரண்டு பிரச்சினைகளைத் தீர்த்திட வேண்டுமாய் கோரிக்கையாக முன்வைக்கிறேன்.

தமிழகத்திலுள்ள சிறுபான்மைப் பிரிவினராய் விளங்கும் கிறித்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் அவர்கள் இறந்தபிறகு அடக்கம் செய்ய போதிய இடமில்லாததால் மிகவும் அவதிப்படுகின்றார்கள். இறுதிக் காலத்தின்போது அவர்களை அடக்கம் செய்ய இடம் ஒதுக்கீடு வழங்கிட தாயுள்ளம் கொண்ட தளபதி அவர்கள் வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அதே கோரிக்கையான மதம் மாறிய தலித் கிறித்தவர்களை எஸ்.சி. பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற தீர்மானத்தை கூட்டத்தில் நிறைவேற்றி, தீர்மானத்தை ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை செய்திடுமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்"

எனும் வள்ளுவனின் வாய்மொழிக்கேற்ப தமிழக மக்களின் மனதில் குறுகிய காலத்திலே இமாலய இடம் பிடித்து, ஏழையெளிய மக்களின் வீடுகளுக்கே சென்று, குறைகளைக் களைந்து, நம் அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்துகொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணிச் செயலாளரும், சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான அண்ணன் உதயநிதி அவர்களின் பணி தமிழகத்திற்கே முன்மாதிரியாக இருக்கிறது. இப்பேர்ப்பட்டவர் நமக்குக் கிடைத்திருப்பது தமிழகத்திற்குக் கிடைத்த தவப்பயன். குறளோவியம் கண்டு குறள்

வழியே நடப்பதால்தான் மக்கள் விரல் வழியில் வாக்களித்து அரியணை ஏற்றியுள்ளனர். அண்டை மாநிலங்கள்கூட, நம் தளபதியாரின் சிறந்த ஆட்சித்திறத்தை எடுத்துரைக்கும் அளவிற்கு 100 நாட்களில் நூற்றாண்டு சாதனைகள். அண்டை மாநில அமைச்சர்களும் புகழ்ந்து பேசும் சிறந்த ஆட்சி; தமிழகமே இதற்கு சாட்சி.

பிற்பகல் 12–55

சென்னையை ஒட்டியுள்ளதும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொகுதிக்கு அருகில் இருக்கிற, ஒட்டிப் பிறந்த இரட்டை குழந்தையாய் உள்ளதுமான அம்பத்தூர் தொகுதி, கடந்த பத்தாண்டு கால ஆட்சியில் பாழ்பட்டுக் கிடக்கின்றது. அந்தத் தொகுதியைச் சிறப்பான ஒரு தொகுதியாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாற்றிட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைக்க விரும்புகின்றேன்.

'முடியாதவர்கள்தான் அடுத்தவரைப்பற்றி விமர்சிப்பார்; முடியும் என நினைப்பார் அடுத்ததையும் நோக்கி பயணிப்பார்' என்பதற்கேற்ப, சிறந்ததொரு ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார் நம் தளபதி அவர்கள். 'அளித்த வாக்குறுதியை யார் மறந்தாலும், நான் மறக்கவில்லை' என்று கூறும் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கருத்தை நல்லோர்கள் ஏற்பர்; நாட்டின் நலன் கருதார் எதிர்த்தாலும் முடிவில் தோற்பர்.

இன்று மனை தேடி வந்தது மருத்துவம், மனையாளுக்கு மாதம் ரூ.1,000/–, மகளிருக்கு இலவசப் பயணம், மனங்கவர்ந்த ஆலயமீட்பு, அன்னைத் தமிழில் ஆலயத்தில் பூஜை, ஆதவனுக்கு வேறு என்ன ஆசை! எங்கள் தளபதியாரே! முன்னணி முதல்வர்களுள் முதல்வர் நீங்களே! மு.க.–வின் புதல்வர் நீங்கள். பத்தாண்டு இருளை விரட்டும் பகலவனாய் எங்கள் முதல்வர் நீங்கள். செப்டம்பர் 17 பெரியார் பிறந்த நாளை சமூக நீதி நாளாக அறிவித்து, நூறு நாட்களைத் தாண்டிச் செல்லும் இந்த வெற்றிப் பயணம் நூறாண்டுகளை நோக்கி நீளும். தலைவா, நீங்கள் ஆள்வீர் நூறாண்டு; வெல்வீர் மக்கள் மனதை; வாழ்க எங்கள் தலைவரின் இலட்சியப் பயணம் என்று கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

சென்னை–திருத்தணி–ரேணிகுண்டா நெடுஞ்சாலைக்கு முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரைச் சூட்டிடுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒருசில கோரிக்கைகளை முன் வைக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *முக்கிய கோரிக்கைகளை மட்டும் சொல்லுங்கள். மீதி கோரிக்கைகளைக் கொடுத்தால், நீங்கள் அவற்றைப் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளப்படும்.*

திரு. ஜோசப் சாமுவேல்: *இரண்டு நிமிடங்களில் சொல்லி முடித்துவிடுகிறேன். முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 9–4–2000 அன்று துவக்கப்பட்ட உழவர் சந்தை மிகவும் சிதிலமடைந்துள்ளது. இந்த உழவர் சந்தையை நவீன சந்தையாக மாற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு அருகிலுள்ள அண்ணா நகர் மற்றும் விருகம்பாக்கம் தொகுதிகளில் உள்ள திருமங்கலம் முதல் கோயம்பேடு வரை இயங்குகின்ற மெட்ரோ இரயில் போக்குவரத்தை சென்னை பெருநகர மாநகராட்சி பகுதிக்குட்பட்ட அம்பத்தூர் பகுதிக்கு விரிவுபடுத்தித் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்ட 1,167 ஏக்கர் பரப்பளவு கொண்ட அம்பத்தூர் சிட்கோ தொழிற்பேட்டைக்கு அன்றாடம் சுமார் ஒரு இலட்சம் நபர்களுக்கு மேல் வந்து செல்கின்ற நிலை இருப்பதால், அனைத்து வசதிகளுடன்கூடிய உட்கட்டமைப்பை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

சென்னை பெருநகர மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அம்பத்தூர் தொகுதியில் உள்ள அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகளைச் சீரமைத்து படகு சவாரி வசதியைச் செய்து தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பாடி முதல் அம்பத்தூர் வரை உள்ள CTH *நெடுஞ்சாலையை விரிவுபடுத்தி, மக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் பொது அரசு மருத்துவமனை அமைக்கவும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கவும் மற்றும் மாணவர்களுக்கு அரசு மேல்நிலைப் பள்ளி அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

CTH சாலையில், மிக முக்கியமான குறுகலான சாலைப் பகுதியான T.I. cycles நிறுவனத்தின் அருகிலுள்ள இரயில்வே மேம்பாலத்தை மேம்படுத்தி, விரிவுபடுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகளை எல்லாம் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறோம். இன்னும் ஆறு உறுப்பினர்கள் பேசி, மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். எனவே, நன்றி கூறி, உரையை முடித்துவிடுங்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட கொரட்டூர் 83 மற்றும் 84 ஆகிய வார்டுகளில் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. அப்பிரச்சினையை விரைவில் தீர்க்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், அம்பத்தூர் பகுதி சென்னை பெருநகர மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு பத்தாண்டுகளுக்கு மேலாகிறது. இந்த மாநகராட்சியிலுள்ள மண்டலத்தில் வசூலிக்கப்படும் சொத்து வரி மற்ற மண்டலங்களைவிட பல மடங்கு உயர்வாக உள்ளது. இதனால் இந்தப் பகுதி மக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே, சென்னை பெருநகர மாநகராட்சியிலுள்ள மற்ற மண்டலங்களில் வசூலிக்கப்படும் சொத்து வரி போல, சீரான வரி வசூல் செய்து, மக்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். உங்கள் தொகுதிக் கோரிக்கைகள் பதிவு செய்யப்படும்.

திரு. ஜோசப் சாமுவேல்: நிறைவாக, நான் சிறுபான்மையினர் பிரச்சினையைப் பேசிக் கொண்டிருப்பதால், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வேதாகமம் புத்தகம், 1 சாமுவேல்

2021 செப்டம்பர் 8] [திரு. ஜோசப் சாமுவேல்]

26:25–ல் குறிப்பிட்டுள்ள வார்த்தைகளின்படி, ஒரு வசனம். 'நீ ஆசிர்வதிக்கப்பட்டவன்; நீ பெரிய காரியங்களைச் செய்வாய்; மேன்மேலும் பலப்படுவாய்' என்ற அந்த வார்த்தைகளுக்கேற்ப, மாண்புமிகு முதல்வர் அவர்கள், நிச்சயமாக ஆசிர்வதிக்கப்படுவார், பலப்படுவார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள். 10 நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

***திரு. துரை. சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குரலற்றவர்களின் குரலாக, ஒடுக்கப்பட்ட மக்களின் தன்னிகரற்ற தலைவராக விளங்கிய புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களையும், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களையும், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வழிவந்த காங்கிரஸ்காரன் என்ற கண்ணியத்தோடு வணங்கி, என் தாய், தந்தையரையும் வணங்குகிறேன். எனக்கு இந்த வாய்ப்பினை வழங்கிய தியாகத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும், எனது பெயரை பரிந்துரை செய்ததோடுமட்டுமல்லாமல், என்னோடு இருந்து வெற்றிக்கான வழிவகைகளைச் செய்து எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்த எங்களின் தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயல் தலைவர், திருவள்ளூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கே. ஜெயக்குமார் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்கு வாய்ப்பு வழங்கிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திரு. கே.எஸ். அழகிரி அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகள் அனைவருக்கும், ஒன்றிய, பேரூராட்சிக் கழகச் செயலாளர்களுக்கும், எங்களுடைய காங்கிரஸ் பேரியக்கத் தோழர்களுக்கும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள், கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள், கிறித்தவ மற்றும் இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் பழங்குடியின மக்கள், வழக்கறிஞர் பெருமக்கள், உறவினர்கள், என்

மனைவி மற்றும் பிள்ளைகள், அதைவிட மேலாக பொன்னேரி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை அவர்களின் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்திலே தளபதியாரின் எழுச்சி என்பது ஒரு வரலாற்று நிர்ப்பந்தம். என்ன நிர்ப்பந்தம் என்று நீங்கள் கேட்கலாம். கொரோனா என்ற ஒரு கொடிய தொற்று முதல் சுற்றில் பலபேரை பலிவாங்கிவிட்டது. அதற்குக் காரணம், அனைவர் மனதிலும் உள்ள ஒரு பயம். நம்மை யார் காப்பாற்றுவார்கள் என்ற ஓர் அச்சம். அந்த நேரத்தில் இருந்த ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டது. இன்னொரு ஆட்சி வீட்டிலேயே பதுங்கிவிட்டது. இரண்டாவது அலையில் யார் நம்மைக் காப்பாற்றுவார்கள் என்ற ஒரு கலக்கத்தில் மக்கள் இருந்தபோது தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். உள்ளபடியே சொல்கிறேன், உளவியல் ரீதியாக ஒரு மனிதன் தைரியமாக இருந்தால் அவனுக்கு எதிர்ப்பு சக்தி தானாக வந்துவிடும் என்பது மருத்துவ உலகம் ஒத்துக்கொண்ட ஓர் உண்மை. அந்த தைரியத்தைக் கொடுத்து இன்றையதினம் இந்த நோயை விரட்டியடிக்கின்ற ஒரு செயலைத்தான் தலைவர் தளபதி அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவுடைமை சிந்தனையாளர் Karl Marx அவர்களுக்குப் பிடித்த ஒரு திருக்குறளை நான் சொல்கிறேன்.

> 'கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
> தூக்கம் கடிந்து செயல்.'

தனது நாட்டின் நிலைமையை முழுமையாக அறிந்து அதில் காணும் நிறைகுறைகளை துல்லியமாகக் கணக்கிட்டு, குறைகளைக் களையும் மெய்யறிவு பெற்ற தலைவராக தன் இனம் காத்து, மொழி காத்து, பண்பாடு காத்து அவற்றிற்கு எந்தவித தீங்கும் ஏற்படாமல் யார் இருக்கின்றாரோ அவரே ஒரு சிறந்த ஆட்சியாளர். அந்த வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்பேர்ப்பட்ட ஒரு திருக்குறளுக்குச் சொந்தக்காரராக இன்று நமது அவையிலே திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்களுடைய பாராட்டுகளும், நன்றிகளும். எனக்கு இந்த மானியக் கோரிக்கையிலே பேசும் வாய்ப்பை வழங்கிய

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றிகள். பொதுவாக சில மாறுபட்ட கருத்துகளை, சில சட்டங்களை இந்த நூற்றாண்டுப் பேரவையில் நாம் இயற்றியாக வேண்டும். மாணவர்கள் படிக்கின்ற பள்ளிகளை சாதி பெயரில் நடத்துவது அவ்வளவு சரியாக இல்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், தமிழகத்திலுள்ள ஆதி திராவிடர் நலப் பள்ளிகளை வேறு பெயருக்கு மாற்ற வேண்டும். அந்த மக்களுக்காக உழைத்தவர்களுக்கு, அந்த மக்களின் வாழ்வில் விளக்கேற்றியவர்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில், அவர்கள் பெயரை அந்தப் பள்ளிகளுக்கு வைத்து, தற்போதுள்ள பள்ளியின் பெயர்களை மாற்ற வேண்டும். காரணம், பள்ளிக்குச் செல்லும்போதே, ஆதி திராவிடர் என்று கூறும் வார்த்தைகள் ஒரு சாதியைக் குறிக்கிறது. பலதரப்பட்ட மாணவர்கள் படிக்கின்ற ஒரு பள்ளி அது. ஆதி திராவிடர் என்ற பெயரை மாற்றி உங்கள் பாணியிலேயே ஏதாவது ஒரு பெயரை வைத்துக்கொள்ளலாம் என்ற ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

இன்னொன்றையும் பாராட்டியாக வேண்டும். அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை இன்று, நேற்று எழுப்பப்பட்டது அல்ல. அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டத்தைக் கொண்டு வந்து, தமிழக மக்களின் இதயங்களில் இடம் பிடித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1927–ல் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மகத் மாநாட்டில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் இயற்ற வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனவே, நீங்கள் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் இலட்சியத்தை நிறைவேற்றியுள்ளீர்கள். அதற்காக உங்களுக்கு நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். வைக்கம் கோயிலுக்கு தலித்துகளும் செல்வதற்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதோடு அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று குரல் கொடுத்த தந்தை

பெரியாரின் கனவை நீங்கள் நிறைவேற்றியுள்ளீர்கள். உங்களுக்கு நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதோடு, கோயில்களின் அறங்காவலர்களையும் உயர் சாதியினர் அல்லாதவர்களை நியமிக்க பல முயற்சிகள் மேற்கொண்ட அன்றைய சென்னை மாகாணத்தின் முதல்வரும், நீதிக் கட்சியின் கடைசித் தலைவருமான ஐயா பி.டி. ராஜன் அவர்களின் முயற்சிக்கு இன்றுதான் பலன் கிடைத்துள்ளது. அதற்கும் நன்றிகள் மற்றும் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயில் கருவறையில் கடைப்பிடிக்கப்படும் தீண்டாமையை அகற்ற அனைத்து சாதியினரும் அர்ச்சகராக தன் வாழ்நாள் முழுவதும் போராடிய தந்தை பெரியார் இறுதியாக அது நிறைவேறும் முன்பே நம்மைவிட்டு மறைந்தார். இந்தச் சட்டத்தின் அடித்தளம் இன்று நேற்று போடப்பட்டதல்ல; முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்களால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 70–களில் சட்ட மசோதா இயற்றப்பட்டு, பிறகு அச்சட்டத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பல மனுக்களால் அச்சட்டம் முடங்கியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கில் 2015–ல் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் திரு. ரஞ்சன் கோகோய் மற்றும் திரு. என்.வி. ரமணா ஆகியோர் அடங்கிய அமர்வு, தகுந்த பயிற்சியும், தேர்ச்சியும் இருக்குமானால், இந்துவாகப் பிறந்த யார் வேண்டுமானாலும் அர்ச்சகர் ஆகலாம் என்ற தீர்ப்பை வழங்கியது. அதன் பிறகு, இப்போதுதான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பட்டறையில் பட்டை தீட்டப்பட்ட, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழிவந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு ஒரு விடியலைத் தந்து இதன்மூலம் சமூக நீதியை நிலைநாட்டியுள்ளார்கள். இதற்கு நன்றிகள் மற்றும் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பொற்கால ஆட்சி தந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தன் அமைச்சர்களிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் சொன்ன அறிவுரைகள் என்னவென்றால், “பிரச்சினைகளை

எதிர்கொள்ளுங்கள், அவை எவ்வளவு சிறியவையாக இருந்தாலும் பரவாயில்லை, அவைகளைத் தீர்ப்பதற்கான வழிகளைத் தேடுங்கள், நீங்கள் ஏதாவது செய்தால்தான் மக்கள் திருப்தி அடைவார்கள்" என்பதாகும். இந்தக் கருத்துக்கு உயிர் கொடுப்பது போல் உள்ளது உங்கள் ஆட்சியின் செயல்பாடுகள். ஆட்சிக்கு வந்ததுமே ஓர் உத்தரவு போட்டீர்கள்; அது, மக்களின் புகார்களுக்கு உடனடித் தீர்வு காண தனி அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, அதற்கு ஓர் உயர் அதிகாரி நியமிக்கப்பட்டு, 30 நாட்களில் மனுக்களைப் பெற்று, 100 நாட்களில் அதற்குத் தீர்வு காண வேண்டும் என்பதாகும். மக்கள் நலனில் அக்கறை கொண்ட கர்ம வீரர் காமராஜரை நாங்கள் உங்களிடத்தில் காண்கிறோம். அதற்கு நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்றபோது கொரோனா பரவல் காரணமாக ஊரடங்கைப் பிறப்பிக்க வேண்டிய கட்டாய சூழல், அரசின் கஜானா பூஜ்யம், கடன் வாங்கித்தான் அரசை நடத்தக்கூடிய ஒரு சூழலில் மக்களின் வாழ்வாதாரம் பற்றி யோசித்து, ஒரு குடும்பத்திற்கு ரூ.4,000/– மற்றும் 14 வகைப் பொருட்கள் வழங்கப்படும் என்று அறிவித்தீர்களே! ஒட்டுமொத்த தமிழகமும் உங்களைக் கைகூப்பிப் பார்த்தது. அப்போது இந்தச் செயல் மிகச் சரியான முடிவு என்று நோபல் பரிசு பெற்ற நிபுணர் கொல்கத்தாவைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் அபிஜித் பானர்ஜி சொன்னார்கள். நாடே முடங்கிக் கிடக்கும் சூழலில் மக்களிடம் பணப் புழக்கம் இருக்க வேண்டும் என்று யோசித்தன்மூலம் நீங்கள் ஓர் ஆளுமை மிக்க தலைவராக நிரூபித்துக் காட்டியுள்ளீர்கள். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் ஒரு வெற்றிடம் இருக்கிறது; தமிழகத்தில் சிறந்த ஆளுமை இல்லை என்று சொன்னவர்களைக் காணவில்லை. அதற்கு எந்தப் பதிலையும் அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறவில்லை. அவர்கள் சொன்ன அந்த வெற்றிடத்தை நிரந்தர வெற்றியின் இடமாக ஆக்கிக் கொண்டீர்கள். ஆகவே, உழைப்பால் உயர்ந்தவர் என்ற ஒரு பாடத் திட்டம் பிற்காலத்தில் பேசப்படுமென்றால், நம்முடைய தலைமுறை படிக்குமென்றால், உழைப்பால் உயர்ந்தவர் தளபதி அவர்கள் என்றுதான் படிப்பார்கள் என்பதைக் கூறிக்கொண்டு, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகள் சிலவற்றை உங்கள்முன் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொன் ஏர் பூட்டி விவசாயம் பார்த்த செழிப்பான தொகுதிதான் பொன்னேரி தொகுதி. கடந்த 4 முறை வெற்றியின் விளிம்பிலே இருந்துகொண்டு தோல்வியைத் தழுவிய நமது கூட்டணி இந்த முறை வெற்றிக்கு வித்திட்டிருக்கிறது. காரணம், விவசாயப் பெருங்குடி மக்கள், மீனவப் பெருமக்கள், நெசவாளர்கள், சிறுபான்மையின மக்கள், பழங்குடியின மக்கள் அனைவரும் இந்த முறை அந்தத் தொகுதிக்கு வெற்றிவாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இதில் என்ன தெரிகிறதென்றால், தமிழகத்திலுள்ள அனைத்துத் தரப்பட்ட மக்களும் தளபதி அவர்கள் ஆட்சிக்கு வர வேண்டுமென்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு சான்றுதான் இது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகளில் முக்கிய கோரிக்கைகளைச் சொல்லிவிட்டு, மீதமுள்ள கோரிக்கைகளைக் கொடுத்தால், அவற்றை நீங்கள் படித்ததாகக் கருதி, பதிவு செய்துகொள்ளப்படும்.*

திரு. துரை. சந்திரசேகர்: *அதானி துறைமுக விரிவாக்கப் பணியானது 600 ஏக்கரில் நடைபெறவிருக்கிறது. தளபதி அவர்களின் இரண்டாவது தேர்தல் அறிக்கையில், அந்தத் துறைமுக விரிவாக்கப் பணி நிறுத்தப்படும் என்று சொன்னார்கள். காரணம், அந்த விரிவாக்கப் பணி வந்தால் மீனவர்களின் வாழ்க்கை பாதிக்கப்படும். அதேபோல கடற்கரை இருக்கின்ற இடங்களில் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு கொடுப்பதாகக் கூறி மீனவர்களை வஞ்சித்திருக்கிறார்கள். அதனால், அந்தப் பகுதியில் மீன்பிடி துறைமுகம் ஒன்றை அமைத்திட வேண்டும்.*

மெட்ரோ இரயிலானது மாதவரத்திலும், விம்கோ நகரிலும் வந்திருக்கிறது. அங்கிருந்து மீஞ்சூர் வரை இயக்க வேண்டுமென்பது என் கனிவான வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகப் பழமை வாய்ந்த பழவேற்காடு ஏரியில் ஒரு சுற்றுலாத் தலத்தை அமைக்க வேண்டும்; அங்கு படகுச் சவாரியை சட்டப்பூர்வமாக ஆக்க வேண்டும். அப்போதுதான் உயிர்ப் பலியைத் தடுக்க முடியும். அதேபோல, L & T *நிறுவனம் அங்கே உள்ள நிலங்களை எடுத்துக்கொண்டு, அந்த மீனவர்களுக்கு வேலைவாய்ப்பை*

வழங்குவதாக அறிவித்து அவர்களை வஞ்சிக்கிறது. அதற்கு ஒரு முடிவு காண வேண்டும்.

அதைவிட முக்கியமாக, நாம் சமீப காலங்களில் பார்க்கிறோம். பெண்கள், பெண் குழந்தைகளுக்கெதிரான பாலியல் வன்கொடுமைகள் இந்தியா முழுவதும் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தவகையிலே, தமிழகத்தில் அது நடைபெறாதவண்ணம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இருந்தாலுங்கூட, அதற்கெதிரான சட்டங்களை இயற்றி அந்தக் குற்றங்கள் நடைபெறாத வகையில் அதற்குரிய வழிமுறைகளைக் காண வேண்டுமென்பது என்னுடைய கனிவான வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மீதமுள்ள கோரிக்கைகளை நீங்கள் கொடுத்தால், அவற்றைப் படித்ததாகக் கருதி, பதிவு செய்துகொள்ளப்படும்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமராஜர் பிறந்த தினத்தை கல்வி வளர்ச்சி நாளாக முத்தமிழறிஞர் அவர்கள் அறிவித்தார்கள். அதேபோல, தலைவர் ராஜிவ் காந்தி அவர்கள் பெயரை பொது மருத்துவமனைக்கு வைத்தார்கள். இதுபோன்ற பல தலைவர்களின் பெயர்களை வைத்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜுன் 3 ஆம் நாளன்று மத நல்லிணக்க நாளாக அறிவிக்க வேண்டுமென்று அன்போடு தெரிவித்துக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை அளித்த அனைவருக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகம் முழுவதும் புன்னகை, உள்ளம் முழுவதும் மகிழ்ச்சி, இல்லம் முழுவதும் உற்சாகம், இளைஞர்கள் மத்தியிலே எழுச்சி, விவசாயிகள் மத்தியிலே புதிய நம்பிக்கை, தொழிலாளர்கள் மத்தியிலே புத்துணர்ச்சி, மாணவர்கள் மத்தியிலே விடியல், தமிழறிஞர்கள் மத்தியிலே மறுமலர்ச்சி, சட்ட வல்லுநர்கள் மத்தியிலே புதிய உறுதி, பாட்டாளிகள் மத்தியிலே உத்வேகம், பெரும்பான்மை மக்கள் மத்தியிலே மலர்ச்சி, சிறுபான்மை மக்கள்

[முனைவர் த. இனிகோ இருதயராஜ்] [2021 செப்டம்பர் 8

மத்தியிலே பாதுகாப்பு உணர்வு, அனைத்து மக்கள் மத்தியிலே முழு திருப்தி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் விசுவாசிகள் மத்தியிலே ஆனந்தக் கண்ணீர், பேரறிஞர் அண்ணா அவர்கள்மீது பற்று கொண்டவர்கள் மத்தியிலே பெருமிதம், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் கொள்கையில் ஈர்க்கப்பட்டவர்கள் மத்தியிலே திருப்தி, வாக்களித்தவர்கள் மத்தியிலே மன நிறைவு, வாக்களிக்காதவர்கள் மத்தியிலே ஒருவிதமான குற்ற உணர்வு, வாக்கே இல்லாதவர்கள் மத்தியிலே பெரியதொரு ஏக்கம். இதுதான் இன்றைய தமிழ்நாடு. கொரோனா காலத்திலும் 125 நாட்களில் இப்படிப்பட்ட மகிழ்ச்சியான நிலையை உருவாக்கிய பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அண்ணன் தளபதி அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய அர்ப்பணிப்பு உணர்வுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

அதேபோல, சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினால் இவரைப்போல பணியாற்ற வேண்டுமென்று மக்கள் கருதுகிற அளவிற்கு பணியாற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அருமைச் சகோதரர் திரு. உதயநிதி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) சிறுபான்மையினர் மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், முதன்மைச் செயலாளர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த வாய்ப்பைத் தந்த என்னுடைய திருச்சி தொகுதி மக்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்குமோ, அப்போதெல்லாம் சிறுபான்மையினர் ஒருவித பாதுகாப்பு உணர்வோடு, மகிழ்ச்சியோடு, மனநிறைவோடு இருந்துள்ளனர் என்பது வரலாறு. எப்படியென்றால், சிறுபான்மையின மக்களுக்கு ஒரு பிரச்சினையென்று சொன்னால், அதனுடைய பின் விளைவுகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல்

2021 செப்டம்பர் 8] [முனைவர் த. இனிகோ இருதயராஜ்]

சிறுபான்மையின மக்களுடைய கண்ணீரைத் துடைக்கின்ற ஓர் இயக்கம் இந்தியாவிலே இருக்கின்றது என்று சொன்னால், அது திராவிட முன்னேற்றக் கழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு எத்தனையோ வரலாற்று நிகழ்வுகளை உதாரணமாக என்னால் சொல்ல முடியும் என்றாலும், ஒன்றிரண்டு நிகழ்வுகளை மட்டும் குறிப்பாகச் சொல்லிவிட்டு, சிறுபான்மை மக்களுக்குத் தேவையான சில கோரிக்கைகளை மட்டும் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மதமாற்றத் தடைச் சட்டத்தைத் திரும்பப் பெற்ற தீர்மானமாக இருந்தாலும், அன்னை தெரசா அவர்களுக்கு நூற்றாண்டு விழா எடுத்து மகிழ்ந்த தீர்மானமாக இருந்தாலும், அதுபோல திராவிட மொழி நூலினுடைய தந்தை எனப் போற்றப்படுகின்ற Robert Caldwell அவர்களுக்கு மணிமண்டபம் கட்டிய நிகழ்வாக இருந்தாலும், தமிழறிஞரும், இயேசு சபை துறவியுமான வீரமாமுனிவர் அவர்களுக்கு அரசு விழா எடுத்ததாக இருந்தாலும், போதகர் திரு. டி.ஜி.எஸ். தினகரன் அவர்களுக்கு சட்டப் பேரவையிலே இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி, அவர் வாழ்ந்த பகுதிக்கு டி.ஜி.எஸ். தினகரன் சாலை என்று பெயர் சூட்டி மகிழ்ந்த நிகழ்வாக இருந்தாலும், இப்படி எத்தனையோ வரலாற்றுச் சாதனைகளை நிகழ்த்திக் காட்டியவர் முன்னாள் முதல்வர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அதேபோல, இன்றைக்கு இயேசு சபை துறவியும், மலைவாழ் மக்களுடைய உரிமைப் போராளியுமான அருட்தந்தை ஸ்டேன்சாமி அவர்கள் கைது செய்யப்பட்டபோது, இந்தியாவிலேயே முதல் கண்டனக் குரலாக, அதுவும் தமிழகத்திலிருந்துதான் ஒலித்தது. யாருடைய குரல் என்று சொன்னால், அது எங்களுடைய தமிழக முதல்வர் அண்ணன் மாண்புமிகு தளபதி அவர்களுடைய கண்டனக் குரல்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடையது சாதாரண மரணம் அல்ல. இயற்கையான மரணம் என்றுகூட நான் சொல்ல மாட்டேன். அவருக்கு சரியான சிகிச்சைகூட மறுக்கப்பட்டது. ஒரு ஜாமீன் கொடுத்திருந்தால்கூட அவர் இன்று உயிரோடு இருந்திருப்பார். ஸ்டேன்சாமி அவர்கள் இறந்த பிறகு, அவருடைய மறைவுக்கு இரங்கல் செய்தி வெளியிட்டு, அவருடைய அஸ்தி, சென்னை லயோலா கல்லூரிக்கு வந்திருக்கிறது என்று சொன்னவுடனே நேரில் சென்று இறுதி மரியாதை செய்தது மட்டுமல்ல, சட்டமன்றத்திலேயே இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி, இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தி, தலைவர் கலைஞர்

அவர்களைப்போலவே சிறுபான்மையின மக்களைக் காத்து வருகின்றார் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள் என்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட வேறு சான்று இல்லை. ஆனால், அவருடைய மறைவிற்கு இரங்கலே தெரிவிக்காத கட்சிகள் இருக்கின்றன. அதில் ஒன்று, அ.தி.மு.க., இன்னொன்று பாரதிய ஜனதா கட்சி.

அதுமட்டுமல்ல, சிறுபான்மை மக்கள் எப்பொழுது வேண்டுமானாலும் சந்திக்கக்கூடிய தலைவராக, எங்களுடைய கோரிக்கைகளை காது கொடுத்துக் கேட்கக்கூடிய ஒரு தலைவராக, எங்கள் மாண்புமிகு முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள் இருக்கிறார்கள் என்பதைத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இன்றைக்குக்கூட, இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை இரத்து செய்கிற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை பேரவையிலே நிறைவேற்றிய மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் தளபதி அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–20

2000 ஆம் ஆண்டு, பரங்கிமலை என்ற பெயரில் ஒரு மலை இருந்தது. புனித தோமையார் வாழ்ந்த பகுதி என்பதால், அதனை புனித தோமையார் மலை என்று அழைக்க வேண்டுமென்று சொல்லி, நாங்கள் அன்றைக்கு முதல்வராக இருந்த மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களிடம் கோரிக்கை வைத்தோம். உடனே, புனித தோமையார் மலை என்று பெயர் மாற்றி அழைப்பதற்கு எங்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார். 2011 ஆம் ஆண்டு அந்த புனித தோமையார் மலையிலே நடைபெற்ற விழாவிலே மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அண்ணன் தளபதி அவர்களை நாங்கள் அழைத்துச் சென்று, விழாவிலே கலந்துகொண்டபோது, எங்களுடைய கோரிக்கைகளைக்கூட நாங்கள் வைக்கவில்லை. ஆனால், புனித தோமையார் மலையைச் சுற்றுலாத் தலமாக்கி, ரூ.50 இலட்சம் நிதியுதவி தந்தவர், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள். இவற்றையெல்லாம் நான் எதற்காக இந்த மாமன்றத்திலே சொல்கிறேன் என்றால், சிறுபான்மையின மக்களைக் காத்த தலைவர்களுக்கு நன்றி கூறுவதற்கு, சிறுபான்மை இனத்தைச் சார்ந்த ஒருவன் இங்கு வந்து நன்றி கூறினான்; இங்கு

வருவதற்கு இந்த மாபெரும் தலைவர் வழிவகை செய்தார் என்பது வரலாற்றில் பதிவாக வேண்டுமென்றுதான் இவற்றையெல்லாம் இந்தப் பேரவையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சிறுபான்மையினருக்கான கோரிக்கைகளை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கடைசியாகக் கையெழுத்திட்ட அரசாணையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே தமிழ்வழிக் கல்வி என்பது அரசு மற்றும் அரசு உதவிபெறுகின்ற பள்ளிகளில் மட்டும்தான் கற்பிக்கப்பட்டு வருகிறது. எங்கெல்லாம் அரசுப் பள்ளிகள் இல்லையோ, அங்கெல்லாம் அரசு உதவிபெறுகின்ற பள்ளிகள் கல்விச் சேவையை செய்து வருகின்றன. இப்படிப்பட்ட அரசு உதவிபெறுகின்ற பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வி முறையில் பணியாற்றுகின்ற ஆசிரியர் பணியிடங்களை அனுமதிப்பது இல்லை என்ற முடிவை 1991 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா அம்மையார் அவர்கள் எடுத்து, அரசினால் வழங்கப்பட்டு வந்த மானியத்தை நிறுத்தி, சுயநிதி கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால், தமிழ்நாட்டிலே, தமிழ்வழியில் படிக்கின்ற குழந்தைகள் கட்டணம் செலுத்தி கற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதில் அதிகமாகப் பாதிக்கப்பட்டது சிறுபான்மையினர் நடத்துகின்ற கல்வி நிறுவனங்கள்தான். ஆகவே, அரசு மானிய உதவியுடன் பணியிடங்களை அனுமதித்திட வேண்டுமென்ற கோரிக்கை பலமுறை தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகிறது.

2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நான் நடத்திய விழாவிலே கலந்துகொண்ட அன்றைய முதல்வரான முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களிடத்திலும், இன்றைக்கு முதல்வராக விளங்கிக் கொண்டிருக்கின்ற, அன்றைக்கு துணை முதல்வராக இருந்த அண்ணன் தளபதி அவர்களிடத்திலும் கோரிக்கை வைத்தோம். அந்த மேடையிலேயே அக்கோரிக்கையை நிறைவேற்றித் தர பாடுபடுவேன் என்று அவர்கள் உத்தரவாதம் கொடுத்தது மட்டுமல்ல, அதற்குத் தடையாக இருந்த தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்காற்றுச் சட்டம் 1973–ஐத் திருத்தி, சட்டப் பிரிவு 14AA–ஐ இரத்து செய்து, ஆளுநரின் அனுமதியோடு அரசின் மானியம் அனுமதிக்கப்படுகின்ற வகையிலே, Ordinance No. 1 of 2011, dated 28–2–2011 என்ற அவசர சட்டத்தைப் பிறப்பித்தார். அதனடிப்படையிலே 1991–1998 வரை 11,307 ஆசிரியர் பணியிடங்களுக்கும், 648 ஆசிரியரல்லாத

பணியிடங்களுக்கும் அனுமதி தந்தவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்த அரசாணையை வெளியிடுவதற்கு தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள் எடுத்த முயற்சிகள் ஏராளம், ஏராளம், ஏராளம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களும், அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், அமைச்சராக இருந்த அண்ணன் திரு. ஐ. பெரியசாமி அவர்களும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக இருந்த அண்ணன் திரு. தங்கம் தென்னரசு அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்களும், நானும் எவ்வளவு முயற்சிகளை எடுத்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அரசாணையை வெளியிடுவதற்கு அரசு அதிகாரிகள் கடைசிவரை ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால், மாண்புமிகு தலைவர் அவர்கள் 'இல்லை, இல்லை, நான் நிச்சயமாக நிறைவேற்றுவேன்' என்று சொல்லி, அரசாணையை வெளியிட்டவர்தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். ஆனால், 2011 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பொறுப்புக்கு வந்த அ.தி.மு.க. அரசாங்கம், அந்த அவசரச் சட்டத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று அப்போது சட்டமன்ற உறுப்பினராக இருந்த அண்ணன் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்திருந்தது. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கையெழுத்திட்ட கடைசி அரசாணை அதுதான். கடைசி கையெழுத்தும் அதுதான். எனவே, அந்த அரசாணையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று சிறுபான்மை மக்களின் காவலராக விளங்கிக் கொண்டிருக்கிற, ஒப்பாரும், மிக்காரும் இல்லாத் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் தளபதி அவர்களிடம் வேண்டுகோள் வைக்கின்றோம்.

இதைவிட கொடுமை என்னவென்றால், 1991 ஆம் ஆண்டுக்கு முன்னர், ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களில், அவர்கள் இறந்து விட்டாலோ அல்லது பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டாலோ அந்த இடங்களை நிரப்புவதற்கு கல்வித் துறை அதிகாரிகள் ஒத்துழைப்பதில்லை. சரி, தமிழ்வழி கல்வியே வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நேரமும் ஒத்துழைக்கவில்லை. தலைப்புச் செய்தியாக டக், டக் என்று தமிழ்வழி கல்வி பற்றி சொல்லியாகிவிட்டது. G.O.–ஐ நிறைவேற்றித் தாருங்கள் என்று சொல்லியாகிவிட்டது. அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.

2021 செப்டம்பர் 8]

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *இதோ முடித்துவிடுகிறேன். ஆங்கில வழி கல்விக்கு* NOC *கொடுக்கச் சொன்னால்கூட, அதையும் கொடுக்கவில்லை. இதற்கு தனியாக நிதிச் சுமை ஏற்படாது. ஏனென்றால்,* surrender posts *8,000–க்கும் மேல் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கருணையோடு இக்கோரிக்கையைப் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.*

பிற்பகல் 1–25

அடுத்ததாக, தலித் கிறித்தவர்கள். இது மிக முக்கியமான கோரிக்கை. 71 வருடங்களாக நீதி கேட்டு போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றோம். அந்தப் போராட்டங்கள் எல்லாம் என்றைக்கு பெரிதாகிறதோ, உடனே கமிஷன் போட்டு அதை முடித்துவிடும், ஒன்றிய அரசு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *எத்தனை கமிஷன் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லிவிடுகிறேன். குமாரப்பிள்ளை கமிஷன், சிதம்பரம் கமிஷன், கலேகர் குழு, நெட்டூர் குழு, மண்டல் கமிஷன், கடைசியாக நீதியரசர் ரங்கநாத் மிஸ்ரா கமிஷன். இத்தனை கமிஷன்களும் என்ன சொல்லியிருக்கின்றன என்றால், மதம் மாறியதால் ஜாதி அடையாளம் மாறவில்லை. எனவே, உரிமைகள் தரப்பட வேண்டும் என்று எல்லா கமிஷன்களும் சொல்லிவிட்டன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சொல்ல வந்தது புரிந்துவிட்டது. மதம் மாறிய ஆதி திராவிடர் மக்களுக்கு, அவர்களுக்குரிய சலுகை வேண்டுமென்று கேட்கிறீர்கள். அடுத்தது சொல்லுங்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *1936 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் அரிசன மாநாட்டில், மகாத்மா காந்தியே என்ன சொல்லியிருக்கிறார் என்றால், "கடவுளை வேண்டுமானால் மாற்றிக்கொள்ளலாம், அவர்களின் தீண்டாமையும், சமூகக் கொடுமையும் எந்த மதத்தைச் சார்ந்தாலும் அவர்களை முழுக்க அது விரட்டிக்கொண்டுதான் இருக்கிறது" என்று சொன்னார். எனவே அவர் சொன்ன கருத்தைத்தான் இன்று எல்லா கமிஷன்களும் சொல்கின்றன.*

இந்தியா சமயச் சார்பற்ற நாடு என்று அரசமைப்புச் சட்டம் சொல்கிறது. ஆனால், மதத்தின் பெயரால் சலுகைகள் மறுக்கப்படுகின்றன. எனவே, தலித் கிறித்தவர்களின் உரிமைகளைப் பற்றி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பிரதமருக்கு நேரடியாகவும், பலமுறை கடிதங்கள் வாயிலாகவும் தெரியப்படுத்தியுள்ளார். நாடாளுமன்றக் குழுத் தலைவர் திரு. டி.ஆர். பாலு அவர்களையும் பல முறை பேச வைத்துள்ளார். நாங்கள் என்ன கேட்கிறோம் என்றால், தலித் கிறித்தவர்களையும் பட்டியல் பிரிவுகளோடு இணைக்க வேண்டும் என்று சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி, ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும்.

அதேபோல, வன்னிய கிறித்தவர்களுக்கும் இழைக்கப்படும் அநீதி; கிறித்தவ வன்னியர்கள் என்றால் பி.சி., இந்து வன்னியர்கள் என்றால், எம்.பி.சி., என்கிற அந்தக் குறையும் இருக்கிறது. இதை எல்லாம் சட்டப் பேரவையில் தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால் எல்லாக் கட்சிகளும் தேர்தல் அறிக்கையில் இதை வலியுறுத்திக்கொண்டுதான் இருக்கின்றன. எனவே அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றேன்.

அதேபோன்று கல்லறைத் தோட்டம். ஒரு நகரம் உருவாகின்றபோது, ரோடு, குடிநீர் போன்றவை இருக்கிறதா என்றுதான் பார்க்கின்றோம். ஆனால், கல்லறைத் தோட்டம் இருக்கிறதா, இந்துக்களுக்கு மயானம், இஸ்லாமியர்களுக்கு அடக்கஸ்தலம் இருக்கிறதா என்று பார்ப்பதில்லை. எத்தனையோ முறை நாங்கள் மாண்புமிகு தளபதி அவர்களிடம் கோரிக்கை வைத்தபோது, பல இடங்களில் கல்லறையை எங்களுக்கு உருவாக்கித் தந்தார்கள்.

அதேபோல, ஒவ்வொரு மாவட்டத்திலும் கல்லறைத் தோட்டத்திற்கென 5 ஏக்கர் நிலம் உருவாக்கித் தர வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கின்றோம். (மணியடிக்கப்பெற்றது)

ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். சில இடங்களில் பொது மக்களே, கல்லறைக்கு, அடக்கஸ்தலங்களுக்கு இடம் வாங்கினால், அரசின் அனுமதி கிடைக்காது.

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தேவையான இடங்களில் எல்லாம் கல்லறைத் தோட்டம் வேண்டுமென்று கேட்டுவிட்டீர்கள். அது பதிவாகிவிட்டது. அடுத்ததற்கு வாருங்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *பொது மக்களே காசு கொடுத்து வாங்கினாலும், கல்லறைத் தோட்டத்திற்கு அனுமதி கொடுப்பதில்லை. காரணம் கேட்டால், யாராவது ஒருவர் ஆட்சேபணை சொல்லிவிட்டார்கள் அல்லது சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் என்று சொல்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குறிப்பிட்ட இடங்களில்தான் அப்படி செய்வார்கள். அதை அரசு பார்த்துக்கொள்ளும்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *இதுபோன்ற நெறிமுறைகளை உருவாக்கித் தர வேண்டுமென்ற கோரிக்கைகளை வைக்கின்றேன். அடுத்ததாக, சிறுபான்மையினர் ஆலயங்கள் கட்டுவது. இப்போதெல்லாம் கிறித்தவர் ஆலயம், இஸ்லாமியர் பள்ளிவாசல் கட்டுவதற்கெல்லாம் உரிய காரணங்கள் இன்றி மறுக்கப்படுகின்றன. 2010 ஆம் ஆண்டு, கன்னியாகுமரி மாவட்டம், அருமனையில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவிலே கலந்துகொண்ட அம்மையார் ஜெயலலிதா அவர்கள், உங்கள் பட்டா நிலங்களில், நீங்கள் தேவாலயம் கட்டுவதற்கு யாரிடம் அனுமதி வேண்டும். கர்த்தரின் அருளால் ஆட்சி அமைந்தால், அது நிறைவேற்றப்படும் என்று 24–12–2010 அன்று உறுதி கூறிவிட்டுச் சென்றார்கள். ஆனால், பத்து வருடங்களாக அ.தி.மு.க.வின் ஆட்சி இருந்தது. ஒன்றுமே செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *இருங்கள் ஐயா. எனவே, நான்கு ஆண்டுகளில் சிறுபான்மையினர் வழிபாட்டுத் தலங்களைக் கட்டுவதற்கும், கட்டட அனுமதி வாங்குவதற்கும், சிறிய பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குக்கூட அனுமதி தரவில்லை. 100 வருடங்கள் பழமைவாய்ந்த தேவாலயங்களுக்குக்கூட* NOC *கொடுப்பதில்லை. புதுக்கோட்டை அரிமளம்–நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களே இருக்கின்றார். அவரிடமே கேளுங்கள். அவருக்கு ஒரே ஒருவர் மட்டுமே எதிர்ப்புத் தெரிவிக்கின்றார் என்று சொல்லி, அதையும் நிறுத்தி வைத்திருக்கின்ற சூழ்நிலை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய கோரிக்கைகள் இருக்கின்றன. நன்றி என்று மட்டும் சொல்லிவிட்டு அமருங்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: மைனாரிட்டி ஸ்டேட்டஸ் சர்டிபிகேட் கிடைக்கவில்லை. அதற்கும் வழிமுறைகளை நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, சிறுபான்மையினர் நலத் துறை அலுவலர்களை நீங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கித் தர வேண்டுமென்று சொல்லி, சிறுபான்மையினர் நலக் குழுவை நீங்கள் உருவாக்குகின்றபோது, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத் தலைவராக திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களைத்தான் போட்டிருக்கிறது. நன்றி சொல்லிவிட்டு அமருங்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: இன்னும் பல விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பிறகு சொல்லலாம். நன்றி மட்டும் சொல்லுங்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கும் நீங்கள் வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து, விடைபெறுகிறேன். எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் அவையில் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் கட்டடங்களை ஒழுங்குப்படுத்த பெருநகர வளர்ச்சிக் குழுமத்தை அறிவிக்க வேண்டும்.

திருச்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனது சட்டமன்றத் தொகுதியில் சாலைகளைச் சீரமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெரியார் நகர், செம்பட்டு, புதுத்தெரு, வள்ளுவர் நகர், வியாசர் தெரு, மகாலட்சுமி நகர் வாரி புறம்போக்கு, மேல சிந்தாமணி கொசமேட்டுத் தெரு, செங்குளம் காலனி, இபி ரோடு செல்வ விநாயகர் கோயில் பகுதி, கமலா நேரு நகர், காமராஜர் நகர், காந்தி நகர், ராஜமாணிக்கம் பிள்ளை நகர், பென்சனர்ஸ் காலனி உள்ளிட்ட பகுதிகளில் குடிநீர், கழிவுநீர் வசதிகள் செய்து தரப்பட வேண்டும். அப்பகுதி மக்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருச்சி கிழக்கு தொகுதி, பல்வேறு தெருக்கள் ஜாதிப் பெயர்களில் அமைந்துள்ளன. அந்த ஜாதிப் பெயர்களை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகேயுள்ள காவலர் குடியிருப்பைப் புதிதாகக் கட்டித்தர வேண்டும்.

திருச்சிக்கு மிகப்பெரிய தொழிற்சாலை வருவதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

காந்தி மார்க்கெட்டை விரிவாக்கம் செய்து தர வேண்டும்..

சிறுபான்மை மக்களுடைய கோரிக்கைகளையும், என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டுமாறு அன்போடு கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். ஏற்கெனவே உறுப்பினர் முனைவர் இனிகோ சொன்ன கோரிக்கைகளை தவிர்த்துவிட்டு, வேறு இருப்பதைச் சொல்லி, சுருக்கமாக உரையை முடியுங்கள்.

பிற்பகல் 1–30

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதிக்கு தொட்டிலைக் கட்டி, சமூக அநீதிக்கு சமாதியைக் கட்டி, சமத்துவ, சகோதரத்துவ சமூகத்தைக் கட்டுவதற்கு கட்டுமானத் தளவாடங்களாய் தந்தை பெரியாரின் சமூக நீதி, பேரறிஞர் அண்ணா அளித்த 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்னும் கருத்தியல் கருவிகளால், தன்மானத் தமிழகத்தைத் தட்டி எழுப்பிய, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் இடத்திலும், அவர் பயணித்த தடத்திலும் நின்று சமூக முன்னேற்றத்திற்கான பல்வேறு தடைகளை உடைத்தெறிந்து,

தனித்துவமாய் வெற்றிபெற்று, எல்லோருக்குமான நல்லாட்சி வழங்கும் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆட்சியிலே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலன் மற்றும் ஆதி திராவிடர் நலத் துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த திங்கட்கிழமையன்று நமது பேரவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்தை பெரியாரின் பிறந்த நாளான செப்டம்பர் 17 ஆம் நாளை, தமிழக அரசு 'சமூக நீதி நாளாகக் கொண்டாடும்' என்று குறிப்பிட்டார்கள். அந்த அறிவிப்பைச் செய்யும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'பெரியாரின் கைத்தடி சமூக நீதியின் கதவைத் திறந்து வைத்தது' என்று குறிப்பிட்டார்கள். ஆம். அந்தக் கைத்தடி இப்போது நமது முதலமைச்சரின் கைகளிலே செங்கோலாக மாறியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதனால்தான் அவரது பலதரப்பட்ட தொடர் முயற்சிகளின் விளைவாக மருத்துவக் கல்விக்கான அகில இந்தியத் தொகுப்பில் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தந்தை பெரியாரின் கைத்தடியைப் பயன்படுத்தி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தவுடன் கிடைத்துள்ள சமூக நீதிப் போராட்டத்தின் முதல் வெற்றியாக அமைந்துள்ளது. இந்த இட ஒதுக்கீட்டினை ஒன்றிய அரசு ஏற்கெனவே பல ஆண்டுகள் பின்பற்றாத காரணத்தால் ஏறத்தாழ 10,000 பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மருத்துவக் கல்வி வாய்ப்பை அகில இந்திய அளவில் இழந்தார்கள். அதில் தமிழக மாணவர்களும் பெரிதாகப் பாதிக்கப்பட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தொடர் முயற்சிகளின் காரணமாக ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பின்மூலம் இந்த இட ஒதுக்கீடு 2021–2022 ஆம் கல்வியாண்டில் மொத்தம் 4,000 இதர பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி கிடைக்க வழிவகுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாதனை படைத்திருக்கின்றார்கள் என்பதை நான் முதற்கண் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில்தான் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் அனைத்து

முஸ்லிம் பிரிவினர்களுக்கும் இட ஒதுக்கீடு கிடைத்தது. இதன் தொடர்ச்சியாக எங்கள் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் 1995 முதல் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருக்கக்கூடிய முஸ்லிம்களுக்கு தனி இட ஒதுக்கீடு வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி வந்தோம். கலைஞர் ஆட்சி 2006–லே மலர்ந்தது. நீண்ட காலமாக நாங்கள் வைத்த கோரிக்கையான கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு 2007 செப்டம்பர் 13 ஆம் நாள் அளிக்கப்பட்டதை இந்த நேரத்தில் நான் நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையிலே 'சிறுபான்மை முஸ்லிம் சமுதாயத்தினுடைய பொருளாதார, சமூக மேம்பாட்டுக்காக சச்சார் குழுவினுடைய பரிந்துரைகளையெல்லாம் இந்த அரசு நடைமுறைப்படுத்தும்' என்று ஒரு பிரகடனத்தையே வெளியிட்டிருக்கின்றார்கள். அதனடிப்படையிலே நான் சில கோரிக்கைகளை வைக்க விரும்புகின்றேன். இந்த ஆட்சியில் அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் வேறு எந்த ஆட்சியிலும் நிறைவேறாது என்பதை எடுத்துச் சொல்லி அந்தக் கோரிக்கைகளுக்கு வருகிறேன்.

முஸ்லிம்களுக்கான 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு கடந்த 10 ஆண்டுகளாக சரியான முறையிலே கடைப்பிடிக்கப்படவில்லை. நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பில் carry forward அதாவது, முன்கொணர்வு முறையைக் கடைப்பிடிப்போம் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதனை வரவேற்கின்றேன். அதே நேரத்தில், 2007–லே முஸ்லிம்களுக்கான 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு செயல்படுத்தப்பட்ட காலம்தொட்டு, இதுவரை பல்வேறு அரசுப் பணிகளில் மொத்தம் எத்தனை பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டிருக்கின்றது என்பது குறித்து ஆய்வு செய்வதற்காக ஓர் ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையிலே குழு அமைத்து, அதனடிப்படையில் ஒரு வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டு, அந்த வெள்ளை அறிக்கை தரக்கூடிய தகவல்களின் அடிப்படையில் backlog vacancies–ல் நிரப்பப்படாத இடங்களை நிரப்புவதற்காக ஒரு special recruitment drive–சிறப்பு ஆட்சேர்ப்பு முகாமை நடத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2021 செப்டம்பர் 8 பிற்பகல் 1–35

பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கான இட ஒதுக்கீட்டினை, 3.5 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாக அதிகப்படுத்தித் தர வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பில், ஓய்வுபெற்ற உலமாக்களுக்கு, வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட, பள்ளி வாசலிலிருந்து ஓய்வு பெற்ற உலமாக்களுக்கு, முஅத்தீன்களுக்கு, பள்ளி வாசல் தொண்டர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,000/– அளிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்படாத ஏராளமான பள்ளிவாசல்களும் இருக்கின்றன. அந்தப் பள்ளிவாசல்களில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும், ஓய்வூதியம் வழங்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஓய்வூதியத்தை 3,000/– ரூபாயிலிருந்து 4,000/– ரூபாயாக அதிகரிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர், குறிப்பாக முஸ்லிம்கள் மற்றும் கிறித்தவர்கள் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அடக்கவிடங்கள் குறித்து, எனக்கு முன்னர் உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர், முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள், இங்கே விரிவாகக் குறிப்பிட்டார்கள். இது ஒரு மிக sensitive–ஆன பிரச்சினையாக இருக்கின்றது. நம்முடைய சிறுபான்மையினர் நலத் துறை கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில், நிலம் கையகப்படுத்தப்பட, அடக்கஸ்தலத்திற்காக ரூ.1.00 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே இரண்டு பிரச்சினைகள். முதலாவதாக வழிபாட்டுத் தலங்கள். இந்த வழிபாட்டுத் தலங்களை புதிதாக சொந்த இடத்தில் கட்ட வேண்டுமென்றால், அதற்கு மாவட்ட ஆட்சியரின் அனுமதியைப் பெற வேண்டும். அதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அந்த வழிபாட்டுத் தலம் அமையக்கூடிய இடங்கள், church ஆக இருக்கட்டும், பள்ளிவாசலாக இருக்கட்டும், அதில் தொடர்பில்லாதவர்கள், இங்கே ஒரு church வரப்போகின்றது,

2021 செப்டம்பர் 8] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

இங்கே ஒரு பள்ளி வாசல் வரப்போகிறதென்றால், அதைக் காரணம் காட்டி மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுக்கின்றார்கள். அந்த இடத்திற்கு தொடர்பே இல்லாதவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். அதை வைத்துதான் அவர்களுடைய அரசியல் இருக்கின்றது; அந்த இடத்தில் தங்கள் கிளைகளை அமைக்கலாம் என்ற நோக்கத்தில் அவர்கள் இவ்வாறு புகார் அளிக்கும்போது, சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டி, மாவட்ட ஆட்சியர்கள், இதற்கான அனுமதியைத் தர மறுக்கின்றார்கள். இது, 3 ஆண்டுகள் அல்லது 4 ஆண்டுகள் என்று ஆண்டுக் கணக்கில் நீடித்துக் கொண்டுபோகின்றது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில், அவரவர்களுடைய சொந்தப் பட்டா உள்ள இடங்களில், 7 தேவாலயங்கள் கட்டுவதற்கு தொடர்ச்சியாக அனுமதி மறுக்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று ஏராளமான பள்ளிவாசல்கள் இருக்கின்றன. எனவே, மாவட்ட ஆட்சியர்கள், பள்ளிவாசல் அல்லது தேவாலயங்கள் கட்டுவதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டால், 90 நாட்களுக்குள், அதற்கான அனுமதி உண்டா அல்லது அனுமதி இல்லையா என்பது குறித்து முடிவைச் சொல்ல வேண்டும். ஒருக்கால் அனுமதி இல்லையென்றால், அந்தச் சூழலில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன், மாவட்ட ஆட்சியரின் அந்த முடிவிற்கு எதிராக, மேல்முறையீடு செய்வதற்காக, தமிழக அரசின் வருவாய்த் துறைச் செயலாளர் அல்லது பொதுத் துறைச் செயலாளர் அவர்களது தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, ஒரு மாதத்திற்குள் அதற்கான தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். இது மிகவும் முக்கியமான ஒரு கோரிக்கையாக இருக்கின்றது. இந்த அரசு இதனைக் கனிவுடன் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் நலத் துறைக்கு, தனி அமைச்சர் இருக்கின்றார். சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பாக ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால், மாவட்டந்தோறும், பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மட்டும்தான் இருக்கின்றார்கள். அந்த பிற்படுத்தப்பட்ட அலுவலர்தான் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் ஏராளமான திட்டங்களை, மாவட்டங்களில் செயல்படுத்தக்கூடிய அதிகாரியாக இருக்கின்றார்கள்.

அவருடைய வேலைப் பளுவின் காரணமாக, நமது ஆட்சியில், மாவட்டந்தோறும், தனியாக, சிறுபான்மையினர் நல அலுவலர் நியமிக்கப்பட வேண்டுமென்று, உங்கள் வாயிலாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னுமொரு மிக முக்கியமான கோரிக்கை. இந்த ஆட்சிதான், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான், சிறுபான்மையின மக்களை கனிவிரக்கத்துடன் கவனிக்கக்கூடிய ஓர் ஆட்சி. தமிழக சிறைச்சாலைகளில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக, ஆயுள் தண்டனை பெற்று, 37 முஸ்லிம் கைதிகள் இருக்கிறார்கள். இதேபோன்று 10 ஆண்டுகளுக்கு மேலே சிறைவாசம் அனுபவித்த ஏராளமான கைதிகள் இருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் வருகிறது. இந்த ஆட்சி மலர்ந்த பிறகு, வரக்கூடிய முதல் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாள். இந்தப் பிறந்த நாளிலே 37 முஸ்லிம் சிறைவாசிகளையும், அதேபோல, 10 ஆண்டுகள் வாழ்நாள் சிறைவாசத்தை அனுபவித்த சிறைவாசிகளையும் விடுதலை செய்வதற்கு, இந்த அரசு முன்வர வேண்டும். அதற்கான ஆணைகள் இருக்கின்றன. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், 2008 ஆம் ஆண்டிலே, G.O. Ms. No. 1155, Home (Prison–IV) Department, dated 11–9–2008–ல் முன் விடுதலைக்கான உத்தரவு போடப்பட்டிருக்கின்றது. அதைப்போல, தொடர்ந்து அ.தி.மு.க. ஆட்சியில், எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டின்போதும், அப்படிப்பட்ட ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள் துறை அமைச்சகம் வெளியிட்டிருக்கின்ற ஒரு கடிதத்திலும்கூட 20 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவித்தவர்களை மனிதாபிமானத்துடன் விடுதலை செய்வதற்கான வழிவகை இருக்கின்றது என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தக் கோரிக்கையை மனிதாபிமான அடிப்படையிலே, பரிசீலித்து, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளில் தமிழக மக்களுக்கு பிறந்த நாள் பரிசாக இந்த அறிவிப்பைச் செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 11 நிமிடங்கள் ஆகிவிட்டன.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசாங்கத்தினுடைய ஊரக வளர்ச்சித் துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை, அதைப்போல நகர்ப்புற வாழ்விட மேம்பாடு வாரியத்தின் சார்பாக ஏழையெளிய மக்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. இந்த வீடுகளில் சிறுபான்மை முஸ்லிம்களுக்கும், சிறுபான்மை கிறித்தவர்களுக்கும் தலா 5 விழுக்காடு வீடுகள் ஒதுக்கப்பட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய சிந்தனையிலே வடிவமைக்கப்பட்டு, அவர்கள் 2006 ஆம் ஆண்டிலே முதலமைச்சராக இருந்தபோது, அதற்கு சட்ட வடிவமும் கொடுக்கப்பட்டது. இப்போது, நமது ஆட்சியில் ஒரு சிறந்த ஆளுமையான, அன்புச் சகோதரர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களை தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தினுடைய தலைவராக நியமித்தமைக்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதுவரை தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்திற்கு முழு நேர Member Secretary, உறுப்பினர் செயலாளர் கிடையாது. சிறுபான்மை நலனை நேசிக்கக்கூடிய இந்த ஆட்சியிலேதான் முதல்முறையாக ஒரு I.A.S. அதிகாரியை முழு நேர Member Secretary ஆக நியமித்திருப்பதை நான் மனதார வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு minority status சிறுபான்மை தகுதியை யார் அளிப்பது என்பதில் குழப்பம் இருக்கின்றது. அதில் இந்திய அளவிலே பெரிய குழப்பங்கள் இருக்கின்றன. Minority status வாங்க வேண்டும் என்றால், உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று பல இலட்ச ரூபாய் செலவு செய்துதான் அந்த status–ஐ வாங்க வேண்டியதிருக்கிறது. அதே நேரத்தில், இந்த minority status–ஐப் பெற்ற கல்வி நிறுவனங்கள், சிறுபான்மை மக்களைச் சார்ந்த மாணவர்களைச் சேர்ப்பதிலும், அதேபோல ஆசிரியர்களை நியமிப்பதிலும்கூட பல குளறுபடிகள் இருக்கின்றன. எனவே, இன்று ஒரு சிறந்த தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு சூழலில் minority status என்று சொல்லக்கூடிய இந்தச் சிறுபான்மை தகுதியை அளிக்கக்கூடிய அந்த உரிமையை தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்திற்கு

அளிப்பதற்கான சட்டத் திருத்தத்தை இந்த அரசு கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மொழி சிறுபான்மையினரும், பல்வேறு வகையான சிறுபான்மையினரும், சிறுபான்மையினர் ஆணையத்தில் அவர்களுடைய பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்கின்றார்கள். இப்போது தலைவர் மற்றும் 9 உறுப்பினர்கள் இருக்கக்கூடிய தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 12 ஆக உயர்த்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இந்திய விடுதலையினுடைய வெள்ளி விழாவிலே கொடியேற்றினார்கள். அப்போது அவர்கள் ஒரு சிறப்பான முயற்சியைச் செய்தார்கள். தமிழக அரசின் சார்பாக Who's who of Freedom fighters in Tamil Nadu–தமிழ்நாட்டிலுள்ள சுதந்திர போராட்ட வீரர்கள் யார், எவர் என்ற ஒரு சிறந்த ஆவணத்தை வெளியிட்டார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் இந்திய விடுதலையினுடைய வைர விழாவிலே நம்முடைய செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே கொடியேற்றினார்கள். கொடியேற்றிய பிறகு "தமிழகத்தைச் சேர்ந்த விடுதலைப் போராட்ட வீரர்களைப் பற்றியதான ஆவணங்கள் சிறப்பான முறையிலே தயாரிக்கப்படும்" என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கின்றேன். Illustrated Weekly–யினுடைய முன்னாள் ஆசிரியர் Khushwant Singh ஒருமுறை சொன்னார்; "இந்த நாட்டினுடைய விடுதலைக்காக முஸ்லிம்கள் தங்களுடைய விகிதாசாரத்தைவிட அதிகமாகத் தியாகம் செய்திருக்கின்றார்கள்" என்று குறிப்பிட்டார்கள்.

தமிழ்நாட்டில் மிகச் சிறப்பான விடுதலைப் போராட்ட வீரர்கள் இருந்திருக்கின்றார்கள். Vinayak Damodar Savarkar–ஆலேயே புகழப்பட்ட Ahmadullah Shah ஆற்காட்டைச் சார்ந்தவர். 1857–ல் விடுதலைப் போராட்டம் நடத்தப்பட்டபோது, ஆங்கிலேயரைக் கதிகலங்க வைத்தார். இன்னும் எண்ணற்ற விடுதலைப் போராட்ட வீரர்கள், முஸ்லிம் போராட்ட வீரர்கள் இருக்கின்றார்கள். அத்தனை முஸ்லிம் போராட்ட வீரர்களின் வரலாற்றையும் அதில் பதிவு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

2021 செப்டம்பர் 8] [*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா*]

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பத்தாண்டுக் கால ஆட்சியில் தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களில் ஒரு பல்கலைக்கழகத்தில்கூட ஒரு முஸ்லிம் துணை வேந்தரும் நியமிக்கப்படவில்லை. Tamil Nadu Public Service Commission*–ல் ஒரு முஸ்லிம் உறுப்பினரும் கடந்த பத்தாண்டுகளில் நியமிக்கப்படவில்லை. இதுபோன்று தகவல் ஆணையம், பெண்கள் ஆணையம், குழந்தை உரிமைகள் ஆணையம் போன்ற ஆணையங்களில் முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்* Rajya Sabha M.P. *கொடுத்திருக்கிறார்கள். எனவே, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான சில செய்திகளை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *உள்ளாட்சி வார்டு மறுவரையறையில், மிகப் பெரிய அளவில் சிறுபான்மையின மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதைச் சீர் செய்யக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோருக்கான கொள்கை விளக்கக் குறிப்பினை நான் படித்துப் பார்க்கும்போது, இந்த அரசு சாதிவாரி கணக்கெடுப்பைத் தொடர்ந்து வலியுறுத்தும் என்ற சிறப்பான அறிவிப்பைச் செய்திருக்கின்றார்கள். கடந்த ஆட்சியில் நீதியரசர், குணசேகரன் பெயரில் ஓர் ஆணையத்தை சாதிவாரி கணக்கெடுப்பிற்காக நியமித்தார்கள். இதற்காக சுமார் 80 இலட்சம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்தது. அந்த ஆணையம் என்னவாயிற்று, அறிக்கை கொடுத்ததா, 80 இலட்சம் ரூபாய் எங்கு போயிற்று போன்ற விவரங்களைத் தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். இன்னும் நாம் நிறைய பேசலாம். நாளைக்கே வாய்ப்பு வந்தாலும் வரும். நன்றி சொல்லி, உரையை முடித்துவிடுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: கடைசியாக என்னுடைய பாபநாசம் தொகுதி தொடர்பான கோரிக்கைகளைத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் மூன்று மாண்புமிகு அமைச்சர்கள் பதில் தர வேண்டியிருக்கிறது. மணி 2–00 ஆகப் போகிறது. கொஞ்சம் ஒத்துழைப்புத் தாருங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: என் தொகுதி தொடர்பான சில முக்கியமான கோரிக்கைகளைத் தெரிவிக்கிறேன். அதை எழுதியும் கொடுத்து விடுகிறேன். அம்மாபேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தொகுதி கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள். அவற்றைப் பதிவு செய்துவிடலாம்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: அம்மாபேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்கப்பட வேண்டும். பாபநாசம், அம்மாபேட்டையை ஒருங்கிணைத்து புதிய மின் கோட்டம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தொகுதி சார்பான கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள், நாம் பதிவு செய்துவிடலாம்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: தொகுதி சார்பான பல்வேறு கோரிக்கைகளை உங்களுக்குத் தொகுப்பாக நான் தருகின்றேன். அதனைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம். அருந்ததியர் இனத்தவர்களுக்கான 3 விழுக்காடு இட ஒதுக்கீடு அருந்ததியர் சமூகத்தினருக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய வகையில் அரசு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்தமைக்காக நன்றி தெரிவிக்கிற அதேநேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்களே, வாழ்க தமிழ், வளர்க தமிழகம், ஓங்குக சமூக நீதி, உயரட்டும் நம் நாடு, இந்தியா என்று சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

ஆரூரான் சர்க்கரை ஆலை. எனது பாபநாசம் தொகுதியில் உள்ள 'திரு ஆரூரான் சுகர்ஸ்' எனப்படும் ஆரூரான் சர்க்கரை ஆலை கடந்த 3 ஆண்டுகளாக இயங்காமல் மூடப்பட்டுள்ளது. இங்கு பணியாற்றிய சுமார் 300–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இதனால் வாழ்வாதாரம் இழந்துள்ளனர். அதேபோல் 58 வயதில் ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு நியாயமான முறையில் கிடைக்க வேண்டிய பலன்களை ஆலை நிருவாகத்தினர் வழங்காததனால் பெரும் துயரத்திற்கு உள்ளாகியுள்ளனர். அதற்குத் தடை ஏற்படுத்தி வருவதால், திருமணமாக வேண்டிய தொழிலாளர்களின் பிள்ளைகளின் திருமணம் தடைபட்டிருக்கும் நிலை உள்ளது.

58 வயதில் ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணப் பலன்களை ஆலை நிருவாகத்தினர் வழங்காமல் தொழிலாளர்களுக்கு ஓய்வு அளித்துள்ளதால் வயதான தொழிலாளர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். இத்தொழிலாளர்களின் துயரத்தைப் போக்க தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு நிலுவைத் தொகைகளை வழங்கவும் அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். 2016–2017, 2017–2018 ஆண்டுகளில் வெட்டிய கரும்பிற்கான நிலுவைத் தொகை, அதற்கான போக்குவரத்துச் செலவு மற்றும் நிருவாகத்தால் ஒத்துக்கொள்ளப்பட்ட செலவுகள் என விவசாயிகளுக்கு ரூ.60 கோடி ரூபாய் பாக்கியுள்ளது. மேலும், கரும்பு விவசாயிகளின் பெயரில் உள்ள நிலங்களுக்குரிய கிராம நிருவாக அலுவலரின் சான்றை மட்டும் வைத்து 216 விவசாயிகளின் பெயரில் கும்பகோணம் கார்ப்பரேசன் வங்கியில் ஆரூரான் சர்க்கரை நிறுவனம் ஜாமீன் கேட்டு ரூ.46 கோடி கடன் பெற்றுள்ளனர். ஆரூரான் சர்க்கரை ஆலை நிறுவனம் இக்கடனைச் செலுத்தாததால் தற்போது வங்கி விவசாயிகளுக்கு நெருக்கடி அளித்துள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக ஆரூரான் சர்க்கரை ஆலை நிறுவனத்தின் இம்மோசடியினால் சுமார் 5,000 விவசாயிகள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு கரும்பு விற்பனை செய்த விவசாயிகள்

மற்றும் தொழிலாளர்களின் துயரங்களை உடனடியாகப் போக்குவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுவாமிமலை ஊராட்சியைத் தரமுயர்த்துதல். எனது பாபநாசம் தொகுதிக்குட்பட்ட சுவாமிமலை பேரூராட்சியை கும்பகோணத்துடன் இணைத்து கும்பகோணம் மாநகராட்சியாக அறிவிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அப்பகுதி மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. சுவாமிமலையில் பழமைவாய்ந்த கோயில்கள் உள்ளன. மன்னர் இராஜராஜ சோழன் காலம் முதல் ஐம்பொன் சிலைகள் தயாரிப்பதில் பிரசித்தி பெற்ற நகரமாக சுவாமிமலை இருந்து வருகின்றது. இங்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர்.

மேலும், சுவாமிநாத சுவாமி திருக்கோயிலின் முக்கியத்துவத்தைக் கருதியும், சுவாமிமலை பேரூராட்சியின் வளர்ச்சியைக் கவனத்தில் கொண்டும், சுவாமிமலை அருகில் உள்ள பாபுராஜபுரம் மற்றும் திருவலஞ்சுழி கிராமங்களை இணைத்து முதல்நிலை பேரூராட்சியாக உள்ள சுவாமிமலையை தேர்வுநிலை பேரூராட்சியாக மாற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அம்மாபேட்டையில் புதிய வட்டம். பாபநாசம் தொகுதிக்குட்பட்ட அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 48 ஊராட்சிகள் மற்றும் 2 பேரூராட்சிகள் உள்ளன. இங்குப் பொது மக்கள் வருவாய்த் துறை சம்பந்தமான சாதிச் சான்று, வருமானச் சான்று, இருப்பிடச் சான்று உள்ளிட்ட சான்றுகளைப் பெறவும், பட்டா மாறுதல் செய்யவும் சுமார் 25 கிலோ மீட்டர் பயணம் செய்து பாபநாசத்தில் தாலுகா அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் இப்பகுதி பொது மக்கள் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, அம்மாபேட்டை ஒன்றியத்தின் மையப் பகுதியான சாலியமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா அலுவலகம் ஒன்றை உருவாக்கித் தர வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அம்மாபேட்டையில் பத்திரப் பதிவு அலுவலகம். எனது பாபநாசம் தொகுதிக்குட்பட்ட, அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பல ஆண்டு காலமாக இயங்கி வந்த பத்திரப் பதிவு அலுவலகத்தைப் பிரித்து மற்றொரு பத்திரப் பதிவு அலுவலகத்தில்

இணைத்த காரணத்தினால், அம்மாபேட்டையில் இயங்கி வந்த பத்திரப் பதிவு அலுவலகம் மூடப்பட்டுவிட்டது. இதனால் அம்மாபேட்டை ஒன்றியத்தில் உள்ள மக்கள் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டிய சூழல் உள்ளது. எனவே, அம்மாபேட்டை, உக்கடை, நெடுவாசல், மகிமாலை, நெய்குன்னம், பள்ளியூர், களஞ்சேரி, சாலியமங்கலம், எடவாக்குடி, பூண்டி, திருபுவனம், அருமலைக்கோட்டை, சூழியக்கோட்டை, கம்பர்நதம், அருந்தவபுரம், கருப்பமுதலியார்கோட்டை புளியக்குடி, வடபாதி, கீழக்கோவில்பத்து ஆகிய ஊராட்சிகளை இணைத்து சாலியமங்கலம் அல்லது அம்மாபேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய பத்திரப் பதிவு அலுவலகத்தை உருவாக்கித் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய மின் கோட்டம் அமைத்தல். எனது பாபநாசம் தொகுதிக்குட்பட்ட பாபநாசம் தாலுகா மற்றும் வலங்கைமான் தாலுகாவில் உள்ள சில கிராமங்கள் ஒரத்தநாடு மின் கோட்டத்திற்குட்பட்டுள்ளன. இங்குள்ள கிராம மக்கள் மின்சாரம் தொடர்பான புகார்களுக்கு ஒரத்தநாடு அல்லது கும்பகோணம் மின் கோட்டத்திற்குச் சென்று வருகின்றனர். இதனால், சீரான மின்சாரம் கிடைப்பதில் தேவையற்ற காலதாமதம் நிலவுகிறது. எனவே, மேற்படி கிராம மக்கள் நலன் கருதி, சாலியமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய கோட்டத்தை ஏற்படுத்தி அதன்கீழ் சாலியமங்கலம் உபகோட்டம், பாபநாசம் உபகோட்டம், சூரக்கோட்டை உபகோட்டத்தைப் புதிதாக ஏற்படுத்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு தலைமை மருத்துவமனை. பாபநாசத்தில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு சுமார் 800—க்கும் மேற்பட்ட நோயாளிகள் மற்றும் மகப்பேறு சம்பந்தமான நோயாளிகள் வந்து செல்கின்றனர். இம்மருத்துவமனையில் பெரும்பாலான நேரத்தில் மருத்துவர்கள் இல்லை, ஊழியர்கள் இல்லை என்று அடிக்கடி சொல்லப்படுவதோடு, எதற்கெடுத்தாலும் முதலுதவி செய்தவுடனேயே தஞ்சை அல்லது குடந்தை மருத்துவமனைகளுக்கு அனுப்பிவிடுகின்றனர். முக்கியமாக சுற்று வட்டாரத்திலுள்ள 100—க்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் பெரும்பாலும் ஏழை நோயாளிகளே. இவர்களுக்கு இருதய நோய் சிகிச்சை, சிறுநீரக

மருத்துவம், சர்க்கரை மருத்துவம் போன்ற சிகிச்சைகளுக்குத் தனித் தனியாக மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் தஞ்சை அல்லது குடந்தையில் உள்ள தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்றுதான் சிகிச்சை பெற வேண்டியுள்ளது. தொடர்ந்து 10 ஆண்டுகளாக இதே நிலைதான் இருந்து வருகிறது. எனவே, அதை மாற்றி அனைத்து சிறப்பு மருத்துவர்களையும் நியமிப்பதுடன் அவர்கள் இங்கேயே தங்கி பணிபுரியும் வகையில் ஏற்கெனவே அவர்களுக்கு என்று உள்ள மருத்துவக் குடியிருப்புப் பகுதியில் புதிதாக வீடுகள் கட்டிதரப்பட வேண்டும். ஏற்கெனவே உள்ள அரசுக் குடியிருப்புகள் முற்றிலும் பழுதாகி இடிந்துவிழும் நிலையில் உள்ளன என்பது மிக முக்கியமானது. மருத்துவமனையில் கழிவறை வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர். பாபநாசம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கான விளையாட்டு மைதானம் தற்சமயம் திறந்தவெளிக் கழிப்பிடமாக சுற்றுச் சுவர்கள் இடிந்து மிகவும் மோசமான சூழ்நிலையில் உள்ளது. எனவே, விளையாட்டு மைதானத்தின் தரை மட்டத்தை உயர்த்தி, புதிய சுற்றுச் சுவர் அமைத்து பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசம்–அரியலூர் நேரடி பேருந்து வசதி. எனது பாபநாசம் தொகுதிக்கு அருகில் உள்ள மாவட்டமான அரியலூருக்கு வியாபார நிமித்தமாகவும், அங்குள்ள பல்வேறு சிமெண்ட் ஆலைகளில் பணியாற்றிவரும் பாபநாசம் கபிஸ்தலம் பகுதிகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் வசதிக்காகவும், அரியலூரில் உள்ள கலியபெருமாள் திருக்கோயிலுக்குச் சென்று வரும் நூற்றுக்கணக்கான பக்தர்களுக்காகவும் பாபநாசம்–அரியலூர் இடையே நேரடிப் பேருந்து வசதி இல்லாத காரணத்தால் இரண்டு அல்லது மூன்று பேருந்துகள் மாறி மாறி சுற்றிக்கொண்டு அரியலூர்–பாபநாசம் இடையே சிரமத்துடன் பயணிக்க வேண்டியுள்ளது.

மேலும், முக்கியமாக பாபநாசம் சுற்று வட்டாரப் பகுதிகளிலிருந்து பகல் நேரங்களில் அரியலூர் வழியாக சென்னை செல்லும் பல்லவன் மற்றும் வைகை இரயில் வண்டிகளில் பயணம் செய்பவர்களின் வசதிக்காகவும், பாபநாசம் மற்றும் அரியலூர் இடையே நேரடி புதிய பேருந்துகள் இயக்கப்படுமானால், பாபநாசம் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள ராஜகிரி, பண்டாரவடை, அய்யம்பேட்டை, கபிஸ்தலம், கணபதி அக்ரஹாரம் உள்ளிட்ட

பகுதிகளிலிருந்து சென்னை செல்லும் பயணிகளுக்கு இலகுவாக இருக்கும் என்பதுடன், சென்னை செல்லும் வியாபாரிகள், மாணவர்களுக்கு இந்தப் பேருந்து வழித்தடம் பலனளிக்கும் வகையில் அமையும் என்பதால், பாபநாசம் மற்றும் அரியலூர் இடையே அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளை இயக்க ஆவன செய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் பெயரில் அரசு சொந்த நூலகக் கட்டடம். பாபநாசம் நகரத்தில் சொந்தக் கட்டட வசதி இல்லாத காரணத்தால் அரசு நூலகம் தற்சமயம் அரசு மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானத்தின் ஓர் ஓரத்தில் செயல்பட்டு வருகிறது. பாபநாசம் (உத்தமதானபுரம்) தமிழ் தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் சொந்த ஊர். எனவே, நூலகத்தை நகரின் மையப் பகுதியில் டாக்டர் உ.வே.சா. அவர்களின் பெயரில் நல்ல வசதியோடு சொந்தக் கட்டடத்தில் இயங்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நவீன அரிசி ஆலை. பாபநாசம் தொகுதி முற்றிலும் விவசாயம் சார்ந்த தொகுதி. குறிப்பாக, நெற்பயிர்கள் அதிகமாக விவசாயம் செய்யப்படுவதால், தற்சமயம் நெல் மூட்டைகள் அரவைக்காக இங்கிருந்து தஞ்சைக்கு அல்லது திருநாகேஸ்வரம் அரவை ஆலைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. எனவே, பாபநாசம் பகுதிக்குட்பட்ட பெருங்குடி, திருக்கருக்காவூர், திருமண்டங்குடி, கபிஸ்தலம், உமையாள்புரம், பண்டாரவடை போன்ற பகுதிகளில் ஏதாவது ஒன்றில் அரசு சார்பில் நவீன அரிசி ஆலை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம் இங்குள்ள விவசாயிகள் பயன்பெறுவதுடன் பல பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

பாபநாசம் காவல் குடியிருப்பு. பாபநாசம் காவல் துறை கண்காணிப்பு அலுவலரின் குடியிருப்பு மற்றும் அனைத்து காவல் துறை ஊழியர்களின் குடியிருப்புகள் கட்டப்பட்டு 25 ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டதால், பெரும்பான்மையான குடியிருப்புகள் குடியிருக்க முடியாத அளவிற்குப் பழுதாகிவிட்டபடியால், தற்சமயம் காவல் துறை ஊழியர்கள் அவர்களது குடியிருப்புப் பகுதியில் வசிக்காமல் வெளி இடங்களில் அதிக வாடகைக்கு வசித்து வருகின்றனர். எனவே, பழுதாகிவிட்ட பழைய குடியிருப்புகளை இடித்துவிட்டு அனைத்து வசதிகளோடு, நவீன முறையில் புதிய காவலர் குடியிருப்பு ஒன்றினை

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின்மூலம் கட்டித்தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசம் புதிய பேருந்து நிலையத்தின் வழியாக அனைத்து பேருந்துகளும் வந்து செல்ல வேண்டும். கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பாபநாசம் புதிய பேருந்து நிலையத்தில் நகரப் பேருந்துகள் தவிர தொலைதூரம் செல்லும் வெளியூர் பேருந்துகள் எதுவும் வந்து செல்வதில்லை. இதனால், பொது மக்கள் பகல் மற்றும் இரவு நேரங்களில் பழைய பேருந்து நிலைய பஸ் நிறுத்தம் ஒன்றையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. எனவே, தஞ்சாவூர் மற்றும் குடந்தையிலிருந்து பாபநாசம் வழியாக திருச்சி, மதுரை, கோவை, சென்னை, சேலம், சிதம்பரம் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் பேருந்துகள் அனைத்தும் பாபநாசம் புதிய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லவும், நகரப் பேருந்துகள் அனைத்தும் பாபநாசம் தாலுகா அலுவலகம் வரை சென்று திரும்பவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூண்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம். எனது பாபநாசம் தொகுதிக்குட்பட்ட அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பூண்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் 12 ஊராட்சிகள், 6,000 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கம் கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலேயே பெரிய கூட்டுறவுச் சங்கமாகும். இந்தச் சங்கம் பெரிய ஊராட்சிகளையும், அதிக உறுப்பினர்களையும் கொண்டுள்ளதால் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்கண்ட பூண்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தை கீழ்க்கண்டவாறு மூன்றாகப் பிரித்து புதிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கித் தர ஆவன செய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பூண்டி, எடவாக்குடி, நல்லவன்னியன் குடிக்காடு ஆகிய ஊராட்சிகளை இணைத்து பூண்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துத் தர வேண்டும்.

கத்திரிநத்தம், ஆலங்குடி, மேலக்களக்குடி, நெல்லித்தோப்பு, புலவர்நத்தம் ஆகிய ஊராட்சிகளை இணைத்து கத்திரிநத்தத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துத் தர வேண்டும்.

ராராமுத்திரைக்கோட்டை, செண்பகபுரம், அருமலைக்-கோட்டை ஆகிய ஊராட்சிகளை இணைத்து செண்பகபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துத் தர வேண்டும்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் சீரமைப்பு. பாபநாசம் ஒன்றியத்தில் உமையாள்புரம் ஊராட்சி, திருமண்டங்குடி ஊராட்சி, இரும்புத்தலை ஊராட்சி, மேலட்டூர் ஊராட்சி, திருவைகாவூர் முதலிய ஊராட்சிகளில் பழுதடைந்த நிலையிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சீரமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.

***திரு. மு. பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு"

என்ற திருவள்ளுவர் வாக்கின்படி உரிய கருவி, உற்ற காலம், ஆற்றும் வகை, ஆற்றிடும் பணி ஆகியவற்றை ஆய்ந்தறிந்து செயல்படுபவனே சிறந்த அமைச்சன் ஆவான்.

இந்த 16—வது சட்டமன்றப் பேரவையை மாண்புடனும், அறத்துடனும் வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். முருகன் பாபு ஆகிய என்னை இந்தப் பேரவையின் உறுப்பினராகும் தகுதியை, தமது அறிவாற்றலால், அரசியல் சாசனத்தில் உரிய வகையில் இடம் பெறச் செய்து, எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற அரசமைப்புச் சட்டத்தின் பிதாமகன், சட்டம், சமூகம், பொருளாதாரம் மற்றும் நீர் மேலாண்மை ஆகியவற்றை பற்றி 100 ஆண்டுகளுக்கு முன்பே கணித்த தீர்க்கதரிசி, இந்திய விடுதலைக்கு முன்பே பெண்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் விடுதலைக்கு வித்திட்ட வித்தகர், சட்ட மாமேதை புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களை இத்தருணத்தில் நினைவுகூர்ந்து நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

"சாதி ஒழிப்பே மக்கள் விடுதலை", என களமாடி, சிதறிக் கிடந்த ஒடுக்கப்பட்ட மக்களை "அமைப்பாய் திரள்வோம்; அதிகாரம் வெல்வோம்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில்

எண்ணற்ற விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் என்னைத் தேர்வு செய்து இப்பேரவையின் உறுப்பினராக்கி அழகு பார்க்கும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களின் பாதுகாவலர், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், சனாதனத்தை வேரறுத்து, ஜனநாயகத்தைப் பாதுகாக்க தன் ஆற்றல் அனைத்தையும் பயன்படுத்தி போராடிவரும், தன் உயிரினும் உயிரான விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சித் தமிழர், எனது அன்பு அண்ணன் முனைவர் தொல். திருமாவளவன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–50

மானமும், அறிவும் மனிதருக்கு அழகு என்று இந்த நாட்டில் வாழும் மக்களுக்கு பகுத்தறிவையும், சுயமரியாதையையும் ஊட்டிய திராவிடத்தின் ஆணிவேர், நம் அனைவரையும் திராவிடன் என்ற ஒற்றைச் சொல்லால் இணைத்து சனாதனத்தை தன் இறுதி மூச்சுவரை எதிர்த்து, அதன் ஆணிவேரை தீயிட்டு எரித்து நாம் தலைநிமிரக் காரணமாக இருந்த பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களுக்கும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என போதித்து, திராவிடக் கொள்கைகளை நீர்த்துப்போகவிடாமல், தேர்தல் அரசியல்மூலம் திராவிட மக்கள், அரசியல் அதிகாரம் பெற காரணமாக இருந்த அறிஞர் அண்ணா அவர்களுக்கும், இந்தத் தருணத்தில் நன்றி கூறி, நினைவுகூர்கிறேன். அறிஞர் அண்ணா அவர்களின் வழியில் ஆட்சிக்கு வந்து தமிழகத்தில் எண்ணற்ற சமூக நீதித் திட்டங்களை நிறைவேற்றி, தமிழர்களின் வாழ்வில் ஒளியேற்றி, வெளிச்சம் தந்த, சமத்துவப் பெரியார், தமிழினத் தலைவர், இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களையும், இந்தத் தருணத்தில் நினைவு கூர்கிறேன். என்னைப் பாராட்டவோ, என்னைப் புகழவோ கூடாது என்று கண்டிப்பாக அன்புக் கட்டளையிட்டாலும் முதல்வர் அவர்களைப் பாராட்டாமல் என் கன்னிப் பேச்சு முழுமை பெறாது. அதனால், எதைப் பாராட்டுவது, என்னவென்று பாராட்டுவது, "ஸ்டாலின்தான் வாராரு, விடியல் தரப் போறாரு", என்ற நம்பிக்கை வார்த்தைக்கு, வாக்களித்த மக்களின் முன்னிலையில் 7–5–2021 அன்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று தாங்கள் முதல்வராகப் பதவியேற்றபோது தலைதாழ்ந்திருந்த தமிழகம் தலைநிமிர்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று வரை கோபுர தரிசனம், கோடி புண்ணியம் என்று இருந்தவர்கள், இன்றோ கருவறைக்குச் சென்று, கடவுள் அருகில் நின்று, நமக்கெல்லாம்

2021 செப்டம்பர் 8] [திரு. மு. பாபு]

புரியும்படி தாய்த் தமிழில் மந்திரம் சொல்லும்வகையில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற மகத்தான சமூக சீர்திருத்தத் திட்டத்தினைச் செயலாற்றி தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றி, ஆட்சியமைத்த 123 நாட்களிலேயே எண்ணற்ற சமூக நீதித் திட்டங்களையும், ஈழத் தமிழர்களின் மறுவாழ்விற்காக, சிறப்புத் திட்டங்களையும் அறிவித்து, தனது நிதானமான அணுகுமுறையினால் உலகத் தமிழர்கள் மட்டுமல்லாமல் இந்திய மாநிலங்களில் வாழும் மக்கள் அனைவரும் பாராட்டக்கூடிய வகையில் நல்லாட்சி புரிந்து வருகின்ற சமத்துவப் பெரியாரின் அரசியல் வாரிசு, சமூக நீதிக் கொள்கையின் நூற்றாண்டின் தொடர்ச்சி, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலும், எனது தொகுதி சார்ந்த மக்களின் சார்பிலும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனது ஆட்சியின்மூலம் கடந்த 123 நாட்களில் தமிழர்களுக்கு பயனளிக்கும்விதமாக சமூக நீதித் திட்டங்களை அறிமுகம் செய்து, ஏற்கெனவே இருக்கின்ற திட்டங்களை செழுமைப்படுத்தியும், தந்தை பெரியார், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நீண்டகாலக் கனவை நனவாக்கியும் வரும் தங்களுக்கு "சமூக நீதி வேந்தன்" என்ற பட்டத்தினை அளிக்க வேண்டும் என்று உலகமெல்லாம் வாழ்கின்ற தமிழர்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நீதித் திட்டங்களை உறுதியுடன் செயல்படுத்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். எனக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிடைத்தபோது, என்னை ஆரத்தழுவி சட்டமன்றத்தில் சந்திப்போம் என்று ஊக்கப்படுத்தி எனக்காக தேர்தல் பரப்புரை செய்து, என் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அண்ணன் உதயநிதி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தவிதமான பின்புலமும் இல்லாத எனக்கு, 8 மாத கைக்குழந்தையாக இருந்தபோது என் தந்தையை இழந்த எனக்கு, அன்பும் அரவணைப்பும் தந்து என்னை மனிதனாக்கிய எனது தாய்க்கும், எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த திராவிட முன்னேற்றக் கழக காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக காஞ்சி தெற்கு மாவட்டக் கழகச்

செயலாளர் அண்ணன் திரு. க. சுந்தர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழக மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியைச் சார்ந்த அனைத்து தோழர்களுக்கும், எனது தலைவரின் உயிரினும் உயிரான விடுதலைச் சிறுத்தைகளுக்கும், எனது செய்யூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துகொள்கிறேன். எங்களது சட்டமன்றக் குழுத் தலைவர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்களுக்கும், எங்களது சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்களுக்கும், எங்களது சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்களுக்கும், எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து மக்கள் பணியாற்றிக்கொண்டிருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், ஏனைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவீரன் தாத்தா இரட்டைமலை சீனிவாசன் மணிமண்டபம் கட்டும் பணியை கடந்த அ.தி.மு.க. அரசு கிடப்பில் போட்டது. அதை அறிந்து தாத்தா அவர்களின் மணிமண்டபத்தினை புதுப்பொலிவுடன் விரைந்து கட்டி முடிக்க ஆணை பிறப்பித்தமைக்கும், திராவிட அரசு உருவாக வித்திட்ட முன்னோடிகளில் ஒருவராகிய அயோத்திதாச பண்டிதருக்கு மணிமண்டபம் அமைக்க உத்தரவிட்டமைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மணிமண்டபத்தினை கிண்டி வளாகத்தில் அமைக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். விடுதலைச் சிறுத்தைகளின் நீண்ட நாள் கோரிக்கையான சாதி மறுப்பு சுயமரியாதைப் போராளி, மாவீரன் இம்மானுவேல் சேகரன் அவர்களுக்கு பரமக்குடியில் மணிமண்டபம் அமைத்து, அவரது பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2021–2022 ஆம் ஆண்டின் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்க மாண்புமிகு நிதியமைச்சருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், வரியில்லா நிதிநிலை அறிக்கையைச் சிறப்பாகத் தயாரித்து இந்தப் பேரவைக்கு வழங்கிய மாண்புமிகு நிதியமைச்சர் அண்ணன் பி.டி.ஆர். பழனிவேல் தியாக ராஜன் அவர்களுக்கும், நன்றியைத் தெரிவித்து, நிதிநிலை அறிக்கையை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நெஞ்சார, மனதார வரவேற்கிறேன்.

பிற்பகல் 1–55

ஒன்றிய அரசு விவசாயத்தை கார்ப்பரேட்டுக்கு தாரை வார்க்கும்வகையில் புதிய வேளாண் சட்டங்களை நிறைவேற்றியுள்ள நிலையில் இந்தப் பேரவையில் மூன்று வேளாண் திருத்தச் சட்டங்களையும் திரும்பப் பெற வேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தினை நிறைவேற்றி இந்தியாவில் தமிழகத்தின் ஆளுமையை வெளிப்படுத்தியிருக்கிறீர்கள். தமிழகத்தின் மீதும், தமிழக விவசாயிகளின் மீதும் அதிக அக்கறைகொண்டு வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்து எங்கள் இயக்கத்தின் கொள்கையான "பனை விதைகளை நடுவோம்; பனை மரத்தைப் பாதுகாப்போம்" என 2017–ல் எங்கள் தலைவர் பிறந்த நாள் அன்று தொடங்கி இன்றுவரை சுமார் 25 இலட்சம் பனை விதைகளை தமிழகம் முழுவதும் ஊன்றியுள்ளோம். தமிழனின் பண்பாட்டு மரமான பனைமரத்தைப் பாதுகாப்போம் என வேளாண் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதற்கு மிகுந்த மகிழ்ச்சி. இந்த அரசு மண் வளத்தின் மீதும் நீர்வளத்தின் மீதும் கொண்டிருக்கின்ற அக்கறையை இது காட்டுகிறது. இதற்காக மீண்டும் ஒருமுறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், வேளாண் துறை அமைச்சர் அண்ணன் மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, வேளாண் நிதிநிலை அறிக்கையை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மனதார வரவேற்கிறோம்.

மேலும், இந்தப் பேரவையில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில் எனது செய்யூர் தொகுதிக்குட்பட்ட 6 மீனவக் கிராமங்களுக்கு மீன் இறங்குதளங்கள் அமைத்திட அறிவிப்பு வெளியிட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை அமைச்சர் அண்ணன் திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொடூர் பகுதியில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை மேம்படுத்த ஊரகத் தொழில் துறை சார்பில் சிட்கோ தொழிற்பேட்டையை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் என் அன்பிற்குரிய அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நன்றி சொல்வதற்கே 7 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

திரு. மு. பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு எனது கருத்துகளைப் பதிவு செய்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பாடநூல்களில் தலைவர்களின் பெயருக்கு பின்னால் இருந்த சாதிப் பெயரை நீக்கி, உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதைப்போலவே, மாணவர்கள் பயிலும் பள்ளிகளின் பெயரிலும் சாதி அடையாளம் நீக்கப்படுவதை உறுதி செய்திட அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1974 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் தாட்கோ தொடங்கப்பட்டது என்பதை இந்த அவையில் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், அவர்களை தொழில்முனைவோர்களாக மாற்ற வேண்டுமென்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையிலும் தொடங்கப்பட்டது தாட்கோ நிறுவனம். அந்த நோக்கம் இன்னும் நிறைவேற்றப்படாத கனவாகவே உள்ளது. முந்தைய அ.தி.மு.க. அரசு, ஒன்றிய அரசு கொடுத்த 150 கோடி ரூபாய் சொற்ப நிதியை மட்டும் வைத்து, கடந்த 10 ஆண்டுகளாக தாட்கோவை நடத்தி வந்தது. 2021–2022 ஆம் ஆண்டிலிருந்து அந்த நிதியையும் ஒன்றிய அரசு குறைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வயிற்றில் அடித்துள்ளது.

மாநில மக்கள்தொகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்தவர்கள் 20 சதவிகிதமாக உள்ளனர். ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.150 கோடி முதல் ரூ.200 கோடி வரை மட்டுமே தாட்கோ கடன் வழங்கி வருகிறது. இந்தத் தொகை சொற்பத் தொகையாகும். இந்தத் தொகையின்மூலம் முத்தமிழறிஞரின் தாட்கோ கனவுத் திட்டம் கானல் நீராகவே உள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு பட்டியலினத்தவர் துணைத் திட்டத்திற்கு மொத்தம் ரூ.14,696 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து ரூ.1,000 கோடியை மாநில அரசு தாட்கோவிற்கு அளித்து, தாட்கோ வங்கியை உருவாக்கி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு தாட்கோ வங்கிமூலம் இணையற்ற கடன் வழங்கி, முத்தமிழறிஞரின் கனவை நனவாக்க

நடப்பு கூட்டத்தொடரில் அறிவிப்புகள் செய்திட அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலித் மக்களுக்கான பஞ்சமி நிலங்கள் பற்றிய விவரங்களைப் பட்டியலிட்டு இணையத்தில் வெளியிட்டு ஆக்கிரமிப்பில் உள்ள பஞ்சமி நிலங்களை மீட்டு பட்டியலின மக்களுக்கு மீண்டும் வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதி மண்ணான தமிழ்நாட்டில் தந்தை பெரியார் கண்ட கனவாகிய சமத்துவபுரங்களை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் அமைத்தார். இருப்பினும், கிராமப்புறங்களில் நிலவும் சாதிய பாகுபாடு, சுடுகாடு வரை நீடித்துள்ளது. அப்படிப்பட்ட சாதிய சுடுகாடுகளை அறவே ஒழித்து, நகரங்களில் இருப்பதுபோல அரசு சார்பில் மின் மயானம் அமைத்து சாதியற்ற சமத்துவ வாழ்வினை உறுதிப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளில் கடந்த 10 ஆண்டுகளில் நிரப்பப்படாத பட்டியல் வகுப்பு பின்னடைவுக் காலிப் பணியிடங்கள் உடனே நிரப்பப்படும் என ஆளுநர் உரையின் வாயிலாக அறிவிப்பு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்ற அதேவேளையில் பின்னடைவுக் காலிப் பணியிடங்களை துறைவாரியாகக் கண்டறிந்து, உரிய காலவரம்பினை நிர்ணயித்து, அந்த காலிப் பணியிடங்களை நிரப்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலில், ஊரக அமைப்புகள் மற்றும் நகர அமைப்புகளில் தலைவர் பதவிக்கு இட ஒதுக்கீடு உள்ளதைப்போலவே, துணைத் தலைவர் பதவிக்கும் சமூக நீதியைக் கருத்திற்கொண்டு இட ஒதுக்கீட்டு நடைமுறையைக் கொண்டுவர வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியின மக்களுக்காக நடத்தப்பட்டு வரும் பள்ளிகளில் 2018–லிருந்து

சுமார் 300 பழங்குடியினர் தற்காலிக ஆசிரியர் பணியிடங்களில் நிரப்பப்பட்டுள்ளனர். அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். நமது மாநிலத்தில் சுமார் 312 பழங்குடியின பள்ளிகள் இயங்கி வருகின்றன. பிற மாநிலங்களில் உள்ளதுபோலவே இந்தப் பள்ளிகளில் அனைத்து ஆசிரியர் பணியிடங்களையும், ஆசிரியர் அல்லாத பிற பணியிடங்களையும், பழங்குடி இனத்தவருக்கு வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் Ph.D. படிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையினை ரூ.50,000/–லிருந்து ரூ.1,00,000/–ஆக உயர்த்தி வழங்கியதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த 2017 முதல் அ.தி.மு.க. அரசு, அரசாணை 51 மற்றும் அரசாணை 52 வாயிலாக பட்டியலின மாணவர்கள் post matric கல்வி ஊக்கத் தொகையை சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் முழுமையாகப் பெற தடை விதித்திருந்தது. 2012 முதல் 2017 வரை சுமார் 1,20,000 பட்டியலின மாணவர்களின் சேர்க்கை சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் இருந்துவந்த நிலையில், கடந்த 4 வருடங்களில் மாணவர் சேர்க்கை 20,000–க்கும் கீழே குறைந்துள்ளது. முந்தைய அ.தி.மு.க. அரசால் கொண்டுவரப்பட்ட மேற்கண்ட அரசாணைகளால்தான் பட்டியலின மாணவர்கள் சேர்க்கை கல்லூரி படிப்புகளில் குறைந்துள்ளது. இது முந்தைய அ.தி.மு.க. அரசு, பட்டியலின மாணவர்களின் கல்வி உரிமையைப் பறித்து அவர்களுக்கு இழைத்த துரோகமாகும். ஆகவே, மேற்கண்ட அரசாணைகளை இரத்து செய்து பட்டியலின மாணவர்களின் எதிர்காலத்தினைப் பாதுகாத்திட தக்க அறிவுரை வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் உரையை முடித்துவிடுங்கள்.

2021 செப்டம்பர் 8]

திரு. மு. பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி ஓராண்டிற்கு இருமுறை கூட்டப்பட வேண்டிய மாநில விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தினை முந்தைய அ.தி.மு.க. அரசின் ஆட்சியில் இருமுறை மட்டுமே கூட்டியுள்ளது. பத்தாண்டு கால ஆட்சியில் 20 முறை கூட்டியிருக்க வேண்டும். இந்த அவலத்தைப் பார்க்கும்போது பல்வேறு வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டுவரும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு முந்தைய அ.தி.மு.க. அரசு எவ்வாறு அநீதியை இழைத்துள்ளது என்பதற்கு இதுவே சான்று. விழிகண் கூட்டத்தை விதிப்படி கூட்டாமல் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைக் கிடப்பில் போட்டிருக்கும் அவலத்தை உடைத்து, ஆட்சி அரியணை ஏறிய 100 நாட்களில் அக்கூட்டத்தை நடத்தியதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பாராட்டினையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். சாதிய வன்கொடுமைகளான கொலை, கொள்ளை, பாலியல் வன்புணர்ச்சி போன்றவற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கடந்த 10 ஆண்டுகளாக தலித் விரோத அ.தி.மு.க. அரசால் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கொடுக்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை, ஓய்வூதியம், வேலைவாய்ப்பு மற்றும் 2 முதல் 5 ஏக்கர் நிலம் ஆகிய நிலுவையில் உள்ள அனைத்தையும் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் SC, ST சிறப்பு உட்கூறு திட்டத்தில் ஆதி திராவிடர் நலத் துறைக்கு 14,696 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் 20 சதவிகிதம் வாழ்கிற ஆதி திராவிட மக்களுக்கு கடந்த பத்தாண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு சிறப்புத் திட்டம்கூட இந்த மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு மற்றும் கல்வி வாய்ப்பிற்காக திட்டமிடாமல் இருந்துள்ளார்கள். கடந்த 10 ஆண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சியில் 2013–ல் கொண்டு வரப்பட்ட Ph.D. படிப்பிற்கான ஊக்கத்தொகை திட்டத்தைத்தவிர, வேறு எந்த சிறப்புத் திட்டமும் இந்த மக்களுக்கு அ.தி.மு.க. அரசால் உருவாக்கப்படவில்லையென பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறேன். ஆனால், இந்தச் சட்டமன்றத் தேர்தலில் 80 சதவிகிதத்திற்கும் அதிகமான பட்டியலின மக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம்முடைய வாழ்வில் விடியலையும், வெளிச்சத்தையும்

தருவாரென நம்பிக்கையுடன் வாக்களித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட சூழலில், நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 14,696 கோடி ரூபாயில் 20 சதவிகிதத் தொகையினை அதாவது, சுமார் ரூபாய் 3,000 கோடி நிதியினை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் மற்றும் செயலாளரின் தலைமையில் திட்டங்கள் செயலாக்கத் துறை ஒன்றினை உருவாக்கி, அந்த நிதியினைக் கொண்டு ஆதி திராவிடர் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் புதிய சிறப்புத் திட்டங்கள் உருவாக்கி, நிதியொதுக்கி, ஆதி திராவிடர் மக்களின் வாழ்வில் ஒளியேற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். உரையை முடியுங்கள்.*

திரு. மு. பாபு: *மேலும், SC, ST துணைத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியில் 50 சதவிகிதத்திற்குமேல் பொதுத் திட்டங்களோ மற்றும் ஒன்றிய அரசின் திட்டங்களோ, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். உரையை முடியுங்கள்.*

திரு. மு. பாபு: *ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். பட்டியலின மக்கள் வளர்ச்சி மற்றும் கல்வி வாய்ப்பினை உருவாக்கும் புதிய திட்டத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக் கோரிக்கையைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுங்கள். அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். கடைசி பேப்பரை எடுங்கள். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. மு. பாபு: *ஒரு நிமிடம். என்னுடைய தொகுதியான செய்யூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி மற்றும் ஒரு SIPCOT அமைத்துத் தரப்படுமென்று தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.*

அதனை அமைத்துக் கொடுத்திட வேண்டும். எனது தொகுதி 100 சதவிகிதம் வேளாண் சார்ந்த தொகுதியாக இருப்பதால் அங்கு அரசு வேளாண்மைக் கல்லூரி ஒன்றினை அமைத்துத் தர வேண்டும். அரசு I.T.I. ஒன்று அமைத்துத் தர வேண்டும். அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைத்துத்தர வேண்டும். செய்யூர் மருத்துவமனையைத் தரமுயர்த்தி பன்னோக்கு மருத்துவமனையாக அமைத்துத்தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசியதாக அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம். நீங்கள் நன்றி மட்டும் சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. மு. பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு."

எது எப்படி அமைய வேண்டுமென்று இயற்றுவதும், அதற்கான பொருளை ஈட்டுவதும், அதைக் காப்பதும், மேலும் அதன் செயல்களை ஒழுங்குபடச் செய்வதும், சிறப்பாகச் செய்வதே அரசு என்ற வள்ளுவனின் வாக்குப்படி தமிழக மக்களின் விடியலுக்காக மானிய கோரிக்கைகளைத் தாக்கல் செய்து, அதன் விவாதத்தில் பங்குபெற்று எனது உரையைப் பொறுமையுடன் கேட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி, அமர்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

பனங்காட்டுச்சேரி என்ற இடத்தில் கல்பாக்கம் அணுமின் நிலையத்தால் நாளொன்றுக்கு 1,59,11,315 லிட்டர் தண்ணீர் அணுமின் நிலைய ஆய்வு மற்றும் குடியிருப்புகளின் பயன்பாட்டிற்காக எடுக்கப்படுவதால், B மற்றும் C பிரிவு வேலைவாய்ப்புகள் சுற்று வட்டார இளைஞர்களுக்கே வழங்கப்பட ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி, தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செய்யூர் சட்டமன்றத் தொகுதி, கிழக்கு கடற்கரைச் சாலையை ஒட்டிய பகுதிகளில் உப்பளத் தொழில் மேற்கொள்ளும் நிறுவனங்களில் பல்வேறு முறைகேடுகளும், தொழிலாளர்களுக்கு முறையான ஊதியம், சேமநல நிதி வழங்காமை உள்ளிட்ட

பிரச்சினைகள் இருப்பதால் இதை அரசே ஏற்று நடத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செய்யூர் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சி, நிலத்தடி நீரைச் சுத்தம் செய்ய ஒருங்கிணைந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செய்யூர் தொகுதி, கூவத்தூர், குடிநீர் தட்டுப்பாடு இருப்பதால், பாலாற்றில் கிணறு அமைத்து, குழாய்மூலம் நீரேற்றம் செய்து, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் விநியோகம் செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செய்யூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், புதுப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் இஸ்லாமியப் பெண்கள் இருபாலர் படிக்கும் பள்ளியில் சேரத் தயங்குவதால், புதுப்பட்டினம் பகுதியில் ஓர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செய்யூர் தொகுதி, வல்லிபுரம்–கடலூர் காரத்தி வரை பாலாறு பயணித்து கடலில் சென்று வீணாவதால், 3 கி.மீ. தொலைவில் ஒன்று வீதம் தடுப்பணைகள் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மணல் கொள்ளையைத் தடுக்க இலத்தூர் ஊராட்சிக்குட்பட்ட பொய்கைநல்லூர், தண்டரை பகுதிகளில் காவல் சோதனைச் சாவடி மற்றும் கண்காணிப்புக் கேமரா வசதி ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செய்யூர் தாலுகா, ஓங்கூர் ஆற்றின் குறுக்கே சிறுமைலூர்–கடவம்பாக்கம் இடையே உயர் மேம்பாலம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செய்யூர் தொகுதி, வெங்கம்பாக்கம் முதல் வெண்ணாங்குபட்டு வரையுள்ள பகுதியில் அவசர விபத்து சிகிச்சை மையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலையில் ஆம்புலன்ஸ் வாகன ஓட்டுநர்களுக்கும், பாராமெடிக்கல் துணை மருத்துவர்களுக்கும் தங்கும் வசதிகள் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செய்யூர் தொகுதி, நத்தம் நிலவரித் திட்டத்தின்மூலம் கொடுக்கப்பட்ட பட்டா நிலங்களை முறையாக கிராமக் கணக்குகளில் ஏற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செய்யூரைத் தலைமையிடமாகக் கொண்டு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகமும், தீயணைப்பு நிலையமும் உருவாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செய்யூர் தொகுதி முழுவதும் மினி பேருந்து வசதி ஏற்படுத்தித் தருமாறும், அலம்பரை கோட்டை வீட்டை சுற்றுலா மையமாக அறிவித்திடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

செய்யூர் தொகுதி, நைனார்குப்பம் பகுதி, இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான எல்லையம்மன் ஆலயத்தில் அன்னதானத் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள். உரையை சீக்கிரமாக முடிக்க வேண்டும். இன்னும் மூன்று மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்ற வேண்டும்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது இம்மாமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி. உலகமெங்கும் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் சமுதாய மக்களின் மனதிலே இடம் பிடித்திருக்கிற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். ஆட்சிப் பொறுப்பேற்று 125 நாட்களில் வரலாற்றுச் சாதனைகளையெல்லாம் படைத்திருக்கிற கழகத்தினுடைய தலைவர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது வெற்றிக்காகப் பரப்புரையாற்றிய இளைஞரணி வழிகாட்டி மாண்புமிகு சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். இம்மாமன்றத்திலே 50 ஆண்டுக்காலம் பொன்விழா கண்டிருக்கிற மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களையும் அவ்வப்போது தேர்தல் நேரங்களில் ஆலோசனைகளை வழங்கிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களையும்

வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கங்கள். நாமக்கல் கிழக்கு மாவட்ட நிர்வாகிகளின் திருமண நிகழ்வுகளில் அவ்வப்போது வீட்டிற்கே சென்று ஒரு கிராம் தங்கம் மற்றும் கழக நிர்வாகிகளின் துக்க நிகழ்வுகளின்போதும் அவர்கள் வீட்டிற்கே சென்று 5,000 ரூபாய் வழங்கியும் மற்றும் கொரோனா பெருந்தொற்றால் முக்கியமான கழக நிர்வாகி இறந்திருந்தால் அவர்கள் குடும்பத்திற்கு கலைஞர் குடும்ப நல நிதியாக 50,000 ரூபாய் நிதி வழங்கியும் மற்றும் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருக்கிற கழக நிர்வாகிகளுக்கு 25,000 ரூபாய் வழங்கியும், கொங்கு மண்டலத்திலே நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாமக்கல், சேந்தமங்கலம், ராசிபுரம் ஆகிய தொகுதிகளில் கழகத்தினை வெற்றிபெறச் செய்த மாவட்டக் கழகப் பொறுப்பாளர் திரு. ராஜேஷ் குமார் அவர்களை வணங்கியும், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் நிருவாகிகள் மற்றும் என்னை இரண்டாவது முறையாக வெற்றிபெறச் செய்த சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றிகலந்த வணக்கத்தை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கொல்லிமலைக்கு வருகைபுரிந்து கடையெழு வள்ளல்களில் ஒருவராகத் திகழ்ந்த கொல்லிமலையை ஆண்ட வல்வில் ஓரி மன்னனுக்கு சிலையைத் திறந்து வைத்து, கொல்லிமலையை உலகத்தரத்திற்கு எடுத்துக் காட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

வல்வில் ஓரி மன்னன் என்பவர் வேட்டையாடுவதில் சிறந்தவர். ஒரு நாள் வேட்டைக்குச் செல்லும்போது தன் வில்லை வளைத்து ஒரு யானையின்மீது அம்பை எய்தினார். மற்றவர்கள் எய்திருந்தால் அந்த யானையைப் புண்படுத்தி அதன் உடலிலே தங்கியிருக்கும். ஆனால், அவர் எய்த அம்பு அந்த யானையைக் கீழே வீழ்த்தியது. அந்த யானைக்குப் பின்னால் அதன்மேல்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பாய்வதற்கு ஒரு புலி வாயை திறந்துகொண்டே நின்றது. அந்த அம்பு புலியின் வாய்க்குள்ளே சென்று அதையும் மாய்த்தது. அதன்பின் உடும்பையும் துளைத்து புறப்பட்டது. அங்கே நின்றிருந்த ஒரு மானையும் ஊடுருவி அதை உருட்டியது. பிறகு காட்டுப் பன்றி ஒன்றின் உயிரை வாங்கியது. அதற்குமேல் அப்பால் இருந்த புற்றுக்குள் நுழைந்திருந்த உடும்பையும் துளைத்தது. ஓர் அம்பினால் ஏழு விலங்குகளை வீழ்த்திய அந்த வல்வில் ஓரி மன்னன் வேட்டையாடுவதைப் பார்த்து பாணனும்-பிறரும் வியப்பில் ஆழ்ந்தனர். கடையெழு வள்ளல்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்தான் வல்வில் ஓரி மன்னன். தற்போது எட்டாவது வள்ளலாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மலைவாழ் மக்கள் மிளகு சாகுபடி செய்து வருகிறார்கள். அது அவர்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளது. அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான, அவர்களது கஷ்டத்தையும், துயரத்தையும் போக்கும் வகையில் கொல்லிமலை பகுதியிலே விளையும் மிளகைப் பதப்படுத்தி வைக்க பதப்படுத்தும் மையம் ஒன்று அமைத்திடவும், மிளகுக்கு உரிய விலை கிடைப்பதற்கு புவிசார் குறியீடு வழங்கிடவும் அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பிலும், கொல்லிமலை மலைவாழ் மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொரோனா என்ற பெருந்தொற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றி தேர்தல் நேரத்தில் கொடுத்திருந்த வாக்குறுதிகளை கொரோனா காலத்தில் மக்கள் பாதிக்கப்படாத வகையில் முதல் தவணையாக 2,000 ரூபாயும், இரண்டாவது தவணையாக 2,000 ரூபாயும், மொத்தம் 4,000 ரூபாயும் மற்றும் 14 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினையும் வழங்கிய ஆட்சிதான் கழகத்தினுடைய ஆட்சி என்று இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலேயே எந்த மாநிலமும் செய்யாத சாதனைகளான பெட்ரோல் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் குறைத்த, ஆவின் பால் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் குறைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மகளிர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம் மேற்கொள்ள ஆவன செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறப் பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களுடைய 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தினை 150 நாட்களாக உயர்த்தி, நாளொன்றுக்கு 300 ரூபாய் வழங்கவும், ஊராட்சிகளில் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தைச் செயல்படுத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்ணியமிக்க காவல் துறையினருக்கு வாரம் ஒரு நாள் விடுப்பு மற்றும் பெண் காவலர்களைப் பாதுகாப்புப் பணியிலே வழிநெடுகிலும் நிற்க அனுமதிக்கக் கூடாது என்று ஆணை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் புதிய உறுப்பினர்களைச் சேர்த்து உடனடியாக பயிர்க் கடன் வழங்க உத்தரவு பிறப்பித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி கோரிக்கைகளில், கொல்லிமலைப் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டுமென்றும், சேந்தமங்கலம் அரசு உறுப்பு கலைக் கல்லூரிக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டுமென்றும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேந்தமங்கலம் தொகுதியில் மாம்பழச் சாறு தயாரிக்கும் மாம்பழக்கூழ் தொழிற்சாலை அமைக்க மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் வீட்டு வசதி வாரியம் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புக் கட்ட மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலைப் பகுதிகளிலே செல்லும் மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடக் கம்பிகளாக மாற்றியமைக்க மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எருமப்பட்டி ஒன்றியம், தலமலை பெருமாள் கோயிலுக்கு மாதந்தோறும் இந்தியா முழுவதிலுமிருந்து அதிகளவில் பக்தர்கள் வருகிறார்கள். அதனால், அந்தத் திருக்கோயிலுக்கு கிரிவலம் சாலை அமைத்து, அதை ஆன்மீகச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2—10

காரவள்ளி வனப் பகுதி நுழைவுவாயில், கொல்லிமலைப் பகுதியில் மிளகு, காப்பி, மரவள்ளி போன்ற விளைபொருட்களுக்கான கொள்முதல் நிலையங்களை அமைக்க வேண்டுமென்றும், சேந்தமங்கலம் ஒன்றியத்தில் உழவர் சந்தை அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். சேந்தமங்கலம் கலைக் கல்லூரிக்கு அருகில் அரசுக்குச் சொந்தமான இடம் உள்ளது. அந்த இடத்தில் தோட்டக்கலைத் துறை மூலமாக பழப் பண்ணை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன். கொல்லிமலைப் பகுதியில் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகப் பிரிவு அலுவலகம் ஒன்று அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நரியங்காடு முதல் தேடூர் நத்துக்குழி வழியாக அறப்பளீஸ்வரர் கோயிலுக்குச் செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாமக்கல் முதல் எருமைப்பட்டி வழியாக துறையூர் செல்லும் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்த வேண்டுமென்றும், சோளக்காடு முதல் சேளூர் வழியாக அறப்பளீஸ்வரர் கோயிலுக்குச் செல்லும் சாலையை இருவழிச் சாலையாக அமைத்துக் கொடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். கொல்லிமலைப் பகுதியில் இரண்டு காவல் நிலையங்கள் உள்ளன. அவற்றில் செம்மேட்டில் உள்ள காவல் நிலையத்திற்கு கட்டடம் உள்ளது. செங்கரையில் உள்ள காவல் நிலையம் பேருந்து நிலையத்திலுள்ள கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதற்குப் புதிதாக கட்டடம் கட்டித் தர ஆவன செய்யுமாறு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கொல்லிமலையிலுள்ள தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் இல்லாமல் தனியார் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள அனைத்து விவசாயச் சங்கங்களுடைய கோரிக்கை: விவசாய மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால்தான் 1972 ஆம் ஆண்டு நுகர்பொருள் வாணிபக் கழகம் துவக்கப்பட்டது. அங்கே கொள்முதல் செய்யப்படும் குறுவை நெல் சாகுபடியில் 17 சதவிகிதம் ஈரப்பதம் என்ற நிலையில் கொள்முதல் செய்யப்படுகிறது. இப்பொழுது 20 சதவிகிதம் ஈரப்பதம் என்ற நிலையில் கொள்முதல் செய்து முதல்வர் தளபதி அவர்கள் விவசாயிகளைப் பாதுகாத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்சமயம் டெல்டா மாவட்டங்கள் ஈரோடு, சத்தியமங்கலம், அந்தியூர் மற்றும் கோபியில் நெல் அறுவடை செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே கொள்முதல் செய்வதற்கான ஈரப்பதம் 17 சதவிகிதம் என்ற விதியைத் தளர்வு செய்ய வேண்டுமென விவசாயிகள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதியில் நீதிமன்றம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நெல் கொள்முதல் செய்வதற்கான ஈரப்பதம் 17 சதவிகிதம் என்றிருப்பதை 20 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். டெல்டா பகுதிகளிலும் மற்றும் ஈரோடு மாவட்டத்திலும் தற்போது குறுவை சாகுபடி நடந்து வருகிறது. எனவே, விவசாயிகள் அவ்வாறு கோரிக்கை வைத்ததாக அவர்கள் இங்கே கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் இது குறித்து என்னிடத்திலே வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்த அவையிலே நான் பொதுவாக எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்

2021 செப்டம்பர் 8] [திரு. அர. சக்கரபாணி]

தெரிவித்துக்கொள்வது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஏழு பேர் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைவராகவும், மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஒருங்கிணைப்பாளராகவும், அதேபோன்று வேளாண்மை இணை இயக்குநர், கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் மற்றும் இரு விவசாயப் பிரதிநிதிகளைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அவர்கள் எங்கெங்கெல்லாம் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும் என்று முடிவுசெய்து, விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்படுகின்ற வகையில் அந்த கண்காணிப்புக் குழு செயல்பட்டுவருகிறது. ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நடப்பு 2021 கொள்முதல் பருவத்தில் கோபிசெட்டிபாளையம் வட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப் பகுதிகளில் 5 நேரடி கொள்முதல் நிலையங்கள் 28–8–2021 அன்றும், 8 நேரடி கொள்முதல் நிலையங்கள் 1–9–2021 அன்றும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த 13 நேரடி கொள்முதல் நிலையங்களில் 6–9–2021 வரை 240.40 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் நுகர்வோர் விவகாரம் உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சரக உணவு மற்றும் பொது விநியோகத் துறை 28–9–2020 அன்று வெளியிட்டுள்ள கடிதத்தில், நடப்பு கொள்முதல் பருவத்தில், அதாவது 2020–2021—ல் கொள்முதல் செய்ய வேண்டிய நெல்லின் தர அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பதம் அதிகபட்சம் 17 சதவிகிதம் மட்டுமே இருக்க வேண்டும். ஆதலால் அதன்படியே கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது ஈரோடு மாவட்டத்தில் பெய்துவரும் மழையால் ஈரப்பதம் அதிகமாக உள்ளதாகவும், அதனால் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் அதிகபட்ச ஈரப்பதத்தை 17 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளனர். ஈரப்பதத்தை அதிகபட்சமாக 17 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக உயர்த்த ஒன்றிய அரசின் அனுமதி பெற வேண்டும். அதற்கான அனுமதி பெற 6–9–2021 அன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் அவர்கள் ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். ஒன்றிய அரசிடமிருந்து அனுமதியைப் பெற்று, நெல்லின் ஈரப்பதத்தை 20 விழுக்காடாக உயர்த்த நடவடிக்கை

எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வதோடு, ஏற்கெனவே 2021 ஆம் ஆண்டு காரிப் பருவத்தில் ஒன்றிய அரசிடமிருந்து அனுமதியைப் பெற்று, ஒவ்வொரு அதிகபட்ச விழுக்காடு ஈரப்பதத்திற்கும் மொத்தக் கொள்முதல் விலையில் 1 விழுக்காடு குறைக்கப்பட்டு, டெல்டா பகுதியில் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–15

ஈரோடு மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி ஈரப்பதம் அதிகமாக உள்ள நெல்லை உலர வைப்பதற்கான வழிவகைகள் பற்றி ஆராயப்பட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு மாவட்டத்திலுள்ள நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 24 நெல் அரவை முகவர்களுக்கும் ஈரப்பதம் அதிகமாக உள்ள நெல்லை அவர்களிடமுள்ள நெல் உலர் இயந்திர கலன்களைக் கொண்டு உலர வைத்து, கொள்முதல் செய்து, அரவை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். மேலும், புதிய அரவை முகவர்களைக் கண்டறிந்து, அவர்களிடம் ஈரப்பதம் அதிகமாக உள்ள நெல்லை உலர வைத்து, கொள்முதல் செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.6–9–2021வரை ஈரோடு மாவட்டத்தில் 240.40 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 7–9–2021 அன்று 404 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இன்று 156 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, ஈரோடு மாவட்டத்தில் ஏற்கெனவே இருந்த 13 கொள்முதல் நிலையங்களுடன் சேர்த்து, நேற்று 12 புதிய நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, தற்போது 25 நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பாட்டில் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அரசு நெல் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, நெல்லின் ஆதார விலை, சன்ன இரகத்திற்கு 2,060 ரூபாய் எனவும், பொது இரகத்திற்கு 2,015 ரூபாய் எனவும் உயர்த்திக் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கிருக்கின்ற சட்டமன்ற

உறுப்பினர்களும் சரி, பொதுமக்களும் சரி, நல்ல தரமான அரிசி வேண்டும் என்று சொல்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அதேசமயத்தில் டெல்டா மாவட்டங்களிலும் சரி, டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் சரி, நெல்லை அதிகமான ஈரப்பதத்தோடு வாங்கிவிட்டால், அதை எப்படி அரவை செய்து, பொது மக்களுக்கு எப்படி தரமான நல்ல அரிசியைக் கொடுக்க முடியும் என்பதையும் தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளின் நலன் காக்கின்ற விதத்தில், அதே நேரத்தில் பொது மக்களின் நலனையும் காக்கின்ற விதத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அரசு நல்ல முடிவுகளை எடுத்து, விவசாயிகளுடைய நெல்லை நல்ல முறையில் கொள்முதல் செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள், ஒரேயொரு வரியில் ஒரு கேள்வியைக் கேட்டு முடியுங்கள். 15 நிமிடங்கள் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர், 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. நன்றி சொல்லி உரையை முடியுங்கள். மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் பழங்குடியின M.L.A. எனக்கு அதிக வாய்ப்பினைக் கொடுக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் நீதிமன்றக் கட்டடம் இல்லாமல், தனியார் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. புதிய கட்டடம் கட்டித் தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். கொல்லிமலை ஒன்றியத்தில் 14 ஊராட்சிகள் உள்ளன. இவற்றில் 7 ஊராட்சிகளைச் சேர்ந்தவர்கள் நாமகிரிப்பேட்டையிலுள்ள பத்திரப் பதிவு அலுவலகத்தில் பத்திரங்களைப் பதிவு செய்து வருகிறார்கள். மீதமுள்ள 7 ஊராட்சிகளைச் சேர்ந்தவர்கள் சேந்தமங்கலத்திலுள்ள பத்திரப் பதிவு அலுவலகத்தில் பத்திரங்கள் பதிவு செய்து வருகிறார்கள். மலைவாழ் மக்களின் நலன் கருதி, கொல்லிமலை பகுதியிலே ஒரு பத்திரப் பதிவு அலுவலகம்

அமைத்துத் தர மாண்புமிகு வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட சேந்தமங்கலம் ஒன்றியம் பேளுக்குறிச்சி அரசு ஒன்றிய மேல்நிலைப் பள்ளி பழுதடைந்த நிலையில் உள்ளதால், அப்பள்ளியைச் சீரமைத்து கூடுதல் வகுப்பறைகளைக் கட்டித் தர மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அரியாகவுண்டன்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், மோகனூர் பட்டணம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாக தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தற்போது மக்கள்தொகை அதிகரிப்பால் இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். நாமகிரிப்பேட்டை பேரூராட்சிப் பகுதியில் நூலகக் கட்டடம் அமைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். நாமகிரிப்பேட்டை பகுதியிலுள்ள ஜேடர்பாளையம் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டித்தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு அரசால் கட்டப்பட்ட வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. ஆகவே, அந்த வீடுகளைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்கள் 40 ஆண்டுகளுக்கு மேலாக அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளில் பட்டா இல்லாமல் குடியிருந்து வருகிறார்கள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பட்டா வாங்க மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, உடனடியாகப் பட்டா வழங்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2—20

கொல்லிமலை பகுதியில் தீர்வு ஏற்படாத தரிசு நிலங்களிலெல்லாம் மலைவாழ் மக்கள் சுமார் 40 ஆண்டுக் காலம் பயிர் செய்து வருகிறார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். தொகுதிப் பிரச்சினைகளையெல்லாம் என்னிடம் கொடுங்கள். அவற்றைப் பதிவு செய்துவிடலாம்.

திரு. கே. பொன்னுசாமி: ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மலைவாழ் மக்கள் அதிக அளவில் வசிக்கக்கூடிய கொல்லிமலைப் பகுதியில் மலைவாழ் மக்களுடைய வாழ்க்கை முறையை மேம்படுத்த, கொல்லிமலை பகுதியிலே பழங்குடியின துணை ஆராய்ச்சி மையம் அமைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியின மக்களுக்கு என தனி அரசுத் துறை அமைக்க வேண்டும். இதற்காக 38 மாவட்டங்களில் 38 இடங்களில் தனி அலுவலர்களை நியமிக்க ஆவன செய்ய வேண்டும். 38 மாவட்டங்களில் வருவாய் கோட்டாட்சியர் (RDO), மாவட்ட வருவாய் அலுவலர் (DRO), இணை ஆணையாளர் என மொத்தம் 77 பதவிகள் உள்ளன. அப்பதவிகளில் பழங்குடியின மக்களுக்கு இட ஒதுக்கீடு இல்லை. அதனால் பழங்குடியின மக்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பழங்குடியின மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க மாவட்டந்தோறும் அரசு அலுவலர்கள் மற்றும் மக்களுக்குச் சேவை செய்யும் மக்கள் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன்னுசாமி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன், அவ்வளவுதான். பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் ஒரு சதவிகித இட ஒதுக்கீட்டை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் வழங்கினார்கள். தற்போது பழங்குடியின மக்களுக்கு இட ஒதுக்கீடு அனைத்துத் துறைகளிலும் முறையாகப் பின்பற்றப்படாமல் உள்ளது. அரசுத் துறையின் மூலமாக, 50–க்கும் குறைவாக உள்ள பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பை அறிவிக்கும்போது பழங்குடியின மக்களுக்கு வாய்ப்பு கிடைக்காமல் போகிறது. அதனால், 50–க்கும் குறைவான அரசுத் துறை வேலைவாய்ப்பு காலிப் பணியிடங்களை அறிவிக்கும்போது, அந்த இடங்களின் ஒதுக்கீட்டில், பழங்குடியின மக்களுக்கு வாய்ப்பளித்தால் மிகவும் பயனடைவார்கள் என்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் வீட்டு வசதிக்கென ஆதி திராவிடர் வீட்டு வசதிக் கழகம் உள்ளதுபோல், பழங்குடியினருக்கும் நிதியுதவி வழங்கும் தனி அமைப்பாக Tribes Finance and Development Corporation அமைத்துக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இன்று 3 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) இன்றைக்கு பிற்பகல் 5–00 மணிக்கு evening session இருக்கிறது.

திரு. கே. பொன்னுசாமி: பழங்குடியின மக்களுடைய நிலங்களை பழங்குடியினத்தவர் அல்லாதவர்கள் பெயரில் பட்டாவை மாற்றி பதிவு செய்து வருவதைத் தடை செய்து வருவாய்த் துறையின் Standing order No.1540 மற்றும் G.O. (Ms.) No.561-ல் என்ற அரசாணைகள் தமிழக அரசால் வெளியிடப்பட்டுள்ளன. மேற்காணும் அரசாணைகளைப் பொருட்படுத்தாமல் பழங்குடியின மக்களுடைய அறியாமையைப் பயன்படுத்தி பத்திரப் பதிவுத் துறைமூலம் பட்டா மாற்றம் செய்து வருகிறார்கள். இதனால் பழங்குடியின மக்களுடைய வாழ்வாதாரமும், அவர்களுக்கு என இருக்கும் நிலங்கள் அனைத்தும் பறிபோகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இது முக்கியமான பிரச்சினை. அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களுக்கு

மாதம் ரூ.8,000/–ம், பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.9,000/–ம், முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ.10,000/–ம் ஊதியம் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை காலமுறை ஊதியமாக்க வேண்டும், அவ்வளவுதானே! சரி, நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: அவ்வளவுதான். மின்சார வசதி, ஆசிரியர் குடியிருப்பு ஆகிய வசதிகள் குறைவாக உள்ள இடங்களில்தான் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இங்கு உள்ளூரைச் சேர்ந்த பழங்குடியினத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களாகத் தற்காலிகமாகப் பணியாற்றி வருகிறார்கள். ஆகையால் அவர்களுக்கு ஊதியத்தை சற்று கூடுதலாக உயர்த்தினால் ஊக்கத்துடன் அவர்கள் பணியாற்றுவார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், நன்றி என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டு, உட்காருங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள நிரந்தர வசிப்பிடம் இல்லாத நரிக்குறவ இன மக்களுக்கு நிரந்தரமாக வசிப்பதற்கு, நிரந்தர முகவரி தந்து உதவிட வேண்டுமாய் இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: பழங்குடியின வாரிசுச் சான்றிதழ் வழங்குவதில் சில குளறுபடிகள் உள்ளன. கலப்புத் திருமணம் என்ற பெயரிலே பழங்குடியினப் பெண்களை உயர் ஜாதி வகுப்பினர் கலப்புத் திருமணம் செய்துகொள்கிறார்கள். அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு மலைவாழ் மக்கள் சான்று பெறுகிறார்கள். அப்படி வழங்குகிறபோது எங்களுக்கு வழங்கப்படுகிற சலுகை பறிபோகும் நிலை உள்ளது. கணவன் எந்த வகுப்பைச் சார்ந்தவரோ அந்த வகுப்புச் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, வணக்கம் மட்டும் சொல்லுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: என்னுடைய கோரிக்கைகளை நான் இந்த மாமன்றத்திலே படித்ததாகக் கருதி, அவற்றைப் பதிவு செய்துகொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

காரவள்ளி வனப் பகுதி நுழைவு வாயிலில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் வனத் துறையின் மூலமாக வனவியல் பூங்கா அமைக்கவும் மற்றும் சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி, காரவள்ளி வனக் காப்புக் காட்டில் உள்ள மூங்கில் மரங்களை அகற்றிவிட்டு நீர்வளத்தை அதிகரிக்கும் வகையில் மரங்களை நடவு செய்ய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை பகுதியில் அரசுப் போக்குவரத்து வாகனங்களைப் பராமரிக்க பணிமனை அமைக்க ஆவன செய்யுமாறும் மற்றும் நாமகிரிப்பேட்டை பேரூராட்சிப் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க ஆவன செய்யுமாறும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலைப் பகுதியில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக பெட்ரோல், டீசல் பங்க் அமைக்க வேண்டும். கொல்லிமலை ஒன்றியத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தெம்பளம் லேம்ப் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை பகுதியில் சித்தா மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும் எனவும் எருமப்பட்டி ஒன்றியத்திலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரமுயர்த்த வேண்டும் எனவும் கொல்லிமலை தாலுகா மருத்துவமனைப் பகுதியில் உடற்கூறு ஆய்வகம் அமைக்க வேண்டும் எனவும் தோ.ஜேடர்பாளையம் பகுதியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 20 படுக்கைகள் கொண்ட வசதியுடன் மேம்படுத்தி விரிவுபடுத்த வேண்டும் எனவும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், இருக்கையில் இல்லை.

பதிலுரை, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2—25

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் தத்துவ மூலவர், பகுத்தறிவு பகலவன், தலைவர் தந்தை பெரியார் அவர்களையும், காஞ்சி தந்த காவியத் தலைவன் பைந்தமிழ் தேர்ப்பாகன், நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களையும், உலகம் முழுவதும் வாழும் 10 கோடி தமிழர்களின் ஒட்டுமொத்தத் தலைவர், நின்ற தேர்தல்களிலெல்லாம் வென்ற தலைவர், அரை நூற்றாண்டுக்கால தமிழ்நாட்டு தினசரிகளின் தலைப்புச் செய்தியாகவே இருந்து, மறைந்தும் மறையாமல் அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்று, வங்கக் கடலோரம் ஓய்வுகொண்டிருக்கும் முத்தமிழறிஞர், தானைத் தலைவர் கலைஞர் அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) அடிமைச் சமூகம் ஏற்றம் பெற, அடிப்படைக் கட்டமைப்பு மாற்றம் பெற காலமெல்லாம் உழைத்த உலக சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களையும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தானைத் தலைவர் கலைஞர் ஆகிய மூவரின் கூட்டுக் கலவையாக வாழ்ந்து, சரித்திரச் சாதனை புரிந்துகொண்டிருக்கும் உலகத் தமிழர்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் உதயசூரியனாகவும், இதய சூரியனாகவும், இந்தியா முழுவதும் வெளிவரும் செய்தித் தாள்களில் முதலமைச்சர்களின் முதல்வராய்—King of Kings—முதன்மை பெற்று, நாடே வியக்கும்வகையில் நூறு நாட்களில் 5 ஆண்டுக் காலத் திட்டங்களைக் கொண்டு வந்துள்ள சமூக நீதியின் காவலர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் தளபதியார் அவர்களையும் முதலில் வணங்கி, எனது நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு ஆதி திராவிடர், பழங்குடியினர் நல ஆணையம் என்கிற புதிய அமைப்பு ஒன்றை தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும்வகையில் உருவாக்க சட்டம் இயற்றப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முறையில், அடிப்படையில் உங்களைப்போல் நானும் ஒரு பள்ளி ஆசிரியர்தான். தமிழகத்தின் ஒரு மூலையில் கரூர் மாவட்டத்தில், கழகப் பணியினைக் காலங்காலமாகச் செய்துவரும் தி.மு. கழகக் குடும்பத்தில் பிறந்து, பிறகு திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் மற்றொரு கழக நடுத்தரக் குடும்பத்தில் குடும்பத் தலைவியாக வாழ்ந்துவந்த என்னை, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளராக அறிவித்து, என் வெற்றிக்காக பல ஆயிரம் பேர் கூடியிருந்த பிரம்மாண்ட பொதுக் கூட்டத்தில் பிரச்சாரம் செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், கொளுத்தும் வெயிலில் பகல் இரண்டு மணிக்கு திறந்தவெளியில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த பிரச்சாரக் கூட்டத்தில் 30 நிமிடங்களுக்கு மேல் மக்கள் கடலில் நீந்தி, நான் வெற்றி பெறுவதற்குப் பெரிதும் காரணமாக இருந்த ஈட்டிக்கு மார்பைக் காட்டும் கூட்டத்தின் தலைவன், இலட்சக்கணக்கான இளைஞர்களின் இயந்திரத் துப்பாக்கி, கழக இளைஞரணிச் செயலாளர் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் ஊரின் மாப்பிள்ளை அன்புச் சகோதரர் மாண்புமிகு திரு. உதயநிதி அவர்களுக்கும், ஒரு நாள் வந்தாலும் ஆயிரக்கணக்கான மகளிரை தன் பேச்சால், எளிமையான அணுகுமுறையால் கவர்ந்திழுத்து எங்கள் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த கழக மகளிரணிச் செயலாளர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரி கவிஞர் கனிமொழி அவர்களுக்கும், தாராபுரம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளராக நான் போட்டியிடுவதற்கு என்னைக் கழகத் தலைவரிடம் அடையாளம் காட்டிய திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாய் இருந்து, எனக்கு ஆலோசனைகள் வழங்கிய திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் அன்பிற்குரிய சகோதரர் திரு. இல. பத்மநாபன் அவர்களுக்கும், நான் தேர்தலில் வெற்றிபெற கடுமையாக உழைத்த கழகப் பொறுப்பாளர்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், தோழமைக் கட்சியின் நண்பர்களுக்கும், எனக்கு வாக்களித்து எனது வெற்றியை இந்தியா முழுவதும் பேச வைத்த தாராபுரம்வாழ் வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2021 செப்டம்பர் 8] [திருமதி நா. கயல்விழி]

எனது பெற்றோர், எனக்கு கல்வியளித்த ஆசிரியப் பெருமக்கள், பொது வாழ்வில் நான் ஈடுபட அனுமதியளித்த என் குடும்ப உறுப்பினர்கள், 35 ஆண்டு காலம் வழக்கறிஞராகவும், 25 ஆண்டு காலம் கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளராகவும் பணியாற்றிக் கொண்டு, அடிப்படையில் எனக்கு அரசியல் சொல்லிக் கொடுத்த எனது கணவர் ஆகியோருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் சட்டமன்றத் தொகுதி மக்களின் 50 ஆண்டுக் காலக் கனவை நனவாக்கி, தாராபுரத்திற்கு புதிதாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டு வர அறிவிப்பு வெளியிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021–2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வெளிநாடு சென்று கல்வி கற்பதற்கான கல்வி உதவித்தொகைத் திட்டத்திற்காக ரூ.5 கோடி நிதியொதுக்கீடு செய்தும், விடுதிகளில் பயிலும் மாணவர்களின் மாதாந்திர சில்லரைச் செலவினக் கட்டண உதவித்தொகையை இரண்டு மடங்காக உயர்த்தியும், இத்துறையின்கீழ் இயங்கும் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளை மேம்படுத்த சிறப்பு மூலதன ஒதுக்கீடாக ரூபாய் 25 கோடி ஒதுக்கீடும் செய்த மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–30

தமிழக வரலாற்றில் முதன்முறையாக வேளாண்மைக்கென்று தனி நிதிநிலை அறிக்கை வெளியிட அனுமதி அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்தில் ஆழ்துளை அல்லது குழாய்க்கிணறு அமைத்து மின் மோட்டாருடன் நுண்ணீர் பாசன வசதி ஏற்படுத்தித் தருவதற்காக ரூ.12 கோடி நிதி ஒதுக்கீடு என்ற அறிவிப்புக்கு மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்கின்ற பகுதிகளில் அமைந்துள்ள 1,250 திருக்கோயில்களின் திருப்பணிக்காக வழங்கப்பட்டு வந்த நிதியை தலா ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்கியதற்கும், திருப்பூர் மாவட்டம், தாரம்பாடி, அருள்மிகு குலமாணிக்கீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் புதிய இளைப்பாறும் மண்டபம் கட்டுவதற்கும் அறிவிப்பை வெளியிட்ட மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எத்தனையோ ஜாம்பவான்கள் மற்றும் அரசியல் மேதைகள் அமர்ந்து அரும்பெரும் சாதனைகளைப் புரிந்துள்ளார்கள். இந்த மன்றத்தில் சாமானியரான நான் உங்கள் மத்தியில் பேசுவதைப் பெரும்பேறாகக் கருதி, மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு அவை முன்னவர், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய அனைவரையும் வணங்கி, என் உரையைத் துவக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வில் அரணாக இருந்து அவர்களின் சமூகப் பொருளாதார நிலை மேம்பட, எப்பொழுதெல்லாம் நமது ஆட்சி அமையப்பெறுகின்றதோ, அப்பொழுதெல்லாம் அரிய பல திட்டங்களுக்குச் செயல்வடிவம் கொடுத்தவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் என்பதில் இத்துறை பெருமைகொள்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 1967–ல் தீண்டாமையை அகற்றிட, அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்; 1971 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இருந்த 16 விழுக்காடு இட ஒதுக்கீட்டை, மக்கள் தொகை அடிப்படையில் 18 விழுக்காடாக உயர்த்தியது; 1974 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தை உருவாக்கியது; அதே ஆண்டில் இந்தியாவிலேயே முதன் முதலாக ஆதி திராவிடர்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள் கட்டித் தந்தது; 1989–ல் ஆதி திராவிடர்களில் தொழில்முனைவோரை உருவாக்கும் சிறப்புத் திட்டம் தந்தது; 1990–ல் பழங்குடியினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் ஒரு

சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கியது; 2007–ல் தூய்மைப் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு தூய்மைப் பணியாளர் நல வாரியம் அமைத்தது; அதே ஆண்டில் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காக பழங்குடியினர் நல வாரியம் அமைத்தது; 2009–ல் அருந்ததியினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 3 சதவிகிதம் உள் இட ஒதுக்கீடு வழங்கியது மற்றும் புதிரை–வண்ணார் நல வாரியம் அமைத்தது போன்ற ஏராளமான திட்டங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஏற்றத்தாழ்வுகளற்ற சமூக உருவாக்கம் வேண்டுமென்பது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர்நாடிக் கொள்கைகளில் ஒன்று. அதன்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டம்தான், தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம். இத்திட்டத்தின்கீழ், 1996–2001–ல் 142 சமத்துவபுரங்கள் உருவாக்கப்பட்டன. அதன்பின்னர், 2001–2006–ல் அ.தி.மு.க. ஆட்சியில் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது. மீண்டும் 2006–2011–ல் நமது ஆட்சி அமையப்பெற்றபின், இத்திட்டம் உயிர் பெற்றது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், நமது மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபொழுது, அவருடைய மேற்பார்வையில் பல சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்பட்டன. ஆனால், கடந்த பத்தாண்டுகளாக, அ.தி.மு.க. அரசால் கிடப்பில் போடப்பட்ட சமத்துவபுரத் திட்டத்தை இப்பொழுது புதிதாகச் செயல்படுத்தவும், பராமரிப்பின்றி இருக்கும் சமத்துவபுரங்களைச் சீரமைக்கவும் உத்தரவு வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 'அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்' என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், பல்வேறு சட்ட வழக்குகள் காரணமாக, இச்சட்டத்தை அப்பொழுதிருந்த கலைஞர் அவர்களின் அரசால் நிறைவேற்ற இயலவில்லை. தந்தை பெரியார் உயிரோடு இருக்கும்போதே இந்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை என்றும், இது பெரியாரின் நெஞ்சில் தைத்த முள் என்றும் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிடுவார்கள். தற்போது 51 ஆண்டுகள் கழித்து பெரியாரின் கனவையும், கலைஞரின் சட்டத்தையும்,

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்களின் நீட்சியான நமது முதலமைச்சர் தளபதியார் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள் என்பதை இந்த அவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ், ஆதி திராவிடர் நலத் திட்டங்களைச் செயல்படுத்திட, ஆதி திராவிடர் நல ஆணையரகமும், பழங்குடியினர் நலன் காத்திட பழங்குடியினர் நல இயக்குநரகமும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களையும், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் வழங்க, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், அதாவது தாட்கோவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகளைத் தடுக்கவும், அது தொடர்பான சட்ட விதிகளை அமல்படுத்தவும், காவல் துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவும் செயல்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, கல்வியே சமூக மாற்றத்திற்கான அடிப்படை. சமுதாய முன்னேற்றத்திற்கான மூலக் காரணி என்பதால் 2021–2022 ஆம் நிதியாண்டில், மொத்த நிதி ஒதுக்கீடான, ரூபாய் 4,142.34 கோடியில் கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக மட்டும் ரூ.3,480.23 கோடி, அதாவது மொத்த ஒதுக்கீட்டில் 84.02 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
பின்னருள்ள தருமங்கள் யாவும்,
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்ற முண்டாசுக் கவிஞனின் வாக்கிற்கிணங்க, ஆதி திராவிடர் மக்களின் கல்வியறிவு விகிதத்தை இதர பிரிவினருக்கு இணையாக

உயர்த்திடும்வகையில், 1,138 ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் 1,326 விடுதிகள் ஆதி திராவிடர் நல ஆணையரகத்தின்கீழ் இயங்கி வருகின்றன. இதேபோல், 318 உண்டி உறைவிடப் பள்ளிகள் 8 ஏகலைவா உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் 48 விடுதிகள் பழங்குடியினர் நல இயக்குநரகத்தின்கீழ் இயங்கி வருகின்றன.

கல்வி, அடிப்படை வசதிகள், வறுமை ஒழிப்பு மற்றும் சுரண்டலுக்கு எதிரான பாதுகாப்பு ஆகிய நிலைகளில் நிலவும் இடைவெளியைக் குறைத்திடும்பொருட்டு, ஒன்றிய அரசு, இந்திய அரசமைப்பு சட்டக்கூறு 275 உட்பிரிவு–1–ன்கீழ் நிதி விடுவித்து வருகிறது. இந்த நிதியானது 8 இடங்களில் இயங்கிவரும், ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளில் தொடர் செலவினத்திற்கும் பள்ளிகளைப் பராமரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் கிறித்தவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து தரப்படுவதுடன், உணவுக் கட்டணமும், சில்லறைச் செலவினமும் வழங்கப்படுகின்றன. இதுதவிர, தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளில் பயிலும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் உணவுக் கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் இத்துறைமூலம் வழங்கப்படுகின்றன. பழங்குடியினர் மாணவர் விடுதியில் தங்கிப் பயிலும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு ஆதி திராவிடர் நல விடுதியில் தங்கியுள்ள மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளுடன் கூடுதலாக, சூரிய விளக்கு, குளிர் மற்றும் மழையில் இருந்து பாதுகாத்துக்கொள்ள sweater மற்றும் rain coat ஆகியவை இத்துறையால் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்ல வேண்டுமென்றால், கடந்த 2007, 2008 ஆம் ஆண்டு முதல் அரசு, அரசு நிதியுதவிபெறும் பள்ளிகள், மாநகராட்சி, நகராட்சி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில், 10 ஆம் வகுப்பு பயிலும் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற முதல் 10 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனங்களைச் சேர்ந்த மாணாக்கர்களைத் தேர்வு செய்து, நற்பெயர் பெற்றுள்ள சிறந்த தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்க்க ஒரு மாணாக்கருக்கு ரூபாய் 28 ஆயிரம்வீதம்

நிதியொதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது என்பதில் நான் பெருமைகொள்கிறேன். அதேபோல, ஐந்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு தரமான சிறந்த கல்வியை வழங்க வேண்டுமென்ற ஒரு நோக்கத்தோடு, தனித் தேர்வு ஒன்று நடத்தி, வட்டாரத்திற்கு ஒரு மாணாக்கர்வீதம், 355 வட்டாரங்களில் 355 மாணாக்கர்களைத் தேர்வு செய்து, நற்பெயர் பெற்ற சிறந்த உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் சேர்த்து அவர்கள் தொடர்ந்து 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயில ஆகும் செலவினை முழுவதும் அரசே ஏற்று செயல்படுத்தி வருகிறது. இதுவும் முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சியில்தான் தொடங்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதிலே மிகவும் பெருமைகொள்கிறேன்.

பிற்பகல் 2–40

மேலும் 8 ஆம் வகுப்பு முடித்தபின் மேல்நிலைக் கல்வியைத் தொடருவதை ஊக்குவிக்கவும், பொருளாதாரச் சூழ்நிலைகளால் அவர்களின் கல்வி இடைநிற்றலைத் தவிர்க்கும்பொருட்டும், 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு பராமரிப்புப் படி மற்றும் தனி மானியம் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கான செலவினத்தை 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் பகிர்ந்துவருகின்றன.

ஒன்றிய அரசின் post–matric கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பட்டப் படிப்புகளைப் பயிலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்குப் பராமரிப்புப் படி மற்றும் கல்விக் கட்டணங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தினைச் செயல்படுத்த ஆதி திராவிடர் மாணாக்கர்களுக்கான செலவினத் தொகையை 60:40 என்ற விகிதத்திலும், பழங்குடியின மாணாக்கர்களுக்கான செலவினத் தொகையை 75:25 என்ற விகிதத்திலும் ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் பகிர்ந்துகொள்கின்றன. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற இயலாத மாணவர்களுக்கு மாநில அரசின் சிறப்பு post–matric கல்வி உதவித்தொகையானது வழங்கப்படுகிறது. இதற்கு ஆகும் செலவுத் தொகை முழுவதையும், அதாவது, 100 சதவிகிதத்தையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது.

2021 செப்டம்பர் 8] [திருமதி நா. கயல்விழி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி வளர்ச்சியின் மூலமாகவே சமூக மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதை நன்குணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இவ்வரசு மாணாக்கர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆண்டு வருமானம் உச்சவரம்பின்றி கற்பிப்புக் கட்டணம், tuition fees செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்களித்துள்ளது.

10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவதோடு மட்டுமல்லாது, கல்லூரி இளங்கலை, முதுகலை, தொழிற்கல்விப் படிப்புகளுக்கு விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

தூய்மைப் பணி மற்றும் சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு சாதி, மத, இன வேறுபாடு மற்றும் வருமான உச்சவரம்பின்றி பராமரிப்புப் படியும், தனி மானியமும் உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் குழந்தைகள் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் வருடந்தோறும் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்குத் தலா ரூ.500/–ம், 6 ஆம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு தலா ரூ.1,000/–ம், 7 மற்றும் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு தலா ரூ.1,500/–ம் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல, அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலைப் பட்டம் பயிலும் மாணவியர்களுக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. மேலும் 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெறும் முதல் 1,000 இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்படிப்பு மாணாக்கர்களுக்கு முறையே ரூ.3,000/–, ரூ.5,000/–, ரூ.6,000/– எனப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

மேலும் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் முழுநேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பைப் படிக்கின்ற மாணாக்கர்களுக்கு வருடந்தோறும் வழங்கப்பட்டு

வந்த ஊக்கத்தொகையான ரூ.50,000/– தற்போது ரூ.1,00,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகையைப் போலவே பழங்குடியின மாணாக்கர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. மாநில அரசு சிறப்பு post–matric கல்வி உதவித்தொகை, உயர் கல்வி சிறப்புப் படிப்பு உதவித் தொகை, கற்பிப்புக் கட்டணச் சலுகை, பள்ளி மாணாக்கர்களுக்குத் தேர்வுக் கட்டணம், விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு; இளங்கலை மாணாக்கர்களுக்கும், முதுகலை மாணாக்கர்களுக்கும் அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருமான உச்ச வரம்பு ஏதுமின்றி சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மக்களை சமூகப் பொருளாதார மற்றும் கல்வியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை எய்திடச் செய்யும்பொருட்டு, ஆதி திராவிட மக்கள்தொகை விகிதத்திற்கு இணையாக நிதி ஒதுக்கீடு செய்து ஆதி திராவிடர் துணைத் திட்டமானது Scheduled Caste Sub Plan செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், வருவாய் ஈட்டக்கூடிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகவும், ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கு கூடுதல் வலுசேர்க்கும் வகையில் ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்காக ஒன்றிய அரசு சிறப்பு நிதியுதவி (Special Central assistance to Scheduled Caste Sub Plan) வழங்கி வருகிறது.

பிற்பகல் 2–45

அதேபோல் பழங்குடியினர் சமூக பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்கென பழங்குடியினர் துணைத் திட்டம் (Tribal Sub–Plan) மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு வலுசேர்க்கும் பொருட்டும், பழங்குடியினருக்கும் இதர பிரிவினருக்கும் உள்ள இடைவெளியைக் குறைத்திடும் பொருட்டும், பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு நிதியினை (Special Central Assistance to Tribal Sub Plan) ஒன்றிய அரசு வழங்கிவருகிறது.

2021 செப்டம்பர் 8] [திருமதி நா. கயல்விழி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான, உறைவிடத்திற்காக, வீடற்ற ஆதி திராவிட மக்களுக்கு, இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க, நிலம் கையகப்படுத்தப்பட்டு, தகுதியுள்ள பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. மேலும், ஆதி திராவிட குடியிருப்புகளுக்கு, மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுத்திடும் பொருட்டு, நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக, அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் கிறித்தவ மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களின் இறப்பு நேரத்தில், ஈமச் சடங்குகளை மேற்கொள்ள நிதி உதவியாக ரூ.5,000/– வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகம் என்பது காரிருளில் செல்பவர்களுக்கு அகல் விளக்காகவும், வழி தவறியவர்களுக்கு வழிகாட்டியாகவும் திகழ்கின்றது. உலகின் சிறந்த மாமேதைகள் அனைவருமே, புத்தகம் வாசிக்கும் பழக்கத்தின்மூலமே உயர்ந்தார்கள் என்பதை நாம் அறிவோம். நம் உயிரில் கலந்துள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்கூட, வாசிப்பு என்பதை தனது சுவாசிப்பாக வைத்திருந்தார். 'தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை' என்ற வாக்கிற்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தன்னைச் சந்திக்க வருபவர்களிடம் பரிசாகப் பெற்ற புத்தகங்களை, நூலகங்களுக்கு வழங்கி, தமிழக மக்களின் அறிவு வளர்ச்சிக்கு வித்திட்டு வருகிறார். அதைப்போலவே, விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பொது அறிவுத் திறனை மேம்படுத்தி, அவர்கள் குடிமைப் பணித் தேர்வுகள் மற்றும் இதர போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும்வகையில், புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் இத்துறையினால் நடத்தப்படும் விடுதிகளில் உள்ள நூலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

"உழைக்க ஒரு ஜாதி, உறிஞ்சிப் பிழைக்க ஒரு ஜாதி, இந்தக் கிழற்று நீதி கிழிபடப் போவது எந்த தேதி" என்ற கேள்வியை எழுப்பிய ஈரோடு தமிழன்பன் அவர்களின் கிழற்று நீதியைக் கிழித்தெறியும் வகையில், தூய்மைப் பணி புரிவோர் நல வாரியம், பழங்குடியினர் நல வாரியம், புதிரை வண்ணார் நல வாரியம் என்று முத்தமிழைப்போல் 3 நல வாரியங்களை உருவாக்கித் தந்த, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழியில் நடைபெறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இவ்வரசு, மற்ற நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்

அனைத்து சலுகைகளையும் இந்த நல வாரியங்களிலுள்ள உறுப்பினர்களுக்கும் வழங்கிவருகிறது என்பதையும் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்களுக்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்கள், முறையாக அம்மக்களுக்குச் சென்றடைவதைக் கண்காணிக்கவும் மற்றும் ஆய்வு செய்யவும், மாநில ஆதி திராவிடர் நலக் குழுவும், பழங்குடியின மக்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளை வழங்கிட, தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் அமைப்பும் செயல்பட்டு வருகின்றன. கலை, கலாச்சாரம், இலக்கியம் போன்ற துறைகளில், சிறந்த படைப்புகளை உருவாக்கும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒவ்வோராண்டும் 10 ஆதி திராவிட எழுத்தாளர்கள் மற்றும் இதர இனங்களைச் சேர்ந்த ஒரு எழுத்தாளர் என 11 எழுத்தாளர்களுக்கு தலா ரூ.50,000/– பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான பரிசுத் தொகை கடந்த 9–7–2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், தளபதியார் அவர்களால் 21 சிறந்த எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஆதி திராவிட மக்களின் சமூக, கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்கும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், தொண்டாற்றிய ஒருவருக்கு, ஆண்டுதோறும் டாக்டர் அம்பேத்கர் விருதுடன், ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலை மற்றும் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 2–50

"அச்சமும் பேடிமையும்
அடிமைச் சிறுமதியும்,
உச்சத்தில் கொண்டாரடி–கிளியே
ஊமைச் சனங்களடி"

என்று மகாகவி பாரதியார் பொதுவாகச் சொன்னாலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை வன்கொடுமைகளிலிருந்து காக்க, குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், 1995, பழங்குடியின வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம் 2015 மற்றும் அதன் தொடர்புடைய விதிகளை அமல்படுத்திட, கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ், சமூக நீதி மற்றும் மனித உரிமையியல் பிரிவு செயல்படுகிறது. வன்கொடுமைச் சட்டத்தின்கீழ்

பதியப்படும் வழக்குகளை, விரைந்து நடத்தி முடித்திட ஏதுவாக 18 தனியுரிமை சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. புதிதாக 4 தனியுரிமை சிறப்பு நீதிமன்றங்களை உருவாக்க நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு, இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான மாநில அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு ஆண்டிற்கு இருமுறை கூட்டப்பட வேண்டும். ஆனால், கடந்த 10 ஆண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில் 3 முறை மட்டுமே கூட்டப்பட்டது. தற்போது மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் பொறுப்பேற்ற மூன்றே மாதங்களில் இக்குழுவானது திருத்தியமைக்கப்பட்டு, கடந்த 19–8–2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் முதல் கூட்டம் நடந்து முடிந்துள்ளது என்பதைப் பெருமையுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வில்லுப்பாட்டு கலைஞர்கள்மூலம் தீண்டாமைக் கொடுமைகள் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதுடன், தீண்டாமையை ஒழிக்க பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், சமூக நல்லிணக்கத்துடன் இதனை கிராமங்களில் ஊக்குவிக்கும்வகையில் மாவட்டத்திற்கு ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, கிராமத்திற்கு ரூ.10.00 இலட்சம் வீதம் நிதி வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் அதிகமாக வசித்துவரும் 18 மாவட்டங்களில் அவர்களின் முன்னேற்றத்திற்காக பழங்குடியினர் நல இயக்குநரகம் மிகுந்த முனைப்புடன் செயலாற்றி வருகிறது. பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல், வனப் பாதுகாப்பு சட்டத்தினைச் செயல்படுத்துதல் மற்றும் அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற இனங்களில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. பழங்குடியின மக்களின் கல்வி அறிவினை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கில், அவர்தம் குடியிருப்புகளுக்கு அருகில், விடுதியுடன் இணைந்த உண்டி உறைவிட பள்ளிகள்

இத்துறையால் தோற்றுவிக்கப்பட்டு, நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், அழிந்துவரும் நிலையிலுள்ள பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக, கறவை மாடுகள் வழங்குதல், borewell, பெட்டிக் கடைகள் அமைத்துத் தருதல் போன்ற பழங்குடியினருக்கு வருவாய் ஈட்டித்தரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், அவர்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக, பொருளாதாரம் மற்றும் கல்வி நிலை குறித்து ஆராய்ச்சி செய்வதற்காகவும், ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் நீலகிரி மாவட்டத்தில் மு. பாலாடா என்ற இடத்தில் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்துவிட்டீர்களா? அறிவிப்புகள் இருந்தது என்றால், அறிவிப்புகளின் தலைப்பை மட்டும் சொல்லுங்கள். எல்லாவற்றையும் முடித்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் 1974 ஆம் ஆண்டு ஆதி திராவிடர்களுக்கு தீ பிடிக்காத இலவச வீடுகள் கட்டுவதற்காக நிறுவப்பட்டது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் இதர பிரிவினருக்கு சமமாக முன்னேற்றும்வகையில் அவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிவிப்பை எடுத்து தலைப்புச் செய்திகளை வாசியுங்கள்.

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில உறுப்பினர்கள் சில கேள்விகளைக் கேட்டிருந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத் திரும்ப பெறச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சமி நிலங்கள் குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லி, வருவாய்த்

துறையின்மூலம் கணக்கெடுத்துக்கொண்டிருக்கிறோம். கணக்கெடுத்து முடிக்கப்பட்டவுடன் வழங்கப்படும். அதேபோல பின்னடைவு காலிப்பணியிடங்கள் குறித்து T.R.B., T.N.P.S.C., மற்ற துறைகளிலிருந்தும் data கேட்கப்பட்டுள்ளது. அந்த விவரங்கள் கிடைக்கப்பெற்றவுடன் அந்தக் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய அறிவிப்புகள், நிறைய விஷயங்களைச் சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: TAHDCO–விற்கு வழங்கப்படும் ஒன்றிய நிதி குறைந்துள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அது உத்தேசமாகத்தான் 53.67 கோடி ரூபாய் இந்த வருடம் ஒதுக்கியிருக்கிறார்கள். இதுபோல 1½ மடங்கு அல்லது 2 மடங்கிற்கு செயல் திட்டம் அனுப்பச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து அனுப்புவதற்கு தயாராக இருக்கிறோம். அதேபோல, வீட்டுமனைப் பட்டா குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருந்தார்கள். அனைத்தும் குறிப்பிட்ட காலத்தில் செய்து கொடுக்கப்படும். சமுதாய நலக் கூடம் கேட்டிருக்கிறார்கள். சமுதாய நலக் கூடத்திற்கு குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கியிருக்கிறோம். அதனால் குறிப்பிட்ட அளவிற்குதான் தேவையைப் பொறுத்து வழங்க முடியும். பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தரச் சொல்லி கேட்டிருந்தார்கள். பள்ளிகளின் தேவை, மாணாக்கர்களின் எண்ணிக்கை, அருகில் இருக்கும் பள்ளிகளின் எண்ணிக்கை ஆகியவற்றையெல்லாம் பார்த்துதான் செய்து கொடுக்க முடியும். முழுமையாக ஆய்வு செய்தபின் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையில் பங்குபெற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மானியக் கோரிக்கைக்குத் தேவையான தகவல்களைத் தந்து உதவிய தலைமைச் செயலாளர், மாண்புமிகு முதல்வர் அவர்களின் செயலாளர்கள், மாண்புமிகு நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் முதன்மைச் செயலாளர், ஆதி திராவிடர் நல ஆணையர், பழங்குடியினர் நல இயக்குநர், TAHDCO மேலாண்மை இயக்குநர் மற்றும் கூடுதல் காவல் தலைமை இயக்குநர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் மற்றும் அல்லும் பகலும் அயராது உழைத்த அனைத்து அலுவலர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–55

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். இந்த வெட்டுத் தீர்மானங்களை நான் படித்து பார்த்தேன். இந்த மானியக் கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துகளுக்கு போதிய விளக்கங்களை அளித்துள்ளேன் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களில் சுட்டிக் காட்டிய ஆலோசனைகள், திட்டங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, உரிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை வழங்கிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்ப பெற்றுக் கொண்டு, இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அறிவிப்புகள் இருக்கிறதா? அறிவிப்புகளைக் கொடுங்கள்.*

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: *அறிவிப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அவற்றை வெளியிடுகின்றேன்.*

அறிவிப்புகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

1. ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் 150 பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் கட்டப்படும்.

ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் 1,138 பள்ளிகளில் பயிலும் 83,259 மாணாக்கர்களின் கல்வி நலனை உறுதி செய்யும் பொருட்டும், மாணாக்கரின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்கும் வகையிலும், 150 பள்ளிகளில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. 39 அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிடப் பள்ளிகளில் 100 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கூடங்கள் மற்றும் சுற்றுச்சுவர் ரூ.21.13 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 318 உண்டி உறைவிடப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதில் தருமபுரி, ஈரோடு, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள 14 தொடக்கப் பள்ளிகள், 11 நடுநிலைப் பள்ளிகள், 15 உயர்நிலைப் பள்ளிகள், 9 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 39 உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.15 கோடி செலவில் கூடுதல் வகுப்பறைகளும், 45 உண்டி, உறைவிடப் பள்ளிகளில் ரூ.6.13 கோடி செலவில் சுற்றுச்சுவர்களும் மொத்தம் ரூ.21.13 கோடி செலவில் கட்டப்படும்.

3. ஆதி திராவிடர் குடியிருப்புகளில் 20 சமுதாயக் கூடங்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

ஆதி திராவிட மக்கள் தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தும் வகையில், 20 இடங்களில், மணமகன்–மணமகள் அறைகள், மணமேடை, பார்வையாளர் அரங்கம், விருந்தினர் அறைகள், கழிவறைக்கூடம், மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி, அவசியமான அறைகலன்கள், பாத்திரங்கள், உணவுமேசை, நாற்காலிகள் அடங்கிய உணவருந்தும் அறை என அனைத்து வசதிகளுடன்கூடிய 20 சமுதாயக் கூடங்கள் தலா ரூ.1.25 கோடி வீதம் ரூ.25 கோடி மதிப்பில் கட்டப்படும்.

4. 1,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் (Tatkal Scheme) ரூ.23.28 கோடி செலவில் 90 சதவீதம் மானியம் வழங்கப்படும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் கிராமப்புறங்களில் பெரும்பாலும் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, விவசாயத்திற்கான இலவச மின் இணைப்புக்காக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின்மூலம் வழங்கப்படும் துரித மின் இணைப்புத் திட்டத்தில் (Tatkal Scheme) *செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை குதிரைத் திறனுக்கேற்ப ரூ.2.50 இலட்சம் முதல் ரூ.4.00 இலட்சம் வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.*

1,000 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள் இலவச மின் இணைப்பை விரைவில் பெற்றிட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகையில் 90 சதவீதம் (ரூ.2.25 இலட்சம் முதல் ரூ.3.60 இலட்சம் வரை) மானியமாக வழங்கப்படும். இதற்காக அரசுக்கு ஏற்படும் செலவு ரூ.23.28 கோடி.

5. காஞ்சிபுரம் மாவட்டத்தில் வீடற்ற இருளர் இன பழங்குடியினருக்கு ரூ.13.29 கோடி மதிப்பீட்டில் 443 புதிய வீடுகள் கட்டப்படும்.

பெரும்பாலான பழங்குடியின மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கி வாழ்ந்து வருகின்றனர். வீடற்ற பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு காஞ்சிபுரம் மாவட்டத்தில் பட்டா வழங்கப்பட்ட 443 இருளர் இன பழங்குடியினர் குடும்பங்களுக்கு தலா ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.13.29 கோடி மதிப்பீட்டில் 443 புதிய வீடுகள் கட்டப்படும்.

6. வேலூர் ஆதி திராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதி திராவிடர் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

ஆதி திராவிட மாணாக்கர்களின் உயர் கல்விக்கான வாய்ப்புகளைப் பெருக்கிடும் வகையிலும், அவர்கள் பாதுகாப்பாக தங்கி கல்வி பயிலும் வகையிலும், வேலூர் ஆதி திராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதி திராவிடர் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய கட்டடங்கள் ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

7. 13 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் மாணாக்கர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு திருச்சிராப்பள்ளி, தேனி, திண்டுக்கல், அரியலூர், மதுரை, நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர்,

இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் திருப்பூர் ஆகிய 11 மாவட்டங்களில் உள்ள 13 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கு ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

8. 31 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் கழிப்பறைகள் (Toilets) கட்டப்படும்.

பழங்குடியினர் நலத் துறையின்கீழ் கோயம்புத்தூர். கள்ளக்குறிச்சி, தென்காசி, தருமபுரி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய 7 மாவட்டங்களில் இயங்கும் 31 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் 65 கழிப்பறைகள் தலா ரூ.7.00 இலட்சம் வீதம் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படும்.

9. 92 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் 48 விடுதிகளுக்கு ரூ.3.46 கோடி மதிப்பீட்டில் தளவாடப் பொருட்கள் (Furnitures) வழங்கப்படும்.

பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் பள்ளிகளில் படிக்கும் மாணாக்கர் படிப்பதற்கு ஏதுவாக 92 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 2,385 நீள் இருக்கைகள் மற்றும் சாய்வு மேசைகள் (Benches and Desks) தலா ரூ.9,500/– வீதம் ரூ.2.276 கோடி செலவிலும், விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணாக்கரின் தேவையைக் கருத்தில்கொண்டு 48 பழங்குடியினர் மாணாக்கர் விடுதிகளுக்கு 1,200 இரண்டு அடுக்கு கட்டில்கள் (Bunker beds) ரூ.1.2 கோடி செலவிலும், ஆக மொத்தம் ரூ.3.46 கோடி செலவில் வழங்கப்படும்.

10. மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பராமரிப்புப் படி ஒன்றிய அரசு வழங்குவதற்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும்.

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற இயலாத மாணாக்கருக்கு, மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ், பராமரிப்புப் படி மற்றும் கட்டாயமான திருப்பி அளிக்கப்படாத கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கு முன்பு, 2011–2012 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பராமரிப்புப் படி உயர்த்தப்பட்டது.

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் 2020–2021 ஆம் ஆண்டு முதல் பராமரிப்புப் படி

உயர்த்தி வழங்கப்பட்டுவரும் விகிதத்திற்கு இணையாக மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பராமரிப்புப் படியும் உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூ.4.63 கோடி ஆகும். இத்திட்டத்தின்கீழ் 26,024 மாணாக்கர் பயனடைவர்.

11. கடலூர் மாவட்டம்—விருத்தாசலம், கள்ளக்குறிச்சி மாவட்டம்—கள்ளக்குறிச்சி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம்—நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் 3 புதிய கல்லூரி மாணவியர் விடுதிகள் ரூ.2 கோடி செலவில் தொடங்கப்படும்.

ஆதி திராவிடர் இன மாணவியர் உயர் கல்வி பயில தொலை தூரம் செல்வதைத் தவிர்க்கவும், அவர்கள் உயர் கல்வி பயில்வதை ஊக்குவிக்கவும், விருத்தாசலம், கள்ளக்குறிச்சி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று இடங்களில், ஒரு விடுதியில் 50 மாணவியர் தங்கும் வகையில் 3 புதிய விடுதிகள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படும்.

12. ஆதி திராவிடர் விடுதி மாணாக்கருக்கு விழா நாட்களில் வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணம் இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கப்படும்.

ஆதி திராவிடர், பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கருக்கு பொங்கல், குடியரசு தினம், தமிழ்வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி ஆகிய 5 விழா நாட்களில் தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணம் 19.4.2012–க்குப் பிறகு உயர்த்தி வழங்கப்படாத நிலையில், தற்போது விலைவாசி உயர்வுக்கேற்றவாறு பள்ளி விடுதி மாணாக்கருக்கு ரூ.20/–லிருந்து ரூ.40/– ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கருக்கு ரூ.40/–லிருந்து ரூ.80/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம் சுமார் 1,25,295 மாணாக்கர் பயன்பெறுவர். இதற்காக அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.1.42 கோடி.

13. தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் உள்ள ஆதி திராவிடர் நலப்பள்ளிகளுக்கு ரூ.92.00 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறை கட்டடங்கள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம், கண்ணந்தங்குடி, மேலையூர் அரசு ஆதி திராவிடர் நலத் தொடக்கப் பள்ளியில் இரண்டு புதிய வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் சுற்றுச்சுவரும், வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி

மற்றும் பெண்ணாத்தூர் அரசு ஆதி திராவிடர் நலத் தொடக்கப் பள்ளி ஆகிய பள்ளிகளில் சுற்றுச்சுவர்களும் ரூ.92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

14. 512 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு ரூ.46 இலட்சம் மதிப்பீட்டில் மின் அரைப்பான்கள் வழங்கப்படும்.

ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் 512 பள்ளி மாணாக்கர் விடுதிகளில் சமையலுக்கு உதவியாகவும் மாணாக்கருக்கு உணவினை உரிய நேரத்தில் வழங்கிட ஏதுவாகவும், தலா ரூ.9,000/–வீதம், 512 மின் அரைப்பான்கள் மொத்தம் ரூ.46.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

15. 51 ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கணினி ஆய்வகங்களுக்கு ரூ.87 இலட்சம் மதிப்பீட்டில் இன்வர்ட்டர்கள் (Inverters) வழங்கப்படும்.

ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் 98 மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியல் பாடப் பிரிவு பயிலும் மாணாக்கருக்காக 51 கணினி ஆய்வகங்களுக்கு 6 மின்கலன்களுடன் கூடிய இன்வர்ட்டர்கள் (Inverters) ரூ.87.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

16. 2,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.3 கோடி செலவில் நீர்ப் பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்குவதற்காக தலா ரூ.15,000/– மானியமாக வழங்கப்படும்.

1,300 ஆதி திராவிட மற்றும் 700 பழங்குடியின விவசாயிகள் தங்கள் வேளாண் நிலத்தில் நீர்ப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்குவதற்கு தலா ரூ.15,000/– மானியமாக வழங்கப்படும். இதற்காக அரசிற்கு ஏற்படும் செலவினம் ரூ.3.00 கோடி.

17. 2,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.2 கோடி செலவில் புதிய மின் மோட்டார் வாங்க தலா ரூ.10,000/– மானியமாக வழங்கப்படும்.

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (தாட்கோ) மூலம் 1,800 ஆதி திராவிட மற்றும் 200 பழங்குடியின விவசாயிகள் தங்கள் நில மேம்பாட்டிற்காக புதிய மின் மோட்டார் அல்லது பழைய மின் மோட்டாருக்குப் பதில்

புதிய மின் மோட்டார் வாங்கிட தலா ரூ.10,000/– மானியமாக வழங்கப்படும். இதற்காக அரசு ரூ.2.00 கோடி செலவு மேற்கொள்ளும்.

18. 5,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தோட்டக்கலை, வேளாண் காடுகள் (Agro Forestry), நர்சரி செடிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் போன்ற பயிற்சிகள் ரூ.1.70 கோடி செலவில் வழங்கப்படும்.

5,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தோட்டக்கலை, காய்கறி மற்றும் பழ வகைகள் சாகுபடி, வேளாண் காடுகள், நர்சரி செடிகள் உருவாக்கி விற்பனை செய்தல், மண்புழு உரம் தயாரித்தல், விவசாய மேலாண்மைப் பயிற்சிகள் மற்றும் அறுவடை தொழில்நுட்ப இயந்திரங்கள், முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்கள், வேளாண் தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் இயந்திரங்கள் ஆகிய இயந்திரங்கள் தொடர்பான பராமரித்தல் மற்றும் பழுது நீக்கம் செய்தல் போன்ற பயிற்சிகள் ரூ.1.70 கோடி செலவில் சம்பந்தப்பட்ட அரசு துறைகள் மூலம் வழங்கப்படும்.

19. 5,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த தொழில்முனைவோருக்கு தொழில் மேலாண்மைப் பயிற்சிகள் ரூ.2 கோடி செலவில் வழங்கப்படும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தொழில் முனைவு ஏற்படுத்தித் தரும் வகையில் கடன் பெற 5000 தொழில் முனைவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களுக்கு மாவட்ட அளவில் 7 நாள் தொழில் மேலாண்மைப் பயிற்சிகள் தகுதியான நிறுவனங்கள்மூலம் ரூ.2 கோடி செலவில் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்படும்.

20. 25 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த தொழில்முனைவோருக்கு அடை காப்பகச் சேவை (Incubation support) வழங்கும் புதிய திட்டம் ரூ.2 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் புதுமைத் தொழில் முனைவை உறுதிப்படுத்திடும் வகையில், சென்னை Indian Institute of Technology (IIT) *மற்றும்* Tamil Nadu Start up seed grant fund (TANSEED) *உதவியுடன் புதிய தொழில்*

நிறுவனங்கள் (Start up ventures) அமைக்க 25 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோருக்கு புதுமைத் தொழில் முனைவு அடைகாப்பகச் சேவை (Incubation support) ரூ.2 கோடி செலவில் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

21. பயிற்சி மற்றும் சான்றிதழ் பெற்ற பழங்குடியின பாரம்பரிய சமூக சுகாதாரத் திறனாளர்களுக்கு (Traditional Tribal Healers) சுயமாகத் தொழில் துவங்க தலா ரூ.50,000/– வீதம் 100 நபர்களுக்கு மானியம் வழங்கப்படும்.

பாரம்பரிய, சமூக, சுகாதாரத் திறன்பெற்ற 100 பழங்குடியின நபர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு 2 மாத களப் பயிற்சியோடு 6 மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும். சான்றிதழ் பெறுபவர்கள் சுயமாகத் தொழில் துவங்க ஏதுவாக உரிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட உதவும் வகையில் 100 பழங்குடியினப் பயனாளிகளுக்கு தலா ரூ.50,000/–வீதம், மொத்தம் ரூ.50 இலட்சம் செலவில் மானியமாக வழங்கப்படும்.

22. தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள் ஏனைய நல வாரியங்களில் வழங்கப்படும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின்கீழ் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இதுவரை வழங்கப்பட்டு வந்த இயற்கை மரண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகிய நலத் திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டுவரும் உதவித் தொகைக்கு இணையாக ரூ.1.53 கோடி செலவில் உயர்த்தி வழங்கப்படும்.

23. தாட்கோ கோட்ட செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் மொத்த அளவியல் கருவிகள் வழங்கப்படும்.

தாட்கோ செயல்படுத்தும் கட்டுமானப் பணிகளுக்கு உதவிடும் வகையில் கோட்ட செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு 10 மொத்த அளவியல் கருவிகள் (Total Station Instruments) ரூ.50.00 இலட்சம் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிவாக, சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் – மற்றும் இந்த எளியவளுக்கும் ஏற்றம் தந்து அவையோர்க்கு முந்தியிருக்கச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கு, மீண்டும் எங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள். மாலை 5–00 மணிக்கு மீண்டும் இந்த மாமன்றம் கூடவிருக்கின்றது. நீங்கள் பேசியதற்குப் பிறகு இன்னும் ஓர் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியுள்ளது.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *ஆசிரியர் பேச்சைக் கேட்டு நடப்பேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நாமெல்லாம் இடம்பெறுவதற்குக் காரணமான, மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு என்று சொல்லி, நம்மையெல்லாம் மனிதர்களாக்கிய தந்தை பெரியார் அவர்களையும், சாமானியர்களும் அதிகாரத்திற்கு வரலாம், சட்டமன்றத்திற்கு வரலாம் என்று நமக்கெல்லாம் ராஜபாட்டை அமைத்துக் கொடுத்த பேரறிஞர் அண்ணா அவர்களையும் இந்த நேரத்தில் வணங்குகிறேன்.*

இந்தத் துறை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, சமூக நீதியினை ஆதாரமாகக் கொண்டு செயல்படுகின்ற துறை. சமூக நீதியின் தந்தை நமது தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இட ஒதுக்கீட்டின் சிற்பி தலைவர் கலைஞர் அவர்கள். இட ஒதுக்கீட்டின் மூலமாக இந்தச் சமுதாயத்தில் நிலவுகின்ற ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, அனைவரும் சமம், எல்லோரும் ஓர் நிலை என்று வருவதற்கு தன் வாழ்நாளெல்லாம் பாடுபட்டவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். 1971–ல் அவர் முதலமைச்சராகப் இருந்த நேரத்தில் கொங்கு வெள்ளாளக் கவுண்டர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைத்து அந்தச் சமுதாயத்தின் உயர்வுக்கு வழிவகுத்தார்.

1989 இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நேரத்தில் வன்னியர் உள்ளிட்ட 108 சாதியினரை மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்ற புதிய தொகுப்பினை உருவாக்கி, அவர்களுக்கு 20 சதவிகித இட ஒதுக்கீட்டினை வழங்கி அந்த சமுதாயங்கள் முன்னேறுவதற்கு வழிவகுத்தவரும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான். 2006 இல் இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கி அந்தச் சமுதாயத்தை கைத்தூக்கிவிட்டவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதேபோல ஒடுக்கப்பட்டவர்களில் ஒடுக்கப்பட்டவர்களாக இருந்த அருந்ததியினர்களுக்கு 3 சதவிகித உள் இட ஒதுக்கீட்டினை வழங்கி அவர்களுக்கான நல்வாழ்வை வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதற்கு சாட்சியாக, இரண்டு தினங்களுக்கு முன்பு இங்கே பேசிய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் அவர்கள், தனது சமுதாயத்தில் எத்தனை பேர் மருத்துவர்களாக ஆகியிருக்கிறார்கள், எத்தனை பேர் பொறியியல் படிப்பு படித்திருக்கிறார்கள் என்பதை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். இப்படி தமிழ்நாட்டில் ஒவ்வோர் இனமும் எந்த அளவிற்கு அடக்கி வைக்கப்பட்டிருக்கிறது, ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் உணர்ந்து, அவர்களைக் கைத்தூக்கிவிடுவதற்கு, ஒவ்வொரு முறையும் பதவிக்கு வரும்போதெல்லாம் இட ஒதுக்கீட்டினைச் சரிசெய்து சீரமைத்துக் கொடுத்த தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். சாதி ரீதியான இட ஒதுக்கீடு மாத்திரமல்ல; எந்த முறையில் இவர்களைக் கைத்தூக்கி விடலாம் என்று பார்த்துத்தான் கிராமப்புற மாணவர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு கொடுத்தார். முதல் தலைமுறை பட்டதாரியாக வருகின்ற மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தை இலவசமாக வழங்கினார். அதுமாத்திரமல்லாமல், ஆண்களும் பெண்களும் சமமாக இருக்க வேண்டும்; அந்தப் பாகுபாடு நீங்க வேண்டும்; அவர்களும் மேலே வர வேண்டும் என்ற சமூக அக்கறையோடு, மகளிருக்குச் சொத்துரிமை வழங்கி தந்தை பெரியாரின் கனவையும் நிறைவேற்றினார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டினை உள்ளாட்சித் தேர்தலில் வழங்கினார். வேலைவாய்ப்பிலும் 30 சதவிகித இடத்தினை வழங்கினார். அதுமாத்திரமல்ல, யாரும் திரும்பிப் பார்க்காமல் இருந்த திருநங்கைகளுக்கும் உரிமைகளை வழங்கினார். மாற்றுத் திறனாளிகளுக்கு உரிமைகளை வழங்கினார். இப்படி, தான் எதைச் செய்தாலும் அதனைச் சமூகநீதிக் கண்ணோட்டத்தோடு

செய்தவர். இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், முதன்முறையாக முதலமைச்சராக ஆனபோது தனியாரிடத்தில் இருந்த பேருந்துகளையெல்லாம் அரசுடைமை ஆக்கினார். அதுவும் சமூகநீதிக் கண்ணோட்டம்தான். பேருந்துகள் கிராமங்களுக்குச் செல்லாமல் நகரங்களுக்குள் மட்டும் இயங்கிவந்ததை அறிந்து, கிராமத்தில் இருப்பவர்களும் பயன்பெற வேண்டும், அவர்களும் முன்னுக்கு வர வேண்டும் என்றுதான் இந்தத் திட்டத்தினைக் கொண்டுவந்தார். அதேபோலத்தான் பல்வேறு திட்டங்கள், எந்தத் திட்டத்தை எடுத்துப் பார்த்தாலும் சமூகநீதி என்ற கண்ணாடியை அணிந்துகொண்டுதான் தலைவர் அவர்கள் அந்தத் திட்டங்களை அறிவித்திருப்பார்கள். இப்போது தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சில் தைத்த முள்ளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அகற்றியிருக்கிறாரே, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அந்த சமூகநீதித் திட்டத்தினையும் தலைவர் கலைஞர் அவர்கள்தான் கொண்டுவந்தார்கள். இந்த நேரத்தில் இந்தத் துறையின் வாயிலாக சமூகநீதியின் தந்தை அவர்களை வணங்குகிறேன்.

பிற்பகல் 3–05

2019 இல் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுற்றது. தேர்தலுக்கு முன்பாக பல விமர்சனங்கள். அந்த விமர்சனங்களுக்கெல்லாம் தலைவர் அவர்கள் பதில் அளிக்காமல் தேர்தல் வெற்றியிலே காட்டினார்கள். 40 தொகுதிகளில் 39 தொகுதிகளில் வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வெற்றிக்குப் பிறகு கடலூரில் ஒரு நன்றி அறிவிப்புக் கூட்டம் நடைபெற்றது. அந்த நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் எனக்கும் பேசுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அங்கே நான் அந்தக் கூட்டத்தில் பேசுகின்றபோது, ‘வலதுசாரி கொள்கைகளை வழியனுப்புவதற்கு திராவிடம்தான் ஒரு மாற்று சித்தாந்தம், ஒரு மாற்றுக் கொள்கை என்று தலைவர் அவர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். இனி அவர் விரல் நீட்டுகின்ற திசைதான் எதிர்கால இந்தியாவை வழிநடத்தும் என்ற நிலை வரும்’ என்று கூறினேன். இன்றைக்கு அவை ஒவ்வொன்றாக நடைமுறைக்கு வந்துகொண்டிருக்கின்றன.

இந்தியாவில் எத்தனையோ மாநிலக் கட்சிகள் இருக்கின்றன. அந்த மாநிலக் கட்சிகள் எத்தனையோ மாநிலங்களில் ஆட்சியமைத்திருக்கின்றன. ஆனால், மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் செய்கின்ற தவறுகளை, அவர்களை அடக்கி வைப்பதை, எதேச்சதிகாரத்தை எடுத்துக் கூறுவதற்கு

துணிவில்லாமல் இருக்கின்றன. ஆனால், நம்முடைய தலைவர் தளபதி அவர்கள்தான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நேரத்தில் எதையெல்லாம் முன்னெடுத்துப் போராடினாரோ, அத்தனையையும் இன்றைக்கு சட்டசபையில் நிறைவேற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) "மாநில சுயாட்சியின் மொத்த குரலாக நான் ஒலித்துக்கொண்டிருக்கிறேன்" என்று ஏக இந்தியாவிற்கும் வழிகாட்டிக்கொண்டிருக்கின்றார்.

இன்றைக்கு இருக்கின்ற ஒன்றிய அரசு, இந்தியாவில் இருக்கின்ற ஒவ்வொரு மாநிலத்தின்மீதும் அடக்குமுறையைக் கையாண்டபோது, உச்சக்கட்டமாக காஷ்மீரில் இருக்கின்ற மக்களை ஒட்டுமொத்தமாக வீட்டுச் சிறையில் அடைத்தபோது, அதை எதிர்த்து இந்திய தலைநகர் டெல்லியில் ஒரு போராட்டம் நடத்திய மாநிலக் கட்சி எது என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகம்தான்; அந்தப் போராட்டத்தை நடத்திக் காட்டியவர் எங்களுடைய தலைவர் தளபதி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் விவசாயிகள் போராட்டக் களத்திற்கு வந்தபோது, அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தார். அதேபோல் குடியுரிமைத் திருத்தச் சட்டம் வந்தபோது, சிறுபான்மையினருக்குப் பாதுகாவலராக தலைவர் கலைஞர் வழியில் நாங்கள் இருக்கின்றோம், என்றும் இருப்போம் என்று காட்டினார். இன்றைக்கு இந்தச் சட்டப் பேரவையில், விவசாயிகள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கின்றவகையில், ஒன்றிய அரசு கொண்டுவந்திருக்கின்ற விவசாயிகளுக்கு எதிரான அந்தச் சட்டங்களையெல்லாம் திரும்பப் பெற வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல, சிறுபான்மை மக்கள், இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று வலியுறுத்தி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார். இப்படி சமூகநீதிக்கு தலைவர் கலைஞர் அவர்களின் வழியில் இன்றைக்கு தொடர்ந்து பாடுபடுகின்ற ஒரு தலைவராக, இன்னும் சொல்லப்போனால், மத்திய அரசாங்கம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு எதிராக இருந்த ஒரு சூழலில், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீட்டை வழங்க மறுத்து வந்த சூழலில், அதற்காக ஒரு போராட்டத்தையும் அறிவித்து

அதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, இப்போது நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு மருத்துவக் கல்லூரிகளில் வழங்கப்படும் என்கின்ற ஒரு நிலை வந்திருக்கின்றது (மேசையைத் தட்டும் ஒலி) என்றால், அதற்குக் காரணம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான்.

அதேபோல் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கின்ற இனங்கள், யார் யார் எந்தப் பட்டியலில் இருக்க வேண்டுமென்ற உரிமை அந்தந்த மாநிலத்திற்குதான் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தியவர் நம்முடைய முதல்வர் அவர்கள்தான். இன்றைக்கு ஒன்றிய அரசு அந்த உரிமையை மாநிலங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறதென்றால் அது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கிடைத்த வெற்றி. இவையெல்லாம் இந்த சமூகநீதிக்கு அவர் ஆற்றியிருக்கின்ற பணி என்ற முறையில் இந்தத் துறையின் சார்பாக அவருக்கு நான் நன்றிகூறி வணங்குகின்றேன்.

அதேபோல இந்தத் தேர்தல்களத்தில் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியவர் நம்முடைய மரியாதைக்குரிய கழக இளைஞரணிச் செயலாளர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தலுக்கு முன்பாகவே 'விடியலை நோக்கி' பயணத்தில் எங்களுடைய அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களுக்கு வந்தபோது அவர் ஏற்படுத்திய எழுச்சிதான் எங்களுடைய தேர்தல் வெற்றிக்கு அச்சாரமாக அமைந்தது.

இன்றைக்கு இந்தியாவை வழிநடத்துகின்ற model கொள்கை எதுவென்றால் அது திராவிட model. இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற முதலமைச்சர்களில் model C.M. யாரென்று கேட்டால், அவர் நம்முடைய C.M., நம்முடைய முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் இந்தியாவில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு model M.L.A. யாரென்று கேட்டால், நம்முடைய சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்தான் இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் நேரத்தில் மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அனைத்து வேட்பாளர்களுக்கும் பணியாற்ற வேண்டிய சூழலில் இருந்தவர், தேர்தலுக்குப் பிறகு ஒவ்வொரு நாளும் தம்முடைய தொகுதி மக்களைச் சந்திப்பதையே முதற்கடமையாகக் கொண்டு, சுற்றி

வந்து, மற்றவர்களும் அதேபோல் செயல்பட வேண்டுமென்ற ஓர் எண்ணத்தை, உத்வேகத்தை ஏற்படுத்தி வருகின்றார்கள். இப்படி ஒரு model M.L.A. ஆக மட்டுமல்ல, ஒரு model தலைவராகவும் அவர் உருவெடுத்துக்கொண்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்தல் நேரத்தில் அவர் பிரச்சாரத்திற்குச் செல்கின்ற இடமெல்லாம் மக்கள் கூட்டம் குவிந்தது. அவர்களிடத்தில் மிக எளிமையாக, யதார்த்தமாகப் பேசி அவர்களைக் கவர்ந்தார். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், சில இடங்களில் நகைச்சுவை மிளிரப் பேசி அவர்களைக் கவர்ந்தார். ஆனால், ஓர் இடத்தில் மட்டும் அவருடைய தொனி மாறியிருக்கும். அதை நாடாளுமன்றத் தேர்தலின்போதும், சட்டமன்றத் தேர்தலின்போதும் உன்னிப்பாகக் கவனித்தவர்களுக்குத் தெரியும். NEET தேர்வு குறித்து அவர் பேச ஆரம்பித்தால் அவருடைய முகம் மாறிவிடும். அவருடைய குரல் மாறிவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) மறைந்த அனிதா குறித்து பேச ஆரம்பித்தால் அவருடைய கண்கள் சிவக்க ஆரம்பிக்கும். சமூகநீதியில் அவருக்கு இருக்கின்ற அக்கறை, இந்தப் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட கிராமத்து மக்கள் மேலே வர வேண்டும் என்று அவர் கொண்டிருக்கின்ற அக்கறையெல்லாம் அதில் வெளிப்படும். அதன் வெளிப்பாடாகத்தான், நாங்கள் இந்த மன்றத்தில் வைக்க வேண்டிய கோரிக்கையை, அரியலூரில் அமைய இருக்கின்ற மருத்துவக் கல்லூரிக்கு அனிதாவின் பெயரைச் சூட்ட வேண்டும் என்று அவர் தன்னுடைய கோரிக்கையாக வைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக நான் அவருக்கு இந்த நேரத்தில் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–10

என்னுடைய தந்தையார் மறைந்த சிவசுப்ரமணியம் அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய தீவிர விசுவாசி. அதேபோல, நம்முடைய தலைவர் அவர்கள்மீது மாறாத பற்று கொண்டவர். அவரை இரண்டு முறை ஒன்றியப் பெருந்தலைவராகவும், ஒருமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், ஒருமுறை நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்ற தலைவர் கலைஞர் அவர்கள் வாய்ப்பு அளித்தார்கள். அவர் நம்முடைய தலைவர்மீது மிகுந்த பற்று கொண்டவர். அந்தப் பற்றோடு தலைவர் அவர்களும் அவர் மீது பற்று கொண்டவர்கள். அந்த வழியிலே எனக்கு 1996–லே பெரம்பலூர் மாவட்டத்தின்

மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவராகப் பணியாற்றுவதற்கு வாய்ப்பளித்தார்கள். அதேபோல, 1999–லே கழகத்திலே ஒன்றியச் செயலாளராக, அடுத்து, அரியலூர் மாவட்டச் செயலாளராகப் பணியாற்றுவதற்கு வாய்ப்பளித்தார்கள். 2006–லே ஆண்டிமடம் சட்டப் பேரவைத் தொகுதியிலே போட்டியிட்டு வெற்றிபெற்று பணியாற்றுவதற்கான வாய்ப்பளித்தார்கள். 2011–லே குன்னம் சட்டமன்றத் தொகுதியிலே போட்டியிட்டு வெற்றிபெற்று பணியாற்றுவதற்கான வாய்ப்பளித்தார்கள். இப்போது 2021–லே குன்னம் சட்டமன்றத் தொகுதியிலே போட்டியிட்டு, வெற்றிபெற்று இங்கே தன்னுடைய அமைச்சரவையிலே பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராக வாய்ப்பளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் துறை ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல, இட ஒதுக்கீட்டை ஆதாரமாகக் கொண்டு செயல்படுகின்ற துறை. இந்தத் துறையின் மூலமாக பல்வேறு நலத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினரைச் சேர்ந்தவர்களை சமூக ரீதியாக, கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாக முன்னேற்றுவதற்கு பல்வேறு நலத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மாணவ–மாணவியர் விடுதிகள் 1,354 நடைபெற்று வருகின்றன. அந்த விடுதிகளிலே தங்குகின்ற மாணவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து தரப்படுகின்றன. இருப்பினும், இன்னும் சிலருக்கு மனக்குறை இருக்கிறது. எதிர்காலத்திலே நம்முடைய தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறுகின்ற இந்த ஆட்சியில் ஒரு நகரத்திலே இருக்கின்ற உயர், நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் என்ன வசதிகளைப் பெற்று தன்னுடைய கல்வியை நல்ல முறையிலே கற்பானோ, அத்தகைய ஒரு வாழ் சூழலை அந்த விடுதிகளில் ஏற்படுத்துவதற்கு இந்தத் துறை செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, கல்வி உதவித்தொகை திட்டமாக, பள்ளிப் படிப்பிற்கு கல்வி உதவித்தொகைத் திட்டம், பள்ளி மேற்படிப்புக்கு கல்வி உதவித்தொகைத் திட்டம், இலவச கல்வி உதவித்தொகைத் திட்டம், உயர் கல்வி பயில்பவர்களுக்கு ஐஐடி, ஐஐஎம் போன்ற மத்தியப் பல்கலைக்கழகங்களில் பயில்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குகின்ற திட்டம், இலவச மிதிவண்டி வழங்குகின்ற திட்டம், கிராமப்புற பெண் குழந்தைகளுக்கு கல்வி ஊக்குவிப்புத் தொகை

வழங்குகின்ற திட்டம். அதேபோல, இந்தத் துறையின்கீழ் செயல்படுகின்ற 295 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவ–மாணவிகளுக்கு பள்ளிக் கல்வித் துறையிலே வழங்குகின்ற அத்தனை சலுகைகளையும் வழங்கி, அவர்களுடைய கல்வி மேம்படுவதற்கு இத்துறை செயலாற்றி வருகிறது. அதேபோல, சலவைப் பெட்டிகள், இலவசத் தையல் இயந்திரங்கள் வழங்கி, அவர்களுடைய பொருளாதார, வாழ்க்கையிலே முன்னேறுவதற்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது.

அதேபோல, வீடற்றவர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்குகின்ற திட்டம், இந்தத் துறையின் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. இந்தத் துறையின்கீழ் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் செயல்பட்டு வருகிறது. உச்ச நீதிமன்றம் வழங்கிய அறிவுரைப்படி அவ்வப்போது தேவைப்படுகின்ற புதிய பட்டியல்களை சீராய்வு செய்வதற்கான பணியை அந்த ஆணையம் செய்து வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள் கேட்டார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே சாதிவாரியான புள்ளிவிவரம் தரவுகளைச் சேகரித்து அளிப்பதற்குத்தான் ஒரு வாரியம் அமைக்கப்பட்டது. அது என்ன நிலையில் இருக்கிறதென்று கேட்டார்கள். அவர்கள் அந்த வாரியத்தை அமைத்ததோடு சரி; அந்த வாரியத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை. அதற்குத் தேவையான பணியாளர்களை வழங்கவில்லை. அவர்கள் ஆறு மாதத்திற்குள் அறிக்கை அளிக்க வேண்டும் என்று சொன்ன அந்த ஆறு மாதமும் முடிந்துவிட்டது. இன்றைக்கு அந்த வாரியத்தை எதற்கு அமைத்தார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எந்த அடிப்படை பணிகளும் செய்யாமல், அந்த வாரியத்தை அம்போ என்று கடந்த காலத்தில் ஆட்சி செய்தவர்கள் விட்டுவிட்டார்கள். இப்போது, ஒன்றிய அரசு மக்கள்தொகை கணக்கெடுப்பு செய்கின்ற நேரத்தில், சாதிவாரியான கணக்கெடுப்பையும் சேர்த்து செய்ய வேண்டுமென்பதை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒன்றிய அரசை ஏற்கெனவே வலியுறுத்தியிருக்கிறார்கள். மீண்டும் அது வலியுறுத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபொழுது தமிழ்நாடு வன்னியகுலசத்திரியர் பொது அறநிலை பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் நிர்வாக வாரியத்தை ஏற்படுத்தினார்கள். தமிழ்நாடு சீர்மரபினர்

நல வாரியமும் தலைவர் கலைஞர் அவர்கள் காலத்திலே ஏற்படுத்தப்பட்டு, அந்த வாரியத்தின் மூலமாக நலத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் போன்றவை இந்தத் துறையின் வாயிலாகச் செயல்பட்டு வருகின்றன. இதெல்லாம் விரிவாக கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய நேரக் கட்டுப்பாட்டிற்கிணங்க, நான் இத்துறை தொடர்பான செய்தியை இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–15

ஒரே ஒரு செய்தியை நான் பதிவு செய்ய வேண்டும். இந்த இட ஒதுக்கீடு இன்றைக்கு எந்த அளவிற்கு சமூகப் பொருளாதார ரீதியிலே தமிழகத்தை முன்னேற்றி இருக்கிறது என்பதை நாம் அறிவோம். அதை திரு. அமர்த்தியா சென் போன்ற பல அறிஞர்களும் தங்களுடைய கட்டுரைகளிலே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இட ஒதுக்கீடு தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. இந்த இட ஒதுக்கீட்டிற்கான வரலாறு என்பது 1921–லே நீதிக் கட்சி ஆட்சிக்கு வந்தபோது துவங்கியது. நீதிக் கட்சியிலே துவங்கி, அதற்குப் பிறகு தந்தை பெரியார் அவர்கள் அதற்காகப் போராடி, காமராஜர் அவர்கள் அதற்கு ஆதரவளித்து, அதற்கு உச்ச நீதிமன்றம் மறுப்பு தெரிவித்த நேரத்தில், சட்ட ரீதியாக அதைப் பாதுகாக்க வேண்டுமென்று தமிழகத்திலே ஒரு பெரும் போராட்டம் வெடித்து, ஒன்றிய அரசிலே அன்றைக்குப் பிரதமராக இருந்த நேரு அவர்களும், புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களும், அதிலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து, அதற்கான பாதுகாப்பை அளித்தார்கள். அதற்குப் பிறகு இந்த இட ஒதுக்கீட்டை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் எந்த அளவிற்குச் சீரமைத்தார்கள் என்பதை நான் ஏற்கெனவே பட்டியலிட்டுக் காட்டினேன். இதை நான் சொல்வதற்குக் காரணம், இரண்டு நாட்களுக்கு முன்பாக நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே பேசும்போது, இன்றைக்கு இருக்கின்ற இளைய தலைமுறை அதனுடைய வரலாறு தெரியாமல், அதனுடைய பயன் தெரியாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதில் நேரடியாக நாங்களே ஓர் அனுபவம் பெற்றிருக்கிறோம். 2012 ஆம் ஆண்டு விஜய் டி.வி–லே 'நீயா, நானா' என்ற விவாத மன்றம் நடைபெற்றது. அந்த விவாத மன்றத்தில் ஒருபுறத்தில் மாணவர்கள்

2021 செப்டம்பர் 8] [திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]

சுமார் 30 பேர்களும், இன்னொரு புறத்தில் கல்வியாளர்கள், அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோரும் பங்கு கொண்டோம். அதில், அரசியல்வாதிகள் என்ற முறையில் நானும், நம்முடைய சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஆளூர் ஷாநவாஸ் அவர்களும் இடம்பெற்றிருந்தோம். அந்த 30 இளைஞர்களிடத்திலே திரு. கோபிநாத் அவர்கள் கேள்வி கேட்க ஆரம்பித்தார். இன்றைய தமிழகத்தின் முக்கிய பிரச்சினை என்ன என்று சொல்லுங்கள் என்று கேட்டார். அந்தத் தலைப்பின் காரணமாகத்தான் இன்றைய இளைய தலைமுறையினர் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றுதான் நான் அந்த நிகழ்ச்சிக்கே சென்றேன். மாணவிகள் எடுத்தவுடனேயே சொன்னார்கள்; பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை, பலாத்காரம், அதைப்போல பெண்ணுரிமை இன்றைக்கும் மறுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். மாணவர்களைப் பட்டியலிடச் சொன்னபோது, திரைப்படம் பார்த்த அனுபவத்தில் பலரும் இலஞ்சம் என்றும், அரசியல் என்றும் சொன்னார்கள். இட ஒதுக்கீடு என்று ஒருவர் சொன்னபோதுதான் எங்களுக்கு அதிர்ச்சி வந்தது. அதற்கு என்ன காரணம்? இட ஒதுக்கீடு பற்றி உனக்கு என்ன பிரச்சினை என்று திரு. கோபிநாத் அவர்கள் கேட்கும்போது, மாணவன் சொன்னான், "நான் அதிக மதிப்பெண் எடுத்தேன்; ஆனால், என்னால் கல்லூரியில் இடம்பெற முடியவில்லை. என்னைவிட குறைவான மதிப்பெண் எடுத்தவர்கள் இட ஒதுக்கீட்டின் காரணமாக உள்ளே வந்திருக்கிறார்கள். அதனால், நான் இட ஒதுக்கீட்டை எதிர்க்கிறேன்" என்று சொன்னான். அவருடைய உணர்வு சரி என்று நாங்கள் பார்த்துக்கொண்டிருந்தோம். இன்னும் 4 மாணவர்கள், அதேபோல இட ஒதுக்கீட்டிற்கு எதிராக தங்களுடைய கருத்துகளைப் பதிய வைத்தார்கள். அதில் உச்சக்கட்டமாக, ஒரு மாணவன் "நான் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்தவன். என்னுடைய அறையில் தங்கியிருக்கின்ற மற்ற 4 பேர் இந்த இட ஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பாக இருக்கிறார்கள்" என்று சொன்னான். ஏனென்று கேட்டேன்? "என்னைவிட குறைவான மதிப்பெண் எடுத்த நீ, இந்த இடத்திற்கு வந்திருக்கிறாய், என்னுடைய நண்பர்கள் வர முடியவில்லை என்று சொன்னார்கள். அதனால், நானும் வருத்தப்படுகிறேன், வேதனைப்படுகிறேன்" என்று அந்தத் தோழர் சொன்னார். எனக்கான வாய்ப்பு வந்தபோது, நான் அதிலே பேசியவர்களிலே ஒரு மாணவரைப் பார்த்து, நீங்கள் இட ஒதுக்கீட்டை எதிர்க்கிறீர்களா என்று கேட்டேன். ஆமாம், என்றார்.

என்ன ஊர் என்று கேட்டேன். கடலூர் என்றார். உன்னுடைய தாத்தா என்ன தொழில் செய்தார் என்று கேட்டேன். விவசாயக் கூலி என்றார். உன்னுடைய அப்பா என்ன தொழில் செய்தார் என்று கேட்டேன். விவசாயக் கூலி என்றார். நீ என்ன படிக்கிறாய் என்று கேட்டேன். கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறேன் என்றார். இது எப்படி கிடைத்தது, எந்த வழியில் கிடைத்தது என்று தெரியுமா என்று கேட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் கொஞ்சம் திகைத்துப்போய் பார்த்தார். அங்கே BC, MBC, SC, ST என்று பட்டியலிட்டு இருப்பார்கள். அதில் ஒரு பட்டியலில் உன் பெயர் ஓரிடத்தில் வந்திருக்குமா என்று கேட்டேன். ஆமாம் என்றார். இதுதான் இட ஒதுக்கீடு. இது தெரியாமல், இந்த இட ஒதுக்கீட்டின் பலனை அனுபவித்துவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) யாரோ சொல்கிறார்கள் என்பதற்காக இட ஒதுக்கீட்டை எதிர்க்கிறேன் என்று பேசினால் என்ன அர்த்தம்? இட ஒதுக்கீடு என்பது ஓர் ஓட்டப் பந்தயம் அல்ல. ஓட்டப் பந்தயத்தில் ஓடுகின்றவர்கள் யார் முன்னுக்கு வருகிறாரோ, அவருக்கு வெற்றி அளிப்பது அல்ல. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், ஓட்டப் பந்தயம் என்று வைத்துக் கொண்டாலே ஒரு திடகாத்திர மாணவன் அந்தப் போட்டியிலே பங்கேற்றிருக்கிறபோது, உடல்நலம் இல்லாதவர் ஒருவரும், கால் இல்லாத ஒருவரும், கண் பார்வையற்ற ஒருவரும் அந்த ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்றால், அதிலே யார் வெற்றிபெறுவார்? அந்த திடகாத்திர மாணவன். அது ஒரு சமமான ஓட்டப் பந்தயம் கிடையாது. யார், யார் எந்தத் திறத்திலே இருக்கிறார்களோ, அவர்களுக்குள் போட்டியை நடத்தி வைத்து, அவர்களுக்குள் யார் வருகிறார்களோ, அவர்களுக்குக் கொடுப்பதுதான் இட ஒதுக்கீடு. இது யாரையும் இடைமறிக்கின்ற செயல் இல்லை என்று கூறிய பிறகு, நிகழ்ச்சி முடிந்து அந்தப் பையன் என்னிடத்தில் வந்து, மன்னித்துக்கொள்ளுங்கள், எனக்குத் தெரியாது என்று சொன்னார். அவர் என்னுடைய அலைபேசி எண்ணை வாங்கிக் கொண்டு, இன்றைக்கும் என்னிடத்தில் தொடர்பில் இருக்கிறார்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இந்த இட ஒதுக்கீடு கொள்கையின் அருமை, பெருமை இன்றைக்கு இருக்கின்ற இளைய தலைமுறையினருக்குத் தெரிய வேண்டும். நான் இன்னும் விரிவாகச் சொல்லலாம். சமூக வலைதளங்களிலே இயங்கிக் கொண்டிருக்கின்றவர்களைப் பார்க்கலாம். ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு இட ஒதுக்கீட்டிற்கு எதிராக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும், இட ஒதுக்கீட்டை ஆதாரமாக வைத்துக்கொண்டு அரசியலுக்கு வந்த

கட்சியைச் சேர்ந்தவர்களே எதிராக இருக்கிறார்கள். காரணம், அந்த இடத்திலே இருக்கின்றவர்கள். இந்த இட ஒதுக்கீட்டிற்கு authority திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக இருக்கின்ற காரணத்தால், அவர்கள் இட ஒதுக்கீடு தவறு என்று நினைத்துக்கொண்டு செயல்படுகின்ற சூழல் இருக்கிறது. எனவே, நான் இந்த மன்றத்திலே இருக்கின்றவர்களை மாத்திரமல்ல, தமிழகம் முழுவதும் இருக்கின்றவர்களை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வது, இந்த இட ஒதுக்கீடுதான் தமிழகத்தை இந்த உயர் நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது. எனவே, இந்த இட ஒதுக்கீடு பாதுகாக்கப்படுவதற்குத் தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர், தலைவர் தளபதி அவர்கள் தலைமையிலே பாடுபட வேண்டுமென்று கேட்டு, இதற்கு ஒரு தீர்வாக, இந்தத் துறையிலே பணியாற்றுவதற்கு நம்முடைய தலைவர் அவர்கள் அளித்திருக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி ஓர் அறிவிப்பை இந்த நேரத்திலே வெளியிடுகிறேன்.

பிற்பகல் 3–20

தமிழ்நாட்டிலே நடைமுறையில் இருந்துவரும் இட ஒதுக்கீடு கொள்கை பற்றியும், சமூகநீதி செயல்பாடுகள் பற்றியும் வருங்கால சந்ததியினர் அறிந்துகொள்ளும் வகையில் இட ஒதுக்கீடு மற்றும் சமூகநீதி குறித்து பல்வேறு தகவல்கள் கொண்ட புத்தகம் ஒன்று இந்தத் துறை சார்பாக வழங்கப்படும். இந்தத் துறையின் சார்பாக வழங்கப்படுகின்ற அந்தப் புத்தகம் எதிர்கால தலைமுறைக்கு இட ஒதுக்கீடு குறித்து வெளிப்படுத்தும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையில் 30 அறிவிப்புகள் இருக்கின்றன. மூன்று அறிவிப்புகளை மட்டும் நான் அவையில் படிக்கின்றேன்.

அறிவிப்புகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

1. 259 கல்லூரி விடுதிகளில் 2 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் "செம்மொழி நூலகம்" ஏற்படுத்தப்படும்

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயின்று வரும் மாணவ, மாணவியரின் கல்வி அறிவு மற்றும் பொது அறிவினை வளர்க்கவும், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சிறப்பான முறையில் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டும்

259 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதிகளில், தலா ஒரு நூலகம் ("செம்மொழி நூலகம்" என்ற பெயரில்) 2 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

தமிழகத்திலே இருக்கின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை வாயிலாக நடைபெற்று வருகின்ற அரசு கல்லூரி மாணவ–மாணவியர் விடுதிகளில் ஒரு நூலகம் அமைக்கப்படும். அந்த விடுதிகளில் தங்குவது மற்றும் உணவு அருந்துவது மட்டுமே வாய்ப்பு என்று இல்லாமல் அவர்கள் உலக அனுபவத்தைப் பெறுவதற்கு அந்த நூலகம் பயன்பட வேண்டும். எப்பொழுதெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வருகின்றாரோ, அப்பொழுதெல்லாம் அண்ணா நினைவு நூலகம்போல நூலகம் அமைக்கப்படும். அதேபோன்று ஒவ்வொரு விடுதியிலும் 'செம்மொழி நூலகம்' என்ற பெயரிலே அந்த நூலகம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. 259 கல்லூரி விடுதிகளுக்கு 1 கோடியே 44 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் உடற்பயிற்சி கருவிகள் மற்றும் விளையாட்டு கருவிகள் வழங்கப்படும்

கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியரின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு, 259 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதிகளுக்கு உடற்பயிற்சி கருவிகள் மற்றும் விளையாட்டு கருவிகள் 1 கோடியே 44 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

அதேபோன்று அந்த விடுதியில் இருக்கின்ற மாணவர்கள் நல்ல உடல் நலனும், மன நலனும் பெறுவதற்கு ஒவ்வொரு விடுதிக்கும் விளையாட்டுக் கருவிகள் வழங்கப்படும்.

3. 40 விடுதிகளுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் வழங்கப்படும்

கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியர் வேலை வாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளில் பங்கேற்பதை ஊக்கப்படுத்தும்பொருட்டு, விடுபட்டுள்ள 40

2021 செப்டம்பர் 8] [திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதிகளுக்கு போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் 10 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

அதேபோன்று கல்லூரி விடுதி மற்றும் பள்ளி விடுதிகளில் தங்கியிருக்கின்ற மாணவ–மாணவியருக்கு, அந்த விடுதியிலேயே அவர்களுக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும். அது மாவட்ட அளவிலும் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்டு அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். அது கலைத் திருவிழா என்ற பெயரிலே நடத்தப்படும். மீதியிருக்கின்ற அறிவிப்புகளை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

4. 259 கல்லூரி விடுதிகளில் மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம்மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி அளிக்கப்படும்

கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியர் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்துகொண்டு வெற்றி பெறுவதற்கு ஏதுவாக, 259 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு தனித்திறன் மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம்மூலம் வழங்கப்படும்.

5. இயக்ககங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு IFHRMS திட்டத்திற்காக 85 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்

இயக்ககங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் IFHRMS திட்டத்தினை உரிய முறையில் துரிதமாகச் செயல்படுத்த, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் இயக்ககங்கள் மற்றும் 38 மாவட்ட அலுவலகங்களில் IFHRMS திட்டத்திற்காக, கணினிகள் மற்றும் அச்சுப் பொறிகள் மற்றும் இயக்ககங்களுக்கு கணினிகள் மற்றும் உபகரணங்கள் 85 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

6. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித்தொகை திட்டங்களுக்கான வருமான வரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்

கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் அதிக எண்ணிக்கையில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் கல்வி உதவித்தொகை திட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்.

7. கல்வி உதவித்தொகை திட்டங்களின்கீழ் பயன்பெற முதல் பட்டதாரி என்பதற்குப் பதிலாக முதல் தலைமுறை பட்டதாரி என்று நிபந்தனையில் மாற்றம் செய்யப்படும்

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் கல்லூரிகளில் அதிக அளவில் சேர்ந்து கல்வி பயில வேண்டும் என்பதற்காக இம்மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டங்களின்கீழ் பயன்பெற முதல் பட்டதாரி (First Graduate) *என்ற நிபந்தனைக்குப் பதிலாக முதல் தலைமுறை பட்டதாரி* (First Generation Graduate) *என்ற அடிப்படையில் குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் உயர்கல்வி பயின்றாலும், சலுகைகள் வழங்க வாய்ப்பு அளிக்கும் வகையில் நிபந்தனை மாற்றம் செய்யப்படும்.*

8. கல்வி உதவித் தொகை திட்டங்களின்கீழ் வழங்கப்படும் உண்டி மற்றும் உறையுள் கட்டணங்கள் 9 கோடி ரூபாய் கூடுதல் செலவில் உயர்த்தி வழங்கப்படும்

விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு உண்டி மற்றும் உறையுள் கட்டணத்தை எவ்வித பாகுபாடின்றி வழங்கும் பொருட்டு, கல்வி உதவித்தொகை திட்டங்களின்கீழ் கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு மாதாந்திர உண்டி மற்றும் உறையுள் கட்டணமாக தற்போது பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு 175 ரூபாய், தொழிற்கல்வி பயிலும்

2021 செப்டம்பர் 8] *[திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]*

மாணவ, மாணவியருக்கு 350 ரூபாய், ஐடிஐ/பட்டயப் படிப்பு மற்றும் முதுகலை மாணவ, மாணவியருக்கு 235 ரூபாய் என்று வழங்கப்படுவதை அனைவருக்கும் 400 ரூபாயாக உயர்த்தி 9 கோடி ரூபாய் கூடுதல் செலவில் வழங்கப்படும்.

9. விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்/காப்பாளினிகளுக்கு 83 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும்

விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்/காப்பாளினிகள் தங்கள் விடுதியைச் சிறந்த முறையில் பராமரிப்பு செய்திடவும், விடுதியைத் திறம்பட நடத்திடவும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்/காப்பாளினிகளுக்கு புத்தாக்கப் பயிற்சி 83 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

10. மாவட்ட அளவில் சிறந்த விடுதிகளுக்கு 7 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் பரிசுகள் வழங்கப்படும்

மாநிலம் முழுவதும் செயல்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்பு விடுதிகள் சிறப்பாகச் செயல்படுவதை ஊக்கப்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் மாவட்ட அளவில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகள்/ கள்ளர் சீரமைப்பு விடுதிகளில் சிறந்த 3 விடுதிகளைத் தேர்வு செய்து 7 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் பரிசுகள் வழங்கப்படும்.

11. 20 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு 23 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் முக அங்கீகார அடிப்படையில் பயோ–மெட்ரிக் கருவிகள் பொருத்தப்படும்

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியர், விடுதி காப்பாளர்கள் மற்றும் விடுதி பணியாளர்கள் ஆகியோரின் வருகையை உறுதி செய்யும் பொருட்டு, முதற்கட்டமாக 20 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிகளில், மாணவியரின் வருகையை உறுதி செய்ய முக அங்கீகார அடிப்படையில் பயோ–மெட்ரிக் கருவிகள் 23 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் பொருத்தப்படும்.

12. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான ஆண்டு வருமான வரம்பு 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவ, மாணவியர் சேர்ந்து தங்கிப் பயிலும் வகையில் இவ்விடுதிகளில் மாணவ, மாணவியரின் சேர்க்கைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

13. விடுதிகளில் சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

14. 7 மாணவியர் விடுதிகளுக்கு 91 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவியரின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு 7 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிகளுக்கு 91 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

15. விடுதி மாணவ, மாணவியருக்கான பல்வகை செலவினத் தொகை 4 கோடியே 80 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு சோப்பு, பற்பசை போன்றவற்றிற்காக தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பல்வகை செலவினத் தொகையினை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயிலிருந்து

100 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும், 4 கோடியே 80 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தப்படும்.

16. 234 கள்ளர் பள்ளிக் கட்டடங்களில் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியருக்கு கழிப்பறை வசதிகள் 4 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

கள்ளர் பள்ளிகளில் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியருக்கான கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தி தரும் பொருட்டு, இப்பள்ளிகளில் உள்ள 234 கட்டடங்களில் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர் பயன்படுத்தும் வகையில் 4 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

17. கள்ளர் பள்ளிக் கட்டடங்களில் 6 கோடி ரூபாய் செலவில் பழுது மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கள்ளர் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதியும், பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்தி மாணவ, மாணவியரின் கற்றல், கற்பித்தல் சிறப்பாக அமைந்திட ஏதுவாக, கள்ளர் பள்ளிக் கட்டடங்களில் பழுது மற்றும் பராமரிப்புப் பணிகள் 6 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

18. 15 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பில் ஆங்கில வழிக் கல்வி வகுப்புகள் தொடங்கப்படும்.

15 கள்ளர் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி தற்போது 8 ஆம் வகுப்பு வரை நடைபெற்று வருகின்றது. இப்பள்ளிகளில் பயின்று வரும் மாணவ, மாணவியர் தொடர்ந்து இப்பள்ளிகளிலே பயில்வதற்கு ஏதுவாக, இந்த 15 கள்ளர் உயர்நிலை, மேல்நிலை பள்ளிகளில் 9 ஆம் வகுப்பில் ஆங்கில வழிக் கல்வி வகுப்புகள் தொடங்கப்படும்.

19. அனைத்து கள்ளர் தொடக்கப் பள்ளிகளிலும் முதலாம் வகுப்பில் ஆங்கில வழியிலான வகுப்புகள் தொடங்கப்படும்.

கள்ளர் பள்ளிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கையை அதிகப்படுத்தும் பொருட்டு, அனைத்து கள்ளர் தொடக்கப் பள்ளிகளிலும் ஆங்கில வழியிலான வகுப்புகள் முதலாம் வகுப்பில் தொடங்கப்படும்.

20. கிராமப்புற மாணவியருக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்திற்கான வருமான வரம்பு 72 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்

கிராமப்புறத்தைச் சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர் அதிக எண்ணிக்கையில் பயனடையும் வகையில், கிராமப்புற மாணவியருக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் பயன்பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான உச்சவரம்பு 72 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

21. நரிக்குறவர் மற்றும் சீர்மரபினர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித்தொகை ஆண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், பெண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும்

அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு திருமண உதவித்தொகை உயர்த்தி வழங்கப்பட்டதைப் போன்று தமிழ்நாடு நரிக்குறவர் மற்றும் சீர்மரபினர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித்தொகை ஆண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், பெண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.

22. இலவச மின்மோட்டாருடன்கூடிய தையல் இயந்திரம், இலவச பித்தளை தேய்ப்புப் பெட்டி மற்றும் இலவச வீட்டுமனை வழங்கும் திட்டங்களுக்கான வருமான வரம்பு 72 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் பயன்பெறும் வகையில், இலவச மின்மோட்டாருடன்கூடிய தையல் இயந்திரம், இலவச பித்தளை தேய்ப்புப் பெட்டி மற்றும் இலவச வீட்டுமனை வழங்கும் திட்டங்களின்கீழ் பயன்பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு 72 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

23. இலவச பித்தளை தேய்ப்புப் பெட்டிகளின் எண்ணிக்கையினை 2,000-லிருந்து 3,000 ஆக உயர்த்தி 48 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய சலவைத் தொழில் செய்பவர்கள் அதிக எண்ணிக்கையில் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் வழங்கப்படும் இலவச பித்தளை தேய்ப்புப் பெட்டிகளின் எண்ணிக்கையினை 2,000 லிருந்து 3,000 ஆக உயர்த்தி 48 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

24. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் மற்றும் தனித் திறன் வளர்க்கும் பயிற்சி தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம்மூலம் அளிக்கப்படும்

கள்ளர் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் ஆங்கிலப் பேச்சாற்றலை மேம்படுத்தவும் மற்றும் தனித் திறனை வளர்க்கவும் ஏதுவாக, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம்மூலம் அளிக்கப்படும்.

25. 2 பள்ளி விடுதிகள் 17 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் செலவில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படும்

கல்லூரி விடுதிகளின் தேவையைக் கருத்தில்கொண்டு, 2 பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக 17 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்படும்.

26. 2 விடுதிகளுக்கு 6 கோடியே 60 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் செலவில் சொந்த கட்டடம் கட்டப்படும்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி, மாநில அரசு திட்டத்தின்கீழ் இரண்டு பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் விடுதிகளுக்கு 6 கோடியே 60 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

27. மாநில அளவில் மையப்படுத்தப்பட்ட முறையில் விடுதிகளுக்கான மளிகைப் பொருட்கள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின்படி கொள்முதல் செய்யப்படும்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளின் நிர்வாகத்தினை மேம்படுத்தும் வகையிலும் மாணவ, மாணவியருக்குத் தரமான உணவினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டும், விடுதிகளுக்கு ஒரே மாதிரியான தரமான மளிகைப் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதி செய்திட மளிகை பொருட்கள் கொள்முதலை மாநில அளவில் மையப்படுத்தி, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின்படி மேற்கொள்ளப்படும்.

28. சிறப்பாகச் செயல்படும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் செலவில் விருதுகள் வழங்கப்படும்

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் உள்ள அலுவலர்களின் செயல்பாடுகளை, அங்கீகரிக்கும் வகையிலும், மாவட்ட அளவிலான அலுவலர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் சிறப்பாகச் செயல்படும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு விருதுகள் 50 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

29. விடுதி மாணவ, மாணவியருக்கு கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற போட்டிகள் "கலைத் திருவிழா" என்ற பெயரில் 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நடத்தப்படும்

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் படைப்பாற்றல் மற்றும் தனித்திறனை ஊக்குவிக்கும் வகையில் விடுதி மாணவ, மாணவியருக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் "கலைத் திருவிழா" என்ற பெயரில் 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

30. இட ஒதுக்கீடு மற்றும் சமூகநீதி குறித்து ஒரு புத்தகம் வெளியிடப்படும்

தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்துவரும் இட ஒதுக்கீட்டுக் கொள்கை பற்றியும், சமூக நீதி செயல்பாடுகள் பற்றியும், வருங்காலச்

சந்ததியினர் அறிந்துகொள்ளும் வகையில் இட ஒதுக்கீடு மற்றும் சமூகநீதி குறித்து பல்வேறு தகவல்கள் கொண்ட புத்தகம் 5 இலட்சம் ரூபாய் செலவில் வெளியிடப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பல்வேறு உறுப்பினர்கள் பேசினார்கள். ஆனால் துறையின்மீது அண்ணன் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா ஒருவர்தான் கருத்து தெரிவித்தார். அதற்கு நான் பதில் தெரிவித்துவிட்டேன். இங்கே வெட்டுத் தீர்மானம் மூலமாக கொடுக்கப்பட்ட கருத்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, அவற்றை நன்கு பரிசீலித்து, நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் தங்கள் வாயிலாக அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் வித்தகர் தலைவர் கலைஞர், இனமான பேராசிரியர் மற்றும் அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் உறங்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். வாழுங்காலமெல்லாம் இந்த மக்களுக்காக வாழ வேண்டும் என்று இந்தத் தலைவர்களை முன்னிலைப்படுத்தி தன்னுடைய அரசியல் வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்து இந்தச் சமுதாயத்திற்கும், இயக்கத்திற்கும், நாட்டிற்கும் செய்துவருகின்ற மாண்புமிகு கழகத் தலைவர், தமிழக முதல்வர், மக்கள் முதல்வர் தளபதி அவர்களை வணங்குகின்றேன். இந்த அவையிலே சட்டமன்ற வரலாற்றில் 50 ஆண்டுக்காலம் பணியாற்றி பொன்விழா கண்ட அருமை அண்ணன் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் 1976–லே மிசாவிலிருந்து விடுவிக்கப்பட்டு நாடாளுமன்றத் தேர்தலில் வந்தவாசி தொகுதியில் போட்டியிடுகின்ற நேரத்தில் முதன்முதலில் அவரை வணங்கி, நேரடியாக அரசியலுக்கு

வருகின்ற வாய்ப்பைப் பெற்றவன் என்ற அடிப்படையில், அவர் இருக்கின்ற சபையில் நானும் இங்கே இருப்பதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த தளபதி அவர்களுக்கு மேலும் ஒருமுறை நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 3—25

பள்ளியில் படிக்கும் காலங்களில் பள்ளிப் படிப்பில் தமிழ்மொழிப் பற்று இயக்கத்தோடு இணைத்து, 1986 முதல் 2016 வரையில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தளபதியினுடைய துணையோடு என்னை அடையாளம் காட்டி 5 முறை செஞ்சி பேரூராட்சியினுடைய town பஞ்சாயத்துத் தலைவராக்கி, அதைத் தொடர்ந்து 1996—1997—ல் திருநெல்வேலியில் நடைபெற்ற மாநாட்டில் தந்தை பெரியார் சமத்துவபுரத்தை உருவாக்குகின்ற அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அப்போது ஊர்வலமாகச் செல்லுகின்ற வாகனங்களில், சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த என்னையும், என் மனைவியையும் அலங்கார வண்டியிலே அமர வைத்து, அன்றைக்கு இந்த இயக்கத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ்நாட்டிற்கும் அடையாளம் காட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத் தொடர்ந்து, கழகத்தினுடைய தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் இரண்டு முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பினை எனக்குக் கொடுத்து, மாண்புமிகு முதல்வராக தளபதி அவர்கள் இருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் என்னை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சராகப் பொறுப்பிலே அமர்த்தியதற்கு நான் என் வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டிருக்கின்றேன், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, நான் சிறு வயதிலிருந்து இந்த இயக்கத்திலுள்ள முன்னோடிகளான அருமை அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்கள், திரு. கே.என். நேரு அவர்கள், திரு. இ. பெரியசாமி அவர்கள், பேராசிரியர் அண்ணன் பொன்முடி அவர்கள், அருமைச் சகோதரர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் போன்றவர்களோடு தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் நெருங்கி பழகுகின்ற நிலையிருந்தது. அன்றைக்கு சென்னை மாவட்டச் செயலாளராக இருந்த அருமை அண்ணன் திரு. டி.ஆர். பாலு அவர்களையும், முன்னாள் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு. ராசா

அவர்களையும், அண்ணன் திரு. ஜெகத்ரட்சகன் அவர்களையும், அண்ணன் திரு. ஆர்.எஸ். பாரதி அவர்களையும் இந்த நேரத்தில் வணங்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர், கலைஞரின் பேரன், தமிழர்களின் செல்லப் பிள்ளை, எங்களின் இளையசூரியன் தம்பி திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் வாழ்த்தி, பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் என்னை இரண்டாவது முறையாக வெற்றிபெறச் செய்த செஞ்சி தொகுதி வாக்காளப் பெருமக்கள் மற்றும் அதற்கு உறுதுணையாக இருந்த விழுப்புரம் மாவட்ட கழக, மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக மற்றும் கிளைக் கழக நிருவாகிகள், அனைத்து அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர், கழக முன்னோடிகள் மற்றும் தோழமைக் கட்சி நிருவாகிகள், என்னை ஈன்றெடுத்த தாய், தந்தை மற்றும் மனைவி, மக்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள் ஆகிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து, மாண்புமிகு தளபதி அவர்களை மீண்டும் வணங்கி சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான எனது பதிலுரையினைத் துவக்குகின்றேன்.

தமிழ்நாட்டில் ஆட்சிக் கட்டிலில் 5 முறை முதல்வராக அலங்கரித்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சிறுபான்மை மக்களுக்காக அவர்களின் நலனுக்காக தீட்டப்பட்ட திட்டங்கள் எண்ணிலடங்காதவை. நான் நேரங்காலத்தைக் கருதி, அவற்றை தலைப்புச் செய்திகளாக மட்டும் சொல்ல விரும்புகின்றேன். இறைதூதர் நபிகள் நாயகத்தினுடைய பிறந்த நாளை அரசு விடுமுறை நாளாக இந்தியாவிலே முதல் மாநிலமாக தமிழ்நாட்டில் அறிவித்தவர் (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் கலைஞர்தான் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களின் பெயரில் அரசு கலைக் கல்லூரி துவக்கிட இடமளித்து ஊக்குவித்தவர் தலைவர் கலைஞர் என்பதையும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உருது மொழி பேசும் லப்பை, தக்கினி முஸ்லிம்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அவர்கள் இட ஒதுக்கீடு பெற முதன்முதலில் முத்தாய்ப்பாய் விதை விதைத்தவர் தலைவர்

கலைஞர் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடாக முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காட்டினை கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் வழங்கி, பொருளாதார ரீதியாக பின்தங்கியிருந்த முஸ்லிம் சமுதாயத்தைக் கைத்தூக்கிவிட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். 1989 ஆம் ஆண்டு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தை உருவாக்கி, 2007 ஆம் ஆண்டு ஆட்சிப் பணி அலுவலர் தலைமையில் சிறுபான்மையினர் நலத் துறையை ஒரு கட்டுருவாக்கி, சிறுபான்மையினரின் கோரிக்கைகளை நிறைவேற்ற உதவியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டில் வசிக்கும் இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர் மற்றும் சமண, ஜைன மதத்தைச் சார்ந்தவர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை 1999 ஆம் ஆண்டு உருவாக்கித் தந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3—30

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தை 2009 ஆம் ஆண்டு உருவாக்கித் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்பதும், ஆதரவற்ற முஸ்லிம் கைம்பெண்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கி, அவர்களுக்கு உதவும்பொருட்டாக கர்நாடக நவாப் அவர்களால் 1992—ல் துவக்கப்பட்ட Muhammadan Gosha Widow's Aid Charity என்ற சங்கத்தின் பெயரை முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் என்று மாற்றியமைத்து, 1976—ல் சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்ய வழிவகை செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரது அடியொற்றி, சிறுபான்மையினருக்கு அரணாகத் திகழுகின்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் இவ்வரசால், இவ்வுலகில் வாழ்ந்து விடைபெறும்வரை அவர்கள் வாழ்ந்த காலத்தைக் கண்ணியப்படுத்தும் விதமாக நல்லடக்கம் செய்வதற்கு கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலம் அமைப்பதற்குத் துவக்கமாக நிருவாக அனுமதி அளித்து, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்த நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிவந்த முதல்வர் தளபதி அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல தமிழகத்திலுள்ள கிறித்தவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதல் மானிய உதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை இந்த ஆண்டு செயல்படுத்துவதற்காக, 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்த முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வக்ஃப் நிலங்களில் உள்ள கட்டு, சீரமைப்பு, பாதுகாப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.3 கோடி தொகுப்பு நிதி–corpus fund– உருவாக்கப்பட்டது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புக்கென தமிழ்நாடு அரசு மானியம் வழங்குகின்ற இந்தத் திட்டத்தில் 2021–2022 ஆம் நிதியாண்டில் ரூ.6 கோடி ஒதுக்கியுள்ள நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் செயல்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்காக, வக்ஃப் வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு தேர்வுகள் நடத்தி தகுதி வாய்ந்த நபர்களைக் கொண்டு காலிப் பணியிடத்தில் நிரப்பிட நடவடிக்கை எடுக்க உதவிய முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் 7,250 சன்னி வக்ஃப் நிறுவனங்களும், 202 ஷியா வக்ஃப் நிறுவனங்களும், ஆக மொத்தம் 7,452 வக்ஃப் நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 2,814 வக்ஃப் நிறுவனங்கள் மட்டுமே தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாமல் உள்ள 4,638 வக்ஃப்களில், முதல் கட்டமாக கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 1,303 வக்ஃப்–களுக்கு வக்ஃப் சட்டம் 1995, பிரிவு 41–ன்கீழ் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்ய தாக்கீதுகள் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, குறுகிய இந்த 125 நாட்களில் 85 வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து பதிவு செய்திட விண்ணப்பங்கள் பெறப்பட்டு உடனடியாக நேற்றைக்கு 10 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

வக்ஃப் நிறுவனங்களுக்குச் சொந்தமான வக்ஃப் சொத்துக்களின் விவரங்களை தனிமைப்படுத்துவதற்கும் ஆக்கிரமிப்பில் உள்ள வக்ஃப் சொத்துக்களை மீட்டெடுக்கவும், துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்போது

மீட்டெடுக்கப்பட்டுள்ள வக்ஃப் சொத்துக்களின் விவரத்தை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையில் 2,800 சதுர அடி அளவில் ரூ.7 கோடி மதிப்பீட்டிலான ஒரு சொத்து மீட்டெடுக்கப்பட்டுள்ளது. அதேபோல, சென்னை ஜானி ஜான் கான் சாலையில் அமைந்துள்ள ரொக்கையாபீ வக்ஃப்–க்குச் சொந்தமான ரூ.4 கோடி மதிப்புள்ள 2,500 சதுர அடி பரப்பிலான சொத்து 28–7–2021 அன்று ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. மேலும், திருச்சி, சென்னை மற்றும் சென்னையையொட்டிய 3 இடங்களிலும் சுமார் 13 கோடி ரூபாய் சொத்துக்களை மீட்டெடுப்பதற்காக உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. வக்ஃப் சொத்துக்களின் ஆக்கிரமிப்புகளை மீட்க வக்ஃப் சட்டம் பிரிவு 54–ன்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பல ஆண்டுகளாக வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகங்களில் நிலுவையில் இருந்து வரும் நிலையில் வழக்குகளை ஆய்வு செய்தபோது, சுமார் 500 வழக்குகள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்து வருகின்றன என்ற விவரம் தெரியவந்து, வக்ஃப் சொத்து ஆக்கிரமிப்புகளை விரைந்து மீட்க மேற்கண்ட அனைத்து வழக்குகளையும் தமிழ்நாடு பொதுச் சொத்துக்கள் சட்டம், 1975–ன்கீழ் கொண்டுவந்து விரைவில் உத்தரவினைப் பிறப்பிப்பதற்கு தொடர்புடைய அனைத்து முத்தவலிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–35

மிக அண்மையில் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பின் அடிப்படையில், திண்டுக்கல் நகரம், பேகம்பூர் மசூதி மற்றும் தர்காவுக்குச் சொந்தமான சுமார் 85 ஏக்கர் நிலம் மற்றும் ரூ.500 கோடி மதிப்பிலான சொத்துக்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ள செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாநில வக்ஃப் வாரியங்களின் செயல்பாடுகளை வலிமைப்படுத்தும்விதமாக Computer Assistant Programmers, சட்ட அலுவலர்கள், கணக்காளர்கள், நில அளவையாளர்கள், சரக அலுவலர்கள் ஆகியோரை நியமிக்கவும், வக்ஃப் சொத்துக்களை GIS mapping முறையில் கண்டறியும் பணிகளை மேற்கொள்ளவும், மையப்படுத்தப்பட்ட கணினி வசதிகளை ஏற்படுத்தவும், முத்தவலிகளுக்கான பயிற்சி முகாம் நடத்திடவும், அலுவலகப்

பயன்பாட்டிற்கு எழுதுபொருட்கள் வாங்கிடவும், Qaumi Waqf Board திட்டத்தின்கீழ் மத்திய வக்ஃப் உதவியோடு செயல்படுகின்ற நிலையை உருவாக்கியிருக்கிறோம். மத்திய வக்ஃப் கழகம், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் 2019–2020–ல் தொடங்கப்பட்டு அதைத் தொடர்ந்து இப்போது அந்தப் பணிகளை வேகப்படுத்தி, 2020–2021–ல் 86 இலட்சம் ரூபாய் அந்தத் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள வக்ஃப் சொத்துக்களின் ஆவணங்கள் 100 சதவிகிதம் இத்திட்டத்தின்கீழ் கணினிமயமாக்கப்பட 13 ஆயிரம் வக்ஃப் சொத்துக்கள் GIS mapping முறையில் மத்திய வக்ஃப் கழகத்தின் www.wamsi.nic.in என்ற இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பயன்படுத்தப்படாமல் உள்ள வக்ஃப் சொத்துக்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்து, வருமானம் ஈட்டும்வகையில் கட்டடம் கட்டுதல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக, வக்ஃப் நிறுவனங்களால் மத்திய வக்ஃப் கழகத்திற்குப் பரிந்துரைக்கப்படும் திட்டங்களுக்கு அதிகபட்சமாக ரூபாய் 2 கோடி அல்லது திட்ட மதிப்பீட்டில் 75 சதவிகிதம், இவற்றில் எது குறைவானதோ, அதை மத்திய வக்ஃப் கழகத்தால் Shahari Waqf Sampatti Vikas Yojana திட்டத்தின்கீழ் கடனாக வழங்கப்படுகின்ற இந்தத் திட்டத்தை வக்ஃப் வாரியத்தின் மூலமாகச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அனுமதியைப் பெற்றிருக்கிறோம். ஒன்றிய அரசின் சிறுபான்மை நல அமைச்சகத்தால் மத்திய வக்ஃப் கழகத்துடன் இணைந்து, வக்ஃப் சொத்துக்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. தகுதியான வக்ஃப் சொத்துக்களை வணிகரீதியாக மேம்படுத்துவதற்காக தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் நிதியுதவி வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் வக்ஃப் சொத்துக்களை வணிகரீதியாக மேம்படுத்துவதற்காக இந்தத் திட்டத்தைத் துரிதப்படுத்தியிருக்கிறோம். சிறுபான்மையின மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு கழக அரசு சிறுபான்மை மக்களின் முன்னேற்றத்திற்கு என்றென்றும் பாடுபடும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏற்கெனவே ஒரு மானியக் கோரிக்கையில் அழகாகப் பேசி முடித்தீர்களே! (குறுக்கீடு) இதுதான் first–டோ?

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஒப்புதலோடு, இந்த அவையில் என்னை இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக்கி, அமைச்சராக்கி என்னைப் பெருமைப்படுத்தியிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் வாழ்நாள் நன்றியைத் தெரிவித்து, இதற்கெல்லாம் உறுதுணையாக இருந்து எனக்கு ஒத்துழைப்புக் கொடுத்த அலுவலகப் பெருமக்கள், துறைச் செயலாளர் சகோதரர் திரு. கார்த்திக், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், நம்முடைய சிறுபான்மையினர் நல இயக்குநர் டாக்டர் சுரேஷ் அவர்களுக்கும், M.D. திரு. இரவிச்சந்திரன் அவர்களுக்கும், திரு. சம்பத், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், வக்ஃப் வாரியத்தினுடைய C.E.O. Dr. D. Faritha Banu, அவர்களுக்கும், திரு. ஆண்டியப்பன் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அலுவலகப் பெருமக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்து இப்போது அறிவிப்புகளை வாசிக்கின்றேன்.

பிற்பகல் 3—40

அறிவிப்புகள்

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை

1. 14. சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் 14 இலட்சம் ரூபாய் செலவில் நூலகம் ஏற்படுத்தப்படும்

கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியரின் கல்வி அறிவு மற்றும் பொது அறிவினை வளர்க்கவும், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சிறப்பான முறையில் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டும் 14 சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் தலா ஒரு நூலகம் 14 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

2. 14 சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளுக்கு 5 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் உடற்பயிற்சிக் கருவிகள் மற்றும் விளையாட்டுக் கருவிகள் வழங்கப்படும்

கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியரின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு, 14 சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளுக்கு உடற்பயிற்சிக் கருவிகள் மற்றும் விளையாட்டுக் கருவிகள் 5 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

3. 14 சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ப்பு மேம்பாட்டுக் கழகம்மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி அளிக்கப்படும்

கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியர் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்துகொண்டு வெற்றி பெறுவதற்கு ஏதுவாக, 14 சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு தனித்திறன் மற்றும் ஆங்கில வழி பேச்சாற்றல் பயிற்சி தமிழ்நாடு திறன் வளர்ப்பு மேம்பாட்டுக் கழகம்மூலம் வழங்கப்படும்.

4. சிறுபான்மையினர் நல விடுதிகளில் மாணவ, மாணவியரின் சேர்க்கைக்கு வருமான வரம்பு 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்

சிறுபான்மையினர் விடுதிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவ, மாணவியர் சேர்ந்து தங்கிப் பயிலும் வகையில் இவ்விடுதிகளில் மாணவ, மாணவியரின் சேர்க்கைக்கு பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

5. சிறுபான்மையினர் நல விடுதி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வரும் பல்வகை செலவினத் தொகை இரு மடங்காக 9 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தி வழங்கப்படும்

சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு தற்போதைய சூழலுக்கேற்ப பல்வகை செலவினத் தொகை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும், 9 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தி வழங்கப்படும்.

6. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், பெண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும்

அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு திருமண உதவித்

தொகை உயர்த்தி வழங்கப்பட்டதை போன்று உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், பெண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.

7. சிறுபான்மையினருக்கு 1,000 இலவச மின்மோட்டாருடன்கூடிய தையல் இயந்திரங்கள் 45 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக 1000 மின்மோட்டாருடன்கூடிய தையல் இயந்திரங்கள் 45 இலட்சம் ரூபாய் செலவில் இலவசமாக வழங்கப்படும்.

8. தேனி மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் 3 கோடியே 47 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படும்

சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி தேனி மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினர் மாணவியர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் 3 கோடியே 47 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

9. ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கு அருட்சகோதரிகள்/ கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் 37,000 ரூபாயிலிருந்து 60,000 ரூபாயாக 11 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்தவப் பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனிதப் பயணம் செல்வதற்கு 37,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இப்புனித பயணத்திற்கு அருட்சகோதரிகள்/கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் 37,000 ரூபாயிலிருந்து 60,000 ரூபாயாக 11 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தப்படும்.

ஜெருசலேம் புனிதப் பயணம் செல்லும் கிறித்தவ அருட்சகோதரிகள்/கன்னியாஸ்திரிகள் 50 பேருக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்ற மானியம் ரூ.37,000/–லிருந்து ரூ.60,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

10. சிறுபான்மையினர் விடுதி மாணவ/மாணவியருக்கு சிறுபான்மையினர் பண்டிகைகளுக்கு (புத்த பூர்ணிமா, மஹாவீர் ஜெயந்தி, பக்ரீத், ரம்ஜான், கிறிஸ்துமஸ்) சிறப்பு உணவு வழங்கப்படும்

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. சிறுபான்மையினர் விடுதி மாணவ, மாணவியருக்கு சிறுபான்மையினர் பண்டிகைகளுக்கு (புத்த பூர்ணிமா, மஹாவீர் ஜெயந்தி, பக்ரீத், ரம்ஜான், கிறிஸ்துமஸ்) சிறப்பு உணவு வழங்கப்படும்.

11. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள 10,583 நபர்களுக்கு மிதி வண்டிகள் 4 கோடியே 76 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் உறுப்பினர்கள் பயனடையும் பொருட்டு, அவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு 10,583 மிதிவண்டிகள் 4 கோடியே 76 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

12. அனைத்து மாவட்டங்களில் கூடுதலாக முஸ்லிம்/கிறித்தவ மகளிர் உதவும் சங்கங்கள் துவங்கப்படும்

முஸ்லிம் மற்றும் கிறித்தவ மகளிர் உதவும் சங்கங்களின் நிதி ஆதாரங்களின்மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மற்றும் கிறித்தவ மகளிர் ஆகியோருக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு மாவட்டத்திற்கு ஒரு முஸ்லிம் மற்றும் ஒரு கிறித்தவ மகளிர் உதவும் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதியதாக தேவையின் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களில் கூடுதலாக முஸ்லிம்/கிறித்தவ மகளிர் உதவும் சங்கங்கள் துவங்கப்படும்.

முஸ்லிம்/கிறித்தவ மகளிர் உதவும் சங்கங்கள் தற்போது மாவட்டந்தோறும் தலா ஒன்று வீதம் செயல்பட்டு வருகின்றன. 2021–2022 ஆம் நிதியாண்டிலிருந்து மாவட்டந்தோறும் ஒன்றுக்கு மேற்பட்ட மகளிர் உதவும் சங்கங்களை கூடுதலாக துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13. வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் சகாயத் தொகை விகிதத்திற்கு ஏற்ப வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் ஆண்டு நிர்வாக மானியம் உயர்த்தப்படும்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நிர்வாகச் செலவுகளுக்காக தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு ஆண்டுதோறும் நிர்வாக மானியமாக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் சகாயத் தொகை விகிதத்திற்கு ஏற்ப இந்நிர்வாக மானியம் உயர்த்தி வழங்கப்படும்.

14. வக்ஃப் வாரிய தலைமை அலுவலகத்திற்கு வக்ஃப் வாரியத்தில் புதிதாகக் கட்டடம் கட்டப்படும்

தமிழ்நாடு வக்ஃப் வாரியம் தனது பணிகளை திறம்பட மேற்கொள்ளும் வகையில் சென்னையிலுள்ள தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைமை அலுவலகத்திற்கு வக்ஃப் வாரிய நிலத்தில் புதிதாக கட்டடம் கட்டப்படும்.

15. 8 வக்ஃப் சரக அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட 1 கோடியே 28 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வக்ஃப்களைப் பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும் மற்றும் கண்காணிக்கவும் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்குட்பட்ட, சொந்த அலுவலகக் கட்டடம் இல்லாத 8 சரக அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட 1 கோடியே 28 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்.

16. சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் 5 மாவட்டங்களில், புதிய பணியிடங்களுடன் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் 1 கோடியே 75 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்படும்

சிறுபான்மையினருக்கான நலத் திட்டங்களைச் சிறப்பான முறையில் செயல்படுத்தும் பொருட்டு, சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் 5 மாவட்டங்களில், புதிய பணியிடங்களுடன்கூடிய மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் 1 கோடியே 75 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாகத் தோற்றுவிக்கப்படும்.

2021 செப்டம்பர் 8] [திரு. செஞ்சி K.S. மஸ்தான்]

17. கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும்

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள் நல வாரியங்கள்மூலம் வழங்கப்பட்டு வருவதைப் போன்று கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் கிறித்தவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்களுக்கு நல வாரியம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு திட்டங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்தத் துறை புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, அதில் படிப்படியாகச் செயல்படலாம் என்று அவர்களும் மகிழ்ச்சியோடு தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இந்த மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அனுமதி வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர் மற்றும் அரசு தலைமைக் கொறடா மற்றும் சட்டமன்றச் செயலர் உள்ளிட்ட அலுவலகப் பெருமக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–45

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களுக்கு நான் சொல்லிய பதில் ஓரளவுக்கு திருப்தியாக இருக்கும் என்று நினைக்கின்றேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,067,06,62,000/–, மூலதனக் கணக்கில் ரூ.88,83,88,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

2021 செப்டம்பர் 8] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,717,03,02,000/–, மூலதனக் கணக்கில் ரூ.404,88,93,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 5–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–47 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** அவர்கள் தலைமையில் பிற்பகல் 5–00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

(இ) கோரிக்கை எண் 25—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஈ) கோரிக்கை எண் 48—போக்குவரத்துத் துறை

(உ) கோரிக்கை எண் 31—தகவல் தொழில்நுட்பவியல் துறை

(இ) கோரிக்கை எண் 25-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.408,99,32,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1053, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.408,99,32,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2965, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3947, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.408,99,32,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1930, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.408,99,32,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2267, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.408,99,32,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2856, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2881, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3860, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4363, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4514, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2128, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.408,99,32,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2245, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2294, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.408,99,32,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2794, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.408,99,32,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2159, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.408,99,32,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2917, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3728, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.408,99,32,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 985, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாப்பிரெட்டிப்பட்டியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.408,99,32,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2351, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2993, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3240, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, மேலூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2021 செப்டம்பர் 8] [திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்]

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.408,99,32,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3414, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4243, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.408,99,32,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஈ) கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 48—போக்குவரத்துத் துறை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.451,70,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1060, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2606, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2978, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4168, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2127, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2158, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2916, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2268, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2854, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2879, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4429, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4548, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3733, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1438, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதிக்கு உட்பட்ட சோளிங்கர் நகரில் வேலூர் முதல் திருத்தணி வரை செல்லும் அரசுப் பேருந்துகளை உரிய நேரத்தில் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2030, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேருந்து நிலையத்திலிருந்து வெளி மாநிலங்கள் (ஆந்திரா) மற்றும் தென் தமிழகத்திற்கு பேருந்துகளை இயக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2243, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2293, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு போக்குவரத்துக் கழகத்தில் பழுதடைந்துள்ள பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2350, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2662, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி முதல் கோயம்புத்தூர் வரை உள்ள வழித்தடத்தில் தமிழ்நாடு அரசு விழுப்புரம் கோட்டத்தின் சார்பில், ஒரு புதிய வழித்தடத்திற்கு இரண்டு பேருந்துகள் என இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2755, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் முதல் அரியத்தூர் வரை பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2989, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தொகுதியில் 7 பேரூராட்சிகள், 37 ஊராட்சிகள் உள்ளன. இந்தக் கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்கள் அதிகமானோர் வேலைக்குச் செல்வதால், மகளிருக்கான இலவச அரசுப் பேருந்தினை அனைத்து ஊர்களுக்கும் இயக்க ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3241, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு பஸ் வசதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3416, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3797, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தர்வகோட்டை அரசு பேருந்து பணிமனையின் தரைத்தளம், சுற்றுச்சுவர், நுழைவாயில் ஆகியவற்றை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3830, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4244, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரத்திலிருந்து கோயம்புத்தூருக்கு புதிய அரசுப் பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4259, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையிலிருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்லும் அனைத்து பேருந்துகளும் மதுராந்தகம் தொகுதி மதுராந்தகம் ஏரிக்கரை GST சாலையில் நின்று செல்ல நிரந்தர பேருந்து நிறுத்தம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4604, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதி, வத்தலகுண்டிலிருந்து கொடைரோடு வரை செல்லும் நகரப் பேருந்தை கொடைரோடு டோல்கேட் வரை நீட்டிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4634, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மினி பஸ் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.451,70,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

பிற்பகல் 5–05

(உ) கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.68,25,69,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1077, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,25,69,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2966, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3965, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,25,69,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4112, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,25,69,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2130, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,25,69,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2783, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

2021 செப்டம்பர் 8]

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,25,69,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2157, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,25,69,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2919, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2269, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,25,69,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2858, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2885. மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4383, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4526, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3729, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,25,69,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1448, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் பகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா (IT Park) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,25,69,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2290, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் இணைய வழி சேவை கிடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,25,69,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.25,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2991, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் இணைய சேவையின் வேகம் மற்றும் தரத்தை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,25,69,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3072, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதி, பொன்னேரியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,25,69,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3453, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு கேபிள் சேவை வாயிலாக இணையவசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,25,69,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3852, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்– நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் போக்குவரத்துத் துறை ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும்

@ 574 முதல் 684 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV மற்றும் V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். தற்போது மூன்று மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள். முதல் மூன்று உறுப்பினர்களுக்கு தலா 15 நிமிடங்கள் வீதமும், மீதமிருக்கின்ற 5 மாமன்ற உறுப்பினர்களுக்கு தலா 10 நிமிடங்களும் வழங்கப்படும். 3 மானியக் கோரிக்கைகளின்மீது 2 மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்ற வேண்டும்.

தயவுசெய்து பேச வருகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், குறித்த நேரத்தில் உங்களுடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள்.

*__திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்று சொன்னார் வள்ளுவர். அதுமட்டுமல்ல,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்"

@ 685 முதல் 751 வரையிலான பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

என்றும் சொல்லியிருக்கிறார். ஆக, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, மக்களுக்கு முறைசெய்து காப்பாற்றி, இன்றைக்கும் இந்த மண்ணுலகைவிட்டு மறைந்தாலும், வள்ளுவர் சொன்னதுபோன்று, பூவுலகில் இன்றைக்கும் வாழ்வாங்கு தெய்வமாக வீற்றிருக்கின்ற எங்கள் கழகத்தின் நிறுவனத் தலைவர் புரட்சித் தலைவர் M.G.R. அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி உணர்வோடு வணங்கி, போற்றுகிறேன்.

இந்த அவையில், எனக்கு 5–வது முறையாக சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு வாய்ப்பினை வழங்கிய, எங்கள் கழகத்தின் இணை ஒருங்கிணைப்பாளரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருமான, அருமை அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி), அருமை அண்ணன் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர், எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான அண்ணன், திரு. OPS அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 5–10

அதிலும் குறிப்பாக, புரட்சித் தலைவர் காலத்தில், ஒன்றியக் குழுத் தலைவராக, அம்மா ஆட்சிக் காலத்தில் மாவட்ட ஊராட்சி உறுப்பினராக, 4 முறை சட்டமன்ற உறுப்பினராக, அதிலே 10 ஆண்டுக் காலம் போக்குவரத்து மற்றும் மின்சாரம் மற்றும் மதுவிலக்குத் துறை அமைச்சராக, 15 ஆண்டுக் காலமாக திண்டுக்கல் ஒருங்கிணைந்த மாவட்டம் மற்றும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளராகப் பணியாற்றுவதற்கு அரிய வாய்ப்புகளை வழங்கிய இருபெரும் தலைவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல ஐந்தாவது முறையாக என்னை வெற்றிப் பெறச் செய்து இந்த அவைக்கு உறுப்பினராக அனுப்பி வைத்த எனது நத்தம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது வெற்றிக்காக அரும்பாடுபட்ட கழகத்தினுடைய நிருவாகிகள், தொண்டர்கள், தோழமை கட்சியினர் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, இந்த அவையிலே பேசுவதற்கு எனக்கு அனுமதி வழங்கியிருக்கின்ற சட்டப் பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுகால இடைவெளிக்குப் பின்பு, நீண்ட இடைவெளிக்குப் பின்பு சட்டமன்றத்திலே மீண்டும் பேசுவதனால் முதலிலே எனது தொகுதி மக்களுடைய பிரச்சினையை நான் நன்றி உணர்வோடு பதிவு செய்துவிட்டு, அடுத்து போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எனது கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

பொதுவாக எங்களுடைய நத்தம் தொகுதியைப் பொறுத்தளவிலே, நத்தம் ஒரே ஒரு பேரூராட்சியைத் தவிர மற்ற அனைத்துப் பகுதிகளும் குக்கிராமங்கள்தான். பேரூராட்சியோ, நகராட்சியோ, மாநகராட்சிப் பகுதிகளோ கிடையாது. முற்றிலுமாக கிராமப் பகுதிகளை உள்ளடக்கியுள்ள அந்தத் தொகுதிக்கு முன்னுரிமை அளித்து, அந்தப் பகுதியினுடைய கல்வி வளர்ச்சிக்காக, அரசு கலைக் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அரசு கலைக் கல்லூரியை அனுமதிக்கும்போது, நீங்கள் அனுமதி அளித்தால், அதற்குரிய இடத்தை என்னுடைய சொந்தப் பொறுப்பிலோ அல்லது தனியார் துறையின் மூலமாகவோ பெற்று, இலவசமாகத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்தபடியாக அந்தப் பகுதியிலே தேவையாக இருப்பது மின் மயானம். ஆங்காங்கே பல கிராமங்களில், பல இடங்களிலே சுடுகாட்டுப் பிரச்சினைகளும், சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகளும் ஏற்படுவதன் காரணமாக நத்தம் நகரிலே ஒரு மின் மயானம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அப்படி, நத்தம் பகுதியிலே மின் மயானம் ஏற்படுத்தித் தர அனுமதி கொடுத்தால், அதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து குறிப்பிட்ட தொகையை வழங்குவதற்கும் தயாராக இருக்கிறேன். அதுமட்டுமல்ல; அதற்கு ஏறத்தாழ 2 ஏக்கர் நிலம் தேவைப்படும். தேவைப்பட்டால் பேரூராட்சிப் பகுதிக்குள்ளேயே அதற்குரிய இடத்தையும் தனியார் மூலமாகப் பெற்று, இலவசமாகத் தருவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கடுத்தபடியாக, எங்கள் பகுதி மலைப் பகுதிகள் நிறைந்த பகுதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச்சிலே இடைமறிப்பதற்காக வருந்த வேண்டாம். தாங்கள் இடம் கொடுத்தால், நிச்சயமாக இந்த ஆண்டு மின் மயானம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுதியாக இடம் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் recommend செய்துதான் கிடைத்திருக்கிறது.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: தனியார் துறை மூலமாக ஏற்பாடு செய்து தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பேருக்கும் சேர்த்து நன்றி சொல்லுங்கள். அவை முன்னவர் பரிந்துரை செய்துதான் கிடைத்திருக்கிறது.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பரிந்துரை செய்ததாகச் சொன்னார்கள். பரிந்துரை செய்ததற்காக மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், ஒப்புதல் வழங்கிய மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நத்தம் தொகுதி மலைப்பகுதி கிராமங்கள் அதிகம் நிறைந்திருக்கக்கூடிய பகுதியாகும். கரந்தமலை பகுதியில் இருக்கின்ற குட்டுப்பட்டி ஊராட்சி உள்ளிட்ட கிராமங்களில் இருக்கின்ற மக்கள் சுதந்திரம் பெற்று இன்றுவரை சாலை வசதி இல்லாமல் போக்குவரத்திற்கு மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். அந்தவகையிலே மலையூர், சின்ன மலையூர், வலசை, எல்.முனையூர் போன்ற கிராமங்களுக்கும், சிறுமலையைச் சேர்ந்த தாளவாடி கிராமத்திற்கும், அரசு வனத் துறையின் சார்பாக சாலை அமைத்துத் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, சிறுமலைப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும். ஏற்கெனவே, சென்ற முறை முதலமைச்சராக

இருந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் அந்தப் பகுதியிலே தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான இடத்திலே அழகிய park–பூங்கா ஒன்றை ஏற்படுத்துவதற்கு நிதியும் ஒதுக்கீடு செய்து, அதற்குரிய ஆணைகளை வழங்கினார்கள். அந்தப் பணியும் தொடங்கப்பட்டது. தோட்டக்கலைத் துறையின் சார்பாக அதற்கு போதிய இடமும் இருக்கிறது. அந்த இடத்திலே தோட்டக்கலைத் துறையின் சார்பாக பூங்கா அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 5–15

அதேபோல் இன்றைக்கு நத்தம் பகுதியிலே அதிகமாக வளர்ந்து வரும் தொழிலாக ஆயத்த ஆடைகள் தயாரிக்கின்ற தொழில் இருக்கிறது. அந்தத் தொழிலை நம்பி பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகள் அதில் ஈடுபட்டு வருகிறார்கள். அந்தத் தொழிலை மேம்படுத்துவதற்காகவும், தயாரிப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் வகையிலும் ஆயத்த ஆடைகள் தயாரிப்புப் பூங்கா ஒன்றை சிறு தொழில் துறை மூலமாக அங்கே ஏற்படுத்தித் தரும்படி மாண்புமிகு துறையின் அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சிறுமலை அடிவாரப் பகுதியில் இருக்கின்ற சாணார்ப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த நொச்சி ஓடைப்பட்டி கிராமப் பகுதியில், சிறிய நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டிக் கொடுத்தால் அது பயனுள்ளதாக இருக்கும். பெரிய அளவில் செலவாகாது, ஏறத்தாழ பத்து கோடி ரூபாய் அளவில்தான் செலவு இருக்கும். ஏற்கெனவே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அங்கு சிறிய நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டித் தரும்படி நீர்ப் பாசனத் துறை அமைச்சர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டம், சாணார்ப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த நொச்சி ஓடைப்பட்டி கிராமப் பகுதியில் கன்னிமார் அருவியில் நீர்த்தேக்கத்தைக் கட்டித் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிதோ, பெரிதோ, என்னுடைய நீண்ட கால நண்பர், நீங்கள் கேட்டு இல்லையென்று நான் சொல்வேனா, செய்து தருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) முடித்துவிட்டீர்களா?*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *ஒப்புதல் வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலம், மாண்புமிகு எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலம்தான் போக்குவரத்துத் துறையில் ஒரு பொற்காலம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், போக்குவரத்துத் துறையின் மூலமாக, அங்கு பணிபுரிகின்ற இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பயனடைகின்ற வகையில் அவர்களின் வாரிசுகள் எல்லாம் படிப்பதற்கு வசதியாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில், ஈரோடு, சித்தோடு கிராமத்தில் ஒரு பொறியியல் கல்லூரி துவங்கப்பட்டது. அதேபோன்று, போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகள் படிப்பதற்காக திருநெல்வேலியில் ஒரு Polytechnic *கல்லூரி, குரோம்பேட்டையில் ஒரு* Polytechnic *கல்லூரி, ஓசூரில் ஒரு* Polytechnic *கல்லூரி ஆகியவையெல்லாம் நிறுவப்பட்டன. போக்குவரத்துத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் எண்ணற்ற திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப்பட்டன.*

கொள்கை விளக்கக் குறிப்பினை நான் படித்துப் பார்த்தேன். அதில், போக்குவரத்துத் துறையின் மூலமாக இயங்கி வந்த பொறியியல் கல்லூரி இந்த ஆண்டு, 2021 ஆம் ஆண்டு 8—வது மாதம் உயர் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், 35 சதவிகிதம் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு இடம் அளிக்கப்படும் என்கிற உத்தரவாதம் கொடுத்து ஆணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் கேட்க விரும்புவது, போக்குவரத்துத் தொழிலாளர்களின் பங்களிப்பு மற்றும் அரசின் பங்களிப்பு, அரசின் நிதியுதவி ஆகியவற்றைச் சேர்த்துத்தான் அந்தக் கல்லூரி உருவாக்கப்பட்டது. அந்தக் கல்லூரியை இன்றைக்கு உயர் கல்வித் துறைக்கு மாற்றியிருந்தாலும்கூட, அதில் 35 சதவிகிதம் தான் போக்குவரத்து தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு இடம் அளிக்கப்படும் என்பதை மாற்றி, குறைந்தபட்சம் 50 சதவிகிதம்

அளவிற்காவது போக்குவரத்துத் தொழிலாளர்களின் பிள்ளைகள் இடம் பெறுகின்ற வகையில் அந்த அரசாணையில் நீங்கள் திருத்தம் செய்திட வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அது தொழிலாளர்களுக்கு மிகுந்த பேருதவியாக இருக்கும்.

எங்களது கழக ஆட்சிக் காலத்தில்தான் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு அவர்கள் பயன் அடைகிற வகையில் அவர்கள் தங்குவதற்கு வேண்டிய அனைத்து வசதிகள், விடுதிகள், சுற்றுலா மையங்களில் விடுதிகள், ஒரு ரூபாய்க்குத் தரமான மதிய உணவு இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் செயல்படுத்தியது எங்களது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு. போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு எண்ணற்ற சலுகைகளை எல்லாம் செய்தது கழக அரசு.

பிற்பகல் 5–20

இன்றைக்கு நான் வருத்தத்தோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தவுடன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், ATP–யைச் சார்ந்த தொழிலாளர்கள்மீது ஓர் அறிவிக்கப்படாத போர் தொடங்கப்பட்டிருப்பதைப்போல மிகக் கடினமாக அவர்களை இன்றைக்குப் பழிவாங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துத் துறையைப் பார்த்த முன்னாள் அமைச்சர்கள் இங்கே நிறைய பேர் இருக்கிறோம். 16–வது சட்டமன்றப் பேரவையில் உள்ளவர்களைப் பார்த்தால் ஏறத்தாழ இங்குள்ள மாண்புமிகு அமைச்சர் க. பொன்முடி அவர்கள், மாண்புமிகு அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள், மாண்புமிகு திரு. செந்தில்பாலாஜி அவர்கள், மாண்புமிகு அண்ணன் முத்துசாமி அவர்கள், மாண்புமிகு அண்ணன் செங்கோட்டையன் அவர்கள், மாண்புமிகு தங்கமணி அவர்கள், மாண்புமிகு நயினார் நாகேந்திரன் அவர்கள், நான் உட்பட, அநேகமாக போக்குவரத்துத் துறையினைப் பார்த்த முன்னாள் அமைச்சர்கள் அதிகமாக இருக்கின்ற சபை இந்தச் சபை. ஆகையால், போக்குவரத்துத் துறையினைப் பற்றி அனைவருக்கும் நன்கு தெரிந்திருக்கும். அந்தவகையில் இன்றைக்கு அந்தத் துறையில் உள்ள தொழிலாளர்கள் பழிவாங்கப்படுவதை உள்ளபடியே இவ்வளவுபேர்களும் பார்க்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொத்தாம்பொதுவாகச் சொல்ல வேண்டாம்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: சொல்கிறேன். பொத்தாம்பொதுவாகச் சொல்லவில்லை. நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
> கோடாமை சான்றோர்க் கணி."

நீதி பரிபாலனத்தில் இருக்கின்ற நீங்கள் முதலில் பிரச்சினைகள் பேசுவதை உள்வாங்கிக் கொண்டு பிறகு சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வது, பொத்தாம்பொதுவாக பழிவாங்கப்படுகிறார்கள் என்று சொல்வதைவிட்டுவிட்டு எந்த இடத்தில், என்ன தவறு நடந்திருக்கின்றது என்று சொல்லி அதனைத் திருத்தச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சொல்லட்டும். நான் உங்களுக்கு நேரம் தருகிறேன். மாண்புமிகு அமைச்சர் சொல்லட்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். அதையும் உள்வாங்கிக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். திரு. நத்தம் விசுவநாதன் அவர்கள் போக்குவரத்துத் துறையில் தொழிலாளர்கள் பழிவாங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் போராடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சேர்ந்த தொழிலாளர்கள் எல்லாம் எப்படி தாக்கப்பட்டார்கள், எப்படி பாடுபடுத்தப்பட்டார்கள் என்பதை நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதுகூட, வருகின்ற தொழிலாளர்கள் யாராக இருந்தாலும் கட்சி வித்தியாசம் இல்லாமல் அந்தத் தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களை அழைத்துப் பேசுகின்றோம். உங்களுடைய தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள்கூட என்னிடத்தில் நேரில் வந்து பேசியிருக்கிறார்கள். நம்முடைய திரு. கமலக்கண்ணன் போன்றவர்கள் எல்லாம் பேசியிருக்கிறார்கள். அவர்களையும் அழைத்து அந்தத் தொழிற்சங்கத்தின் பிரச்சினைகள் என்ன என்று கேட்கின்ற அரசாகத்தான் இருக்கின்றது இந்த அரசு. எனவே, அனைத்துத் தொழிலாளர்களையும் அழைத்துப் பேசுகின்றோம். அனைத்துத் தொழிலாளர்களுக்கும் இலகு பணிகள் கொடுக்கிறோம். இதில்

அரசியல் கிடையாது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நான் சார்ந்திருக்கின்ற திண்டுக்கல் மாவட்டத்தில், திண்டுக்கல், தேனி உள்ளடக்கிய திண்டுக்கல் மண்டலத்தில் அண்ணா தி.மு.க. தொழிற்சங்கச் செயலாளர் நாராயணசாமி, மண்டலச் செயலாளர் ஆவார். இவர் இதுவரையிலும் எந்தவித Memo–வோ குற்றப்பத்திரிகையோ வாங்கியதில்லை. அவர்மீது குற்றச்சாட்டு என்று குறிப்பிடும் வகையில் எந்தக் காரணமும் இல்லை. அவரை எந்தக் காரணமும் இல்லாமல் அங்கிருந்து தேவாரத்திற்கு தூக்கி அடிக்கிறார்கள். இரண்டு நாட்கள் கழித்து அதனை இரத்து செய்துவிட்டு அங்கிருந்து லோயர் கேம்ப்பிற்கு அடுத்த பகுதிக்கு மாற்றுகிறார்கள். அதற்குப்பின் அவர் நீதிமன்றத்திற்குச் செல்கிறார். நீதிமன்றத்தில் ஒரு தடையாணை பெற்றிருக்கிறார். தடையாணை பெற்று இப்போது சேர்ந்திருந்தாலும்கூட அவர் VRS கொடுக்க நிர்பந்தப்படுத்தப்படுகிறார். அதுபோல், பெரியகுளத்தில் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்குக்கூட அந்தப் பெயர்கள் தெரியும். அவருக்கு வேண்டியவர் என்றுகூட சொல்லவில்லை– அண்ணா தி.மு.க.–வைச் சேர்ந்த தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளி, அவரை சேலத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். அவரும் நீதிமன்றத்திற்குச் சென்று stay வாங்கி வந்திருக்கிறார். அதுபோல் இன்றைக்கு திருப்பரங்குன்றத்திலிருந்து தேவாரத்திற்கு ஒருவரை மாற்றியிருக்கிறார்கள். அவரும் தற்போது தடையாணை வாங்கி மீண்டும் பணியில் சேர்ந்திருக்கிறார். இங்கே நான் குறிப்பிடுவது, இதுவரை இந்தத் துறையினைப் பார்த்த அமைச்சர்களுக்கு எப்பொழுதும் ஒரு வழக்கம் இருந்தது. தொழிற்சங்கத்தினைச் சேர்ந்த மண்டலச் செயலாளர்கள் அல்லது இந்தக் கட்சியினுடைய முக்கிய தொழிற்சங்க நிர்வாகிகளையெல்லாம் மாற்றுவது மரபே இல்லை. இதற்குமுன்பு இதுபோல் யாரும் செய்யவில்லை. ஆனால், இப்போதுதான் மண்டலச் செயலாளர்களாக இருப்பவர்கள்கூட தூக்கி வீசப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 5—25

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த ஆட்சி காலத்தில் எந்த மாறுதலும் போடப்படவில்லை என்று சொன்னார். ஆனால், ஒரே நேரத்தில் 500 பேருக்கும் மேலே ஓட்டுநர்களை மதுரையில் மாறுதல் செய்துவிட்டுப் போனவர்கள்தான் கடந்த ஆட்சியில் உள்ளவர்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

ஆகவே நீங்கள் சொல்கின்ற நிகழ்வுகள், சட்டத்திற்குட்பட்டு ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் அந்தந்தப் பகுதியிலிருக்கின்ற மேலாண்மை இயக்குநர்கள் மாற்றியிருப்பார்களே தவிர, அரசாங்கத்தில் இருந்து 'மாற்றுங்கள்' என்று நாங்கள் யாரையும் சொல்லவில்லை. அந்தந்தப் பகுதியில் நடக்கின்ற குற்றச்சாட்டுகளுக்கு அவரவர்கள் பொறுப்பேற்க வேண்டுமே தவிர, இங்கே வந்து, 'அவரை மாற்றிவிட்டார்கள், இவரை மாற்றிவிட்டார்கள்' என்று சொல்வது அரசியல் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள். பேசுங்கள். பேசுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, நீங்கள்தான் தலையிட்டு செய்தீர்கள் என்று நான் சொல்லவில்லை. இங்கே நிகழ்வு நடந்திருக்கின்றது. ஆதாரமிருந்தால் சொல்லுங்கள் என்று மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார். அதனால்தான் நான் ஆதாரத்தோடு, இன்னார் இன்னார் மாற்றப்பட்டிருக்கின்றார்கள் என்ற விவரத்தைச் சொன்னேன். ஆனால், நாங்கள் அறிந்தவரை,— நான் சொல்வது, அதாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலகத்திலிருந்தோ அல்லது இங்கே தலைமையிடத்திலிருந்தோ உத்தரவு வந்ததாகச் சொல்லவில்லை. ஆனால், அங்கேயிருக்கின்ற LPF தொழிற்சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள், அவர்கள் அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு, அண்ணா தி.மு.க. தொழிற்சங்க நிர்வாகிகளையெல்லாம், முன்னணியாகச் செயல்படுகின்ற அந்த தொழிலாளர்களையெல்லாம், 'அங்கே மாற்றுங்கள், தூக்கியடியுங்கள்' என்று சொல்கிறார்கள்.

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், அதுதான் நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள். அடுத்ததற்கு வாருங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: நான் சொல்வதெல்லாம் திண்டுக்கல் மட்டுமல்ல, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

****மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் எங்கள் ஆட்சியில் பழிவாங்கவில்லை என்று சொல்கின்றார். என்னுடைய தொகுதியான ஒட்டன்சத்திரத்தைச் சேர்ந்த திரு. ஆனந்தன் என்பவர் நடத்துனராக இருந்தார். 2019–ல் அவரை குமுளிக்கு மாற்றினீர்கள். இரண்டாண்டுகள் கொரோனா காலத்தில் அங்கேதான் வேலை பார்த்தார். உங்கள் ஆட்சியில் இது நடந்திருக்கிறது.

அதேமாதிரி, நீலகிரியில் வேலை பார்த்த திரு. செந்தில் என்பவர் நாகர்கோவிலுக்கு மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார். இன்னும் அங்கேதான் வேலை பார்த்துக்கொண்டு இருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிர்வாகக் காரணத்திற்காக மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அதுமட்டுமல்ல, உங்கள் தொழிற்சங்கத் தலைவர்கள் என்னிடம் பேசியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகின்ற அரசு என்று நீங்கள் சொல்கிறீர்கள். தீபாவளி அன்று தொழிலாளர்களைச் சிறையில் அடைத்த அரசு, உங்கள் அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாறுதலைத் தாண்டி அடுத்ததற்கு வாருங்கள். மாறுதலை மாற்றிவிடுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: நான் சொல்ல வந்தது, அப்படியென்றால் வெளிப்படையாக, நீங்கள் ஏற்கெனவே செய்தீர்கள், அதற்குப் பழிவாங்குவதற்காக நாங்கள் இப்போது செய்கிறோம் என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறீர்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்களுக்கு, ஒரே நிமிடத்தில் நான் சொல்லிவிடுகின்றேன். இதில் எனக்கு சம்பந்தம் இல்லை. இருந்தாலும், அதில் நான் இருந்தேன் என்று நீங்கள் சொன்னதால் நான் எழுந்து நின்றுவிட்டேன். இல்லையென்றால் நான் எழுந்து நின்றிருக்கமாட்டேன்.

போக்குவரத்துக் கழகங்களில் தொன்றுதொட்டு 20 ஆண்டுக் காலமாக இது நடந்துவருகிற பழக்கமாக இருக்கிறது. உங்களுக்குத் தெரியும். நீங்கள் பொறுப்பில் இருக்கும்போது எங்களுடைய ஆட்களை நீண்ட தூரப் பயணங்களுக்கு பேருந்துகளில் அனுமதிக்காமல், நகரப் பேருந்துகளில் அனுமதிப்பதும், உங்களுடைய தொழிற்சங்கத் தலைவர்கள், நான் கையெழுத்து போட்டால்தான் உங்களுக்கு அந்தப் பதவி கிடைக்கும், அந்த இடத்திற்குப் போக முடியும் என்றும் சொல்வது இயற்கை. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய ATP தொழிற்சங்கத்தின் தலைவர் திரு. ஏழுமலை அவர்கள் இருந்தார்கள். இரண்டு ஒப்பந்தங்களைப் போட்டோம். அவர் என் காதில் என்ன சொன்னார் என்பது எனக்குத்தான் தெரியும். இது தொழிற்சங்கங்களுக்குள் நடக்கின்ற பிரச்சினை. 'நீ பெரியவனா, நான் பெரியவனா' என்று நடக்கின்ற பிரச்சினை. இதில் அமைச்சர் அவர்களைச் சம்பந்தப்படுத்தி, நீங்கள் மாற்றினீர்கள், நான் மாற்றினேன் என்று சொன்னால், நீங்கள் சொல்கின்ற தொழிற்சங்கத் தலைவரை, அவருக்குத் தெரிந்திருக்கக்கூட வாய்ப்பில்லை. இது தொடர்ந்து தொழிற்சங்கத்திற்குள் நடக்கின்ற போட்டி. நாளைக்கு உங்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தால் எங்களை அப்படித்தான் செய்வீர்கள் என்பதை நான் சொல்லிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் அடுத்ததற்கு வாருங்கள். Time ஆகிவிட்டது. 15 நிமிடங்களுக்குப் பதில் 20 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. தயவுசெய்து, நீங்கள் அடுத்த விஷயத்தைப் பேசுங்கள். அடுத்த விஷயத்திற்கு வாருங்கள். நன்றி சொல்லி பேசி முடியுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் என்னுடைய subject–க்கே வரவில்லை. நான் சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களே பதில் சொல்லிவிட்டார்.

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை விடுங்கள். நீங்கள் அமைச்சராக இருந்தவர். உங்களுக்கு எல்லாம் தெரியும். அடுத்ததற்கு வாருங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: Duty*–ல் இருக்கின்றவர்களையெல்லாம்* ATP*–ஐச் சேர்ந்தவர்களை வெளியேற்றிவிடுகிறார்கள். அதெல்லாம் சகஜமாக நடந்துகொண்டுதான் இருக்கிறது. ஆட்சி மாற்றம் வரும்போது அது நடப்பது சகஜம் என்று சொல்கிறார். அதைத்தாண்டி நான் ஒன்றும் சொல்லவில்லை.*

பிற்பகல் 5–30

அதற்கடுத்ததாக, நான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் தொழிலாளர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, தொழிலாளர்கள் உழைத்துதான் அங்கே ஊதியம் வாங்குகிறார்கள். அங்கே அரசே நேரடியாகத் தலையிட்டு செய்கிறதென்று சொல்லவில்லை. உங்களுடைய LPF *நிர்வாகிகள் இந்தத் தவறைச் செய்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. 15 நிமிடங்கள் தந்தேன். உரையைச் சீக்கிரமாக முடிப்பதென்றால், முடியுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளானால்,* *போக்குவரத்துத் துறையினுடைய* performance, *அவர்களுடைய திறமை பாதிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் தொழிலாளர்கள் உங்களிடம் வந்தவர்களெல்லாம் பாசமாக இருப்பார்கள். அடுத்து, வேறு பொருள் குறித்து பேசுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *இங்கே நகரப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப் பயணம் வழங்கப்படுமென்று நீங்கள் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி கொடுத்திருந்தீர்கள். அந்தவகையிலே, அனைத்து நகரப் பேருந்துகளிலும் பெண்களுக்கு இலவசப் பயணம் என்று நீங்கள் வாக்குறுதி அளித்திருந்தீர்கள். ஆனால், செயல்படுத்தி இருப்பதோ ஒரு வழித்தடத்தில் வெள்ளைப் பலகை உள்ள ஒரிரு பேருந்துகளில் மட்டும் பெண்களுக்கு இலவசப் பயணம் அனுமதிக்கப்படுகிறது. நகரப் பேருந்துகளில் சொகுசுப்*

பேருந்து இருக்கிறது, விரைவுப் பேருந்து இருக்கிறது அல்லது point–to–point bus service குறிப்பிட்ட பல்வேறு தடங்களில் இருக்கிறது. அதில் எல்லாம்கூட நீங்கள் அனுமதிக்க வேண்டாம். குறைந்த கட்டணமாக 6 ரூபாய் இருக்கின்ற அந்த வெள்ளைப் பலகைப் பேருந்துகளில் மட்டும்தான் பெண்களுக்கு இலவசப் பயணம் அனுமதிக்கப்படுகிறது. அந்தப் பேருந்துகளில் பெண்கள் பயணிக்க வேண்டுமென்று சொன்னால் பேருந்துகள் வராமல் மணிக்கணக்கில் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. ஆகவேதான், நான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த 6 ரூபாய் பேருந்துக் கட்டணம் இருக்கின்ற அந்தப் பேருந்தோடு 8 ரூபாய் கட்டணம் உள்ள விரைவுப் பேருந்து, அதாவது குறிப்பிட்ட நிறுத்தங்களில் மட்டும் நின்று செல்லக்கூடிய அந்தப் பேருந்துகளிலும் இலவசமாகப் பயணிக்க அனுமதிக்கலாம். பெண்களுக்கு இலவசமாக நீங்கள் சொகுசுப் பேருந்துகளிலே இடம் கொடுக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே மகளிர் பயணத்தைப் பற்றிப் பேசினார்கள். ஏற்கெனவே நடந்த தொழிலாளர்கள் பிரச்சினையைப் பற்றி நான் பேசுவதற்கு வரவில்லை. என்னிடம் நிறைய குறிப்புகள் இருக்கின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் யார், யாருக்குப் பணி வழங்கப்படவில்லை, 10 ஆண்டுகளாக திருவண்ணாமலையிலே யாருக்குப் பணி வழங்கப்படவில்லை, செங்கத்திலே யாருக்குப் பணி வழங்கப்படவில்லையென்று பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஒரே ஒரு கேள்வி. 7,317 பேருந்துகளில் மகளிர் பயணம் செய்கிறார்கள். பெண்கள் கிட்டத்தட்ட 18 கோடியே 39 இலட்சம் பேர் இதுவரையில் பயணம் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள் பயணம் செய்வது குறித்து முதலில் 40 சதவிகிதம் இருக்குமென்றுதான் நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், 60.45 சதவிகிதத்திற்கு மேலே இன்றைக்கு பெண்கள் அந்தப் பேருந்துகளில் பயணம் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: நீங்கள்தான் சொல்கிறீர்களேதவிர, அரசு இதற்கு ஏற்கெனவே 1,200 கோடி ரூபாய் ஒதுக்கி, அதற்குப்பிறகு 1,348 கோடி ரூபாய் ஒதுக்கி, இப்போது நிரந்தரமாகப் பெண்கள் மிக சந்தோஷமாக, மகிழ்ச்சியாக பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள் ஸ்டாலின் ஐயா பஸ் வரும். அதிலே போவோம் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எத்தனையோ பெண்களை நான் நேரடியாகப்போய் நம்முடைய கோயம்பேடு பஸ் நிலையத்தில் விசாரித்தபோது சொன்னார்கள். எங்களுக்கு ticket இல்லாததால் மாதம் 3,000 ரூபாய் மிச்சம் என்று சொன்னார்கள். ஆகவே, ரூ.12,000/– சம்பளம் வாங்குகிற பெண்கள் முன்பு வீட்டிற்கு ரூ.9,000/– ஐக் கொடுப்போம். இன்றைக்கு ரூ.12,000/– கொடுக்கிறோம் என்று சொல்கிற பெண்களெல்லாம் இருக்கிறார்கள். ஆகவே, பெண்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இல்லை. அதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், பெண்கள் இலவச பயணமாக பேருந்தில் daily எவ்வளவு பேர் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: தினமும் 34 இலட்சத்து 28,000 பேர் போகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து நல்ல பதில் கிடைத்திருக்கிறது. நீங்கள் இனிமேல் அடுத்த சப்ஜெக்ட்டிற்கு வாருங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: எங்களைப் பேச விடுங்கள். தயவு செய்து நீங்களே பேசாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அடுத்த சப்ஜெக்ட்டிற்கு வாருங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: நீங்களே பேசாதீர்கள். எங்களைப் பேசவிடுங்கள். தயவுசெய்து எங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அடுத்த பொருள் குறித்துப் பேசுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எவ்வளவு பேர் பயணித்தார்கள் என்ற புள்ளிவிவரத்தைக் கேட்கவில்லை. பயணம் செய்பவர்களுடைய விவரங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. அதிலே கூடுதல் வசதிகள் செய்து கொடுங்கள் என்று கேட்பது ஒரு குறையா? ஏற்கெனவே சாதாரணக் கட்டணத்திலே இருக்கும், 6 ரூபாய் கட்டணம் உள்ள பேருந்தில் மட்டும் பயணம் செய்ய அனுமதிக்கிறீர்கள். 8 ரூபாய் கட்டணம் இருக்கின்ற அடுத்த இரக பேருந்து இருக்கிறது. அதிலும் பெண்களை இலவசமாகப் பயணம் செய்ய அனுமதித்தால் அவர்கள் பேருந்திற்காகக் காத்திருக்கும் நேரம் குறையும். இன்னும் கூடுதல் பயணிகள் பயணம் செய்வார்கள். குறைகளைச் சுட்டிக்காட்டுவதால், நீங்கள் அதைக் குற்றமாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். நீங்கள் அதைப் பதிவு செய்தாகிவிட்டது. நீங்கள் அடுத்த பொருள் குறித்துக் கேளுங்கள். இன்னும் ஒரு கோரிக்கை, 8 ரூபாய் கட்டணத்திற்கும் கேட்கிறீர்கள். இனி அடுத்த பொருள் குறித்து சொல்லுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் சொல்லிக்கொள்கிறேன்.

> "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்பதைத் தயவுசெய்து ஆட்சியாளர்கள் எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். இதுபோன்று குறைகளைச் சுட்டிக்காட்டுவது என்பது உங்களுடைய குறைகள் நிவர்த்திபெறும் என்பதற்காகத்தான். அதற்கு நீங்கள் சகிப்புத்தன்மையோடு அணுக வேண்டும். அதை ஒரு கோரிக்கையாக வைக்கிறோம். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதும், நிராகரிப்பதும் உங்கள் இஷ்டம். அதற்காக அந்த வாய்ப்பை மறுப்பது என்பதெல்லாம் சரியான நடைமுறை அல்ல என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–35

அதேபோல, போக்குவரத்துத் துறையிலே டீசல், பெட்ரோல் விலையைக் குறைப்பதாக தேர்தல் வாக்குறுதியிலே சொன்னீர்கள். பெட்ரோலுக்கு 5 ரூபாயும், டீசலுக்கு 4 ரூபாயும் குறைக்கப்படுமென்று சொன்னீர்கள். இப்போது இந்த கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு மோட்டார் தொழில் கிட்டத்தட்ட நசுங்கிக் கொண்டிருக்கிறது. நலிவுற்ற தொழிலாக மாறிக் கொண்டிருக்கிறது. அதிலே குறிப்பாக, லாரி தொழிலாளிகள், maxi cabs, van தொழிலாளர்கள் அத்தனை பேரும் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக, பெட்ரோலுக்கு நீங்கள் 5 ரூபாய் குறைப்பதாகச் சொல்லி, 3 ரூபாயைக் கொடுத்திருக்கிறீர்கள். 3 ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். டீசலுக்கு 4 ரூபாய் என்று நீங்கள் சொன்னபடி விலை குறைத்திருந்தால், பெரும்பகுதி போக்குவரத்துக் கழகங்களே பெரும் பயனாளிகளாக மாறியிருக்கும். போக்குவரத்துக் கழகங்களிலே ஏறத்தாழ 300 கோடி ரூபாயிலிருந்து 400 கோடி ரூபாய் வரை (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டுக்கு அதிலே சேமிப்புக் கிடைத்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: நான் முழுவதுமாகச் சொல்லிவிடுகிறேனே!

***மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பலர், அண்ணன் திரு. முத்துசாமி உட்பட பலர் ஏற்கெனவே போக்குவரத்துத் துறை அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள் என்ற தகவலை, நண்பர், மூத்த உறுப்பினர், முன்னாள் அமைச்சர் இங்கே கூறியிருக்கிறார். பல்வேறு சூழ்நிலைகளில் நானே ஏற்றுக்கொண்ட தகவல்; நான் 20 ஆண்டுகளாக ஊரிலே இல்லை; வெளிநாட்டிலே இருந்தேன். அதனால், தங்கள் வாயிலாக ஒரு விளக்கம் கேட்கிறேன். அண்ணன் அமைச்சராக இருந்தபோது எந்தெந்தப் பேருந்துகளில் இலவசமாக பெண்கள் பயணம் செய்ய அனுமதியளித்தார்? (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் சார்ந்திருக்கின்ற கட்சி ஆட்சி நடத்தும்போது எத்தனை முறை டீசல் வரியையோ அல்லது விலையையோ குறைத்தார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏற்றுக்கொள்கிறேன், நான் இரண்டாவது முறை எம்.எல்.ஏ.தான்.

அதாவது, முன்னுதாரணத்தைக் கண்டுபிடித்து, அறிந்து, அதைக் கற்றுக்கொண்டு, இன்னும் செயலைச் சிறப்பிப்பதற்கு முயற்சி செய்கிறோம். ஒரு சில உதாரணங்களைச் சொல்லச் சொல்லுங்கள் என்பதுதான் ஒரேயொரு கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அந்த வாக்குறுதியைக் கொடுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) 'நாங்கள் தருகிறோம்' என்று சொல்லி இருக்கவில்லை. "நாங்கள் டீசல் விலையைக் குறைக்கிறோம், நாங்கள் பெட்ரோல் விலையைக் குறைக்கிறோம், நாங்கள் வானத்தை வில்லாய் வளைக்கிறோம்" என்று சொல்லவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 58 வயது ஆனவர்களுக்கெல்லாம் இலவசப் பேருந்து பயணச் சலுகை என்று நீங்கள்தான் தேர்தல் அறிக்கையில் சொன்னீர்கள். தமிழ்நாடு முழுவதிலும் எல்லோருக்கும் கொடுத்துவிட்டீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லவில்லை என்று சொல்கிறீர்களே? 58 வயது ஆனவர்கள் எல்லோருக்கும் தமிழ்நாடு முழுவதும் அனைத்துப் பேருந்துகளிலும்* free *என்று சொன்னீர்கள். இதுவரைக்கும் எந்த* pass*–ம் எங்கேயும் கொடுக்கவில்லையே? அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். உங்களால் செய்ய முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் சொன்னோம், படிப்படியாகச் செய்துகொண்டிருக்கிறோம். அதை முதலில் புரிந்துகொள்ளுங்கள். குறை சொல்லாதீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உரையாற்ற ஆரம்பித்து 30 நிமிடங்கள் ஆகின்றன. நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஏராளமான* subjects *இருக்கின்றன. ஒன்றும் பேசவில்லையே?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் 30 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் 30 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். நான் அதற்குத்தான் சொன்னேன், ஒரே விஷயத்தை ஐந்து நிமிடங்கள் விளக்காதீர்கள். அப்படியே ஒவ்வொரு விஷயத்தையும் சொல்லிவிட்டு வந்தால், நீங்கள் கொண்டு வந்த விஷயங்கள் அத்தனையும் பதிவாகியிருக்கும். (குறுக்கீடு) நான் உங்களுக்கு ஆலோசனைத்தான் சொல்கிறேன். நீங்கள் ஒரு விஷயத்தை விளக்கமாகச் சொல்வதற்கு, ஐந்து நிமிடங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள். ஒரு விஷயத்தை ஒரு தடவை சொல்லிவிட்டு, அடுத்த விஷயத்திற்கு வாருங்கள். அடுத்த பொருள் குறித்து பேசுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *உங்கள் அறிவுரைக்கும், ஆலோசனைக்கும் நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அறிவுரை சொல்லவில்லை. நான் உங்களுக்கு ஒரு யோசனை சொன்னேன்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் பேச விடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் 30 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *நீங்களே இடையூறாக இருக்க வேண்டாம். தயவுசெய்து வேண்டாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இடையூறு கிடையாது. (குறுக்கீடு)*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *இன்னும் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. அவ்வளவு நேரம் தர முடியாது. அனைவருக்கும் 15 நிமிடங்கள்தான்; நீங்கள் 30 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) சீக்கிரமாக உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடுப்பில் கட்டியிருந்த துண்டை தோளில் போட்டுக்கொள், நீயும் மனிதன், சுய மரியாதைக்காரன் என்று இந்தத் தமிழ் உலகிற்கு சுய மரியாதையைக் கற்றுத் தந்த சுய மரியாதைச் சுடரொளி, ஈரோட்டுப் பூகம்பம், வெண்தாடி வேந்தர் தந்தை பெரியாரை வணங்குகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, நான் 30 நிமிடங்கள் நேரம் கொடுத்திருக்கிறேன். Time தரவில்லை என்று அவர் சொல்வது நியாயமா என்று நீங்கள்தான் சொல்ல வேண்டும். நான் சீக்கிரம் உரையை முடியுங்கள் என்றுதான் சொன்னேன். உரையை முடியுங்கள் என்று சொல்லவே கூடாது என்று சொன்னால், நான் இந்த seat–ல் உட்கார வேண்டிய அவசியமே இல்லை. (குறுக்கீடுகள்) அனைத்து உறுப்பினர்களும் பேச வேண்டும்; இன்னும் 8 உறுப்பினர்கள் பேச வேண்டும். ஓர் உறுப்பினர் அவர்கள் 15 நிமிடங்களுக்கு, 30 நிமிடங்கள் வரை பேசிவிட்டார்கள். இன்னும் சீக்கிரமாக முடியுங்கள் என்று சொன்னால், கோபம் எதற்கு வருகிறது? அவர் அமைச்சராக இருந்தவர். (குறுக்கீடு) பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) சீக்கிரமாக உரையாற்றி முடியுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: நீங்கள் சொன்ன கோரிக்கைகளை நான் ஒன்றும் சொல்லவில்லை. நீங்கள் சொன்னீர்களே, அந்தக் கோரிக்கைகள் எல்லாம் என்னவாயிற்று என்று கேட்டால், அதற்கு ஏன் எல்லோரும் இவ்வளவு வருத்தப்படுகிறீர்கள் என்று தெரியவில்லை. சரி, சொல்லிவிடுகிறேன்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியஆம்,
சொல்லிய வண்ணம் செயல்."

பிற்பகல் 5–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்த வகையிலும் வருத்தப்படவில்லை. ஏற்கெனவே படிப்படியாகச் செயல்படுத்துவோம் என்று பலமுறை சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், diesel subsidy–ஐ போக்குவரத்துக் கழகங்களுக்கு அதிகரித்து கொடுத்திருக்கிறோம். மீனவர்களுக்கு டீசல் கொடுப்பதற்காக மீன் வளத் துறைக்கு நிதியை அதிகரித்து

கொடுத்திருக்கிறோம். எதை எங்களால் control செய்ய முடியும், எதை control செய்ய முடியவில்லை என்பதை ஆய்வு செய்கிறோம். Petrol bunk–ல் யார் எவ்வளவு petrol போடுகிறார்கள், diesel போடுகிறார்கள் என்பது எங்கள் control–ல் இல்லை. போக்குவரத்துக் கழகம் எங்கள் control–ல் இருக்கின்றது. மீனவர்களுக்கு diesel மானியம் கொடுப்பது எங்கள் control–ல் இருக்கின்றது. எதெல்லாம் control–ல் இருக்கின்றதோ அதற்கு subsidy increase செய்கின்ற வகையில் discount கொடுக்கிற அளவுக்குச் செய்யலாம் என்று எல்லாம் சிந்தித்து செய்திருக்கிறோம். இதற்குமேல், இருக்கின்ற சூழ்நிலையில், இப்பொழுது செய்ய முடியவில்லை, அப்புறம் செய்கிறோம் என்று சொல்கிறோம். ஒரேயொரு கேள்வி என்னவென்றால், இதைவிடச் சிறப்பாக செய்த உதாரணம் இருந்தால் அதிலிருந்து நான் கற்றுக்கொள்கிறேன் என்றுதான் கேட்டேனே தவிர, நான் யாரை விமர்சனம் செய்தேன்? எதுவுமே செய்யவில்லையே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய பண்பாளரின் மகன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் விஷயத்திற்கு வாருங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் பெருந்தன்மையோடு நடந்துகொள்ளச் சொல்லுங்கள். தயவுசெய்து குறுக்கிட்டதற்கு எங்களுக்கு கொஞ்சம் நேரத்தை ஒதுக்கிக் கொடுங்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சாதுரியமாக இதைச் சமாளித்திருக்கிறார் என்று நான் ஒரு வகையிலே சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லிவிட்டீர்கள். இனி அடுத்த விஷயம் குறித்துச் சொல்லுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: கேளுங்கள், என்ன சொல்கிறேன் என்றால், இரு சக்கர வாகனங்கள் 2 கோடிக்கு மேலாக இருக்கின்றன. Petrol விலை சாதாரணமாக ஒரு லிட்டருக்கு 3 ரூபாய் குறைத்திருக்கிறீர்கள். இரு சக்கர வாகனம் பயன்படுத்துபவர்கள்

ஒரு நாளைக்கு ஒரு லிட்டர் அல்லது 2 லிட்டர் petrol–தான் பயன்படுத்துவார்கள். ஒரு நாளைக்கு 3 ரூபாய் அல்லது 6 ரூபாய் அதில் அவர்கள் பயன்பெறுகிறார்கள். ஆனால் diesel–க்கு என்னவென்று சொன்னால், ஒரு maxi cab வாகனம் அல்லது Van இவற்றுக்கெல்லாம் தினசரி குறைந்தபட்சம் 25 லிட்டர் diesel போடுவார்கள். அதேபோன்று பேருந்துகள், கனரக வாகனங்கள், லாரிகளுக்கெல்லாம் 100 லிட்டர் diesel–க்கு மேல் போடுவார்கள். பல்லாயிரக்கணக்கான ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என்பதற்காக சொன்னதைச் செய்ததாகக் காட்டிக்கொள்வதற்காக petrol–க்கு 3 ரூபாயும், பெருமளவு பயன்படுத்தக்கூடிய diesel–க்கு 4 ரூபாயும் கொடுத்து சாதுரியமாகத் தவிர்த்துவிட்டார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொன்னதைச் செய்தாலும் விமர்சிக்கிறார். சொன்னதைச் செய்ததாக காட்டிக்கொள்வதற்காகச் செய்ததாகவும் சொல்கிறார். செய்யவில்லை என்றாலும், ஏன் செய்யவில்லை என்று விமர்சிக்கிறார். இரண்டில் ஒரு விமர்சனத்தைச் சொல்லச் சொல்லுங்கள். சொன்னதைச் செய்ததாகக் காட்டிக்கொள்வதற்காகச் செய்ததாக விமர்சிக்கிறார். உண்மையான இழப்பு வந்திருக்கின்றது. என்ன ஆனது? Actual ஆக sales, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல ஒரு லிட்டர், 2 லிட்டர் எல்லாம் இல்லை. அன்றைக்கே நான்கு நாட்களில் சொன்னோம், கிட்டத்தட்ட 11 இலட்சம் லிட்டர் petrol பயன்பாடு அதிகரித்தது என்று. இன்றைக்கு நான் சொல்கிறேன். Actual ஆக petrol sales கூடுதலாக 22 இலட்சம் லிட்டர் அதிகரித்திருக்கிறது. Lockdown effect, தளர்வு நீக்கியதால், எவ்வளவு வரிக் குறைப்பு என்று சொல்லத் தெரியாததனால், ஆய்வு செய்ய முடியாததால், நான் அதை ஒரு விளம்பரமாகச் சொல்லவில்லையே தவிர, உண்மையில் அந்தப் பலன் நல்ல multiplier effect எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதை நாங்கள் தெளிவாகச் சொன்னோம். Diesel–ல் எங்களுக்கு சரியாகச் சொல்ல முடியது. நான் car வைத்திருக்கிறேன். அந்த car எல்லாம் அமைச்சர்களுக்குக் கொடுக்கக்கூடிய car. Diesel–ல் ஓடுகின்ற car. அந்த காரில் ஒவ்வொரு முறையும் 50 லிட்டர், 60 லிட்டர் அளவுக்கு diesel

fill பண்ணலாம். எங்களது எண்ணமே, அந்தமாதிரி இனங்களுக்கு அவசரமாக போய் பயன்பாடு குறைவு கொடுக்கக் கூடாது. மாறாக, 2.6 கோடி சாமானிய மக்கள் ஓட்டுகின்ற இரு சக்கர வாகனங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காக கொடுத்தோமே தவிர, வேறொன்றுமில்லை. Of course கணக்கு போட்டுத்தான் செய்ய முடியும். எவ்வளவு கடன் இருக்கின்றது, எவ்வளவு வட்டி இருக்கின்றது என்பதை வெள்ளை அறிக்கையில் காட்டியிருக்கிறோம். இருக்கின்ற சூழ்நிலைகளையெல்லாம் தாண்டி செய்ய வேண்டுமென்றால் படிப்படியாகத்தான் செய்ய முடியும். செய்தாலும் தவறு, செய்யவில்லை என்றாலும் தவறு என்றால், அது எப்படி நியாயமாகும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே diesel, petrol விலை குறைப்பு குறித்து பலமுறை இந்த அவையில் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களது பதிலையும் கேட்டுக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. மு. பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, அரசு போக்குவரத்து தொழிலாளர்கள் பணிமாற்றம் செய்யப்படுவது குறித்து சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த subject–க்கு வந்துவிட்டோமே? அதை முடியுங்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் ஆட்சியில் ஒரே கையெழுத்தில் 1,14,000 அரசு ஊழியர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டு ESMA, TESMA சட்டம் பாய்ந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இருக்கட்டும், இது transport குறித்தது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் பேசி உரையை முடியுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, mini bus.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 36 நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையை முடித்துவிடுங்கள்.*

பிற்பகல் 5–45

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கழக ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சிற்றுந்துகள், நகரப் பேருந்துகள் மக்களிடத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றன. இப்போதுகூட, நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் அவை மீண்டும் இயக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள், மகிழ்ச்சி. கிராமப்புறங்களில் தனியார் துறைமூலம் இயக்கப்படும் சிற்றுந்துகளை தொடர்ந்து அவர்களால் வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியவில்லை. காரணம், ஏற்கெனவே 4 கி.மீ. பேருந்துகள் இயக்கப்படுகின்ற வழித்தடங்களில் இந்தச் சிற்றுந்துகளை இயக்க முடியாது என்ற விதி இருப்பதால், தனியார்களால் அதைச் செயல்படுத்த முடியவில்லை. ஆகவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாகவே கிராமப்புறப் பகுதிகளிலும் மினி பஸ்களை இயக்கினால், பேருந்து வசதி பெறாத குக்கிராமங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். எனவே, மினி பஸ் வசதியினை விரிவாக்கம் செய்து, அதை அரசுத் துறை மூலமாகவே இயக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினை பற்றி சொல்ல விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நேரத்தைப் பாருங்கள். நீங்கள் மட்டும் 37 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.* (குறுக்கீடு) *ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். அடுத்தபடியாக, முக்கியமான போக்குவரத்து வழித்தடமாக, இரயில்வே இருக்கிறது, விமானப் போக்குவரத்து இருக்கிறது, தரைவழிப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து போன்று தற்போது மெட்ரோ இரயில் போக்குவரத்தையும் நாம்*

இங்கே கொடுத்திருக்கிறோம். அதேபோன்று, மோனோ இரயில் போக்குவரத்தையும் நாம் கொடுக்க வேண்டும். மலேசியா, ஐரோப்பா போன்ற மேலை நாடுகளில் மோனோ இரயில் என்ற போக்குவரத்து system–மும் இன்றைக்கு இருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மெட்ரோ இரயில் திட்டத்தைக் கொண்டு வந்தபோதே மோனோ இரயில் திட்டத்தையும் கொண்டு வருவதற்காக Pallavan Consultancy Corporation மூலமாக ஒரு DPR–Detailed Project Report தயார் செய்யப்பட்டது. ஆனால், அன்றைக்கிருந்த சூழ்நிலையில் மோனோ இரயிலைக் காட்டிலும் மெட்ரோ இரயிலில் கூடுதல் பயணிகள் பயணிக்கலாம் என்ற உண்மை கண்டறியப்பட்டு, மெட்ரோ இரயில் திட்டத்தை அமல்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. ஆனால், மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்தியதற்குப் பிறகு, அது நடைமுறைக்கு வந்ததற்குப் பிறகு, கூடுதல் வசதியாக மோனோ இரயில் திட்டத்தையும் செயல்படுத்தலாம் என்று ஒரு முடிவு எடுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு விசுவநாதன், இன்னும் அந்தக் காலத்திலா இருக்கிறீர்கள்? உங்கள் அம்மையார்தான், அந்தத் திட்டத்தைச் சொன்னார்கள்; கடைசியில் அவர்களே கைவிட்டார்கள். Please come to the point. அதெல்லாம் மாறிப்போச்சு. 5 வருடங்கள், 10 வருடங்களில் அதெல்லாம் மாறிப் போய்விட்டது. ஆகையினால் மோனோ இரயில் எல்லாம் செத்துப்போச்சு. அதைப் பற்றி பேசிக் கொண்டிருக்காதீர்கள். வேறு subject பேசுங்கள். அவர் வேறு time கொடுக்க மாட்டேன் என்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நான் ஒன்றைச் சொல்கிறேன். நீங்கள் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். மூன்று தடவை, அய்யா ஓ.பி.எஸ். இருந்தபோதும் அதற்கு அடிக்கல் நாட்டினார்கள். 10 வருடங்களாக அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை. என்ன காரணமோ எனக்குத் தெரியாது. தயவுசெய்து நீங்கள் அடுத்த விஷயத்தைச் சொல்லி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோனோ இரயில் திட்டத்தை பெருநகரத்திற்கு அடுத்தபடியாக இருக்கக்கூடிய திருச்சி, மதுரை, கோவை போன்ற சிறுநகரங்களில் செயல்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் முதல்வர் அவர்கள்தான் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மூன்று தடவை அடிக்கல் நாட்டப்பட்டது. அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. அப்படியெனில், ஏதோவொரு விஷயம் இருக்கிறது, அதைக் கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் அடுத்த விஷயத்திற்கு வாருங்கள்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: நான் குற்றமாகச் சொல்லவில்லை; கோரிக்கையாக வைக்கிறேன். முடிந்தால் செய்யுங்கள்; முடியவில்லை என்றால், முடியவில்லை என்று விட்டுவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மோனோ இரயில் திட்டம் நீங்கள் கொண்டு வந்ததுதான், அதில் குற்றம் கிடையாது.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: பெருநகரங்களுக்கு அடுத்தபடியாக இருக்கக்கூடிய திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் போன்ற சிறுநகரங்களில் மோனோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி, நன்றி. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், பேசுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 40 நிமிடங்கள் தந்திருக்கிறேன். (குறுக்கீடு) சரி, இன்னும் ஒரு நிமிடம் பேசுங்கள். 41 நிமிடங்களில் உரை முடியுமாறு பேசுங்கள். 41 நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

பிற்பகல் 5–50

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: விமான நிலையங்கள் மற்றும் இரயில் நிலையங்களுக்காக நிலம் கையகப்படுத்துகின்ற முகமைத் துறையாக போக்குவரத்துத் துறை விளங்குகிறது. அந்த வகையில் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தைப் பார்த்தேன். அதில்,

2021 செப்டம்பர் 8] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

மதுரை விமான நிலைய விரிவாக்கத்திற்கு 86.15 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்திக் கொடுக்கின்ற பணி நில நிர்வாக ஆணையாளரின் பரிசீலனையில் இருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இடம் ** என்று சொல்லப்பட்டிருக்கிறது. 86.15 ஏக்கர் ** இருந்தால், அதை உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி எந்த அரசுத் துறைக்கும் வழங்கவே முடியாது. ஆகவே, நில நிர்வாக ஆணையாளருடைய பரிசீலனையில் இருக்கின்ற அந்தப் பிரச்சினைக்கு நீங்கள் நில நிர்வாகத் துறையின் மூலமாகவே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். இதை முடியாது என்று நீங்கள் சொல்ல முடியாது. மதுரை, உயர் நீதிமன்றம் இருப்பதே ** இருக்கிறது. இதை விட்டுவிடுங்கள். நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அடுத்ததாக மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள். (குறுக்கீடு) இல்லை. அதை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன், நீங்கள் கஷ்டப்பட வேண்டாம். அதையெல்லாம் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் ஒப்பற்ற தலைவராய், திராவிட சமுதாயத்தின் தூண்டுகோலாய் விளங்கி நம்மை மனிதர் என்று வாழவைத்த ஈரோட்டுச் சிங்கம், இடுப்பில் கட்டியிருந்த துண்டை தோளில் போட்டுக்கொள், நீ மனிதன், சுயமரியாதைக்காரன் என்று மனித உலகுக்கு அடையாளமாக வாழ்ந்துகாட்டிய சுயமரியாதைச் சுடரொளி, வெண்தாடி வேந்தர், தந்தை பெரியாரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தாய் பிள்ளைக்குப் பெயர் வைப்பாள், ஆனால், பிள்ளை தாய்க்குப் பெயர் வைத்ததைப்போல, தாய்த் தமிழ்நாடு, தமிழ்நாட்டுக்குப் பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணாவைப் பணிந்து வணங்குகிறேன். இருவரில் ஒருருவாக விளங்கிய முத்தமிழறிஞர் மூதறிஞர், பார்போற்றும் உத்தமத் தலைவர், பன்முக ஆற்றல் உடையவர், அவருக்கு நிகராக இன்னொரு

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பன்முக ஆற்றலாளரை அகில உலகில் காண இயலாது. 14 வயதில் 'மாணவ நேசன்' பத்திரிகை ஆசிரியராய், நாடக நடிகராய், எழுத்தாளராய், பேச்சாளராய், கதையாசிரியராய், சட்டமன்ற உறுப்பினராய், எதிர்க்கட்சித் தலைவராய், பொதுப் பணித் துறை அமைச்சராய், முதலமைச்சராய், இந்தியாவின் வழிகாட்டியாய், எண்ணற்ற பன்முக ஆற்றலுடைய அன்புத் தலைவர் கலைஞர் ஒரு தலைசிறந்த கவிஞர். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கலைஞருக்கு இருக்கிற ஆற்றலைச் சொல்ல வேண்டுமென்றால், மாற்றுக் கட்சிக்காரர்கள்கூட கலைஞருடைய கவிதைக்குத் தலையாட்டி ரசிப்பார்கள். நான் சட்டக் கல்லூரி மாணவனாக இருந்தபோது, கல்லூரிக்கும் நீதிமன்றத்திற்கும் சென்ற காலங்கள் பல என்றாலும், கலைஞருடைய கவியரங்க நிகழ்ச்சியென்று சொன்னால், கண்ணாரக் காணுகிற பாக்கியத்தை அடைவேன். 'இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்' என்ற நூலை எழுதியவர் கவிப் பேரரசு வைரமுத்து. நான் முதன்முதலில் சென்னையில் கவியரங்கம் ஏறியபோது கலைஞர் கவியரங்கத் தலைவராக இருந்தார். அந்தக் கவியரங்கில் கவியரங்கத் தலைவர் கலைஞர், கவிபாடுவதில் சிறியவரான வைரமுத்துவை கவிபாட அழைத்தாராம். அடுத்து கவிதை படிப்பான் என் தம்பி வைரமுத்து, 'வைரமுத்துவே வா, கவிதை மழை தா' என்கிறார். வைரமுத்து வருகிறார், கலைஞரை உற்றுப் பார்க்கிறார், 'காவியத் தலைவரே, கலைஞரே, இரவு 12 மணிக்கு மேல் நீங்கள் பேசக் கூடாது, காரணம், கனவுகளை அதிகமாக மனதில் தேக்கிய கட்டிளம் காளை ஒருவன் முதலிரவுக்கு தன் மனைவியை நாடுகிறபோது உன் பேச்சின் ஒலி அவன் காதில் பட்டுவிட்டால், பேச்சில் சொக்கிப்போகிறான் அவன், மற்ற பணிகளைச் செய்யவில்லை, பாவம், பெண் பாவம் பொல்லாதது'. (மேசையைத் தட்டும் ஒலி) இரட்டை அர்த்தத்தில் அர்த்தம் சொன்னாலும் அந்தக் கவிதைக்கு இருக்கிற ஈர்ப்பு.

அப்துல் ரஹ்மானைப்பற்றி அருமைத் தோழர் சொன்னார். கவியூரில் சென்று வெற்றி பெற்ற மறுநேரம் என்ன வெகுமானம் வேண்டுமென்று கேட்டால், அழைத்து வாருங்கள் அப்துல் ரஹ்மானை என்பேன் நான். அந்த அப்துல் ரஹ்மான் ஒரு புத்தகத்துக்குத் தலையங்கச் செய்தி எழுதுகிறார், 'நேற்றிரவு நான் ஒரு கனவு கண்டேன், தமிழ்த்தாய் என் கனவில் வந்தாள்; உன் முகவரி என்னவென்று கேட்டேன், அலுவலக முகவரியா, இல்லத்து முகவரியா என்றாள்; உனக்கு அலுவலகமும் உண்டு, இல்லமும் உண்டா என்றேன். உண்டு என்றாள், கேள் என்றாள்.

அலுவலக முகவரி கோபாலபுரம், இல்லத்து முகவரி அண்ணா அறிவாலயம்' என்று (மேசையைத் தட்டும் ஒலி) பட்டென சொன்னாள். தமிழாக வாழ்ந்த தலைவர், அன்புத் தலைவர், டாக்டர் கலைஞரை மனதார இந்த நேரத்தில் வணங்குகிறோம், வாழ்த்துகிறோம். எனவே, பெரியார் என்றால் சுயமரியாதை சமூக நீதி; அண்ணா என்றால் மாநில சுயாட்சி, அன்புத் தலைவர் கலைஞர் என்றால் அவரது அயராத தமிழ்ப்பற்று; இன்றைக்கு 140 கோடி பேர் வாழ்கிற இந்தியத் திருநாட்டில் மதவெறி பிடித்து, ஆட்டிப்படைக்க நினைத்த நேரத்தில், இந்திய நாடு ஒரு ஜனநாயக நாடு, மதச்சார்பற்ற நாடு. மத வெறி கூடாது என்று 'மதசார்பற்ற' என்ற ஒரு சொல்லைச் சொல்லுகிறோம் என்றால், அதற்கு மூலக் காரணம், முழுக் காரணம் தமிழகத்தினுடைய முதலமைச்சர், ஒப்பற்ற தலைவர் தளபதி என்பதைப் பெருமையோடு எடுத்துச் சொல்லி என்னை ஆளாக்கிய அந்தத் தலைவனுக்கு அன்பான வணக்கத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்

பிற்பகல் 5–55

இங்கே வீற்றிருக்கின்ற இளைஞரணியினுடைய செயலாளர், பல பேருடைய வெற்றிக்குக் காரணமாக இருக்கக்கூடிய செயலாளர், அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுடைய அன்புப் பேரர், எங்கள் அன்புத் தளபதியினுடைய அன்புப் பிள்ளை, சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் இருக்கின்ற ஒவ்வொரு வாக்காளரும் எங்கள் M.L.A.–வைப்போல தமிழகத்தில் எவரும் இல்லையென்று மார்தட்டிச் சொல்லக்கூடிய வகையில் அவர் ஒரு role model M.L.A. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த காலம் மன்னர்கள் காலம், நிகழ்காலம் கலைஞர் காலம் என்று நாங்கள் சொல்வோம். எங்கள் அண்ணனே, இளைஞர் அணியின் மன்னனே, உங்களைப் பார்க்கின்றபோது கடந்த காலம் கலைஞர் காலம்; நிகழ் காலம் தளபதி காலம்; எதிர் காலம் எங்கள் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் காலம் என்று சொல்வோம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் 50 ஆண்டு காலத்திற்கு அண்ணா அறிவாலயத்தில் இரு வண்ணக் கொடியையும், எங்கள் தலைவரைத் தொடர்ந்து, இதே St. George கோட்டையில் தேசியக் கொடியையும் ஏற்றவிருக்கிற எங்கள் இளைய தலைவருக்கு பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், நிறைய உறுப்பினர்கள் இந்த வெற்றிக்குக் காரணமானவர் உதயா என்று சொல்கின்றபோது, எங்கள் அண்ணனை மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன், நன்றி கூறுகிறேன்.

இந்த அவையில் வீற்றிருக்கின்ற அவை முன்னவர், 50 ஆண்டுகளைக் கடந்தவர், காலையில் பேசிய அருமைச் சகோதரர் திரு. தாயகம் கவி அவர்கள் சொன்னதைப்போல, சட்டக் கல்லூரி மாணவனாக நான் பயில வந்தபோது என்னுடைய பணியை, என்னுடைய சிறப்பைக் கண்டு, நான் மாணவராகச் சேர்ந்த 6 மாதங்களிலேயே சென்னையில், வட சென்னை மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் என்ற பொறுப்பை 1990 ஆம் ஆண்டு வழங்கி, காலங்கள் ஓடிவிட்டாலும்கூட அன்றைக்கு இடியாய், மின்னலாய், மழையாய் இந்தச் சட்டமன்றத்தில் எதிரொலித்த எங்கள் ஆருயிர் அண்ணன் அவை முன்னவர் அவர்களுக்கும், அவரோடு அமர்ந்திருக்கின்ற மூத்த அமைச்சர்கள் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களுக்கும், இன்றைக்கு சட்டப் பேரவையில் நான் பேசுவதற்குரிய துறைகளைப் பெற்றிருக்கின்ற போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. ராஜகண்ணப்பன் அவர்களுக்கும், தகவல் தொழில்நுட்பத் துறையின் அமைச்சர் பாசத்திற்குரிய அண்ணன் திரு. மனோ தங்கராஜ் அவர்களுக்கும், இந்த சபையினுடைய துணைத் தலைவர், என்றைக்கும் என்னோடு இருந்து என்னை வழிநடத்துகின்ற பேரவையினுடைய துணைத் தலைவர் அண்ணன் மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி அவர்களுக்கும் என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே வீற்றிருக்கிற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களை மீண்டும், மீண்டும், மீண்டும் பல முறை வணங்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், மீண்டும், மீண்டும் என்று சொன்னால் கடந்த 5 ஆண்டுகள் நீங்கள் அமர்ந்திருக்க வேண்டிய இடம் எங்களோடு ஒருவகையில் எதிர்க்கட்சி வரிசையில்தான். ஆனால், சட்டப் போராட்டம் நடத்தி, நீதிப் போராட்டம் நடத்தி, தனி மனித உடல் இடைஞ்சலோடு தூக்கியெறியப்பட்டபோதுகூட இன்றைக்கு உள்ளே இருப்பவர் வெளியே, வெளியே இருப்பவர் உள்ளே என்பதை மாற்றி ஒரு M.L.A. என்று உற்றுப் பார்க்க வேண்டியவரை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு பேரவையின் தலைவராக நம் தமிழக முதல்வர் அவர்கள் ஆக்கியிருக்கிறார்கள். நீங்கள் அப்பொழுதே கதர் சட்டை போட்டுக்கொண்டு, கருப்புச் சட்டையைக் காதலித்த ஒரு காதலி, கலைஞரின் காதலி நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள்

தேசியவாதி, ஆனால் திராவிடத் தலைவர் கலைஞரை ரசித்தீர்கள். அதனுடைய விளைவு, தன்னை நம்பி வந்த தொண்டனைத் தூக்கி, உயர்த்திக் காட்டுகிற இயக்கம்தான் தி.மு.க. என்பதனுடைய அடையாளமாக மாண்புமிகு பேரவைத் தலைவராக இங்கு அவையிலே வீற்றிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, இந்த அவையில் வீற்றிருக்கிற அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்கள், சக சட்டமன்ற உறுப்பினர்கள், என்னுடைய வெற்றிக்கு அரும்பாடுபட்ட என்னுடைய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் திரு. S. கல்யாண சுந்தரம், மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. செ. ராமலிங்கம், உறுதுணையாக இருந்து உழைத்த ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளர்கள் திரு. கோ.க. அண்ணா நம்பி, கூகூர் அம்பிகாபதி, அருமை அண்ணன் மரியாதைக்குரிய திரு. கணேசன் உள்ளிட்டோர்களுக்கும், நினைவில் வாழ்கின்ற மறைந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் அண்ணன் திரு. கோ. ரவிச்சந்திரன் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நினைவுகளைப் பகிர்ந்து, மூன்று முறை 2011, 2016, 2021 இந்த மூன்று முறையும் ஓர் ஓலைக் குடிசையில் பிறந்த ஏழைத் தொண்டன் கோவி. செழியன், திருவிடைமருதூர் சட்டமன்ற உறுப்பினர் என்ற அங்கீகாரத்தை எனக்கு வழங்கிய எங்கள் அன்புத் தலைவருக்கு மீண்டும், மீண்டும் வணக்கத்தைச் சொல்லி, வாக்களித்த வாக்காளர்களுக்கு மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு முன்னாள் அமைச்சர், எங்கள் அமைச்சரோடு நெருங்கிப் பழகக்கூடியவர், மிகுந்த திருக்குறளை மேற்கோள் காட்டிப் பேசக்கூடியவர்,

> "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்று சொன்னார். அதை உள்வாங்கிய எங்கள் தலைவர்தான், அதை உள்வாங்கிய தளபதிதான் கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சி இருந்தபோது போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டிருக்கிற இடர்பாடு, இழப்பு, bonus கொடுக்க முடியாத நிலை போன்றவற்றை

மாற்றிக் காட்ட வேண்டுமென்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு குழுவை அனுப்பி, depot, depot–வாக விசாரித்து, இதைச் சரி செய்வது எப்படி என்ற ஆலோசனையை எதிர்க்கட்சியிலிருந்து வழங்கிய எதிர்க்கட்சித் தலைவர்தான் இன்றைய முதலமைச்சர் தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அருமை அண்ணன் அவர்கள் அனுபவம் பெற்றவர். அதையொட்டித்தான் எங்கள் மரியாதைக்குரிய அவை முன்னவர் அவர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே இலாவகமாக எடுத்துச் சொன்னார். இன்னும் சொல்ல வேண்டுமேயானால்,

> "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
> ததனை அவன்கண் விடல்"

என்ற குறளுக்கேற்ப இன்றைக்கு இந்த மாபெரும் வெற்றியை ஒப்பற்ற தலைவர் தளபதி பெற்றிருக்கிறார் என்று சொன்னால், அதற்குக் காரணம் மக்கள் அவர்மீது வைத்த நம்பிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6–00

விதி 110–ன்கீழ் அறிவிப்புகளைக் கண்ணாரப் பார்க்கிறோம். முதல் நாள் வ.உ. சிதம்பரனார் அவர்களுக்கு பெயர் சூட்டல் மற்றும் பல்வேறு நலத் திட்ட அறிவிப்புகள். மறுநாள் அயோத்திதாசர் பண்டிதருக்கு பல்வேறு அறிவிப்புகள், பாராட்டுகள்; அதற்கு முன்னதாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 10.5 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு அரசாணை; இன்றைக்கு CAA–க்கு எதிர்ப்பு; சிறுபான்மை மக்களுக்கு ஆதரவு. ஆக, தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாக்கிற ஒரே பாதுகாவலர், அன்புத் தலைவர் தளபதி அவர்கள் என்பதை தினசரி பதிவு செய்கிறார்கள், மறக்க முடியாத பொக்கிஷங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'உன் நண்பன் யாரென்று சொல், உன்னை யாரென்று சொல்கிறேன்' என்று ஒரு சொல்லாடல் சொல்வார்கள். எங்கள் தலைவர் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் அவர் நியமித்த தலைமைச் செயலாளர், மரியாதைக்குரிய சகோதரர் இறையன்பு, இ.ஆ.ப. அவர்கள். தமிழகத்தில் இருக்கிற எல்லா இளைஞர்களும் இப்படியுமா ஒரு முதல்வர் இருப்பாரென்று உற்றுப் பார்த்தார்கள். காவல் துறை அதிகாரி திரு. சைலேந்திர பாபு, ஐ.பி.எஸ்., முதலமைச்சர் அவர்களுடைய செயலாளர்கள்

தூய்மையான கரத்தோடு பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு பொறுப்புகளில், பல்வேறு சாதனைகளைப் புரிந்த அருமைச் சகோதரர்கள் திரு. உதயசந்திரன், இ.ஆ.ப., திரு. உமாநாத், இ.ஆ.ப., திரு. சண்முகம், இ.ஆ.ப., திருமதி அனு ஜார்ஜ், இ.ஆ.ப., ஆக இப்படிப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பைக் கட்டமைத்ததன் விளைவுதான், தினசரி அறிவிப்புகள் பெருகி, இன்றைக்கு எல்லோருடைய பாராட்டுகளையும் நாங்கள் பெற்றிருக்கிறோம்.

கடந்த 75–வது ஆண்டு சுதந்திர தின கொடியேற்று விழா நிகழ்ச்சியில் அன்புத் தளபதி மூவர்ணக் கொடியை ஏற்றினார். ஏதோ ஒரு முதலமைச்சர் கொடியேற்றினார் என்ற பெருமையில் நாங்கள் இல்லை. எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, 1971–ல் மத்திய அரசிடம் போராடி, வாதாடி, மாநில முதலமைச்சருக்கு இந்த உரிமை வேண்டுமென்று கேட்ட இந்தியாவின் முதல் ஆண்மகன், முன்னாள் முதல்வர் எங்கள் அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். ஆண்டுகள், உருண்டோடிவிட்டன; இன்றைக்கு 50 ஆண்டுகள் கழித்து அவர் பெற்ற பிள்ளை அதே மாநிலத்தின் முதலமைச்சராகி, எத்தனையோ முதலமைச்சர்கள், எத்தனையோ மாநிலங்களில் எப்படி எப்படியோ கொடியேற்றினாலும், தன் தந்தை 50 ஆண்டுகளுக்கு முன் வாங்கிய அந்த உரிமையில், ஒரு கொடியைக் கையில் பிடித்து தமிழகத் திருநாட்டில் தேசிய கொடியை ஏற்றினார் என்றால், இந்தியாவின் திருப்புமுனை மாநிலம், தமிழ்நாடு.

அதையொட்டி சொல்கிறேன், பவள விழா மட்டுமல்ல, 80–வது முத்து விழாவிலும் எங்கள் தலைவர் தளபதி அவர்கள்தான் தேசிய கொடியை இதே கோட்டையில் ஏற்றுவார். (மேசையைத் தட்டும் ஒலி) 80 மட்டுமல்ல, 90–லும் அதே செயல்; 100–லும் அதே செயல்; அதைத் தொடர்ந்தும் தேசிய கொடியை ஏற்றுகிற வல்லமை பெற்றிருக்கிற ஓர் இளம் தலைவர் அண்ணன் திரு. உதயநிதி ஸ்டாலின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக் காக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் எங்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

அருமை சகோதரர் பாசமிகு அண்ணன், போக்குவரத்துத் துறையினுடைய இலாபம், நஷ்டம், தேவை, கோரிக்கை, போனஸ், இடர்பாடு எல்லாவற்றையும் பற்றிப் பேசினார்.

முதன் முதலில் இந்தியாவில் தனியாரிடமிருந்து பேருந்துகளை அரசுடைமையாக்கியது யார்? (மேசையைத் தட்டும் ஒலி) TVS, கும்பகோணத்திலிருக்கிற பல்வேறு பேருந்து நிறுவனங்கள், கோவையில் இருக்கின்ற நிறுவனங்கள், தனியாரிடமிருந்த பேருந்துகளை அரசுடைமையாக்கி, அரசுடைமையாக்கப்பட்டவர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கியது கழக அரசு. அண்ணன் சொன்னாரே, பல்வேறு தொழிலாளர்களுக்கு நாங்கள் பாதுகாப்பு தந்தோம் என்று; 8.33 சதவிகிதம் போனஸ் வழங்கியது நினைவிருக்கிறதா? நாங்கள் வந்தவுடன் 20 சதவிகிதம் தந்தோமே, நினைவிருக்கிறதா? போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குத் தெரியும். பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டது. எந்தெந்த தொழிற்சங்கம் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. அப்பொழுது அ.தி.மு.க ஆளுங்கட்சியாக இருந்தது. தேர்தல் நடத்தப்பட்டது; அந்தத் தேர்தலில்கூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொ.மு.ச. 57 சதவிகித வாக்குகள் பெற்று பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்களுக்கு நன்மை செய்திருந்தால், வெற்றி பெற்றிருக்க வேண்டியது வேறு தொழிற்சங்கம் அல்லவா? அன்புத் தலைவர் கலைஞர் அவர்களிடம் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சொன்னார்கள், "நாங்கள் போக்குவரத்து ஊழியர்கள், தினசரி காலை 4–00 மணிக்கு வேலைக்குப் போகிறோம். மறுநாள் 3–00 மணி, 4–00 மணிக்குத்தான் வேலையிலிருந்து இறங்குகிறோம். நான் duty பார்க்கிறபொழுது எந்த அண்ணனோ, அப்பாவோ, மாமாவோ, மைத்துனனோ, என் உறவுக்காரர்கள், என் மனைவி, பேருந்தில் ஏறிவிட்டால் எல்லோருக்கும் டிக்கெட் கொடுப்பதைப்போல, என் மனைவிக்கும், என் மகனுக்கும், என் அண்ணனுக்கும் நான் டிக்கெட் தருகிறேன். நான் conductor, என் மனைவிக்கு டிக்கெட் கொடுக்க வேண்டுமா? இதற்கு ஒரு மாற்றம் கிடைக்காதா" என்று கலைஞர் அவர்களிடம் கேட்டார்கள். அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார். கவலைப்படாதே, உன் இரத்த உறவு உடைய எல்லோருக்கும் நான் இலவச பஸ் பாஸ் தருகிறேன் என்று முதன்முதலில் குடும்ப உறுப்பினர்களுக்கு பஸ் பாஸ் தந்தார். அடுத்து, நாங்கள் காக்கிச் சட்டை போட்டுக்கொண்டுதான் duty–க்கு வர வேண்டுமென்று சொன்னார்கள் இப்பொழுதெல்லாம் terry cotton–ல் pant, shirt. 1970–1971, 1972–1974–ஐ எண்ணிப் பாருங்கள். கசங்கிய சட்டை, கஞ்சி போட்டுக்கூட அயர்ன் பண்ண முடியாத கொடுமை. "எங்களுக்கு சரியான uniform வேண்டும். துவைத்துப்போட வழியில்லை"

என்று சொன்னபொழுது, "கவலைப்படாதே, ஆண்டுக்கு 3 காக்கி TC pant, TC shirt, shoe உங்களுக்குத் தரப்படும்" என்று, திராவிட முன்னேற்றக் கழக கலைஞர் ஆட்சியில் சீருடைத் தொழிலாளர்களுக்கு காக்கி pant, shirt வழங்கப்பட்டது.

பிற்பகல் 6–05

அடுத்து கேட்டார்கள், "காலையில் duty–க்கு வந்துவிட்டு, மறுநாள் வீட்டிற்குப் போகின்றபோது, என் மனைவி, மக்களுக்கு சின்னப் பிள்ளைகளுக்கு ஏதாவது தின்பண்டம் வாங்கிச் செல்ல வேண்டாமா? Duty பார்த்து, இருக்கின்ற பணத்தையெல்லாம் கட்டிவிட்டால், வீட்டில் இருந்துதான் பணம் எடுத்து வர வேண்டும் என்ன செய்வது" என்று கேட்டார்கள். அன்புத் தலைவர் கலைஞர் சொன்னார்; "கவலைப்படாதே, ரூ.100/–க்கு 3 ரூபாய் கலெக்ஷன் பேட்டா." (மேசையைத் தட்டும் ஒலி) எதை சார் விட்டுவைத்தோம் நாங்கள். பார்த்து, பார்த்து, பார்த்து செய்திருக்கிறோம். அடுத்து சொன்னார்கள், "காலையில் கிளம்பி வேலைக்கு வந்துவிடுகின்றோம். கடையில் சாப்பிட வேண்டுமென்றால், என்ன செய்வது" என்று கேட்டார்கள் — அப்போது சாப்பாடு 20, 25 ரூபாய். டிபன் 10, 15 ரூபாய்—தலைவர் சொன்னார்; கவலைப்படாதீர்கள். இருக்கின்ற டிப்போவிலேயே சாப்பிடுங்கள்; இட்லி பத்து பைசா, மதிய சாப்பாடு ஒரு ரூபாய்.

கடந்த ஆட்சியில், எத்தனை டிப்போக்களில், எத்தனைபேர் ஒரு ரூபாய்க்கு சாப்பிட்டு இருக்கிறோம்? யாராவது சொல்லுங்கள், வாய்ப்பு இருந்தால் வருகிறோம். எனவே, மீண்டும் சொல்கிறேன். இது குற்றம் அல்ல, குறை அல்ல. சரி செய்யப்பட வேண்டியது. அதைத் தான் எங்கள் தலைவர் சொன்னார், "எனக்கு வாக்களிக்காத மக்களும் விரும்பி வாக்களிக்கக்கூடிய வகையில் என் பணிகளை நான் அமைத்துக்கொள்வேன்" என்று. (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட வேறு என்ன உத்தரவாதம் வேண்டும். எதிர்முகாமில் இருக்கும் அருமைத் தோழர்களுக்குச் சொல்ல வேண்டும். காலையில்கூட, அரசினர் தனித்தீர்மானம் கொண்டுவந்தபோது, அருமை எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தீர்கள். ஒருவேளை அண்ணன் ஓ.பி.எஸ். அவையில் இருந்திருந்தால் அழகாகச் சொல்லியிருப்பார். என்ன சொல்லியிருப்பார்; நதியினில் பெருவெள்ளம், கரையினில் நெருப்பு, இரண்டுக்கும் நடுவே இறைவனின் சிரிப்பு, இதுவே என்

நிலை என்று சொல்லியிருப்பார். நாங்கள் என்ன செய்துவிட்டோம். பெரிய தவறை ஒன்றும் நாங்கள் செய்யவில்லையே, சிறுபான்மை மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றோம் அவ்வளவுதானே, இதே பாரதிய ஜனதா கட்சித் தோழர்கள், எதிர்க்கின்றோம் என்றார்கள், சென்றார்கள், மறுபடியும் வந்து உட்கார்ந்துவிட்டார்கள்.

ஆக, நாட்டுப் பிரச்சினையில் அக்கறையோடு இருக்க வேண்டுமென்ற எண்ணத்தை உடையவர்கள் நாங்கள். இன்னொன்றையும் உங்களிடம் அன்போடு கேட்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போக்குவரத்துத் துறையில் செய்த சாதனையைப்போல், அப்படிப்பட்ட காரியங்களைச் செய்தவர்கள் யாராவது உண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில், வெளிநடப்புச் செய்வது என்பது எங்களுடைய உரிமை. அதில் பல்வேறு பிரச்சினைகளை நாங்கள் சொல்லியிருக்கிறோம். எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரை, பல்வேறு இடங்களில் ஆளும்கட்சி புறக்கணிக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். அதேபோல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், எங்கள் கட்சியைச் சார்ந்த முன்னாள் அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் கோரிக்கைகூட வைத்தார்கள். அம்மா சிலைக்குத் தொடர்ந்து நாங்கள் மாலை போட்டுக்கொண்டிருந்தோம். அங்கே ஏணியை எடுத்துவிட்டார்கள் என்று நேரடியாகக் கோரிக்கை வைத்தோம். இதுபோல், பல்வேறு பிரச்சினைகளுக்காக நாங்கள் வெளிநடப்புச் செய்தோம். அதை வேறு மாதிரி கொண்டு போகிறார். அது அப்படியல்ல. சிறுபான்மையினருக்கு என்றைக்கும் நாங்கள் பாதுகாப்புதான். சிறுபான்மையினரைப் பொறுத்தளவுக்கு, பல்வேறு திட்டங்களை எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல, அண்ணன் எடப்பாடியாரும் கொடுத்திருக்கிறார்கள். அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. நாங்கள் ஆரோக்கியமாக அவையில் பேசிக் கொண்டிருக்கின்றோம். அதைக் கொச்சைப்படுத்தக் கூடாது.*

அதேபோல, அண்ணன் ஓ.பி.எஸ். அவர்கள் இன்று அவையில் இல்லை. அவர் பேசியதை இன்று அவையில் பேச வேண்டிய அவசியம் இல்லை. அதுவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகப் பேசக்கூடியவர், decent ஆக பேசக்கூடியவர். அவர் இப்படிப் பேசுவார் என்று நாங்கள் எதிர்ப்பார்க்கவில்லை. ஆகவே, இதுவெல்லாம் அவைக் குறிப்பில் இருக்க வேண்டுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முடிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலைக்கு மாலை அணிவிப்பது பற்றி சொன்னார். அந்தச் சிலை இருப்பது, உயர் கல்வித் துறையினுடைய அலுவலக வளாகத்தில் இருக்கிறது. தினமும் யாராவது சென்று சிலைக்கு மாலை அணிவிப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? பிறந்த நாளுக்குப் போடலாம், நினைவு நாளுக்குப் போடலாம். ஓர் அரசு அலுவலகத்தில் இருக்கிற ஒரு சிலைக்கு அதைத்தான் செய்ய வேண்டும். அரசு விதி அதுதான். தினசரி சென்று மாலை போட்டு, கிளம்பி வருவதைத்தான் வேண்டாம் என்றார்கள். மாலை போடுகிற அவசியம் உங்களுக்கு இருக்கும் என்றால் பக்கத்திலேயே அம்மா நினைவிடம் இருக்கிறது, அங்கே போய் மாலை போடுவதுதானே? அதைவிட்டுவிட்டு உயர் கல்வித் துறை அலுவலகத்திற்கு தினமும் போகக் கூடாது என்றுதான் நாங்கள் சொன்னோமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. பிறந்த நாளுக்குப் போய் மாலை போடுங்கள், நினைவு நாளைக்குப் போய் மாலை போடுங்கள் (குறுக்கீடு) எதற்கு அங்கு ஏணி இருக்க வேண்டும்? அதைவிடுத்து, 365 நாளைக்குமா ஏணியை அங்கே வைத்திருப்பார்கள்? என்ன பேசுகின்றீர்கள் நீங்கள்? அது தேவையில்லாத ஒன்று என்பதால், அது எடுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, ஒரே வரியில் சொல்லுங்கள்.

*__முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், அ.தி.மு.க. கட்சி சிறுபான்மையினரின் பாதுகாவலராக நாங்கள் இருக்கின்றோம். வேறு காரணங்களுக்காகத்தான் வெளிநடப்புச் செய்தோம் என்று சொன்னார்கள். மாநிலங்களவையில், இந்த CAA சட்டம் அமலாவதற்கு அ.தி.மு.க. உறுப்பினர்கள் வாக்களித்ததால்தான் இவ்வளவு பெரிய பிரச்சினையே வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது எங்கே போனது இந்த நினைப்பு என்று வினவ விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை. . .* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதாவது நீங்கள்தான் சிறுபான்மையினருக்கு ஆதரவு என்று சொன்னவுடன், அதற்கு அவர் பதில் சொன்னார். அவ்வளவுதான்.* (குறுக்கீடு) *அத்துடன் அது முடிந்து போய்விட்டது. உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.* (குறுக்கீடு)

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் சிறுபான்மையினர் இல்லை. அவர் கைத்தறித் துறை முன்னாள் அமைச்சர்.* (குறுக்கீடு) *நீங்கள் வேண்டுமானால் அவருக்குப் பதில் சொல்லுங்கள். நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள்தான் அந்தப் பிரச்சினையைச் சொன்னீர்கள்.* (குறுக்கீடு) *அதற்குத்தான் அவர் பதில் சொல்கிறார். நீங்கள் பதில் சொல்லுங்கள்.*

பிற்பகல் 6–10

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள் அந்தக் கருத்தைச் சொன்னார்கள். 'மாநிலங்களவையில் நீங்கள் ஆதரித்தீர்கள்' என்று சொன்னார்கள்.*

பல்வேறு பிரச்சினைகள், குறிப்பாக, தமிழ்நாட்டிலே அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்தச் சட்டத்தை மத்திய அரசாங்கம் கொண்டுவந்தபொழுது, உடனடியாக புதுடில்லி சென்று, மத்திய உள் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தோம். நானும் உடன் சென்றிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்களும் உடன் வந்திருந்தார்கள். அப்பொழுது, சிறுபான்மையின ஜமாத் தலைவர்களெல்லாம் வந்து பார்த்தார்கள். அவர்கள் சார்பாக நேரடியாகச் சென்று 'நீங்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதால், தமிழ்நாட்டிலுள்ள இஸ்லாமியர்களெல்லாம் அச்சப்படுகிறார்கள்', அவர்கள், நாளைக்கு, இங்கே இருக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலும் அதிகளவில் இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள். ஆகவே, இதைப்பற்றி நாங்கள் சென்று சொல்லும்பொழுது, 'அந்த மாதிரியான சூழ்நிலைகளெல்லாம் இல்லை; அந்த மாதிரியான எந்தப் பிரச்சினையும் கிடையாது' என்று உள் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஜமாத் தலைவர்களெல்லாம் இங்கே வந்து பேசும்பொழுது அந்த மாதிரி சொன்னார்கள். மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் இருக்கிற வேறு சில அமைப்புகளெல்லாம் ஊடுருவுகிறார்கள் என்பதற்காக இந்தச் சட்டங்களையெல்லாம் கொண்டு வருகிற சூழ்நிலை வந்தபொழுதுதான், அங்கேயிருக்கிற எங்களுடைய உறுப்பினர்களுக்கு அந்த மாதிரியான சூழ்நிலை வந்தது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், முதலமைச்சராக அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இருக்கும்பொழுது, 'நான் இங்கே முதலமைச்சராக இருக்கும்போது, அண்ணா தி.மு.க. ஆட்சியில் இருக்கிறவரை, எந்த இஸ்லாமியருக்கும், சிறுபான்மையினருக்கும் எந்தப் பிரச்சினையும் வராது' என்று தெளிவாக அன்றைக்குச் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் ஜவாஹிருல்லா அவர்கள்கூட அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்தார்கள். அந்த மாதிரியான சூழ்நிலைதான் இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல விளக்கம் கொடுத்துவிட்டீர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: அதேபோல, இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த காரணத்தினால், இதனால், அங்கே வேறு ஏதாவது ஒரு மாறுதல் வரப்போகிறதா என்றால், இல்லை. உண்மையாக இருக்கக்கூடிய அண்ணா தி.மு.க. எப்பொழுதுமே சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பாகத்தான் இருந்திருக்கிறது. ஆகவே, பல்வேறு சட்டங்களை நாம் கொண்டு வருகிறோம். பல்வேறு திட்டங்களை, பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று சட்டமன்றத்தில் நாம் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும்.

திரு. எஸ்.பி. வேலுமணி: அவையனைத்தையுமே மத்திய அரசு ஏற்றுக்கொள்வதில்லை. சிறுபான்மையினர்மீது உண்மையான அக்கறையுடன் நேரடியாகச் சென்று உள் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தவர்கள் நாங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் போய்விட்டு வந்ததையெல்லாம் பதிவு செய்துவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: 'எந்தச் சூழ்நிலையிலும் அந்தச் சட்டத்தால் இங்கே எந்தப் பிரச்சினையும் வராது' என்ற வாக்குறுதியையும் நாங்கள் வாங்கினோம். அதேபோல, 'அண்ணா தி.மு.க. அரசு இருக்கிற வரையில், எந்தவொரு சிறுபான்மையினருக்கும் எந்தப் பிரச்சினையும் வராது' என்ற வாக்குறுதியைத் தந்திருக்கிறார், அன்றைய முதலமைச்சராக இருந்த, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய உரையிலே தெளிவாகக் குறிப்பிட்டார்கள். மற்ற மாநிலங்களிலேயிருந்து என்பது குறித்தெல்லாம் பேசுவதற்கு time இல்லை. தமிழர்கள் வரலாம், 'Buddhists வரலாம், அவர்களையெல்லாம் இந்தியா வரவேற்கும்' என்று சொல்கிறீர்களே, இராஜ்ஜியத்தில், 'ஈழத்தில் தமிழர்கள் இருக்கிறார்களே, இவர்களை

ஏன் விட்டு விட்டீர்கள்?' என்று நாங்கள் கேட்டோம். இப்போது, 'நாங்கள் இருக்கிற வரைக்கும் வராது என்று சொன்னீர்களே! தமிழர்களை வரலாம் என்று சொல்லவில்லையே.' அதைப்பற்றி நாங்கள் கேட்டோமே, அதைப் பற்றி நீங்கள் என்ன சொன்னீர்கள்? (குறுக்கீடு) நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதா? இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு இந்த விவாதத்தை முடித்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் என்ன சொல்கிறார் என்றால், 'நான் இருக்கிற வரையில் ஒன்றும் வராது என்று எங்கள் எடப்பாடியார் அவர்கள் சொன்னார்' என்று சொன்னார்கள். நாங்கள் சொல்வது என்னவென்றால், 'ஒன்றும் வராது என்கிறீர்களே! அவன் வரலாம், இவன் வரலாம் என்று திரு. மோடி சொன்னாரே, தமிழன் வரலாம் என்று சொல்லவில்லையே' என்று எங்கள் தலைவர் கேட்டார். அதற்கு உங்களுடைய பதில் என்னவென்று கேட்டேன். (குறுக்கீடு) புரியவில்லை, போங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் அந்தத் தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்ததைப் பற்றி இப்பொழுது எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசும்போது, 'பல்வேறு காரணங்களுக்காக நாங்கள் வெளிநடப்புச் செய்தோம். இந்தக் காரணத்திற்காக அல்ல' என்று சொல்கிறார். ஒன்றும் கெட்டுவிடவில்லை. காலையில் போய்விட்டீர்கள்; இப்பொழுது மாலையில் வந்திருக்கிறீர்கள். இப்பொழுது அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறீர்களா என்பதை இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவித்தால் போதும். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் விவாதம் போதும், போதும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

பிற்பகல் 6–15

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது என்றைக்கும் சிறுபான்மையினருக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) 1993–ல் பாபர் மசூதி இடிக்கப்படும்போது அனைத்து மதங்களிலும் கலவரம் வந்தது. அப்போது, சிறுபான்மையின மக்களை முழுமையாகப் பாதுகாத்தது, அம்மா அரசு, இப்படி பல உதாரணங்கள் இருக்கின்றன. சிறுபான்மையின மக்களுக்கு என்றைக்கும் அம்மா அரசு பாதுகாப்பாக இருந்தது. ஆனால், அதேபோன்று உங்கள் ஆட்சியிலும் பல நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன, நாங்கள் அதைச் சொல்லலாம், ஆனால், நாங்கள் அதற்குள் போக விரும்பவில்லை. எப்போதுமே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சியின் நிலை, சிறுபான்மை மக்களுக்கு ஆதரவு என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், பேசுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர், நீங்கள் ஆதரிக்கிறீர்களா என்று கேட்டீர்கள்,

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: இல்லை, இல்லை, பாபர் மசூதி என்று சொல்கிறாரே? பாபர் மசூதிக்குக் கல் கொடுத்து அனுப்பியது யார்? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். இந்த விஷயம், பெரிய விஷயம். பெரிய சமாச்சாரம். இந்த விஷயம் குறித்து இவ்வாறு பல கேள்விகளை எழுப்புவார்கள். இதை விடுத்து வேறு பொருள் குறித்துப் பேசுங்கள்.

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் இந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். 26 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் உங்கள் உரையை முடியுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், மத்திய அரசு பலமுறை பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தியது. உயர்த்தியபோதெல்லாம், பேருந்துக் கட்டணத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு உயர்த்தவில்லை. அன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சர், மரியாதைக்குரிய மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அண்ணன், திரு. நேரு அவர்கள், அன்புத் தலைவர் கலைஞர் அவர்களிடம், "8 முறை, 9 முறை பெட்ரோல், டீசல் விலை ஏறியிருந்தும், பேருந்துக் கட்டணத்தை உயர்த்த இயலாததால், போக்குவரத்துக் கழகம் மிகுந்த நஷ்டத்தில் இயங்குகிற சூழ்நிலை இருக்கிறது. ஒரு கிலோ மீட்டருக்கு 1பைசா உயர்த்தலாமா" என்று அச்சத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரை அணுகிக் கேட்டார்கள். அப்போது, அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள், "ஏழை எளிய சாமானிய மக்கள்தான் பேருந்துகளில் பயணிக்கிறார்கள், அவர்களுக்கு பேருந்துக் கட்டணத்தை ஏற்றக் கூடாது, எத்தனை முறை ஒன்றிய அரசு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தினாலும், பேருந்துக் கட்டணத்தை ஏற்ற மாட்டேன்" என்று 628 கோடி ரூபாயை போக்குவரத்துக் கழகத்திற்கு மானியமாகத் தந்த தலைவர், அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்றையும் சொல்கிறேன், நான் சார்ந்திருக்கிற திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறை என்ற ஊரிலிருந்து கும்பகோணத்தில் உழவர் சந்தைக்கு விடியற்காலை 4.00 மணிக்கு 4 கத்தரிக்காய் மூட்டைகளோடு விவசாயி ஏற்றுகிறான். ஓட்டுநர், "ஏற்றக் கூடாது, இது பயணிகள் செல்லும் பேருந்து. சின்ன பை வேண்டுமானால் வைத்துக்கொள், மூட்டை ஏற்றக் கூடாது, 4 மூட்டைகள் ஏற்றக் கூடாது" என்று சொன்னார். விவசாயிகளால் மறியல் ஏற்படுகிறது. 4.30 மணிக்கு முதலமைச்சருக்குச் செய்தி வருகிறது. 5.00 மணிக்கு உரிய நிருவாக இயக்குநரிடம் பேசி, மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களிடம் பேசி, உழவர் சந்தைக்கு எடுத்துவருகின்ற காய்கறிகள், அரசுப் பேருந்தில் இலவசமாக எடுத்துச் செல்லலாம் என்று சொன்ன தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைய முதலமைச்சர் டாக்டர்

கலைஞர் அவர்கள். இன்றைக்கு முதுபெரும் தலைவர்களில் ஒருவர், மரியாதைக்குரிய இலக்கியச் செல்வர், மரியாதைக்குரிய அண்ணன், திரு. குமரிஅனந்தன் அவர்கள், காமராஜரோடும் பழகியவர், கலைஞரோடும் பழகியவர். கலைஞருடைய 75–வது பவள விழா நிகழ்ச்சியின்போது அண்ணன், திரு. குமரிஅனந்தனிடம், பல்வேறு கேள்விகளைக் கேட்டார்கள், ஒரு பத்திரிகை நிருபர் 'கலைஞரோடும் பழகியிருக்கிறீர்கள், காமராஜரோடும் பழகியிருக்கிறீர்கள், 2 பேருக்கும் இருக்கின்ற ஒற்றுமை என்ன என்று இலக்கியச் செல்வர், அண்ணன் திரு. குமரிஅனந்தனிடம் கேட்டார். அதற்கு திரு. குமரிஅனந்தன் சொன்னாராம், காமராஜரிடம் ஒரு கோரிக்கை வைத்தால், 'ஆகட்டும், பார்க்கலாம்' என்பார். கலைஞரிடம் ஒரு கோரிக்கை வைத்தால், 'ஆயிற்று, பார்த்தீரா' என்று உடனடியாகச் செய்து முடிப்பவர், கலைஞர் என்ற வார்த்தையைச் சொல்வார்கள். இன்றைக்கு ஐயன் வள்ளுவனுக்கு, எவ்வளவோ பெருமை பேசுகிறோம். நாமெல்லாம் தமிழர்கள். தமிழ் உணர்வு கொண்டு, ஒன்றுபட்டு நிற்கிறோம். ஆனால் அரசுப் பேருந்துகளில், திருவள்ளுவர் படமும், திருக்குறளும் எழுத வேண்டுமென்று, அய்யன் வள்ளுவனுக்குப் புகழ் சேர்த்த தலைவர், டாக்டர் கலைஞர் என்பதை மறந்துவிடக் கூடாது.

அன்றைய தினம் இதே சட்டமன்றத்தில், 'நான் இன்றைக்கு அரசுப் பேருந்தில் வந்தேன், ஒரு திருக்குறள் எழுதப்பட்டிருக்கிறது,

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்று எழுதப்பட்டிருந்தது, யாகாவா ராயினும் நாகாக்க என்று எழுதியிருக்கிறீர்களே, அது ஓட்டுநர்களுக்கா, நடத்துனர்களுக்கா அல்லது பயணிகளுக்கா?' என்று எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பார்த்து கேட்கிறார். அப்போது முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள், பொதுப் பணி மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர், அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள். அண்ணா அவர்களுக்கு பதில் சொல்லத் தெரியும், பதில் சொல்லத் தெரியாதவர் அல்ல, அண்ணா அவர்கள். காரணம் அடுக்குமொழி பேசி மக்களைக் கவர்ந்தவர், பேரறிஞர் அண்ணா அவர்கள். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொன்னவர், பேரறிஞர் அண்ணா. இன்னும் சொல்ல வேண்டுமேயானால், பேசிப் பேசி, ஒரு நாட்டை ஆள முடியும் என்பதை உலகிற்குக் காட்டிய முதல்

மாமனிதர், (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்கள். ஆனால், அண்ணா முதல்வர், அருகிலிருக்கிற நாவலரை விட்டுவிட்டு, மூன்றாவது நாற்காலியில் இருக்கிற கலைஞரைப் பார்க்கிறார், இதே புனித ஜார்ஜ் கோட்டையில். அண்ணா ஏன் பார்க்கிறார் என்பது கலைஞருக்குத் தெரியும். அண்ணாவே பல கூட்டங்களில் சொன்னதுண்டு. நான் சொல்லுவதைச் செய்கிற தம்பிமார்கள் ஆயிரக்கணக்கில் எனக்கு உண்டு, சொன்னவர் அண்ணா. கோவி. செழியன் அல்ல. 'நான் சொல்லுவதைச் செய்கிற தம்பிமார்கள் ஆயிரக்கணக்கில் எனக்கு உண்டு, ஆனால் நான் நினைத்ததைச் செய்கிற ஒரே தம்பி, 'திருவாரூர் கருணாநிதி'' என்று அண்ணா பாராட்டிய தலைவர், கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6–20

அண்ணா பார்க்கிறார், கலைஞர் புரிந்துகொள்கிறார். பேரவையிலிருந்து சொன்னாராம், "பேரவைத் தலைவர் அவர்களே,

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்ற குறள் யாருக்கு ஓட்டுநருக்கா, நடத்துனருக்கா, பயணிகளுக்கா என்று எதிர்க்கட்சியினர் கேட்டதற்கு, ஓட்டுநருக்கா, நடத்துனருக்கா, பயணிகளுக்கா என்று பிரித்துப் பார்க்க வேண்டாம், நாக்குடையவர்கள் எல்லோருக்கும் ஏக பொருத்தம் என்று'' நச்சென்று பதில் சொன்னார் தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எங்களுடைய ஆட்சியிலே முன்னாள் முதலமைச்சர் அவர்களுடைய படம் ஒட்டியிருந்ததை "நீக்க வேண்டாம், அப்படியே கொடுங்கள்'' என்றார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

திருச்சியிலே அன்புத் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைக்கு மாண்புமிகு துணை முதலமைச்சராக இருந்தபொழுது, அன்றைய தினம் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார். அப்பொழுது நிருபர்கள் கேட்டார்கள், "நீங்கள் ஆட்சிக்கு வந்ததும் bus pass தருகிறீர்கள், அ.தி.மு.க. ஆட்சியில் cycle கொடுத்தார்கள், நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் cycle வழங்குவதை நிறுத்தி விடுவீர்களா'' என்று கேட்டார்கள். எங்கள் தங்கத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் "நாங்கள்

bus pass–ம் தருவோம், கடந்த ஆட்சியில் வழங்கிய cycle–ஐயும் தருவோம்'' என்று சொன்ன தலைவர். இன்றைய ஆட்சியில். எங்கே குறை இருக்கிறது, எதில் குறை இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமேயானால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், போக்குவரத்துத் துறையில் செய்த சாதனைத் திட்டங்களைப்போல, தகவல் தொழில்நுட்பவியல் துறையிலும் உள்ளன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூடிய சீக்கிரம் உரையை முடிக்கச் சொல்லி bell அடித்துவிடுவார். இன்னொரு துறையும் இருக்கிறது.

தகவல் தொழில்நுட்பவியல் துறையில் Tidel Park. நினைத்துப் பாருங்கள். இந்தியத் திருநாட்டில், முதன்முதலில் தமிழ் இணையக் கழகம் என்பதை உருவாக்கிய ஒரே ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. Tidel Park 12 இலட்சம் சதுர அடி கொண்டது. கீழ்தளம் இரண்டு, தரைதளம் ஒன்று, மேல் தளம் பன்னிரண்டு. 21 ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்டது. நினைத்துப் பார்க்க முடியுமா? இன்றைக்கு அது வந்ததற்கு பிறகுதான், Infosys Company, Wipro Company, சோழிங்கநல்லூரில் முன்னாள் முதலமைச்சர் நின்று பேசுகிற சிறுசேரியில், இன்றைக்கு சிறுசேரி முதல் Tidel Park வரை தகவல் தொழில்நுட்பச் சாலை என்று பெயரெடுக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம். நான் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்க தூதரகத்தில், தி.மு.க. ஆட்சியில் வெளிநாடுகளுக்கு visa பெற்றுச் செல்கிறவர்கள். எந்த மாநில மக்கள் என்று ஒரு கணக்குக் காட்டினார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு மாதத்திற்கு 12,400. ஆனால் ஆந்திராவில், 7,000, கேரளாவில் 6,000, உத்தரபிரதேசம், மத்திய பிரதேசத்தில் முறையே 3,000 மற்றும் 2,000. ஆக இந்திய திருநாட்டில் அமெரிக்காவிற்கு வேலைக்குச் செல்வோமேயானால், அதுவும் தகவல் தொழில்நுட்பத்தில் வேலைக்குப் போக வேண்டுமேயானால், கட்டமைப்பை உருவாக்கி, அதிக இளைஞர்களை வெளிநாட்டிற்கு அனுப்பிய ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் 10 ஆண்டுக் காலம் காணவில்லை? நாங்களும் சரி, நீங்களும் சரி, கடந்த 10 ஆண்டுகளாக எழுத்துப்பூர்வமாக மனுக்களை நாம் வாங்கவில்லை. அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய பொதுக் குறை, பொதுப் பிரச்சினை, தீர்க்கப்பட வேண்டியது. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எழுத்துபூர்வமான மனுக்கள். அது சாதிச் சான்றிதழாக இருந்தாலும், வருமானச் சான்றிதழாக இருந்தாலும், திருமண உதவியாக இருந்தாலும், மாற்றுத் திறனாளியாக இருந்தாலும், எதற்கும் எழுத்துப்பூர்வம் இல்லை. எல்லாம் கணினிமயம். e–Sevai மையம். அந்தவகையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனதார உங்களைப் பாராட்டுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். காரணம் குறுகிய காலத்தில் காகிதமில்லாத Budget–ஐப் போட்டு, அதில் இந்தியாவில் இரண்டாவது மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையைத் தக்கவைத்துக்கொண்ட சட்டமன்றம் இந்தச் சட்டமன்றம். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் பாராட்டுகிறார்கள். ஆக, எழுத்துப்பூர்வமாக அரசின் மனுக்களைப் பெறவில்லையென்றால், ஏழைகள், ஒரு விவசாயி, எப்படி பயன்பெறுவான்? தனியாரிடம் செல்ல வேண்டும். e–mail அனுப்ப வேண்டுமென்றால் அதற்கு 200 ரூபாய், 300 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். உண்டா, இல்லையா? நான் மீண்டும் கேட்பது, கடந்த காலம் எப்படியோ, நிகழ்காலத்தில் ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும், ஒவ்வொரு ஒன்றிய அலுவலகத்திலும், ஒவ்வொரு பேரூராட்சி அலுவலகத்திலும், அரசின்மூலம், e–Sevai மையத்தைத் துவக்கி, அரசிற்கு மனுக்கள், 60 ரூபாய் பெற்றுக்கொண்டு அனுப்பப்படும் என்று அறிவித்தால், 60 சதவிகித ஏழை மக்கள் பயனடைய வாய்ப்பிருக்கிறது. அந்த காரியத்தையும் இந்த அரசு செய்து, இன்னும் பெருமை மிகுந்த காரியத்தை ஈடேற்றுவதற்கு வாய்ப்பாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்த நேரத்தில் வைக்கின்றேன். நிரம்ப செய்திகள், நிரம்ப சாதனைகள், நிரம்ப அறிவிப்புகளை திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்து வந்தாலுங் கூட, எங்கள் அருமை அண்ணன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் எனக்கு ஒரு புத்தகம் தந்தார், உங்களுக்கும் தந்திருப்பார். இறைவா போற்றி, விநாயகா போற்றி, முருகா போற்றி என்று. நான் ஊருக்குச் சென்றபொழுது, அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்த பிறகு எங்கள் ஊரில் இருக்கிற கோயில் குருக்களிடம் கொடுக்கலாம் என்று சென்றேன். நல்ல கூட்டம், கையில் புத்தகத்தோடு நின்றேன். உள்ளே ஒரு சாமி அர்ச்சனை செய்துகொண்டிருந்தார். அவர், "ஓம் ஈஸ்வர நமஹ, ஓம் லெட்சுமி நமஹ, ஓம் விநாயகா நமஹ, ஓம் முருகா நமஹ, ஓம் மு.க. ஸ்டாலின் நமஹ, ஓம் உதயநிதி ஸ்டாலின் நமஹ, ஓம் துரைமுருகன் நமஹ, ஓம் சேகர்பாபு நமஹ" என்று சொல்கிறார்.

ஆச்சரியப்பட்டுப்போய், 'என்னங்க சாமி, மந்திரத்தை மாற்றிச் சொல்கிறீர்கள்' என்று கேட்டேன். அந்த சாமி சொன்னார் "நாங்கள் இதுவரைக்கும் அர்ச்சனை செய்து பார்த்தோம், இரண்டு வாழைப்பழமும், ஒரு தேங்காயும்தான் மிச்சம், புண்ணியவான் தளபதி வந்தபிறகுதான், கொரோனா காலத்தில் எங்களுக்கு 4,000 ரூபாயை வழங்கியது கலைஞர் ஆட்சி, தளபதி ஆட்சி" என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) கேட்காமலேயே 14 மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன. நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன், யாரை இந்த ஆட்சி விட்டு வைத்தது, எந்த சாதனையைச் செய்யாமல் விட்டிருக்கிறோம். கருவிலிருந்து கல்லறை வரை சாதனை படைத்தது கலைஞர் என்று சொன்னோமே! காலம் மாறி விட்டது. கருவிலிருந்து, கல்லறை வரை சாதனை படைக்கிற ஒரே ஆட்சி, எங்கள் தளபதி ஆட்சி, தி.மு.க. ஆட்சி, இன்றைய ஆட்சி. இதில் எந்த மாறுபட்ட கருத்துகளையும் நாம் பார்க்க இயலாது.

பிற்பகல் 6–25

இந்த ஆட்சியினுடைய பணிகள் இன்னும் தொடர, இன்னும் மேன்மையடைய, எதிர்தரப்பில் இருக்கக்கூடிய அனைவரும் ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறோம். காலையில்கூட எங்கள் முதல்வர் இருந்த நேரத்தில் எல்லோரும் இருந்தார்கள். அ.இ.அ.தி.மு.க. தோழர்களைத் தவிர. எங்கள்மீதுதான் அன்பு கொண்டு கட்டிப்போட்டிருக்கிறார் எங்கள் முதல்வர் என்று கருதினோம். ஆனால், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள், பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர்கள், விடுதலைச் சிறுத்தைகள், கம்யூனிஸ்ட், இப்படி ஒட்டுமொத்த சபையையும் கட்டிப்போட்டு, அன்பு பாராட்டுகிற ஒரே முதல்வர் நம்முடைய முதல்வர் என்ற பெருமை இன்றைக்குத் தொடர்கிறது என்று சொன்னால், அவரது எளிமை, அவருடைய நயமான பேச்சு, அவருடைய அணுகுமுறைதான் காரணம். ஒன்றும் வேண்டாம். ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்லி முடிக்க விரும்புகிறேன். இறுதிச் செய்தியாக, பேசுகிற இந்த கோவி. செழியன் மிட்டா மிராசு அல்ல; கோடீஸ்வரன் அல்ல; இலட்சத்தில் வாழ்க்கை நடத்துபவனும் அல்ல; ஏழையெளிய குடும்பத்தில் பிறந்து, 1989–ல் ஒன்றிய இளைஞர் அணி துணை வேட்பாளராகப் பொறுப்பேற்று, சட்டக் கல்லூரியில் படித்து, பல்வேறு நிலைகளில் மாறி, இன்றைக்கு மூன்று முறை, நான் அறிந்தவரை, தெரிந்தவரை, எந்தக் கட்சியாகவும்கூட இருக்கலாம், பணபலம் இல்லாமல்,

படைபலம் இல்லாமல், ஆள்பலம் இல்லாமல், மொத்தத்தில் அந்தஸ்து இல்லாமல் ஓர் ஓலைக் குடிசையில் பிறந்த கோவி. செழியன், தமிழக அரசின் தலைமைக் கொறடா என்ற அறிவிப்பை அறிவித்த எங்கள் தங்கத் தலைவருக்கு ஆயிரமாயிரம் நன்றிகள். (மேசையைத் தட்டும் ஒலி) பதவி ஏற்பு விழாவிற்கு எங்கள் முதலமைச்சர் வந்தார், பதவி ஏற்றார். அதில் நான் என் அண்ணனுடன் கலந்து கொண்டேன். மனதார வாழ்த்தினோம். 'மு.க.ஸ்டாலின்' என்ற வார்த்தையைச் சொல்லுகின்றபோது, உணர்ச்சிவசப்பட்டு கை தட்டினோம். 7–00 மணிக்கு கலைஞர் தொலைக்காட்சியில் விவாதம். கோட்டையில் தலைவர் பெயரைச் சொல்லி —அந்த விவாதத்தில் நான் கலந்துகொள்கிறேன். 7–30 மணி இருக்கும். என்னுடன் விவாதத்தில் கலந்து கொண்டவர் விடுதலை சிறுத்தைகள் கட்சி M.P. அண்ணன் திரு. ரவிக்குமார், திராவிட இயக்கத்தின் பேச்சாளர் திரு. நாஞ்சில் சம்பத், அந்தத் தொகுப்பாளர் Sir, ஒரு break என்றார். நானும்கூட வேறு ஏதோ break வருகிறதோ என்று silent ஆக உட்கார்ந்திருந்தேன். நான் உட்கார்ந்து இருந்த படத்தை அப்படியேபோட்டு, "தமிழக அரசின் தலைமைக் கொறடா கோவி. செழியன்" என்று அறிவித்தார்கள். நான் என்ன மனநிலையில் இருந்திருப்பேன்? (மேசையைத் தட்டும் ஒலி) நான் என்ன எண்ணிக் கொண்டிருந்திருப்பேன்? நான் நினைத்தேன் ஏழு கலைஞருக்கு நிகரான தலைவர் எங்கள் தளபதி என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) என் தலைவனே, என் ஆயுட்காலம் முழுவதும், என் சந்ததியும், என் குடும்பமும், என்றைக்கும் கோபாலபுரத்தின் படிக்கட்டுகளில் உனக்கும், உன்னைத் தொடர்ந்து தலைவனாக ஏற்றிருக்கிற அண்ணன் உதயநிதியின் பின்னால் பயணப்படுவோம். பயணப்படுவோம், வாழ்த்துங்கள் இந்த அரசை என்று சொல்லி இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

***திரு. ச. அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயோத்திதாசப் பண்டிதர் தொடங்கி, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், நமது அருமை தளபதி என வழி, வழியாய் திராவிடத்தை வளர்த்தெடுக்கும் பெருமை கொண்டது நமது தமிழ் பூமி. அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்த நான்கும் ஆள்பவருக்குத் தேவை என்றார் திருவள்ளுவர்.

அவர் சொன்னதுபோல் 100—க்கு 100 சதவிகிதம் நம்முடைய தமிழக முதல்வருக்குப் பொருந்தும். தமிழக முதல்வரைப் பற்றி இன்னும் சொல்ல ஆசைதான். ஆனால், முதல்வர் கண்டிப்பு என்னை எச்சரிக்கிறது. இயல்பான தோற்றம், எளிமையான பேச்சு, இனிமையான குணம், கூர்மையான சிந்தனை, வலிமையான உழைப்பு இவையெல்லாம் யாருக்குச் சொந்தம்? ஓடோடி உழைத்து, ஊரெல்லாம் சென்று, உன்னத கருத்துகளைக் கூறி, நமது அருமை கழக வேட்பாளர்களை வெற்றிப் பெற செய்த அந்த இளம் சூரியன், குளிர் மேகம், நம் இளைஞரணித் தலைவர், நம்முடைய உதயநிதி என்றால் வேறில்லை என்பது அனைத்துத் தரப்பு மக்களும் ஒருமனதாக ஏற்றுக்கொண்ட ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் அவருக்கு என் நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

சட்டமன்றத்தில் பொன்விழா கண்டுள்ள அவை முன்னவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையான உள்ளம், ஓய்வில்லாத உழைப்பு, உடனடியாக செயல் புரியும் ஊக்கம், உதவி செய்ய ஓடோடி வரும் வேகம் இவற்றுக்கெல்லாம் சொந்தக்காரர் எங்கள் மாவட்டச் செயலாளர் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள். அவர்களது அரும்பெரும் உழைப்புக்கும், எங்கள் தொகுதி வெற்றிக்காக, உறுதுணையாக இருந்த அவருக்கும் என் உள்ளார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன் மற்றும் அமைச்சர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் மருத்துவமனையில் இருந்தபோது, எனக்காக வீதி, வீதியாகச் சென்று வாக்குகளைச் சேகரித்த தென் சென்னை பாராளுமன்ற உறுப்பினர் அக்கா தமிழச்சி தங்க பாண்டியன் அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாநில கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழகத்தின் செயலாளர்கள், ஒன்றிய கழகச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், கூட்டணிக் கட்சியின் தலைவர்கள் மற்றும் தோழர்கள், குடியிருப்பு நலச் சங்க நிர்வாகிகள், தொகுதி முழுவதும் உள்ள என் உற்றார் உறவினர்கள் மற்றும் விலை மதிக்க முடியாத வாக்குகள் என்றால் அதற்கு என் தொகுதி மக்களை முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

என்னிடத்தில் எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் மீண்டும் பணியாற்றுவதற்கு எனக்கு அங்கீகாரம் அளித்த சோழிங்கநல்லூர் தொகுதியினுடைய பகுதி மக்கள் – எனக்குத் தொடர்ந்து கூட்டுறவுச் சங்க இயக்குநராக, பேரூராட்சியின் தலைவராக, சென்னை மாநகராட்சியின் உறுப்பினராக மற்றும் சட்டமன்ற உறுப்பினராக எனக்கு இரண்டாவது முறையாக வாக்களித்து 35,405 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கு இந்த நேரத்தில் எனது மனமார்ந்த நன்றியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையில் போக்குவரத்துத் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை சம்பந்தமாகப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், சட்டப் பேரவை தலைவராகிய உங்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் மற்றும் அரசுக் கொறடா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பத் துறையில் 1997–ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதன்முறையாக தரமணியில் Tidel Park–கினைக் கொண்டுவந்து, மேலும் அதனைத் தொடர்ந்து SIPCOT, ELCOT மூலமாக Special Economic Zone – SEZ – களை உருவாக்கி, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களையும், பல அடுக்குமாடிக் குடியிருப்புகளையும், வணிக வளாகங்களையும் கொண்டுவந்து, எங்கள் பகுதியில் ஒருவழிச் சாலையாக இருந்ததை, இன்றைக்கு OMR சாலையை விரிவுபடுத்தி, மேம்படுத்தி இந்தச் சாலையை அழகுமிகு சாலையாக மாற்றி, இங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்வாதார மேம்பாட்டை உயர்த்தி இங்குள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிட வித்திட்டவர் என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். எங்கள் தொகுதியில் பல இலட்சாதிபதிகளெல்லாம் இன்றைக்கு கோடீஸ்வரர்களாக ஆகியிருக்கிறார்கள் என்றால், அது தலைவர் கலைஞர் அவர்களால்தான் என்பதை என் தொகுதி மக்கள் மறக்கமாட்டார்கள். இந்த நேரத்தில் அவர்கள் சார்பாக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் காகிதம் இல்லாத மானியக் கோரிக்கை கூட்டத் தொடரை நடத்திக்காட்டியவர்; இந்தியாவிலேயே தமிழகம்

முன்மாதிரி மாநிலமாகத் திகழ்கிறது. தமிழக அரசு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் 100 சதவிகிதம் பணியாளர்களுடன் துவங்கலாம் என்று அனுமதி வழங்கியும், இன்றுவரை ஒரு சில நிறுவனங்களைத் தவிர மற்ற நிறுவனங்கள் திறக்கப்படாததனால் அந்தப் பகுதியில் வாழும் பல்வேறு தொழிலாளர்கள், ஏழை எளிய பணியாளர்கள் இன்றைக்கு மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். அங்கு வசிக்கின்றவர்கள் வாடகைதாரர்கள், குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் கட்டுவதற்காக வங்கிக் கடன்களைப் பெற்று அதனைத் திரும்ப செலுத்துவதற்கு முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. இதனால் அனைத்து நிறுவனங்களையும் உடனடியாகத் திறப்பதற்கு அறிவுறுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், தமிழகம் முழுவதும் துவங்கப்பட்டுள்ள நிறுவனங்களில் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு குறைவாக வழங்கப்படுகிறது. மற்ற மாநிலத்தவர்கள்தான் அங்கு அதிகமாகப் பணிகள் செய்கிறார்கள். எனவே, இளைஞர்களின் நலனைக் கருத்தில்கொண்டு 80 சதவிகிதம் தமிழக இளைஞர்களுக்கு கட்டாய வேலைவாய்ப்பை வழங்க சட்டம் இயற்ற வேண்டும், அதில் உள்ளூர் இளைஞர்களுக்கு 40 சதவிகிதம் வேலைவாய்ப்பு வழங்குவதை உறுதி செய்வதைக் கட்டாயமாக்க சட்டம் இயற்ற வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல் தொழில்நுட்பத் துறை இன்றைக்கு அதிநவீனமாக வளர்ந்துவருகின்ற நிலையில் அது மிகப் பெரிய பங்களிப்பை ஆற்றுகின்றது. தகவல் தொழில்நுட்பத் துறையில் சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் உள்ளிட்ட அனைத்து சான்றிதழ்களும் இ-சேவை மையங்கள் மூலமாகவே பெறும் திட்டத்தைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு வீட்டிலிருந்தபடியே அந்தச் சான்றிதழ்களைப் பதிவு செய்து அவற்றைப் பெறலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். அதை உடனடியாக நடைமுறைப்படுத்தி, அதனை மக்களுக்குத் தெரிகின்ற அளவு உடனடியாகச் செயல்படுத்திட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று, பள்ளி மாணவர்களுக்கு அதிகப்படியான online வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அந்த online வகுப்புகளுக்கு இன்றைக்கு மிகப் பெரிய அளவிற்கு தொலைத்தொடர்பு

தேவைப்படுகின்றது. அந்த வகையில் அலைபேசிகள், செல்போன்கள், டவர்கள் எல்லாம் சரியாகச் செயல்படாததால், செல்போன் டவர்களை அதிகப்படியாக அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். சோழிங்கநல்லூரில் உள்ள ELCOT நிறுவனத்தின் மூலமாக தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கப்பட்டு, இன்னும் கட்டடங்கள் கட்டாமல் காலியாக உள்ள பல ஏக்கர் இடங்களை இன்றைக்கு அந்தந்த துறை நிறுவனங்களுக்கு அமைத்துக்கொடுத்து அதன் மூலமாக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–35

போக்குவரத்துத் துறை: 18–11–2011 அன்றும் 29–1–2012 அன்றும் இரண்டு முறை கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பேருந்து கட்டணங்களை உயர்த்தி பொது மக்களுக்கு இன்னல்களை உருவாக்கினார்கள். ஆனால், தற்போது மகளிர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்கு இலவச பயண சலுகையை அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கின்றார்கள். இது தமிழக மக்களுடைய நலன் காக்கும் ஆட்சியாக, அதிலும் பெண்கள் 60 சதவிகிதத்திற்கும்மேல் இன்றைக்கு பயணிக்கிறார்கள் என்று சொன்னால், அன்றாடம் அவதிப்படுகின்ற நிலையிலிருந்த மக்களை மனநிறைவு பெற்றிருக்கின்றவர்களாக்கிய தலைவர். ஒவ்வொரு மகளிரும் நாளொன்றுக்கு குறைந்தது சுமார் 60 ரூபாய் என்றால்கூட, மாதத்திற்கு ரூ.1800/–, ஒரு வருடத்திற்கு ரூ.21,600/–, 5 ஆண்டுகளுக்கு ரூ.1,08,000/–வரை ஏழையெளிய மக்கள் சேமிப்பதற்குண்டான திட்டத்தைக் கொண்டு வந்து, நடைமுறைப்படுத்தியிருக்கின்ற மக்களின் மனநிறைவைப் பெற்றிருக்கின்ற ஒப்பற்ற தலைவர், தமிழகத்தின் முதல்வராக இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துத் தொழிலாளர்கள் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 2.33 சதவிகிதத்தை போனஸாகக் கேட்டுப் போராடினார்கள். தலைவர் கலைஞர் ஆட்சிக்கு வந்ததும், போனஸாக 20 சதவிகிதத்தை வழங்கியது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி என்பதை நாம் மறந்துவிட முடியாது.

ஆசியாவிலேயே மிகப் பெரிய ஒருங்கிணைந்த புறநகர் பேருந்து நிலையத்தை கோயம்பேட்டில் கட்டி சென்னைக்கு பெருமை சேர்த்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். கடந்த 1996–2001 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, இலவச bus pass–ஐக் கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் பேருந்துகள் இயக்கிய தூரம் நாளொன்றுக்கு 87.59 இலட்சம் கிலோ மீட்டராக இருந்ததை, அ.தி.மு.க. ஆட்சியின் இறுதியில் 85.23 இலட்சம் கிலோ மீட்டராகக் குறைத்ததைத்தான் அந்த ஆட்சியின் சாதனையாக் நாம் எடுத்துக்கொள்ள முடியும்.

தமிழகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1–6–1972 ஆம் ஆண்டு போக்குவரத்துத் துறை அரசுடைமை ஆக்கப்பட்டது என்பது பெருமைக்குரியது. அரசுப் பேருந்துகளில் வைக்கப்பட்டிருந்த தமிழ்ப் புலவர் திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் மற்றும் அதன் விளக்கத்தை முந்தைய அ.தி.மு.க. ஆட்சி அழித்துவிட்டது. ஆனால், தற்போது 20,557 பேருந்துகளில் திருக்குறள் மற்றும் விளக்க உரையுடன்கூடிய பலகையைப் பொருத்திய பெருமை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக 210 மினி பேருந்துகள் இயங்கிக் கொண்டிருந்தன. அது 66 ஆகக் குறைக்கப்பட்டு, 144 பேருந்துகளை இயக்காமல் விட்டுச் சென்ற முந்தைய அ.தி.மு.க. ஆட்சியை நாம் நினைவுகூர வேண்டும். போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக OMR சாலை, ECR சாலை மற்ற சாலைகளில் அழகு மிளிரச் சென்றுகொண்டிருந்த AC பேருந்துகளை இன்றைக்கு காணவில்லை என்று மக்கள் தேடிக்கொண்டிருக்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் அந்த AC பேருந்துகள் நிச்சயம் நம்முடைய சாலைகளிலும் அழகுமிளிர ஓடும் என்ற நம்பிக்கையோடு மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள்.

சோழிங்கநல்லூர் தொகுதியில் உள்ள கோரிக்கைகள்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் பெரும்பாக்கத்தில் இன்றைக்கு 25,000–க்குமேல் குடியிருப்புகள்

கட்டப்பட்டு குடியமர்த்தப்பட்டு இருக்கின்றது. ஆனாலும், அந்தக் குடியிருப்புகள் எல்லாம் கட்டப்பட்டு 9 ஆண்டுக்காலம், 10 ஆண்டுக்காலம்தான் ஆகியிருக்கும். இன்றைக்கு பல கோடி ரூபாய் செலவழிக்க வேண்டிய சூழ்நிலையில் அந்தக் குடியிருப்புகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. கையில் வைத்து பூசுகின்றமாதிரி அவற்றில் பூச்சுவேலைகள் இருக்கின்றன. மேலே இருக்கின்ற பைப்புகளிலிருந்து, குடியிருப்பின் மேலே உள்ள 7-வது தளமெல்லாம் இன்றைக்கு மழையினால், மழைத்தண்ணீர் கசிகின்ற வகையில், மோசமான ஒரு சூழ்நிலையில் அந்தக் குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன.

அண்ணன் மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தின் அமைச்சராகப் பொறுப்பேற்றதும் அந்தப் பகுதியை ஆய்வு செய்து, அந்தப் பகுதியில் உள்ள ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஏறி இறங்கி, அந்தப் பகுதியில் உள்ள அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் பராமரிப்புப் பணிகளைச் செய்கின்ற வேகமான ஓர் ஆட்சியாகத்தான் தலைவர் தளபதியின் ஆட்சி இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆகவே, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் எல்லாம் மிகவும் சந்தோஷத்தோடு, அதைப் பாராட்டுகின்ற வகையில், போர்க்கால அடிப்படையில் அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆனால், 7, 8 வருடங்களாகக் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு எல்லாம் மின்தூக்கிகள்கூட இயங்காத ஒரு சூழலைத்தான் முந்தைய ஆட்சியில் உருவாக்கிச் சென்றார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். அங்கு கட்டியிருக்கின்ற 5,000–க்கும் மேற்பட்ட குடியிருப்புகளின் தரத்தை ஆய்வு செய்ய வேண்டும். அங்கு கட்டுகின்ற குடியிருப்புகளை மிகவும் தெளிவான முறையில் நாம் கட்டி முடித்தால்தான் மீண்டும் அதற்கான இதர செலவுகள் செய்யாமல் இருக்க முடியும். அதற்கு, அங்கு கட்டுகின்ற குடியிருப்புகளின் தரத்தை ஆய்வு செய்ய அதற்கான ஒரு குழுவை அமைத்து அந்தப் பணிகளைச் செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட்ட பட்டாக்கள் இன்னும் கிராமக் கணக்குகளில் ஏற்றப்படாமலே உள்ளன. அவற்றை உடனடியாக ஏற்ற வேண்டும்.

[திரு. ச. அரவிந்த் ரமேஷ்] [*2021 செப்டம்பர் 8 பிற்பகல் 6–40*]

சென்னையை ஒட்டினாற்போல் இருக்கின்ற மேய்க்கால் புறம்போக்கு இடங்களெல்லாம் அரசு இடங்களாக இருக்கின்றன. இன்றைக்கு ஆடு, மாடுகள் எதுவும் இல்லை. அதற்கான அரசு இடங்கள் வேறெதற்கும் பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது. அதனால், மேய்க்கால் இடம் என்பதால் அங்கே வீடு கட்டி குடியிருப்பவர்களுக்கு சட்டத்தைத் தளர்த்தி, பயன்படாமல் இருக்கின்ற அந்த மேய்க்கால் இடங்களையெல்லாம் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதியிலுள்ள 7 ஊராட்சிகளில் அரசு இ–சேவை மையங்களை உருவாக்கிட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, பக்கிங்காம் கால்வாய், தலைவர் தளபதி அவர்கள் துணை முதல்வராக இருந்தபோதுதான் அந்தக் கால்வாய்களெல்லாம் ஆழப்படுத்தி, அகலப்படுத்தி தூர் வாரப்பட்டன. கடந்த 10 ஆண்டுக்காலமாக எந்தப் பணியும் நடைபெறவில்லை. சோழிங்கநல்லூரை மையமாக வைத்து இன்றைக்கு கோவளத்திலிருந்து SRP Tools வரைக்கும் படகுக் குழாம் அமைத்து, சுற்றுலாத் தலமாக அதை அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, மேடவாக்கம் பெண்கள் பள்ளியில் பணம் கட்டி கிட்டத்தட்ட 6 முதல் 8 வருடங்களாகக் காத்திருக்கிறார்கள். பள்ளியில் கட்டமைப்புகள், கட்டடங்கள், அனைத்தும் கட்டப்பட்டு இன்றைக்கு தயாராக இருக்கின்றன. அதைப் பிரித்து வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

மழைக்காலம் வந்தால் துரைப்பாக்கம், சோழிங்கநல்லூர், மடிப்பாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, ஜல்லடியான்பேட்டை மற்றும் செம்மஞ்சேரி போன்ற பகுதிகளெல்லாம் மழை வெள்ளத்தால் சூழ்ந்துவிடுகின்றன என்று பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் பெரிய அளவில் செய்திகள் வருகின்றன. அதை நாம் தவிர்க்கின்ற வகையில் துரைப்பாக்கம் radial சாலையில் ஒரு மழைநீர்க் கால்வாயும், Sholinganallur to Buckingham Canal–க்கு ஒரு மழைநீர்க் கால்வாயும், அதேபோன்று, Nookampalayam to Buckingham Canal–க்கு ஒரு மழைநீர்க்

கால்வாயும் அமைத்தால் மழைக்காலங்களில் இந்த மழைத் தண்ணீரால் பொது மக்கள் அவதிக்கு ஆளாகாமல் அதைப் பாதுகாத்துக்கொள்ளலாம் என்கின்ற ஒரு நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சோழிங்கநல்லூர் பகுதிகளை உள்ளடக்கிய பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் பள்ளிக்கரணை சதுப்பு நிலம் இருந்து கொண்டிருக்கின்றது. அந்தச் சதுப்பு நிலத்தைப் பேணிப் பாதுகாக்கின்ற வகையில், அதை ஒரு சுற்றுலாத் தலமாக, பறவைகளுடைய சரணாலயமாக மாற்றித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பெருங்குடி, அந்தப் பகுதியைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளுக்கெல்லாம் மிகப் பெரிய அளவில் குடிநீர் ஆதாரமாக விளங்கக்கூடிய அந்தப் பகுதி, கொட்டப்படுகின்ற குப்பைகளால் மிகப் பெரிய அளவில் துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கின்றது. ஆகவே, அந்தக் குப்பைகளை மறுசுழற்சி செய்து அந்தக் குப்பைக் கிடங்கை மேம்படுத்துவதற்காக நிதி ஒதுக்கிய அந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நீண்ட நெடு நாட்களாகப் போராடி, 10 ஆண்டுக்காலமாக பல போராட்டங்களை நடத்தி அதன் மூலமாக தீர்வு காணாதிருந்த OMR சாலை சுங்கச்சாவடிகளை அகற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து, அந்தச் சுங்கச்சாவடிகளில் வரியை நிறுத்தியிருப்பது அந்தத் தொகுதியினுடைய மக்களால் மிகப்பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. அந்தச் சாலையைப் பயன்படுத்துகிற அனைவரும் மகிழ்ச்சியாக அந்தச் சாலையைக் கடந்துசென்று கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு அண்ணன் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, சோழிங்கநல்லூர் தொகுதியில் கடலோரப் பகுதிகளில் கடல் சீற்றங்கள் ஏற்படும்போது, பாதிக்கப்படாமல் இருக்க தடுப்புச் சுவர்கள் அமைக்க வேண்டும். சோழிங்கநல்லூர் தொகுதியிலே நீண்ட நெடுந்தூரம் கடற்கரையின் ஓரமாக

இருப்பதனால், மீனவர்கள் குப்பம் பகுதிகளில் உள்ள மீனவ சமுதாய மக்களுக்கு வலை பின்னுவதற்கு கூடமும் அதிநவீன மீன் அங்காடியும் உடனடியாக உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், நீண்ட நெடுங்காலமாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் வீடுகள் கட்டியிருப்பவர்களுக்கு இன்னமும் அந்த விலக்கு தராமல் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். எல்லாம் 3 சென்ட், 5 சென்ட், 7 சென்ட் போன்ற வீடுகள்தான் கட்டி அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நலன் கருதி வீட்டு வசதித் துறையின் மூலமாக அவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன்.

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக உள்ளகரம் survey *எண் 90, மடிப்பாக்கம், மயிலை பாலாஜி நகர், கொட்டிவாக்கம் எம்.ஜி.ஆர். நகர், கோவிலம்பாக்கம் சத்யா நகர் போன்ற பகுதிகளில் நிலங்களைக் கையகப்படுத்தி எடுத்தார்கள். அதற்கெல்லாம் பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நீண்ட நெடுநாட்களாக கந்தன்சாவடி, கல்லுக்குட்டை பகுதியில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருக்கின்றார்கள். அதேபோல, ஈஞ்சம்பாக்கத்தில் பெத்தேல் நகர் என்ற பகுதியில் நீண்ட நெடுநாட்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு பட்டாக்களை வழங்கி அவர்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும். இன்றைக்கு சோழிங்கநல்லூர் தொகுதி முழுவதும் இதே பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. அவர்களின் வாழ்வில் ஒளியேற்றுகின்றவகையில் கொட்டிவாக்கம், கந்தன்சாவடி, பாலவாக்கம், பெருங்குடி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை, ஜல்லடியான்பேட்டை, நீலாங்கரை, ஒக்கியம் துரைப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், சோழிங்கநல்லூர், உத்தண்டி, செம்மஞ்சேரி, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், வேங்கைவாசல், பெரும்பாக்கம், சித்தாலபாக்கம்,*

ஒட்டியம்பாக்கம் போன்ற பகுதிகளில் நீண்ட நெடுநாட்களாக வாழ்ந்து வருபவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகள் இருந்தால் எழுதிக் கொடுத்து விடுங்கள்.

பிற்பகல் 6–45

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: முடித்துவிடுகிறேன். அதேபோன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். செம்மஞ்சேரியில் தனியார் கல்லூரியின் ஆக்கிரமிப்பில் இருந்த தமிழக அரசுக்குச் சொந்தமான சுமார் ரூ.500 கோடி மதிப்பிலான 90 ஏக்கர் நிலத்தை நீதிமன்றம் அரசுக்குச் சொந்தம் என்று உத்தரவிட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும். நீண்ட நெடிய நாட்களாக, தாம்பரம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. S.R. இராஜா அவர்கள்கூட பல முறை இந்தச் சட்டமன்றத்திலும், பல கூட்டங்களின் வாயிலாகவும் இதை எடுத்துரைத்திருக்கின்றார். அதற்கு இன்றைக்கு தலைவர் தளபதி ஆட்சியில் விடிவு காலம் பிறந்திருக்கின்றது. அதை எடுத்து, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் பயன்படுத்துகின்ற வகையில் ஓர் ஒருங்கிணைந்த அரசு வளாகமாக உருவாக்கி, அதில் உரிமையியல் நீதிமன்றம், உணவுப் பொருள் வழங்கல் துணை ஆணையாளர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் ஏனைய அரசு அலுவலகங்களை உருவாக்கி, மேலும் இளைஞர்களுக்கு உள் விளையாட்டரங்கம் மற்றும் பொறியியல் கல்லூரியைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே சுற்றியிருக்கின்ற பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்கின்றன. எனவே, அந்த இடத்தில் பன்னோக்கு அரசு மருத்துவமனையையும் கொண்டு வந்து, யூனியன் பிரதேசத்திற்கு இணையாக இருக்கின்ற அந்த சோழிங்கநல்லூர் தொகுதி, அதிகப்படியான வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக இருப்பதால், அத்தொகுதிக்கு இதையெல்லாம் நீங்கள் செய்து தர வேண்டுமென்கின்ற நிலையில், இந்த 90 ஏக்கர் பொது இடத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உரையாற்றியது போதும். நன்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதிக் கோரிக்கைகள் இருந்தது என்றால் கொடுங்கள். கடைசியில், நன்றிமட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) Paper–ஐ காணவில்லை என்றால், நன்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: தொகுதி சார்ந்த 83 கோரிக்கைகளின் பட்டியல் இருக்கிறது. அதை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவைக் குறிப்பில் பதிவு செய்து, அந்தப் பணிகளையெல்லாம் முடித்துக் கொடுக்க வேண்டும். தமிழகத்தின் மிகப் பெரிய தொகுதியான சோழிங்கநல்லூர் தொகுதியை மிகப் பெரிய அளவில் வளர்ச்சிப் பாதைக்கு எடுத்துச் சென்றவர் கலைஞர் அவர்கள். அந்த வகையில், தொகுதியினுடைய வாக்காளர் மக்களும் எந்தவிதமான பிரதிபலனும் எதிர்பார்க்காமல், வாக்களித்து, இப்போது இரண்டாவது முறையாக என்னைத் தேர்வு செய்திருக்கிறார்கள். அந்த வகையில் தலைவர் தளபதி அவர்களின் ஆட்சிக்கு உறுதுணையாக சோழிங்கநல்லூர் தொகுதி இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, எனக்கு உரையாற்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 200–வது வட்டம், செம்மஞ்சேரி சுனாமி நகர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புப் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் இயங்கி வருகிறது. அங்கு இயங்கும் மோட்டார்கள் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன. எனவே, அங்கு 24 மணி நேரமும் இயங்குகின்ற வகையில் ஆப்பரேட்டர்கள் கூடுதல் எண்ணிக்கையில் நியமிக்க வேண்டும். அந்த இடத்தில் கூடுதலாக 3,002 மோட்டார்கள் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 200–வது வட்டம், செம்மஞ்சேரி, சுனாமி நகர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புப் பகுதியில் பூங்காக்களுக்கு என ஒதுக்கப்பட்ட இடங்கள் பெருநகர சென்னை

மாநகராட்சியிடம் ஒப்படைக்கபடாமல் உள்ளதை, ஒப்படைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 200–வது வட்டம், செம்மஞ்சேரி, சுனாமி நகர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புப் பகுதியில் 6,764 குடியிருப்புகளுக்கும், ஒரு வீட்டிற்கு 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டியை (Sintex tank) மேல்தளத்தில் வைத்து குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 200–வது வட்டம், செம்மஞ்சேரி, சுனாமி நகர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புப் பகுதியில் 6,764 குடியிருப்புகள் உள்ளன. அங்கு கூடுதலாக இடம் ஒதுக்கி மயான பூமியைப் பெரியதாக அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

புனித தோமையார் மலை ஒன்றியத்திற்கு உட்பட்ட பெரும்பாக்கம் ஊராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் 20,375 குடியிருப்புகள் கட்டப்பட்டு பொது மக்கள் குடியமர்த்தப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள். எனவே அந்தப் பகுதியில் வணிக வளாகங்கள், விளையாட்டுத் திடல், பூங்கா, பொது மருத்துவமனை மற்றும் சமுதாய நலக்கூடம் ஆகியவை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரும்பாக்கம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில், மரணமடைந்தவர்களை மயானத்திற்கு எடுத்துச் செல்வதற்கான சாலைகள் மற்றும் மின் விளக்கு வசதி இல்லாத நிலை உள்ளது. அந்த வசதிகளைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செம்மஞ்சேரி, சுனாமி நகர், பெரும்பாக்கம் பகுதிகளுக்கு நாள்தோறும் 70 இலட்சம் லிட்டர் குடிநீர் தேவைப்படுகின்றது. ஆனால், அந்தக் குடிநீர்க் குழாய்களில் 24 மணி நேரம் குடிநீர் வழங்கினாலும்கூட 40 இலட்சம் லிட்டர் குடிநீர் மட்டுமே வழங்க முடியும். அதனால் கூடுதலாக நீரைச் சேமிக்கின்ற வகையில் கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15, வார்டு எண் 195, ஒக்கியம் துரைப்பாக்கத்தில் உள்ளடங்கிய கண்ணகி நகர், எழில் நகர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் பகுதியில், 8,840 குழாய்கள் பல இடங்களில் உடைந்து, குடியிருப்பைச் சுற்றி கழிவுநீர் தேங்குகின்ற நிலை உள்ளது. ஆகவே, இவை அனைத்தையும் உடனடியாக ஆய்வு செய்து பழுதடைந்த கட்டடங்களைச் சரி செய்து வண்ணம் பூசித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கண்ணகி நகர் மற்றும் எழில் நகரில் உள்ள சமுதாய நலக் கூடங்கள் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்கீழ் இயங்கி வருகின்றன. அவற்றை பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைத்து, அந்தச் சமுதாய நலக்கூடங்களை பொது மக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாகக் கொண்டுவர வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 195–வது வட்டம் கண்ணகி நகர், எழில் நகர், சுனாமி நகர் பகுதியில் பெரிய அளவில் ஒரு புதிய சமுதாய நலக்கூடம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 195–வது வட்டம் கண்ணகி நகர், எழில் நகர், சுனாமி நகர் ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் பூங்காக்களுக்கு என ஒதுக்கப்பட்ட இடங்களை பெருநகர சென்னை மாநகராட்சியுடன் ஒப்படைக்காமல் உள்ளதை ஒப்படைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கண்ணகி நகர் பகுதியிலுள்ள பேருந்து நிறுத்தத்தில் சிமென்ட் தரைத்தளம் மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, பொது மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு அந்தப் பேருந்து நிலையத்தில் சிமென்ட் தரைத்தளம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 195–வது வட்டம், எழில் நகர் மற்றும் சுனாமி நகர் குடியிருப்புப் பகுதிகளில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த் தேக்கத் தொட்டிதான் உள்ளது. நாள் ஒன்றுக்கு 40 இலட்சம் லிட்டர் குடிநீர் தேவைப்படுகின்ற நிலை உள்ளது. புதியதாக எழில் நகர் பகுதிக்கென நெம்மேலி குடிநீர்

வழங்குவதற்கு OMR சாலையிலிருந்து குடிநீர்க் குழாய் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம் பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலைய மேற்கூரை மற்றும் தரைத்தளத்தை சீரமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியத்தில் சித்தாலப்பாக்கம் ஊராட்சியில் அமைந்துள்ள கன்னிக்கோயில் கால்வாயில் தடுப்புச் சுவர் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி வார்டுகளிலும், புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ளடங்கிய ஊராட்சிகளிலும் சமூக நலக்கூடம் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் சேரும் குப்பைகளை அகற்றுவதற்கு கூடுதலாக ஜே.சி.பி மற்றும் லாரிகள் வாங்கவும், மேலும் கூடுதலாக ஊழியர்களை நியமித்து, ஒட்டுமொத்த குப்பைகளையும் மக்கும் குப்பைகள், மக்காதக் குப்பைகள் என தரம் பிரித்து உரமாக மறுசுழற்சி முறை செய்வதற்கான இடம் அமைக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், பெரும்பாக்கம், வேங்கைவாசல், சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம் ஆகிய ஊராட்சிகளில் அடிப்படை வசதிகளான சாலை வசதி, தெரு விளக்கு மற்றும் குடிநீர் வசதி போன்றவற்றை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் தனித்தனியாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ள ஏழு ஊராட்சிகளும் சென்னைக்கு

அருகில் உள்ளதாலும் பொது மக்கள் அதிக அளவில், அதாவது 1.8 இலட்சம் வாக்காளர்களுக்கும் மேல் உள்ளதாலும், பல அடுக்குமாடி குடியிருப்புப் பகுதியாக இருப்பதாலும், அந்த ஊராட்சிகள் அனைத்திற்கும் அடிப்படை வசதியான பாதாள சாக்கடைத் திட்டம் (UGSS), குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் உள்ளடங்கிய சமூக நலக்கூடங்களில் சுப நிகழ்ச்சிகள் நடத்திவரும் பொது மக்களுக்குத் தேவையான சமையல் பாத்திரங்கள், டேபிள், சேர் உள்ளிட்ட பொருட்களை அரசு வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிப் பகுதிகளில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள பணியாளர்கள் குறைவாக உள்ளதால் குப்பைகளை அகற்ற முடியாமல் அந்தப் பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது. எனவே, அந்த ஊராட்சிப் பகுதிகளில் கூடுதல் அளவில் துப்புரவுப் பணியாளர்கள், டிராக்டர், இ–கார்ட் காம்பாக்ட் வாகனம், டாட்டா ஏஸ் வாகனம் மற்றும் மினி லாரி தேவைப்படுவதால், அவற்றை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட சோழிங்கநல்லூரில் உள்ள கூட்டுறவு வங்கி இதுநாள் வரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதற்கு சொந்தக் கட்டடமாகக் கட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதி தமிழகத்திலேயே மிகப்பெரிய சட்டமன்றத் தொகுதியாகும். இந்தத் தொகுதி சுமார் 40 இலட்சம் மக்கள் தொகையையும், 7 இலட்சம் வாக்காளர்களையும் கொண்ட தொகுதியாக உள்ளது. இந்தப் பகுதி மக்கள் நீதிமன்றம் செல்ல வேண்டுமென்றால் ஆலந்தூர் நீதிமன்றத்திற்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. அதனால் எங்கள் தொகுதியில் தனியாக நீதிமன்றம் அமைத்துத்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு எண் 187, மடிப்பாக்கம்

கார்த்திகேயபுரம் ஏரியை மேம்படுத்தி, சீரமைத்து படகுக் குழாம் அமைக்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பக்கிங்ஹாம் கால்வாயைத் தூர்வாரி படகுக் குழாம் அமைத்து மேம்படுத்தி, சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம், நன்மங்கலம் ஊராட்சியில் உள்ளடங்கிய ஏரியை மேம்படுத்தி சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் இ–சேவை மையங்களை மேம்படுத்தி கூடுதலாக ஆட்கள் மற்றும் கணினிகள் ஆகியவற்றை கொண்டுவர வேண்டும். மேலும் புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகள் மிகப் பெரிய ஊராட்சிகளாகவும், சென்னை மாநகராட்சியுடன் ஒட்டிய ஊராட்சிப் பகுதியாக இருந்தும் இதுநாள்வரை அரசு இ–சேவை மையம் இல்லாத நிலை உள்ளது. அதனால் அந்தப் பகுதியில் அரசு இ–சேவை மையங்களைக் கொண்டு வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ஆங்கில வழிக் கல்வி துவங்க அரசு முன்வர வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி வார்டுகளிலும், புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ளடங்கிய ஊராட்சிகளிலும் நூலகம் அமைக்க இந்த அரசு முன்வர வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு போதுமான இடவசதி இல்லாத காரணத்தால் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மண்டலம் 14, வார்டு எண் 191 ஜல்லடையன்பேட்டையில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட மேடவாக்கத்தில் அரசினர் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இது ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலரும் பயிலும் பள்ளியாக உள்ளது. அந்தப் பள்ளியை பெண்களுக்கான தனிப் பள்ளியாக மாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் முதல் பெரும்பாக்கம் வரை சாலையை அகலபடுத்தும் பணி நடைபெறுகிறது. மேற்கொண்டு குளோபல் மருத்துவமனை முதல் மேடவாக்கம் வரை சாலையை அகலப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் மற்றும் மேடவாக்கம் சாலையில் உள்ள செம்மொழிப் பூங்கா அருகில் உள்ள பாலத்தை அகலப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேடவாக்கம் சோழிங்கநல்லூர் இணைப்புச் சாலை வழியாக K.K. சாலையில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாய் வரை மழைநீர் செல்வதற்கு பெரிய மழைநீர் கால்வாய் அமைக்க வேண்டுமெனக் கேட்டுகொள்கிறேன்.

பள்ளிக்கரணை காமாட்சி மருத்துவமனை முதல் துரைப்பாக்கம் 200 அடி ரேடியல் சாலை வழியாக பக்கிங்ஹாம் கால்வாய் வரை பெரிய மழைநீர் கால்வாய் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட தாழம்பூர், செம்மஞ்சேரி, பெரும்பாக்கம், சோழிங்கநல்லூர் மற்றும் மேடவாக்கம் சாலை வழியாக ஒக்கியம் மடுவுக்குச் செல்லும் கால்வாயைத் தூர்வார வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மண்டலம் 15, வார்டு 195–ல் உள்ளடங்கிய கண்ணகி நகர் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் 15,656 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு வாழ்ந்து வருகின்றன. அந்தப் பகுதியில் குடிநீர்க் குழாய்கள் அமைத்து நீண்ட நாட்களாவதால் குடிநீர் மஞ்சள் நிறமாகவும், கழிவுநீர் கலந்தும் வருகின்றது, ஆகவே, அந்தப் பகுதி முழுவதும் புதிய குடிநீர்க் குழாய்கள் அமைத்து சுத்தமான குடிநீர் வழங்கும் நிலையை உருவாக்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் கீழ்க்கட்டளைக் கால்வாயில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத்தடுப்புச் சுவர் அமைக்கும் பணி கீழ்ப்புறத்தில் மட்டும் நடைபெற்று வருகிறது. இப்பணியை முழுமையாக கீழ்க்கட்டளை ஏரி கலங்கள் வரை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள வேங்கைவாசல் பெரிய ஏரியின் உபரிநீர் சித்தேரியை அடைந்து பெரும்பாக்கம் வழியாக பள்ளிக்கரணை கழுவெளியினைச் சென்றடைகிறது. வேங்கைவாசல் சித்தேரியிலிருந்து பெரும்பாக்கம் செல்லும் உபரிநீர்க் கால்வாயைத் தூர்வாரி மேம்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் மாநகர போக்குவரத்து கழகத்தில் மாதாந்திர பேருந்து பயண அட்டையும், 60 வயத்திற்கு மேற்பட்டவர்கள் இலவச பயண அட்டையும் பெறுவதற்கு சுமார் 16 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவான்மியூர் பேருந்து நிலையம் செல்ல வேண்டியுள்ளது. அதனால் பொது மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், பெரும்பாக்கம் அல்லது கண்ணகி நகர் பகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தில் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும், மேலும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியப் பகுதியான செம்மஞ்சேரி, கண்ணகி நகர், பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தைச் சீரமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட ECR கிழக்குக் கடற்கரை சாலையில் WHITE BOARD பேருந்துகள் இயக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புழுதிவாக்கம் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பேருந்து நிலையம் மேம்படுத்தப்பட்டது. தற்போது அந்தப் பகுதியில் எந்த விதமான மாநகரப் பேருந்துகளும் இயக்கப்படவில்லை. அதனால் உடனடியாக அந்தப் பகுதியில் மாநகரப் பேருந்துகளை இயக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்கு என சோழிங்கநல்லூரில் புதிய அரசு மருத்துவக் கல்லூரியை உருவாக்க வேண்டும் எனக் கேட்டுகொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்கு என சோழிங்கநல்லூரில் உயர்தர சிகிச்சை அளிக்கும், அரசு பன்நோக்கு மருத்துவமனை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ல் உள்ளடங்கிய வார்டு 200, செம்மஞ்சேரி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதிகளில் 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையத்தை போதிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கின்றவகையில் மருத்துவர்களைக் கொண்டு 24 மணி நேரம் பணிபுரிகின்ற வகையில் தரமுயர்த்தித் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 மற்றும் 15–ல் உள்ள வார்டுகளில் புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ளடங்கிய ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் கொண்டு வர ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கரணைப் பகுதியில் மின் உதவிப் பொறியாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதனை சொந்த அரசுக் கட்டடத்தில் மாற்ற வேண்டுமெனவும், மேலும், வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அனைத்து அலுவலகங்களும் அரசு சொந்தக் கட்டடமாக மாற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் புதைவட மின்கம்பிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள உள்ளகரம், புழுதிவாக்கம், உத்தண்டி, ஜல்லடையான்பேட்டை, பெரும்பாக்கம், நன்மங்கலம், ஒட்டியம்பாக்கம், சித்தாலப்பாக்கம் ஆகிய பகுதிகளில் புதைவட மின் கம்பிகளை அமைக்கும் பணியினை விரைவில் துவங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியான கொட்டிவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், வெட்டுவாங்கேணி, அக்கரை, பனையூர், நைனார்குப்பம் ஆகிய பகுதிகளில் கடல் சீற்றம் ஏற்படும்போது பொது மக்களைப் பாதிக்காத வகையில் தடுப்புச் சுவர் ஏற்படுத்தித் தர வேண்டும்.

2021 செப்டம்பர் 8] [திரு. ச. அரவிந்த் ரமேஷ்]

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கொட்டிவாக்கம், நீலாங்கரை, வெட்டுவாங்கேணி, அக்கரை, பனையூர், நைனார் குப்பம் ஆகிய பகுதிகளில் மழைக்காலங்களில் வலைகளைப் பின்னும் கூடம் மற்றும் நவீன முறையில் மீன் விற்பனை அங்காடி கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட நீலாங்கரையிலுள்ள பத்திரப்பதிவு அலுவலகம் இதுநாள்வரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அந்த இடம் போதிய வசதியில்லாத காரணத்தால் பொது மக்கள் பத்திரப்பதிவு செய்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். அதனால் உடனடியாக அந்த அலுவலகத்திற்கு அரசு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் இளைஞர்கள் அதிகமாக உள்ளதால் எங்கள் தொகுதியில் மிகப்பெரிய அளவில் உள்விளையாட்டு அரங்கம் மற்றும் திறந்தவெளி அரங்கம் ஏற்படுத்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் சர்வே எண்களில் 20 ஆண்டுகளுக்கு மேலாக பொது மக்கள் வீடுகள் கட்டி வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு அடிப்படை வசதிகளான சாலை, தெரு விளக்குகள், குடிநீர் வழங்கப்பட்டுள்ளன. வீட்டு வரியும் கட்டப்பட்டு வருகிறது.

பெருங்குடி கல்லுக்குட்டை பகுதியில் பட்டா வழங்க வேண்டும். சோழிங்கநல்லூர் சர்வே எண் 439 கிராம நத்தத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். காரப்பாக்கம் சர்வே எண்கள் 160B, 161B, 123/3, 165, 170, 171/1, 172, 169/2, 170/2, 123/9 அனைத்திற்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

ஜல்லடையான்பேட்டை, திருவள்ளுவர் நகர் சர்வே எண் 220 மற்றும் 221–க்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். செம்மஞ்சேரி சர்வே எண். 337/12B, 37/12B அனைத்திற்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

ஒக்கியம் துரைப்பாக்கம் மூட்டைக்காரன் சாவடி சர்வே எண் 272/A, 364/2 உள்ளிட்ட சில இடங்களில் இன்னும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. உள்ளகரம் சர்வே எண். 90, 91 அனைத்திற்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

புழுதிவாக்கம் சர்வே எண் 230/16–யிலுள்ள வீட்டிற்குப் பட்டா வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஈஞ்சம்பாக்கம் பெத்தேல் நகரில் சர்வே எண் 282/1, 2, 3 ஆகியவற்றிற்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

பள்ளிக்கரணை தந்தை பெரியார் நகர் சர்வே எண் 23/1A, 663/5C, மேய்க்கால் புறம்போக்கு, பள்ளிக்கரணை சர்வே எண் 104, பள்ளிக்கரணை நாகேஸ்வரி அம்மன் நகர் சர்வே எண் 71, மேய்க்கால் புறம்போக்கு பள்ளிக்கரணை மேற்கு அண்ணா நகர் சர்வே எண் 121, 1218, 118, பெரும்பாக்கம் தரிசு நிலம் சர்வே எண் 441, கந்தன்சாவடி KPK நகர் சர்வே எண் 658/1A, 1B ஆகியவற்றிற்குப் பட்டா வழங்க வேண்டும். வார்டு எண் 189, பள்ளிக்கரணை சர்வே எண் 330, 627–க்குப் பட்டா வழங்க வேண்டும்.

ஈஞ்சம்பாக்கம் சர்வே எண் 87/2–க்குப் பட்டா வழங்க வேண்டும். ஒக்கியம் துரைப்பாக்கம் சர்வே எண் 75–க்குப் பட்டா வழங்க வேண்டும். சித்தாலப்பாக்கம் ஊராட்சி சர்வே எண் 12, 30/1, 30/2 ஆகியவற்றிற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

வேங்கைவாசல் சர்வே எண் 2/16, நேரு நகர் பகுதி; வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும், பெரும்பாக்கம் சர்வே எண் 441, வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். கோவிலம்பாக்கம் சர்வே எண் 405, 403/2, 403/3, 390/2, இவை அனைத்திற்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

ஒட்டியம்பாக்கம் அரசன்கழனி சர்வே எண் 1/6, 1/10 மற்றும் 72/1 இவை அனைத்திற்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண் கொண்ட பகுதிகளில் 20–25 வருடங்களுக்குமேல் குடியிருந்து வருகிறார்கள். மேலும் உள்ளகரம், புழுதிவாக்கம், கொட்டிவாக்கம், கந்தன்சாவடி, பாலவாக்கம், பெருங்குடி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை, ஜல்லடையான்பேட்டை, நீலாங்கரை, ஒக்கியம் துரைப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், சோழிங்கநல்லூர், உத்தண்டி, செம்மஞ்சேரி, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், வேங்கைவாசல், பெரும்பாக்கம், சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம் ஆகிய பகுதிகளில் நீண்ட நாட்களாக குடியிருப்பவர்களுக்கு வாழ்வாதாரமாக இருக்கும் வீட்டுமனைப் பட்டாவை விரைவில் வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

2006–2011 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட்ட பட்டாக்கள் கிராமக் கணக்கில் ஏற்றப்படவில்லை. அவற்றைக் கிராமக் கணக்கில் ஏற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக உள்ளகரம் சர்வே எண் 90, மடிப்பாக்கம் மைலைபாலாஜி நகர், கொட்டிவாக்கம் எம்.ஜி.ஆர். நகர், கோவிலம்பாக்கம் சக்தி நகர் ஆகிய பகுதிகளில் பட்டா வழங்க வேண்டுமெனக் கேட்டுகொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15, வார்டு எண் 195, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்ணகி நகர் பகுதியில் உழவர் சந்தை பல ஆண்டுகளாகத் திறக்கப்படாமல் உள்ளது. அதனை உடனடியாகத் திறக்க வேண்டும். மேலும், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து மாநகராட்சி வார்டுகள் மற்றும் ஊராட்சிகளிலும் உழவர் சந்தை திறக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 44, வார்டு எண் 185, பாலவாக்கம் கிழக்குக் கடற்கரை சாலைப் பகுதியில் சுமார் 500 மாணவ, மாணவிகள் பயிலும் ஆதி திராவிட உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகின்றது. தற்போது கிழக்குக் கடற்கரைச் சாலை நெடுஞ்சாலைத் துறையின்மூலம் அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் சாலை விரிவாக்கத்திற்காக அந்தப் பள்ளியின் கட்டடங்களை இடிக்கின்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே, கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் நலனைக் கருத்தில்கொண்டு அதே பகுதியில் அவர்கள் கல்வி கற்கும் வகையில் தொழில் துறைக்குச் சொந்தமான சர்வே எண் 19, ECR–பாலவாக்கத்தில் உள்ளடங்கிய எலக்ட்ரிக் எலக்ட்ரானிக் இண்டர்ஸ்டிரிஸ் என்ற இடத்தில் சுமார் 55.5 சென்ட் காலியாக உள்ள அந்த இடத்தை ஆய்வு செய்து மாண்புமிகு தொழில் துறையின் அமைச்சரின் உரிய அனுமதியைப் பெற்று அந்த இடத்தில் மாணவ, மாணவிகளின் கல்வித் தரத்தை உயர்த்துகின்ற வகையில் புதிய பள்ளிக் கட்டடம் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதி பெருநகர சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்டு சுமார் 8 ஆண்டுகள் ஆகியும்

மயானத்திற்கு உதவியாளர்கள் பணியமர்த்தப்படவில்லை. அதனால் இறப்பவர்களைப் புதைப்பதற்கோ, தகனம் செய்வதற்கோ சுமார் 10,000 ரூபாய் வரை செலவிடுகின்ற நிலை உள்ளது. அதனால் உடனடியாக மயான உதவியாளரைப் பணியமர்த்தி இறந்தவர்களின் உடலை இலவசமாக அடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கிழக்குக் கடற்கரைச் சாலை, கடலில் இருந்து 200 மீட்டர் வரை கோஸ்டல் ஏரியா என்ற விதி நீலாங்கரை வரை உள்ளது. ஆனால் சோழிங்கநல்லூர், ஈஞ்சம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், சின்ன நீலாங்கரை, பெரிய நீலாங்கரை, சின்னாண்டிக் குப்பம், பணையூர் குப்பம், நைனார் குப்பம், உத்தண்டி வரை சென்னை மாநகராட்சியாக விரிவாக்கப்பட்ட பகுதியாகும். இந்த ஊர்களுக்கு கடலிலிருந்து 500 மீட்டருக்கு வெளியேதான் வரைபட அனுமதி வழங்கப்படும் என உள்ளது. இந்த விதியைத் தளர்த்தி 200 மீட்டருக்கு வெளியிலிருந்தால் அனுமதி வழங்குவதைப்போல் இந்தப் பகுதிக்கும் அதே விதியினை நடைமுறைபடுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள இடங்களில் பேருந்து தேவைகள் உள்ளதால், பொது மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் வழித்தடங்களில் பேருந்துகள் இயக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கோவளம் முதல் பாரிமுனை வரை (சைதாப்பேட்டை வழியாக), கோவளம் முதல் கோயம்பேடு வரை (வேளச்சேரி வழியாக), கோவளம் முதல் பூவிருந்தவல்லி வரை (வேளச்சேரி வழியாக), கேளம்பாக்கம் முதல் பூவிருந்தவல்லி வரை (வேளச்சேரி வழியாக), பெரும்பாக்கம் த.ந.வா.மே.வா முதல் பாரிமுனை வரை (சைதாப்பேட்டை வழியாக), பெரும்பாக்கம் த.ந.வா.மே.வா முதல் கோயம்பேடு வரை, பெரும்பாக்கம் த.ந.வா.மே.வா முதல் தாம்பரம் வரை, பெரும்பாக்கம் த.ந.வா.மே.வா முதல் கேளம்பாக்கம் வரை, கண்ணகி நகர் முதல் கேளம்பாக்கம் வரை, கண்ணகி நகர் த.ந.வா.மே.வா முதல் தாம்பரம் வரை, புழுதிவாக்கம் முதல் கூடுவாஞ்சேரி வரை, புழுதிவாக்கம் முதல் ஸ்ரீபெரும்புதூர் வரை, புழுதிவாக்கம் முதல் T.நகர் வரை, புழுதிவாக்கம் முதல் பாரிமுனை வரை, C21 ஒட்டியம்பாக்கம் முதல் உயர் நீதிமன்றம் வரை, M51C தி.நகர் முதல் ஒட்டியம்பாக்கம் வரை, M2 ஒட்டியம்பாக்கம் முதல் சைதாப்பேட்டை வரை, 76B ஒட்டியம்பாக்கம் முதல் கோயம்பேடு

வரை, கானத்தூர் முதல் தி.நகர் வரை, மகாபலிபுரம் முதல் சைதாப்பேட்டை வரை உள்ள வழித்தடங்களில் இயங்கிவந்த 599, 19H பேருந்துகளை மீண்டும் இயக்க வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட OMR சாலைப் பகுதியிலுள்ள மாணவ, மாணவிகள் வாணியஞ்சாவடியில் உள்ள பள்ளியில் படித்து வருகிறார்கள். அந்தப் பள்ளி அருகில் மாநகரப் பேருந்து நிற்பதில்லை. அதனால் அந்தப் பேருந்து நிறுத்தத்தில் அனைத்து பேருந்துகளும் நிற்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட ஒக்கியம்பேட்டை பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகள் அனைத்தும் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

OMR, ECR, வேளச்சேரி மற்றும் மேடவாக்கம் சாலைகளில் IT நிறுவனங்கள் அதிகமாக உள்ளதால் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கண்ணகி நகர், பெரும்பாக்கம், செம்மஞ்சேரி, சுனாமி நகர் பேருந்து டிப்போவில் தொழிலாளர்கள் குடிநீர் வசதியில்லாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். அவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட OMR சாலையில் அமைந்துள்ள RRE பேருந்து நிலையத்தில் ஒரு சில பேருந்துகள் மட்டுமே நிறுத்தப்படுகின்றன. அந்தப் பேருந்து நிறுத்தத்தில் பொது மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்ல நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடைகள் அனைத்தையும் அரசின் சொந்தக் கட்டடத்தில் இயங்க, புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட சோழிங்கநல்லூரில் இயங்கிவரும் நுகர்வோர் உணவு உதவி ஆணையர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு சொந்தக் கட்டடத்தைக் கட்டித்தர வேண்டும்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட நியாய விலைக்

கடைகளில் 3,000 அட்டைதாரர்களுக்கு மேல் 2 கடைகளும், 2,000 அட்டைதாரர்களுக்கு மேல் 12 கடைகளும், 500 அட்டைதாரர்களுக்குமேல் 80 கடைகளும் உள்ளன. இதனால் பொதுமக்கள் உணவுபொருட்கள் வாங்கமிகவும்சிரமப்படுகின்றனர். எனவே, பொது மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு 1,000–த்திற்கு மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் உள்ள நியாய விலைக்கடைகளை இரண்டாகப் பிரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மண்டலம் 14 மற்றும் 15–ல் விடுபட்டுள்ள பாதாளச் சாக்கடை (UGSS) குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளை விரைந்து தொடங்கி பொது மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சித்தாலப்பாக்கம் ஊராட்சியில் உள்ள கால்நடை மருத்துவமனையை மேம்படுத்தி கட்டடம் கட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 197–வது வட்டம், சோழிங்கநல்லூர் OMR சாலையில், 2010 ஆம் ஆண்டு சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டு, இதுநாள்வரை அரசு அலுவலகமாக இயங்கி வருகிறது. அதனை பொது மக்கள் சுப நிகழ்ச்சிகள் நடத்த உடனடியாக வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 198–வது வட்டம், சோழிங்கநல்லூர் OMR சாலை பொன்னியம்மன் கோவில் அருகில் சமுதாய நலக்கூடம் கட்டி நிறைவு பெறாமல் உள்ளது. அதனை முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதனை அரசு சொந்தக் கட்டடத்தில் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணை சதுப்புநிலப் பகுதியை மேம்படுத்தி, மழைநீர் சேகரிக்கப்பட்டு, பறவைகள் சரணாலயமாக மாற்றி, சுற்றுலாத்தலமாக உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கடலோரப் பகுதிகளில் கடல் சீற்றங்கள் ஏற்படும்போது பாதிக்கப்படாமல் இருக்க தடுப்புச்சுவர் அமைத்தும், அனைத்து மீனவக் குப்பம் பகுதிகளிலும் வலைகளைப் பின்னுவதற்கு கட்டடமும், நவீன முறை மீன் விற்பனை அங்காடியும் அமைத்துத்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 200–வது வட்டம், செம்மஞ்சேரி பகுதியில் சீனிவாச பெருமாள் கோவிலுக்குச் சொந்தமான இடம் சுமார் 15.45 ஏக்கர் இருக்கின்றது. அந்த இடத்தில் அரசு பல்நோக்கு மருத்துவமனை கட்டித்தர வேண்டுமென பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் குடியிருப்பு மனைப்பிரிவுகளில், தலா 3, 4, அல்லது 5 சென்ட் வீதம் 30 ஆண்டுகளுக்கு மேலாக 500 குடும்பங்களும், 2,500 முதல் 3,000–த்திற்கும் மேற்பட்ட மக்களும் வீடுகள் கட்டி வாழ்ந்து வருகிறார்கள். இந்த வீட்டுமனைகளை முறையாக பதிவு அலுவலகங்களை அணுகி, மனை சம்பந்தமாக எந்தவித வில்லங்கமும் இல்லை என்று சான்றளித்த பிறகே வாங்கி, வருவாய்த் துறை மூலமாக பட்டா மாறுதலும், சிட்டா, அடங்கல் போன்ற உரிமை சான்றிதழ்களையும் வாங்கியுள்ளனர். தற்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அந்த குடியிருப்பு மனைகள் கையகப்படுத்தப்பட இருப்பதால் நிலமற்றவர்களாக மாறும் சூழல் ஏற்படும் என்ற அச்சத்தில் பொது மக்கள் உள்ளனர். எனவே, 500 குடும்பங்களின் நலனைக் கருத்தில்கொண்டு வீடுகள் அடங்கிய குடியிருப்பு மனைகளைக் கையகப்படுத்துவதிலிருந்து விலக்கு அளிக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன் அவர்கள். இனிமேல் உரையாற்ற இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பத்து, பத்து நிமிடங்கள் நேரம் ஒதுக்கப்படுகிறது.

***திரு. தி. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழக சட்டமன்றத்தில் உரையாற்ற எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சுமார் 31,000 வாக்குகள் வித்தியாசத்தில என்னை வெற்றிபெற வைத்த நெஞ்சில் அறம் தாங்கி நிற்கும் வணக்கத்திற்குரிய அறந்தாங்கி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது சிரம் தாழ்ந்த நன்றியினை அவர்களது பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

பெருந்தலைவர் அமரர் காமராஜர் அவர்கள் வளர்த்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக அறந்தாங்கி தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்த தியாகத் தலைவி, அன்னை திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கும், இந்தியத் திருநாட்டின் வருங்கால பாரதப் பிரதமர் இளம் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டணியில் அறந்தாங்கி தொகுதியை காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கித் தந்து, தேர்தல் நேரத்தில் எனக்கு வாக்கும் கேட்ட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மாண்புமிகு முதல்வர் பாசத்திற்குரிய, மரியாதைக்குரிய தளபதி அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எனது நன்றியை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தந்தையின் திருமணத்தில் கலந்துகொண்டு வாழ்த்தியதோடு, எனது திருமணத்தையும் தலைமையேற்று நடத்தி வைத்து, அறந்தாங்கி தொகுதியில் எனக்கு முதன்முறையாகப் போட்டியிட வாய்ப்பளித்த உலகத் தமிழர்களின் உள்ளங்களில் சிம்மாசனமிட்டு வீற்றிருப்பவரும், 'தோன்றின் புகழோடு தோன்றுக' என்ற அய்யன் வள்ளுவனின் கூற்றுக்கேற்ப, தோன்றிய துறைதோறும் புகழ் கொடி நாட்டியவர் முத்தமிழறிஞர் அமரர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) இந்நேரத்திலே நன்றியோடு நினைவுகூர்ந்து வணங்குகிறேன்.

அமரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் வாய்ப்பளிக்கப்பட்டு, 1977 ஆம் ஆண்டு முதல் ஆறு முறை தொடர்ந்து அறந்தாங்கி தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இம்மாமன்றத்தில் துணை சபாநாயகராக, அமைச்சராக, பிரதான எதிர்க்கட்சியின் துணைத் தலைவராகப் பணியாற்றிய எனது தந்தையும், எனது அரசியல் ஆசானுமான திரு. சு. திருநாவுக்கரசர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 செப்டம்பர் 8] [திரு. தி. ராமச்சந்திரன்]

பிற்பகல் 6–50

தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் அண்ணன் திரு. கே.எஸ். அழகிரி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தேர்தல் வெற்றிக்கு உழைத்த, ஒத்துழைத்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள், மாவட்ட, ஒன்றிய, கிளை அளவிலான காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கூட்டணி கட்சிகளின் நிருவாகிகள், சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "well begun is half done" என்று தத்துவ ஞானி Aristotle சொன்னதுபோல், மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களின் ஆட்சித் தொடக்கம் பொற்கால ஆட்சியாக, அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ந்து, வரவேற்று போற்றும் விதத்தில் வெற்றி நடைபோடுகிறது. அனுபவம் மற்றும் இளமை கலந்த அமைச்சரவை, திறமையான மற்றும் நேர்மையான அதிகாரிகளின் நியமனம் பாராட்டுக்குரியது. கொடிய கொரோனா தொற்றிலிருந்து மக்களைக் காக்க விரைந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், கடும் நிதி நெருக்கடியான சூழலிலும் தேர்தல் வாக்குறுதிகளை ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றிவரும் மாண்புமிகு தளபதி முதலமைச்சர் அவர்களையும், அமைச்சர் பெருமக்களையும் மக்கள் பெரும் மகிழ்வோடு பாராட்டி வரவேற்கின்றனர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல அரசு என்பது அனைவருக்கும் பொதுவாக அமைவதோடு, அனைவரின் நலன்களையும் காப்பதாகவும், அனைத்து வளங்களையும் உயர்த்துவதாகவும், ஜாதி மத பேதமற்ற வகையில் உள்ளதாகவும், ஏழை–எளியோர் மற்றும் நடுத்தர மக்களின் நலன் காப்பதாகவும், சமூக நீதியைக் காத்து மேம்படுத்துவதாகவும், பசியும், நோயும், அறியாமையும் இல்லாத inclusive government என்னும் வகையில் அனைத்தையும் ஒருங்கிணைத்து, இன்றைய தேவைகளை நிறைவேற்றி, நாளைய தேவைக்கும், வளர்ச்சிக்கும் தொலைநோக்குடன் திட்டமிட்டுச் செயல்படும் அரசாக அமைதல் வேண்டும் என்னும் இலக்கணத்தை உணர்ந்து செயல்படும் முதல்வராக, மற்ற மாநில முதல்வர்களுக்கு வழிகாட்டும் விதத்தில், முன்மாதிரி முதல்வராக, முதல்வர்களில் முதல்வராக, கனிவோடும், துணிவோடும், அடக்கத்தோடும் மக்களின் நலன் காக்க அல்லும்

பகலும் அயராது உழைத்திடும் மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களுக்கு என் வாழ்த்தையும், பாராட்டையும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக கீழ்க்கண்ட சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன்:—

போக்குவரத்துத் துறை. "A developed State is not a place where the poor have cars; it is where the rich use public transportation" என்பர். பொது போக்குவரத்து பெரும்பான்மை மக்களால் பயன்படுத்தப்படுவது நாட்டின் வளர்ச்சியின் அடையாளங்களில் ஒன்றாகும். இந்தியாவிலே மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை அதிகம் உள்ள மாநிலம் தமிழ்நாடுதான். 1981 ஆம் ஆண்டு தமிழகத்தில் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 3,21,000 ஆக இருந்தது. 2019–2020 போக்குவரத்துத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை சுமார் 2,77,00,000 ஆக இருந்தது. தற்போது இது மூன்று கோடியைத் தாண்டியுள்ளது. இந்த வாகனங்களில் சுமார் 85 சதவிகிதம் இரண்டு சக்கர வாகனங்களாகும். இவற்றைப் பயன்படுத்தும் பெரும்பான்மையானவர்கள் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோராவர். இவர்கள் பயன்பெறும் விதத்தில் கருணை உள்ளத்தோடு பெட்ரோலின் விலையை லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் குறைத்திருப்பது பெரும் நன்மை தரும் திட்டங்களில் ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களுக்குப் பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பேருந்துகளின் எண்ணிக்கையையும், சாதாரண கட்டணப் பேருந்துகளின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பணியில் உள்ள போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதுபோல், ஓய்வுபெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் மருத்துவ வசதி வழங்க வேண்டும். பசுமைப் போக்குவரத்துக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Hydrogen fuel based vehicles, Battery based electric vehicles இயங்கும் வாகனங்களை போக்குவரத்துத் துறைமூலம் அறிமுகப்படுத்த வேண்டும்.

நம்முடைய அண்டை மாநிலமான கேரளாவில் பசுமைப் போக்குவரத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான திட்டங்களை Spotimyze Energy Private Limited என்ற நிறுவனமும், சென்னையில் உள்ள I.I.T. Madras–ம் இணைந்து தயாரித்துள்ளன. அதுபோன்ற திட்டங்களை தமிழக அரசும் வகுக்க வேண்டும். அமெரிக்காவில் Apollo விண்கலனிலே hydrogen மூலம் மின்சாரம் தயாரிக்கப்பட்டது. 60 ஆண்டுகளாக நடந்த தொடர் ஆராய்ச்சியின் காரணமாக இப்பொழுது hydrogen–ல் இயக்கும் பசுமைப் பேருந்துகள் சாலைகளில் ஓட ஆரம்பித்துள்ளன. அது தமிழகத்திற்கும் வரவேண்டும். அதற்கான கட்டமைப்புகளை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உலகின் முன்னேறிய நாடுகள் பசுமைப் போக்குவரத்தை நோக்கிச் செல்லும்போது, இந்தியாவின் முன்னேறிய மாநிலமான தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு உதாரணமாக விளங்கத் தேவையான திட்டங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் தளபதியார் அவர்களும் அறிமுகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–55

தகவல் தொழில்நுட்பத் துறை. உலகெங்கும் நடக்கிற அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் கவனித்து, இந்தியாவில் தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்கு அடிகோலியவர் தலைவர் அமரர் ராஜீவ் காந்தி அவர்கள். தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பப் புரட்சி ஏற்பட்டதற்குக் காரணம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. தமிழகம் மருத்துவ சிகிச்சைகளில் முன்னணி மாநிலமாக விளங்க முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு முக்கியக் காரணம். இந்தியாவிலேயே முதன்முறையாக cochlear implant மூலம் ஆயிரக்கணக்கான குழந்தைகள் கேட்பதற்கும், பேசுவதற்கும் ஏற்பாடு செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவரின் வழிவந்த இந்த ஆட்சியில் மருத்துவ சிகிச்சைகளில் புரட்சிகளை எய்துவதற்கு தகவல் தொழில்நுட்பத் துறை முக்கிய பங்காற்ற வேண்டும்.

இந்தியாவில் புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. 2025 ஆம் ஆண்டு புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை 1.5 மில்லியனாக இருக்கும் என கணிக்கப்படுகிறது. இந்தியாவில் மட்டும் 77 மில்லியன் சர்க்கரை நோயாளிகள் இருக்கிறார்கள். நோய்களைக் கண்டறிவதிலும்

சிகிச்சை அளிப்பதிலும் Artificial Intelligence–ஐ உலக நாடுகள் பயன்படுத்த ஆரம்பித்துள்ளன. இந்த முன்னேற்றங்களைக் கவனித்து தமிழகத்திற்குக் கொண்டு வர தகவல் தொழில்நுட்பத் துறை முயற்சிகளை எடுக்க வேண்டும். தமிழகத்தில் மருத்துவமும், தகவல் தொழில்நுட்பமும் இணைவதன் மூலமே தரமான சிகிச்சைகள் வழங்க முடியும். இதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்களும் முன்னெடுக்க வேண்டும். இந்தியாவில் பொதுவாக நோயாளிகள் தங்களுடைய மருத்துவ சிகிச்சை தொடர்பான தகவல்களை முறையாகப் பராமரிப்பதில்லை. குக்கிராமத்திலுள்ள நோயாளிகளின் தகவல்களைக்கூட சேகரித்துப் பராமரிக்க தகவல் தொழில்நுட்பத் துறை மருத்துவத் துறைக்கு உதவ வேண்டும்.

தொழில்நுட்பப் பூங்காக்களை ஊக்குவிக்கும் இவ்வரசு படித்துப் பட்டம் பெற்றுள்ள இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினை பெருக்கிடும் வகையில் புதுக்கோட்டை மாவட்டத்திலும் குறிப்பாக அறந்தாங்கி தொகுதியிலும் தொழில்நுட்பப் பூங்காக்கள் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு சான்றிதழ்கள் பெற, திருத்தங்கள் மேற்கொள்ள என அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள மக்கள் அரசு இ–சேவை மையத்தை நாட வேண்டியுள்ளது. கிராம மக்களின் நலன் கருதி இதுபோன்ற இ–சேவை மையங்களின் எண்ணிக்கையை கிராமப்புறங்களில் கூடுதலாக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது என் அறந்தாங்கி தொகுதியில் செயல்படுத்த வேண்டிய சில பணிகளைக் குறிப்பிட விரும்புகிறேன். நிருவாக வசதிக்காக பெரிய மாவட்டங்கள் சிறு, சிறு மாவட்டங்களாகப் பிரிக்கப்படுவது வாடிக்கையாக உள்ளது. தமிழகத்தில் 2,3 தொகுதிகளைக் கொண்ட மாவட்டங்கள் பல உள்ளன. அதேபோன்று, வருங்காலத்தில் மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்படும்போது 6 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட புதுக்கோட்டை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, அறந்தாங்கியை மாவட்டத் தலைநகராகக் கொண்டு, புதிய மாவட்டம் உருவாக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் 52 பஞ்சாயத்துகள், அறந்தாங்கி, ஆலங்குடி ஆகிய 2 சட்டமன்றத் தொகுதிகள்

உள்ளன. அறந்தாங்கி தொகுதியிலுள்ள 20 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கி அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியமாகவும், ஆலங்குடி தொகுதியிலுள்ள 32 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கி புதிய ஊராட்சி ஒன்றியமாகவும், அதாவது, அறந்தாங்கி (வடக்கு), அறந்தாங்கி (தெற்கு) என்று இரண்டு ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரித்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மிகவும் பின்தங்கிய பகுதியான ஏம்பலைத் தலைமையிடமாகக் கொண்டு, பக்கத்து கிராமங்களை இணைத்து புதிய தாலுகா ஒன்றினை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அறந்தாங்கியிலுள்ள அரசு பொது மருத்துவமனையை மாவட்ட அரசு பொது மருத்துவமனையாக அறிவித்து தரமுயர்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுசம்பந்தமாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் நேரடியாகச் சென்று வலியுறுத்தினேன். இங்கும் தங்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு வருகிறேன். மணல்மேல்குடியில் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஒன்றினைப் புதிதாக அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான புதிய அரசு பொறியியல் கல்லூரி ஒன்றினை அறந்தாங்கியில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அறந்தாங்கி நகரில் கலைஞர் கருணாநிதி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வந்து செல்ல போதிய இடமும், பொது மக்களுக்குத் தேவையான போதிய அடிப்படை வசதிகளும் இல்லாமல் உள்ளன. எனவே, அறந்தாங்கி நகரில் சந்தை நடக்கும் தஞ்சாவூர் சத்திரத்திற்குச் சொந்தமான இடத்தினை இரண்டாகப் பிரித்து சீர்செய்யப்பட்ட சந்தையாகவும், மறு பகுதியில் நவீன வசதிகளுடன்கூடிய பேருந்து நிலையமும் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அறந்தாங்கியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். அறந்தாங்கிக்கு சுற்றுச்சாலை ஒன்று அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆவுடையார்கோவிலில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் தீயணைப்பு நிலையத்திற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில்தான் சுமார் 50 கி.மீ. நீளமான கடற்கரை உள்ளது. இப்பகுதியில் வாழும் மீனவப் பெருமக்கள் பயன்பெறும் வகையில் மீனவர்களுக்கு வீடுகளும், மீன் பதப்படுத்தும் குளிர்சாதனக்

கிடங்குகளும், படகுகள் நிறுத்தும்வண்ணம் சிறிய மீன்பிடித் துறைமுகங்களும், கடலோரச் சாலை வசதிகளும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆவுடையார்கோவில் தாலுகா, தொண்டைமானேந்தல் ஊராட்சியில், காரணிக்காட்டில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், பொன்பேத்தி ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், மணல்மேல்குடி தாலுகா, கோட்டைப்பட்டினம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரமுயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுமார் 60 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட அறந்தாங்கி நகரில் பூங்கா இல்லை. அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் உள்ள இடத்தில் பெரியவர்கள் நடைபாதை பயிற்சி மேற்கொள்ளும் விதத்திலும், சிறுவர்கள் விளையாட்டு சாதனங்களுடனும், இளைஞர்கள் உடற்பயிற்சி மேற்கொள்ளும் விதத்திலும் பூங்கா அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7–00

ஆதி திராவிட பெருமக்கள் வாழும் கிராமங்களில் ஏற்கெனவே கட்டித்தந்துள்ள வீடுகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. இன்னும் பல இடங்களில் வீடுகள் தேவைப்படுகின்றன. (மணியடிக்கப்பெற்றது) இன்னும் நிறைய கோரிக்கைகள் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கோரிக்கைகள் இருந்தால் அவை படித்ததாக அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளப்படும். நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. தி. ராமச்சந்திரன்: கோரிக்கைகள் இன்னும் நிறைய இருக்கின்றன. அவற்றை தாங்கள் சொன்னதுபோல், நான் பேசியதாகக் கருதி, அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு பொதுக் கோரிக்கை. சென்னை கத்திப்பாரா சந்திப்பிலுள்ள பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவச் சிலையை பொது மக்களின் பார்வையில் படும்படி பாலத்தின் உயரத்திற்கு பீடத்தின் உயரத்தை உயர்த்தி சிலையை வைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை உங்கள் வாயிலாகத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மேற்கண்ட எனது கோரிக்கைகளைப்

பரிவோடு நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு நல்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி இன்றைய எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

தலித் பெருமக்கள் பயனடையும் விதத்தில் அறந்தாங்கி தொகுதிக்கு 1000 வீடுகள் ஒதுக்கித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ந்து வரும் அறந்தாங்கி நகரில் ஏழை, எளிய நடுத்தர மற்றும் அரசு ஊழியர்கள் பயன்பெறும் வகையில் வீட்டு வசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரியம் சார்பில் கூடுதல் வீடுகள் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆவுடையார்கோவிலில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் இடிந்து விழும் நிலையில் உள்ளது. இந்த மேல்நிலைப் பள்ளிக்கும் இது போன்ற பழுதடைந்துள்ள பள்ளிகளுக்கும் புதிய கட்டடங்களும், அறந்தாங்கி நகரில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை மற்றும் சுற்றுச் சுவரும் கட்டித்தர அனுமதியும், நிதியும் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலையில் நிகழும் சாலை விபத்துக்களில் பாதிக்கப்படுவோருக்கு உதவும் விதத்தில் ஆவுடையார்கோவில் தாலுகா மீமிசலில் தற்போது இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை அவசரகால சிகிச்சைப் பிரிவு மருத்துவமனையாக மேம்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கி தாலுகா, நாகுடி பகுதி காவேரி டெல்டா பகுதியின் கடைமடைப் பகுதியாகும். காவேரி நதிநீர் பாசனத்திற்குத் திறக்கப்படும்போது இப்பகுதிக்கு எளிதில் நீர் வந்து சேர கால்வாய்கள், வாய்க்கால்கள் தூர்வாரி மேம்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கி பகுதியில் நீண்ட பகுதி, கடலோரப் பகுதியாக உள்ளதால் நிலத்தடி நீர் உப்பு நீராக உள்ளது. கூட்டுக் குடிநீர் திட்டங்களை விரிவாக்கம் செய்வதோடு காவேரி நீர் அறந்தாங்கி தொகுதி முழுவதும் கிடைத்திடும் விதத்தில் அரசு நல்ல குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆவுடையார்கோவில் தாலுகா அலுவலகம் புதியதாகக் கட்டப்பட்டு இணைப்புச் சாலையின்றி உள்ளது. அதைப்

பயன்பாட்டிற்குக் கொண்டுவர இணைப்புச் சாலை ஒன்று அமைத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆவுடையார்கோவிலில் உள்ள 50 ஆண்டுகால பழமையான ஊராட்சி மன்றக் கட்டடம் பழுதடைந்து உள்ளதால், புதிய கட்டடம் அமைத்துத்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம் வீரமங்கலத்தில் புதிய சுகாதார நிலையம் அமைத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

குருங்களூர் ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்துத்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கி தாலுகா பெருநாவலூரில் உள்ள அரசு கலைக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர் மற்றும் கழிப்பறை வசதிகள், புதிய வகுப்பறைகள் கட்டிடவும், புதிய பாடப் பிரிவுகள் தொடங்கவும் ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தீயத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றினை ஏற்படுத்தித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருப்புனவாசல் இராமநாதபுரம், மாவட்டத்தில் உள்ள ஓரியூர் இரண்டிற்கும் இடையில் செல்லும் பாம்பாற்றின் குறுக்கே இரு மாவட்ட மக்களின் நலன் கருதி இப்போதுள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாகக் கட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கியில் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு புதிய சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் அறந்தாங்கி பணிமனையில் இருந்து சென்று, நிறுத்தப்பட்ட 18 பேருந்துகளை மீண்டும் இயக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் இயக்கப்பட வேண்டிய பேருந்துகள்: அறந்தாங்கி–வேலூர், இரட்டவயல்–சென்னை, மணமேல்குடி–திருச்சி, மணமேல்குடி–சிவகங்கை, மணமேல்குடி–மதுரை, திருப்புனவாசல்–ஸ்ரீரங்கம், அறந்தாங்கி–திருவொற்றியூர், அறந்தாங்கி–ஓரியூர், அறந்தாங்கி–இராமேஸ்வரம், மணமேல்குடி–கறம்பக்குடி, அறந்தாங்கி–மணமேல்குடி(வழி சிறுமருதூர்) உள்ளிட்ட பல

பேருந்துகளும், தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம்மூலம் இயக்கப்பட்ட ஆவுடையார்கோவில்–திருப்பதி, ஆவுடையார்கோவில்–சென்னை, நாகுடி–சென்னை, மீமிசல்–சென்னை, அறந்தாங்கி–சென்னை.

புதுக்கோட்டை மாவட்டம் தஞ்சாவூரிலிருந்து பிரிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் நீர்வளத் துறையின்கீழ் வரும் சி.எம்.பி. சப் டிவிஷன் மட்டும் இன்னும் தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணியில் உள்ளது. இதனைப் பிரித்து புதுக்கோட்டை மாவட்டத்திற்கு என தனி சப் டிவிஷன் அறந்தாங்கியில் ஏற்படுத்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மணமேல்குடி தாலுகா, வெள்ளூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர் அவர்கள்.

***திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு என் முதல் வணக்கம். சாதி சமய மூட நம்பிக்கையில் புரையோடிக்கிடந்த மனித சமுதாயம் நாகரிகமும், பகுத்தறிவும், சுய மரியாதையும் கொண்டு, ஏற்றத்தாழ்வுகளைக் களைய தன் வாழ்நாளெல்லாம் போராடிய ஈரோட்டு பூகம்பம், வெண்தாடி வேந்தர் ஐயா, தந்தை பெரியார் அவர்களை வணங்குகின்றேன்.

செல்வச் சீமான்கள் ஆட்சிக் கட்டிலில் கோலோச்சிய இந்தப் பேரவையில், குடிசையில் வாழ்கின்ற சாமானியனும் ஆட்சி அதிகாரத்தைப் பெற்று இந்த மண்ணையும் மொழியையும் காத்து, சமூக பொருளாதார சமத்துவம் நிறைந்த நாட்டை உருவாக்க முடியும் என்று மெய்ப்பித்துக் காட்டிய அறிவுச் சுரங்கம், பொதிகைமலைத் தென்றலாய், புது மலரின் நறுமணமாய், பதிகத்துப் பைந்தமிழாய் வந்துதித்த பேரறிஞர் அண்ணாவை வணங்குகிறேன்.

தன் உதிரத்தால் இயக்கக் கொடியை உருவாக்கி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, ஆகியோரின் மூச்சுக் காற்றினை விழுங்கி, இலட்சிய எண்ணங்களை, கொள்கைக் கோட்பாடுகளை தன் இதயத்தில் தேக்கி, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களின் வாழ்வில் வெளிச்சம் காண சமூக நீதி

என்னும் சுடரைத் தம் வாழ்நாளெல்லாம் அணையாமல் காத்த சமூகநீதிப் போராளி, நவீன தமிழகத்தைக் கட்டமைத்த சிற்பி, தமிழர்களின் வரலாற்று வசந்தம், முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களை வணங்குகின்றேன்.

தமிழ்கூறும் நல்லுலகம், சொரணையுள்ள, தன்மானமுள்ள மொழிப்பற்றைப் பெற வேண்டுமானால், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என முப்பெரும் தலைவர்களைச் சுவாசித்தால் போதும் என்றுரைத்த நட்பின் இலக்கணம், திராவிட இயக்கக் கொள்கைகளை இன்னும் அரை நூற்றாண்டுக்கு எடுத்துச் செல்லும் தளபதியாய், ஸ்டாலின் விளங்குவார் என்பதை உரக்கச் சொன்ன, நயத்தக்க நாகரிக அரசியல் மேதை, இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்களை வணங்குகின்றேன்.

தந்தை பெரியாரின் கனவுகளை நிஜமாக்கி, பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளைக் களமாக்கி, முத்தமிழறிஞர் கலைஞரின் ஆற்றலைத் தம் வசமாக்கி, சமூக நீதி என்னும் அறநெறியைச் சுவாசமாக்கி, ஐந்து நிலம் கண்ட தமிழர்களின் தத்துவமாய், திராவிட வரலாற்றின் புதிய புத்தகமாய், இந்திய ஒன்றியத்தின் ஈடு இணையற்ற முதல்வராய், கோயிலுக்குள் புகுந்து கும்பமரியாதை வாங்கும் அரசியல்வாதிகள் மத்தியில் கொரோனா உடையணிந்து கொள்ளை நோய் இருக்கும் இடத்திற்கே சென்று, மக்கள் நலன் பேணும் மானிட உலகின் மகத்தான தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்றத்தில் பொன்விழா கண்ட மாண்புமிகு அவை முன்னவர், பேரவைத் தலைவர், அரசுக் கொறடா மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உள்ளிட்ட அவையோர் அனைவருக்கும் என் இனிய வணக்கங்கள்.

உதயநிதி புதியவனல்ல, கருணைநிதி வழிவந்த கழக நிதி. எளிய வலியவன், எதிர்ப்போர்க்குப் புலி இவன். முத்தமிழறிஞரின் முத்தங்கள் பெற்றவன், மக்கள் பணி செய்ய தந்தையிடம் புது நெறி கற்றவன், சேப்பாக்கத்தின் சேகுவாரா, இளைய தமிழன் இவன் இன்னொரு ஈ.வே.ரா. (மேசையைத் தட்டும் ஒலி) இவனை உற்றுப் பார்த்தால் தெரியும், உள்ளம் மட்டுமல்ல, உருவமும் அதைப் பறைசாற்றும். கள்ளமில்லாத முல்லை சிரிப்பழகன், நல்லோர்

போற்றுகின்ற நாடறிந்த செயல் வீரன். பாமர மக்களின் பாசத்தில் நனைபவன், கழகத் தொண்டருடன் தோழனாய் இணைந்தவன். தெளிவின் ஒளி அவன், இளைஞரணியின் எழுச்சித் தலைவன். இளையவர் நெஞ்சின் எழுச்சியூற்று, எதிர்காலத் தமிழகத்தின் சுவாசக் காற்று, நீ இளையவர் நெஞ்சின் எழுச்சியூற்று, எதிர்காலத் தமிழகத்தின் சுவாசக் காற்று, என் ஆருயிர் அண்ணன் மாண்புமிகு உதயநிதி அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 7–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்த இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் பெயரைத் தாங்கிய இந்தத் தொகுதி பகுத்தறிவுக்கும், பொதுவுடமைக்கும் பாலமாக இருந்த தோழர் ஜீவானந்தம், பள்ளியில் பயிலும் காலத்திலே கழக மேடைகளிலே கொள்கை முழக்கம் செய்து வண்ணையம்பதியிலே இயக்கம் வளர்த்த வீராங்கனை திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், தன் ஓய்வறியா உழைப்பால் ஆற்றல்மிகு செயல்களால் மக்களின் பேரன்பைப் பெற்ற இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அண்ணன் திரு. சேகர்பாபு ஆகியோர் வென்ற தொகுதி.

20 ரூபாய் நோட்டைக் காட்டி ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக்கிய சூழ்ச்சியாளர்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, இந்த சாதாரண சாமானியனைக் கொண்டு முன்னாள் முதல்வர் அம்மையார் ஜெயலலிதா உள்ளிட்ட எவரும் பெற்றிராத வாக்குகள் வித்தியாசத்தில் சுமார் 42,479 வாக்குகள் கூடுதலாய் பெற்று என்னை வெற்றி பெறச் செய்த ஆருயிர் கழகத் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், நான் அழைத்தபோதெல்லாம் இன்முகம் காட்டி, ஆர்.கே. நகரை கழக வசமாக்க தன் ஈடு இணையில்லா உழைப்பை நல்கிய எங்கள் இளைஞரணியின் செயலாளர் ஆருயிர் அண்ணன் திரு. உதயநிதி அவர்களுக்கும் என் நெஞ்சத்து நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். என் வெற்றிக்காக உழைத்த சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கும், பகுதிக் கழக, வட்டக் கழகச் செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கும், அனைத்து அணியின் நிர்வாகிகளுக்கும், இளைஞர் அணியின் ஈடு இணையில்லாச் செயல் வீரர்களுக்கும், வெற்றிக்கு ஆதரவுக் கரம் நீட்டிய கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும், பெருவாரியான வாக்குகளை

எனக்கு அளித்து ஆர்.கே. நகர் தொகுதியில் ஒரு புதிய வரலாறு படைத்த வாக்காளர் எஜமானர்களுக்கும் என் நன்றியினைப் பாத மலர்களில் காணிக்கையாக்குகின்றேன்.

என் சிறு வயது முதல் எனக்குள் இயக்க உணர்வையூட்டி என்னை வளர்த்தெடுத்த மறைந்த என் தந்தையார் டாக்டர் ஜே. ஜான் அற்புதநாதன், M.A., B.Com., B.D., D.D., அவர்களையும், என் தாயார் திருமதி எலிசபெத் அற்புதநாதன் அவர்களையும் வணங்குகிறேன்.

மானியக் கோரிக்கைக்குள் செல்வதற்கு முன்னால், என் தொகுதியின் கோரிக்கைகள் சிலவற்றை இந்த அவையின் வாயிலாகப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னைக்குக் கொண்டு வரப்பட்ட metro rail திட்டம், வட சென்னை பகுதியில் முதலில் தங்கசாலை வரை மட்டுமே அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத்தினை வட சென்னையில் உள்ள அடித்தட்டு மக்களும் பயன்பெறும்வண்ணம் வண்ணாரப்பேட்டை—ஆர்.கே.நகர் வழியாக திருவொற்றியூர் விம்கோ வரை நீட்டிப்புச் செய்வதற்கு மாணவர்களையும், சமூக ஆர்வலர்களையும் ஒருங்கிணைத்து அறவழியில் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தவர், வட சென்னை மக்கள் மனதில் இரண்டறக் கலந்த ஐந்து ரூபாய் மருத்துவர் மறைந்த திரு. ஜெயச்சந்திரன் அவர்கள். ஏழையெளிய பாமர மக்களுக்காகவே தன் வாழ்நாள் முழுவதும் மருத்துவச் சேவை செய்த அவர் மறைந்தபோது நம்முடைய கழகத் தலைவர் முதல் ஒன்றிய பிரதமர் வரை, சட்டமன்றம் முதல் பாராளுமன்றம் வரை இரங்கல் தெரிவிக்கப்பட்ட மாண்புக்குரியவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தகைய சிறப்புக்குரிய அன்னாரது பெயருக்கு சிறப்பு சேர்க்கும்வண்ணம் எனது தொகுதியில் உள்ள சுங்கச்சாவடி, புது வண்ணாரப்பேட்டை, தண்டையார்பேட்டை ஆகிய நான்கு மெட்ரோ இரயில் நிலையங்களில் ஏதாவது ஒன்றுக்கு மருத்துவர் திரு. ஜெயச்சந்திரன் அவர்களின் பெயரினைச் சூட்டிட வேண்டுமென்கின்ற கோரிக்கையினை ஆர்.கே. நகர் மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு இந்தப் பேரவையின் வாயிலாகக் கோரிக்கையாக வைக்கின்றேன்.

2021 செப்டம்பர் 8] [*திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்*]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ஆர்.கே. நகரில் குடிநீர்ப் பற்றாக்குறை மற்றும் நிலத்தடி நீர் மாசு காரணமாக நீண்ட காலமாக மக்கள் அவதியுற்று வருகின்றனர். இங்கே Indian Oil Corporation – Lube Blending Plant, Bharat Petroleum, Indian Oil Corporation *மற்றும்* Hindustan Petroleum *ஆகிய நிறுவனங்களின்* Distribution and storage plant *ஆகியவை உள்ளன. இவற்றிற்கு துறைமுகத்திலிருந்து எரிபொருட்கள் கொண்டுவர 40 ஆண்டுகளுக்கு முன்பாக பூமியில் போடப்பட்ட குழாய்கள் துருப்பிடித்து பழுதாகிவிட்டன. இதனால், பல இடங்களில் எண்ணெய் வெளியேறி நிலத்தடி நீரை மாசுப்படுத்தி வருகிறது. அத்தோடு தொகுதியையொட்டி ஓடுகின்ற பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் கொடுங்கையூர் குப்பைக் கிடங்கு கழிவுகள் ஆகியவற்றாலும் தொடர்ந்து நிலத்தடி நீர் மாசடைந்து, அது மக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லை.*

25 ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த முன்னாள் சமூக நலத் துறை அமைச்சர் திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன் அவர்களின் சீரிய முயற்சியால் தண்டையார்பேட்டை, பட்டேல் நகரில் 13 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு நீரூற்று நிலையம் அமைக்கப்பட்டது. ஆனால், இன்றைய மக்கள்தொகை மாற்றத்தின் காரணமாக அது போதிய கொள்ளளவைக் கொண்டதாக இல்லாமல் குடிநீர்ப் பற்றாக்குறையால் மக்கள் அவதியுற்று வருகின்றனர். மேலும், இந்தத் தொகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் குழாய்கள் அனைத்தும் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பாகப் போடப்பட்டதால் தற்போது அவை முற்றிலும் பழுதடைந்து ஏறத்தாழ 90 சதவிகிதம் குடிநீர் மாசடைந்து வருகிறது. எனவே, ஆர்.கே. நகர் தொகுதியின் மற்றொரு பகுதியான கொருக்குப்பேட்டைப் பகுதியில் புதிதாக 13 மில்லியன் கொள்ளளவு கொண்ட இன்னொரு நீரூற்று நிலையம் அமைத்து மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்து தருமாறும், பழுதடைந்துள்ள குடிநீர்க் குழாய்களை முற்றிலுமாக மாற்றியமைத்து, சுகாதாரமான குடிநீர் விநியோகத்திற்கு வழிவகை செய்யுமாறும் இந்தப் பேரவையில் வேண்டுகோள் வைக்கின்றேன்.

இரவு 7–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது ஆர்.கே. நகர் தொகுதி, குறைந்த பரப்பளவில்

அதிகமான மக்கள்தொகையைக் கொண்ட நெருக்கடி மிகுந்த பகுதியாகும். இத்தொகுதியில் தண்டையார்பேட்டை மற்றும் கொருக்குப்பேட்டை பகுதியில் அடுத்தடுத்து நேரு நகர், எழில் நகர், கொருக்குப்பேட்டை முதலிய இடங்களில் 3 Railway crossings உள்ளன. ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும் ஒரு முறை இந்த Railway crossings மூடப்படுவதால் மிகப் பெரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, அப்பகுதி முழுவதும் எல்லா நேரங்களிலும் வாகனங்கள் நிறைந்து மக்களின் போக்குவரத்துக்குப் பேரிடராக இருந்து வருகின்றன. கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அப்பகுதியில் மேம்பாலம் கட்ட tender விடப்பட்டு என்ன காரணத்தினாலோ அப்பணிகள் மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டன. கேட்டதையெல்லாம் தருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் R.K. நகர் தொகுதி மக்களின் கனவாகவும் நீண்ட நாள் கோரிக்கையாகவும் உள்ள இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வண்ணம் நேரு நகர், எழில் நகர் பகுதிகளில் இரயில்வே துறையினருடன் இணைந்து, உயர்மட்ட மேம்பாலங்களும், கொருக்குப்பேட்டை பகுதியிலே ஒரு சுரங்கப் பாதையும் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 1996 முதல் 2001 வரையிலான ஐயா, தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒரு புதிய மைல் கல் என்றால், அது மிகையாகாது. அன்றைய ஒன்றிய அரசின் தாராளமயமாக்கல் கொள்கையினைக் கச்சிதமாகப் பயன்படுத்திக்கொண்டு, இனிவரும் காலங்களில் தகவல் தொழில்நுட்பம் ஒரு மாபெரும் புரட்சியினை உண்டாக்கும் என்பதைக் கணித்து, நாட்டிலேயே முதன்முதலில் அத்துறைக்கென்று ஒரு கொள்கையினை அறிவித்தவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். கொள்கையினை அறிவித்ததோடு மட்டுமல்லாமல், 2000 ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 4 ஆம் தேதி ரூ.340 கோடி மதிப்பீட்டில் சென்னை தரமணியில் ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழில்நுட்பப் பூங்காவினை உருவாக்கியவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள். அதனால், 12,000 பேருக்கு தகவல் தொழில்நுட்பத் துறையிலே வேலை கிடைத்தது. அதுமட்டுமல்லாமல் Mahindra Tech Park; சிறுசேரியிலே I.T. Park; மகளிருக்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா; கோவையிலே Tech City இப்படி, திருச்சி, மதுரை, நெல்லை என்று தமிழ்நாடு

2021 செப்டம்பர் 8] [திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்] முழுவதும் 19 மாவட்டங்களில், 19 இடங்களில் தொழில்நுட்பப் பூங்காக்களை தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசுதான் உருவாக்கியது. 1996 முதல் 2000 வரை 1,100 மென்பொருள் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உருவாக காரணமாக இருந்தது கழக ஆட்சி. அதனுடைய தொடர்ச்சியாகத்தான் இன்று நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள் சமூக ஊடகம் என்ற புதிய பிரிவினை உருவாக்கி, அரசின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்களை உடனுக்குடன் மக்களுக்கு எடுத்துச் சென்றிட வழிவகை செய்துள்ளார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தலைமுறையின் Online வகுப்பிற்கான தேவையினை அன்றே கணித்து, Virtual University–ஐ கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அந்த ஞான சூரியனின் வழியில் தொடர்வதுதான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையிலான கழக ஆட்சி. மேலும், உலகிலேயே ஒரு மொழியினைக் கற்றுக் கொடுக்க வந்த முதல் Virtual University இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், தகவல் தொழில்நுட்பத் துறையில் மாபெரும் சாதனையாக, இந்தியாவில் எந்த மாநிலமும் செய்திடாத வகையில், 'காகிதமில்லா e–Budget'–கூட்டத்தொடரை நடத்திக் காட்டியவர், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் Tablet devices வழங்கி, அதற்கான பயிற்சி வகுப்பினை நடத்தியவர், நம்முடைய மாண்புமிகு ஐயா தளபதி அவர்கள். ஆனால், முன்னுதாரணமாக இருக்க வேண்டிய ஒன்றிய அரசோ, Pegasus என்ற செயலியைப் பயன்படுத்தி ஒட்டுக் கேட்கும் வேலையில் மட்டுமே தன் கவனத்தைச் செலுத்தி வருகிறது. இவ்வாறு பல்வேறு புரட்சிகளை தொடர்ந்து செய்து வருவது நம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதில் பெருமிதம் கொள்வோம். இந்தச் சிறப்பான துறையின் மானியக் கோரிக்கையில் பேசியதில் பெருமிதம்கொள்கிறேன். அதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

போக்குவரத்துத் துறை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்தால், அதை நீங்கள் படித்ததாக ஏற்று, பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளலாம்.

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுகளாக இந்தச் சட்டமன்றத்தில் R.K. நகர் தொகுதி மக்கள் பிரதிநிதியின் குரல் ஒரு நாள்கூட ஒலிக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கேட்கும்வண்ணம், எனக்குக் கூடுதலாக நீங்கள் நேரம் ஒதுக்கித் தர வேண்டுமென்ற என்னுடைய தாழ்மையான கருத்தை ஏற்றுக்கொண்டு, ஜனநாயகக் கடமையை நீங்கள் ஆற்றுவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

திராவிட இயக்கம் வளர்த்துக் கொடுத்த கொடை, போக்குவரத்துத் துறை. இதில் போக்கு மட்டும்தான் இருக்கும்; பெரும்பாலும் வரத்து இருக்காது. அதனால்தான் என்னவோ இதற்கு போக்குவரத்து என்று பெயர் வைத்துள்ளனர். செல்வந்தர்களும், ஏழைகளும், ஜமீன்களும், சாமானியர்களும், உயர்ந்தோரும், தாழ்த்தப்பட்டோர் எனக் கருதப்படுவோரும், ஆண்களும், பெண்களும் சரிசமமாக அமர்ந்து பயணிக்கும் சமூக மாற்றத்தை உள்ளடக்கியதால், பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் போக்குவரத்துத் துறையை அரசு நிறுவனமாக வார்த்தெடுத்து வரலாறு படைத்தனர். இடையே வந்த ஆட்சியாளர்கள் அதனை தனியாருக்குத் தாரைவார்த்தும், பயணக் கட்டணங்களை உயர்த்தியும், சரியான நிர்வாகத் திறமையின்றி இத்துறையை பின்னடையச் செய்தனர். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 2010–2011 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நாளொன்றுக்கு 2 கோடியே 4 இலட்சம் பயணிகள் அரசு பேருந்துகளில் பயணித்து வந்தனர். அதுவே 2018–2019 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1 கோடியே 64 இலட்சம் பயணிகள் அரசு பேருந்துகளில் பயணித்தனர். கிட்டத்தட்ட 38 இலட்சம் பயணிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. இதற்குக் காரணம் பல வழித்தடங்களைத் தனியாருக்குத் தாரைவார்த்ததும், அரசுப் பேருந்துகளைக் குறைத்ததும்தான். அக்காலகட்டத்தில் அரசுக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு என்பது, சராசரியாக ஒரு டிக்கெட்டின் விலை ரூ.13 என்றளவில் கணக்கிட்டுப் பார்த்தால், நாளொன்றுக்கு 4 கோடியே 94 இலட்சம் ரூபாய். அதுவே ஆண்டுக்கு கிட்டத்தட்ட

2021 செப்டம்பர் 8][திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்]

1,803 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது. இதனால், போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வு உள்ளிட்ட அடிப்படை சலுகைகளைக்கூட வழங்க முடியாமல் அன்றைய அரசு திணறியது. தற்போது ஆட்சிப் பொறுப்பேற்ற கழக அரசு, பொறுப்பேற்ற 128 நாட்களுக்குள்ளாக நிறுத்தப்பட்ட வழித்தடங்களிலும், புதிய வழித்தடங்களிலும் மீண்டும் பேருந்துகளை இயக்கி வரலாறு படைத்து வருகின்றது. குறிப்பாக, எனது ஆர்.கே. நகர். தொகுதியில் ஏற்கெனவே நிறுத்தப்பட்ட வழித்தடங்களிலும், புதிய வழித்தடங்களிலும் 10 பேருந்துகளை மீண்டும் இயக்கியுள்ளது. இதற்குக் காரணமாக இருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், இதற்கு உறுதுணையாக இருந்த துறையின் அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 7–15

இன்னும் ஒருசில தொகுதிக் கோரிக்கைகளைப் பதிவு செய்ய விரும்புறேன். எனது ஆர்.கே. நகர் தொகுதியை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று, தண்டையார்பேட்டை வைத்தியநாதன் மேம்பாலத்திற்கு கிழக்கே உள்ள பகுதி, மற்றொன்று மேம்பாலத்திற்கு மேற்கே உள்ள பகுதி. இந்த மேற்குப் பகுதியில் இந்து, கிறித்தவ, இஸ்லாமிய மதங்களுக்கு என்று மயான பூமிகள் இல்லை. குறிப்பாக, நேத்தாஜி நகர், நேரு நகர், எழில் நகர் மற்றும் கொருக்குப்பேட்டை பகுதிகளில் வசிப்பவர்கள் நீண்ட தொலைவில் உள்ள காசிமேடு மற்றும் மூலக்கொத்தளம் மயான பூமியைத்தான் உபயோகித்து வருகின்றனர். இப்பகுதிவாழ் மக்கள் இதனால் மிகுந்த சிரமத்தை அடைந்து வருகின்றனர். எனவே, இப்பகுதி மக்களின் நீண்ட நாள் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வண்ணம், எழில் நகர் பகுதியில் பெருமளவு காலியாகவுள்ள அரசு நிலத்தில் இந்து, கிறித்தவ, இஸ்லாமிய மதங்களுக்கு என்று தனித் தனி மயான பூமிகளை அமைத்துத்தர வேண்டி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உங்கள் கோரிக்கைகள் எல்லாம், நீங்கள் படித்ததாகப் பதிவு செய்துகொள்ளப்படும். நேரம் அதிகம் இல்லை. இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டும். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளைப் படித்ததாகக் கருதி அவையில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக ஒரு கருத்தினை மட்டும் கூறி, என் உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

தேர்தல் பிரச்சாரத்தின்போது எனது தொகுதிக்குப் பிரச்சாரம் செய்ய வருகைதந்த எங்கள் தலைவர் அவர்கள் கொளத்தூர் என் செல்லப் பிள்ளை, ஆர்.கே. நகர் எனது தத்துப் பிள்ளை என்று கூறினார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உரிமையோடு கேட்கின்றேன். கடந்த பத்து ஆண்டுகளாகக் கேட்பாரற்று, சீரழிந்து கிடக்கின்ற எனது ஆர்.கே. நகர் தொகுதியைச் சீர் செய்யும்வண்ணம், நான் குறிப்பிட்டுள்ள எனது தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் தாயுள்ளத்தோடு நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை இப்பேரவையின் வாயிலாகக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

இந்திய ஒன்றியத்திலேயே முதன்முதலாக தொற்றுநோய் சிகிச்சைக்கென கட்டப்பட்ட மிகவும் பழமை வாய்ந்த மருத்துவமனை எனது ஆர்.கே. நகர் தொகுதியில் உள்ள தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையாகும்.

இம்மருத்துவமனை வளாகத்தில் பயன்பாடில்லாமல் கிட்டத்தட்ட 14 ஏக்கர் காலி நிலம் உள்ளது. அந்த இடத்தில் வடசென்னையில் உள்ள ஆர்.கே. நகர், பெரம்பூர், திருவொற்றியூர், மாதவரம், மணலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெரும்பான்மையான ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பெயரில் புதிய மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த பல்நோக்கு மருத்துவமனை ஒன்றினை அமைத்துத் தந்திட வேண்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக வேண்டுகோள் வைக்கின்றேன்.

கழிவுநீர்ப் பிரச்சினை. எனது தொகுதியில் கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கழிவுநீர்க் குழாய்கள் அனைத்தும் இன்றைய மக்கள் தொகைக்கு ஏற்புடையதாக

இல்லாமல் முற்றிலுமாகப் பழுதடைந்து உள்ளன. இதனால் அன்றாடம் தொகுதியெங்கும் தெருக்களில் வெளியேறும் கழிவு நீரால் மக்கள் பல தொற்றுநோய் பாதிப்புகளுக்கு உள்ளாகி அவதியுற்று வருகின்றனர். எனவே, இன்றைய மக்கள்தொகைக்கு ஏற்றவாறு நடைமுறையில் இருக்கும் 6 இன்ச் கழிவுநீர்க் குழாய்களை மாற்றி 12 இன்ச் அளவு விட்டமுள்ள குழாய்களை அமைத்து இக்கழிவுநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஆர்.கே. நகர் தொகுதியில் 17 நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள் உள்ளன. இதில் பல குடியிருப்புகள் கட்டப்பட்ட குறுகிய காலத்திலேயே மிகவும் சிதிலமடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு அச்சுறுத்தலாக உள்ளன. மேலும் இந்தப் பகுதிகளில் கழிவுநீர் வெளியேற்றுவதற்கான முறையான கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் மிகப் பெரிய சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு மக்கள் மிகவும் அவதியுற்று வருகின்றனர். இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வண்ணம் சிதிலமடைந்த குடியிருப்புகளை விரைந்து சீர்செய்திடவும், கழிவுநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி, மாண்புமிகு அமைச்சர் அவர்களை, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

துணை மின் நிலையம்: எனது ஆர்.கே. நகர் தொகுதியில் கடந்த 10 ஆண்டுகளாகப் பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்றவாறு மின் வாரியத்தின் சார்பாக யாதொரு பணியையும் கடந்த ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவில்லை. இக்காரணத்தால் அடிக்கடி மின்வெட்டு ஏற்பட்டு மக்கள் அவதியுற்று வருகின்றனர். இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வண்ணம் கொருக்குப்பேட்டை பகுதியில் 110/33/11 கிலோ வாட் துணை மின் நிலையம் ஒன்றினையும், தண்டையார்பேட்டை துர்கா தேவி நகர் பகுதியில் 110/33/11 கிலோ வாட் துணை மின் நிலையம் ஒன்றினையும் அமைத்திட வேண்டுகிறேன். மேலும், தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனை வளாகத்தில் கட்டடப் பணிகள் மட்டும் முடிவுற்று, பிற பணிகள் முடிவுறாமல் பாதியிலே நிற்கும் 110/33/11 கிலோ வாட் GIS துணை மின் நிலையப் பணிகளை விரைவில் முடித்துத் தந்து, மக்கள் பயன்பாட்டிற்கு வழிவகை செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு

அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சமீபத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்ட நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முதற்கட்டமாக 28 மின்மாற்றிகளை அமைத்துத் தர உத்தரவிட்டு அப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிக்கு உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த துறையின் அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியை ஒட்டியுள்ள கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் தினசரி மலைபோல் குவிந்துவரும் குப்பை மற்றும் கழிவுகளால் மிகப் பெரிய சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு எழில் நகர் மற்றும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகளில் உள்ள மக்கள் பல்வேறு தொற்றுநோய் பாதிப்புகளுக்கு ஆளாகி அவதியுற்று வருகின்றனர். அதனால் மக்களுக்குப் பாதிப்பு இல்லாத வண்ணம் அந்த குப்பைக் கொட்டும் வளாகத்தை வேறு புறநகர்ப் பகுதிக்கு மாற்றித் தந்திட வேண்டி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக வேண்டுகோள் வைக்கின்றேன்.

எனது ஆர்.கே. நகர் தொகுதியில் சுமார் 60 ஆயிரம் மீனவர்கள் வசிக்கின்றனர். அதில் பெரும்பாலான மக்கள் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்கின்றனர். இங்குள்ள காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் பிடித்துவரும் மீன்களைத் திறந்தவெளியில் விற்பனை செய்து வருகிறார்கள். மழைக்காலங்களில் இங்கு மீன் விற்பனை செய்ய முடியாமல் அவதியுற்று வருகின்றனர். இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வண்ணம் அங்கு ஒரு சர்வதேச தரத்திலான நிரந்தர கொட்டகை அமைத்து அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டுகொள்கிறேன்.

காசிமேடு மீன்பிடி துறைமுகத்திலிருந்து பிடித்துவரும் ஆழ்கடல் மீன்களுக்கு பிற மாவட்டத்தில் உள்ளதைப் போல சரியான விலை கிடைப்பதில்லை. இதனால் இப்பகுதி மீனவர்கள் இத்தொழிலைத் தொடர முடியாமல் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். இவர்களின் வாழ்வாதாரம் தொடர்புடைய இப்பிரச்சினையில் அரசு தனிக் கவனம் செலுத்தி மற்ற மாவட்டங்களில் கிடைப்பது போன்றே இவர்களுக்கும் உரிய விலை கிடைக்க ஒரு வரைமுறையை ஏற்படுத்தி இப்பிரச்சினைக்கு

விரைந்து தீர்வு காணுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி மண்டலம் 4, வார்டு 41–ல் உள்ள சுண்ணாம்புக் கால்வாய் பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான 4.43 ஏக்கர் நிலம் பயன்பாடின்றி காலியாக உள்ளது. இளைஞர்கள் மத்தியில் விளையாட்டினை ஊக்குவிக்கின்ற வகையில் அந்தக் காலி இடத்தில் ஒரு Sports Academy அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 39–வது வார்டில் உள்ள செரியன் நகர் பகுதியில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் மிகவும் பழுதாகி எந்த நேரத்திலும் இடிந்து விழும் ஆபத்தான நிலையில் உள்ளது. அதனை ஒட்டி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்குச் சொந்தமான சுமார் 5 கிரவுண்ட் நிலம் காலியாக உள்ளது. அதனைப் பயன்படுத்தி ஆரம்ப சுகாதார நிலையத்துடன் 100 படுக்கைகள் வசதிகொண்ட புதிய மகப்பேறு மருத்துவமனையை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள தண்டையார்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனையினைத் தரம் உயர்த்தி பல்நோக்கு மருத்துவமனையாக மாற்றியமைத்து ஏழை, எளியவர்களுக்கு உயர்தர மருத்துவச் சேவைகள் கிடைத்திட வழிவகை செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கொருக்குப்பேட்டையில் நடைபெற்றுவரும் மூலிகைப் பூங்கா பணிகள் முழுமையாக முடிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன. அப்பணிகளை விரைந்து முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆர்.கே. நகர் தொகுதி, 42–வது வார்டில் பழைய வண்ணாரப்பேட்டை, MCM தோட்டம், 2–வது தெருவில் அமைந்துள்ள அருள்மிகு சித்தி கணேசர் துர்காலெட்சுமி நடராஜப் பெருமாள் திருக்கோயிலின்கீழ் இயங்குகின்ற ஸ்ரீதுர்கா லட்சுமி

திருமண மண்டபம் போதிய பராமரிப்பின்றி, சிதிலமடைந்து பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருகிறது. இந்தத் திருமண மண்டபத்தைச் சீர்செய்து, நவீன வசதிகள்கொண்ட திருமண மண்டபமாக மாற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கோரிக்கை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். முதலமைச்சர் உள்ளிட்ட அவையோர் அனைவரையும் வணங்குகிறேன். போக்குவரத்துத் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளை நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்கு முன்னால் தமிழில் விருப்பமானவர்கள், தமிழ் அறிஞர்கள், இலட்சக்கணக்கான பாட்டாளி வர்க்கத்தினுடைய எங்கள் கட்சித் தோழர்களின் விருப்பங்களை இங்கே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். சுதந்திரப்போராட்டத்தில் தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கி, சுயமரியாதை இயக்கத்தின் சுடரொளியாய், தந்தை பெரியாரின் சீடராய், தன்னுடைய அரசியல் பயணத்தைத் தொடங்கியவர்; பாட்டாளி வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவராய், இதே மாமன்றத்தில் பல சட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றியவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், 'அண்ணா' என்று அழைத்த இருவரில் ஒருவர், முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள், அடுத்ததாக, இலக்கியப் பேராசான் ஜீவா அவர்களைத்தான் அழைத்ததாக எங்கள் கட்சியில் சொல்லுகிறார்கள். இது தமிழ்நாடு அறிந்த செய்தி. நான் இந்த அவையில் சொல்லிக்கொள்வதெல்லாம், தமிழ் வளர்ச்சிக்காக தன்னுடைய வாழ்நாளையே அர்ப்பணித்த மகத்தான தலைவன்; இதே சட்டமன்றத்தில் ஏழைகளுக்காக, எளியவர்களுக்காக, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களையும், சட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருந்த, இலக்கியப் பேராசான் ப. ஜீவானந்தம் அவர்களுடைய படத்தை இந்த அவையில் வைக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். தாயுள்ளத்தோடு, கருணையோடு பல திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம்

நாங்கள் விண்ணப்பித்துக்கொள்கிறோம். இந்தத் தேசத்தை நிர்மாணித்தவர்களுக்கெல்லாம் நீங்கள் சிறப்புச் செய்திருக்கிறீர்கள். பல சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கெல்லாம் நீங்கள்தான் மரியாதை செய்திருக்கிறீர்கள். இந்தச் சமூகத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர்களையெல்லாம் நீங்கள்தான் அடையாளப்படுத்தியிருக்கிறீர்கள், அங்கீகரித்திருக்கிறீர்கள். அந்த நம்பிக்கையோடு ஒரு தொழிலாளி வர்க்கத்தின் கட்சியிலிருந்து நாங்கள் கேட்கிறோம். இந்தப் பணியை நீங்கள் செய்து முடிக்க வேண்டுமென்று பணிவோடு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7–20

அதோடு சேர்த்து, இந்தப் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துகளை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முன்வைக்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் இருக்கிற பெண்களெல்லாம், மாற்றுத் திறனாளிகளெல்லாம் உங்களை மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். 'வாழ்த்துவதற்கு வார்த்தையே இல்லை' என்று சொல்கிறார்கள். அந்தக் கோடிக்கணக்கான மக்களோடு கலந்து நின்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் உங்களை மனதாரப் பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழையெளிய, விளிம்பு நிலையில் இருக்கிற அடித்தட்டு மக்களுடைய வாழ்க்கைக்காக, அவர்களுடைய பேருந்துப் பயணத்திற்காக, கட்டணச் சலுகையை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் மனதார பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அடுத்து, போக்குவரத்துத் துறை. தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகம் என்றாலே முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் முன்னேற்றக் கழகத்தினுடைய அரசியலின் அஸ்திவாரம்; அதுதான் அவருடைய அரசியல் உறுதிக்கு எடுத்துக்காட்டு என்பதை பல நேரங்களில் நிரூபித்திருக்கிறார்கள். 1971–ல் இந்தப் போக்குவரத்துக் கழகம் தேசியமயமாக்கப்பட்டது. தேசியமயமாக்கப்பட்டது என்று வெறும் வார்த்தையால் சொல்லிவிட முடியாது. அந்த நேரத்தில் இந்தியா முழுவதிலும் அப்படிப்பட்ட சூழ்நிலை எங்குமே இல்லை. ஆனாலும்,

சாதாரணமான சாமானியர்களும், சாமானியர்களாக இருக்கிற ஏழையெளியவர்களும் பயன்படுத்துகிற வாகனம், இந்த வாகனம். இந்தத் துறை அரசின் கையில்தான் இருக்க வேண்டும். போக்குவரத்துத் துறை ஒரு சேவை நிறுவனம். இதுதான் மக்களுக்குப் பணியாற்றுகிற, மிக முக்கியப் பணியைச் செய்து முடிக்கிறது. கோடானுகோடி மக்கள் பெரும் நகரத்திலிருந்து கிராமத்திற்கும், கிராமத்திலிருந்து பெரும் நகரத்திற்கும் பயணிக்கிற மகத்தான சேவையைச் செய்கிற போக்குவரத்துக் கழகத்தை, கலைஞர் அவர்கள் நாட்டுடைமையாக்கினார்கள். அதனை நாட்டுடைமையாக்கியதோடு மட்டுமல்ல சில இடங்களில், சில மாவட்டங்களில் தனியாருக்கு அனுமதியில்லை, அங்கீகாரம் இல்லை என்று இன்றுவரை அதனை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அந்தப் பொது நிறுவனத்தை நாங்கள் பெருமையோடு பார்க்கிறோம். அந்தப் பொது நிறுவனம்தான், இந்தியாவில் இருக்கிற ஏழையெளிய மக்களுக்கே நம்பிக்கையாக இருக்கிற பொதுத் துறை நிறுவனமான, தமிழ்நாடு அரசினுடைய போக்குவரத்துக் கழகம். அந்தப் போக்குவரத்துக் கழகம் இன்றைக்கு மிகப் பெரிய நெருக்கடியில் இருக்கிறது. 'அதனுடைய குரல்வளை நெறிக்கப்படுகிறது' என்று வெள்ளை அறிக்கையிலும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல, நிதிநிலை அறிக்கையிலும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அதிலே இருக்கிற உண்மைகளைப் புரிந்துகொள்கிறோம். ஆனாலும், சில கருத்துக்களை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய போக்குவரத்துத் துறை மிகப் பெரிய அளவில் கடனில் இருக்கிறது. பணியாளர்கள், ஓய்வூதியர்கள், அதேபோல, டீசல் விலையேற்றம் போன்ற காரணங்களினால் அது மிகப் பெரிய நெருக்கடியில் இருப்பதாக அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் சொல்வதெல்லாம் மிகப் பெரிய தொழில்நுட்பத்தோடு தற்போது மனித வள மேம்பாடும் சேர வேண்டும். போக்குவரத்துக் கழகம் 1971–ல் தேசியமயமாக்கப்பட்டது முதல் இன்றுவரை ஆலமரம்போல் உயர்ந்திருக்கிற அந்த நிறுவனத்தை வளர்த்தெடுத்தவர்கள் அதன் தொழிலாளர்கள்தான். இது 50–வது ஆண்டு, பொன்விழா கொண்டாட வேண்டிய காலம்.

அதில் பணியாற்றிய தோழர்களையும், பணியாளர்களையும், ஓய்வூதியர்களையும் நாம் கௌரவப்படுத்த வேண்டிய காலம் இது. இந்தக் காலத்தில்தான் நாம் நெருக்கடியில் இருக்கிறோம். நாங்கள் சொல்லிக் கொள்வதெல்லாம், இந்த நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கு—சமூக நலத் திட்டங்களுக்காகச் சேவை செய்கிற அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்குத் தேவையான நிதியை முழுவதுமாகக் கொடுத்துவிடலாம்.

அதேபோல, போக்குவரத்துக் கழகம் இயங்குவதற்காக நாம் பல்வேறு கட்டங்களிலிருந்து நிதியைத் திரட்டுகிறோம். இங்கே அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பொது மக்களிடமிருந்து நிதியைத் திரட்டுகிறோம். தொண்டு நிறுவனங்களிடமிருந்து நிதியைத் திரட்டுகிறோம். அப்படி திரட்டப்படுகிற நிதிகளுக்கெல்லாம் நாம் வெறும் 7 சதவிகிதம் என்ற அளவில் வட்டியாகக் கொடுக்கிறோம். ஆனால் அவ்வாறு முதலீடு செய்கிற மக்களிடமிருந்தும், முதலீடு செய்யப்படுகிற அந்தத் தொண்டு நிறுவனங்களிடமிருந்தும் நாம் பெறுகிற நிதிக்கு வட்டியை உயர்த்திக் கொடுக்கலாமா? 10 சதவிகிதம் அளவிற்குக் கொடுத்து அவர்களிடத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தலாமா? போக்குவரத்துக் கழகத்தை நட்டத்திலிருந்து மீட்டெடுக்கும் பணிகளில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பேருந்துகளுக்கான உதிரி பாகங்களை நாம் வாங்குகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

இரவு 7–25

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், அருமைச் சகோதரர் திரு. மாரிமுத்து அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் இங்கே வைத்தார்கள். அவர்கள் ஒன்றை மாத்திரம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். போக்குவரத்துத் துறை என்பது ஏறத்தாழ 42,149 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற ஒரு துறையாக இருக்கிறது. அதிலும், தற்போதைய கொரோனா காலத்தில், சென்ற ஆட்சியில்

7,659 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில்தான், இன்றைக்கு போக்குவரத்து வளர்ச்சி நிறுவனம் மூலமாக ஏராளமான தொகைகளை பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறோம். அதற்கு வட்டியாக, 7¼% கொடுப்பதிலிருந்து 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, 8 சதவிகிதத்திற்கு மேல் 8½ சதவிகிதம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்குமேலும் கொடுப்பதென்பது மிகவும் எளிதான காரியமல்ல என்பதை அவர் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, எங்களால் முடிந்த அளவிற்கு, 60 வயதுக்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு 8½ சதவிகிதம் வரை கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள்.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுத் துறை நிறுவனங்களிலேயே, இதுதான் நம்பிக்கையான பொதுத் துறை நிறுவனம். இந்த நிறுவனம்தான் மிக அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற நிறுவனம். இதைத்தான் நாம் பாதுகாக்க வேண்டும். மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இதுபோன்ற நிறுவனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இங்கே மத்திய அரசு சாலைகளையெல்லாம் ஒப்பந்தம்மூலம் குத்தகைக்கு விடுகிறார்கள். இங்கே விமான நிலையங்களையெல்லாம் குத்தகைக்கு விடுகிறார்கள். நாம் அச்சப்பட்டோம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இங்கு ஒரு தீர்மானத்தைக்கூட கொண்டுவந்தார்கள்; நம் மத்திய அரசிற்கு கடிதம்கூட எழுதியிருக்கிறார்கள். பொதுச் சொத்துக்கள் என்பது, இது இந்தியாவின் சொத்து. இது மக்களுடைய சொத்து. இந்தச் சொத்து எந்தத் தனி நபர்களுக்கும் போய்விடக் கூடாது என்பதற்காக, கவலையோடு பரிசீலித்திருக்கிறோம். அந்த அடிப்படையில் இதைப் பாதுகாக்க வேண்டிய கடமை இந்த அரசிற்கு இருக்கிறது என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேருந்துகளுக்கான உதிரி பாகங்களையெல்லாம் வாங்குகிறோம். அரசின் BHEL போன்ற நிறுவனங்களெல்லாம் இருக்கின்றன. பேருந்துகளுக்குரிய உதிரி பாகங்களையெல்லாம் அந்த நிறுவனங்களிலிருந்து வாங்குவதற்கு நாம் முயற்சிகளை

மேற்கொள்ளலாம். அதேபோன்று நமக்கு, தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ரப்பர் தோட்டக் கழகம் இருக்கிறது. Tyre, tube போன்றவைகளையெல்லாம் உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளையெல்லாம் நாம் மேற்கொள்ளலாம். இதுபோன்ற பணிகளையெல்லாம் நாம் செய்து முடிக்கலாம். இன்னொன்றையும் நான் சொல்கிறேன். பேருந்துகளுக்குத் தேவையான டீசலை நிரப்புவதற்கு எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து வாங்குகிறோம். ஆனால், எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து வாங்குகிறபோது, அதிக அளவில் வரி செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அதை ஒன்றிய அரசிடமிருந்து பெற்றுக்கொள்ள நாம் நிர்ப்பந்தம் செய்ய வேண்டும்; நாம் போடுகிற டீசலுக்கு வரி வசூலிக்கக் கூடாது என்பதை நாம் சொல்ல வேண்டும். இதுபோன்ற பொதுத் துறை நிறுவனங்களில் இப்படிப்பட்ட சீர்திருத்தங்களையெல்லாம் நாம் செய்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊழியர்கள் மிகப் பெரிய நிதி நெருக்கடியில் இருக்கிறார்கள். அவர்களுக்கு அகவிலைப்படி இப்போது கிடைக்கவில்லை. அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியை விதி 110—ன்கீழ் அறிவித்திருக்கிறோம். அகவிலைப்படியைக் கொடுப்பதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டும். போக்குவரத்துத் துறை ஊழியர்களோடு ஒப்பந்தம் போடுகிறோம். ஓராண்டு முடிந்துவிட்டது, ஓராண்டு முடிந்தாலும், அவர்களுக்கான ஊதியத் தொகை, bonus போன்றவை இன்னும் வழங்கப்படாமல் இருக்கின்றன. இரண்டாண்டுகளுக்கு மேல் ஆகின்றன. அவற்றையெல்லாம் வழங்கி, கருணை உள்ளத்தோடும், தாயுள்ளத்தோடும் அந்த ஊழியர்களையெல்லாம் பாதுகாக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொழிலாளர்களுடைய பிரச்சினை குறித்துப் பேசினார்கள். ஏற்கெனவே 31—8—2019—வுடன் அந்த ஊதிய ஒப்பந்தம் முடிந்துவிட்டது. அதற்குப்பிறகு ஊதிய ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கவே இல்லை. அதற்கான இடைக்கால நிவாரணமாக ரூ.1,000/—ஐக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக 1—9—2021—ல் நான் ஒரு தொழிற்சங்கக் கூட்டத்தை நடத்தி, அதில்

நானும் நம்முடைய அரசு அதிகாரிகளும் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளையெல்லாம் ஆராய்ந்து, ஒரு குழு அமைக்கச் சொல்லியிருக்கிறோம். அதற்கான துரிதமான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, சென்ற ஆட்சியில் நடைபெறாத பேச்சுவார்த்தையை இந்த ஆட்சியில் நிச்சயமாக நடைபெற நடவடிக்கை எடுப்போம் என்ற உறுதியை நான் உங்களுக்கு அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள்.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியிலிருந்து நகரத்திற்கு வருவதற்கான ஒரே போக்குவரத்து, பேருந்துப் போக்குவரத்து மட்டும்தான். எங்களுக்கு இரயில் போக்குவரத்து சென்னையிலிருந்து இயக்கப்படவில்லை. ஆனால், அதற்கான தடங்கள் இருக்கின்றன. சாலை வசதிகளெல்லாம் இருக்கின்றன. ஆனால் இயக்கப்படவில்லை, எனவே, இந்த வழித்தடத்தில் நல்ல பேருந்துகளை சென்னைக்கு இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதேபோன்று திருத்துறைப்பூண்டியிலிருந்து தொழில் செய்வதற்காக கோயம்புத்தூர், திருப்பூர் போன்ற பகுதிகளுக்கு வேலைக்குச் செல்கிற தொழிலாளர்களுக்கு நல்ல பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். அத்துடன், ஒரே ஒரு சின்ன கருத்தை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். போக்குவரத்து என்பது வெறும் பயணிகளை மட்டும் ஏற்றுகிற போக்குவரத்தாக இருக்கிறது. சரக்குப் போக்குவரத்தையும் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இன்றைக்கு இரயில்வே துறையைப் பொறுத்தவரையில், பயணிகளைவிட சரக்குப் போக்குவரத்தில்தான் அதிக இலாபம் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சரக்குப் போக்குவரத்தையும் பயன்படுத்துவதற்கு ஆலோசனைகளை மேற்கொள்ள வேண்டும்.

2021 செப்டம்பர் 8] [திரு. K. மாரிமுத்து]

இரவு 7–30

திருத்துறைப்பூண்டி தொகுதியில், டாக்டர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் கல்லூரி தொடங்கப்பட்டது. கிட்டத்தட்ட, 13 ஆண்டுகள் ஆகின்றன. கடந்த கஜா புயலின்போது மிகப் பெரிய சேதாரம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சியில் இருந்தவர்கள் அதைத் திரும்பிப் பார்க்கவில்லை. எனவே, தயவுசெய்து கேட்கிறேன், அங்கு சீரமைப்புப் பணிகளைச் செய்வதற்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அக்கல்லூரியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அல்லாத. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. K. மாரிமுத்து: *அது உறுப்புக் கல்லூரியாக இருந்து, அரசுக் கல்லூரியாக மாறிவிட்டது. அதனால் யார் சம்பளம் கொடுப்பது என்ற பிரச்சினையில், ஆசிரியரல்லாத ஊழியர்கள் சம்பளம் இல்லாமல் கிட்டத்தட்ட 5 மாதங்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதியத்தை வழங்குவதற்கு கருணையுள்ளத்தோடு ஆவன செய்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் பல கோரிக்கைகள் இருக்கின்றன. இருந்தாலும் நேரத்தைக் கருதி, விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி V. அமலு அவர்கள்.*

*****திருமதி V. அமலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். 'குணாளா, மணாளா, குலக்கொழுந்தே, சென்று வா குடியாத்தம், வென்று வா கோட்டைக்கு' என்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு நம்பிக்கை தந்து, வெற்றி பெறச் செய்த, பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் நம்பிக்கைக்குரிய தொகுதி, குடியாத்தம். குட்டி சிவகாசி குடியாத்தம் என்று அன்பாக அழைத்த தலைவர் கலைஞர் அவர்களின் ஆசியுடன் இந்த குடியாத்தம் தொகுதி மேம்பட, ஏராளமான தேர்தல் வாக்குறுதிகளை வழங்கிய வள்ளல், இந்த மருத்துவ பேரிடர் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து

வளங்களையும் பயன்படுத்தி, சிறப்பாக பொற்கால நல்லாட்சி செய்துவரும், மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் தளபதியார் அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். சட்டமன்றத்தில் 50 ஆம் ஆண்டு பொன்விழா காணும் மண்ணின் மைந்தர், அண்ணன் கழக பொதுச் செயலாளர் அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், எனக்கு வாக்கு சேகரித்த தமிழக இளஞ்சூரியன் அண்ணன் அவர்களுக்கும், என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அல்லும்பகலும் அயராது பாடுபட்டு, என்னை வெற்றியடையச் செய்த வேலூர் மாவட்டச் செயலாளர் அண்ணன் அவர்களுக்கு இந்த நேரத்தில் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது வெற்றிக்குப் பாடுபட்ட அனைத்து நகர, ஒன்றிய, கழக நிர்வாகிகளுக்கும், தோழமைக் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் தலைவரின் கோடானு கோடி உடன்பிறப்புகளுக்கும், எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய, ஏராளமான கைத்தறி, பீடி, தீப்பெட்டி, தோல் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் அடங்கிய குடியாத்தம் தொகுதியின் மக்களுக்காக என்னைப் பேச அனுமதித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பவியல் துறை. தமிழகத்தில் கடந்த 2000 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் முதன்முதலாக சென்னை அருகேயுள்ள தரமணியில் தகவல் தொழில்நுட்ப ப்பூங்கா தொடங்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தந்த பெருமை நமது கழக ஆட்சியையே சாரும். இது சுமார் 21 ஆண்டுக் காலமாக தொடர்ந்து நல்ல இலாபத்தினை ஈட்டி வருகிறது. இதனைத் தொடர்ந்து 2010 ஆம் ஆண்டு கோவை மாநகரத்தில், நமது மாண்புமிகு முதல்வர், அன்றைய துணை முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் கோயம்புத்தூரில் TIDCO, ELCOT, Software Technology Park of India (STPI) மற்றும் Tidel Park ஆகியவை ஒன்று சேர்ந்து, ரூ.380 கோடி மதிப்பீட்டில் புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா திறந்து

வைக்கப்பட்டது. அதன்மூலம் சுமார் 12,000–க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்று, நமது தமிழக இளைஞர்கள் பல்வேறு நாடுகளில் தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றுவதற்கு வழிவகை செய்யப்பெற்று பணியாற்றி வருகின்றனர். தற்போது நமது சட்டமன்றக் கூட்டத்தொடர் முழுக்க முழுக்க தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் காகிதமில்லா budget கூட்டத்தொடராக நடைபெற்று வருவது இத்துறையின் வளர்ச்சியை உலகிற்கு பறைசாற்றும்; இதற்காக நம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இ–சேவை மையம்மூலம் அரசிற்குத் தேவையான மனுக்களைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கான வாய்ப்பு உருவாக்கித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

இரவு 7–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு போக்குவரத்துத் துறையில் மாபெரும் புரட்சி செய்து, இரு சக்கர வாகனங்களே செல்ல முடியாத இடத்திற்கெல்லாம் பாதை அமைத்து, சிற்றுந்து, Mini Bus சேவையை அறிமுகப்படுத்தி, மக்களின் வாழ்வாதாரத்தை மேம்பாடு அடையச் செய்தவர், கழக ஆட்சியின் தலைவர் கலைஞர் அவர்கள். சுமார் 1,25,000–க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கும் போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்கு கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பணப் பயன்கள் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது பல்வேறு வகையான பணப் பலன்களை வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்பாடு அடையச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 8.33 சதவிகிதமாக இருந்த bonus தொகையை 20 சதவிகிதமாக உயர்த்தியதும், நமது கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களே என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஒன்றிய அரசால் தினம், தினம் டீசல் மற்றும் பெட்ரோல் விலை உயர்த்தப்பட்ட காலங்களில்கூட பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமல் தமிழக மக்களைக் காத்து வரும், தமிழக அரசிற்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த சில தினங்களுக்கு முன்புகூட, பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்பட்ட காலத்தில், மாணவர்கள் கல்வியைப்பெற தடை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, தொடர்ந்து இலவசமாகப் பேருந்தில் பயணிக்கலாம் என்பதனை அறிவித்த தமிழக அரசிற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாடு போற்றும் நல்லவராய், ஊர் போற்றும் உத்தமராய், திகழும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் ஒரு பெண்ணாய், எங்கள் பெண் குலத்திற்கு இலவச பேருந்து சேவையை வழங்கியமைக்காக எனது வாழ்நாள் முழுவதும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முதலில் இலவசமாக பேருந்தில் செல்லும் சேவையை, மொழிப் போர்த் தியாகிகளுக்கு அறிமுகம் செய்த ஆட்சியும் கழக ஆட்சியே! இன்று மாற்றுத் திறனாளிகள் வரை இலவசமாய் பேருந்தில் பயணிப்பதை உறுதி செய்த ஆட்சியும் கழக ஆட்சிதான் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதி சார்ந்த சில கோரிக்கைகளை தங்கள் வாயிலாகப் பதிவு செய்கிறேன்.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே பேரணாம்பட்டு பஸ் நிலையம் காவல் துறையின் அலுவலகத்தின் அருகிலிருந்து செயல்பட்டு வருகிறது. இப்பேருந்து நிலையத்திலிருந்துதான் ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்கு பேருந்துகள் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அருகிலுள்ள காவல் துறைக்குச் சொந்தமான இடத்திற்கு பேருந்து நிலையத்தை மாற்றி, பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க டெல்லி செங்கோட்டையில் ஏற்றிய முதல் தேசியக் கொடியை வடிவமைத்து வழங்கிய குடியாத்தம் நகரத்தில் நினைவுத் தூண் அமைத்துத்தர வேண்டுமாய் தங்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

குடியாத்தம் நகரத்தில் போக்குவரத்து நெரிசலால் மக்கள் பாதிப்பு அடைந்து வருகிறார்கள். இதனால், வலது மற்றும் இடது புறவழிச் சாலையை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் கவுண்டின்யா மகாநதி குறுக்கே கெங்கையம்மன் திருக்கோயில் அருகில் ஓர் உயர்மட்ட மேம்பாலம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நீண்ட நாட்களாக கிடப்பில் உள்ள பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் தொகுதிக்குட்பட்ட 56 ஊராட்சிகளில், சுமார் 40–க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் இன்னும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. எனவே, அனைத்து ஊராட்சிகளுக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, குடியாத்தம் தொகுதி மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யுமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7–40

குடியாத்தம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பத்ரபள்ளி அணையைக் கட்டி முடித்து பேர்ணாம்பட்டு மக்களின் குடிநீர்ப் பயன்பாட்டிற்கு உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் மற்றும் பேர்ணாம்பட்டு பகுதிகளில் பிரதான தொழிலான நெசவு, தீப்பெட்டி மற்றும் பீடி சுற்றும் தொழில்கள் நடைபெற்று வந்தன. இந்தத் தொழில்கள் தற்போது அழிவின் விளிம்பில் இருக்கின்ற காரணத்தினால் குடியாத்தம் முதல் பேர்ணாம்பட்டு இடையே தொழிற்பேட்டையை அமைத்து வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் அரசு பொது மருத்துவமனையில் துறைவாரியான மருத்துவர்களுக்கு போதிய இடவசதியின்மை காரணமாக ஒரே அறையில் அனைத்துத் துறைகளுக்கும் மருத்துவம் பார்க்கின்ற சூழ்நிலை உள்ளது. எனவே, புதிய கட்டடம் அமைத்து, போதுமான அளவு உயிர்காக்கும் மருந்துகளைத் தடையின்றி வழங்கி குடியாத்தம் மக்களின் உடல் நலனைப் பேணிக் காக்க உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் அரசு மருத்துவமனையினைத் தரம் உயர்த்தி மாவட்ட அரசு மருத்துவமனையாக அறிவித்திடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். முன்னாள் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு அப்போதைய பொதுப் பணித் துறை அமைச்சர், தற்போதைய நீர்வளத் துறை அமைச்சர், அவை முன்னவர் அவர்களின் தலைமையில், முன்னாள் முதலமைச்சர் தலைவர் கலைஞர்

அவர்களின் திருக்கரங்களால் திறந்துவைக்கப்பட்ட மோர்தானா அணையின் அருகில் சிறுவர் பூங்கா அமைத்து சுற்றுலாத் தலமாக அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குண்டலப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட ரங்கப்பேட்டை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான வனத் துறைப் பகுதியில் சுமார் 3 கி.மீ. அளவிற்கு வனத் துறையின் அனுமதி பெற்று சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் கங்காதர சுவாமி நகராட்சி நடுநிலைப் பள்ளியினை உயர் நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட பொது மக்களின் பங்களிப்பாக ரூபாய் ஒரு இலட்சத்தினை 2015 ஆம் ஆண்டு செலுத்தியும் இதுநாள் வரையிலும் தரம் உயர்த்தப்படவில்லை. எனவே, இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித்தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மசிகம் மற்றும் சோம்லாபுரம் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளி கடந்த 50 ஆண்டுக் காலமாக இயங்கி வருகிறது. இப்பள்ளியின் கட்டடம் மிகவும் பழமையாகி தற்போது இடிந்துவிழும் நிலையில் இயங்கி வருகிறது. எனவே, பள்ளிக் கல்வித் துறைமூலம் புதிய கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மோர்தானா, சேம்பள்ளி, கொட்டரம்மடுகு, கொண்டலப்பள்ளி, அரவட்லா, எருகம்பட்டு, பத்ரப்பள்ளி ஆகிய பகுதிகளுக்கு டவர் அமைத்து, தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தித் தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். பேர்ணாம்பட்டிற்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்துடன் சேர்த்து பேர்ணாம்பட்டு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகப் போக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் நகரில் வார்டு 27, 28, 29, 35 ஒட்டிய பகுதிகளுக்கு சேம்பள்ளி கூட்ரோடு வரை ஆற்று ஓரம் போக்குவரத்து நெரிசல் உள்ளதால் தரைப்பாலம் அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் பகுதியில் அரசுக் கல்லூரி ஏதும் இல்லாத காரணத்தினால் பெண்கள் இடைநிற்றல் விகிதம் மிகவும் அதிகம் உள்ளது. எனவே, குடியாத்தம் தொகுதியில், பேர்ணாம்பட்டில் அரசு பெண்கள் கலைக் கல்லூரியினை அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் எனக்கு பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

இரவு 7–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.

2021 செப்டம்பர் 8]

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மண்ணுலகை விட்டுச் சென்றாலும், உலகத் தமிழர்களின் இதயங்களில் இரட்டை இலையாய், நீக்கமற நிலைத்து நிற்கும் எங்கள் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் துயில்கொண்டிருக்கும் எங்கள் குடும்ப தெய்வம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு விவாதத்தில், மதுரை உயர் நீதிமன்றம் ** இருக்கின்றது என்ற வார்த்தையை, சொற்றொடரை நீங்கள் பயன்படுத்தியிருக்கிறீர்கள். அதை கொஞ்சம் நீக்கிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நீக்கிவிடுகின்றேன். நான் பயன்படுத்திய அந்தச் சொற்களை, அமைச்சர் சொன்னதும் உட்பட, நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.

திரு. மா. செந்தில்குமார்: வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் துயில்கொண்டிருக்கும் எங்கள் குடும்ப தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் திசை நோக்கி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மாவின் வழியில், புரட்சித் தலைவரின் எழுச்சிப் பாதையில் குடிமராமத்துப் பணிகள்மூலம் கரிகால் சோழன் காலத்தைக் கண் முன்னே கொண்டு வந்த குடிமராமத்து நாயகன் எங்கள் மதிப்பிற்குரிய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தென்பாண்டிச் சிங்கம், ஜல்லிக்கட்டு நாயகன், தேனி தந்த தங்கம், எங்கள் மதிப்பிற்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டப் பேரவை பட்ஜெட் கூட்டத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தொடரில் எனக்குப் பேச வாய்ப்பு நல்கிய எங்கள் கழகச் சட்டமன்றக் கொறடா மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி ஒன்றியம், வானவரெட்டி என்கின்ற குக்கிராமத்தில் எனது தந்தையார் மாரிமுத்து, எனது தாயார் அன்னபெட்டம்மாள் ஆகியோரின் மகனாக எளிய குடும்பத்தில் பிறந்த என்னை, கள்ளக்குறிச்சி மாவட்ட அமைப்புச் செயலாளராக, ஓட்டுநர் அணி செயலாளராக நியமனம் செய்து, கள்ளக்குறிச்சி கழகப் பணியாற்றிட வாய்ப்பளித்து, சட்டமன்றத் தேர்தலில், கள்ளக்குறிச்சி (தனி) சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்து வெற்றி பெறச் செய்து, இந்தச் சிறப்பு வாய்ந்த மாமன்றத்தில் பேசுகின்ற அளவுக்கு என்னை ஆளாக்கிய எங்கள் கண் முன்னே தெய்வமாகக் காட்சியளிக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நினைவுகூர்ந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும், விழுப்புரம் மாவட்டத்தின் விடிவெள்ளி, எங்கள் பாசத்திற்குரிய அண்ணன் மாண்புமிகு முன்னாள் சட்டத் துறை அமைச்சர், விழுப்புரம் மாவட்ட கழகச் செயலாளர் திரு. சி.வி. சண்முகம் அவர்களையும் வணங்குகின்றேன்.

எங்கள் கள்ளக்குறிச்சி மாவட்டம் உருவாக பெரும் காரணமாகத் திகழ்ந்த எளிமையின் சிகரம், எனது அரசியல் வழிகாட்டி, கள்ளக்குறிச்சி மாவட்ட கழகச் செயலாளர், திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவல் குழு உறுப்பினர் முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் பாசமிகு அண்ணன் திரு. இரா. குமரகுரு அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி மலர்களை, பொற்பாதங்களில் வைத்து வணங்குகின்றேன்.

மேலும், எளியவனாகிய என்னை 25,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், வெற்றிக்கு அயராது பாடுபட்ட எங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும்

2021 செப்டம்பர் 8] *[திரு. மா. செந்தில்குமார்]*

கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் கோடானுகோடி நன்றியினை இந்த அவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அரசின் சாதனைகளையும், எடப்பாடி அவர்கள் தலைமையிலான அரசின் சாதனைகளையும் இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன். கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கி 104.44 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டியது முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். வேகமாக நடைபெற்று வந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடப் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. கட்டடப் பணிகளை விரைந்து முடித்துத்தர அரசை வேண்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் என்பது அறநிலையத் துறைக்குச் சொந்தமான, அதாவது, ஒரு கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கின்ற காரணத்தினால் அவர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கின்றார்கள். ஏற்கெனவே அதற்கு* stay*–ம் கொடுத்தார்கள். சென்ற வாரம் மீண்டும் அதுசம்பந்தமான வழக்கு வந்தபோது அதற்குத் தரை வாடகை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று* C.J. *அவர்களே சொல்லியிருக்கிறார்கள். தலைமை நீதிபதி அவர்களே சொல்லியிருக்கின்றார்கள். அடுத்த வாரம்* hearing *வரும்போதுதான் அதன் முழு வடிவம் தெரியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

இரவு 7–50

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த வழக்கு வருகின்ற 16 ஆம் தேதி வர இருக்கின்றது. அதுகுறித்து மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்கள் உடனடியாக அந்தத் திருக்கோயிலுக்கு அறங்காவலரை நியமிக்க உத்தரவிட்டிருக்கின்றார். அது குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசியபோது,*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உடனடியாக அந்த இடத்திற்குச் சொந்தமான திருக்கோயிலுக்கு அறங்காவலரை நியமித்து, உங்கள் நடவடிக்கையால் இன்று நிறுத்தப்பட்டிருக்கின்ற அந்தப் பணிகளை துரித வேகத்தில் மேற்கொண்டு, அதை முடித்திட சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தி, இந்த மாத இறுதிக்குள் அந்தப் பணிகள் தொடங்குவதற்குண்டான வழிவகைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காண்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிதாக அறிவிக்கப்பட்ட எங்கள் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு புதிய மருத்துவக் கல்லூரி அறிவித்து, ரூ.181.76 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தவர் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கள்ளக்குறிச்சி தொகுதிக்கு அருகிலுள்ள தலைவாசலில் உலகத்தரம் வாய்ந்த கால்நடைப் பூங்கா மற்றும் ஆராய்ச்சி மையம் அமைத்துக் கொடுத்தவர் முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 7,072 புதிய பேருந்துகள், தூங்கும் வசதியுடன்கூடிய 36 பேருந்துகள், 206 குளிர்சாதனப் பேருந்துகள் புதிதாக இயக்கப்பட்டன என்பதைப் பெருமையோடு பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வுபெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ரூ.4,830 கோடி ஒதுக்கீடு செய்து ஓய்வூதியப் பலன்களை வழங்கி தொழிலாளர்களின் நலன் காத்திட்ட அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில்தான் 5,890 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12,000 புதிய பேருந்துகள் மற்றும் 2,000 புதிய மின்சாரப் பேருந்துகள் வாங்குவதற்கு ஜெர்மன் வளர்ச்சி வங்கியுடன் ஒப்பந்தம் போடப்பட்டது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் agreement போடுகிறோம், proposal போடுகிறோம் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார். இதெல்லாம் பிரயோசனப்படாது. நாங்கள் இப்போது 2,000 பேருந்துகள் வாங்கப் போகிறோம்; 2,213 டீசல் பேருந்துகளும், 500 electric buses–ம் வாங்கப் போகிறோம். அதனால் அதைச் சட்டசபையில் அறிவிக்கிறோம். ஒரு காரியத்தை எடுத்தால், 12,000 பேருந்துகள் வாங்குவதாக இருந்தால், அதுபோன்று அறிவிக்க வேண்டும். அதை வாங்குகிறோம், இதை வாங்குகிறோம் என்று அடிக்கல் நாட்டினார் என்றும், பேருந்துக்கு ஒப்பந்தம் போட்டார் என்றெல்லாம் சொல்வது பிரயோசனப்படாது என்றும், அதெல்லாம் நடைமுறைக்கு ஒத்துவராது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அரசாங்கத்தில் முதற்கட்டப் பணிகளைத் துவக்கினோம். நீங்கள் இரண்டாம் கட்டப் பணிகளைத் துவங்குங்கள். 2011–2012 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு வல்லுநர்களின் வேலைவாய்ப்பு சுமார் 2.20 இலட்சமாக இருந்ததை, 2019–2020 ஆம் ஆண்டில் 7.40 இலட்சமாக உயர்த்திய அரசு அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) 2011–2012–ல் மென்பொருள் ஏற்றுமதி ரூ.46,791 கோடியாக இருந்ததை, 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.1,39,000 கோடியாக உயர்த்திய அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 11 முதலீட்டாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, இதுவரை 7 நிறுவனங்கள் ரூ.1,839 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்டிருக்கின்றன. 19,150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தொகுதியின் கோரிக்கையாக சிலவற்றைச் சொல்லிவிட்டு நிறைவாக வருகிறேன். கள்ளக்குறிச்சி பகுதியில் மரவள்ளிக் கிழங்கு அதிகமாக விளைகிறது. அதாவது மலைப்பிரதேசம் அதிகமாக இருப்பதால், வெள்ளிமலைப் பகுதியைச் சார்ந்த இடங்களில் விளைகின்றது. இங்கு ஒரு ஜவ்வரிசித் தொழிற்சாலை அமைத்துத் தருமாறு அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். கள்ளக்குறிச்சி நகருக்கு வெளிவட்டச் சாலை மாண்புமிகு அம்மா அரசு காலத்தில் அறிவிக்கப்பட்டு, DPR குறித்து ஆய்வு நடைபெற்று வருகிறது. அந்த வெளிவட்டச் சாலையை நிறைவேற்றித் தருமாறு அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். கள்ளக்குறிச்சியிலிருந்து உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குப்பட்ட சேர்ந்தநாடு, பெரியசெவலை, களமருதூர், ஆசனூர், எறையூர் ஆகிய பகுதிகளுக்கு தியாகதுருகம் வழியாகச் செல்வதற்கு புதிய பேருந்துகளை இயக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7–55

கள்ளக்குறிச்சியிலிருந்து தியாகதுருகம் வழியாக ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை, பகண்டி கூட்டுரோடு, திருப்பானந்தல் ஆகிய பகுதிகளுக்குப் புதிய பேருந்துகளை இயக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், சங்கராபுரம், சின்னசேலம் ஆகிய பகுதிகளுக்கு புதிய பேருந்துகளை இயக்கித் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டுகிறேன்.

சின்னசேலம் ஒன்றியத்திலுள்ள கனியாமூர்–கச்சிராயபாளையம் பிரிவு ரோட்டில் மேம்பாலம் அமைக்க வேண்டும்.

சின்னசேலம் ஒன்றியத்திலுள்ள நயினார்பாளையம் சிறப்புநிலை ஊராட்சியைப் பேரூராட்சியாக மாற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தில் அ. வாசுதேவனூர் கைகாட்டியில் மேம்பாலம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். சின்னசேலம் ஒன்றியத்தில் உலகங்காத்தான் ஏரிக்கு காரனூர் பிரிவு வாய்க்கால் அமைத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீதி இருக்கிற தொகுதிக் கோரிக்கைகளை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாமா?

2021 செப்டம்பர் 8]

திரு. மா. செந்தில்குமார்: *இன்னும் கொஞ்சம்தான் இருக்கிறது. அதையும் பதிவு செய்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லிவிடலாம்.*

திரு. மா. செந்தில்குமார்: *நன்றி இப்போது இல்லை, இதுதான் முதல் பேச்சு, முதல் பதிவு. அதனால், சிறிது நேரம் கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேசுங்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மகிழ்ச்சி. அதாவது, தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட வாக்குறுதிகளைப் பதிவிட விரும்புகிறேன். ஆட்டோ ஓட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ வாங்கிட ரூ.10,000/– மானியம் வழங்கப்படும் என்பது நிறைவேற்றப்படவில்லை என்று கருதுகிறேன். போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்படும் என தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பார்வைக்கு வைக்கிறேன்.*

*கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் கொரோனா என்ற கொடிய நோய்த்தொற்று வந்தபோது, முன்னாள் முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் மக்களைக் காப்பாற்ற போராடி வந்தார்கள். மக்களுக்குப் போடப்பட்ட தடுப்பூசிகளைப் பற்றி தவறான தகவல்களைப் பரப்பி, மக்களை ** வந்த இன்றைய ஆட்சியாளர்கள், இன்று ஆட்சிக்கு வந்தவுடன், தடுப்பூசி போடுவதை தங்கள் அரசின் சாதனையாகச் சொல்லி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** என்ற அந்த வார்த்தை நீக்கப்படுகிறது. நீங்கள் புதிதாகப் பேசுவதால் (குறுக்கீடு) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனவரி 16 ஆம் தேதி இந்தியா முழுவதிலும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்கின்ற ஒன்றிய அரசின் அறிவுறுத்தலைப் புறந்தள்ளி, போதுமான அளவிற்கு தடுப்பூசிகள் கையிருப்பில் இருக்கிற நேரத்திலேயே, தடுப்பூசிகளை வாங்கி தமிழகத்திற்குச் செலுத்தாமல், தினசரி சராசரி என்கிற வகையில்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

வெறும் 61 ஆயிரத்து 441 தடுப்பூசிகளை மட்டும் போட்டு, சுமார் 103 நாட்களில் 63 இலட்சம் தடுப்பூசிகளை மட்டுமே போட்டுவிட்டு, தடுப்பூசிகளுக்கு யாரோ தடை போட்டுவிட்டார்கள் என்றெல்லாம் இன்றைக்கு காரணம் சொல்லிக் கொண்டிருப்பவர்களை நாடு நன்றாக உற்றுநோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வராக கழகத் தலைவர் தளபதி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அவர் ஒன்றிய அரசிடம் தொடர்ந்து பேசி, இன்றைக்கு 3 கோடியே 63 இலட்சம் (மேசையைத் தட்டும் ஒலி) அளவிற்கு தடுப்பூசிகளைப் பெற்றிருக்கிறார்கள். வருகிற 12 ஆம் தேதி ஒரே நாளில் 20 இலட்சம் என்கின்ற இலக்கை இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்திலே எட்டவும் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதுபோன்று நீங்கள் எப்போது சொல்லிக்கொண்டிருந்தாலும் மக்கள் உங்களை நம்பத் தயாராகவும் இல்லை; ஏற்றுக்கொள்ளத் தயாராகவும் இல்லை; நீங்கள் மக்களுக்கானவர்கள் இல்லை என்பதை என்றைக்கோ தமிழக மக்கள் ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தடுப்பூசிகளும் நிறைய போடப்பட்டுவிட்டன. கொரோனாவும் குறைந்துவிட்டது. நீங்கள் வேறு பொருள் குறித்துப் பேசுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள், நேரமாகிவிட்டது. இன்னும் ஒரு நிமிடம்.

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, அதைத்தான் நாங்களும் சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 10 நிமிடங்களுக்கு 14 நிமிடங்கள் தந்திருக்கிறேன். உரையை முடியுங்கள்.

திரு. மா. செந்தில்குமார்: ஐயா, சொல்லிவிடுகிறேன். ஒரு நாட்டிலே ஒரு நோய் வருகிறதென்றால், நோயின் தன்மை தெரியாதபோது, அந்த நாட்டின் முதலமைச்சர் அரணாக இருந்து தமிழக மக்களைக் காத்தார் என்பதைத்தான் நான் வலியுறுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அது போதும். அடுத்ததற்கு வாருங்கள்.

திரு. மா. செந்தில்குமார்: ஒரேயொரு நிமிடம். ஊசி போடும்போது, ஊசியின் தன்மை. . .

2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்ததற்கு வாருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்கள். இருந்தால் அடுத்த subject–ஐ சொல்லுங்கள், இல்லையென்றால், நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *+2 முடித்து கல்லூரியில் சேருவதற்கு மாணவர்கள் ஒரு கல்லூரியில் விண்ணப்பித்து அந்தக் கல்லூரியில் இடம் இல்லை என்றால், அதே விண்ணப்பத்தின் அடிப்படையில் வேறு கல்லூரியில் அந்த மாணவர்கள் சேர்வதற்கு அனுமதி அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

இரவு 8–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, போதும். 15 நிமிடங்கள் கடந்துவிட்டன. 16 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். நாமெல்லோரும் வீட்டுக்குச் செல்ல வேண்டும். எல்லோருமே சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *இதுதான் எனது முதல் பேச்சு. ஆனால், கடைசியாக எனக்கு வாய்ப்பு கொடுத்தீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது உங்கள் கொறடா தந்த பெயர்தானே தவிர, நாங்கள் உங்கள் பெயரை கடைசியாகத் தரவில்லை. (குறுக்கீடு) நீங்கள் கையில் வைத்திருப்பதெல்லாம் பேசியதுதான். நன்றி மட்டும்தான் வாயிலிருந்து வர வேண்டும்.*

திரு. மா. செந்தில்குமார்: *கள்ளக்குறிச்சி டெப்போவில் முன்னாள் அமைச்சர் அண்ணன், திரு. நத்தம் விசுவநாதன் அவர்கள் சொன்னதுமாதிரி, உண்மையிலேயே அங்கிருந்த தொழிலாளர்களுக்கு மிகவும் நெருக்கடியை அங்கிருக்கிற உங்கள் சங்கத்து ஆட்கள் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் நிறைய பேசியாகிவிட்டது. உங்கள் முன்னாள் அமைச்சரும், இந்நாள் அமைச்சரும், மாண்புமிகு அமைச்சர் திரு. நேரு அவர்களும்கூட பேசி முடித்துவிட்டார்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: இல்லை, ஒரே ஒரு வார்த்தைதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதைப் பதிவு செய்ய வேண்டாம். ஏதாவது கோரிக்கை இருந்தால் கொடுங்கள், முடித்துத் தருவார்கள்.

திரு. மா. செந்தில்குமார்: ஒரே ஒரு நிமிடம். கடந்த 10 ஆண்டுகளில் எங்கள் ஆட்சிக் காலத்தில் நாங்கள் என்னென்ன வண்டிகள் செய்தோமோ, அதே வண்டிகளை அவர்கள் எடுத்துவிட்டு, மீதமிருக்கிற வண்டிகளைக் கொடுக்கச் சொல்லுங்கள். உடல் நோயுற்றவர்களை மிகவும் கடினமான வேலைக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதையெல்லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இப்போது அப்படி கஷ்டமான வேலைகளைக் கொடுக்க மாட்டார்கள். அவர்கள் இப்போது ஒழுங்காக வண்டி ஓட்டினால் சம்பளம், அவ்வளவுதான்.

திரு. மா. செந்தில்குமார்: இப்போது நடக்கிறதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில் சின்ன வேலை, பெரிய வேலை என்று இல்லை. Leave–ல் இருந்தால் சம்பளம் கொடுக்கமாட்டார்கள். நீங்கள் உரையை முடியுங்கள்.

திரு. மா. செந்தில்குமார்: இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) ஐயா, ஒரு நிமிடம். என் தொகுதிக் கோரிக்கைகள் நிறைய இருக்கின்றன. இந்தக் கோரிக்கைகள் எல்லாவற்றையும் நான் அவையில் பேசியதாகக் கருதி அவற்றைப் பதிவு செய்யுமாறு உங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிச்சயமாக உங்கள் தொகுதிக் கோரிக்கைகள் அனைத்தும் பதிவு செய்யப்படும்.

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

சின்னசேலம் ஒன்றியம், எலவடி ஊராட்சியில் உள்ள பூசப்பாடி கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரித்துத்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சின்னசேலம் ஒன்றியம், ராயப்பனூர் ஊராட்சியில் உள்ள செல்லியம்பாளையம் கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரித்துத்தர இந்த அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தலைநகரில் புதிய விளையாட்டு அரங்கம் ஏற்படுத்தித்தர வேண்டும்.

கள்ளக்குறிச்சி நகராட்சியில் சேரும் குப்பைகளைக் கொட்டுவதற்கு நிரந்தரமாக இடம் தேர்வு செய்துதர வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி நகராட்சியில் புதிய துணை மின் நிலையம் ஏற்படுத்தித்தர இந்த அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி நகராட்சியில் ஒரு புதிய நூலகக் கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்திலிருந்து அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செல்ல நகரப் பேருந்து இயக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்திட வேண்டும் என அரசை வேண்டுகிறேன்

தியாகதுருகம் ஒன்றியம், உச்சிமேடு ஊராட்சியில், புது உச்சிமேடு கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரித்துத் தர வேண்டி அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தியாகதுருகம் ஒன்றியத்தில் முடியனூர் ஊராட்சியில் உள்ள குரூர் துணை கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரித்துத்தர வேண்டுமாய் அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி ஒன்றியம், பெருமங்களம் ஊராட்சியில் உள்ள கீழ்நாரியப்பனூர் துணைக் கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரித்துத்தர அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி ஒன்றியம், காட்டனந்தல் ஊராட்சியில் உள்ள லட்சியம் கிராமத்தை ஊராட்சியாகப் பிரித்துத்தர வேண்டுமாய் அரசை வேண்டுகிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட தியாகதுருகத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா அலுவலகம் ஏற்படுத்தித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி தொகுதியில் புதியதாக I.T.I. அமைத்துத் தரும்படி வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி பகுதி, வேளாண்மை தொழிலில் முக்கிமானதாகும். இது மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இங்கு புதிய வேளாண்மைக் கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்க அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சியில் அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி புதியதாக அமைத்துத் தர வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி ஒன்றியம், சிறுவங்கூர் ஊராட்சியில் உள்ள ரோடுமாமனந்தல் கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரித்துத் தருமாறு அரசை வேண்டுகிறேன்.

சின்ன சேலம் ஒன்றியத்தில் கூகையூர் ஊராட்சியில் உள்ள வீரபயங்கரம் கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரித்துத்தர அரசை வேண்டுகிறேன்.

சின்னசேலம் ஒன்றியம், அனுமனந்தல் ஊராட்சியில் உள்ள கீழ்குப்பம் கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரித்துத் தருமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி ஒன்றியம், வானவரெட்டி–பெரியேரி கோடிக்கும் மேல் ஒரு தரைப் பாலம் அமைத்துத்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு புதியதாக மேலும் ஒரு எரிவாயு தகனமேடை இயந்திரம் வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு உட்பட்ட ஏமப்பேர் பகுதிக்கு மயானப்பாதை மற்றும் எரிவாயு தகனமேடை அமைத்துத்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி ஏமப்பேர் 15–வது வார்டில் உள்ள கரியப்பா நகருக்கு மயானப் பாதை அமைத்துத்தர அரசை வேண்டுகிறேன்.

தியாகதுருகம் ஒன்றியம், பொரசக்குறிச்சி ஊராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சியில் இருந்து மேல்மலையனூருக்கு புதிய வழித்தடப் பேருந்து இயக்கப்பட வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி ஒன்றியம், வீரசோழபுரம்—பல்லகசேரி இடையே மணிமுக்தா ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்திட வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

தியாகதுருகம் ஒன்றியம், நாகலூர்—வேளாங்குறிச்சி இடையே கோமுகி நதியின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டித்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி தொகுதியில் ஓடும் மயூரா ஆற்றின் குறுக்கே தடுப்பு அணை கட்டித்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதியதாக இளங்கலை இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் பாடப் பிரிவுகள் ஏற்படுத்திட வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

சின்னசேலம் ஒன்றியம், ஈறியூர் ஊராட்சியில் இருந்து கடலூர் மாவட்டம் மங்கலம்பேட்டை செல்லும் சாலையில் இரண்டு ஓடைகளில் உயர்மட்டப் பாலம் கட்டித்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

தியாகதுருகம் ஒன்றியம், தியாகை ஊராட்சியில் உள்ள செருவல் துணைக் கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரித்துதர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

தியாகதுருகம்—அடரி நெடுஞ்சாலையில் விருகாவூர் ஊராட்சியில் கோமுகி நதியின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டித்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

தியாகதுருகம் ஒன்றியம் தியாகை ஊராட்சியில் செருவல் புதிய சாலையில் புதிய நீர்த் தேக்கத் தொட்டி அமைத்திட வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி ஒன்றியம், புக்கிரவாரி ஊராட்சியில் புதிய காவல் நிலையம் கட்டித்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி ஒன்றியம், புக்கிரவாரி இரயில் நிலையத்திலிருந்து கள்ளக்குறிச்சி வழியாக சென்னைக்கு புதிய வழித்தட பேருந்து ஏற்படுத்தித்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி விளம்பார், வானவரெட்டி, புக்கிரவாரி, பெருமங்கலம், உலகிய நல்லூர், கருங்குழி, செம்பாகுறிச்சி, அடரி வழியாக விருத்தாசலம் செல்ல புதிய வழித்தடப் பேருந்து ஏற்படுத்தித்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி, வானவரெட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி தொகுதியில் உள்ள வானவரெட்டி, விளம்பார் ஏமப்பேர் அரசு உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி ஒன்றியம் புக்கிரவாரி ஊராட்சியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைத்துத்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

தியாகதுருகம் பேரூராட்சியில் வீடு இல்லாத ஏழை மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடி வீடு கட்டித்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

தியாகதுருகம் பேரூராட்சியில், உதயமாம்பட்டு ரோட்டில் தீப்பெட்டி தொழிற்சாலை அருகில் வசிக்கும் நரிக்குறவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

தியாகதுருகம் பேரூராட்சி, புக்குளத்தில் புதிய திறந்தவெளிக் கிணறு வெட்டித்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

தியாகதுருகம் பேரூராட்சியிலுள்ள பெரியமாம்பட்டில் புதிய திறந்தவெளி கிணறு வெட்டித் தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

தியாகதுருகம் பேரூராட்சியில் இருந்து திருப்பதி செல்வதற்கு புதிய வழித்தட பேருந்து இயக்கப்பட வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

கள்ளக்குறிச்சி ஒன்றியம், மலைக்கோட்டை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

தியாகதுருகம் பேரூராட்சியில் உள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயத்தப்பட வேண்டும் என அரசை கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி, இந்திலி சிறுவத்தூர், நாட்டார்மங்கலம், கருங்குழி, ஈறியூர், மாங்குலம், மங்களூர் வழியாக திட்டக்குடி செல்ல புதிய வழித்தட பேருந்து இயக்கிட வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சின்னசேலம் ஒன்றியம், மேல்நாரியப்பர் ஊராட்சியைச் சுற்றி பல கிராமங்கள் உள்ளன. எனவே அங்கு கால்நடை நிலையம் புதிதாக அமைத்துத்தர வேண்டும் என அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி தொகுதியில் உள்ள சமூகக் காடுகளில் உள்ள வன விலங்குகளால் விவசாய விளைநிலங்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகையால் சூரிய மின் வேலி அமைத்துத்தர வேண்டும் என அரசை வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரை வணங்குகின்றேன். பேரறிஞர் அண்ணாவை வணங்குகின்றேன். முத்தமிழறிஞர் கலைஞரை வணங்குகின்றேன். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களெல்லாம் நமக்குக் கற்றுத்தந்த கொள்கைகளை இன்றைக்கு தன் தோள்மீது சுமந்து தமிழ்நாட்டை, தமிழினத்தை வழிநடத்திக் கொண்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர், அன்பிற்குரிய தளபதியார் அவர்களை நான் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுக் காலம் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், இதற்கு ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற உணர்வோடு தமிழக மக்களெல்லாம் காத்திருந்த நேரத்தில் 'ஒன்றிணைவோம் வா' திட்டம், "எல்லோரும் நம்முடன் வா" என்று கழகத்தின்பால் அனைவரையும் ஈர்த்த திட்டம், "விடியும் வா" என்று அவர் அளித்த நம்பிக்கை வாக்குறுதிகள், விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல் என்று தமிழகம் முழுவதும் தன்னுடைய தூதுவர்களை அனுப்பி பிரச்சாரங்களை மேற்கொண்டது, 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' என்ற ஓர் அறிவிப்பைக் கொடுத்து, தலைவர் அவர்களே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வந்து, எங்களுடைய மாவட்டத்திற்கும் வந்து, பல்லாயிரக்கணக்கான மனுக்களைப் பெற்று அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றியை உறுதி செய்தவர், தலைவர் அவர்கள். எனவே, இந்தத் தருணத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையின் சார்பில் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, தேர்தல் பரப்புரைக்காக காட்சிக்கு எளியவர், பழகுவதற்கு இனிமையானவர், அன்பிற்குரிய சகோதரர், உதயநிதி அவர்களை ஒவ்வொரு தொகுதிக்கும் அனுப்பி குறிப்பாக, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய கடைசி மலையோரக் கிராமத்திற்குக்கூட அவர் வந்து பிரச்சாரம் செய்து என்னுடைய வெற்றியை உறுதி செய்திருக்கின்றார்கள். அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 8–05

50 ஆண்டுக் காலம் இந்த அவையிலே தன்னுடைய பதவியைத் தக்கவைத்து, இந்த சபையையே கலகலப்பாக நடத்துவதற்கு ஆக்கபூர்வமான கருத்துகளை வழங்கி வருகின்ற நம்முடைய அவையினுடைய முன்னவர், மூத்த முன்னோடி, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன், பாராட்டுகின்றேன்.

அதேபோன்று, கழகத்தினுடைய வெற்றிக்காக உழைத்தவர்கள், எங்களுடைய மாவட்டத்திற்குப் பக்கத்து மாவட்டமான தூத்துக்குடி மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் அன்புக்குரிய சகோதரி கனிமொழி அவர்கள் 'விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்' என்ற திட்டத்தின் மூலமாக எங்களுடைய மாவட்டத்திற்கு

TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 8] [திரு. த. மனோ தங்கராஜ்]

வந்து, அனைத்து கிராமங்களுக்கும் சென்று பல்வேறு பணிகளை மேற்கொண்டார்கள். அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய வெற்றிக்காக உழைத்த கழகத்தில் பல்வேறு நிலைகளில் இருக்கக்கூடிய பொறுப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள், தோழமைக் கட்சிகளைச் சார்ந்த நண்பர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை நான் உரித்தாக்கிக் கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், பத்மநாபபுரம் தொகுதி ஒரு வித்தியாசமான தொகுதி. அங்கு பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்றிருக்கிறது; இந்து முன்னணி வெற்றி பெற்றிருக்கிறது; இதுவரையிலும் யாரும் இரண்டாவது முறை வெற்றி பெற்றதில்லை. எனவே, என்னிடத்திலும் பல நண்பர்கள், "அந்தத் தொகுதியினுடைய sentiment, இதுவரை இரண்டாவது முறை யாரும் வென்றது இல்லை. தம்பி, நீ இந்த முறை அங்கு நின்றுவிடாதே" என்று சொன்னார்கள். நான் அவர்களிடத்தில், "sentiment எல்லாம் இருக்கட்டும். இந்த முறை ஒரேயொரு sentiment தான்; அந்த sentiment என்னவென்றால், தலைவர் தளபதிதான் அந்த sentiment" என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எங்களுடைய வெற்றி நிச்சயிக்கப்பட்ட வெற்றி என்று கூறி, தேர்தல் களத்தில் நின்று சென்றமுறை பெற்றதைவிட சுமார் 11,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெறக்கூடிய வாய்ப்பைத் தந்த என்னுடைய தொகுதி மக்களுக்கு என்னுடைய சிரம் தாழ்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது தொகுதி, திருவிதாங்கூர் சமஸ்தானத்தினுடைய தலைமையிடமான பத்மநாபபுரம் அரண்மனை அமைந்திருக்கக்கூடிய தொகுதி. எனவே, தொகுதி மக்களுக்கு உண்மையிலேயே இன்றைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை என்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கின்ற வாக்காளர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினை மீண்டும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பள்ளி மாணவனாக இருந்த நேரத்தில் மாணவர் போராட்டங்களில் என்னை ஈடுபடுத்திக்கொண்டு, அதைத் தொடர்ந்து கல்லூரிக்குச் சென்று மாணவர் பேரவை உறுப்பினர், மாணவர் பேரவை செயற்குழு உறுப்பினர், மாணவர் பேரவைத் தலைவர், அதைத் தொடர்ந்து அனைத்துக் கல்லூரி மாணவர் பேரவைத் தலைவர் என்று என்னுடைய அரசியல் பயணத்தை ஆரம்பித்து,

முதன்முதலாக பேச்சிப்பாறை அணைநீர்ப் பாதுகாப்பு இயக்கம், அதைத் தொடர்ந்து கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்ட இயக்கம், பல்வேறு மனித உரிமைப் போராட்டங்கள், இயற்கை வளங்களைப் பாதுகாக்கின்ற போராட்டங்கள் என்று ஈடுபட்டிருந்த என்னை, தலைவர் அவர்கள் அரவணைத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தில் கிளைக் கழகச் செயலாளராக, மாவட்ட மாணவரணி அமைப்பாளராக, ஒன்றிய கழகத்தின் செயலாளராக, மாவட்டக் கழகச் செயலாளராக்கி அழகு பார்த்தவர்கள்தான் தலைவர் கலைஞர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் தளபதி அவர்களும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இரண்டு முறை மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் போட்டியிடக்கூடிய வாய்ப்பை எனக்குத் தந்தார்கள். அதேபோன்று, இரண்டு முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடக்கூடிய வாய்ப்பை எனக்குத் தந்தார்கள். இப்போது அவருடைய அமைச்சரவையில் என்னை அமைச்சராக்கி அழகு பார்க்கின்ற தலைவர் அவர்களுக்கு நான் எப்படி நன்றி சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. அந்த அளவிற்கு தலைவர் அவர்களுக்கு நான் நன்றிக் கடன்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு சாதியும் மதமுமே தடை என்று சொன்ன அயோத்திதாசர், 'மனிதர்களை மனிதர்களாகப் பார்ப்பவர் எவரோ அவர்தான் மனிதர்' என்று முழங்கினார். அவரது 175–வது ஆண்டு விழாவைக் கொண்டாடும்விதமாக மணிமண்டபம் கட்டுவதற்கான அறிவிப்பு. 10 ஆண்டுக் காலம் விதி 110–ன்கீழ் எப்படிப்பட்ட அறிவிப்புகளை அறிவித்தார்கள்; அவை எங்கே இருக்கின்றன என்று நமக்கெல்லாம் தெரியும்; நாட்டு மக்களுக்கும் தெரியும். ஆனால், தமிழக மக்களுடைய உணர்வை, இந்தத் திராவிட இயக்கத்தினுடைய கொள்கைகளை பறைசாற்றுகின்ற விதத்தில் இன்றைக்கு விதி 110–ன்கீழ் அறிவிப்புகளை தலைவர் தந்து, தமிழக மக்களைப் பூரிப்பாக்கியிருக்கின்றார்.

மனிதனுக்கு மனிதன் ஏற்றத்தாழ்வு இல்லை. ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம். மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு என்றார் பெரியார். அதோடு, மதம் என்பது ஒரு தேசத்தையோ சமூகத்தையோ கட்டுப்படுத்தி ஒற்றுமைப்படுத்துவதற்காகவா, இல்லை பிரித்து வைப்பதற்காகவா என்ற கேள்வியை எழுப்பியவர் பெரியார்.

மதத்தால், சாதியால் கூறுபோட்டு, மூட நம்பிக்கைகளுக்கு அடிமையாகிக் கிடந்த திராவிட சமுதாயத்தை மற்ற சமுதாயங்கள்போல் மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக மாற்ற உழைத்த பெரியாரின் நினைவைப் போற்றும் விதமாக, அவர் பிறந்த செப்டம்பர் 17 ஆம் நாளை சமூக நீதி நாளாக அறிவித்து பெருமை சேர்த்துள்ளார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் மட்டும்தான், ஒரு சீர்திருத்த இயக்கம், அரசியல் இயக்கமாக மாறி, ஆட்சி அமைத்து, சீர்திருத்தக் கருத்துகளை, கொள்கைகளாக, திட்டங்களாக அறிவித்து தமிழ் சமுதாயத்தை மேன்மை அடையச் செய்திருக்கிறது. இது ஒரு மிகப் பெரிய வரலாறு.

சமூக நீதியும் மதச் சார்பின்மையும் வெறும் அறிவிப்பில் மட்டுமல்ல, ஆட்சியின் நெறிமுறைகளாக இருக்கும் என்பதை இந்த அரசின் முதல் கவர்னர் உரையிலேயே அறுதியிட்டுச் சொல்லியிருக்கிறார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையில் இறையாண்மையும், சமத்துவச் சமுதாயமும், மதச் சார்பின்மையும் கொண்ட மக்களாட்சியின் மாண்பு அமையப் பெற்ற குடியரசாக இந்தியா மலர வேண்டும் என அண்ணல் அம்பேத்கர் வகுத்தளித்த வழியில் நின்று தமிழக மக்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணிக்கு வாக்களித்துள்ளார்கள்.

சமூக நீதி, ஆண் பெண் சமத்துவம், அனைவருக்கும் பொருளாதார நீதி, இட ஒதுக்கீடுமூலம் அனைவருக்கும் வாய்ப்பு, கல்வி மற்றும் சமூகச் சீர்திருத்தத்தின்மூலம் முன்னேற்றம் ஆகிய திராவிட இயக்கத்தின் கொள்கைகளை தலைவர் தளபதியின் அரசு, தனது அடித்தளமாகக் கொண்டுள்ளது.

தலைவர் தளபதியின் தலைமையிலான நமது அரசின் ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு சட்டமும், ஒவ்வொரு திட்டமும், ஒவ்வொரு முயற்சியும் திராவிட இயக்கத்தின் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்ற தீர்க்கமான, தெளிவான

அறிவிப்பு திராவிட இயக்கக் கொள்கையில் அவர் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டைக் காட்டுகிறது. இந்த உறுதிதான் தமிழ்நாட்டை இன்றைக்கு உயர்த்திப் பிடித்திருக்கிறது.

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அதன் சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சியைக் கொண்டே கணிக்கப்பட வேண்டும்.

பல வட மாநிலங்களில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால், அங்கு மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளைப் பார்த்தால் சமூக வளர்ச்சி மிகவும் பின்தங்கிய நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது.

அதுபோன்று, கேரளா போன்ற மாநிலங்கள் சமூக வளர்ச்சியில் முன்னணியில் உள்ளன. பொருளாதாரத்தில் பின்தங்கி உள்ளன.

தமிழ்நாட்டின் வளர்ச்சியோ சமூக, பொருளாதார நிலை இரண்டிலும் உயர்ந்து நிற்கிறது. இதற்குக் காரணம் திராவிட இயக்கக் கொள்கையின் அடிப்படையிலான அரசுதான் என்பதை அறிவுலகமே ஒப்புக்கொண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பெரியார், அண்ணா, கலைஞர் ஆகிய தலைவர்கள் கட்டமைத்த திராவிடக் கோட்பாட்டின் அடிப்படையிலான அரசினால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சியோடு சமூக வளர்ச்சியைப் பெருமளவில் ஏற்படுத்தி உள்ளது. தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளின் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்தும் நோக்கத்துடன், 1998 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சராக இருந்தபோது தகவல் தொழில்நுட்பத் துறை உருவாக்கப்பட்டது.

1998 முதல் 2001 வரையிலும் 2006 முதல் 2009 வரையிலான ஆண்டுகள், இத்தகைய சிறப்பு வாய்ந்த தகவல் தொழில் நுட்பவியல் துறையை தலைவர் கலைஞர் அவர்கள் நிர்வகித்தது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. அப்படிப்பட்ட சிறப்புமிக்க துறையின் அமைச்சராக என்னை நியமித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள எல்காட், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, தமிழ்நாடு அரசு கம்பிவட தொலைக்காட்சி, தமிழ் இணையக் கல்விக் கழகம், தமிழ்நாடு கண்ணாடி இழை

வலையமைப்பு நிறுவனம் மற்றும் ஐ.சி.டி. அகாடமி ஆகியவை இயங்கி வருகின்றன.

கடந்த 10 ஆண்டுகளில் தகவல் தொழில்நுட்பவியல் துறை முதலீடுகளில் கர்நாடகா, ஆந்திரா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களைவிட தமிழகம் பின்தங்கிய நிலைக்கு வந்துவிட்டது. அது வேதனை தரக்கூடிய ஒரு செய்தியாக தமிழக மக்களுக்கு இருந்துகொண்டிருக்கிறது.

2008 ஆம் ஆண்டு மே 1 ஆம் தேதி வெளிவந்த 'The Economic Times' பத்திரிகை, சென்னை, இந்தியாவின் Silicon Valley ஆக உருவெடுத்து வருகிறது என 2008-ல் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது கட்டுரை எழுதியது; அந்த அளவில் தலைவர் கலைஞர் ஆட்சியில் பெரிய மற்றும் நடுத்தர ஐ.டி. நிறுவனங்கள் சென்னையில் வந்து, தங்கள் நிறுவனங்களைத் தொடங்கின. மேலும், திறன்மிக்க மனித வளத்தில் உலகின் தலைசிறந்த இடமாக தமிழ்நாடு உள்ளது. எனவே, தமிழ்நாட்டை இந்தியாவின் 'Silicon Valley' என்றழைக்கும் நிலை மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் நிச்சயமாக ஏற்படுத்தப்படும்.

'The National Council of Applied Economic Research' என்ற அமைப்பு, டெல்லிக்கு அடுத்தபடியாக தமிழ்நாடுதான் முதலீட்டாளர்களைக் கவரும் மாநிலம் என தர வரிசைப்படுத்தியுள்ளது. இதற்கான காரணிகளாக இங்கிருக்கக்கூடிய நிலம், திறன்மிக்க மனிதவளம், அடிப்படைக் கட்டமைப்பு, பொருளாதாரச் சூழல், அரசியல் ஸ்திரத்தன்மை, தொழில் கட்டமைப்புகள், தொழில் வாய்ப்புகள் போன்றவற்றைக் குறிப்பிடுகிறது.

இரவு 8-15

திறன்மிக்க மனித வளம் மற்றும் நல்லாட்சியில் இன்றைக்கு தமிழகம் முன்னிலையில் உள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த முதலீடுகளை வளர்ப்பதற்கு இந்தியாவிலேயே முதல் மாநிலமாக 1997-ல் தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையை தலைவர் கலைஞர் அவர்கள் வகுத்து, எல்காட் (ELCOT) மற்றும் டிட்கோ (TIDCO) ஆகிய இரண்டு நிறுவனங்களும் கூட்டாக இணைந்து சென்னையில் டைடல் பார்க் (TIDEL PARK) அமைத்து, 12 இலட்சத்து 80 ஆயிரம் சதுர அடியில் கட்டடத்தைக் கட்டி,

27–க்கும் மேற்பட்ட பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை இயங்க வைத்தார். இது ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழில்நுட்பப் பூங்காக்களில் ஒன்றாகும். இந்த முன்னெடுப்பு நடவடிக்கை உலகின் தலைசிறந்த நிறுவனங்களை தமிழகத்தில் காலூன்ற உந்து சக்தியாக இருந்தது.

உலகின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒரு சிலவற்றைத் தவிர, அனைத்து நிறுவனங்களும் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் துறை 1.06 சதவிகித பங்களிப்பையும், இந்தியாவின் மென்பொருள் ஏற்றுமதியில் 4–வது இடத்தை வகிப்பதோடு, இத்துறை சுமார் 11 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை நேரடியாகவும், மறைமுகமாகவும் வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் சுமார் 4,000 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இத்துறையில் ஏற்பட்டுள்ள தொய்வைச் சீர் செய்ய என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதைத் துல்லியமாக அறிந்துகொள்ள பெரிய, சிறிய மற்றும் தொடக்கநிலை நிறுவனங்களோடும், படித்த இளைஞர்களோடும், துறை வல்லுநர்களோடும் கலந்துரையாடி வருகின்றோம். வெகு விரைவில் அவற்றிற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று நடைமுறைப்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் (ELCOSEZ) உள்ள காலியான நிலங்களிலும், கட்டி முடிக்கப்பட்ட மற்றும் கட்டப்பட்டுவரும் கட்டடங்களிலும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், குறிப்பாக தொடக்க நிலை/புத்திளம் நிறுவனங்கள் (startups) தொடங்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில், (ELCOSEZ), தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடங்க விரும்புபவர்களை ஊக்குவிக்க சிறப்புத் திட்டங்கள் மற்றும் சிறப்புச் சலுகைகள் வழங்கவுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி)

வளர்ந்துவரும் உலகின் பொருளாதாரத்திற்கு உதவியாக இருக்கும் தொழில்நுட்பங்களான Artificial Intelligence–செயற்கை நுண்ணறிவு, Machine Learning–இயந்திர கற்றல், Data Analytics–தரவுப் பகுப்பாய்வு, Natural Language Processing

2021 செப்டம்பர் 8] [திரு. த. மனோ தங்கராஜ்]

(NLP) – இயற்கைமொழி செயலாக்கம், Augmented Reality – மிகைநிகர் உண்மை, Virtual Reality–மெய்நிகர் உண்மை, Drones– ஆளில்லா குறு விமானங்கள், Blockchain–நம்பிக்கை இணையம், Internet of Things (IoT)–பொருட்களின் இணையம், Industrial Automation–தொழில் துறை தானியக்கம், Autonomous Vehicles– தானியங்கி வாகனங்கள், Cryptography–குறியாக்கவியல், Quantum Computing– துளிமகணினியியல், Cyber Security–இணையப் பாதுகாப்பு, FinTech,–நிதிசார் தொழில்நுட்பம் Edu Tech– கல்விசார் தொழில்நுட்பம், Agri Tech–வேளாண் தொழில்நுட்பம், Med Tech (Health care tech)–மருத்துவம்சார் தொழில்நுட்பம், Gaming Platform–இணைய விளையாட்டு தளம், Robotic Process Automation–எந்திர செயல்முறை தானியங்கல், Computer Vision– கணினி தொலைநோக்குப் பார்வை, Animation Industry–உயிரியக்க மூட்டல் துறை (அ) அசைவூட்டல் தொழிலியல், Compatible Mobile tech – இணக்கமான கைபேசி தொழில்நுட்பம் போன்ற திறன்களைக் கொண்ட மனிதவளம், சிறந்த உள்கட்டமைப்பு வசதிகள் தமிழ்நாட்டில் உள்ளன. அவற்றை முறையாகப் பயன்படுத்தி, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தவும், வேலைவாய்ப்பைப் பெருக்கவும், startups நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசும், STPI (Software Technology Parks of India) என்ற நடுவண் அரசின் நிறுவனமும் இணைந்து பல்வேறு சலுகைகளை வழங்கவுள்ளோம். 2–ம் மற்றும் 3–ம் நிலை நகரங்களில் அமைந்திருக்கும், எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டல வசதிகளைப் பயன்படுத்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களைத் தொடங்க விரும்பும் Startups–களுக்கு முன்னுரிமையும் பல்வேறு சலுகைகளும் வழங்கப்படும்.

உலகளாவிய தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளின் தொழிலதிபர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்கள், இத்துறையில் முதலீடு செய்ய விரும்புபவர்கள், தமிழ்நாட்டில் தங்கள் நிறுவனங்களைத் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தகவல் தொழில்நுட்பவியல் துறை வழங்கும்.

இதுவரையில் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்கள் குறித்த தரவுகள் (data base) எதுவும் இல்லாத நிலையைப் போக்குவதற்கு இத்துறை சார்ந்த நிறுவனங்களோடு தகவல்

பரிமாற்றம் செய்துகொள்ள வசதியாக இணையதளம் ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரைவில் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

தலைவர் கலைஞர் அவர்களின் 1996–2001 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில்தான் பள்ளி, கல்லூரிகளில் கணினிக்கு முக்கியத்துவம் வழங்கியதோடு மின்ஆளுகைக்குப் புதுவடிவம் கொடுக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், வெளிப்படைத் தன்மை மற்றும் ஒளிவுமறைவற்ற தரவுகளின் அடிப்படையிலான ஆளுகை என்பதை அரசின் இலக்காகக் கொண்டுள்ளார்கள். எனவே, அரசின் அனைத்துத் துறைகளும் படிப்படியாக மின்னணுவாக்கம் (Digitization) செய்யப்படும்.

தகவல் தொழில்நுட்பத்தை அனைத்துத் துறைகளிலும் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதன்மூலம் விரைவான, அளவிடக்கூடிய, எளிதில் அணுகக்கூடிய, பொறுப்பான மற்றும் வெளிப்படையான நிருவாகத்தை ஏற்படுத்துவதும் தரவுகளின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கும் ஆளுகையை ஏற்படுத்துவதும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் திட்டமாக உள்ளது.

மக்கள் நேரடியாக அணுகும் முக்கியத் துறைகளில், மின்னாளுகைக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தற்போது 131 சேவைகள், இ–சேவை மையங்கள் வாயிலாகவும், 55 சேவைகள் இணையதளம் வாயிலாகவும் மக்களுக்கு நேரடியாக வழங்கப்படுகின்றன. டிசம்பர் மாதத்திற்குள், 29 துறைகள் மூலமாக வழங்கப்படக்கூடிய 600–க்கும் மேற்பட்ட சேவைகளும் மின்னணு முறையில் வழங்கப்படும். அரசுத் திட்டங்களில் அனைத்துப் பயனாளிகளுக்குமான ஒற்றைத் தரவு ஆதாரமாக மாநிலக் குடும்பத் தரவு தளம் ஏற்படுத்தப்படும்.

இரவு 8–20

தேசிய மின் ஆளுகைக் கொள்கைகளைச் செயல்படுத்திடும் நோக்கில் தலைவர் கலைஞர் அவர்களால் 2006 ஆம் ஆண்டில் மின் ஆளுமை இயக்குநரகமும், 2007 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையும் உருவாக்கப்பட்டன.

தமிழ்நாடு மின் ஆளுகையின் குறிக்கோள், தகவல் தொழில்நுட்பத்தில் புது யுக்திகளைப் புகுத்தி அரசின் சேவைகள் அனைத்தையும் குடிமக்களுக்கு விரைவில் சென்று சேர்ப்பது,

அரசின் செயல்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது மற்றும் வெளிப்படைத்தன்மையை நிலை நிறுத்துவது ஆகும்.

இம்முகமை வாயிலாக நம்பிக்கை இணையக் கொள்கை (Block chain policy), செயற்கை நுண்ணறிவுக்கான பாதுகாப்பு மற்றும் நெறிமுறை கொள்கை (Artificial Intelligence Safe and Ethical Policy) போன்ற கொள்கைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபடும் இளைஞர்களை இந்த அரசு ஊக்குவிக்கும். அவர்களின் கண்டுபிடிப்புகளை வெளிக்கொணர ஆக்கப்பூர்வமான உதவிகள் வழங்கப்படும். இதில் ஒரு நிகழ்வாக, இன்றைக்கு சட்டப் பேரவையின் செயல்பாடுகளை 'காகிதமில்லா சட்டமன்றமாக' தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான அரசு மாற்றியுள்ளது. அதற்கான உட்கட்டமைப்பை ஏற்படுத்த அனைத்து கணினி மென்பொருட்களும் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் கோரிக்கைக்கேற்ப, ELCOTமூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உறுப்பினர்களுக்கும் All-in-One மேசைக் கணினி மற்றும் எழுத்தாணியுடன்கூடிய கைக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இது சட்டமன்றப் பேரவை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளதோடு இந்திய நாட்டிற்கே முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

மின்னணு நிதிநிலை அறிக்கை, e–Budget மின்னணு வேளாண் நிதிநிலை அறிக்கை மற்றும் அனைத்து மானியக் கோரிக்கைகளும் முழுமையாக மின்னணுமூலம் வழங்கி 'காகிதமில்லா சட்டமன்றம்' என்ற நிலை உருவாகியுள்ளது. இப்பணியை சட்டமன்றப் பேரவைச் செயலகம் மற்றும் நிதித் துறையின் ஒத்துழைப்புடன் தகவல் தொழில்நுட்பத் துறை மேற்கொண்டுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இதற்காக TNeGA Joint Director (Technical) திருமதி வனிதா அவர்களோடு இணைந்து பணியாற்றிய ELCOT, NIC, PWD, பேரவைச் செயலக அலுவலர்கள் அத்தனைபேருக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எல்காட் நிறுவனம், தமிழ்நாட்டை மின்னணுமயமாக்கப்பட்ட மாநிலமாக உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையோடு உருவாக்கப்பட்ட அமைப்பாகும். தமிழகத்தை முதலீட்டுக்கு உகந்த

இடமாக மாற்றும் வகையில் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டை மேற்கொள்ளுதல், அரசுத் துறைகளுக்கான தகவல் தொழில்நுட்ப வன்பொருள், மென்பொருள் கொள்முதலுக்கான முகமையாகச் செயல்படுதல், அரசுத் துறைகளுக்குத் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளை வழங்குதல், அரசுத் துறைகளுக்குத் தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களை வழங்குதல் போன்ற நோக்கங்களோடு இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

எல்காட் நிறுவனத்தின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளுக்கான 8 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்ப முதலீட்டிற்கான விருப்பத் தேர்வாக தமிழ்நாட்டை ஊக்குவிக்க, தேசிய மற்றும் பன்னாட்டளவில் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிகழ்ச்சிகள்/சாலை நிகழ்ச்சிகளில் (Road shows) பங்கேற்று நடத்துதல் போன்ற செயல்களை மேற்கொண்டு வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதற்கும், வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் எல்காட் நிறுவனம் சில தனியார் நிறுவனங்களோடு இணைந்து கூட்டு முயற்சியில் பல நிறுவனங்களை (Joint Venture Companies) உருவாக்கி உள்ளது. அதில் சுமார் 56 கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளது.

எல்காட் நிறுவனம், நாஸ்காம் நிறுவனத்தை அறிவு சார் பங்குதாரராகக் கொண்டு 6,860 சதுர அடி பரப்பளவில் 82 இருக்கைகள் வசதியுடன் டைடல் பார்க் லிமிடெட், சென்னையில் ரூபாய் 3.53 கோடி செலவில் தொழில் முனைவோர் மையம் (Startup ware house) அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்த மையத்தின்மூலம் 44 Startup நிறுவனங்கள் உருவாகி, வெற்றிகரமாக வெளியேறி தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சேவைகள் சார்ந்த துறைகளில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன.

தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் உதவி மைய கட்டணம் இல்லா தொலைபேசி எண் 18004251333 இ-சேவை மற்றும் நிரந்தர ஆதார் பதிவு மையங்கள் தொடர்பான மக்களின் ஐயங்கள் மற்றும் கேள்விகளுக்கு விடை அளித்திடும் பொருட்டு இயக்கப்பட்டு

2021 செப்டம்பர் 8] [திரு. த. மனோ தங்கராஜ்]

வருகிறது. எல்காட் நிறுவனம் தமிழ்நாடு அரசுத் துறைகளின் தரவுகளைச் சேமித்து பாதுகாக்க தமிழ்நாடு மாநில தரவு மையம் சென்னையில் ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதோடு இயற்கை பேரிடர் அபாயங்களிலிருந்து தரவுகளைப் பாதுகாக்க TAMIL NADU DATA RECOVERY CENTRE என்ற தரவுகள் மீட்பு அமைப்பை திருச்சியில் கட்டமைத்து, செயல்படுத்தி வருகிறது.

தகவல் திருட்டு மற்றும் பாதுகாப்பு மீறல்களிலிருந்து அரசு துறைகளின் தரவுகளைப் பாதுகாக்க மாநிலத்தில் உள்ள அனைத்து துறைகள் மற்றும் அமைப்புகள் சார்ந்த தரவுகள், தமிழ்மேகம் என்ற நமது Data Centre மூலம் தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் பாதுகாப்பாக வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதன்மூலம் உள்ளூர் வேலைவாய்ப்புகளும் பெருகும்.

அதோடு தமிழகத்திற்கான இணைய பாதுகாப்பு கட்டமைப்பு (Cyber Security Architecture of Tamil Nadu) ஒன்றைச் செயல்படுத்துவதற்கான பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் விரைவில் அரசு துறைகளின் தரவுகள் மற்றும் மின்னாளுமை சேவைகள் உயர் பாதுகாப்புடன் பராமரிக்கப்படும்.

இரவு 8–25

Software Technology Parks of India (STPI) என்ற நிறுவனம் சென்னையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1999 ஆம் ஆண்டு முதல் தனியாக இயங்கத் துவங்கியது. STPI நிறுவனம், கோவை, திருச்சி, மதுரை மற்றும் நெல்லை ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் விரிவாகியுள்ளது.

நிதி தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய துறைகளிலும் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குவதற்கு ஏதுவாக STPI மற்றும் ELCOT இணைந்து “ஃபின்ப்ளூ” (FinBlue) என்ற நிதி தொழில்நுட்பச் சீர்மிகு மையம் ஒன்றை உருவாக்கி உள்ளன. இதில், தமிழக அரசு ரூ.5.75 கோடி முதலீடு செய்துள்ளது. இம்மையத்தை, பல தொடக்க நிறுவனங்கள் பயன்படுத்தி வருகின்றன. இந்தத் தொடக்க நிறுவனங்களுக்குத் தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் இம்மையத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. இத்துறையில் ஏற்படப்போகும் வளர்ச்சியின் பயனை ஈட்டும்

வகையில் தமிழக அரசு விரைவில் புதிய நிதி தொழில்நுட்பக் கொள்கையை வெளியிட உள்ளது.

2009 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களால் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம் (ICT Academy) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இது தமிழக அரசு, ஒன்றிய அரசு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்ந்த நிறுவனங்களின் கூட்டுமுயற்சியால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிறுவனம்மூலம் நடப்பு நிதியாண்டில் 5000 ஆசிரியர்களுக்கும், ஒரு இலட்சம் மாணவர்களுக்கும் பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டு பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் வேலைவாய்ப்பு சந்தையின் தேவைக்கேற்ற, வளர்ந்து வரும் தொழில்நுட்பம் சார்ந்த, திறன் இடைவெளியை–skill gap என்று சொல்வோம்–சமன் செய்து வேலைவாய்ப்பை உறுதி செய்ய முடியும்.

1999 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற தமிழ் இணைய மாநாட்டில் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழை, கணினிமூலம் பாரெங்கும் கொண்டு செல்லும் விதமாக தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒன்று தொடங்கப்படும் என்று அறிவித்தார். அதனைத் தொடர்ந்து 2000 ஆம் ஆண்டு மே மாதம் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. பின்னர் இப்பல்கலைக்கழகம் கல்விக் கழகமாக மாறியது.

இக்கல்விக்கழகம் தமிழ்மொழி, பண்பாடு, நாகரிகம் போன்றவைகளைத் தமிழ்க் கல்வியோடு பரப்பி வருகிறது. வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் எளிமையாகப் படிக்கும்வண்ணம் தமிழ் இலக்கியங்களைப் பதம் பிரித்தும், தமிழ் ஆய்வாளர்கள் பயன்பெறும் வகையில் உணர்ச்சி மிகுந்த உரிய நடைகளோடும் வடிவமைத்து வழங்குகிறது.

தமிழ் அறியாதவர்களுக்கு Shape Similarity முறையிலும் தமிழ் படிக்கத் தெரிந்தவர்களுக்கு அகர வரிசை மூலமும் தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது.

தமிழரின் உயரிய பண்பாடுகளான சமத்துவம், வீரம், காதல், விருந்தோம்பல், நட்பு போன்றவற்றை இலக்கியங்கள் வாயிலாகவும், பாடங்கள் மூலமாகவும் உலக மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் தமிழ் இணையக் கல்விக்கழகம் தனது பணியைச் செய்து

2021 செப்டம்பர் 8] [திரு. த. மனோ தங்கராஜ்]

வருகிறது. இவைகளோடு கணினித் தமிழை வளர்த்து மேம்படுத்தும் விதமாக பல தமிழ் மென்பொருள்களை உருவாக்கி இணையத்தில் தமிழை வளப்படுத்தி வருகிறோம்.

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் எடுத்துச் செல்லும் நோக்கில், தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனமாக உருவாக்கப்பட்டுள்ளது.

பாரத்நெட் மற்றும் தமிழ்நெட் திட்டங்களின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் அனைத்தும் வெகுவிரைவில் கண்ணாடி இழை கம்பி வடம்மூலம் அதிவேக அலைக்கற்றை கொண்டு இணைக்கப்படும்.

அதன் முதல்கட்டமாக, 12,525 ஊராட்சிகளும் இணைக்கப்படும். அப்போது இங்கே உறுப்பினர் கூறியதுபோன்று, அந்த இணையம் சார்ந்த பிரச்சினைகள் இருக்காது என்று இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிறைவாக, குறைந்த கட்டணத்தில், சிறந்த தொலைக்காட்சிச் சேவையை மக்களுக்கு வழங்கும்நோக்கில் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் 2007-ல் அரசு கேபிள் டி.வி. நிறுவனமாக தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இது டிஜிட்டல் கேபிள் டிவி சேவையை வழங்குவதற்கான உரிமம் பெற்ற ஒரே மாநில அரசு நிறுவனம் ஆகும். இந்த நிறுவனம் தற்போது 201 சேனல்களை ரூ.140/– என்ற குறைந்த கட்டணத்திற்கு வழங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இன்றைக்கு ஒவ்வொன்றுக்கும் ஒரு கொள்கையை வகுத்து, பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். தனது ஆட்சியில் நான்கு key factors, அதாவது அடிப்படை ஆதாரங்களைக் கொண்டு செயல்படும் என்று கூறியிருக்கின்றார்கள். ஆட்சியில் வெளிப்படைத் தன்மை. அதுபோன்று அனைத்து துறைகளும் சமூக ஈடுபாட்டோடு மக்களோடு சேர்ந்து செயல்பட வேண்டுமென்ற அந்தக் கொள்கை, வல்லுநர்களிடமிருந்து கருத்துகளைப் பெறுதல், உறுதியான நடவடிக்கை என்று நான்கு அடிப்படையான தகுதிகளைச் சொல்லியிருக்கின்றார்கள். நிச்சயமாக தகவல் தொழில்நுட்பவியல் துறை, தலைவர் அவர்கள் விரும்புவதுபோன்று, இந்த நான்கு

key factor–களைக் கடைபிடித்து இந்த அரசுக்குப் பெருமை சேர்க்கும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கு எனக்கு பெரிதும் உதவி செய்த எங்கள் துறையின் செயலாளர் திரு. நீரஜ் மிட்டல், இ.ஆ.ப., அவர்கள், எல்காட் நிறுவனத்தின் தலைவர் திரு. அஜய் யாதவ், இ.ஆ.ப. அவர்கள், திரு. விஜயேந்திர பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், திரு. கமல் கிஷோர், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் செயலாளர் திருமதி வினிதா மேரி அவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் இந்தத் தருணத்தில் நான் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

இரவு 8–30

தமிழ் இலக்கியத்தில் ஒரு பாடல் வரி உண்டு.

தொடங்குக பணியைத் தொடங்குக அறத்தை!
கடலிலும், வானிலும், கவினுறு நிலத்திலும்,
வாழ்வுயிர் அனைத்தும் மக்கள் கூட்டமும்,
உயர்வுள வாழ–அன்பு மணிக்குடையின்கீழ்
உலகினை ஆண்டார் உயர்வுற முன்னோர்!

என்ற அழகான பாடல் வரிகள் உண்டு. மனிதர்கள் மட்டுமல்ல; இந்த உலகத்தில் வாழுகின்ற அத்தனை உயிரினங்கள், நீர்வாழ் உயிரினங்கள், ஆகாயத்தில் வாழ்கின்ற உயிரினங்கள், அத்தனையும் இன்புற்று வாழ வேண்டுமென்பதற்காக அன்பெனும் மணிக்குடையின்கீழ் உலகினை ஆண்டார்கள் நம் முன்னோர்கள். அந்த வார்த்தை நம்மையெல்லாம் தொடுகின்ற வார்த்தை.

சென்ற முறை சட்டமன்றத்தில் என்னுடைய கன்னிப் பேச்சில் இதனை நான் வேதனையோடு பேசினேன். அவ்வாறு ஆட்சி நடைபெறவில்லையே என்ற வேதனையோடு பேசினேன். இன்றைக்கு மகிழ்ச்சியோடு பேசுகின்றேன். தலைவர் அவர்களுடைய ஆட்சியில், மக்கள் மட்டுமல்ல; அனைத்து உயிரினங்களும் உயர்வுற்று வாழ்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நிலையை தலைவர் தளபதி அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கின்றார்கள். தமிழக மக்கள் நிச்சயமாக அவருக்குத் துணை நிற்க வேண்டும். அது இந்தத் தமிழ்ச் சமூகத்தினுடைய கடமை. திராவிடச் சமூகத்தினுடைய கடமை என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அன்புக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்கள். அவற்றிற்கெல்லாம் என்னுடைய பதிலுரையில் பதில் கிடைத்திருக்கும் என்று கருதுகின்றேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Artificial Intelligence பற்றியெல்லாம் சொன்னார்கள். அது தொடர்பாக நிறைய பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றோம். தலைவர் அவர்கள் வழிகாட்டுதலில், நம்முடைய TNeGA மூலமாக உருவாக்கப்பட்டிருக்கின்ற e–Paarvai என்ற கணினித் திரை Artificial Intelligence தொழில்நுட்பத்தின் மூலமாகக் கண்டுபிடிக்கின்ற பல்வேறு காரியங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தயிருக்கின்றோம். மற்றவற்றிற்கு என்னுடைய பதிலுரையில் கூறியிருக்கின்றேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அறிவிப்புகள் ஏதும் இருக்கின்றனவா? ஒன்றிரண்டு அறிவிப்புகளைத் தலைப்புச் செய்திகளாகப் படித்துவிடுங்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: அறிவிப்புகள் இருக்கின்றன. தலைப்புகளை மட்டும்தான் படிக்கின்றேன். கொஞ்சம்தான் இருக்கின்றன. அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் படித்துவிடுகிறேன். மற்றவற்றை அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

தகவல் தொழில்நுட்பத் துறை

1. டிஜிட்டல் தமிழ்நாடு திட்டம் (Digital TN Program (DiTN)

விரைவான, கண்காணிக்கக்கூடிய, அணுகக்கூடிய மற்றும் பதிலளிக்கும் வகையிலமைந்த, வெளிப்படையான நிருவாகத்தைக் குடிமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக்கொண்டு, மின்னாளுகையைப் படிப்படியாக அரசின் அனைத்து மட்டங்களிலும் புகுத்தி, அதன்மூலம் முழுமையானதொரு அரசாங்கத்தை எய்திடும் வகையில் “டிஜிட்டல் தமிழ்நாடு திட்டம்” செயல்படுத்தப்படும். மக்களுடன் நேரடித் தொடர்புகொண்ட மற்றும் அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் அரசுத் துறைகளின் செயல்பாடுகள் படிப்படியாக, மின்மயமாக்கப்படும்.

2. தமிழக அரசின் கொள்கை முடிவுகளுக்கான ஆதரவு அமைப்பு (TN Decision Support System (DeTN)

தரவுப் பகுப்பாய்வு மற்றும் இயந்திர கற்றல்மூலம் கொள்கை வகுத்தல் மற்றும் அதனை திறம்படச் செயல்படுத்துவதற்கான முடிவுகளை எடுப்பதற்கு உதவிடும் வகையிலமைந்த "தமிழக அரசின் கொள்கை முடிவுகளுக்கான ஆதரவு அமைப்பு" ஒன்று செயல்படுத்தப்படும். தரவுகளின் அடிப்படையில் அமைந்த ஆளுகையை "முதலமைச்சரின் தகவல் பலகை" வழியாக வழங்குவதற்கும் பல்வேறு தரவுதளப் பயனாளிகளின் தகவல்களை ஒருங்கிணைந்த வகையில் காண்பதற்கும் இந்த அமைப்பு உதவும்.

நடப்பு நிதியாண்டில் ரூ.10 கோடியும் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு ரூ.5 கோடியும் இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்படும்.

3. தமிழக அரசுத் துறைகளின் அலுவலகச் செயல்பாடுகளை மின்னணுமயமாக்கும் திட்டம் (Departmental Office Process Digitization Program (DoTN))

அலுவல்கள் சார்ந்த அனைத்துச் செயல்முறைகளையும் மின்னணுமயமாக்கிடும் வகையில் "தமிழக அரசுத் துறைகளின் அலுவலகச் செயல்பாடுகளை மின்னணுமயமாக்கும் திட்டம்" ஒன்று அரசால் செயல்படுத்தப்படும். இது விரைந்து முடிவெடுப்பதற்கான செயல்திறனை மேம்படுத்த உதவும். குடிமக்களுக்கான அரசின் சேவைகளை, அவர்கள் நேரில் சென்று பெறவேண்டிய அவசியமில்லாமலேயே அச்சேவைகளை அவர்களுக்குப் படிப்படியாக வழங்கிடச் செய்வதன்மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட இது உதவும். மேலும் காகிதப் பயன்பாட்டைக் குறைப்பதன்மூலம் மரங்கள் காக்கப்படவும், அதன்மூலம் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைத்திடவும் இது உதவும்.

இத்திட்டம், முதற்கட்டமாக தலைமைச் செயலகத்தில் இந்த ஆண்டுக்குள் செயல்படுத்தப்படும். இரண்டாவது கட்டமாக பிற அரசுத் துறை அலுவலகங்களில் செயல்படுத்தப்படும்.

4. தரவு மையக் கொள்கை (Data Centre Policy)

தரவு உள்ளூர்மயமாக்கல் தேவைகள், மின் வாணிபத்தின் வளர்ச்சி மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளை விரைவாகப்

பூர்த்தி செய்திடும் வகையில், தரவு மையங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன.

2019–2025 ஆம் ஆண்டு காலத்திற்குள் தரவு மையத்திற்கான ஆண்டு வளர்ச்சி விகிதம் 4 சதவிகிதத்திற்கும் மேல் இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. சிறந்த அமைவிடம், சிறந்த இணைப்பு வசதி மற்றும் உபரி மின் சக்தி ஆகியவற்றின் காரணமாக சென்னை நகரம் தரவு மைய முனையமாக வளர்ந்து வருகிறது. இத்துறையில் வளர்ச்சி, முதலீடு மற்றும் உயர்தர வேலைவாய்ப்பினை ஊக்குவித்திடும் வகையில், "தரவு மையக் கொள்கை" ஒன்று வெளியிடப்படும்.

5. உலகளாவிய திறன் மையக் கொள்கை (Global Capability Centre Policy)

தகவல் தொழில் நுட்பம் சார்ந்த ஆற்றல்மிக்க உலகளாவிய திறன் மையங்களை ஈர்க்கும் முக்கிய மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. உலக அளவில் திறன் மையங்களை அதிகமாகக் கொண்டிருக்கும் முன்னணி நாடாக இந்தியா உள்ளது. இத்திறன் வளங்களைப் பெற்றுள்ள தமிழகம், இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, செயல் வல்லமையை மேம்படுத்துவதோடு, உயர்தர வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி, அதன்மூலம் தனது மதிப்பினை உயர்த்திட இயலும். உலகளாவிய திறன் மையங்களை ஈர்ப்பதன்மூலம், மாநிலத்தை உலகளாவிய திறன் மையங்களுக்கான முக்கிய முனையமாக மாற்றிடும் வகையில் அமைந்த "உலகளாவிய திறன் மையக் கொள்கை" ஒன்று வெளியிடப்படும்.

6. மெய்நிகர் அருங்காட்சியகம் (Virtual Reality Museum)

தமிழ் இணையக் கல்விக்கழகம், தொல்பழங்காலம், பாரம்பரியம் மற்றும் வரலாற்றுச் சின்னங்கள், கலைப்பொருள் குறித்த ஆவணங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் கோயில்களின் விவரங்களைப் பராமரித்து வருகிறது. இவற்றின் தனிப்பயனாக்கம், உயர்தரப் பொருண்மை ஆகியவற்றைப் பூர்த்தி செய்ய, மேம்படுத்த மற்றும் அதிகரிக்க "மெய்நிகர் அருங்காட்சியகம்" ஒன்றைத் தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் அமைத்திடவும், அதனை இணையத்தில் வெளியிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இம்மெய்நிகர் அருங்காட்சியகம் மூன்று ஆண்டு காலத்திற்குள் ரூ.7.5 கோடி செலவினத்தில் உருவாக்கப்படும்.

7. உள்ளடக்கத் தமிழ் மின்நூலகம் (Inclusive Tamil Digital Library)

தமிழ் இணையக் கல்விக் கழகம், 25,000–க்கும் மேற்பட்ட புத்தகங்கள், பருவ இதழ்கள், ஓலைச் சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளைக் கொண்ட மின்நூலகத் தளத்தைப் பராமரித்து வருகிறது. இத்தளத்தின் உள்ளடக்கத்தைப் பார்வைக் குறைபாடு, இயக்கக் குறைபாடு, கற்றல் குறைபாடு, வாசிப்பு குறைபாடு கொண்டவர்கள் மற்றும் முதியவர்கள் ஆகியோர் எளிமையாகப் பயன்படுத்தும் வகையில், அதனை ரூ.1 கோடி செலவினத்தில் "உள்ளடக்கத் தமிழ் மின்நூலகம்" ஆக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. அரிய ஒலி–ஒளி ஆவணங்கள், ஒளிப்படங்கள், புகைப்படங்கள் மற்றும் பிற வரலாற்றுப் படங்களை மின்னுருவாக்கம் செய்தல் (Digitization of Rare Audio, Video, Photographs and other Historical Images)

தமிழ் இணையக் கல்விக் கழகம், 53 இலட்சத்திற்கும் அதிகமான உள்ளடக்க பக்கங்களான அச்சிடப்பட்ட புத்தகங்கள், பருவ இதழ்கள், ஓலைச் சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள மின்நூலகத்தினைப் பராமரித்து வருகிறது. இவை சிதைவுறுவதற்கான ஆபத்துகள் இருப்பதால், அரிய ஒலி–ஒளி ஆவணங்கள், ஒளிப்படங்கள், புகைப்படங்கள் மற்றும் பிற வரலாற்றுப் படங்களை முதற்கட்டமாக ரூ.1 கோடி செலவினத்தில் மின்னுருவாக்கம் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9. யூமாஜின் – (UMAGINE) எனும் வருடாந்திர தொழில்நுட்பத் தலைமை உச்சி மாநாடு. (Annual Technology Leadership Summit)

தமிழகம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல், பொருட்களின் இணையம், ஆளில்லா விமானம், ஆழ்நிலைத் தொழில்நுட்பம் ஆகியவற்றில் முன்னிலை வகிக்கத்தக்க ஆற்றலைப் பெற்றுள்ளது.

தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் மற்றும் அவை தொடர்புடைய வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் கருத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சிக்கான உகந்த இடமாகத் தமிழகத்தை முன்னிறுத்திட ஒருங்கிணைந்த

முயற்சி அவசியமாகிறது. இத்துறைகளில் தமிழகம் பெற்றுள்ள வல்லமையைக் கொண்டாடவும் மேம்படுத்திடவும், இதில் சிறந்து விளங்கும் உலகளாவிய நிறுவனங்களுடன் இணைந்து, "யூமாஜின்" (UMAGINE) எனும் வருடாந்திர தொழில்நுட்பத் தலைமை உச்சி மாநாடு தமிழகத்தின் பல்வேறு சுற்றுலா நகரங்களில் நடத்தப்படவும் உள்ளது. முதலாவது மாநாடு சென்னையில் நடத்தப்படும்.

10. இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள். (IT Parks in Tier II/Tier III Cities)

தமிழகத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சியை ஊக்குவித்திடவும் மற்றும் பொருளாதாரச் செழுமையை மென்மேலும் உயர்த்திடவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் படிப்படியாக அமைக்கப்படும்.

11. பயனாளிகளுக்கான ஒருங்கிணைந்த பார்வைத் தளம் (Comprehensive view of Beneficiaries)

தகவல் தொழில்நுட்பத்தின் ஆற்றலைப் பயன்படுத்தி, அரசுத் திட்டப் பயனாளிகளின் உண்மைத் தன்மையை மாநிலக் குடும்பத் தகவல் தொகுப்பு வாயிலாக அறிய உதவும் ஒற்றை ஆதாரத் தளமாக "பயனாளிகளுக்கான ஒருங்கிணைந்த பார்வைத் தளம்" திகழும். இது அரசுத் திட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதுடன், புதிய நலத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை அதிகரிக்கவும் உதவும்.

மேற்கூறப்பட்ட அறிவிப்புகளை நம்முடைய மாண்புமிகு தலைவர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில் இம்மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதிக்காக படியெடுத்த—தடியையும் எடுத்த, நம்முடைய தந்தை பெரியாரை வணங்குகிறேன். காஞ்சி தந்த Garibaldi, இந்நாட்டு Ingersoll, தென்னாட்டு Bernard Shaw என்று போற்றப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன்.

இந்த அவையிலே பேசுவதற்கு மூலக்காரணமாக இருந்த 'மலர் என்றால் மல்லிகைதான், மன்னனென்றால் கரிகாலன்தான், நூல் என்றால் திருக்குறள்தான், தமிழன் என்றால் தரணியின் தலைவர் கலைஞர் ஒருவர்தான்' என்ற நிலையை உருவாக்கித் தந்திருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தலைவன் உறங்கும் திசை நோக்கி வணங்குகின்றேன்.

இரவு 8–35

அவருக்குத் துணை நின்ற நம்முடைய பேராசிரியர் பெருந்தகை அவர்களையும் வணங்குகின்றேன். 2006–லே சட்டமன்ற உறுப்பினராக உதய சூரியன் சின்னத்திலே நான் வெற்றிபெற்றபோது, அறிவாலயத்தில் பேசுகின்றபோது நம்முடைய கலைஞர் அவர்கள் சொன்னார். நீதான் இந்தச் சட்டமன்றத்தைத் துவக்கிவைத்துப் பேச வேண்டும் என்று என்னிடத்திலே கேட்டார். நானும் சரியென்று சொன்னேன், அப்போது நம்முடைய மரியாதைக்குரிய முதல்வரும் மற்ற தலைவர்களும் அங்கிருந்தார்கள். அப்படிப்பட்ட தலைவர், அண்ணா அவர்களின் தலைமையில் இருந்த அமைச்சரவையில், போக்குவரத்துத் துறையைக் கையாண்டவர், அந்தத் துறையில் நான் அமைச்சராகப் பணியாற்றுவதற்கு வாய்ப்பளித்த, எனதருமைத் தலைவர், மாண்புமிகு தளபதி அவர்களை வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கலைஞருக்குத் துணை நின்றவர் பேராசிரியர். அந்தப் பேராசிரியப் பெருந்தகைக்கும் என்னுடைய வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றம் கதகதப்பாகவும் இருக்கிறது. குளிரூட்டும் சட்டமன்றம்தான்; இருந்தாலும், கொஞ்சம் கதகதப்பாக இருக்கிறது. ஏனென்றால், சூரியன் இங்கே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடிவத்தில் அமர்ந்திருக்கிறார். அதனால் தானோ என்னவோ கதகதப்பாக இருக்கிறதென்று நான் நினைக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னை வாழ்த்த வேண்டாம்

என்று அன்புக் கட்டளையிட்டிருக்கிறார்; கடவுளை வணங்காமல், கடமையைச் செய்ய முடியாது. உங்களை வணங்காமல் போனால், தமிழ் எங்களுக்கு இணங்காமல் போகும் என்பதை, நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் வண்ண மயில். நீங்கள், எங்களை வாழ்த்த வேண்டாம் என்றுதான் சொல்வீர்கள். ஆனால், சில வான்கோழிகளுக்கு வருத்தம் வரும் என்ற காரணத்தினால்தான், நீங்கள், உங்களைப் புகழ வேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட வான்கோழிகள் பலர் இங்கே இருக்கலாம் அல்லது வெளியிலும் இருக்கலாம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தந்தைக்கும் தரணிக்கும் பேர் கொடுக்கும் கீர்த்தி உங்களுக்கு உண்டு. உங்கள் பேனா, கலைஞர் தந்த தீக்குச்சி. (குறுக்கீடு) வான்கோழிதானே, தவறாகச் சொல்லவில்லையே? தந்தைக்கும் தரணிக்கும் பேர் கொடுக்கும் கீர்த்தி உங்களுக்கு உண்டு. உங்கள் பேனா, கலைஞர் தந்த தீக்குச்சி. அது தமிழரின் விடியலை ஏற்றும் விளக்கு. உங்களுக்கு என் அன்பு நிறைந்த வணக்கங்கள்.

புத்தகத்தில் உலகத்தைப் படிக்கலாம். நம்முடைய அறிவுப் பசியை அது ஆற்றும். ஆனால், உலகத்தையே புத்தகமாக்கிப் படித்தால், நம்முடைய அனுபவம் தழைக்கும் என்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். நான் ஒரு முறை அவரிடத்தில் பேசுகின்றபோது கேட்டேன், தை மாதப் பொங்கல் நாளை வருடத்தின் முதல் நாளாக அறிவித்திருக்கிறீர்களே, மாட்டுப் பொங்கலுக்கு என்ன சொல்லலாம் என்று நான் அவரிடத்தில் கேட்டேன், அவர் சொன்னார், முட்டுகின்ற மாட்டிற்கும் பொங்கல் உண்டு, அதைப் பிடிக்கத் தோள் தட்டுகின்ற வீரனுக்கும் பொங்கல் உண்டு என்று சொல்லப்பா, என்று சொல்லிவிட்டு அவர் பாட்டுக்குப் போய்விட்டார். ஆக, எடுத்த எடுப்பிலேயே இப்படி விவேகத்துடன் பேசுகின்ற தலைவரை நான் பார்த்தது கிடையாது. அப்படிப்பட்ட ஒரு ஞானோதயம். அப்படிப்பட்ட ஒரு பேச்சாற்றல், அப்படிப்பட்ட ஒரு சொல்லாற்றல். அப்படிப்பட்ட ஒரு தலைவனை நினைந்து நான் வணங்குகின்றேன், வாழ்த்துகின்றேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தம்பி, திரு. உதயநிதி அவர்கள், திருவள்ளுவர் திருக்குறளில் சொன்னார்;

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்"

என்ற எண்ணத்தில் கலைஞரின் வடிவில் இருக்கின்ற நம் உதயநிதி அவர்கள், அவர் இதயத்தில் தனது தந்தையைத் தாங்கி, உள்ள உணர்வாய் கழகத்தைத் தன்னுடைய உணர்வில் வைத்து மதித்துப் பணியாற்றுகின்ற அவர், தேர்தல் களத்தில் நின்று சுழன்று பணியாற்றியதை நான் இன்றும் நினைத்துப் பார்க்கிறேன். எனது தொகுதிக்கு வந்தபோது, பாரதிதாசன் சொன்னதுதான் என் நினைவிற்கு வருகிறது,

"பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில்வா!
எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலியென செயல்செய்யப் புறப்படு வெளியில்!
நம்பினை பகலினை நள்ளிருள் என்றே
சிம்புட் பறவையே சிறகை விரி! எழு!
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திறவிழி!"

என்று சொன்னான். ஆக சிங்க இளைஞனாக அன்றைக்குப் பேசி, அந்தத் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்து, என்னை மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த, ஓர் அணிகலனாக விளங்கியவர், நம்முடைய உறுப்பினர் தம்பி திரு. உதயநிதி அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், அவர் ஆற்றுகின்ற பணி ஒரு செங்கல்லை வைத்து இந்த நாட்டையே வழி நடத்தியவர். செங்கல்லை வைத்து ஒரு மாற்றத்தை உருவாக்கியவர். அப்படிப்பட்ட தம்பியை நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னை நம்பிக்கையோடு இந்தத் துறையில் பணியாற்றுவதற்கு வாய்ப்பினைத் தந்து, என்னைப் பணியாற்ற அனுமதித்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரவு 8–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7–5–2001 அன்று மாண்புமிகு தலைவர் அவர்கள் கோட்டைக்கு வருவதற்கு, ஆளுநர் மாளிகையில் பதவி ஏற்றதற்குப் பிறகு, நம்முடைய தலைவர் அவர்கள், நம்முடைய 5 கோப்புகளிலே, 5 உத்தரவுகளைப் பிறப்பித்தார். அவற்றில், ஒன்று, மகளிருக்கான இலவசப் பயணம். மகளிருக்கான இலவசப் பயணம் என்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்,

பெண்கள் வரவேற்கிறார்கள். 60.45 சதவிகிதம் அளவிற்கு பெண்கள் பயணித்திருக்கிறார்கள். நான் எதிர்பார்த்தது 40 சதவிகிதம்தான். ஆனால், பெண்கள் 60 சதவிகிதத்திற்குமேல் வந்து, இந்த மகளிர் பயணத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, மகிழ்ச்சியோடு செல்கிறார்கள் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நீங்களெல்லாம் செய்யாவிட்டாலும்கூட, செய்ததைப் பாராட்டுவதற்கு மனம் இல்லாவிட்டாலும்கூட மனதிலாவது நீங்கள் பாராட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு காலங்களில் போக்குவரத்துத் துறை பல்வேறு சோதனைகளைச் சந்தித்திருக்கிறது. நான் ஒதுக்கப்பட்ட நேரம்; அரசியலிலிருந்து என்னை ஒதுக்கிவிடலாமா என்று சில பேர் நினைத்த நேரத்திலே நான் இருக்கின்ற திராவிட இயக்கத்தினுடைய தலைவனாக, தமிழகத்திலே இன்றைக்கு வெற்றிடம் கிடையாது என்று சொல்லி, மதுரையிலே மாபெரும் கூட்டத்திலே என்னை இணைத்துக்கொண்ட அந்த உத்தமத் தலைவன் இன்றைக்கு தமிழக முதல்வராக அமர்ந்திருக்கிறார் என்று சொன்னால், அவரை வணங்காமல் எப்படி இருக்க முடியும்? வாழ்த்தாமல் எப்படி இருக்க முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அப்படிப்பட்ட எங்களை அணைத்துக்கொண்டு இன்றைக்கு மிகப் பெரிய பொறுப்புகளைக் கொடுத்து, அமர வைத்திருக்கின்ற அந்தத் தலைவனை, கண்ணீர் சிந்தும் முகத்தோடு அவரை நான் பார்க்கிறேன். அப்படிப்பட்ட உன்னதமான ஒரு நிலையை அவர் திராவிட இயக்கத்தின் தம்பிமார்களுக்குத் தந்தார் என்பதை தலைவரின் வழியிலே அவருடைய மகன் என்ற அடிப்படையிலே இன்றைக்குப் பணியாற்றுகின்றார். அவருடைய வழியிலே, அவருடைய மகன் நாளைக்கு பணியாற்றுவார் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் மட்டுமல்ல, என் சந்ததியும் உங்கள் காலத்திலே உங்களுக்குப் பின்னால் தொடர்ந்து வரும் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளத்தில் அச்சாணியாக விளங்குவது போக்குவரத்துத் துறை. அச்சாணியாக விளங்கியவர் திராவிட இயக்கத் தலைவர் கலைஞர். போக்குவரத்துத் துறையை அவர் நிருவகித்தார். அவர் நிருவகித்த காலத்திலே அவர் மிகப் பெரிய சாணக்கியர். அவர் பொறுப்பு வகித்த துறையிலே இன்றைக்கு நான் பணியாற்றுகிறேன் என்பது மிகப் பெரிய

மகிழ்ச்சி. இந்தத் துறையை 100 தினங்களுக்குள்ளே புனரமைத்து, புதுமைகள் புகுத்தி, திட்டம் தீட்டி, நித்தம் நித்தம் புத்தம் புது திட்டங்கள் வகுத்து, புது எழுச்சியையும், மறுமலர்ச்சியையும் செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்திருக்கின்ற முயற்சிகள், அவர் எங்களுக்குத் தந்திருக்கின்ற அறிவுரைகள்தான் மிகவும் தெளிவான அறிவுரைகள் என்பதை நான் இந்த மன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பைபிள் என்பது கிறித்தவர்களுக்குரியது; குர்ஆன் என்பது இஸ்லாமியர்களுக்குரியது; பகவத் கீதை என்பது இந்துக்களுக்குரியது. ஆனால், திருக்குறளோ உலகத்திற்கே பொதுமறை, அது உலகத்திற்கே உரியது. அப்படிப்பட்ட திருக்குறளை திருவள்ளுவர் படத்தோடு 20,557 bus–களிலே வைக்க வேண்டுமென்று உத்தரவிட்டவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். அவர் உத்தரவிட்டது, குறளை மாத்திரமல்ல, திருவள்ளுவர் படத்தை மாத்திரமல்ல, அதனுடைய உரையையும், தெளிவுரையையும் மக்கள் படிக்க வேண்டும். ஆகவே, பயணிகள் பேருந்தில் ஏறுகின்றபோது, என்ன வெறும் திருக்குறள்தான் இருக்கிறது என்று போய்விடக்கூடாது அதற்குத் தெளிவுரையும் வைக்க வேண்டும் என்று சொல்லி, எங்களுக்கு உத்தரவிட்டு 20,557 bus–களிலும் திருக்குறள் இருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் நமது தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுவிட்டன. அனைத்துப் பேருந்துகளிலும் திருவள்ளுவர் படமும், குறளும், அதற்கான பொழிப்புரையும் சொல்லப்பட்டிருக்கிறது, அந்தப் பலகைகளில் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழக அரசு பொறுப்பேற்றது 7–5–2021. ஆனால், 26–5–2021–க்குள், சுமார் 20 தினங்களுக்குள் ஓய்வு பெற்ற ஊழியர்கள், 2,457 தொழிலாளர்களுக்கான பணப்பலன் நிலுவைத் தொகை 497 கோடியே 32 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. நிதியை சும்மா ஒதுக்கிவிட்டுச் சென்றது, Proposal போடுவது அதெல்லாம் இல்லை. பணத்தை நேரடியாகக் கொடுத்தது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

தொழிலாளர்களினுடைய கோரிக்கையை, மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திரு. நத்தம் விசுவநாதன்

அவர்கள் Medical College–ஐக் கொடுத்துவிட்டோம் என்று பேசினார்கள். IRT Perundurai Medical College என்பது Government Erode Medical College ஆக செயல்பட்டு வருகிறது. Medical College இருந்தது அவருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அ.தி.மு.க. ஆட்சியில்தான் அந்த Medical College–ஐ 1–4–2019 அன்று ஒரு G.O.மூலம் மக்கள் நல்வாழ்வுத் துறையிடம் ஒப்படைத்துவிட்டார்கள். அதில் கொடுத்தது 35 சதவிகிதம்தான். அதுதான் Engineering கல்லூரியிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஒரு குற்றச்சாட்டுப்போல, நாங்கள் ஏதோ தாரைவார்த்துவிட்டதுபோல, அன்றைக்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் அவர்கள் அதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். ஆகவே, 35 சதவிகிதம் என்பது தொழிலாளர் தோழர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம். ஆகவே, மருத்துவக் கல்லூரியிலும் அந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல Engineering கல்லூரியிலும் அந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும், 3 இடங்கள், பர்கூர், திருநெல்வேலி, கும்மிடிப்பூண்டி போன்ற பகுதிகளிலே Polytechnic colleges நம்முடைய போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலே நடத்தப்பட்டு வருகின்றன.

இரவு 8–45

அடுத்து, நிறைய பஸ்கள் விடவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பஸ்கள், விடுகிறோம்தான். ஏற்கெனவே எவ்வளவு பஸ் ஓடிக்கொண்டிருந்தது? இப்போது எவ்வளவு பஸ்கள் ஓடுகிறது? ஏற்கெனவே சுமார் 14,000 பஸ்கள் இயக்கப்பட்டன. இப்போது 17,333 வண்டிகள் ஓடுகின்றன. கொரோனா காலத்திற்கு முன்பிருந்த நிலையைச் சொல்கிறேன். கொரோனா காலத்திற்கு முன்பு சுமார் 14,000 பஸ்கள்தான் ஓடின. இப்போது 17,333 பஸ்கள் ஓடுகின்றன. 19,290 வண்டிகள் மொத்தம் நம்மிடம் உள்ளன. 10,552 வழித்தடங்கள்; 19,290 வண்டிகள்; அந்த வண்டிகள் எல்லாம் ஓட்டவில்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள். இன்று 17,300 பேருந்துகளை இயக்கிக் கொண்டிருப்பது மாண்புமிகு தமிழக முதல்வரின் அரசு என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு நிமிடத்தில் எடுக்கின்ற முடிவுதான் இந்த உலகத்தையே மாற்றுகிறது. அந்த முடிவு என்ன என்பதை உங்களுக்கு நான்

பின்னாளில் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முதன் முதலில் 1947–லில், 239 பேருந்துகளோடு தேசியமயமாக்கப்பட்டது. மொழிவாரி மாநிலமாகப் பிரிக்கப்பட்ட பிறகு, அதற்கு போக்குவரத்துத் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான சீரிய ஆட்சி ஏற்பட்டவுடன் 1–1–1992–ல்தான் போக்குவரத்துக் கழகமாக அது உருவாகியது. போக்குவரத்துக் கழகமாக உருவாக்கியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இதில் 8 போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. (குறுக்கீடு) யார் உருவாக்கியது என்று நீங்கள்தான் கேட்டீர்கள்? அப்போது யார் உருவாக்கியது என்பதைச் சொல்ல வேண்டாமா? மொத்த நகரப் பேருந்துகளான 7,313–ல் பெண்கள் பயணிக்கின்றார்கள். அதில் என்ன உங்களுக்குக் கஷ்டம்? பெண்கள் இலவசமாகப் பயணிக்கிறார்கள். மாணவர்கள் இலவசமாகப் பயணிக்கிறார்கள். படிக்கிற பெண்கள் இலவசமாகப் பயணிக்கிறார்கள். அதற்கு தனியாக அரசு நிதியைத் தருகிறது. பெண்கள் பேருந்தில் பயணம் செய்வதற்காக 1,340 கோடி ரூபாயை, நமது அரசு, நம்முடைய முதல்வர் அவர்கள் தனியாக நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார். இதில் என்ன கஷ்டம்? பெண்கள் ஓட்டுகள் போய்விட்டன என்று நீங்கள் கொஞ்சம் வருத்தத்தில் இருக்கிறீர்கள், அந்த ஒரு கவலைதான் உங்களுக்கு. 40 சதவிகிதத்திற்கு மேல் மாற்றுத் திறனாளிகள்; நடக்க முடியாதவர்கள் ஒரு இலட்சம்; எத்தனை நபர்கள் பயணம் செய்திருக்கிறார்கள் என்றால், ஏறத்தாழ 12,49,000 பேர் பயணம் செய்திருக்கிறார்கள். திருநங்கைகள், 1,25,000 நபர்கள் பயணம் செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). மாற்றுத் திறனாளிகளுக்கு உதவியாக போகிறவர்கள், 83,000 நபர்கள் பயணம் செய்திருக்கிறார்கள். ஒரு நாளைக்கு 32,28,000 பெண்கள், average ஆக பயணம் செய்கிறார்கள் என்று சொன்னால், இது ஒரு பெரிய சாதனை இல்லையா? ‘சொன்னதைத்தான் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்’ என்று சொல்வோம். சொல்லாததையும் செய்திருக்கிறோம். 14 மளிகைப் பொருட்கள் கொடுத்தார்களே, அதெல்லாம் கணக்கில் வராதா? ஆக, சொன்னதையும் செய்கிறார், சொல்லாததையும் செய்கிறார் மாண்புமிகு முதல்வர் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமென்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'வெள்ளைப் பலகைப் பேருந்து' பற்றி சொன்னார். Ticket எப்படி கொடுக்கிறோம்? வெள்ளைப் பலகை பேருந்து என்றால், அது ஒரு identificationதான். அதற்கு என்ன colour அடிக்க வேண்டுமென்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து ஆலோசித்து, நாங்கள் அடிப்போம். உங்கள் ஆட்சிக்காலத்தில் பஸ்கள் எப்படி இருந்தன தெரியுமா? ஒரு பஸ்சை clean செய்ய 68 ரூபாய் என்று tender போடப்பட்டது. இப்போது எவ்வளவு ரூபாய்க்கு clean செய்கிறோம் தெரியுமா? 33 ரூபாய்க்கு clean செய்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு ரூபாய் நஷ்டம்? 13 கோடி ரூபாய் நஷ்டம். இப்படி பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்போது துறையே துருப்பிடித்துப்போய் இருக்கிறது. அவர் சபையில் இல்லையென்பதால் நான் பேசத் தயாராக இல்லை. முன்னாள் அமைச்சர்—போக்குவரத்து துறையின் அமைச்சராக இருந்தவர்—துறையே துருப்பிடித்துப்போய் இருக்கின்றது. தொழிலாளர்களுக்கு எந்தவித நன்மைகளும் செய்வதில்லை. நீங்கள், உடனே அதிகாரிகளை மாற்றுகிறார்கள் என்கிறீர்கள். அதிகாரிகளை யார் மாற்றுகிறார்கள்? Administrative ground–ல் அதிகாரிகளை மாற்றுவது என்பது ஓர் அரசாங்கத்தினுடைய கட்டாயம். நீங்கள் எந்த அதிகாரிகளை நியமித்திருந்தீர்கள்? யார் யாரையெல்லாம் மாற்றாமல் இருந்தீர்கள்? ஆக, அதிகாரிகளை மாற்றுவது என்பது ஆங்காங்கேயிருக்கின்ற செயல்பாடுகளைப் பொறுத்து, அவர்களின் நடவடிக்கைகள் இருக்குமே தவிர, அரசாங்கத்திற்கு பழிவாங்க வேண்டுமென்ற எண்ணம் கொஞ்சம்கூட கிடையாது என்பதைத் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறைச் செயலாளர் இருக்கிறார்கள். 8 போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. SETC—விரைவுப் போக்குவரத்துக் கழகங்கள்மூலம், எல்லா மாநிலங்களுக்கும், தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களுக்கு நாம் விரைவு பேருந்துகளில் பயணிக்கிறோம்.

இரவு 8–50

ஏற்கெனவே 2 கோடியே 4 இலட்சம் பேர் இருந்தவர்கள் தற்போது 1 கோடியே 70 இலட்சம் பேர் ஆகிவிட்டது என்று

அவர் சொன்னார். கடந்த கொரோனா காலத்தில் 70 இலட்சம் பேர்தான் வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மை. தற்போது எவ்வளவு பேர் வந்திருக்கின்றார்கள் என்று சொன்னால், கிட்டத்தட்ட ஒரு கோடி பேர் நெருங்கி வந்துவிட்டார்கள். தற்போது develop ஆகிக்கொண்டே வருகின்றது. போக்குவரத்துக் கழகங்களுக்கு என்று கிட்டத்தட்ட 42,000 கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் இருக்கின்றது. இந்த வருடம் மட்டுமே 7,984 கோடி ரூபாய் நஷ்டம். உதிரி பாகங்கள் விலை, டீசல் விலை இவைகளெல்லாம் உள்ளன; இதில் rate ஏற்றியிருக்கிறோமா? கிடையாது, rate–ஐ ஏற்றியது கிடையாது. நீங்கள் இரண்டு முறை விலையினை ஏற்றினீர்கள். நாங்கள் இரண்டு முறை விலையினை ஏற்றவேயில்லை.

2018 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தொழிலாளர் சங்கங்களின் கூட்டம் முடிந்துவிட்டது. 31–8–2019 உடன் முடிந்துவிட்டது என்றால் தொழிற்சங்கக் கூட்டம் போட வேண்டும் அல்லவா, ஏன் போடவில்லை? தொழிற்சங்கம் கூட்டம் போடவில்லை என்று நீங்கள் கேள்வி கேட்கிறீர்கள். தொழிற்சங்கத்தின் கூட்டத்தினை நாங்கள் போட்டுக்கொண்டு இருக்கிறோம். நாங்கள் 1–9–2021 இல் பேசியிருக்கிறோம். தொழிற்சங்கத்தின் தலைவர்கள் எல்லாம் எங்களுடன் வந்து பேசியிருக்கிறார்கள். எல்லோரையும்தான் கூப்பிடுகிறோம். உங்களையும்தான் கூப்பிடுகிறோம். இதில் கட்சிப் பாகுபாடு கிடையாது. எல்லோரையும் அழைத்துப் பேசி எந்தமாதிரி அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்க வேண்டும், என்ன மாதிரி பணப் பயன்கள் கொடுக்க வேண்டும் என்ற விவரங்களையெல்லாம் நாங்கள் பேசவிருக்கிறோம். ஆக, தொழிலாளர்களின் பிரச்சினைகளையும் கேட்கின்ற அரசுதான் இந்த அரசு. ஆகவே, இந்த அரசைப் பொறுத்தமட்டில், மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பொறுத்தமட்டில், தொழிலாளர்களின் தோழன் என்பதை மாத்திரம் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது, இத்துறையில் ஐந்து பிரிவுகள் உள்ளன. மேலாண்மை இயக்குநர்கள் 8 பேர் இருக்கிறார்கள். போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் ஒன்று உள்ளது. சாலைப் போக்குவரத்து நிறுவனம் என்று ஒன்று உள்ளது. பல்லவன் போக்குவரத்து அறிவுரைக் குழு என்று ஒன்று உள்ளது. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை என்று ஒன்று உள்ளது.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் என்பது எப்படி செயல்படுகிறது என்றால், பற்றாக்குறை பணத்தினை பொது மக்களிடமிருந்து வாங்குகிறோம். வயதில் மூத்தவர்கள், 60 வயதிற்கு மேல் உள்ள மூத்தவர்களிடமிருந்து பணம் பெறுகிறோம். அவற்றையெல்லாம் வாங்கி நிதி சேர்த்து, அதற்கு வட்டி கொடுத்து, அவற்றைப் போக்குவரத்துக் கழகத்திற்குப் பயன்படுத்துவதற்கு ஓர் அச்சாணியாக விளங்குவதுதான் நமது தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்.

அடுத்து, சாலைப் போக்குவரத்து நிறுவனம் IRT. IRT–யில் training கொடுக்கிறோம். டிரைவர்களுக்கு training கொடுக்கிறோம், கண்டக்டர்களுக்கு training கொடுக்கிறோம். அவர்களும் IRT–யில் training எடுக்கிறார்கள். உதிரி பாகங்கள் வாங்குவதை check செய்வது; உதிரி பாகங்கள், சூல்பட்டை, அடித்தளத்தில் உள்ள பட்டைகளை check செய்வது IRT–யில்தான், பின்னர், Tender விடுவார்கள். தற்போது எண்ணெய் நிறுவனத்திற்கு 35,000 கோடி ரூபாய்க்கு Tender விட்டார்கள். அதில் யாரும் எந்தவித தவறும் செய்ய முடியாது. எண்ணெய் நிறுவனம் என்பது ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற நிறுவனம். அதில் 35,000 கோடி ரூபாய்க்கு டீசல், Oil எல்லாம் வாங்குகிறோம். அந்த ரூ.35,000 கோடி ஒன்றிய அரசுக்குத்தான் போகின்றதே தவிர நமக்கு வருவது கிடையாது. அதில் எந்தத் தவறும் நடப்பது கிடையாது.

அடுத்து நமது அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் வைத்துள்ள அரசு கார்களை ரிப்பேர் செய்வதுதான் நமது போக்குவரத்துத் துறையின் வேலை. அதற்கான நிறுவனம்தான் தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை. அந்தப் பராமரிப்புத் துறையில்தான் அரசு வாகனங்கள் அனைத்தையும் ரிப்பேர் செய்கிறோம். அதற்கு 20 இடங்களில் மையங்கள் வைத்திருக்கிறோம். அவற்றில் முக்கியமான இடங்கள் மதுரை, திருச்சி மற்றும் தமிழ்நாடு முழுவதும் 20 இடங்களில் அரசு மோட்டார் வாகனங்களைப் பராமரிப்பு செய்கிறோம். இது மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையைச் சேர்ந்தது.

'உங்கள் தொகுதியில் முதல்வர்' என்று நமது தளபதி அவர்கள் ஒரு scheme கொண்டுவந்தார்கள். அதில் 9230 மனுக்கள் போக்குவரத்துத் துறை சார்பில் வந்தன. அதில்

இதுவரை தீர்வு செய்யப்பட்டுள்ள மனுக்கள் 8,950. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்கள், அடித்தள மக்கள், ஆற்றா மக்கள், இடுப்பு ஒடிய பாடுபட்டும் அடுப்பு எரிக்க முடியாமல் இருப்பவர்கள், ஏழையெளியவர்கள் இப்படிப்பட்ட மக்களின் உணர்வுகளை வைத்துத்தான் நம்முடைய தளபதி அவர்கள் அந்த மனுக்களையெல்லாம் பெற்றார்கள். அந்த மனுக்களில் கிட்டத்தட்ட 90 சதவிகிதத்திற்கு மேல் தீர்வு கண்டிருக்கிறோம். ஆக, இவையெல்லாம் உருப்படியான திட்டங்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் எதிர்காலத்தில் மிகவும் பயனளிக்கக்கூடிய திட்டங்கள் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இரவு 8–55

அடுத்து, நாங்கள் திருச்சுழியில் பயணச் சீட்டு முன்பதிவில், வேகமாக செல்கின்ற SETC பஸ்களைத் துவக்கி வைத்தோம். திருச்சியிலிருந்து சென்னைக்கு வருவதற்கு ரூ.512/– தான் charge. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்களுடைய தொகுதி. அந்தத் தொகுதியிலிருந்து சென்னை வருவதற்கு ரூ.512/– தான் charge. ஆனால், ஆம்னி பஸ்ஸில் சென்றால், 1200 ரூபாய் கொடுக்க வேண்டும். ஏழையெளிய மக்கள் பயன்படுத்துவது போக்குவரத்து கழகத்தைத்தான் என்று நம்முடைய மாரிமுத்து அவர்கள் சொன்னார். ஆகவே, அப்படிப்பட்ட ஏழையெளியவர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், உபயோகப்படுத்துகின்ற நிறுவனம்தான் போக்குவரத்து நிறுவனம். நம்முடைய துரைமுருகன் அண்ணன் நேரத்தைப் பார்க்கின்றார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இல்லை, interval–ல், பஸ், பஸ் ஸ்டாப்பில் நின்றால் டீ குடிக்கலாமே! (சிரிப்பு)

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: அதேபோல, நிறைய பேருக்கு சலுகைகள் வழங்கியிருக்கிறோம். அதில் இருப்பவர்கள் யார் யார் என்றால், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள், மேலவை முன்னாள் உறுப்பினர்கள், மகளிர், திருநங்கைகள், பத்திரிகையாளர்கள், மாற்றுத் திறனாளிகள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், அவர்களின் விதவை மனைவிகள், AIDS நோயாளிகள், புற்று நோயாளிகள், 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு எப்படி சலுகை கொடுத்திருக்கிறோம் என்றால், சென்னையில் ஓடுகின்ற MTC பஸ்ஸில் 10 trips அவர்கள்

போய் வரலாம், அதுபோன்ற சலுகைகளைக் கொடுத்திருக்கிறோம். பெண்கள் இலவசமாகப் போகலாம்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள்கூட மனுவைக் கொடுத்துவிட்டுச் சென்றார்கள். இதில் அவர்களுக்கும் ஒரு விளக்கம் நான் சொல்லிவிடுகின்றேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்களுக்கு medical college–ல் நடந்த விஷயத்தைச் சொன்னதுபோல், இதையும் சொல்லிவிடுகின்றேன்.

அதில் 50 சதவிகிதம் மானியம் நம்முடைய private colleges–க்குக் கொடுக்கிறோம். மற்றவைகளில் பெண்கள் இலவசமாக பிரயாணம் செய்துகொள்ளலாம். அதில் பிரயாணம் செய்துகொள்ள வேண்டியதுதானே! இந்த 50 சதவிகிதம் கட்டணம் செலுத்த வேண்டும். நம்முடைய அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள், அரசுப் பள்ளிகள் I.T.I., தொழிற்பள்ளிகள், polytechnic ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கெல்லாம் கட்டணம் கிடையாது. இவற்றில் பயிலும் மாணவர்கள் அனைவரும் இலவசமாகப் பயணம் செய்யலாம்.

தனியார் பள்ளிகள் 50 சதவிகிதம் கட்டணம் செலுத்தி, அதன்மூலம் பிரயாணம் செய்ய வேண்டுமென்றுதான் நாங்கள் சொல்லியிருக்கின்றோம். அதன்படி பிரயாணம் செய்யலாம். அப்படி பிரயாணம் செய்ய விருப்பமில்லையென்றால், இலவச பஸ்ஸில் ஏறி பெண்கள் செல்லலாம். அதில் எந்த மாற்றமும் கிடையாது.

இப்போது பஸ் வாங்கப் போகிறோம்–எப்படியென்றால், சில complaints வருகின்றன. எங்கள் ஆட்சி வந்து 4 மாதங்கள்தானே ஆகிறது. அதற்கு முன்பு இருந்த பஸ்களெல்லாம் பெரிய ரதம் மாதிரி இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. சில பஸ்கள் எல்லாம் ஓட்டை பஸ்களும் இருக்கின்றன. அந்த பஸ்கள் அனைத்தையும் மாற்றிவிட்டு, புதிய பஸ்கள், 2,212 டீசல் vehicle, 500 electrical vehicle என ஜெர்மன் கம்பெனியின் உதவியோடு பஸ்கள் வாங்கப் போகிறோம். அதற்குப் பிறகு சில வண்டிகளையெல்லாம் மாற்றி, ஒரு புதிய பொலிவோடு நம்முடைய போக்குவரத்துத் துறையை நடத்த வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள்.

அந்த அடிப்படையில் இத்திட்டத்திற்கு 80 சதவிகிதம் நமது ஜெர்மன் வங்கி பணம் கொடுக்கிறது, 20 சதவிகிதம்

நம்முடைய மாநில அரசு பணம் கொடுக்கிறது. ஆகவே முதலில் பஸ்கள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதுபோல் கண்டக்டர்கள் 1800 பேருக்கு மேல் Driver–cum–conductor–*கள்தான் இந்த* SETC *பஸ்களை ஓட்டுவார்கள். அதுபோல்* Conductors, Drivers *சில இடங்களில் கூடுதலாக இருக்கிறார்கள். மதுரையில் பார்த்தால், ஒரே நேரத்தில் 500 பேருக்கு* transfer *போட்டுவிட்டு போய்விட்டார். அதை எதற்குப் போட்டார் என்பது தெரியவில்லை. தற்போது 500 பேர்* excess *ஆக இருக்கிறார்கள்.* Conductor *எங்கு பார்த்தாலும்* shortage *ஆக இருக்கிறது. ஆக இப்படி பல குழப்பங்கள் இருக்கின்றன. ஆகவே, இதனையெல்லாம் தீர்க்க வேண்டுமென்பதற்காக இதுபோன்ற* conductor, driver–*களையெல்லாம் பணியில் எடுத்து, அவர்களையெல்லாம் ஒவ்வொரு மண்டலத்திற்கும்–* Region–*க்கும்* distribute *செய்ய சொல்லியிருக்கிறோம். அந்த மாதிரி தனித்தனியாகப் பிரித்துப் போட்டுக்கொண்டிருக்கிறோம்.*

நமது சென்னையை எடுத்துக்கொண்டால், driver–*கள் குறைவு,* conductor–*கள் அதிகம். இப்படி குழப்பங்கள் இருக்கின்றன.* Driver *இல்லாமல் வண்டி ஓட்ட முடியாது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகளையெல்லாம் மாற்றி, மிகச் சிறந்த நிர்வாகமாக இன்னும் இரண்டு மாதக் காலத்திற்குள் புதிய பஸ்களை வாங்கி, எல்லா ஏற்பாடுகளையும் செய்ய இருக்கிறோம்.* Tender *தான் விடப்போகிறோம். அதில் எந்தத் தவறும் நடக்காது. மாண்புமிகு உறுப்பினர் முறைத்து பார்க்காதீர்கள். நாங்கள்* tender *விடப்போகிறோம். அதில் எந்தவிதமான தவறுகளும் நடக்காது. ஆகவே, அந்த பஸ்களை வாங்கி, அவை முறைப்படி பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்புறம்* M.T.C. *இருக்கிறது.* M.T.C.–*ல் சொல்வதற்கு நிறைய விஷயங்கள் இருக்கின்றன. இப்போதே நேரம் ஆகிவிட்டது. இப்போதே ½ மணி நேரம் ஆகிவிட்டது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பஸ் எப்போது போய் சேரும் என்று எல்லோரும் கேட்கிறார்கள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *இன்னும் ஒரு துறை இருக்கிறது. போக்குவரத்துத் துறைமூலம் பஸ்களை அனுப்புகிறோம் என்று சொன்னால், மலைப் பகுதிகளில் 427 பஸ்களை அனுப்புகிறோம். மலைப்பாங்கான* area–*க்களுக்கு– கல்வராயன் மலை, திருவிழாக்களுக்கு அனுப்புகிறோம்.*

ஏதாவது நிகழ்ச்சிகளுக்கு அனுப்புகிறோம், பொது மக்கள் கூடுகின்ற நிகழ்ச்சிகளுக்கு அனுப்புகிறோம். மதுரையை எடுத்துக்கொண்டீர்களென்றால், இருக்கன்குடிக்கு அனுப்புகிறோம். அழகர்கோயிலுக்கு அனுப்புகிறோம், மீனாட்சி அம்மன் கோயில் விசேஷம் வருகிறது. அதற்கு அனுப்புகிறோம். திருவண்ணாமலை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், மலைகளில் பல்வேறு மலைவாசஸ்தலங்கள் இருக்கின்றன. அதைப்போல் சேலத்தில் இருக்கிறது; அதுபோல கொடைக்கானல் மற்றும் கோயம்புத்தூரில் இருக்கிறது. அப்படி பல்வேறுவிதமான இடங்களுக்கு பஸ்களை நாங்கள் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். இந்தப் போக்குவரத்துக் கழகத்தை செம்மைப்படுத்த வேண்டுமென்றால் நீங்கள் எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். நீங்கள் எல்லோரும் அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைக்கு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுத்தால், நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஏழரைக் கோடி மக்களும் உங்களைப் பாராட்டுவார்கள். எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுத்து, புது பஸ்களை வாங்கவும், அதுபோல் conductor, driver–களையெல்லாம் எடுத்து, முறைப்படுத்தி இந்த பஸ்களை நன்றாக ஓட்டினோம் என்று சொன்னால், இந்தப் போக்குவரத்துக் கழகங்களை செம்மைப்படுத்தினால் அனைத்து மக்களும் நம்மைப் பாராட்டுவார்கள். நமது சட்டமன்றத்தில் அதுபோன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற செய்தியை நீங்கள் அவர்களுக்குத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 9–00

நிறைய கூண்டு கட்டும் பிரிவுகள் இருக்கின்றன. போக்குவரத்துத் துறையைப் பற்றி நிறைய பேசிக் கொண்டே போகலாம். இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் என்று இன்னொரு துறை இருக்கிறது. அதைப்பற்றியும் பேச வேண்டும். அதிலே இயக்கூர்தி சட்டங்கள் இருக்கின்றன. அதில் RTOs 89 பேர் இருக்கிறார்கள். 56 Unit Offices இருக்கின்றன. 21 checkposts இருக்கின்றன. RTOs' office maintain செய்வது கொஞ்சம் கஷ்டம். RTOs எல்லாம் உங்களுக்குத் தெரியும். Motor Vehicle Inspectors இருக்கிறார்கள். அவர்கள் இயக்கூர்திகளை எப்படி பயன்பாடு செய்கிறார்கள், சட்டத்தின்படி பயன்படுத்துகிறார்களா என்று ஆய்வு செய்கிறார்கள். நாங்கள் என்ன கொண்டு வந்திருக்கிறோமென்பதை நீங்கள் அறிவிப்பில் பார்க்க வேண்டும். இந்த LLR–Learner License Registration

என்பது ஓட்டுநராகக் கற்றுக்கொள்பவர்கள் உரிய முறைகளில் முதல் 30 நாட்களில் இருந்து 6 மாதத்திற்குள் கற்றுக்கொண்டு இருப்பவர்கள் Learners' license பெற apply செய்யலாம் என்ற விதத்தில் அந்தப் பணிகளைச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அறிவிப்புகள் புத்தகத்தை எல்லோருக்கும் கையில் கொடுத்து விடலாமா?

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: சொல்கிறேன். இன்னும் கொஞ்சம் பேச வேண்டியிருக்கிறது. இன்னும் 10 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். மற்றொரு துறை குறித்து இப்போதுதான் பேசுவதற்கு ஆரம்பித்திருக்கிறேன். Change of address – முகவரி மாற்றுவதற்கெல்லாம் அலுவலகத்திற்குப் போக வேண்டும் என்பது போன்ற தொல்லைகளெல்லாம் இனிமேல் இருக்காது. அதெல்லாம் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் நம்முடைய போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் இவற்றையெல்லாம் நாங்கள் சொல்லியிருக்கிறோம். அறிவிப்பிலும் இதையெல்லாம் நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆகவே, ஓட்டுநர்கள் நேரடியாகப் போய் அவர்களுடைய original license–ஐ வாங்குவதற்கு மட்டும்தான் இந்த அலுவலகத்திற்குப் போக வேண்டும். இனிமேல் வேறு எதற்கும் போக வேண்டியதில்லை. இப்போது online–ல் ticket book செய்வதுபோன்று, எல்லாவற்றிற்கும் அவர்கள் நேரடியாகச் செல்லாமல் வீட்டிலிருந்தே காரியங்களைப் பார்த்துக்கொள்ளலாம். அதனால் அலுவலகங்களில் கூட்டம் குறையும். அதுபோன்று குற்றச்சாட்டுகள் குறையும். இலஞ்ச இலாவண்யங்கள் ஒழியும். ஆகவே, இது ஒரு மிகப்பெரிய நல்ல அறிவிப்பு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்று பெட்ரோல் விலையைக் குறைத்து விட்டார்களென்று சொன்னார்கள். பெட்ரோல் விலையைக் குறைத்தால்தான் நல்லது. இரண்டு கோடியே 61 இலட்சத்து 45 ஆயிரத்து 113 பேர்கள் two wheelers–ல் செல்கிறார்கள். அவர்கள் எதை வைத்து ஓட்டுகிறார்கள். டீசலை வைத்தா ஓட்டுகிறார்கள்? முழுவதும் பெட்ரோல்தான். பெட்ரோலை loss–லிருந்து எவ்வளவு make up செய்திருக்கிறார்கள்? பெட்ரோல் விலையை 3 ரூபாய் குறைத்ததனால் எவ்வளவு பேர்களுக்கு இலாபம்? (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோக, மோட்டார் கார், எல்லோருமா டீசல் கார் வைத்திருக்கிறார்கள்? பெட்ரோல் கார் நிறைய பேர் வைத்திருக்கிறார்கள் அல்லவா? அப்படி 28

இலட்சத்து 95 ஆயிரத்து 959 கார்கள் இருக்கின்றன. ஜீப்புகள் 41,232 இருக்கின்றன. Tricycle, auto 4,358 இருக்கின்றன. டிராக்டர்கள் 3,69,253 இருக்கின்றன. இதுபோன்று நிறைய வண்டிகள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் போக்குவரத்து என்பது நெரிசலான போக்குவரத்து. அவர் சொன்னதுபோன்று, மகாராஷ்டிராவுக்கு அடுத்து தமிழ்நாட்டில் மிகப் பெரிய அளவில் போக்குவரத்து நெரிசல் இருக்கின்றது. இந்தப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேண்டும். இப்போது மொத்தம் எத்தனை வண்டிகள் இருக்கின்றன தெரியுமா? 3 கோடியே 9 இலட்சத்து 44 ஆயிரத்து 816 வண்டிகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், இத்தனை பெட்ரோல் வண்டிகள் இருக்கின்றன என்று சொல்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: பெட்ரோல் வண்டிகள், டீசல் வண்டிகள் எல்லாவற்றையும் சேர்த்து சொல்கிறேன். பெட்ரோல் வண்டிகளை விட டீசல் வண்டிகள் மிகவும் குறைவு. தனியார் பெட்ரோல் பேருந்துகள் 7,366 இருக்கின்றன. அது அதிகமாக ஓடுவதில்லை. ஏதோ ஒன்றிரண்டு பேருந்துகள்தான் ஓடுகின்றன. அதுபோன்று, சில பேர் mini bus குறித்து கேட்டீர்கள். இப்போது city–யில் 66 மினி பேருந்துகள்தான் ஓடுகின்றன. மீதமுள்ள பேருந்துகள் எல்லாம் நிற்கின்றன. அதையெல்லாம் என்ன செய்யப் போகிறோமென்றால், இப்போது ஓட்டுகிற பேருந்துகள்போக, மீதமிருக்கிற பஸ்கள் முழுவதையும் மெட்ரோ இரயில் நிலையங்களோடு தொடர்பில் வைக்கப் போகிறோம். அந்த மெட்ரோ இரயில் நிலையங்களோடு தொடர்பில் வைக்கும்போது, அங்கே இருக்கும் பயணிகளை ஏற்றிக்கொண்டு வருவதற்கு மினி பஸ்கள் பிரயோசனப்படும். போக்குவரத்துத் துறைக்கு வருமானமும் வரும். ஆகவே, அதுபோன்ற ஒரு திட்டத்தை இப்போது அமல்படுத்துவதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கான திட்டங்களை நாங்கள் ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நிறைய சாலைப் பாதுகாப்புகள் குறித்து இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், வண்டிகள் registration செய்வது குறித்து சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: வண்டிகள் registration செய்வது என்பதற்கு தனியாக number கொடுக்கிறோம். VIPs வந்து கேட்டீர்களென்றால், MPs, MLA–க்கள் நீங்கள் கேட்பதற்கு தனியாக number கொடுக்கிறோம். Special number கேட்கிறீர்கள். Special number நீங்கள் கேட்டால் உங்களுக்கு முன்னுரிமை கொடுத்திருக்கிறோம். நீங்கள் கேட்கிற number–களை எல்லாம் பரிந்துரைக்கேற்ப கொடுக்கிறோம். கார்கள் எல்லாம் registration செய்கிறோம். கார்களுக்கு தனி number கொடுக்கிறோம். அதில் மூன்று அட்டைகள் இருக்கின்றன. மஞ்சள் நிறத்தில் இருந்தால் அதற்குப் பெயர் டாக்ஸி, வெள்ளை நிறத்தில் இருந்தால் original ownership உள்ள வண்டி. பச்சை நிறத்தில் இருந்தால் அது electrical வண்டி. இப்படி வெவ்வேறு நிறங்களில் 3 வகையான அட்டைகள் இருக்கின்றன. நாமும் பின்னால் board வைக்கிறோம் அல்லவா! ஆக இப்படிப்பட்ட வண்டிகள் இருக்கின்றன.

அடுத்து, சாலைப் பாதுகாப்பு. சாலைப் பாதுகாப்பு மிகவும் முக்கியம். சாலைப் பாதுகாப்பில் போக்குவரத்துத் துறை அமைச்சர் தலைமையில், பழைய எம்.எல்.ஏ.–க்கள் 20 பேர்கொண்ட குழு அமைந்திருக்கிறது. சீக்கிரமாக, இன்னும், 5 நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்.

இரவு 9–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. நீங்கள், புதிய பஸ் வாங்கிய பிறகுதான் நாங்கள் வேகமாக சென்று சேருவோம் என்று நினைக்கிறேன். (சிரிப்பு) இப்போது இருக்கின்ற பஸ்ஸிலே இப்படித்தான் போக வேண்டும், இன்னும் 5 நிமிடங்கள் ஆகும்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: யாருக்குப் பயந்தாலும், பயப்படாவிட்டாலும் உங்களுக்காகவும், மாண்புமிகு பொதுச் செயலாளர் அவர்களுக்காகவும்தான் யோசிக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். ஆனால், பொதுச் செயலாளர் அவர்கள் ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அது ஒரு பயம் மட்டும் இருக்கிறது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, சபை உற்சாகமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: அவையை ஜனரஞ்சகமாக நடத்துவதற்கு நமது பொதுச் செயலாளர் அவர்கள் ஒரு காரணம். ஏனென்றால், அவையை ஜனரஞ்சகமாக நடத்திக் கொண்டு போகிறார் அல்லவா! அதுவும் ஒரு காரணம். ஆகவே, நம்முடைய சக அமைச்சர்கள், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, இந்த transport, non–transport என்று இரண்டு விதமாக இருக்கிறது. Transport செய்வது எல்லாம் நம்முடைய சாமான்களை ஏற்றிக்கொண்டு போகின்ற வண்டிகள் ஆகும். அதில், Non–transport என்பது, நாம் சொந்தமாக உபயோகப்படுத்துகின்ற Motorcycle, Scooter மற்றும் National permit வண்டிகள் போன்றவை, நிறைய இருக்கின்றன. இது வேறு Transport, non–transport. சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்துகிற வண்டி. மேலும், வேறு ஏதாவது சொல்ல வேண்டியிருக்கிறது என்றால் கேளுங்கள், சொல்கிறேன். மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டக் கூடாது என்பது ஒரு சட்டம். நிறைய conditions போட்டிருக்கிறோம். நம்முடைய RTO அலுவலகத்தில், Transport Commissioner office–ல் செயலாக்கப் பிரிவு, Enforcement Wing இருக்கிறது. அந்த Enforcement Wing–ன் வேலை என்னவென்றால், சிறை பிடிக்கப்பட்ட வாகனங்கள், அதிக பாரம் ஏற்றிச் செல்லுதல், அதிக சரக்குகளை ஏற்றிச் செல்லுதல், அனுமதிச் சீட்டு இல்லாமல் வழங்குதல், வரி செலுத்தாமல் இயக்குதல், ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இயக்குதல், நடைச்சீட்டு பராமரிக்கப்படாமல் இயக்குதல், மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டுதல், ஆட்டோவில் அதிகக் கட்டணம் வசூலித்தல், பள்ளிகளுக்குச் செல்லும் பேருந்துகளில் அதிக குழந்தைகளை ஏற்றிச் செல்லுதல். இருப்பதிலே, மிகப் பெரிய குற்றம் என்னவென்றால், school buses எல்லாம் ஒரு limit–க்கு மேலே குழந்தைகளை ஏற்றக் கூடாது என்ற சட்டத்தை மீறுவது ஆகும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்போன் பேசிக்கொண்டும் ஓட்டக் கூடாது என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: செல்போன் பேசிக்கொண்டும் வாகனத்தை ஓட்டக் கூடாது. அதையும் சொல்ல வேண்டுமல்லவா? ஆமாம். செல்போன் பேசிக்கொண்டும் வண்டியை ஓட்டக் கூடாது. இப்படி பல conditions போட்டிருக்கிறோம். அதை follow செய்கிறார்களா என்பது, அந்த வாகனத்தை

ஓட்டுபவர்களுக்குத்தான் தெரியும். அதை நேரிலே பார்க்கும்போது காவல் துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சில இடங்களில் accident எல்லாம் நடைபெறுவது இதனால்தான். ஆகவே, சாலைப் பாதுகாப்பு என்பது மிக முக்கியம். இதுகுறித்து நீங்கள் எல்லோருக்கும் advise செய்ய வேண்டும். இந்த மாதிரி normal ஆகப் போக வேண்டும். இப்படி, இப்படி செய்ய வேண்டும் என்று சொல்வதுதான் இந்த Enforcement wing–னுடைய வேலை; Enforcement wing விதிகளை மீறுபவர்களை எல்லாம் பார்த்து fine போடுவது மற்றும் அந்தப் பணத்தை Government–க்குச் சேர்ப்பதாகும். போக்குவரத்துத் துறை இயக்கூர்திகள், இந்த வருடத்தில் ரூ.4,561 கோடியை வசூல் செய்து கொடுத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மைக்கில் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: நம்முடைய போக்குவரத்துத் துறை வருடத்திற்கு ரூ.4,561 கோடியை வசூல் செய்து கொடுக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேரவைத் தலைவர் அவர்களைப் பார்த்து பேசுங்கள். மைக் இங்கே இருக்கிறது. பொதுச் செயலாளர், அவை முன்னவரைப் பார்த்து அங்கே பேசப் போய்விட்டீர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: Transport Commissioner Office–ல் நாம் வசூல் செய்கிற தொகை ஒரு கணிசமான தொகையாகும். அதேமாதிரி, checkpost–களிலும் நாம் வசூல் செய்கிறோம். 21 checkposts இருக்கின்றன. 4 மாநிலங்களில் இருந்து வருகின்ற வண்டிகள் இருக்கின்றன. அதேபோன்று, கட்டணம் இல்லாத பேருந்துகள் இருக்கின்றன. இப்போது கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களோடு compare செய்து பார்த்தீர்களென்றால், பஸ் rate–ஐ உயர்த்தாமல், நாம்தான் பேருந்து கட்டணத்தைக் குறைத்தோம். நம்முடைய rate–க்கும் அவர்களுடைய rate–க்கும் ஏகப்பட்ட வித்தியாசம் இருக்கின்றது. ஆகவே, மற்ற மாநிலங்களைக் காட்டிலும், எளிய வகையில் அங்கே சேரக்கூடிய மாநிலம், நம்முடைய தமிழ்நாடு ஒன்றுதான் என்பதை நீங்கள் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். கட்டணத்திலே குறைவான மாநிலமும் தமிழ்நாடுதான். டீசல் விலை உயர்ந்தது, உதிரி பாகங்களின் விலை உயர்ந்தது, ஆனால், கட்டணத்தை நாங்கள் உயர்த்தவில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டணத்தை உயர்த்தாமல் இருக்கிறார்கள். காரணம், நாம் மிகப் பெரிய இழப்புகளைத் தாங்கிக்கொண்டு, இந்தப்

போக்குவரத்துத் துறையை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, சிறு, சிறு குறைகள் இருந்தாலும், அவற்றையெல்லாம் நீங்கள் அனைவரும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் 109 பேர் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். முதலில், துறைசார்ந்த அறிவிப்புகளை நான் படித்துவிடுகிறேன். இன்னும், நிறைய விஷயங்களைப் பேச வேண்டுமென்று சொன்னால், பேசிக் கொண்டே இருக்கலாம். ஒரு மணி நேரம் பேசலாம். ஆக, நேரத்தின் அருமை கருதி உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துறைசார்ந்த அறிவிப்புகளை தலைப்புச் செய்தியாக வாசியுங்கள். நாம் அவை முழுவதையும் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: என்னுடைய துறைசார்ந்த அறிவிப்புகளை இப்போது அறிவிக்கின்றேன்.

அறிவிப்புகள்

போக்குவரத்துத் துறை

1. தமிழ்நாட்டில், புதிதாக BS–VI, குறியீட்டிற்கு இணக்கமான 2,213 டீசல் பேருந்துகள் மற்றும் 500 மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் செய்தல்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான பேருந்துகளை நவீனமயமாக்கும்பொருட்டு, ஜெர்மனி வங்கி (KfW) நிதியுதவியுடன், வயது முதிர்ந்த பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, புதியதாக BS–VI குறியீட்டிற்கு இணக்கமான 2,213 டீசல் பேருந்துகள் மற்றும் காற்று மாசினைக் குறைப்பதற்காக 500 மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும்.

2. அரசு போக்குவரத்துக் கழகங்களின் கூடுதல் வருவாய்க்காக பெட்ரோல்/டீசல் சில்லரை விற்பனை நிலையங்களை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான 10 இடங்களில் நிறுவுதல்

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு இயக்க வருவாயைத் தவிர, கூடுதல் வருவாய்க்காக அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான 10 இடங்களில் பெட்ரோல்/டீசல் சில்லரை விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும். பொதுமக்களின் வரவேற்பினைப் பொறுத்து மேலும் பல இடங்களுக்கு நீட்டிக்கப்படும்.

3. அரசு போக்குவரத்து நிறுவனங்களின் கட்டடங்களின் கூரையில் சூரியசக்தி மின்னாற்றல் தகடுகள் நிறுவுதல்

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் உதவியுடன் அரசு போக்குவரத்துக் கழகங்களின் மின்சார செலவினைக் குறைப்பதற்காக, அவற்றிற்குச் சொந்தமான பணிமனைகள் மற்றும் அலுவலகங்கள் போன்ற 12 இடங்களின் மேற்கூரையில் சூரியசக்தி மின்னாற்றல் தகடுகள் நிறுவப்படும். சூரியசக்தி மின்சாரத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நாங்கள் நினைக்கின்றோம்.

4. அரசு போக்குவரத்துக் கழகங்களிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புதல்

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

போக்குவரத்துத் துறையில் minimum–ஆன அறிவிப்புகள்தான். நான்கு அறிவிப்புகள் மட்டும்தான். மீதமுள்ள 6 அறிவிப்புகள் RTO Office சம்பந்தமான அறிவிப்புகளாகும்.

இரவு 9–10

இயக்கூர்திகள் சட்டங்கள்-நிருவாகம்

1. பொதுமக்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு வராமலேயே பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றம் ஆகிய சேவைகளை பெறுதல்.

ஆதார் அட்டையை அடையாள ஆவணமாகப் பயன்படுத்தி பொதுமக்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு நேரில் வராமலேயே (contactless service) போக்குவரத்துச் சேவைகளான பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றம் ஆகிய சேவைகள் வழங்குவது நடைமுறைப்படுத்தப்படும்.

பொதுமக்கள் பழகுநர், ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றம், change of address, renewal–க்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு இனிமேல் வரவேண்டியதில்லை. அவர்களே நேரடியாக online–ல் செய்துகொள்ளலாம்; இனிமேல் கூட்டம் குறைந்துவிடும். அதனால் பிரச்சினை வராது. இது ஒன்று.

2. திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் (பகுதி அலுவலகம்) சொந்தக் கட்டடம் கட்டுதல் (மதிப்பீடு ரூ.302.15 இலட்சம்)

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு (பகுதி அலுவலகம்) ரூ.302.15 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

3. மதுரை மாவட்டம், மதுரை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் மற்றும் ஓட்டுநர் தேர்வு தளம் கட்டுதல். (மதிப்பீடு ரூ.528.00 இலட்சம்)

பொதுமக்களுக்கு பல்வேறு வசதிகளுடன் ஓட்டுநர் தேர்வு தளத்துடன்கூடிய சொந்தக் கட்டடம் மதுரை மாவட்டம், மதுரை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ.528.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

4. கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல். (மதிப்பீடு ரூ.498.00 இலட்சம்)

பொதுமக்களுக்கு பல்வேறு வசதிகளுடன்கூடிய சொந்தக் கட்டடம், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ.498.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

5. போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் முதன்மைக் கணக்கு அலுவலர், கணக்கு அலுவலர், உதவி இயக்குநர் (உள் தணிக்கை) உதவி இயக்குநர் (புள்ளியியல்) மற்றும் அனைத்து சரக அலுவலகங்களில் பணிபுரியும் உதவி கணக்கு அலுவலர்கள் உட்தணிக்கைப் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு மடிக்கணினி மற்றும் தரவு அட்டைகள் ரூ.17.92 இலட்சம் செலவில் வழங்குதல். (மதிப்பீடு ரூ.17.92 இலட்சம்)

போக்குவரத்துத் துறையில் உட்தணிக்கை பணிகளை மேற்கொண்டு வரும் தணிக்கை அலுவலர்கள் தணிக்கைப் பணியினை மேற்கொள்ளவும் வாகன் மற்றும் சாரதி இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யவும் ஏதுவாக 16 மடிக்கணினிகள் அதற்கான இணைய இணைப்பு வழங்கும் தரவு அட்டைகள் (Data Cards) *ரூ.17.92 இலட்சம் செலவில் வழங்கப்படும்.*

6. அனைத்து சரக அலுவலகங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளுக்கு புதிய கணினிகள், அச்சுப் பொறிகள் ரூ.291.90 இலட்சம் செலவில் வழங்குதல். (மதிப்பீடு ரூ.291.90 இலட்சம்.)

போக்குவரத்துத் துறையில் கணினி பயன்படுத்தும் நிலையில் (பதிவுறு எழுத்தர், அலுவலக உதவியாளர், காவலர் மற்றும் ஓட்டுநர் தவிர) 1,583 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். ஏற்கெனவே 504 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து சோதனைச் சாவடிகளின் பணிகளையும் ஆன்லைன் செய்ய இருப்பதாலும் தற்போதைய தொழில்நுட்பத்தினைக் கருத்தில் கொண்டும் மீதமுள்ள பணியாளர்களுக்கும் கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் ரூ.291.90 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

ஆகவே, மேற்குறிப்பிடப்பட்ட அறிவிப்புகளை நாங்கள் இரண்டு துறைகளிலும் அறிவித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் 109 வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்தத் துறையை நீங்கள் ஆசீர்வதிக்க வேண்டுமென்று உங்கள் அனைவரையும் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பதிலுரையில் மாண்புமிகு உறுப்பினர்களின் கேள்விகளுக்கெல்லாம் விளக்கமளித்திருக்கிறேன் என்ற மனநிறைவோடு நான் என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கிறேன். இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.*

(அ) கோரிக்கை எண் 25-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

2021 செப்டம்பர் 8] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.408,99,32,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள் பேச வாய்ப்பு கோரி நின்றுகொண்டிருந்தார்.)

(ஆ) கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,877,45,01,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,167,48,81,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.451,70,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.68,25,69,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (9–9–2021), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 9–14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

96. தமிழ்நாட்டில் கோவிட்–19 காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தாக்கம் குறித்த உயர்மட்டக் குழுவின் அறிக்கை (ஆங்கிலம்)

97. மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

98. மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (சிறுபான்மையினர் நலன்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

99. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

100. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

101. மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

102. மானியக் கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

103. மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

104. மானியக் கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

105. எரிசக்தித் துறையின் 'மிளிரும் மின்சாரத் துறை' என்கிற சிறுநூல். (தமிழ்)

106. எரிசக்தித் துறையின் 'புதிய மின்மாற்றிகள் அமையவிருக்கின்ற இடங்களின் பட்டியல்'. (தமிழ்)

107. செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மற்றும் எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2021–2022. (தமிழ்)

108. நீதி நிருவாகம் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2021–2022. (தமிழ்)

109. சட்டத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2021–2022. (தமிழ்)

110. எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2021–2022. (தமிழ்)

111. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2021–2022. (தமிழ்)

— — —

இணைப்பு-I

(82 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

முன்னுரை

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வகுத்துத் தந்த சமூக நீதிப் பாதையில் இவ்வரசு தொய்வின்றி நடைபோடும். பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு இவ்வரசு தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இம்மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை உயர்த்துவதை சிறப்பு நோக்கமாகக் கொண்டு பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினரின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கும் பல்வேறு நலத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் நல இயக்ககங்கள் தவிர, சிறுபான்மையினர் நலத் திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு தனி இயக்குநரகம் ஒன்று 2007 ஆம் ஆண்டு அரசால் ஏற்படுத்தப்பட்டது.

சமூக மற்றும் பொருளாதார மாற்றத்திற்கு கல்வியே சிறந்த சாதனமாகும். அய்யன் திருவள்ளுவர் கூற்றுப்படி "கல்வியே ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வமாகும்". ஒருவரது அறிவுத்திறன் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதில் கல்வி முக்கியப் பங்காற்றுகிறது. மேற்குறிப்பிட்ட மறுக்க முடியாத உண்மையினை நன்கு உணர்ந்துள்ள இவ்வரசு இத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டில் பெரும்பங்கினை கல்விக்கு அளித்து பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் கல்வி வளர்ச்சியில் கவனத்தைச் செலுத்தி வருகிறது. இப்பிரிவு மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் சுயதொழில் துவங்க கடன் உதவி வழங்கப்படுகிறது.

மேலும், தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள் ஆகியன இலவசமாக வழங்கப்படுகின்றன. சீர்மரபினர் நல வாரியம், தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் ஆகிய நல வாரியங்கள்மூலம் இவ்வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளைக் குறிப்பிடத்தக்க அளவு மேம்படுத்துவதில் தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டுக் கொள்கை, உயர் கல்வி நிறுவனங்களில் இடம் பெறவும், அரசுத் துறைகளில் வேலை பெறவும் ஏதுவாக, சிறந்ததொரு பங்களிப்பை வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொது அவையால் 2015 ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals) அடையும் வகையில் இத்துறை உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

2. இட ஒதுக்கீடு

1921 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து வரும் இட ஒதுக்கீட்டு கொள்கை, சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களாலும் எழுப்பப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் பல்வேறு பயனுள்ள மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டம் செயல்பாட்டிற்கு வந்தவுடன் "வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை" என்று அழைக்கப்பட்ட பல்வேறு பிரிவினர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் ஆணை செல்லாது என உச்ச நீதிமன்றத்தால் 1951 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டில் வழி நடத்திய பெருந்திரளான எதிர்ப்பு ஊர்வலங்கள் மற்றும் கண்டனக் கூட்டங்களின் விளைவாக அரசமைப்புச் சட்டத்தில் பிரிவு 15(4) சேர்க்கப்பட்டு முதல் அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு வழி வகுத்தது. பல நூற்றாண்டுகளாக அநீதிக்கு உள்ளாக்கப்பட்டு வந்த பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மக்கள் கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் மேம்பாடு அடைவதற்கான சமூக நீதிப் போராட்டத்தில் இது ஒரு வரலாற்று சாதனை எனப் போற்றப்படுகிறது.

மாநிலத்தின் மக்கள் தொகையில் 88 விழுக்காட்டிற்கும் மேல் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர்,

2021 செப்டம்பர் 8]

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உள்ளனர். இடஒதுக்கீட்டின் அளவு பல்வேறு காலங்களில் உயர்த்தப்பட்டது. தற்போது உள்ள 69 விழுக்காடு இடஒதுக்கீடு மாநிலத்தில் 1990 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

தனி இட ஒதுக்கீடு வழங்கக் கோரி சிறுபான்மையின சமுதாயத்திடமிருந்து பெறப்பட்ட பல்வேறு மனுக்களின்மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையைப் பெற்று பரிசீலித்த அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை 2007 ஆம் ஆண்டில் நிறைவேற்றியது. இச்சட்டம் 15-09-2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வி நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் இந்த 69 விழுக்காடு இட ஒதுக்கீடு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் மட்டுமே கடைபிடிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையை மாற்றி, சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் நீங்கலாக, தனியார் கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டம் 31-05-2006 அன்று சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் தற்போது பின்பற்றப்பட்டுவரும் இட ஒதுக்கீட்டின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	பிரிவு	இடஒதுக்கீடு விழுக்காடு
1.	பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்	26.5
2.	பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள்	3.5
3.	மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு/ சீர்மரபினர் *பகுதி I வன்னியகுல சத்திரியர் - 10.5% பகுதி II மி.பி.வ / சீர்மரபினர் - 7% பகுதி III மி.பி.வ. - 2.5%	20*
4.	ஆதி திராவிடர்	18
5.	பழங்குடியினர்	1
	மொத்தம்	69

[2021 செப்டம்பர் 8

1992 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் இந்திராசஹானி (மண்டல் குழு) வழக்கில் இடஒதுக்கீடு 50 விழுக்காடிற்கு மிகாமல் இருக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தது. தமிழ்நாட்டில் வழங்கப்பட்டுவரும் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாடு சட்டம் 45/1994 நிறைவேற்றப்பட்டது. பின்னர், அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 31-பி-ன் பாதுகாப்பு பெறும்பொருட்டு, தமிழ்நாடு சட்டம் 45/1994 இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசுப் பணிகளில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்திடவும், பேணி காத்திடவும் இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

ஒன்றிய அரசின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) இட ஒதுக்கீடு வழங்கும்போது "வளமான பிரிவினரை" (Creamy layer) நீக்கம் செய்யும் கொள்கையை இவ்வரசு எப்போதும் எதிர்த்து வருகிறது. தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பண்டித நேருவும், அண்ணல் அம்பேத்காரும் வலியுறுத்தி வந்தவாறு, பொருளாதார நிலையை அளவுகோலாகக் (Creamy layer) கருதாமல், சமூக நிலையை மட்டும் கருதி, பிற்படுத்தப்பட்டோர் அனைவரும் ஒன்றிய அரசின் பணிகளிலும், ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு பெற வழிவகுக்கும் வகையில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளும்.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உயர் கல்வி நிலையங்கள் உள்ளிட்ட கல்வி நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை ஒன்றிய அரசு 2006 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்ததில் அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மிக முக்கியப் பங்காற்றியுள்ளார்கள்.

ஒன்றிய அரசு உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள 27 விழுக்காடு இட ஒதுக்கீடு, முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, IIT, IIM, AIIMS ஆகிய உயர் கல்வி

TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 8]

நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களிலும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை முழுமையாக நடைமுறைப்படுத்திட வேண்டுமென்று ஒன்றிய அரசை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

இந்திய அரசமைப்புச் சட்டம் அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்கிறது. மாநிலங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகைக்கேற்ப ஒவ்வொரு மாநிலத்திலும் பின்பற்றப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டின் அளவு வேறுபடுகிறது. எனவே, மாநிலங்கள் தங்கள் தேவைக்கேற்ப இட ஒதுக்கீடு விழுக்காட்டை நிர்ணயிக்கும் உரிமை அந்தந்த மாநில அரசுகளுக்கே இருக்க வேண்டும் என்பதற்கேற்ப, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்யுமாறு ஒன்றிய அரசினை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

அரசுப் பணிகளில் நியமனங்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. தற்போது தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் பெருகி வருகின்றன. அரசு தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் விதமாக வரிச்சலுகை போன்று பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. இந்தப் பயன்கள் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர், பழங்குடியினருக்கும் சென்றடையும் விதத்தில் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு அவசியம் என கருதப்படுகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தகுந்த திருத்தம் கொண்டு வந்தால் மட்டுமே தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு வழங்க இயலும். எனவே, இதற்குத் தேவையான அரசமைப்பு சட்டத் திருத்தம் கொண்டு வர இந்த அரசு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளும்.

அனைத்து சமுதாய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான முழுமையான சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பினை, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சேர்த்து நடத்திட தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளின் காரணத்தினாலும், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரச் செய்ததினாலும்,

[2021 செப்டம்பர் 8

இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான, அகில இந்திய ஒதுக்கீட்டில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டினை இந்தக் கல்வியாண்டிலிருந்து வழங்க, ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் சமூகநீதி பாதுகாக்கப்பட்டுள்ளது.

3. கல்வி

ஒரு வகுப்பின் சமூகப் பின்னணி மற்றும் அதன் வெளித்தோற்றம் ஆகியவற்றைக் கல்வியே தெளிவாகக் காட்டும் என்பதால் கல்வி வளர்ச்சியைக்கொண்டே எந்தவொருசமுதாயத்தின் முன்னேற்றமும் தீர்மானிக்கப்படுகிறது. ஊக்கத்தொகை அளிப்பதன் வாயிலாக பெண்களின், குறிப்பாக ஊரகப் பகுதி பெண்களின் கல்விக்கு இணக்கமானதொரு சுற்றுச் சூழலை ஏற்படுத்துவதன்மூலம் ஆண், பெண் இருபாலரிடையே சமத்துவத்தை உருவாக்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவ, மாணவியருக்கு அரசு இலவச உண்டி மற்றும் உறைவிடம் அளிப்பதுடன் இம்மாணவ, மாணவியர் தடையின்றி கல்வியினை தொடரும்பொருட்டு பல்வேறு வகையான கல்வி உதவித் தொகைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அரசு/அரசு நிதி உதவி பெறும்/ பகுதியாக நிதி உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. இலவச பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள் ஆகியன அரசால் வழங்கப்படுகின்றன. பிரமலைக் கள்ளர் வகுப்பு மாணவ, மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக அவ்வகுப்பினர் பெருமளவில் வசிக்கும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இத்துறை 295 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நடத்தி வருகிறது.


4. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

கல்வி வளர்ச்சியே ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கான திறவுகோல் ஆகும். பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி நிலையினை மேம்படுத்தும்பொருட்டு, அவ்வகுப்பினர் பெருமளவில் வாழும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் 295 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் 27,060 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

2021 செப்டம்பர் 8]

அரசு கள்ளர் பள்ளி மாணவ / மாணவியர் எண்ணிக்கை					
வ. எண்	பள்ளிகளின் விவரம்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணாக்கர்களின் எண்ணிக்கை		
			மாணவர்	மாணவியர்	மொத்தம்
1.	தொடக்கப் பள்ளி மழலையர் (LKG) வகுப்பு உட்பட	213	5334	5150	10484
2.	நடுநிலைப் பள்ளிகள்	22	793	788	1581
3.	உயர்நிலைப் பள்ளிகள்	22	1377	1143	2520
4.	மேல்நிலைப் பள்ளிகள்	38	6694	5781	12475
	மொத்தம்	295	14198	12862	27060

கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை



[2021 செப்டம்பர் 8

கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியருக்கு அரசு/ அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதைப் போன்று, மடிக்கணினி, சிறப்பு ஊக்கத் தொகை, புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி, வண்ணப் பென்சில்கள், உலக வரைபடப் புத்தகம் மற்றும் காலணி ஆகியன பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

கள்ளர் சீரமைப்பு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (smart class rooms) அமைத்து தரப்பட்டுள்ளன. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் கிராமப்புறத்தைச் சார்ந்த மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இன மாணவியருக்கு ஊக்கத் தொகையாக ஆண்டிற்கு 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ரூ.500/- வீதமும், 6 ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ரூ.1,000/- வீதமும் வழங்கப்படுகிறது. மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு தலா 5 பள்ளிகள் வீதம் மொத்தம் 15 கள்ளர் சீரமைப்பு ஆரம்பப் பள்ளிகளில், ஆங்கில வழி மழலையர் வகுப்புகளும் (LKG) இதே போன்று இம்மூன்று மாவட்டங்களில், ஒரு மாவட்டத்திற்கு தலா 5 மேல்நிலைப் பள்ளிகள் வீதம் 15 மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் ஆங்கில வழி கல்வி வகுப்புகளும் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆங்கில வழி வகுப்புகளில் 1,318 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

2020-2021 ஆம் ஆண்டு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்காக ரூ.12,169.78 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.12,331.82 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.1 கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்பு

கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ஆண்டுதோறும் ரூ.1 கோடி அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. 2020-2021 ஆம் ஆண்டில் இதனுடன் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.5 கோடி மதிப்பீட்டில் 186 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2021 செப்டம்பர் 8]

2021-2022 ஆம் ஆண்டிற்கு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் கட்டட பராமரிப்புக்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.2 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி பெறச் செய்யும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.10,000/- பரிசுத் தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

கள்ளர் சீரமைப்பு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் தத்தமது பாடப்பிரிவில் 100 விழுக்காடு மாணவ, மாணவியரைத் தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் இளங்கலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5,000/- பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.

2020-2021 ஆம் ஆண்டில் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்களுக்கு ரூ.13.45 இலட்சம் பரிசு தொகைகளுக்காக செலவிடப்பட்டது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு இத்திட்டங்களுக்காக ரூ.31 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. கல்வி உதவித்தொகைத் திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியர் தம் வாழ்வில் முன்னேற்றம் பெற கல்வி இன்றியமையாததாகும். எனவே, இம்மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை தொடர ஏதுவாக பள்ளிப் படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் இலவசக் கல்வி ஆகிய மூன்று வகையான கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2 இலட்சம் ஆகும்.

[2021 செப்டம்பர் 8

5.1 பள்ளிப் படிப்பு கல்வி உதவித்தொகை

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பள்ளிப் படிப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையின்றி இத்தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. (அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும், 10 ஆம் வகுப்பு தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் அரசால் விலக்களிக்கப்பட்டுள்ளதால் இக்கட்டணங்களை மாணவ, மாணவியர் செலுத்த வேண்டியதில்லை)

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 1,16,296 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.133.68 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

வகுப்பு	மாணவ, மாணவியர் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
பிவ	71,024	81.68
மிபிவ/சீம	45,272	52.00
மொத்தம்	1,16,296	133.68

2021–2022 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.103 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.86.97 இலட்சமும் என மொத்தம் ரூ.189.97 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

5.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி இத்தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. (அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும், 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் அரசால் விலக்களிக்கப்பட்டுள்ளதால் இக்கட்டணங்களை மாணவ, மாணவியர் செலுத்த வேண்டியதில்லை)

5.2.1 கல்லூரி மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித்தொகை

*பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த ஐ.டி.ஐ, பட்டயப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகையினை பெற பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ், கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் அரசு கல்வி நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் வழங்கப்படுகிறது. தேர்வுக் கட்டணம் முழுமையாகவும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் வழங்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இரண்டாவது முறைமாற்றம் (*Second Shift*) வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் காலை நேர அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும்*

[2021 செப்டம்பர் 8

மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் அதே விதிமுறைகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், உண்டி, உறையுள் கட்டணமாக கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித்தொகையுடன் பட்டப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.175/- என்ற விகிதத்திலும், தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.350/- என்ற விகிதத்திலும், ஐ.டி.ஐ/பட்டயப் படிப்பு மற்றும் முதுகலை மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.225/- என்ற விகிதத்திலும் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு இக்கட்டணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 3,14,293 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.6,929.06 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

வகுப்பு	பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
பிவ	2,00,984	4432.18
மிபிவ/சீம	1,13,309	2496.88
மொத்தம்	3,14,293	6929.06

2021-2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.5,450 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.3,100 இலட்சமும் என மொத்தம் ரூ.8,550 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. இலவசக் கல்வி உதவித்தொகை

6.1 பட்டப் படிப்பு

இலவச கல்வி உதவித்தொகை (பட்டப் படிப்பு) திட்டத்தின்கீழ், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப் படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு சிறப்புக்

2021 செப்டம்பர் 8]

கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவில் வழங்கப்படுகின்றன (அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்பு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது). புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகை எவ்வித நிபந்தனையுமின்றி வழங்கப்படுகிறது. கல்வி நிறுவனங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு இக்கல்வி உதவித்தொகையுடன், மாதம் ரூ.175 வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு உண்டி, உறையுள் கட்டணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 1,94,268 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.3,730.66 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

வகுப்பு	மாணவ, மாணவியர் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
பிவ	1,05,556	2090.43
மிபிவ/சீம	88,712	1640.23
மொத்தம்	1,94,268	3730.66

2021-2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.2,300 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.1,800 இலட்சமும் என மொத்தம் ரூ.4,100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.2 பட்டயப் படிப்பு

இலவச கல்வி உதவித்தொகை (பட்டயப் படிப்பு) திட்டத்தின்கீழ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics) பட்டயப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவில் வழங்கப்படுகிறது.

புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டய/பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், மேற்படி கல்வி உதவித்தொகையுடன் உண்டி, உறையுள் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு ரூ.225 வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 2,848 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.113.91 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

வகுப்பு	மாணவ, மாணவியர் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
பிவ	1,573	64.34
மிபிவ/சீம	1,275	49.57
மொத்தம்	2,848	113.91

2021-2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.93.00 இலட்சம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.80.00 இலட்சம் என மொத்தம் ரூ.173.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.3 தொழிற்கல்விப் படிப்பு

இலவச கல்வி (தொழிற்கல்விப் படிப்பு) திட்டத்தின்கீழ், அரசு ஒதுக்கீட்டின்கீழ் ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்டு அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் தொழிற்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவில் வழங்கப்படுகிறது. புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும்

2021 செப்டம்பர் 8]

மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. மேலும் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், மேற்படி கல்வி உதவித்தொகையுடன் உண்டி, உறையுள் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு ரூ.350/- வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு, கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 1,16,148 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.5,362.70 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

வகுப்பு	*மாணவ, மாணவியர் எண்ணிக்கை*	*தொகை (ரூபாய் இலட்சத்தில்)*
பிவ	*71,682*	*3297.59*
மிபிவ/சீம	*44,466*	*2065.11*
மொத்தம்	*1,16,148*	*5362.70*

2021-2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.4,600 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.3,000 இலட்சமும் என மொத்தம் ரூ.7,600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.4 இணையதளம்மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்தல்

தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்ட www.eschloarships.tn.gov.in *என்ற இணையதளம்மூலம் கல்லூரிகளில் பயிலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டு வருகிறது. கல்வி உதவித்தொகைகள் அந்தந்த துறைத் தலைமை அலுவலகங்கள் மூலமாகவே ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்பு முறையில் (*IFHRMS*) மாணவ, மாணவியரின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக மின்னணு பரிமாற்றம் (*ECS*)மூலம் வரவு வைக்கப்படுகிறது.*

[2021 செப்டம்பர் 8

7. பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித்தொகை திட்டம்.

தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கு நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 213 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.126.90 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

பெண் கல்வியை கிராமப்புறப் பெண்களிடையே ஊக்குவிக்கும்பொருட்டும், ஆரம்பக் கல்வியின் இடையே பெண் குழந்தைகள் படிப்பைக் கைவிடுவதைக் குறைக்கும்பொருட்டும் கிராமப்புறப் பள்ளிகளில் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவி ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.500/- வீதமும் 6 ஆம் வகுப்பு பயிலும் மேற்குறிப்பிட்ட வகுப்புகளைச் சார்ந்த மாணவி ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000/- வீதமும் ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1999–2000 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000/- ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 2,64,898 மாணவியர் பயனடையும் வகையில் ரூ.1,655.69 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.1,675 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு வருமான உச்ச வரம்பின்றி மிதிவண்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள விடுதியில் தங்கியுள்ளோர் மற்றும் உண்டி, உறைவிடப் பள்ளி மாணவ, மாணவியர் இலவச மிதிவண்டிகள் பெறத் தகுதியற்றவர் ஆவர்.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 3,77,286 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.14,879.34 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

வகுப்பு	மாணவ, மாணவியர் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
பிவ	1,98,206	7818.73
மிபிவ/சீம	1,79,080	7060.61
மொத்தம்	3,77,286	14879.34

2021-2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.7,885.50 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.6,787.49 இலட்சமும் என மொத்தம் ரூ.14,672.99 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


10. விடுதிகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்டுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை எவ்வித இடையூறுமின்றி தொடர்வதற்கு ஏதுவாக இலவச உணவு மானியம், தங்கும் வசதியுடன் மொத்தம் 1,336 விடுதிகள் இயங்கி வருகின்றன. விடுதிகளின் விவரம் பின்வருமாறு:

[2021 செப்டம்பர் 8

வ. எண்	துறை	விடுதிகள்	விடுதிகளின் எண்ணிக்கை		
			மாணவர்	மாணவியர்	மொத்தம்
1	பிவ	கல்லூரி	82	63	145
		பள்ளி	381	208	589
		மொத்தம்	463	271	734
2	மிபிவ	கல்லூரி	43	52	95
		பள்ளி	238	113	351
		மொத்தம்	281	165	446
3	சீம	கல்லூரி	11	8	19
		பள்ளி	91	46	137
		மொத்தம்	102	54	156
கல்லூரி			136	123	259
பள்ளி			710	367	1077
மொத்தம்			846	490	1336


விடுதி மாணவ, மாணவியரின் எண்ணிக்கை



2021 செப்டம்பர் 8]

இவ்விடுதிகளில் 85,014 மாணவ, மாணவியர் தங்கிப் பயன்பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள மாணவ, மாணவியர் விடுதிகளில் சேர தகுதி பெற்றவர்களாவர்.

விடுதிகளின் எண்ணிக்கை



ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு தலா 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்டஆட்சியரின் அதிகாரத்திற்குட்பட்ட கூடுதல் இடங்கள் அனுமதிக்கப்பட்ட பின்னரும், தேவை அதிகரிப்பின் விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக, மொத்தம் 2,185 மாணவ, மாணவியரைச் சேர்த்திட, துறை தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

[*2021 செப்டம்பர் 8*

ஒவ்வொரு விடுதியிலும் 4 சதவீத இடங்கள் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மீட்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள், விடுதிகளில் கல்வி ஆண்டின் இடையிலும் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக்கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கிப் பயிலவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதிமொழி ஏற்கப்படுகிறது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு, விடுதிகள், குறிப்பாக கல்லூரி விடுதிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக, அரசு ரூ.25 கோடி சிறப்பு மூலதன நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

10.1 உணவுக் கட்டணம்

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு உணவுக் கட்டணம் ரூ.1,000 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு உணவுக் கட்டணம் ரூ.1,100 ஆகவும், ஓர் ஆண்டில் 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தைப் பொங்கல், குடியரசு தினம், தமிழ் புத்தாண்டு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி ஆகிய பண்டிகை நாட்களில் விடுதி மாணவ/ மாணவிகளுக்கு சிறப்பு உணவு கட்டணமாக ஒரு பண்டிகைக்கு பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.40-ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.80-ம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சோப்பு மற்றும் பற்பசை போன்றவற்றிற்காக மாதாந்திர பல்வகை செலவினம் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.50 ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.75 ஆகவும் மின்னணு பரிமாற்றம்மூலம் நேரடியாக மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2020-2021 ஆம் ஆண்டில் விடுதிகளின் உணவுக் கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற செலவினங்களுக்காக ரூ.19,492.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

2021-2022 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ.30,245.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.16,619.57 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.13,625.44 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10.2 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்

1. *விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து பாடப்புத்தகங்களும் இலவசமாக பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.*
2. *4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு, மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்று வண்ணம் மற்றும் வடிவமைப்பில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.*
3. *விடுதிகளில் தங்கிப் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு இலவச சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.*
4. *ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.*
5. *அனைத்து விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் மூன்று முறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.*
6. *மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை வழங்கப்படுகிறது.*
7. *விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள், ஜமக்காளங்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் தண்ணீர் குவளைகள் (tumbler) வழங்கப்படுகின்றன.*
8. *மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி / தேநீர் வழங்கப்படுகின்றன.*
9. *ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.*

[2021 செப்டம்பர் 8

10. ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒன்று என்ற வீதத்தில் விடுதி மாணவ, மாணவியருக்கு வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

11. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

12. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், நீர் சுத்திகரிப்புக் கருவி, சுகாதாரகுட்டைத்தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இரண்டடுக்கு கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிக்கலன் வழங்கப்படுகின்றன.

13. விடுதிகளில் அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விடுதி ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

11. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்

இத்துறையின்மூலம் நடத்தப்படும் அரசு விடுதிகள் தவிர பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் 39 தனியார் விடுதிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவ்விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ, மாணவியர்களில், பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,00/-க்கு மிகாத பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ மாணவியருக்கு அவர்களின் உணவுச் செலவினங்களுக்காக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது.

2021 செப்டம்பர் 8]

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 952 மாணவ, மாணவியர் பயன் பெறும் வகையில் ரூ.16.50 இலட்சம் செலவிடப்பட்டது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.51.01 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.46.80 இலட்சமும் என மொத்தம் ரூ.97.81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. மாநில அளவில் சிறந்த மூன்று விடுதிகளுக்கும், பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்குதல்

மாநில அளவில் 3 சிறந்த விடுதிகளை தேர்ந்தெடுத்து அவ்விடுதிகளுக்கு கேடயம் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும், அவ்விடுதிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	வகை	முதல் பரிசு ரூ.	இரண்டாம் பரிசு ரூ.	மூன்றாம் பரிசு ரூ.
1.	காப்பாளர்/ காப்பாளினி	20,000	15,000	10,000
2.	காவலர் மற்றும் ஏவலர்	10,000	5,000	3,000
3.	சமையலர்	10,000	5,000	3,000
4.	தூய்மைப் பணியாளர்	5,000	3,000	2,000

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் பரிசுகள் வழங்குவதற்காக ரூ.2.74 இலட்சம் செலவிடப்பட்டது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.1.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

மொத்தமுள்ள 1,336 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில்

1,269 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன மற்றும் 67 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுள் 35 விடுதிகளுக்குக் கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டு பணிகள் பொதுப் பணித் துறைமூலம் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 32 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2020-2021 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகளுக்காக ரூ.1,230.95 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்திற்காக 2021-2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.1,426 இலட்சமும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.200 இலட்சமும் என மொத்தம் ரூ.1,626 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14. விடுதி கட்டடங்கள் பராமரிப்பு

பொதுப் பணித் துறைமூலம் அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளுக்காக ஆண்டுதோறும் ரூ.600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2020-2021 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.630 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 93 விடுதிகளின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இது தவிர, 2020-2021 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்கு என ரூ.900 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 114 விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டன.

2021-2022 ஆம் ஆண்டிற்கு விடுதிகளின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.630 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15. சீருடைகள் வழங்குதல்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 இலவச இணை சீருடைகள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. இச்சீருடைகள் வண்ணம் மற்றும் வடிவமைப்பில் அரசுப் பள்ளிகளில் பின்பற்றப்படுவது போலவே வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர், மிகப்

2021 செப்டம்பர் 8]

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 இணை சீருடைகள் இலவசமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. சீருடைக்கான துணிகள் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, மாவட்ட மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள்மூலம் தைத்து வழங்கப்படுகின்றன.

2021-2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.250 இலட்சமும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.225.40 இலட்சமும் என மொத்தம் ரூ.475.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

16.1 இலவச சலவைப் பெட்டிகள் வழங்குதல்

இத்திட்டத்தின்கீழ், ஏழ்மை நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த சலவைத் தொழில் செய்பவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த இலவச சலவைப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.109 இலட்சம் மதிப்பீட்டில் 2,238 சலவைப் பெட்டிகளை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.109 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16.2 இலவச தையல் இயந்திரங்கள் வழங்குதல்

இத்திட்டத்தின்கீழ், ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

[2021 செப்டம்பர் 8

2020-2021 ஆம் ஆண்டிற்கு 3,000 மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களை ரூ.135 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2021-2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.65 இலட்சமும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.67.66 இலட்சமும் என மொத்தம் ரூ.132.66 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16.3 இலவச வீட்டுமனை வழங்குதல்

நலிவுற்ற மக்கள் தங்களுக்கான உறைவிடத்தை அமைத்துக்கொள்ளும் வகையில் இலவச வீட்டுமனைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், வீட்டு மனையற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு வீட்டுமனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. தற்போது இத்திட்டத்தின்கீழ் பயன்பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 548 பயனாளிகளுக்கு ரூ.344.43 இலட்சம் செலவில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

2021-2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.200 இலட்சமும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.150.02 இலட்சமும் என மொத்தம் ரூ.350.02 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17. சீர்மரபினர் நல வாரியம்

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக "சீர்மரபினர் நல வாரியம்" 2007 ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள்மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து

2021 செப்டம்பர் 8]

நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்நல வாரியத்திற்கென இதுவரை ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்:

வ. எண்	நிதி உதவிகள் விவரம்		உதவித் தொகை ரூ.
1.	அ)	விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை விபத்தினால் ஏற்படும் மரணம்	1,00,000
	ஆ)	விபத்தினால் ஏற்படும் ஊனம்	10,000முதல் 1,00,000 வரை
2.		இயற்கை மரணம்	20,000
3.		ஈமச்சடங்கு செலவினம்	5,000
4.	கல்வி உதவித்தொகை		
	அ)	10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,000
	ஆ)	10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு	1,000
	இ)	11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,000
	ஈ)	12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,500
	உ)	12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,500
	ஊ)	(i) முறையான பட்டப் படிப்பிற்கு	1,500
		(ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப் படிப்பிற்கு	1,750

[2021 செப்டம்பர் 8

வ. எண்	நிதி உதவிகள் விவரம்		உதவித் தொகை ரூ.
	எ)	(i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு	4,000
		(ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு	5,000
	ஏ)	(i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு	4,000
		(ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு	6,000
	ஐ)	(i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	6,000
		(ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	8,000
	ஒ)	(i) ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சிப் படிப்பிற்கு	1,000
		(ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சிப் படிப்பிற்கு	1,200
5.	திருமண உதவித்தொகை		2,000
6.	மகப்பேறு உதவித்தொகை		
	அ)	மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் (6 மாதங்களுக்கு)	6,000
	ஆ)	கருச்சிதைவு / கருக்கலைப்பு	3,000
7.		மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல்	500 வரை
8.		முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்)	1,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 8]

இதுவரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 3,398 உறுப்பினர்களுக்கு ரூ.80.91 இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வலையர், அம்பலக்காரர் (சேர்வை உட்பட) இனத்தை சேர்ந்த மக்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்த "வலையர் அம்பலக்காரர் (சேர்வை உட்பட) புனரமைப்பு வாரியம்" அமைத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

18. தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

நரிக்குறவர்களுக்கு கல்வி, மாற்று தொழில் புரிவதற்கான உதவி ஆகியவற்றை அளிக்கவும், அவர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்குவதற்கும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் 2008 ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் நல வாரியங்கள்மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

*இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் தனிநபராகத் தொழில் துவங்க ரூ.7,500 மானியமும், குழுவாகத் தொழில் துவங்க அதிகபட்சமாக ரூ.1,25,000 பின்நிகழ்வு மானியமும் (*Back ended subsidy*) வழங்கப்படுகிறது. இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.1,065 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்:

வ. எண்	நிதி உதவிகள் விவரம்		உதவித் தொகை ரூ.
1.	அ)	விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை விபத்தினால் ஏற்படும் மரணம்	1,00,000

[2021 செப்டம்பர் 8

வ. எண்	நிதி உதவிகள் விவரம்		உதவித் தொகை ரூ.
	ஆ)	விபத்தினால் ஏற்படும் ஊனம்	10,000 முதல் 1,00,000 வரை
2.		இயற்கை மரணம்	20,000
3.		ஈமச்சடங்கு செலவினம்	5,000
4.	கல்வி உதவித்தொகை		
	அ)	ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு	500
	ஆ)	6 ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு	1,000
	இ)	10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு	1,000
	ஈ)	10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,000
	உ)	11 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு	1,000
	ஊ)	12 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு	1,500
	எ)	12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,500
	ஏ)	(i) முறையான பட்டப் படிப்பிற்கு	1,500
		(ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப் படிப்பிற்கு	1,750
	ஐ)	(i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு	4,000
		(ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு	5,000
	ஒ)	(i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு	4,000

2021 செப்டம்பர் 8]

வ. எண்	நிதி உதவிகள் விவரம்		உதவித் தொகை ரூ.
		(ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு	6,000
	ஓ)	(i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	6,000
		(ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	8,000
	ஔ)	(i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு	1,000
		(ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சிப் படிப்பிற்கு	1,200
5.	திருமண உதவித் தொகை		2,000
6.	மகப்பேறு உதவித்தொகை		
	அ)	மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் (6 மாதங்களுக்கு)	6,000
	ஆ)	கருச்சிதைவு/கருக்கலைப்பு	3,000
7.	மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல்		500 வரை
8.	முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்)		1,000
9.	அ)	தனி நபர் தொழில் தொடங்க மானியம்	7,500
	ஆ)	குழுவாக தொழில் தொடங்க மானியம்	10,000 தனி நபருக்கு (அல்லது) 1,25,000 குழுவிற்கு

[2021 செப்டம்பர் 8

இதுவரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 13,932 உறுப்பினர்களுக்கு ரூ.781.35 இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19. தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம்

தமிழ்நாட்டில், வன்னியர் சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக, பல வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு, அவற்றை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக, அரசு 2009 ஆம் ஆண்டு வன்னியர் பொதுச் சொத்து நல வாரியத்தை உருவாக்கியது.

வன்னியகுல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட அத்தகைய பொறுப்பாட்சிகளின் சொத்துக்களையும், நிலைக்கொடைகளின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு, "தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம் 2018" என்ற சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமானது 4.2.2019 அன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இச்சட்டத்தின்கீழ் "தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம்" ஒரு தலைவர் மற்றும் பத்து உறுப்பினர்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் உறுப்பினர்-செயலாளர் ஒருவரும், இரண்டு அரசு சார்பான உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர். மேலும், 23 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவ்வாரியத்தின் நிர்வாக செலவுகளுக்காக 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி ஒப்பளிக்கப்பட்டது. இவ்வாரியத்தால் இதுவரை 97 அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றுள் 36 அறக்கட்டளைகள் இவ்வாரியத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட இந்த 36 அறக்கட்டளைகளின் சொத்துக்களின் பட்டியலை இச்சட்டப் பிரிவு 5-ன்படி, தமிழ்நாடு அரசிதழில்

2021 செப்டம்பர் 8]

வெளியிடுவதற்கு இவ்வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

20. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகப் போராடியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு ஆண்டுதோறும் சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை அரசு வழங்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்விருது ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.1 இலட்சம் பொற்கிழியும் கொண்டதாகும்.

2021-2022 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

21. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திரா சஹானி வழக்கு என்று அறியப்படுகிற மண்டல் வழக்கில், உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, 15.3.1993 அன்று முதல் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையம் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்படுகிறது.

2. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் நீதிமுறை சார்புடைய (quasi-judicial) தன்மை வாய்ந்தது. இவ்வாணையத்தின் செயல்வரம்புகளாவன:-

(i) பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாக சேர்க்கப்பட்டிருத்தல் அல்லது சேர்க்கப்படாமல் இருத்தல் குறித்தான முறையீடுகள் ஆகியவற்றைப் பெற்று, ஆய்வு செய்து மற்றும் அதன்மீது பரிந்துரைகளை ஆணையம் வழங்கும்;

(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்யும்;

(iii) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் இதர பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் ஆணையத்தின் பரிந்துரைகள் அமைய வேண்டும்;

(iv) கிறித்துவர், இசுலாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் ஆகியோரில் அவர்களின் சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை வழங்கும்;

(v) மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டிலிருந்து, உள்ஒதுக்கீடு கோரி பல்வேறு சமுதாயங்கள் வைத்துள்ள முறையீடுகளை ஆராய்ந்து ஆணையம் பரிந்துரை வழங்கும்.

(vi) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருள்கள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்கும்.

இவ்வாணையம் நீதியரசர் திரு எம். தணிகாசலம் (ஓய்வு) அவர்களின் தலைமையில் 6 உறுப்பினர்களுடன் 08.07.2020 அன்று 3 ஆண்டுகளுக்கு திருத்தியமைக்கப்பட்டது.

22. தமிழ்நாடு சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளிவிவர சேகரிப்பு ஆணையம்

தமிழ்நாட்டில் சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளிவிவரங்களைச் சேகரிக்கும் பொருட்டு தமிழ்நாடு சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளிவிவரங்களைச் சேகரிக்கும் ஆணையம் அமைக்கப்பட்டது.

23. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசால் 16.11.1981 ஆம் நாளன்று நிறுவப்பட்டு 22.05.1982 முதல் செயல்பட்டு வருகிறது.

2021 செப்டம்பர் 8]

இந்நிறுவனம், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த தனி நபர் மற்றும் குழுக்களுக்கு உதவிடும் வகையில் குறைந்த வட்டி விகிதத்தில் பொருளாதார நிலையை மேம்படுத்திக்கொள்ளும்பொருட்டு பல்வேறு கடனுதவி திட்டங்களை செயல்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.30 கோடி. இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.12.27 கோடி ஆகும். இந்நிறுவனம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயல்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து, தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதியின்மீது கடனாகப் பெறுகிறது.

23.1 கடன் திட்டங்கள்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தனி நபர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கி வருகிறது. கடன் திட்டங்களுக்கான பயனாளிகளை, அந்தந்த மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான இணைப் பதிவாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட தொழிற்மையத்தின் பொது மேலாளர் மற்றும் அந்தந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவு செய்கிறது. கடன் திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதி, கூட்டுறவு வங்கிகள் / கூட்டுறவு சங்கங்கள்மூலம் விடுவிக்கப்படுகிறது.

தாய்கோ வங்கி, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையங்கள் (ஆவின்) ஆகிய நிறுவனங்கள் கடன் தொகைகளை வழங்குவதற்கும், வசூல் செய்வதற்கும் துணை முகவர்களாக செயல்படுகின்றன.

கடன் திட்டங்களுக்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.3,00,000/- ஆகும்.

23.1.1. பொது காலக் கடன் திட்டம்

பொது காலக் கடன் திட்டத்தின்கீழ், சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை ஆண்டுக்கு

6 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. ரூ.5 இலட்சத்திற்குமேல் ரூ.10 இலட்சம் வரை ஆண்டுக்கு 7 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. ரூ.10 இலட்சத்திற்குமேல் ரூ.15 இலட்சம் வரை ஆண்டுக்கு 8 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தும் காலஅவகாசம் 3 முதல் 8 ஆண்டுகளாகும். இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 91 விழுக்காடாக உள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டில் 363 பயனாளிகளுக்கு ரூ.381.22 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

23.1.2 பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டம்

பெண்களின் முன்னேற்றத்தினை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ.2 இலட்சம் வரை ஆண்டுக்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனைத் திரும்ப செலுத்தும் காலஅவகாசம் 3 முதல் 8 ஆண்டுகளாகும். இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களைத் திரும்ப செலுத்தும் விகிதம் 92 விழுக்காடாக உள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டில் 279 பயனாளிகளுக்கு ரூ.163.18 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

23.1.3 பெண்களுக்கான நுண் கடன் திட்டம்

பெண்களுக்கான நுண்கடன் திட்டத்தின்கீழ், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர். உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரையும், குழு ஒன்றிற்கு அதிகபட்சம் ரூ.15 இலட்சம் வரையும் ஆண்டுக்கு 4 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனைத் திரும்ப செலுத்த வேண்டிய காலஅவகாசம் 4 ஆண்டுகளாகும். இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்பச் செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டில் 13,391 பயனாளிகளுக்கு ரூ.8,668.94 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

23.1.4 ஆண்களுக்கான நுண் கடன் திட்டம்

ஆண்களுக்கான நுண் கடன் திட்டத்தின்கீழ், ஆண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர். உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரையும், குழு ஒன்றிற்கு அதிகபட்சம் ரூ.15 இலட்சம் வரையும் ஆண்டுக்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனைத் திரும்ப செலுத்த வேண்டிய காலஅவகாசம் 4 ஆண்டுகளாகும். இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களைத் திரும்ப செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டில் 292 பயனாளிகளுக்கு ரூ.188.32 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது

2020-2021 ஆம் ஆண்டில் இக்கழகத்தால் மொத்தம் 14,325 பயனாளிகளுக்கு ரூ.9,401.66 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.126 கோடி அளவில் (தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் பங்குத் தொகை ரூ.120 கோடி மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்குத் தொகை ரூ.6 கோடி) கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

23.2 சிறு, குறு விவசாயிகளுக்கான நீர்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள்/ தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் 50 விழுக்காடு மானியத்துடன் அதிகபட்சம் ரூ.1,00,000/- வரை கடன் வழங்கப்படுகிறது. இதுவரை 5,117 சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாக ரூ.2,409.37 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 8

2021-2022 ஆம் ஆண்டிற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியம் வழங்குவதற்காக ரூ.350 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முடிவுரை

தமிழ்நாட்டில் சமூக நீதியினை நிலைநாட்டுவதில் இவ்வரசு பெரும் அக்கறை கொண்டுள்ளது. இவ்வரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்களின் சமூக, கல்வி, பொருளாதார நிலையினை மேம்பாடு அடையச் செய்வதிலும், அவர்களின் உரிமைகளையும் நலன்களையும் பேணி பாதுகாப்பதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கல்வி நிலையங்களில் சேர்க்கையிலும், அரசுப் பணிகளில் வேலைவாய்ப்பு அளிப்பதிலும் பின்பற்றப்படும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை செவ்வனே செயல்படுத்தி இவ்வரசு தமிழ்நாட்டை பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழச் செய்துள்ளது. இப்பிரிவைச் சேர்ந்த மக்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திட இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

இணைப்பு

2021–2022 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

துறை	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
தலைமைச் செயலகம்	633.18	---	40.00	673.18
வக்ஃப் மற்றும் ஹஜ் குழு	1992.27	---	----	1992.27
பிற்படுத்தப்பட்டோர் நலன்	50084.73	2926.02	---	53010.75
மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்	51875.19	4657.85	---	56533.04

2021 செப்டம்பர் 8]

துறை	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்	*94.47*	---	---	*94.47*
மாநில சிறுபான்மையினர் ஆணையம்	*64.93*	---	---	*64.93*
சிறுபான்மையினர் நலன்	*1891.49*	*1300.01*	---	*3191.50*
தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம்	*75.92*	---	---	*75.92*
மொத்தம்	*106712.18*	*8883.88*	*40.00*	*115636.06*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

இணைப்பு II

(82 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (சிறுபான்மையினர் நலன்) கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

முன்னுரை:

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."*

(குறள் 972)

இவ்வரசு, சிறுபான்மையின மக்களின் முன்னேற்றத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு சிறுபான்மையினரின் முன்னேற்றத்திற்காக பல நலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

சிறுபான்மையின மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்திடவும், சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள அரசமைப்பு மற்றும் சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், நீதியரசர் திரு. இராஜேந்திர சச்சார் குழுவின் பரிந்துரைகளுக்கு செயல் வடிவம் அளிக்கவும், பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டத்தின் செயலாக்கத்தைக் கண்காணித்திடவும், இச்சமூக மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்திடவும் தமிழ்நாடு அரசால் சிறுபான்மையினர் நல இயக்ககம் உருவாக்கப்பட்டு, இந்திய ஆட்சிப் பணி நிலையில் உள்ள அலுவலரை துறைத் தலைவராகக் கொண்டு 1.8.2007 முதல் இயங்கி வருகிறது.

சிறுபான்மையினர் நலத் துறையின்மூலம் மாணவ, மாணவியருக்கு ஒன்றிய அரசின் கல்வி உதவித்தொகை வழங்குதல், சிறுபான்மையினர் நல விடுதிகள், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் சுயதொழில் துவங்க கடனுதவி அளித்தல், உலமா மற்றும் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளை அளித்தல், கிறித்துவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணமும், இஸ்லாமியர் ஹஜ் புனிதப் பயணமும் மேற்கொள்ள நிதியுதவி அளித்தல்

2021 செப்டம்பர் 8]

மற்றும் வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் வாழும் மதவழி, மொழிவழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும்பொருட்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் செயல்பட்டு வருகிறது.

*ஐக்கிய நாடுகளின் பொது அவையால் 2015 ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகளை (*Sustainable Development Goals*) அடையும் வகையில் இத்துறை உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.*

2. பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு

*தனி இட ஒதுக்கீடு வழங்கக் கோரி சிறுபான்மையின சமுதாயத்தினரிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு மனுக்களின்மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையினை பெற்று பரிசீலித்த அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இட ஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை நிறைவேற்றியது. இச்சட்டம், 15.9.2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அரசுப் பணிகளில் நேரடி நியமனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு முன்கொணர்வு முறையினை (*Carry forward procedure*) பின்பற்றிட வேண்டும் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது.*

3. கல்வி உதவித் தொகை

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது"

(குறள் 103)

எனும் தமிழ்மறை கண்ட பெருநாவலரின் அறநெறியில் கல்வியினை இடைவிடாது தொடர்ந்து பயிலும் வகையில் பள்ளி செல்லும் சிறார் முதல் தொழிற்கல்வி, ஆராய்ச்சிப் படிப்பு வரை அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் கிறித்தவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் ஜைன மதங்களைச்

சார்ந்த சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ஒன்றிய அரசின் கீழ்க்காணும் கல்வி உதவித் தொகைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்;
2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்; மற்றும்,
3. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

இக்கல்வி உதவித் தொகைத் திட்டங்களால் ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயன்பெறுகின்றனர். இதற்கான நிதியை 100 விழுக்காடு ஒன்றிய அரசு வழங்குகிறது. மொத்த ஒதுக்கீட்டில் 30 விழுக்காடு மாணவியருக்கென ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி திட்டங்களின்கீழ் கல்வி உதவித் தொகை நேரடி பயன்மாற்று முறையில் (Direct Benefit Transfer) மாணவ/ மாணவியரின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

கல்வி உதவித் தொகைகளின் விவரம் பின்வருமாறு:

கல்வி உதவித் தொகை விவரம்	பயிலும் வகுப்புகள்	பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு	கல்வி உதவித் தொகை பெறுவதற்கான தகுதி
பள்ளிப் படிப்பு	1 முதல் 10 ஆம் வகுப்பு வரை	ரூ.1.00 இலட்சம்	முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்
பள்ளி மேற்படிப்பு	11 முதல் ஆராய்ச்சி படிப்பு வரை	ரூ.2.00 இலட்சம்	
தகுதி (ம) வருவாய் அடிப்படை	தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி	ரூ.2.50 இலட்சம்	

2021 செப்டம்பர் 8]

3.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை

இத்திட்டம் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு ஒன்றிய அரசால் 2008-2009 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்கல்வி உதவித் தொகை பெறுவதற்கு பெற்றோர்/ பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமலும், முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் மாணவ, மாணவியர் பெற்றிருக்கவும் வேண்டும்.

ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயில்வோருக்கு ஆண்டொன்றுக்கு சேர்க்கை கட்டணம் ரூ.500/- வரையிலும், கற்பிப்புக் கட்டணம் ரூ.3,500/- வரையிலும் வழங்கப்படுகிறது. தவிர, பராமரிப்பு கட்டணமாக, 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்காமல் பயில்வோருக்கு மாதம் ரூ.100/- வீதமும், 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கி பயில்வோருக்கு மாதம் ரூ.600/- வீதமும், ஒரு கல்வி ஆண்டில் அதிகபட்சமாக 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டில் 3,81,333 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.7,645.72 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

3.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

மேல்நிலைப் பள்ளிக் கல்வி, தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு, தொழிற்பயிற்சி, ஆசிரியர் பயிற்சி, இளங்கலை, முதுகலை பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு ஆகியவற்றைப் பயிலும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பள்ளி மேற்படிப்புக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஒன்றிய அரசால் 2007-2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இக்கல்வி உதவித் தொகை பெறுவதற்கு பெற்றோர்/ பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பதுடன், மாணவ, மாணவியர் முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்குக் குறையாமல்

பெற்றிருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் பாடப்பிரிவிற்கு ஏற்றவாறு கல்வி உதவித் தொகையில் சேர்க்கை மற்றும் கற்பிப்புக் கட்டணத்திற்காக ரூ.3,000/- முதல் ரூ.10,000/- வரையிலும், பராமரிப்புக் கட்டணத்திற்காக விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.2,300/- முதல் ரூ.5,500/- வரையிலும், விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு ரூ.3,800/- முதல் ரூ.12,000/- வரையிலும் ஒரு கல்வி ஆண்டிற்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 44,294 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.2,477.32 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

3.3 தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில், தொழில்நுட்பம்/தொழிற்கல்வி பயிலும் தமிழகத்தைச் சார்ந்த ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட மதவாரி சிறுபான்மையினராகக் கருதப்படும் இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர், பார்சி மற்றும் ஜைன வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு ஒன்றிய அரசு நிதி உதவியுடன் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் 2007-2008 முதல் செயல்படுத்தப்படுகிறது.

இக்கல்வி உதவித் தொகை பெறுவதற்கு பெற்றோர்/ பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பதுடன், மாணவ, மாணவியர் முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெற்றிருக்க வேண்டும்.

இக்கல்வி உதவித் தொகையின்கீழ் ஒன்றிய அரசால் பட்டியலிடப்பட்ட,

1. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (ஐஐடி)- சென்னை
2. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (என்.ஐ.டி)- திருச்சி

2021 செப்டம்பர் 8]

3. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி, டிசைன் & மேனுஃபேக்சரிங் (ஐஐஐடிடி & எம்)-காஞ்சிபுரம்

4. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் பேஷன் டெக்னாலஜி (என்.ஐ.எஃப்.டி)- சென்னை

5. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட் (ஐஐஎம்)-திருச்சி

உள்ளிட்ட 85 கல்வி நிறுவனங்களில் (Listed Institutions) பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கான கல்விக் கட்டணங்கள் முழுவதுமாக வழங்கப்படும்.

ஏனைய அரசு/அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயிலும் தகுதியுள்ள சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு அதிகபட்சமாக ரூ.20,000/- வரை கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும், பராமரிப்புக் கட்டணமாக ஆண்டொன்றுக்கு விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.5,000/- மற்றும் விடுதியில் தங்கிப் பயில்பவர்களுக்கு ரூ.10,000/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வியில் பல்வேறு பாடப் பிரிவுகளில் இளங்கலை/ முதுகலை பட்டப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 5,279 மாணவ/ மாணவியருக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.1,342.39 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

4. சிறுபான்மையினர் விடுதிகள்

தமிழ்நாட்டில் சிறுபான்மையின மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை எவ்வித இடையூறுமின்றி தொடர்ந்து பயில ஏதுவாக இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 18 விடுதிகள் இயங்கி வருகின்றன. மொத்தமுள்ள 18 விடுதிகளில் 4 பள்ளி விடுதிகளும், 14 கல்லூரி விடுதிகளும் ஆகும். இவ்விடுதிகளில் 1,500 மாணவ, மாணவியர் தங்கி பயன் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 18 விடுதிகளில் 1 விடுதி மாணவர் விடுதி ஆகும் (திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள ஆம்பூர் கல்லூரி மாணவர்

[2021 செப்டம்பர் 8

விடுதி). 17 விடுதிகள் மாணவியர் விடுதிகள் ஆகும். விடுதி மாணவ, மாணவியர் உணவுக்கான கட்டணம் உட்பட எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. மாணவ, மாணவியருக்கான விடுதிச் செலவினம் முழுவதையும் அரசே ஏற்கிறது. பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் உள்ள மாணவ, மாணவியர் இவ்விடுதிகளில் சேர தகுதியுடையவர்களாவர்.

இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு விடுதியிலும் 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு விடுதியிலும் 4 சதவீத இடங்கள் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மீட்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள், விடுதிகளில் கல்வியாண்டின் இடையிலும் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக்கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கிப் பயிலவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை பிறப்பிடமாகக் கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதிமொழி ஏற்கப்படுகிறது.

4.1 உணவுக் கட்டணம்

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு உணவுக் கட்டணம் ரூ.1,000/- ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு உணவுக் கட்டணம் ரூ.1,100/- ஆகவும், ஓராண்டில் 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பண்டிகை நாட்களில் விடுதி மாணவ/ மாணவிகளுக்கு சிறப்பு உணவுக் கட்டணமாக ஒரு பண்டிகைக்கு பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.40/-ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.80/-ம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

சோப்பு மற்றும் பற்பசை போன்றவற்றிற்காக மாதாந்திர பல்வகை செலவினம் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.50/- ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.75/- ஆகவும் மின்னணு பரிமாற்றம்மூலம் நேரடியாக மாணவ, மாணவியரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2020-2021 ஆம் ஆண்டில் மேற்கண்ட விடுதிகளின் உணவுக் கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற பணிகளுக்காக ரூ.189.69 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2021-2022 ஆம் ஆண்டிற்கு சிறுபான்மையினர் நலத் துறைக்கு ரூ.402.89 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.2 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்

1. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து பாடப் புத்தகங்களும் இலவசமாக பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.
2. 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு, மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்று வண்ணம் மற்றும் வடிவமைப்பில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.
3. விடுதிகளில் தங்கிப் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு இலவச சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.
4. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.
5. அனைத்து விடுதி மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் மூன்று முறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.
6. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை வழங்கப்படுகிறது.

7. விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள், ஜமக்காளங்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் தண்ணீர் குவளைகள் (tumbler) வழங்கப்படுகின்றன.

8. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி/தேநீர் வழங்கப்படுகின்றன.

9. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

10. ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒன்று என்ற வீதத்தில் விடுதி மாணவ, மாணவியருக்கு வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

11. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

12. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், நீர் சுத்திகரிப்புக் கருவி, சுகாதாரக் குட்டைத்தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இரண்டடுக்கு கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிகலன் வழங்கப்படுகின்றன.

13. விடுதிகளில் அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விடுதி ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

2021 செப்டம்பர் 8]

4.3 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

இத்துறையின்கீழ் இயங்கி வரும் 18 விடுதிகளில் 10 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 8 விடுதிகளில், 3 விடுதிகளுக்கு ஏற்கெனவே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பொதுப் பணித் துறையின்மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 5 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2020-2021 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகளுக்காக ரூ.17.84 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்திற்காக 2021-2022 ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நலத் துறைக்கு ரூ.300 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.4 விடுதி கட்டடங்கள் பராமரிப்புப் பணிகள்

அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்புப் பணிகள் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ளப்படுகின்றன. 2020-2021 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்காக ரூ.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 4 விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டன.

2021-2022 ஆம் ஆண்டிற்கான விடுதிகளின் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்

ஆதரவற்ற முஸ்லிம் விதவைகளுக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கி அவர்களுக்கு உதவும்பொருட்டு கர்நாடக நவாப் அவர்களால் “முகமதியன் கோஷா விதவை சாரிட்டி” என்ற பெயரில் 1.10.1892-ல் ஒரு சங்கம் துவங்கப்பட்டது. பின்னர் இதன் பெயர் “முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்” என்று மாற்றியமைக்கப்பட்டது. இச்சங்கம், 12.8.1976-ல் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது. இச்சங்கம் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

[*2021 செப்டம்பர் 8*

மேற்கண்ட சென்னை மாவட்ட சங்க அமைப்பை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவரை பதவி வழித் தலைவராகக் கொண்டு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் 2007 ஆம் ஆண்டு அரசால் ஏற்படுத்தப்பட்டன.

இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின்மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மகளிர் ஆகியோருக்கு உதவிடும் வகையில் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. தவிர, தையல், பூ-வேலைப்பாடுகள், காலணிகள், கைவினைப் பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் நன்கொடைமூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியம் இரு மடங்காக 1:2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு, ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சங்கங்களுக்கு 2020-2021 ஆம் ஆண்டில் அரசின் இணை மானியமாக ரூ.586.16 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.413.11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. கிறித்துவ மகளிர் உதவும் சங்கம்

தமிழ்நாட்டிலுள்ள கிறித்துவ மதத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட கிறித்துவ மகளிர் நலனுக்காக மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின்மூலம் ஆதரவற்ற, வயதான கிறித்துவ விதவைகள், மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் கிறித்துவ மகளிர் ஆகியோருக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தவிர, தையல், பூ-வேலைப்பாடுகள், காலணிகள், கைவினைப் பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள், சங்கங்களின் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நன்கொடைமூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியம் இரு மடங்காக

2021 செப்டம்பர் 8]

1 : 2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சங்கங்களுக்கு 2020-2021 ஆம் ஆண்டில் அரசின் இணைமானியமாக ரூ.330.71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.297.54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் 2009 ஆம் ஆண்டு அரசால் உருவாக்கப்பட்டது. மாநிலத்தில் உள்ள இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள் மற்றும் மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள், தர்காக்கள் மற்றும் அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், ஆஷுர்கானாக்கள் மற்றும் முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் முஜாவர் உள்ளிட்ட பணியாளர்கள் பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது .

இவ்வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் நல வாரியங்கள்மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

[2021 செப்டம்பர் 8

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள் விவரம்:

வ. எண்	நிதி உதவிகள் விவரம்		உதவித் தொகை ரூ.
1.	அ)	விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை விபத்தினால் ஏற்படும் மரணம்	1,00,000
	ஆ)	விபத்தினால் ஏற்படும் ஊனம்	10,000 முதல் 1,00,000வரை
2.		இயற்கை மரணம்	20,000
3.	ஈமச்சடங்கு செலவினம்		5,000
4.	கல்வி உதவித்தொகை		
	அ)	10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,000
	ஆ)	10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு	1,000
	இ)	11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,000
	ஈ)	12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,500
	உ)	12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,500
	ஊ)	(i) முறையான பட்டப் படிப்பிற்கு	1,500
		(ii) விடுதி வசதியுடன்கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு	1,750
	எ)	(i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு	4,000

2021 செப்டம்பர் 8]

வ. எண்	நிதி உதவிகள் விவரம்		உதவித் தொகை ரூ.
		(ii) விடுதி வசதியுடன்கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு	5,000
	ஏ)	(i) தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு	4,000
		(ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு	6,000
	ஐ)	(i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	6,000
		(ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	8,000
	ஒ)	(i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு	1,000
		(ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு	1,200
5.		திருமண உதவித்தொகை	2,000
6.	மகப்பேறு உதவித்தொகை		
	அ)	மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் (6 மாதங்களுக்கு)	6,000
	ஆ)	கருச்சிதைவு/கருக்கலைப்பு	3,000
7.		மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல்	500 வரை
8.		முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்)	1,000

இவ்வாரியத்தில் இதுவரையில் 3,852 பயனாளிகளுக்கு ரூ.141.59 இலட்சம் செலவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

[2021 செப்டம்பர் 8

7.1 பதிவுபெற்ற வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம்:

வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட 2,814 வஃக்ப் நிறுவனங்கள் தற்போது தமிழ்நாட்டில் உள்ளன. இந்த பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்க, மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது ரூ.25,000/- இவற்றில் எது குறைவோ அதனை மானியமாக வழங்கிட உத்திரவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

8. ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கான நிதியுதவி

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனிதப் பயணம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது ஒரு பயனாளிக்கு நிதி உதவியாக ரூ.37,000/- வழங்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு இத்திட்டத்தின் கீழான பயனாளிகளின் எண்ணிக்கை 600 ஆகும். இவற்றில் 50 இடங்கள் கன்னியாஸ்திரிகள்/அருட்சகோதரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் ரூ.825.60 இலட்சம் செலவில் 4,128 கிறித்துவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.120 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம்

தமிழகத்தில் உள்ள கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கு மானிய உதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கென இதுவரை ரூ.700 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 18 மாவட்டங்களில் உள்ள 23 கிறித்துவ தேவாலயங்களுக்கு புனரமைப்புப் பணிகளுக்காக ரூ.59.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 8]

2021-2022 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.6 கோடி வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. மறுவாழ்வு நிதி உதவி வழங்குதல்

இனக் கலவரங்களால் பொருளாதார மற்றும் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் சிறு குற்றங்களுக்காக சிறை தண்டனை பெற்றவர்கள் உள்ளிட்டோர், சமுதாயத்தில் கண்ணியமான வாழ்க்கை நடத்திட உதவும் வகையில் சிறுவணிகம் தொடங்குவதற்கு நபர் ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் வரை நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை சிறு குற்றங்களுக்காக சிறை சென்று வெளிவந்த 14 நபர்களுக்கு ரூ.1.40 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

11. கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைத்தல்

இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்கள் கோரிக்கையின் அடிப்படையில், கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைக்க நிலம் கையகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு அரசால் ரூ.100 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

12. பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்

சிறுபான்மையினரின் மக்கட்தொகைக்கேற்ப, தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ் நிர்ணயிக்கும் இலக்கில் உரிய பங்கு சிறுபான்மையின மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வெவ்வேறு துறைகள் மூலமாக இத்திட்டங்கள் செயலாக்கப்படுவதைக் கண்காணிக்க மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழுவும் மதிப்பாய்வு செய்து வருகின்றது.

15 அம்ச திட்டங்கள்

1. *ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்;*
2. *பள்ளிக் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பு;*

[2021 செப்டம்பர் 8

3. உருது மொழியைக் கற்பிப்பதற்கான வசதியை ஏற்படுத்தல்;

4. மதரஸா கல்வி முறையை நவீனப்படுத்துதல்;

5. சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த கல்வியில் சிறந்த மாணவ/ மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்;

6. மௌலானா ஆசாத் கல்வி அமைப்பின்மூலம் கல்விக் கூடங்களின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல்;

7. சுய வேலைவாய்ப்பு மற்றும் எளியவர்களுக்கான கூலியுடன் வேலைத் திட்டம்;

8. தொழில்நுட்ப பயிற்சியின்மூலம் திறனை மேம்படுத்துதல்;

9. பொருளாதார நடவடிக்கைகளுக்கான கடன் உதவி;

10. மாநில மற்றும் ஒன்றிய அரசுப் பணிகளில் வேலைவாய்ப்பு;

11. ஊரக வீட்டு வசதித் திட்டத்தில் சம அளவு பங்கு;

12. சிறுபான்மையினத்தவர் வாழும் குடிசைப் பகுதிகளின் நிலையை மேம்படுத்தல்;

13. இனக்கலவரங்களைத் தடுத்தல்;

14. இனக்கலவரத்தினை தூண்டுவோர்மீது குற்ற விசாரணை நடத்துதல்; மற்றும்,

15. இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு வழங்குதல்.

13. பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம் (பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம்)

பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம் (பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம்), சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள சிறுபான்மையினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதையும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் அடிப்படை வசதிகளை வழங்குவதையும், ஏற்றத்தாழ்வினை குறைப்பதையும் நோக்கமாக கொண்டதாகும். இத்திட்டத்தின்கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

2021 செப்டம்பர் 8]

ஒன்றிய அரசின் சிறுபான்மையின நல அமைச்சகத்தால், 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில், சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் என சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் கண்டறியப்பட்டுள்ள பின்வரும் 4 ஊராட்சிகள் மற்றும் 18 நகர்ப்புறங்களில் இத்திட்டம் தற்போது செயல்படுத்தப்படுகிறது:

1. ஊராட்சிகள்

வ.எண்	மாவட்டம்	ஊராட்சிகள்
1.	இராமநாதபுரம்	திருவாடானை
2.	இராமநாதபுரம்	மண்டபம்
3.	நீலகிரி	கூடலூர்
4.	புதுக்கோட்டை	மணமேல்குடி

2. நகர்ப்புறங்கள்

வ. எண்	மாவட்டம்	வ. எண்	நகர்ப்புறங்கள்
1.	கோயம்புத்தூர்	1.	குறிச்சி
		2.	குனியமுத்தூர்
2.	திண்டுக்கல்	3.	திண்டுக்கல்
3.	வேலூர்	4.	வேலூர்
		5.	பேரணாம்பட்டு
4.	இராணிப்பேட்டை	6.	மேல்விஷாரம்
5.	நாகப்பட்டினம்	7.	நாகப்பட்டினம்
6.	இராமநாதபுரம்	8.	கீழக்கரை
7.	திருநெல்நேலி	9.	திருநெல்நேலி
8.	தூத்துக்குடி	10.	தூத்துக்குடி
		11.	காயல்பட்டிணம்

[2021 செப்டம்பர் 8

9.	திருப்பத்தூர்	12.	ஆம்பூர்
		13.	வாணியம்பாடி
10.	கரூர்	14.	பள்ளப்பட்டி
11.	தென்காசி	15.	தென்காசி
		16.	கடையநல்லூர்
12.	கன்னியாகுமரி	17.	கொல்லங்கோடு
		18.	நாகர்கோவில்

இத்திட்டம், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்ற நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த நிதியில் 80 சதவீதம் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு திட்டங்களுக்கும், அவற்றில் 33-40 சதவீதம் பெண்கள்/பெண் குழந்தைகளுக்கான கட்டமைப்புகள்/வசதிகள் ஏற்படுத்துவதற்காகவும் செலவிடப்படும்.

இத்திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடம் அமைத்தல், உண்டு உறைவிடப் பள்ளி, திறன்மிகு வகுப்பறை (smart class room), அரசு தொழிற்பயிற்சி நிலையம்/தொழில்நுட்பக் கூடங்களில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல், சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல், அரசுப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள், பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிகள், வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு விடுதிகள் அமைத்தல், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்கலைக்கழகங்களில் மாணவர் விடுதிகள் மற்றும் சிறப்பு வகுப்புகள் உருவாக்குதல், அரசு அங்கீகரித்துள்ள மதரசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன்கூடிய கணினிகள் வழங்குதல் மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை சிறுபான்மையினர் அதிகம் வாழும் இடங்களில் ஏற்படுத்தித் தருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 11 மாவட்டங்களிலுள்ள 61 திட்டங்களுக்கு முதல் கட்ட தவணையாக ஒன்றிய அரசின் பங்களிப்பாக ரூ.1,280.63 இலட்சமும், மாநில அரசின் பங்களிப்பாக ரூ.853.75 இலட்சமும் என மொத்தம் ரூ.2,134.39 இலட்சம் ஒதுக்கீடு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2021 செப்டம்பர் 8]

2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.1,000 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ)

தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினர் வியாபாரம் மற்றும் தொழில் செய்து தங்களது வருமானத்தைப் பெருக்கி பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய உதவிடும் வகையில் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1999 ஆம் ஆண்டில் அரசால் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் வசிக்கும் சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தவர்கள், பார்சிகள் மற்றும் ஜெயின் ஆகியோர் இக்கழகத்தின்மூலம் பயன்பெறுகின்றனர். இக்கழகம் இந்திய கம்பெனிகள் சட்டம், 1956-ன்கீழ் பதிவு செய்யப்பட்டது. இக்கழகம் செயல்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, மாநில அரசின் பொறுப்புறுதியின்மீது தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து கடனாகப் பெற்று வழங்குகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5 கோடியாகும். இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2.05 கோடியாகும். இந்நிறுவனம், புதுதில்லியில் உள்ள தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி/கூட்டுறவு நகர வங்கி/தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள்மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

இக்கழகத்தால் வழங்கப்படும் தனிநபர் காலக் கடன், விராசாத் கடன் (கைவினை கலைஞர் கடன்) மற்றும் சுய உதவி குழுக்களுக்கு வழங்கும் சிறுகடன் ஆகிய கடன்களில் பங்குத் தொகை விவரம் பின்வருமாறு:

தேசிய கழகத்தின் பங்கு - 90 %

டாம்கோவின் பங்கு - 5 %

பயனடைவோரின் பங்கு - 5 %

[2021 செப்டம்பர் 8

14.1 தனிநபர் காலக்கடன் திட்டம்.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் சுயமாக தொழில்/வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும்பொருட்டு பின்வருமாறு தனிநபர் காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன:

வ. எண்	கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு)	ஆண்டு வருமானம் உச்சவரம்பு
1	கடன் திட்டம் I ரூ.20 இலட்சம் வரையிலான கடன்களுக்கு	6%	கிராமப்புறங்களுக்கு ரூ.98,000/- நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000/-
2	கடன் திட்டம் II ரூ.30 இலட்சம் வரையிலான கடன்களுக்கு	ஆண் -8% பெண் -6%	கடன் திட்டம்– I-இன்கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8,00,000/- வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு)

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 2,720 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.1,943.12 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

14.2. விராசத்-கைவினை கலைஞர் கடன் திட்டம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின கைவினை கலைஞர்களுக்கு அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தும்பொருட்டு விராசத் கடன் (கைவினை கலைஞர் கடன்) குறைந்த வட்டி விகிதத்தில் மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள்/கருவிகள்/ இயந்திரங்கள் வாங்குவதற்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம் குறித்த விவரங்கள் பின்வருமாறு:

2021 செப்டம்பர் 8]

கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு)	ஆண்டு வருமானம் உச்சவரம்பு
விராசாத் கைவினை கலைஞர் கடன் திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் வரை கடன்கள் வழங்கப் படுகின்றன.	ஆண்-5% பெண்-4%	கிராமப்புறங்களுக்கு ரூ.98,000/- நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000/-

14.3 சுய உதவிக் குழுக்களுக்கான சிறுகடன் திட்டம்

ஆண்கள் மற்றும் பெண்கள் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பலகாரக்கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல் போன்ற சிறு வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட சிறுகடன் வழங்கும் திட்டம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுய உதவிக் குழுவில் உறுப்பினர்கள் அதிகபட்சமாக 20 நபர்களும், குறைந்தபட்சமாக 10 நபர்களும் இருத்தல் வேண்டும். இதில் குறைந்தபட்சம் 60% சிறுபான்மையினர் இருத்தல் வேண்டும். மீதமுள்ள 40% பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் /சீர்மரபினர்/ஆதி திராவிடர்/பழங்குடியினர் இருக்கலாம். இத்திட்டத்தின்கீழ் பின்வருமாறு கடன் வழங்கப்படுகிறது:

வ. எண்	கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு)	ஆண்டு வருமானம் உச்சவரம்பு
1	கடன் திட்டம் I ரூ.1,00,000/- வரை (சுய உதவிக் குழு உறுப்பினர் ஒருவருக்கு)	7%	கிராமப்புறங்களுக்கு ரூ.98,000/- நகர்ப் புறங்களுக்கு ரூ.1,20,000/-

2	கடன் திட்டம் II ரூ.1,50,000/- வரை (சுய உதவிக் குழு உறுப்பினர் ஒருவருக்கு)	ஆண்-10% பெண்-8%	கடன் திட்டம்-I இன்கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8,00,000/- வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு)

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்கள்மூலம் 4,184 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.2,235.31 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

14.4 கல்விக் கடன்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால், அரசு/அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் தொழிற் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பட்டப்படிப்புகள் பயிலும் சிறுபான்மையின மாணவ/ மாணவியருக்கு பின்வருமாறு கல்விக் கடன்கள் வழங்கப்படுகின்றன:

வ. எண்	கல்விக் கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு)	பெற்றோரது ஆண்டு வருமானம் உச்சவரம்பு
1	கடன் திட்டம் I இந்தியாவில் கல்வி பயில கல்விக் கடன் ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.	3%	கிராமப்புறங்களுக்கு ரூ98,000/- நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000/-

2021 செப்டம்பர் 8]

வ. எண்	கல்விக் கடன் தொகை	வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு)	பெற்றோரது ஆண்டு வருமானம் உச்சவரம்பு
	மேலும், வெளிநாடுகளில் தொழிற்கல்வி பயில ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ 30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.		
2	கடன் திட்டம் – II இந்தியாவில் கல்வி பயில ஆண்டுதோறும் ரூ4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20இலட்சம் வரை வழங்கப்படுகிறது. மேலும், வெளிநாடுகளில் கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.	மாணவர்களுக்கு 8% மாணவியர்களுக்கு 5%	கடன் திட்டம் I இன்கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8,00,000/- வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு)

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 6 மாணவ, மாணவியருக்கு ரூ.7.25 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 8

15. திறன் வளர்ப்பு பயிற்சி (Skill Development Training) "Kaushal Se Kushalta"

திறன் வளர்ப்பு பயிற்சி (Skill Development Training) "Kaushal Se Kushalta" திட்டத்தின்கீழ், சிறுபான்மையின இளைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற பயனாளிகளது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.6 இலட்சத்துக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இப்பயிற்சிகளின்மூலம் சிறுபான்மையின இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு மற்றும் வெளி நிறுவனங்களில் பணிவாய்ப்புகள் பெற வாய்ப்புள்ளது. தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம்/தொடர்புடைய துறை திறன் கவுன்சில்/ மாநில திறன் மேம்பாட்டுக் கழகம்/தொழில்நுட்ப கல்வி இயக்ககம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையங்கள் மூலமாக குறைந்தபட்சம் 200 மணி நேரம் முதல் 250 மணி நேரம் வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிறுவனங்கள் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தால் தேர்வு செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை ஸ்டிச்சரி (கூட்ஸ் மற்றும் கார்மெண்ட்ஸ்), பிரி அசெம்பிளி ஆப்பரேட்டர் மற்றும் எம்பிராய்டரி ஆகிய மூன்று வகையான பயிற்சிகளுக்கு ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு (ATDC), மத்திய காலணி பயிற்சி நிலையம் (CFTI) ஆகிய இரண்டு பயிற்சி நிலையங்கள்மூலம் மொத்தம் ரூ.30.72 இலட்சம் செலவில் 250 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப் பெற்று பயிற்சிகள் நடைபெற்றுள்ளன.

16. தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ)

மொழிவழி சிறுபான்மையினர் பல்வேறு திட்டங்களில் பயனடையவும், தங்கள் நலனை வளர்த்தெடுத்து சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையவும் ஏதுவாக தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ) உருவாக்கப்பட்டது. இதன் பங்கு மூலதனம் ரூ.5 கோடியும், விதைத் தொகை ரூ.10 கோடியும், சம்பளம் மற்றும் இதர நிருவாகச் செலவுகளுக்காக ரூ.109.20 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.16.09 கோடி நிதியினை அனுமதித்து 2020-2021-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 8]

17. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாட்டில் வாழும் மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும்பொருட்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் 1989 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டம், 2010 (தமிழ்நாடு சட்டம் 21/2010) தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டு, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாக 1.8.2010 முதல் இயங்கி வருகிறது.

இந்த ஆணையம், சிறுபான்மையினத்தவரைப் பாதுகாத்திட இந்திய அரசமைப்புச் சட்டம் மற்றும் மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின்மூலம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செயல்படும் விதத்தை ஆய்வு செய்தல், கண்காணித்தல், சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நலத் திட்டங்கள் குறித்து உரிய கருத்துக்களைத் தெரிவித்தல், மாநிலத்தில் மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான வழிவகைகளை அரசுக்குப் பரிந்துரைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

இவ்வாணையத்தின் தலைவராக திரு. S. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் 28.6.2021 அன்று நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவ்வாணையத்திற்கு Dr. மஸ்தான் அவர்கள் துணைத் தலைவராகவும், 8 உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

17.1. மதவழி/மொழிவழி சிறுபான்மையினர்

தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட கிறித்தவர், முஸ்லிம், ஜெயினர், சீக்கியர் மற்றும் புத்த மதத்தினர் ஆகியோர் மதவழி சிறுபான்மையினர் எனவும், தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டு தெலுங்கு, உருது, கன்னடம், மலையாளம், சௌராஷ்ட்ரம் மற்றும் மராத்தி ஆகிய மொழிகளை தாய்மொழியாகக் கொண்டவர்களை மொழிவழி சிறுபான்மையினர் எனவும் தமிழ்நாடு அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

18. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

“பொருட்களை கட்டி வையுங்கள்; அதன்
பலனை அனைவருக்கும் கொடுங்கள்”

– நபிமொழி

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” - திருக்குறள்

[2021 செப்டம்பர் 8

வக்ஃப் சட்டம், 1954 தமிழ்நாட்டில் 15.1.1955-ல் அமல்படுத்தப்பட்டது. தமிழ்நாடு வக்ஃப் வாரியம் 18.1.1958-ல் அமைக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டம் (மத்திய அரசு சட்டம் 43/1995) 1.1.1996 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இவ்வாரியம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படுகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியம் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழகம் முழுவதும் 11 சரக அலுவலகங்களுடன் இயங்கி வருகிறது. 12 உறுப்பினர்களை கொண்டு தமிழ்நாடு வக்ஃப் வாரியம் திருத்தியமைக்கப்பட்டு 19.9.2020 முதல் செயல்பட்டு வருகிறது. வாரியத்திற்கு புதிய உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு, வாரியத்தின் தலைவராக திரு. M. அப்துல் ரகுமான் அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பார்வை

வக்ஃப் சட்டம், 1995-ன் பிரிவுகளின்படி வக்ஃப்களைப் பாதுகாத்தல், மீட்டெடுத்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவை தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் பார்வை எல்லைக்குள் வருகின்றன.

குறிக்கோள்

வக்ஃப் சொத்துக்களை பாதுகாத்து அபிவிருத்தி செய்வதில் பங்காற்றுதல் மற்றும் வக்ஃப் நிறுவனங்களுடன் நெருக்கமாகச் செயல்பட்டு அவற்றின் செயல்பாட்டினை மேம்படுத்துதல் இதன் குறிக்கோளாகும்.

18. 1 வக்ஃப் வாரியத்தின் பணிகள்

1. ஒவ்வொரு வக்ஃபின் தோற்றம், வருவாய், நோக்கம், பயனாளிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் அடங்கிய பதிவுருக்களை (ஆவணங்கள்) பேணுதல்;

2. வக்ஃப் சொத்துக்களும் அதன் வருமானமும் எந்த நோக்கத்திற்காக வக்ஃப் உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக செயல்படுத்தப்படுகிறதா என கண்டறிந்து உறுதி செய்தல்;

3. வக்ஃப் நிர்வாகத்திற்காக அவ்வப்பொழுது அரசு வழங்கும் ஆணைகளைப் பின்பற்றுதல் மற்றும் கட்டளையிடுதல்;

4. வக்ஃப்களின் நிர்வாகத்திற்காக புதிய திட்டம் வகுத்தல்;

5. வக்ஃப்களின் கணக்கை தணிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் முத்தவல்லிகள் சமர்ப்பிக்கும் உத்தேச

வரவு செலவு கணக்குகளை ஆய்வு செய்தல்;

6. வக்ஃப் சட்டப்படி முத்தவல்லிகளை நியமனம் செய்தல் மற்றும் நீக்குதல்;

7. இழந்த வக்ஃப் சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுத்தல்;

8. வக்ஃப் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை நடத்துதல்;

9. வக்ஃப் நிதியை நிர்வகித்தல்;

10. வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தமாக வாரியத்திற்கு அவ்வப்போது தேவைப்படும் தகவல்களை முத்தவல்லிகளிடம் கோரிப் பெறுதல்;

11. வக்ஃப் சொத்துக்கள், கணக்குகள், ஆவணங்கள், வஸ்திர ஆவணங்கள் மற்றும் பத்திரங்களை ஆய்வு செய்தல்;

12. வக்ஃப் சொத்தின் தன்மை, பரப்பளவு ஆகியவற்றை ஆராய்ந்து முடிவு செய்தல் மற்றும் தேவைப்படும்போது வக்ஃப் சொத்துக்களை நில அளவை செய்தல்; மற்றும்,

13. வக்ஃப்களைக் கட்டுப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் போன்றவற்றிற்குத் தேவைப்படும் எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்.

இவை நீங்கலாக அரசு வழங்கும் மானியத் தொகைமூலம் நலிவுற்ற வக்ஃப் நிறுவனங்களின் கட்டடங்களைப் பழுதுபார்ப்பதற்கும், பெரிய அளவிலான பள்ளிவாசல் மற்றும் தர்காக்களைப் பராமரிப்பதற்கும் மானியம் வழங்குதல், உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல் போன்ற பணிகளில் வாரியம் ஈடுபட்டு வருகிறது. மேலும், 1986—ஆம் ஆண்டு முஸ்லிம் பெண்கள் பாதுகாப்புச் சட்டத்தின்படி விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற உத்தரவின்படி ஜீவனாம்சம் வழங்குதல் போன்ற பணிகளிலும் வாரியம் ஈடுபட்டு வருகிறது. வாரியத்தின் மேற்பார்வையில் மதுரையில் எம்.எஸ்.எஸ்.வக்ஃப் வாரியக் கல்லூரி இயங்கி வருகிறது.

தமிழ்நாடு வக்ஃப் வாரிய ஆளுகையின்கீழ் 7,452 வக்ஃபுகள் உள்ளன. அவற்றில் வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டவை 2,814 வக்ஃப்கள் ஆகும். பதிவு செய்யப்படாதவை 4,638 ஆகும்.

18.2. வக்ஃப் சொத்துக்களை நில அளவை செய்தல்

வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 4-ன்படி வக்ஃபு சொத்துக்களை சர்வே செய்வதற்காக நில அளவை ஆணையரை, வக்ஃப் நில அளவை ஆணையராக அரசு நியமனம் செய்தது. மாவட்ட வருவாய் அதிகாரிகள் கூடுதல் வக்ஃப் நில அளவை ஆணையர்களாக நியமனம் செய்யப்பட்டனர். வட்டாட்சியர்கள் உதவி வக்ஃப் ஆணையர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.

அரசு உத்தரவுப்படி மாவட்ட வாரியாக வக்ஃப் சொத்துக்களின் விவரங்கள், 1954 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டப்படி தயாரிக்கப்பட்ட வாரிய பதிவேடுகளில் இருந்து எடுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. வாரியம் அளித்த வக்ஃப் சொத்துக்களின் விவரங்கள் மாவட்ட வருவாய் அலுவலர்களால் பரிசீலிக்கப்பட்டு பின்னர் நில அளவை ஆணையரால் 27 மாவட்டங்களில் நில அளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள மாவட்டங்களிலும் நில அளவை பணிகள் நடைபெற்று வருகின்றன.

18.3. வக்ஃப் தீர்ப்பாயம்

வக்ஃப்கள் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஏதுவாக வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 83-ன்படி தலைவர் மற்றும் 2 உறுப்பினர்களை கொண்டு தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் சென்னையில் அமைக்கப்பட்டு 6.8.2018 முதல் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயத்தின் செயல்பாட்டிற்காக 2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.75.92 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

18.4 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இயங்கும் வக்ஃப்கள்

நிர்வாக காரணங்களுக்காக சில வக்ஃப்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 65-ன்கீழ் கொண்டு வரப்படுகின்றன. இவ்வக்ஃப்களில் செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு அன்றாட அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்பொழுது தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் 85 வக்ஃப்கள் உள்ளன. வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 45(7)-ன்கீழ் நிர்வாகக் கட்டணம் அவ்வக்ஃபுகளிலிருந்து பெறப்படுகிறது.

2021 செப்டம்பர் 8]

18.5 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வக்ஃப் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கைகள்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் ஆளுகையின்கீழ் இயங்கும் வக்ஃப் நிறுவனங்களின் வக்ஃப் சொத்துக்கள் தனி நபர்களால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் போது வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 54-ன் படியும், தமிழ்நாடு பொது வளாக (முறைகேடான ஆக்கிரமிப்பினை அகற்றுதல்) சட்டம், 1975-ன்படி [Tamil Nadu Public Premises (Eviction of Unauthorized Occupants) Act *1975*] *அச்சொத்துக்களை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*மேலும், தனி நபர்கள் வக்ஃப் சொத்துக்களை சட்ட விரோதமாக விற்பனை மற்றும் பரிவர்த்தனை செய்வதைத் தடுத்திட தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு பதிவுச் சட்டம், 1908 பிரிவு 22(*A*)-ன்படி ஆட்சேபனை கடிதங்கள் வழங்கப்பட்டு வக்ஃப் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.*

18.6 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு அளிக்கப்படும் நிர்வாக மானியம்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நிர்வாக செலவுகளுக்காக தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. தற்போது ஆண்டு நிர்வாக மானியமாக ரூ.2.50 கோடி ஒப்பளிக்கப்படுகிறது. 2021-2022 ஆம் ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.2.50 கோடியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

18.7 மணவிலக்குப் பெற்ற முஸ்லிம் பெண்களுக்கான பராமரிப்பு

முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம், 1986 பிரிவு 4 (2)-ன்படி, மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற தீர்ப்பின்படி தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் பராமரிப்பு செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி ஆண்டுக்கு ரூ.67,800/- வாரியத்திற்கு செலவினம் ஏற்படுகிறது.

18.8 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

18.8.1 உலமா ஓய்வூதிய திட்டம்

உலமா ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற வறிய நிலையில் உள்ள பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ்

ஓய்வூதியம் பெறுவதற்கு 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் தகுதியுள்ளவர்களாவர். உலமா ஓய்வூதியத்தினை அங்கீகரிக்க மாண்புமிகு அமைச்சர் தலைமையில் குழு செயல்பட்டு வருகிறது. தற்போது உலமா ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.3,000/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2,600 நபர்கள் பயன்பெற வழிவகை உள்ளது. தற்போது 1,263 நபர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இத்திட்டத்திற்காக 2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.454.68 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

18.8.2 பெரிய அளவிலான பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம்

பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களின் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புக்காக தமிழ்நாடு அரசு மானியம் வழங்குகிறது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த மானியம் ரூ.60 இலட்சத்திலிருந்து ரூ.5 கோடியாக 2020-2021 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.5 கோடி வழங்கப்பட்டு 45 வக்ஃப் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன. 2021-2022 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.6 கோடி வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

18.8.3 வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பு பணிகளுக்கான தொகுப்பு நிதி

வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.3 கோடியில் தொகுப்பு நிதி (Corpus fund) உருவாக்கப்பட்டுள்ளது.

18.8.4 காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குதல்

தமிழ்நாட்டில் பணியாற்றும் மாவட்ட காஜிக்களுக்கு மாதந்தோறும் ரூ.20,000/- மதிப்பூதியம் தமிழக அரசால் வழங்கப்படுகிறது. அதன்படி 2021-2022 ஆம் ஆண்டில் காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குவதற்காக ரூ.67.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

18.9 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின்மூலம் செயல்படுத்தப்படும் மத்திய வக்ஃப் கழக திட்டங்கள்

18.9.1 குவாமி வக்ஃப் போர்டு தரகியாத்தி திட்டம்.

மாநில வக்ஃப் வாரியங்களின் செயல்பாடுகளை வலிமைபடுத்தும் விதமாக மாநில வக்ஃப் வாரியப் பணிகளில் திறன் மேம்பாட்டினை கொண்டு வர கணினி உதவி புரோகிராமர்கள், சட்ட அலுவலர்கள், கணக்காளர்கள், நில அளவையாளர்கள், சரக வக்ஃப் அலுவலர்கள் ஆகியோரை நியமிக்க வேண்டியும், வக்ஃப் சொத்துக்களை GIS *முறையில் கண்டறியும் பணிகளை மேற்கொள்ளவும், மையப்படுத்தப்பட்ட கணினி வசதிகளை ஏற்படுத்தவும், முத்தவல்லிகளுக்கான பயிற்சி முகாம் நடத்திடவும், அலுவலக எழுதுபொருட்கள் வாங்கிடவும் இத்திட்டத்தின்கீழ் மத்திய வக்ஃப் கழகம் உதவி வருகிறது. இதன்படி மத்திய வக்ஃப் கழகம் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு 2019-2020 ஆம் ஆண்டிற்கு ரூ.1.02 கோடியும், 2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.86 இலட்சமும் வழங்கி உள்ளது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வக்ஃப் சொத்துக்களின் ஆவணங்கள் 100% கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும், 13,000 வக்ஃப் சொத்துக்கள்* GIS *முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இத்தகவல்கள் மத்திய வக்ஃப் கழக இணையதளம்* www.wamsi.nic.in-*ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.*

18.9.2 சஹாரி சம்பத்தி விகாஸ் யோஜனா

வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய வக்ஃப் கழகத்தால் வக்ஃப் நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் திட்டங்களின் அடிப்படையில் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அபிவிருத்தி மேற்கொள்ளும் இடத்தின்மீது எவ்வித வில்லங்கமும் இல்லாதிருத்தல் வேண்டும். இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ரூ.2 கோடி அல்லது திட்ட மதிப்பீட்டில் 75%, இவற்றில் எது குறைவானதோ அத்தொகை கடனாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக வழங்கப்படும் கடன் தொகையில் 8% நிர்வாக செயலாக்க கட்டணமாக மத்திய வக்ஃப் கழகத்தால் வசூலிக்கப்படும். இத்திட்டம் தொடர்பான மேலதிக விவரங்களை மத்திய வக்ஃப் கழகத்தின் இணைய தளம் www.centralwaqfcouncil.gov.in-*ல் அறிந்துகொள்ள தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முத்தவல்லிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.*

[2021 செப்டம்பர் 8

18.9.3 தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் (NAWADCO)

வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்ய தேசிய சிறுபான்மை நல அமைச்சகத்தால் மத்திய வக்ஃப் கழகத்துடன் இணைந்து தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி தகுதியான வக்ஃப் சொத்துக்களை வணிக ரீதியாக மேம்படுத்துவதற்கு தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் (NAWADCO) நிதி உதவி வழங்கி வருகிறது. இதன்மூலம் பெறப்படும் வருவாயினை வக்ஃப் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விகிதாச்சார அடிப்படையில் தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தொடர்புடைய வக்ஃப் நிறுவனம் ஆகியன குறிப்பிட்ட கால அளவு வரை பிரித்துக்கொள்ள வழிவகை உள்ளது.

19. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு 1958 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஹஜ் குழு சட்டம், 2002-ஐ (மத்திய சட்டம் எண்.35/2002) இயற்றிய பின்னர், ஹஜ் பயணம் சிறப்புடன் அமைய அதற்குத் தேவையான ஏற்பாடுகளை இந்திய ஹஜ் குழு மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் செய்வதற்கும், ஹஜ் பயணிகளின் நலன் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கும் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மாநில அரசால் அமைக்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவானது, அலுவல்சார் உறுப்பினராக செயலாளர் மற்றும் செயல் அலுவலருடன் சேர்த்து 12 உறுப்பினர்களைக் கொண்டு 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் மூன்றாண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டது.

19.1 குழுவின் பணிகள்

(i) இந்திய ஹஜ் குழுவின் வழிகாட்டுதலின்படி, ஹஜ் செய்ய விரும்பும் தமிழ்நாட்டிலுள்ள ஹஜ் பயணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுதல்;

(ii) மாநிலத்திற்கான ஒதுக்கீடு அளித்ததன் அடிப்படையில், தேவைப்பட்டால் குறாவின் (குலுக்கல் முறையில்)மூலம் பயணிகளைத் தேர்வு செய்து விண்ணப்பங்களை இந்திய ஹஜ் குழுவிற்கு அனுப்புதல்;

2021 செப்டம்பர் 8]

(iii) அவ்வப்போது ஹஜ் புனிதப் பயணிகளுக்கு அறிவுரைகளை வழங்குதல் மற்றும் அவர்களிடமிருந்து பெறப்படும் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கு விளக்கங்களை அளித்தல்;

(iv) மக்காவில் புனிதப் பயணிகள் தங்குவதற்கேற்ப கட்டடங்களைத் தேர்வு செய்ய பிரதிநிதிகளை கட்டடத் தேர்வுக் குழுவில் சவூதி அரேபியாவிற்கு அனுப்பி வைத்தல்;

(v) தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹஜ் புனிதப் பயணிகளின் நலனைக் கவனிக்க ஹஜ் தொண்டர்களைத் தேர்வு செய்து அனுப்புதல்;

(vi) ஒவ்வோர் ஆண்டும் ஹஜ் வழிகாட்டி, ஹஜ் மற்றும் உம்ரா கையேடுகள் ஆகியவற்றை அச்சிட்டு ஹஜ் புனிதப் பயணிகளுக்கு இலவசமாக வழங்குதல்;

(vii) சென்னை-ஜித்தா-மதினா-சென்னை விமானங்களை நேரடியாகவும், வெற்றிகரமாகவும் இயக்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுதல்;

(viii) ஹாஜிகளிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்து மும்பை இந்திய ஹஜ் குழு மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் விவகார அமைச்சகம் முதலியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு முடிந்த வரையில் தீர்வு காண்பதற்கு உதவுதல்;

(ix) பல்வேறு மாவட்டங்களில் புனிதப் பயணிகளுக்கு புத்தறிவுப் பயிற்சி மற்றும் தடுப்பூசி முகாம்கள் நடத்துதல்;

(x) மக்கா மற்றும் மதீனா நகரங்களில் ஹஜ் பயணிகளுக்கு தங்குமிட வசதிகள் ஏற்படுத்துதல்; மற்றும்,

(xi) புனிதப் பயணிகளுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் சென்னையில் தற்காலிக தங்குமிட வசதி செய்துக் கொடுத்தல் மற்றும் புனிதப் பயணிகள் விமான நிலையம் செல்வதற்கு பேருந்து வசதி அளித்தல்.

19.2 ஹஜ் பயணத்திற்கான ஏற்பாடுகள்

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் முஸ்லிம் மக்கள் தொகைக்கேற்றவாறு நம்

[2021 செப்டம்பர் 8

நாட்டிற்கு அளிக்கப்படும் ஒதுக்கீட்டை, ஒன்றிய அரசு பல்வேறு மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கிறது. ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களை புனிதப் பயணிகளிடமிருந்து தமிழ்நாடு மாநில ஹஜ் குழு வரவேற்கிறது. ஒவ்வோர் ஆண்டும், வழங்கப்பட்ட ஒதுக்கீட்டை விட அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. தமிழகத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாவட்ட வாரியாக குலுக்கல் நடத்தப்பட்டு, பயணிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக சென்னை விமான நிலையத்திற்குப் பதிலாக கொச்சி விமான நிலையத்தை புறப்பாட்டு தளமாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

இந்திய ஹஜ் குழுவின் அறிவுரைகளின்படி, மாநில ஹஜ் குழு தன் பணிகளை மேற்கொள்கிறது. பயணிகளைத் தெரிவு செய்தல், பயணிகளுக்கான விமானப் பயண அட்டவணையை இறுதி செய்தல், தங்குமிடங்களை ஒதுக்குதல் முதலியவற்றை இந்திய ஹஜ் குழு மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சகம் ஆகியவை இணைந்து முடிவு செய்கின்றன.

19.3 மாநில அரசால் வழங்கப்படும் மானியங்கள்/ உதவிகள்:

19.3.1 நிர்வாக மானியம்.

ஒவ்வோராண்டும் மாநில ஹஜ் குழுவிற்கு ஆண்டு நிர்வாக மானியமாக தமிழ்நாடு அரசு ரூ.50 இலட்சம் வழங்கி வருகிறது. பணியாளர்களுக்கு ஊதியம் அளித்தல், சொத்து வரி, மின்சார செலவினம், குடிநீர் மற்றும் வடிகால் வரி முதலிய நிர்வாக செலவினங்களை தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் வழங்கும் மானியத்திலிருந்து ஹஜ் குழு மேற்கொள்கிறது. 2021-2022 ஆம் ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19.3.2 தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு மானியம்.

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுமூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் மானியத் தொகை ரூ.6 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2019-2020-ஆம் ஆண்டில் 4,397 ஹஜ்

2021 செப்டம்பர் 8]

பயணிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. கொரோனா பெருந்தொற்று காரணமாக ஹஜ், 2020 மற்றும் 2021-க்கான பயணத்தை சவூதி அரேபியா அரசு இரத்து செய்துள்ளது.

19.3.3 ஹஜ் தொண்டர்கள் மற்றும் கட்டடத் தேர்வு குழுவில் உறுப்பினரை அனுப்புவதற்கு மானியத்தை ஒப்பளிப்பு செய்தல்.

ஹஜ் பயணிகளுக்கு சேவையாற்ற ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், கட்டடங்களைத் தெரிவு செய்ய கட்டடத் தேர்வுக் குழுவில் பிரதிநிதியை அனுப்புவதற்கும் உண்டான செலவினத்தை மேற்கொள்ளவும், அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியம் அளிக்கிறது. இத்திட்டத்திற்காக 2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.10.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19.3.4 இதர மானியங்கள்.

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் உறுப்பினர்கள் குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்ள வருகை புரிவதற்கான பயணப்படி மற்றும் தினப்படிக்கான செலவினத்தை தமிழ்நாடு அரசு ஈடு செய்கிறது. இந்திய ஹஜ் குழு, ஒன்றிய சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சகம் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சகம் முதலியவற்றால் நடத்தப்படும் அனைத்து இந்திய ஹஜ் மாநாடு மற்றும் ஹஜ் தொடர்பான கூட்டங்களில் ஹஜ் குழு அலுவலர்கள் கலந்துகொள்வதற்கான பயணப்படி மற்றும் தினப்படி செலவினத்தையும் தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு செய்கிறது. மேலும், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு சீரிய முறையில் செயல்பட தொடரா செலவினங்களில் கணினி வழங்குதல் அல்லது பிற உபகரணங்களை அளிக்கவும் தமிழ்நாடு அரசு மானியங்களை அளிக்கிறது.

முடிவுரை

இந்த அரசு சிறுபான்மையினரின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், நலத் திட்டங்களையும் செவ்வனே செயல்படுத்துவதன் வாயிலாக சிறுபான்மையினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்தினை மேம்படுத்திட தொய்வின்றி பாடுபட்டு வருகிறது. சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் நலனுக்காகவும் இவ்வரசு தொடர்ந்து செயலாற்றும்.

இணைப்பு III

(83 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

முன்னுரை:

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் –

திருவள்ளுவர்

இக்குறள் நெறியின்படி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பொதிந்துள்ள குறிக்கோளான எவ்வித பாகுபாடுகளுமற்ற சமத்துவ சமுதாயத்தினை உருவாக்கிட தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக, ஒருங்கிணைந்த மற்றும் திட்டமிடப்பட்ட முறையில் அதிக கவனம் செலுத்திடும் பொருட்டு சமூக நலத் துறை 1988 ஆம் ஆண்டில் மூன்றாகப் பிரிக்கப்பட்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தனியாகத் தோற்றுவிக்கப்பட்டது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு மற்றும் சமூக-பொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை இத்துறை உருவாக்கி முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இதனுடன் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரது பொருளாதார முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் ஆதி திராவிடர் துணைத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகிய இரு திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு முகமையாகவும் இத்துறை விளங்குகிறது.

2021 செப்டம்பர் 8]

இத்துறையின்கீழ், ஆதி திராவிடர் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்திட ஆதி திராவிடர் நல ஆணையரகம், பழங்குடியினர் நலன் காத்திட பழங்குடியினர் நல இயக்குநரகம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தினை செயல்படுத்திடும் சமூக நீதி மற்றும் மனித உரிமை காவல் பிரிவு மற்றும் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) ஆகிய துறைத் தலைமை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மேலும், பழங்குடியினரின் கலாச்சாரம் குறித்து ஆராய்ச்சி செய்திடும் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வருகிறது.

ஆதி திராவிடர் மக்களை கல்வியறிவு, சமூக, பொருளாதார நிலைகளில் உயர்வடையச் செய்திடும் பொருட்டு ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துதல், வீட்டுமனைப் பட்டா வழங்குதல், குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ஆதி திராவிடர் நல ஆணையரகம் மூலமாக கையாளப்பட்டு வருகின்றன.

பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துதல், அவர்களது குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், வன உரிமைச் சட்டத்தினை செயல்படுத்துதல் மற்றும் அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகள் பழங்குடியினர் நல இயக்குநரகம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன்கூடிய கடனுதவி திட்டங்களுடன், இவ்வின இளைஞர்களுக்கு சுயதொழில் / வேலை வாய்ப்பினை உருவாக்கிட பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலம் அளிக்கப்பட்டு வருகின்றன.

சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் இம்மக்களின் உரிமைகளை பாதுகாத்திடவும், அவர்களுக்கெதிராக நடைபெறும் வன்கொடுமைகளை தடுத்திடும் பொருட்டும் இயற்றப்பட்ட

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் செயலாக்கத்தினை காவல் துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு கண்காணித்து வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் செயலாக்கத்தினைக் கண்காணித்திட மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மக்களுக்கான திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படுவதை கண்காணித்திடவும் அத்திட்டங்களின் பலன் முறையாக அம்மக்களுக்கு சென்றடைவதை ஆய்வு செய்து, கண்காணித்திடவும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் தலைமையில் மாநில ஆதி திராவிடர் நலக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட குழுக்கள் தவிர, தமிழ்நாட்டில் இருக்கும் புதிரை வண்ணார் இன மக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள், உதவிகள் சென்றடைய தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம், பழங்குடியின மக்களின் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம், தமிழ்நாட்டில் தூய்மைப் பணிபுரிவோரின் மேம்பாட்டிற்கான திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணித்திட தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம் ஆகிய நல வாரியங்கள் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன.

மேலும், தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளை வழங்கிட தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் எனும் அமைப்பும் செயல்பட்டு வருகிறது.

இம்மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி அவர்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்திட, 2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.4,142.34 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்

ஐக்கிய நாடுகளின் உச்சி மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் 2030-ன் செயல்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள "எவரும் விடுபடாமல் உள்ளடக்கிய வளர்ச்சி" எனும் மையக்கருத்து இத்துறையுடன் நேரடி தொடர்புடையதாகும். இத்துறையின் முக்கிய கொள்கையான "சமூக நீதி" அனைத்து நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் துணைத் திட்டம் [Scheduled Castes Sub Plan *(*SCSP*)*] *மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம்* [Tribal Sub Plan *(*TSP*)*] *ஆகியவற்றின்கீழ் அனைத்துத் துறைகளாலும் செயல்படுத்தப்படும் பல திட்டங்கள், "ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்" என்ற இலக்கு 10-ன் குறிக்கோள் 10.4 ஐ நேரடியாக அடையும் நோக்கில் உள்ளது. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஆதி திராவிடர் துணைத் திட்டம் (*SCSP*) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் (*TSP*) ஆகியவற்றில் கவனம் செலுத்தக்கூடிய ஆதி திராவிடர் துணைத் திட்ட நிதி பயன்பாடு (குறிக்கோள் (10.4.1) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்ட நிதி பயன்பாடு (குறிக்கோள் (10.4.2) ஆகிய குறிக்காட்டிகள் அடங்கியுள்ளன.*

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடையும் பொருட்டு அரசாணை (நிலை) எண் 14, நாள். 31.01.2020-ன் வாயிலாக நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் அலகு இத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- *இத்துறையால் செயல்படுத்தப்படும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள், கல்வி உதவித் தொகை திட்டங்கள், இலவசப் புத்தகங்கள், மிதி வண்டி வழங்கும் திட்டம், மாணவ, மாணவியருக்கான விடுதிகள் ஆகிய திட்டங்கள் இலக்கு 1 (வறுமை ஒழிப்பு), இலக்கு 4 (தரமான கல்வி) மற்றும் இலக்கு 10 (ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்) ஆகிய இலக்குகளை அடையும் நோக்கில் உள்ளன.*

- பெண் கல்வி ஊக்கத் தொகை திட்டம் இலக்கு 5-ஐ (பாலின சமத்துவம்) அடையும் நோக்கில் உள்ளது.

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் மற்றும் தாட்கோவின் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் இலக்கு 1 (வறுமை ஒழிப்பு), இலக்கு 8 (வேலை வாய்ப்பும், பொருளாதார வளர்ச்சியும்), இலக்கு 10 (ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்) மற்றும் இலக்கு 11 (நகர்ப்புற மேம்பாடு) ஆகிய இலக்குகளை அடையும் நோக்கில் உள்ளன.

- தொழில் நெறி வழிகாட்டும் மையம், தாட்கோவால் வழங்கப்படும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் இலக்கு 1 தாட்கோவின் இதர செயல்பாடுகள் (வறுமை ஒழிப்பு), இலக்கு 4 (தரமான கல்வி), இலக்கு 8 (வேலைவாய்ப்பும் பொருளாதார வளர்ச்சியும்), இலக்கு 10 (ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்) ஆகிய இலக்குகளை அடையும் நோக்கில் உள்ளன.

- அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினரை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட திட்டங்கள் யாவும், அனைத்து நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளையும் உள்ளடக்குவதாக உள்ளன.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் குறிக்கோள்கள் மற்றும் குறிக்காட்டிகளை மையப்படுத்தி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார அதிகாரமளித்தலை ஏதுவாக்க, இத்துறை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

2021 செப்டம்பர் 8]

I. ஆதி திராவிடர் நலன்

அனைத்து தரப்பு மக்களும் சமூகத்தில் எவ்வித வேறுபாடுமின்றி வாழ வேண்டுமென்பதே இவ்வரசின் நோக்கம். 2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகை 7.21 கோடியில், 20.01 விழுக்காடு (1.44 கோடி) ஆதி திராவிட மக்கள் உள்ளனர். ஆதி திராவிட மக்களின் பின்தங்கிய நிலையை நன்கு உணர்ந்துள்ள இவ்வரசு அவர்களின் நலனுக்காக பல கொள்கைகள், திட்டங்கள், வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

ஆதி திராவிட மக்களின் கல்வித் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதுடன் கூடுதலாக, அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன்கூடிய கடன்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும் சமூக சமத்துவத்தினை உறுதிப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நமது மாநிலத்தில், ஆதி திராவிடர்கள் சந்திக்கும் இடர்பாடுகளை எதிர்கொள்ளும்பொருட்டு, அவர்களுக்கு மானியத்துடன்கூடிய கடன்கள் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், வணிக நிறுவனங்களை அமைக்கவும், விவசாய நிலம் வாங்குவதற்காகவும் வழங்கப்படுவதுடன், இலவச வீட்டு மனைகளும் வழங்கப்படுகின்றன.

கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்.

கல்வி ஒரு வற்றாத செல்வம் ஆகும். இது தனி மனிதனின் வாழ்க்கையை வளம்பெறச் செய்யவும், தான் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகிறது. எனவே, ஆதி திராவிட மக்களின் கல்வி மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமையை இவ்வரசு அளிக்கிறது.

2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி ஆதி திராவிட மக்களின் கல்வியறிவு 73.26 விழுக்காடு ஆகும். இது ஏனைய பொதுப் பிரிவினரின் கல்வியறிவு விழுக்காடான 80.09% உடன் ஒப்பிடுகையில் குறைவாக உள்ளதை அறிந்து 2021–2022 ஆம் நிதியாண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.4,142.34 கோடி நிதியில் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக ரூ.3,480.24 கோடி (84.02 விழுக்காடு) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 8

1.1 பள்ளிகள்

ஆதி திராவிட மக்களின் கல்வியறிவு விகிதத்தை இதர பிரிவினருக்கு இணையாக உயர்த்திடும் பொருட்டு இவ்வரசு ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துவதுடன், பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள ஆதி திராவிட மாணாக்கருக்கு பல்வேறு கல்வி உதவித் தொகைகளையும் வழங்கி வருகிறது. அரசின் இத்தொடர் முயற்சிகள் ஆதி திராவிட மாணாக்கரின் கல்வியறிவு வளர்ச்சி வீதம் மற்றும் கல்வித்தரம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்நாட்டில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 27,87,388 ஆதி திராவிட மாணாக்கர் கல்வி பயின்று வருகின்றனர். (ஆதாரம்-ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை)

இம்மக்களை கல்வியில் நிலையான முன்னேற்றம் அடையச் செய்யும் பொருட்டு, ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில், இத்துறையால் 1138 பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் விவரம்—2020-2021

விவரம்	பள்ளிகளின் எண்ணிக்கை	மாணவர்	மாணவியர்	மொத்தம்
தொடக்கப் பள்ளிகள்	833	16,756	16,980	33,736
நடுநிலைப் பள்ளிகள்	99	4,056	4,091	8,147
உயர்நிலைப் பள்ளிகள்	108	6,460	6,121	12,581
மேல்நிலைப் பள்ளிகள்	98	15,007	13,788	28,795
மொத்தம்	1,138	42,279	40,980	83,259

2021 செப்டம்பர் 8]

மேலும், தொடர்ந்து பெருகி வரும் உயர்கல்விக்கான தேவையினை ஈடு செய்யும் பொருட்டு இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் அடுத்தடுத்த உயர் நிலைகளுக்கு நிலை உயர்த்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் கல்வித் தரத்தை மேம்படுத்திடும் வகையில் தேவையான கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர், கழிவறைகள் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்படுகின்றன.

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.120.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.2 கல்வி உதவித் தொகைகள்

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள, ஆதி திராவிட இன மக்களை கல்வி கற்க ஊக்கப்படுத்தும் வகையில் இவ்வரசு, கீழ்க்காணும் பல்வேறு கல்வி உதவித் தொகைகளுடன், கட்டணச் சலுகைகளையும் வழங்கி வருகிறது.

(அ) ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்திட்டத்தின்கீழ் பராமரிப்புப் படி மற்றும் கல்விக் கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தினை செயல்படுத்த ஏற்படும் செலவினத் தொகை 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

பராமரிப்புப் படி

இத்திட்டத்தின்கீழ் மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வரும் படிப்பு வாரியான பராமரிப்புப் படி தொகை விவரங்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

[2021 செப்டம்பர் 8

தொகுதி	படிப்புகள்	ஒரு வருடத்திற்கான பராமரிப்புப் படி (ரூ.)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	வெளி மாணாக்கர் (Day Scholar)
I	பொறியியல், மருத்துவம், நவீன ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பம் (Fashion Technology), கால்நடை, வேளாண்மை மற்றும் அதைச்சார்ந்த தொழில் படிப்புகளில் பட்டம் மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம் / பட்டயக் கணக்கர் (CA/CWA/CS/CFA etc.,) மற்றும் முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு (M.Phil, Ph.D., & Post Doctoral programmes)	13,500/-	7,000/-
II	12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகச் கொண்ட மருந்தாக்கியல், செவிலியர், LLB, விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல், மேலாண்மை போன்ற தொழில் படிப்புகளில் பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் B.Sc. (Nursing), B.Pharm, B.O.T., B.P.T., M.Sc., (Nursing), M. Pharm, M.P.T. etc.,)	9,500/-	6,500/-

2021 செப்டம்பர் 8]

தொகுதி	படிப்புகள்	ஒரு வருடத்திற்கான பராமரிப்புப் படி (ரூ.)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	வெளி மாணாக்கர் (Day Scholar)
III	தொகுதி I மற்றும் II-ல் இடம் பெறாத இதர இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் (எ.கா.B.A./B.Sc./B.Com./M.A./ M.Sc./M.Com., etc.,)	6,000/-	3,000/-
IV	10 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட தொழில் நுட்பப் பட்டயப்படிப்புகள், சான்றிதழ் படிப்புகள், மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகள். (எ.கா. XI, XII, ITI, தொழிற் பயிற்சிக் கல்வி etc.,)	4,000/-	2,500/-

இத்திட்டத்தின்கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு, கல்வி நிறுவனத்திற்கு அவர்களால் செலுத்தப்பட வேண்டிய கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத கட்டணங்கள் உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்து தொழிற் கல்வி பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்காக, அரசு / அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கட்டாய மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் செலுத்தப்படுகின்றன.

[2021 செப்டம்பர் 8

சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு அல்லாத இடங்களில் சேர்ந்து தொழிற் கல்வி பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்காக, அரசு / அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழுவால் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டாய மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் ஈடு செய்யப்படுகின்றன.

தகுதிகள்:

(அ) ஆதி திராவிட மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(ஆ) உரிய அதிகாரம் பெற்ற அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட கட்டண நிர்ணய / கட்டண வரன்முறைப்படுத்தும் குழுவால் அத்தகைய பாடப் பிரிவிற்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(இ) விளம்பரம் செய்து விண்ணப்பங்களை வரவேற்றல், விண்ணப்பங்களின் தரப்பட்டியல் வெளியிடுதல், தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்களைத் தேர்வு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒளிவு மறைவற்ற முறையில் அத்தகைய இடங்களுக்கான சேர்க்கை முறை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.1,745.42 கோடி செலவில் 7,60,109 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதி ஆண்டில் ரூ.1,798.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளால் பயன்பெற இயலாத ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கருக்கு மாநில அரசு சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகையினை வழங்கி வருகிறது. இதற்கான 100 விழுக்காடு நிதியை மாநில அரசு வழங்குகிறது.

2021 செப்டம்பர் 8]

இத்திட்டத்தின்கீழ் பராமரிப்புப் படி மற்றும் கல்விக் கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன.

பராமரிப்புப் படி

இத்திட்டத்தின்கீழ் மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வரும் படிப்புவாரியான பராமரிப்புப் படி தொகை விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

தொகுதி	படிப்புகள்	ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூ.)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	வெளி மாணாக்கர் (Day Scholar)
i	பொறியியல், மருத்துவம் மற்றும் இதர தொழிற்படிப்புகள்	350/-	175/-
ii	கலை, அறிவியல் முதுகலை பட்டப்படிப்பு	225/-	140/-
iii	கலை, அறிவியல் இளங்கலை பட்டப்படிப்பு	175/-	100/-
iv	(அ) 11 மற்றும் 12 ஆம் வகுப்பு	175/-	100/-
	(ஆ) ஐ.டி.ஐ. மற்றும் பட்டயப் படிப்புகள்	225/-	140/-

மேற்காணும் பராமரிப்புப் படி மாணாக்கரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தில் வழங்கப்படுவது போன்று கல்விக் கட்டணங்களும் வழங்கப்படுகின்றன.

தகுதிகள்:-

(அ) ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.

(ஆ) மாணாக்கரின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.68.11 கோடி செலவில் 27,875 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதி ஆண்டில், ரூ.81.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) ஒன்றிய அரசின் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டங்கள்

(i) தூய்மைப் பணி மற்றும் சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபடுவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்

தூய்மைப் பணியாளர், தோல் பதனிடுதல், தோல் உரித்தல் மற்றும் கழிவுப் பொருட்களிலிருந்து மறுசுழற்சிக்கு உகந்த பொருட்களைப் பிரித்து சேகரித்தல் ஆகிய தூய்மைப் பணி மற்றும் சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு சாதி, மத வேறுபாடு மற்றும் வருமான வரம்பின்றி இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் பயிலும் மாணாக்கர் இக்கல்வி உதவித் தொகையைப் பெற தகுதி உடையவர் ஆவர்.

இத்திட்டத்தின்கீழ் பராமரிப்புப் படியும், தனி மானியமும் உதவித் தொகையாக பின்வரும் வீதத்தில் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகின்றன :

	விடுதி மாணாக்கர் (Hosteller)	வெளி மாணாக்கர் (Day Scholar)
பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு)	ரூ.700/-	ரூ.225/-
தனி மானியம் (ஒரு வருடத்திற்கு)	ரூ.1,000/-	ரூ.750/-

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.10.54 கோடி செலவில் 35,462 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்தத் திட்டத்திற்காக 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.10.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

(ii) 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கருக்கான ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்

ஆதி திராவிட மாணாக்கர் 8 ஆம் வகுப்புக்கு மேல் கல்வியைத் தொடரும் வகையில் இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது மத்திய / மாநில கல்வி வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை கீழ்க்கண்ட வீதத்தில் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது:

	விடுதி மாணாக்கர் (Hosteller)	வெளி மாணாக்கர் (Day Scholar)
பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு)	ரூ.525/ –	ரூ.225/-
தனி மானியம் (ஒரு ஆண்டுக்கு)	ரூ.1,000/-	ரூ.750/-

இத்திட்டத்திற்கான செலவினம் 60 : 40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

தகுதி:

மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.76.42 கோடி செலவில் 2,78,838 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.83.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) மாநில அரசின் உயர் கல்வி சிறப்பு படிப்பு உதவித்தொகை

இத்திட்டத்தின்கீழ் கட்டண விடுதிகளில் தங்கி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பட்ட மேற்படிப்பு பயிலும் ஆதி திராவிட மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் சிறப்பு உதவித் தொகை கீழ்க்கண்டவாறு வரவு வைக்கப்படுகிறது:

[2021 செப்டம்பர் 8

வ. எண்	படிப்புகள்	உதவித் தொகை (ஒரு ஆண்டுக்கு)
1	இளங்கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்புகள் மற்றும் பல்தொழில்நுட்ப பட்டய படிப்புகள்	ரூ.7,500/-
2	முதுகலை அறிவியல் பட்டப் படிப்புகள் மற்றும் இளங்கலை / முதுகலை தொழிற்படிப்புகள்.	ரூ.8,000/-

தகுதி:

மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.5.93 கோடி செலவில் 7,633 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.12.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) வெளிநாடுகளில் முதுகலைப் பட்டம் மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை பயில்வோருக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம்

பொறியியல், தொழில்நுட்பவியல், மருத்துவம், அறிவியல் பாடப் பிரிவுகளில் முதுகலைப் பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட முனைவர் ஆராய்ச்சி படிப்பு போன்ற உயர் கல்வியினை வெளிநாடுகளில் பயில்வதற்கு ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர் பெரிதும் விரும்புகின்றனர். அவர்களை ஊக்குவிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், இத்திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து இது வரை 4 மாணாக்கர் மட்டுமே பயனடைந்துள்ளனர். எனவே, இம்மாணாக்கர் உயர்கல்வியை பெறுவதற்கும், வேலைவாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையிலும் இத்திட்டம் திருத்தி அமைக்கப்படும்.

2021 செப்டம்பர் 8]

இத்திட்டத்தைச் செயல்படுத்துவற்காக 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.5.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) முழு நேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான ஊக்கத் தொகை

தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், சட்டம், இலக்கியம், அரசியல் அறிவியல் போன்ற படிப்புகளில் முழுநேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ளும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர், பழங்குடியின ஆய்வு மாணாக்கரை ஊக்குவிக்கும் வகையிலும், அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையிலும் முழு நேர முனைவர் படிப்பிற்கான கல்வி உதவித்தொகைத் திட்டம் மறு சீரமைக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

அவ்வகையில், இதுவரை வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை ரூ.50,000/-ஐ ரூ.1,00,000/ – ஆக உயர்த்தி வழங்கி இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்காக 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.16.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.3 கல்வி கட்டணச் சலுகைகள்

(அ) கற்பிப்புக் கட்டணச் சலுகை

கல்வியின் மூலமே சமூக மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதை உணர்ந்துள்ள இவ்வரசு, ஆதி திராவிட மாணவர்கள் அனைவருக்கும் கல்வி புகட்ட வேண்டியதை தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனை செயல்படுத்தும் விதமாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், கல்வி நிலையங்களுக்கு கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக ஈடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.13.14 கோடி மதிப்பிலான 20,022 மாணாக்கருக்கான கற்பிப்புக் கட்டணங்கள் அரசால் செலுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.10.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இளங்கலை மாணாக்கருக்கு சலுகைகள்

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.23.50 இலட்சம் மதிப்பீட்டில், 752 மாணாக்கர் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) முதுகலை பயிலும் மாணவியருக்கு சலுகைகள்

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவியர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.5.41 இலட்சம் மதிப்பில் 85 மாணவியருக்கான சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணங்கள் அரசால் செலுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) பள்ளி மாணாக்கருக்கு சிறப்பு மற்றும் கற்பிப்பு கட்டணச் சலுகை

ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணாக்கருக்கும் சிறப்புக் கட்டணம் மற்றும்

2021 செப்டம்பர் 8]

கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு உள்ளனர். இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக விடுவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.40.05 இலட்சம் செலவில் 44,607 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.45.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) இதர கட்டணச் சலுகைகள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர், மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர் தேர்வுக் கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணம் அரசு தேர்வுகள் இயக்குநரகத்திற்கு நேரடியாக ஈடு செய்யப்படுகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்கல்வி படிப்புகளுக்கு விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கருக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக ஈடு செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.2.68 கோடி செலவில் 42,918 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.2.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.4 பெண்கல்வி ஊக்கத் தொகைத் திட்டம்

பெண்கல்வி என்பது சமத்துவம் மற்றும் சமூக நீதியின் ஒரு முக்கியமான அங்கமாகும். அதனை மனதில் கொண்டு பெண்களிடையே கல்வி பயில்வதை ஊக்கப்படுத்தும் வகையில் மாநில அரசால் பெண்கல்வி ஊக்கத் தொகைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிட மாணவியர் 100 விழுக்காடு பள்ளியில் சேர்வதை உறுதி செய்வதற்கும், அவர்களது இடை நிற்றலை (Drop out) குறைப்பதற்காகவும், ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு:

[2021 செப்டம்பர் 8

வகுப்பு	தொகை (ஆண்டொன்றுக்கு)	2021-22 நிதி ஒதுக்கீடு
3 முதல் 5 வரை	ரூ.500/-	ரூ.11.31 கோடி
6	ரூ.1000/-	ரூ.34.00 கோடி
7 மற்றும் 8	ரூ.1500/-	

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.38.40 கோடி செலவில் 3,99,679 மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

1.5 பரிசுத் தொகைத் திட்டம்

பரிசுகள் வழங்குவது மற்றும் பாராட்டுகள் மாணாக்கரை ஊக்குவிக்கும் உந்து சக்தியாக விளங்குகின்றன. இவை அவர்கள் நன்கு படித்து நல்ல வேலைவாய்ப்புகளை பெற வழிவகுக்கும். அதனடிப்படையில், இளங்கலை பட்டப்படிப்பு, முதுகலை பட்டப்படிப்பு மற்றும் தொழிற்படிப்புத் தேர்வுகளில் 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெறும் முதல் 1000 ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு [இளங்கலை (500 மாணாக்கர்), முதுகலை (300 மாணாக்கர்) மற்றும் தொழிற்படிப்பு (200 மாணாக்கர்)] பரிசுத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது:

படிப்பு	தொகை (ஒருவருக்கு)	பரிசு பெறும் மாணவர் எண்ணிக்கை	2021-2022 நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்)
இளங்கலை	ரூ.3,000/-	500	15 .00
முதுகலை	ரூ.5,000/-	300	15.00
தொழிற்படிப்பு	ரூ.6,000/-	200	12.00
மொத்தம்			42.00

2021 செப்டம்பர் 8]

2020-2021 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ.42.00 இலட்சம் மதிப்பிலான பரிசுத் தொகை 1000 மாணாக்கருக்கு வழங்கப்பட்டுள்ளது.

1.6 பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

பெற்றோர்களின் நிதிச் சுமையைக் கருத்தில் கொண்டும், அனைத்து மாணவர்களுக்கும் கல்வி புகட்ட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டும், இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு பாடப் புத்தகங்களும், 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு குறிப்பேடுகளும் பள்ளிக் கல்வித் துறை மூலமாக வழங்கப்படுகின்றன.

2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.1.22 கோடி செலவில் 41,961 மாணவர்களுக்கும் மற்றும் 42,208 மாணவியருக்கும் பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.7 சீருடைகள் வழங்குதல்

ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் இத்துறையால் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கருக்கு நான்கு இணை சீருடைகள் சமூக நலத் துறையின்கீழ் இயங்கும் மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தைத்து வழங்கப்படுகின்றன.

2020-2021 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ.11.10 கோடி செலவில் 43,412 மாணவர்களுக்கும் மற்றும் 32,609 மாணவியருக்கும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.13.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.8 பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல்

இத்துறையால் நடத்தப்படும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் ஆதி திராவிடர்

மற்றும் பழங்குடியின மாணாக்கரின் பொது அறிவுத் திறனை மேம்படுத்தவும், அவர்கள் குடிமைப்பணி தேர்வுகள் மற்றும் இதர போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகவும் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் பின்வருமாறு வாங்கி வழங்கப்படுகின்றன:

வ. எண்	பள்ளிகள் / விடுதிகள்	நூலக புத்தகங்கள்	பருவ இதழ்கள்
		(ஆண்டு ஒன்றுக்கு)	
1.	உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்	ரூ.1,000/-	ரூ.450/-
2.	பள்ளி விடுதிகள்	--	ரூ.450/-
3.	கல்லூரி விடுதிகள்	--	ரூ.3,100/-

2020-2021 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ.9.02 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.13.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.9 மிதிவண்டிகள் வழங்குதல்

வெகு தொலைவிலிருந்து பள்ளிகளுக்கு கல்வி பயில வரும் மாணாக்கர் தொடர்ந்து கல்வி பயிலும் வகையில் அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில், 11 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கருக்கும், 11 ஆம் வகுப்பில் மிதிவண்டிகள் வழங்காமல் விடுபட்டு, 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணாக்கருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.62.07 கோடி செலவில் 68,000 மாணவர்களுக்கும் மற்றும் 89,558 மாணவியருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.65.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

1.10 நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்த்தல்

மாணவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கித் தரும் நோக்கத்துடன் இத்திட்டம் 2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

*இத்திட்டத்தின்படி, ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் 5 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கர் அனைவருக்கும் கல்வித் திட்ட அலுவலரின் (*SSA*) உதவியுடன் சிறப்புத் தேர்வு ஒன்றினை நடத்தி அதில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணாக்கருள், வட்டாரத்திற்கு (*Block*) ஒருவர் வீதம் 385 வட்டாரங்களில் இருந்து 385 மாணாக்கரை தேர்வு செய்து, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை பெற்று, சிறந்த உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் சேர்த்து, அவர்கள் தொடர்ந்து 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயில ஆகும் செலவினத்தை அரசே ஏற்றுக்கொள்கிறது.*

2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.10.16 கோடி செலவில் 1,931 மாணாக்கர் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.13.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.11 நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம்

நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் இத்திட்டம் 2007 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு, அரசு நிதியுதவி பெறும், மாநகராட்சி, நகராட்சி, ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கல்வி பயின்று 10 ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர், இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டு சிறந்த தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு

முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள், இணையதளத்தின் வாயிலாக அல்லது முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த சிறந்த மதிப்பெண் பெற்ற 10 மாணாக்கரின் பெயர்ப் பட்டியலைப் பெற்று, அதே மாவட்டம் அல்லது அருகில் உள்ள மாவட்டங்களில் உள்ள சிறந்த தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் அவர்களைச் சேர்த்து, அவர்களுக்கான கல்விக் கட்டணம் அந்தக் கல்வி நிலையங்களுக்கு விடுவிக்கப்படுகின்றது. ஒரு மாணாக்கருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.28,000/ – வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.56,000/ – அரசு செலவிடுகிறது.

தகுதி:

பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2020-2021 ஆம் நிதி ஆண்டில், ரூ.79.00 இலட்சம் செலவில் 185 மாணவர்களும் மற்றும் 259 மாணவியரும் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதி ஆண்டில் ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.12 விடுதிகள்

ஆதி திராவிட மாணாக்கர் தமது படிப்பில் முழு கவனம் செலுத்துவதை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களது கல்வித் திறனை ஊக்குவித்து முன்னேற்றவும், கிராமப்புறங்களில் உள்ள ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கரின் இடைநிற்றலைத் தவிர்க்கவும் அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு அருகிலேயே தங்கி, சிறப்புடன் கல்வி பெற இத்துறையால் 1326 விடுதிகள் நடத்தப்படுகின்றன.

இத்துறையின்கீழ் இயங்கி வரும் ஆதி திராவிடர் நல விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கையும் பின்வருமாறு:

2021 செப்டம்பர் 8]

ஆதி திராவிடர் நல விடுதிகளின் விவரம் (2020-2021)

விடுதியின் வகை	விடுதிகளின் எண்ணிக்கை			மாணாக்கரின் எண்ணிக்கை		
	மாணவர்	மாணவியர்	மொத்தம்	மாணவர்	மாணவியர்	மொத்தம்
பள்ளி விடுதிகள்	742	401	1,143	54,331	28,435	82,766
கல்லூரி விடுதிகள்	67	78	145	7,506	5,644	13,150
ஐ.டி.ஐ. விடுதிகள்	15	2	17	1,256	116	1,372
பாலிடெக்னிக் விடுதிகள்	3	2	5	178	110	288
முதுகலைப் பட்டதாரி கல்லூரி விடுதிகள்	9	6	15	693	315	1,008
சட்டக் கல்லூரி விடுதிகள்	1	0	1	55	0	55
மொத்தம்	837	489	1,326	64,019	34,620	98,639

➢ தமிழ்நாடு கேரள எல்லையோரப் பகுதிகளில் உள்ள காபி / தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்களின் குழந்தைகள் தங்கி கல்வி பயில ஏதுவாக தேனி மாவட்டத்தில் உள்ள 16 விடுதிகளில் தலா 10 இடங்கள் (160 மொத்த இடங்கள்) கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

➢ ஒவ்வொரு விடுதியிலும் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் தங்கி கல்வி பயில ஏதுவாக 5 கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

[*2021 செப்டம்பர் 8*

அ. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள்:

i *கல்லூரி விடுதிகளுக்கு இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள் மற்றும் ஜமுக்காளம்.*

ii *நீராவி கொதிகலன்கள்.*

iii *குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், மாவு அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் மின்னணு எடை இயந்திரங்கள்.*

iv *ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரங்கள் மற்றும் சுகாதாரக் குட்டை தகளிகள்.*

v *மருந்துகள் அடங்கிய முதலுதவிப் பெட்டி.*

vi *நூலக வசதி*

vii *சமையல் எரிவாயு இணைப்பு.*

viii *செய்தித்தாள்கள்.*

ix *பாய், போர்வை மற்றும் உறையுடன்கூடிய தலையணைகள்.*

x *எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்.*

xi *கல்லூரி விடுதிகளுக்கு "இந்தியா ஆண்டுப் புத்தகம்", மற்றும் "திட்டம்" மாத இதழ்.*

2021-2022 ஆம் ஆண்டில் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளின் மேம்பாட்டிற்கென ரூ.25.00 கோடி சிறப்பு மூலதன நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ. உணவுக் கட்டணம்.

ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு உணவுக் கட்டணமும், சில்லரைச் செலவினமும் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகின்றன:

2021 செப்டம்பர் 8]

கட்டணங்களின் வகைகள்	பள்ளி மாணாக்கர்	கல்லூரி மாணாக்கர்
உணவுக் கட்டணம் (ஒரு மாதத்திற்கு)	ரூ.1000/-	ரூ.1100/-
சில்லரைச் செலவினம் (சோப்பு, எண்ணெய், சிகைக்காய் வாங்குதல் மற்றும் முடி வெட்டுதல்) (ஒரு மாதத்திற்கு)	ரூ.50/-	ரூ.75/-
சிறப்பு உணவுக் கட்டணம் (பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி விழா நாட்களில்)	ரூ.20/-	ரூ.40/-

பள்ளி விடுதி-வாராந்திர உணவுப் பட்டியல்

கிழமை	காலை சிற்றுண்டி	நண்பகல் உணவு	மாலை	இரவு உணவு
திங்கள்	ரவை கிச்சடி, சட்னி	சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, இஞ்சி இரசம், பொரியல், முட்டை(1)
செவ்வாய்	பொங்கல், சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர்	சாதம், சாம்பார், கூட்டு, முட்டை(1)
புதன்	எலுமிச்சை சாதம், துவையல்	சாதம், மட்டன் (80 கிராம்)/சிக்கன் (100 கிராம்) குருமா, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, இரசம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வியாழன்	ரவை கிச்சடி, சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை (1)
வெள்ளி	பொங்கல், சட்னி	சாதம், மோர்க்குழம்பு, பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை (1)
சனி	இட்லி, சட்னி	சாதம், சாம்பார், கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், கூட்டு, முட்டை(1)
ஞாயிறு	இட்லி, சாம்பார்	சாதம், சாம்பார், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், தக்காளி சூப், பொரியல், இரசம்

கல்லூரி விடுதி-வாராந்திர உணவுப் பட்டியல்

கிழமை	காலை சிற்றுண்டி	நண்பகல் உணவு	மாலை	இரவு உணவு
திங்கள்	பொங்கல், சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை(1)
செவ்வாய்	இட்லி, சாம்பார்	சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், பொரியல், இரசம் முட்டை(1),

புதன்	ரவை கிச்சடி, சட்னி	சாதம், மட்டன் (80 கிராம்) /சிக்கன் (120 கிராம்) குருமா, பொரியல் மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், தக்காளி சூப், பொரியல், இரசம்
வியாழன்	எலுமிச்சை சாதம், துவையல்	சாதம், குழம்பு, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை(1)
வெள்ளி	ரவை கிச்சடி, சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், இரசம், பொரியல், மோர், முட்டை (1)
சனி	இட்லி, சாம்பார்	சாதம், சாம்பார், கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், இரசம், மோர், முட்டை (1)
ஞாயிறு	பொங்கல், சட்னி	சாதம், காய்கறி குருமா, பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	இட்லி, சாம்பார்.

இ. தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

(i) விடுதிகள்:

இத்துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே, 15 தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 23 விடுதிகளில் தங்கிப் பயிலும் 4659 ஆதி திராவிடர் மாணாக்கருக்கு உணவுக் கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் இத்துறைமூலம் வழங்கப்படுகிறது.

[2021 செப்டம்பர் 8

(ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்:

தூத்துக்குடி மாவட்டம், முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளையால் நடத்தப்படும் பள்ளி மற்றும் விடுதிகளில் பணிபுரியும் 160 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் அரசால் மானியமாக 2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.9.88 கோடி செலவில் மொத்தம் 160 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதி ஆண்டில் ரூ.9.91 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

பெரும்பாலான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பொருளாதார நலிவின் காரணமாக வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை அடிப்படை வசதிகளுடன் கொடுத்தால் அவர்களின் சமூக நிலையை உயர்த்த ஏதுவாகும் என்பதால், வீடற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கான நிலம் தனியார் பேச்சுவார்த்தைமூலம் வாங்கப்பட்டு அல்லது நில எடுப்பு சட்டங்களின்படி கையகப்படுத்தப்பட்டு, தகுதியுள்ள பயனாளிகளுக்கு பட்டாக்கள் கீழ்க்கண்ட உள்ளாட்சிப் பகுதிகளில் வழங்கப்பட்டு வருகின்றன:

பகுதி	வழங்கப்படும் இடத்தின் அளவு	பயனாளியின் ஆண்டு வருமான வரம்பு
கிராமப்புறம்	3 சென்ட்	ரூ.72,000/-
நகராட்சி	1 ½ சென்ட்	
மாநகராட்சி	1 சென்ட்	

2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.4.21 கோடி செலவில் 458 பயனாளிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதி ஆண்டில் மொத்தம் ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுத்திடும் திட்டத்தின்கீழ் நிலங்களை கையகப்படுத்துவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.75.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தரும் பொருட்டு 2018-2019 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ரூ.100.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.100.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. ஈமச்சடங்கு உதவித் தொகை

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களின் குடும்பங்களுக்கு, குடும்ப உறுப்பினர்களின் இறப்பு நேரத்தில் ஈமச் சடங்கினை மேற்கொள்ள உதவியாக ரூ.5000/– நிதி வழங்கப்படுகிறது.

2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.9.07 கோடி செலவில் 36,285 பயனாளிகளுக்கு இவ்வுதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.9.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP)

பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் ஆதி திராவிட மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என அரசு கருதுகிறது.

[2021 செப்டம்பர் 8

இம்மக்களை சமூக, பொருளாதார மற்றும் கல்வியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை எய்திடச் செய்யும் பொருட்டு ஆதி திராவிடர் துணைத் திட்டம் தமிழ்நாட்டில் 1980-1981 ஆம் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத்தின் மொத்தத் திட்ட நிதியிலிருந்து தமிழ்நாட்டின் ஆதி திராவிடர் மக்கள்தொகை விகிதத்திற்கு (20.01%) இணையாக நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்துவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

2021-2022 ஆம் ஆண்டு மாநில திட்ட ஒதுக்கீடான (மாநில நலத்திட்ட செலவினம்-Welfare Expenditure of State) ரூ.67,097.46 கோடியில் ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் (ஆதி திராவிடர் நலத்திட்ட செலவினம்-Expenditure on Scheduled Castes Welfare) கீழ் ரூ.14,696.60 கோடி (21.90 விழுக்காடு) மாநில அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் இன மக்கள்தொகை விழுக்காட்டை (20.01%) விட அதிகமானதாகும்.

ஆதி திராவிடர்களுக்கான திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக, செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் இத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர். 48 துறைத் தலைமைகளை உள்ளடக்கிய 19 செயலாக்கத் துறைகள் வாயிலாக ஆதி திராவிடர் மக்களின் மேம்பாடு மற்றும் நலனுக்காக இத்துணைத் திட்டத்தின்கீழ் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மாநில அளவில் இத்துணைத் திட்டத்தின்கீழ் திட்டங்களைத் தீட்டுவதற்கும், செயல்படுத்துவதற்கும் இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாக (Nodal Department) விளங்குகிறது. இத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராக (Nodal Officer) அங்கீகரிக்கப்பட்டுள்ளார். மேலும், மாவட்ட அளவில் இத்திட்டங்களைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் ஆதி திராவிடர் நல ஆணையர் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

7. ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (SCA to SCSP)

இத்திட்டத்தின்கீழ் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கு கூடுதலாக

2021 செப்டம்பர் 8]

வலுசேர்க்கும் பொருட்டு ஒன்றிய அரசால் ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், ஆதி திராவிட மக்களின் உற்பத்தித் திறன் மற்றும் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் வருவாய் ஈட்டக்கூடிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்காகவும், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கவும், ஒன்றிய அரசு கூடுதலாக நிதியுதவி வழங்குகிறது.

இந்த நிதியில் 80 விழுக்காடு ஆதி திராவிடர் மக்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காகவும், 10 விழுக்காடு வேலையில்லா ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு தாட்கோமூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் ஆதி திராவிட மக்கள் வசிக்கும் குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கிடும் பொருட்டு மீதமுள்ள 10 விழுக்காடு நிதி ஆதி திராவிடர் நல ஆணையருக்கு விடுவிக்கப்படுகிறது.

*2021-2022 ஆம் ஆண்டு முதல், ஏற்கெனவே இயங்கி வரும் பிரதம மந்திரியின் முன்னோடி கிராமத் திட்டம் (*Pradhan Mantri Adarsh Gram Yojana-PMAGY*), ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (*Special Central Assistance to Scheduled Castes Sub Plan-SCA to SCSP*), பாபு ஜெகஜீவன்ராம் விடுதி கட்டும் திட்டம் (*Babu Jagjivan Ram Chatrawas Yojana-BJRCY*) ஆகிய மூன்று திட்டங்களை ஒருங்கிணைத்து பிரதம மந்திரியின் ஆதி திராவிட மக்கள் முன்னேற்றத் திட்டம் (*Pradhan Mantri-Anusuchit Jaati Abhyuday Yojana-PM-AJAY*) எனும் புதிய திட்டமாக ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.*

இத்திட்டத்திற்கென, 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.150.00 கோடி நிதி ஒன்றிய அரசிடமிருந்து கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

8. சாதிச் சான்றிதழ்கள்

(i) சாதிச் சான்று வழங்குதல்

ஆதி திராவிடர்களுக்கான சாதிச் சான்றிதழ்கள் வழங்கும் அதிகாரம் வட்டாட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. வட்டாட்சியரால் ஆதி திராவிடர்களுக்கு சாதிச் சான்று வழங்க மறுக்கப்படும்பட்சத்தில் வருவாய் கோட்டாட்சியர் அல்லது

[2021 செப்டம்பர் 8

சார்ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்வதுடன், அதன்பிறகு குறைகள் நீடிப்பின் அவற்றினை நிவர்த்தி செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகலாம்.

(ii) சாதிச் சான்றுகளின் மெய்த்தன்மையை சரிபார்த்தல்

சில நேர்வுகளில் போலியான சான்று அளித்து இதர இனத்தவர்கள் கல்வி நிறுவனங்களில் சேர்தல், பொதுப் பணிகளில் நியமனம் பெறுதல்மூலம் உண்மையான ஆதி திராவிடர் பாதிக்கப்படுகின்றனர். எனவே, ஆதி திராவிடர் சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழுக்கள் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளன:

மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு

<table>
<tr><td>1</td><td>மாவட்ட ஆட்சியர்</td><td>தலைவர்</td><td rowspan="3">ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 226-ன்படி உயர் நீதிமன்றத்திலும், சட்டக்கூறு 136-ன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.</td></tr>
<tr><td>2</td><td>மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்</td><td>உறுப்பினர் – செயலர்</td></tr>
<tr><td>3</td><td>மானுடவியல் வல்லுநர்</td><td>உறுப்பினர்</td></tr>
</table>

9. 1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்கும் பொருட்டு இந்திய அரசால் இயற்றப்பட்ட 1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், 1989 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம்

2021 செப்டம்பர் 8]

மற்றும் திருத்தச் சட்டம், 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995 மற்றும் திருத்த விதிகள், 2016 மற்றும் 2018 போன்றவை மாநில அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட திருத்தச் சட்டம், 2015 மற்றும் திருத்த விதிகள், 2016 மற்றும் 2018 ஆகியவை முறையே 01.01.2016, 14.04.2016 மற்றும் 27.06.2018 ஆகிய தேதிகளில் அமலுக்கு வந்துள்ளன.

கூடுதல் காவல் துறைத் தலைவர் தலைமையின்கீழ், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று இந்த இரு சட்டங்களின்கீழ் வழக்குகள் பதிவு செய்தல், புலன் விசாரணை, வழக்கு தொடுத்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வது மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு பாதுகாப்பு அரணாக விளங்குவதும் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் பணிகளாகும்.

(அ) தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள்

குடிமையியல் பாதுகாப்புச் சட்டம் 1955 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989 ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து முடிக்க தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது செயல்பட்டு வரும் தனியுறு சிறப்பு நீதிமன்றங்களின் விவரம் பின்வருமாறு:

மாவட்டத்தின் பெயர்	*குறிப்பு*
1. திருச்சிராப்பள்ளி *2. தஞ்சாவூர்* *3. மதுரை* *4. திருநெல்வேலி*	*அரசாணை (நிலை) எண் 2686, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 13.11.1981-ன்படி செயல்பட்டு வருகின்றன.*
5. விழுப்புரம் *6. சிவகங்கை*	*அரசாணை (நிலை) எண் 793, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 07.10.2013-ன்படி செயல்பட்டுவருகின்றன.*

TRUTH ALONE TRIUMPHS

[2021 செப்டம்பர் 8

7. திண்டுக்கல் 8. இராமநாதபுரம் 9. விருதுநகர் (ஸ்ரீவில்லிபுத்தூர்) 10. புதுக்கோட்டை	அரசாணை (நிலை) எண் 334, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 6.4.2017 இல் 16 மாவட்டங்களில் 16 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் 2016-2017 முதல் 2020-2021 வரையில் 4 கட்டங்களில் உருவாக்குவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளன. முதற்கட்டமாக 4 மாவட்டங்களில் 4 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்க நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு 14.8.2018 முதல் செயல்பட்டு வருகின்றன.
11. கடலூர் 12. நாமக்கல் 13. தேனி 14. திருவண்ணாமலை	அரசாணை (நிலை) எண் 1704, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 3.10.2018 இல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு 4 நீதிமன்றங்கள் 3.4.2019 முதல் செயல்பட்டு வருகின்றன.
15. பெரம்பலூர் 16. வேலூர் 17. தூத்துக்குடி 18. கன்னியாகுமரி (நாகர்கோவில்)	அரசாணை (நிலை) எண் 502, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 24.9.2019 இல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு தற்போது நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.
19. காஞ்சிபுரம் (செங்கல்பட்டு) 20. திருப்பூர் 21. திருவாரூர் 22. கோயம்புத்தூர்	நிதி ஒப்பளிப்பு செய்வதற்கான ஆணை விரைவில் வெளியிடப்பட உள்ளது.

இதர மாவட்டங்களில் தற்போதுள்ள குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 தமிழகத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் அமல்படுத்தப்படுவதை மாநில அளவில் ஒரு

2021 செப்டம்பர் 8]

கூடுதல் காவல் துறை இயக்குநர், காவல் துறை உதவித் தலைவர் மற்றும் மாவட்ட அளவில் 31 காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் 7 காவல் உதவி ஆணையர்கள் மேற்பார்வையில் சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுகள் கண்காணித்து வருகின்றன.

(i) இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் 1995 ஆம் ஆண்டைய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) விதிகள், திருத்த விதி 2016 மற்றும் திருத்த விதி 2018 இல் விதி 16-ன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு 20.07.2021 அன்று திருத்தி அமைக்கப்பட்டு இக்குழுவின் முதல் கூட்டம் 19.08.2021 அன்று நடைபெற்றது.

(ii) மேலும் விதி எண் 17(1)-ன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 5 அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பிரச்சனைகளை நன்கு அறிந்தவர்களை உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி இச்சட்ட விதிகளை நடைமுறைப்படுத்துவது பற்றியும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீருதவி மற்றும் மறுவாழ்வு அளித்தது குறித்தும், இச்சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை பற்றியும் மாவட்ட அளவில் ஆய்வு செய்யும்.

(iii) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995, விதி எண் 17(A) இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, மாவட்டங்களில் உள்ள அனைத்து உட்கோட்டங்களிலும் உட்கோட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைப்பதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு அதன்படி அனைத்து மாவட்டங்களிலும் உட்கோட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், 3,940 பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ரூ.42.49 கோடி மதிப்பிலான தீருதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

[2021 செப்டம்பர் 8

இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.30.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரம்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தீண்டாமைக்கெதிராக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை "மனிதநேய வார விழா" நடத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மனிதநேய வார விழா நடத்துவதற்காக மாவட்டங்களுக்கு தலா ரூ.50,000/– மற்றும் மாநில அளவில் ரூ.1,00,000/– நிதி வழங்கப்படுகிறது.

வில்லுப்பாட்டுக் கலைஞர்கள்மூலம் தீண்டாமைக் கொடுமைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

இது தவிர, ஆண்டுதோறும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் சமபந்தி விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. சமபந்தி விருந்து ஏற்பாடு செய்வதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் ஈடுபடுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.20.41 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.69.37 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்

தமிழ்நாட்டில், சென்னை தவிர்த்து, அனைத்து மாவட்டங்களிலும் தீண்டாமையைக் கடைபிடிக்காமல், நல்லிணக்கத்துடன் பொது மக்கள் கூடி வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திடும் பொருட்டு ரூ.10.00 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

2021 செப்டம்பர் 8]

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.3.60 கோடி செலவில் 36 மாவட்டங்களில் உள்ள 36 கிராமங்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளன.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.3.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. தமிழ்நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்

ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின எழுத்தாளர்களின் படைப்பாற்றல் மற்றும் கலை, கலாச்சாரம், இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்குதல் முதலிய பணிகளை ஊக்குவிக்கவும், அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உதவிடவும், தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுப் பணி அமைப்பினை அரசு 2003 ஆம் ஆண்டு உருவாக்கியது. இப்பணிக்கான தனி பணிக் குழு நிதியாக (Corpus Fund) ரூ.50.00 இலட்சம் வழங்கப்பட்டு வைப்புத் தொகை கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இந்த வைப்புத் தொகைக்காகப் பெறப்படும் வட்டித் தொகை, கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகிய பொருண்மைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசுத் தொகை வழங்க பயன்படுத்தப்படுகிறது.

ஆண்டுதோறும் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்காக தேர்வு செய்யப்பட்ட 10 ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின எழுத்தாளர்கள் மற்றும் ஆதி திராவிடரின் பிரச்சினை குறித்து எழுதும் இதர இனங்களைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர் என 11 எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட தலா ரூ.50,000/– பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இப்பரிசுத் தொகையில் 50 சதவீதம் படைப்புகளை புத்தகமாக வெளியிட முன்பணமாகவும், எஞ்சிய 50 சதவிகிதம் அச்சிட்ட பிரதிகளை அரசுக்கு வழங்கிய பின்னரும் வழங்கப்பட்டு வருகிறது.

[2021 செப்டம்பர் 8

11. டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் விருது

சமுதாயத்தில் சாதி வேறுபாடுகள் அகற்றப்பட வேண்டும் என்ற உணர்வை உரமாகக் கொண்டு தமது அயரா உழைப்பின்மூலம் இந்திய அரசியல் சட்டத்தை வகுத்த அண்ணல் அம்பேத்கர் அவர்களைப் போற்றும் வகையில், தமிழ்நாட்டில் ஆதி திராவிட மக்களின் சமூக, கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்கும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் தொண்டாற்றிய ஒருவருக்கு "டாக்டர் அம்பேத்கர் விருது" வழங்க அரசாணை (நிலை) எண் 52, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 22.03.1995 இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்படுகிறது. இவ்விருதுடன் பரிசுத் தொகையாக ரூ.1,00,000/-க்கான காசோலை தகுதியுரை மற்றும் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

2020 ஆம் ஆண்டிற்கான "டாக்டர் அம்பேத்கர் விருது" 2021 ஆம் ஆண்டின் திருவள்ளுவர் தின விழா அன்று முன்னாள் அமைச்சர் திரு. வரகூர் அ. அருணாசலம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

II. பழங்குடியினர் நலன்

பழங்குடியினர் மேம்பாட்டின் முக்கிய நோக்கம் பழங்குடியினரின் கல்வி மற்றும் சமூக நிலையை மேம்படுத்தி பழங்குடியினருக்கும், பழங்குடியினர் அல்லாதோருக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதோடு, இம்மக்களை பொருளாதார மற்றும் சமூக நீரோட்டத்தில் ஒருங்கிணைப்பதாகும். இந்நோக்கத்தை அடையும் வகையில் பழங்குடியினர் நலனுக்கென தனியாக ஓர் இயக்குநரகம் 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தோற்றுவிக்கப்பட்டது. பழங்குடியினர் நலப் பொருண்மைகள் குறித்த நிர்வாக மற்றும் நிதி அதிகாரங்களுடன் முழு அதிகாரத்தோடுகூடிய தனித் துறையாக பழங்குடியினர் நலத் துறை 01.04.2018 முதல் செயல்பட்டு வருகிறது.

2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 1.10 விழுக்காட்டை உள்ளடக்கிய 7,94,697 பழங்குடியின மக்கள் 36 வகையான பிரிவுகளில் வசித்து வருகின்றனர். இவர்களுள் பெரும்பான்மையானோர்

2021 செப்டம்பர் 8]

மலைப் பகுதிகளிலும், அதனை ஒட்டிய பிற இடங்களிலும் வசித்து வருகின்றனர். அவர்களது சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலை மாநில சராசரியை விட குறைவாக உள்ளது.

எனவே, தமிழ்நாட்டில் பழங்குடியினர் அதிகமாக வசித்து வரும் சேலம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், இராணிப்பேட்டை, தர்மபுரி, நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நீலகிரி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை, அரியலூர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் சென்னை ஆகிய 23 மாவட்டங்களில் பழங்குடியினரின் வளர்ச்சிக்காக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

தற்போதைய நிலையில். பழங்குடியின மக்களை அதிகம் பாதிக்கும் ஊட்டச்சத்து குறைபாடுகள், குறைவான அடிப்படை வசதிகளுடன் வாழும் நிலை, வன வளங்கள் அழிக்கப்படுவதால் மக்கள் இடம் பெயர்தல், பொருளாதார வாய்ப்புகள் இல்லாமை மற்றும் குறைந்த கல்வி அறிவு போன்ற இன்னல்களை களைவதற்கு அரசு சிறப்பு முயற்சிகளை எடுத்து வருகிறது.

பழங்குடியின மக்களை கல்வி, சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை ஆகியவற்றில் முழுமையான மேம்பாடு அடையச் செய்வதும், அவர்களது குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, இணைப்புச் சாலைகள், மின்சார வசதி மற்றும் வீடுகள் கட்டித்தருதல் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வளர்ச்சி அடையச் செய்வதும் அரசின் முதன்மையான குறிக்கோளாகும்.

1. கல்வி

தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், வனத் துறையின்கீழ் செயல்படும் பள்ளிகள், இதர தனியார் பள்ளிகள் மற்றும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் ஆகியவற்றில் மொத்தம் 1,81,239 பழங்குடியின மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர் (ஆதாரம்-ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை). பழங்குடியினரின் கல்வியறிவு விகிதம் 54.34% (2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி) ஏனைய பொதுப் பிரிவினரின் கல்வியறிவு விகிதமான 80.09% உடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக உள்ளதை அறிந்துள்ள இவ்வரசு அவர்களது கல்வி மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமை அளிக்கிறது.

[2021 செப்டம்பர் 8

1.1 பள்ளிகள்

பழங்குடியின மக்களின் கல்வி அறிவினை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கில் அவர்தம் குடியிருப்புகளுக்கு அருகில் விடுதியுடன் இணைந்த உண்டி உறைவிடப் பள்ளிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன.

பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம். (2020-21)

1.1 (அ) அரசு உண்டி உறைவிடப் பள்ளிகள்

விவரம்	பள்ளிகள் எண்ணிக்கை	மாணவர்கள்	மாணவிகள்	மொத்த எண்ணிக்கை
தொடக்கப் பள்ளிகள்	210	4,599	4,317	8,916
நடுநிலைப் பள்ளிகள்	51	1,965	1,931	3,896
உயர்நிலைப் பள்ளிகள்	35	2,062	1,776	3,838
மேல்நிலைப் பள்ளிகள்	22	3,931	3,623	7,554
மொத்தம்	318	12,557	11,647	24,204

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1.1. (ஆ) ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் (2020-21)

ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் 8 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

2021 செப்டம்பர் 8]

வ.எண்	மாவட்டம்	இடம்	ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
1	கள்ளக்குறிச்சி	வெள்ளிமலை	*478*	*0*	*478*
2	சேலம்	அபிநவம்	*0*	*480*	*480*
3	சேலம்	ஏற்காடு (நாகலூர்)	*134*	*68*	*202*
4	நீலகிரி	கோட்டப்பமந்து	*175*	*139*	*314*
5	திருவண்ணாமலை	அத்திப்பட்டு	*223*	*181*	*404*
6	திருப்பத்தூர்	விசமங்கலம்	*215*	*142*	*357*
7	நாமக்கல்	செங்கரை	*325*	*122*	*447*
8	செங்கல்பட்டு	பட்டிப்புலம்	*78*	*58*	*136*
	மொத்தம்		*1,628*	*1,190*	*2,818*

1.2 விடுதிகள்

தொலைதூரப் பகுதிகளிலிருந்து பயணம் செய்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் பழங்குடியின மாணாக்கர், விடுதிகளில் தங்கிப் பயில்வதற்கு ஏதுவாக, இத்துறையால் விடுதிகள் கட்டப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. இவ்விடுதிகளின் விவரம் பின்வருமாறு:

பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம். (2020-21)

வ.எண்	விடுதிகளின் வகைப்பாடு	விடுதிகளின் எண்ணிக்கை	மாணவர்	மாணவியர்	மாணாக்கர் எண்ணிக்கை
1	பள்ளி விடுதிகள்	*40*	*1,095*	*891*	*1,986*
2	கல்லூரி விடுதிகள்	*2*	*0*	*83*	*83*
3	தொழிற் பயிற்சி நிலைய விடுதிகள்	*6*	*383*	*0*	*383*
	மொத்தம்	*48*	*1,478*	*974*	*2,452*

மாணாக்கர் நன்கு கல்வி பயில இவ்விடுதிகளில் பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஆதி திராவிடர் நல விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளுடன் சூரிய ஒளி மின்விளக்கு, ஸ்வெட்டர் மற்றும் ரெயின்கோட் ஆகியவை இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு கூடுதலாக வழங்கப்பட்டு வருகின்றன.

1.2. (அ) தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

(i) விடுதிகள்:

ஆறு தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 7 விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 570 பழங்குடியின மாணாக்கர் பயன்பெறும் வகையில் அவர்களுக்கான உணவுக் கட்டணம் இத்துறையால் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், அரசு விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படுவது போல தொண்டு நிறுவன விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கும் பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

2021 செப்டம்பர் 8]

(ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்

2005 ஆம் ஆண்டு முதல் திருப்பத்தூர் மாவட்டம், ஜவ்வாது மலையில் கிராம வளர்ச்சி நிறுவனம் (Society For Rural Development) எனும் தொண்டு நிறுவனத்தால் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 1,800 பழங்குடியின மாணாக்கருக்காக நடத்தப்படும் பள்ளி மற்றும் விடுதியில் பணிபுரியும் 36 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கிட ஏதுவாக கற்பிப்பு மானியம், விடுதியில் தங்கிப் பயிலும் 550 பழங்குடியின மாணாக்கருக்கு உணவுக் கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. 2020-2021 ஆம் நிதியாண்டில் இப்பள்ளி மற்றும் விடுதிக்காக ரூ.2.62 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு 1,800 மாணாக்கர் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.3.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.2 (ஆ) பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகள் துவங்கிட முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்.

பழங்குடியின மக்களின் கல்வியறிவு விகிதத்தினை உயர்த்திடும் பொருட்டு, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில், பழங்குடியின மாணாக்கர் பயன்பெறும் வகையில் பள்ளிகள் நடத்த முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் 2019-2020 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2020-2021 ஆம் நிதி ஆண்டில் ரூ.1.75 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 748 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.3 கல்வி உதவித் தொகை

ஒன்றிய அரசின் கல்வி உதவித் தொகைத் திட்டம்

(அ) போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை (ஒன்றிய, மாநில அரசுகளின் நிதிப்பகிர்வு 75 : 25)

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளைப்

[2021 செப்டம்பர் 8

பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கு பராமரிப்புப் படிகளும் கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத கல்விக் கட்டணங்களும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றன.

சுயநிதி தொழிற் படிப்புக் கல்லூரிகளில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கரால் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய, அரசு/அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணம், அம்மாணாக்கர் சார்பாக கல்வி நிறுவனங்களின் கணக்குகளில் நேரடியாக அரசால் ஈடுசெய்யப்படுகின்றன. உரிய பராமரிப்புப் படிகள் மாணாக்கரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன.

2020-2021 ஆம் நிதி ஆண்டில் ரூ.44.65 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 21,383 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதி ஆண்டில் ரூ.46.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தகுதி:

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

1.3 (ஆ) 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கான, ஒன்றிய அரசின் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம் (ஒன்றிய, மாநில அரசுகளின் நிதி பகிர்வு 75 :25)

ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கு, உதவித் தொகை கீழ்க்கண்டவாறு மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது:

	விடுதி மாணாக்கர் (Hosteller)	வெளி மாணாக்கர் (Day Scholar)
பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு)	ரூ.525/-	ரூ.225/-
தனி மானியம் (ஒரு ஆண்டுக்கு)	ரூ.1000/-	ரூ.750/-

2021 செப்டம்பர் 8]

மேற்கண்ட உதவித் தொகை அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது மத்திய / மாநில கல்வி வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படும்.

2020-2021 ஆம் நிதி ஆண்டில் ரூ.3.90 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 14,570 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதி ஆண்டில் ரூ.4.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தகுதி:

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(i) மாநில அரசு கல்வி உதவித் திட்டங்கள்

பழங்குடியின மாணாக்கருக்கு, கீழ்க் குறிப்பிட்டுள்ள மாநில அரசின் கல்வி உதவித் தொகை மற்றும் கல்விக் கட்டணச் சலுகைத் திட்டங்கள் ஆதி திராவிட மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- *மாநில அரசு சிறப்பு போஸ்ட்மெட்ரிக் கல்வித் தொகை.*
- *உயர் கல்வி சிறப்பு படிப்புதவித் தொகை.*
- *கற்பிப்புக் கட்டணச் சலுகை*
- *இளங்கலை மாணாக்கருக்கான கல்விக் கட்டணச் சலுகை.*
- *முதுகலை மாணவியருக்கான கல்விக் கட்டணச் சலுகை.*
- *பள்ளி மாணாக்கருக்கான சிறப்புக் கட்டணச் சலுகை. இதர கட்டணச் சலுகைகள்*
- *பெண் கல்வி ஊக்கத்தொகை. (3 முதல் 8 ஆம் வகுப்பு வரை)*

2. ஒன்றிய அரசின் நலத் திட்டங்கள்

2. (அ) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய நிதியுதவி (SCA to TSS)

கல்வி, மருத்துவம், சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் பழங்குடியினருக்கும், இதர பிரிவினருக்கும் இடையே உள்ள

இடைவெளியினைக் குறைப்பதற்காக மாநில அரசு மேற்கொள்ளும் திட்டங்களுக்கு உறுதுணையாக இருந்திடும் பொருட்டு பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு நிதியுதவியினை ஒன்றிய அரசு ஒவ்வொரு ஆண்டும் விடுவித்து வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் நிதி பின்வருமாறு பயன்டுத்தப்படுகிறது:

வ. எண்	திட்டம்	நிதிப்பயன்-பாட்டின் விழுக்காடு
1.	பழங்குடியினருக்கு இயந்திர கலப்பைகள் வழங்குதல், தேனீ வளர்ப்புப் பெட்டிகள் வழங்குதல், பெட்டிக் கடைகள் வைத்தல் போன்ற வருவாய் ஈட்டும் திட்டங்களை மேற்கொள்ளுதல்	60%
2.	பழங்குடியினர் பகுதிகளில் பள்ளிக் கட்டடங்கள் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு, கழிவறைக் கூடங்கள் கட்டுதல் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல் ஆகிய உட்கட்டமைப்புப் பணிகளைச் செய்தல்	30%
3.	பழங்குடியின மக்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.	10%

2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.3.89 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2,070 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதி ஆண்டில் ரூ.6.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.(ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)

மனிதவள மேம்பாடு மற்றும் வாழ்க்கைத்தரம் உயர்வு, நிலை மேம்பாடு, வறுமை ஒழிப்பு மற்றும் சுரண்டலுக்கெதிரான பாதுகாப்பு ஆகிய நிலைகளில் நிலவும் இடைவெளியினைக்

2021 செப்டம்பர் 8]

குறைத்திடும் பொருட்டு இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)-ன்கீழ், ஒன்றிய அரசு நிதி விடுவித்து வருகிறது.

இந்நிதி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – வெள்ளிமலை, சேலம் மாவட்டம்-அபிநவம் மற்றும் ஏற்காடு, திருவண்ணாமலை மாவட்டம்-அத்திப்பட்டு, நீலகிரி மாவட்டம்-கோடப்பமந்து, திருப்பத்தூர் மாவட்டம்-விசமங்கலம், நாமக்கல் மாவட்டம்-செங்கரை மற்றும் செங்கல்பட்டு மாவட்டம்-பட்டிப்புலம் ஆகிய 8 இடங்களில் இயங்கி வரும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளின் தொடர் செலவினத்திற்கும், பராமரிப்பதற்கும் செலவிடப்படுகிறது.

2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.24.49 கோடி செலவில் 2,502 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதி ஆண்டில் ரூ.17.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. (இ) அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாடு

தமிழ்நாட்டில் உள்ள 36 வகையான பழங்குடியினரில் மக்கள்தொகை குறைந்துகொண்டோ அல்லது பெருகாமலோ உள்ள 6 வகை பழங்குடியினர் அதாவது தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பனியன் மற்றும் காட்டுநாயகன் ஆகியோர் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராகக் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்களின் வாழ்க்கை நிலைக்கேற்ப பல்வேறு நலத்திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் அம்மக்கள் குறித்த தளநிலை கணக்கெடுப்பு (PVTGs Baseline Survey) மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில், வீட்டு வசதி, கல்வி மேம்பாடு, சுகாதாரக் கட்டமைப்பு, நில மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, சூரிய ஒளி மின்விளக்குகள், பாசன வசதி, திறன் மேம்பாடு மற்றும் அவர்களின் கலாச்சாரத்தைப் பாதுகாத்தல் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதற்காக நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

2020-2021 ஆம் நிதி ஆண்டில் ரூ.5.51 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 4,437 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.40.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.(ஈ) சிறு வன விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டம்

வனங்களில் குடியிருக்கும் பெரும்பான்மையான பழங்குடியின மக்கள், தமது உணவு, உறைவிடம், மருந்து மற்றும் பணவரவு ஆகியவற்றிற்கு சிறு வனப் பொருட்களையே நம்பியுள்ளனர். பெரும்பாலும் இச்சிறு வனப் பொருட்களின் விலை தேவையின் அடிப்படையில் அமையாமல் வியாபாரிகளாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, சிறு வனப் பொருட்களை சேகரிப்போருக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்யும்பொருட்டு "சிறு வன உற்பத்தி பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டம்" என்ற திட்டம் ஒன்றிய அரசின் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தின்கீழ் உள்ள இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக் கூட்டமைப்புமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், முதல்நிலை சிறு வனப் பொருட்களை சேகரித்தல், மதிப்புக் கூட்டுதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், 30 சிறு வனப் பொருட்கள் சேகரிப்போரை உறுப்பினராகக் கொண்ட 10 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. இக்குழுக்களை உள்ளடக்கி ஒரு “வன்தன் விகாஸ் கேந்திரா” எனப்படும் வனவள மேம்பாட்டு மையம் அமைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில், திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள ஜவ்வாது மலை மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு மலையில் ஏழு “வன்தன் விகாஸ் கேந்திரா” எனப்படும் வனவள மேம்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தினை செயல்படுத்திட மாநில ஒருங்கிணைப்பு நிறுவனமாக (State Nodal Agency), பழங்குடியினர் நலத் துறையும், இதனை செயல்படுத்தும் நிறுவனமாக, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் 22 பெரும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களும் (LAMPS) நியமிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.3.05 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

2. (உ) பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம் 2006-ஐ செயல்படுத்துதல்

13-12-2005 ஆம் நாளுக்கு முன்பிருந்து வனங்களில் குடியிருந்து வரும் பழங்குடியினரும், இத்தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக, அதாவது 75 ஆண்டுகளாக, பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போரும், உரிமைகள் பெறுவதற்கு வழிவகை செய்யும் "பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006", ஒன்றிய அரசால் இயற்றப்பட்டு, 29-12-2006 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் தமிழ்நாட்டில் 18 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதை பின்வரும் குழுக்கள் கண்காணிக்கின்றன:—

(i) அரசு தலைமைச் செயலாளரை தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக் குழு.

(ii) மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான குழு.

(iii) வருவாய் கோட்ட அலுவலரை தலைவராகக் கொண்ட உட்கோட்ட அளவிலான குழு.

இச்சட்டத்தின்படி, பழங்குடியினர் குடியிருக்கும் வன நிலங்களுக்கு புவியியல் தரவின் அடிப்படையில் தனி நபர் உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் ஆகியவை மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சட்டத்தின்கீழ் இதுவரை 9,120 தனிநபர் உரிமைகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களில், 9,056 உரிமைகளும், 545 சமூக உரிமைகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களில், 472 உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

2. (ஊ) பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்

பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் நீலகிரி மாவட்டத்தில், மு.பாலாடா என்ற இடத்தில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின்கீழ்

1984-85 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பழங்குடியினர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், அவர்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலை குறித்து ஆராய்ச்சி செய்வதற்காகவும், ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட இம்மையம் 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

இம்மையத்தின் நிருவாகச் செலவினங்கள் மாநில அரசாலும், திட்ட நடவடிக்கைகள் குறித்த செலவினங்கள் ஒன்றிய அரசின் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

பழங்குடியினர் ஆராய்ச்சி மையம், தமிழ் நாட்டில் அழிந்துவரும் நிலையிலுள்ள பண்டைய பழங்குடியினரின் மொழிகளையும், கலாச்சாரத்தையும் பதிவுசெய்தல், பாதுகாத்தல், பழங்குடியினரின் வாழ்க்கைமுறை மற்றும் கலாச்சாரம் குறித்த நூல்களைப் பதிப்பித்தல், நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் கதைகள் சேகரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இம்மைய வளாகத்தில், ரூ.14.25 கோடி செலவில் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் [Hindustan Petroleum Corporation Limited (HPCL)] நிறுவனத்தின்மூலம் ஒரு எரிபொருள் விற்பனை மையம். அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழங்குடியின மகளிர் வேலைவாய்ப்பினை பெற ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் அருங்காட்சியகம் 1996 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, பழங்குடியினர் ஆராய்ச்சி மைய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில், பழங்குடியினர் குறித்த கலைப்பொருட்கள் மற்றும் புகைப்படங்கள் அக்ரிலிக் உறையில் பாதுகாக்கப்பட்டு சூரிய மின்சார வசதியுடன்கூடிய ஒரு திறந்தவெளி அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.1.10 கோடி திட்ட செலவினம் மற்றும் ரூ.43.67 இலட்சம் நிருவாகச் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் நிருவாகச் செலவுகளுக்காக ரூ.59.33 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

3. மாநில அரசின் திட்டங்கள்

3. (அ) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (CTDP)

2012-2013 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ரூ.50.00 கோடி நிதியினை விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது.

இத்திட்டத்தின்மூலம் நில மேம்பாடு, கூரை வீடுகளைச் சீரமைத்தல், சாலைப் பணிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் குடிநீர் வசதி ஆகிய பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தாட்கோமூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

2020-2021 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் பின்வரும் பணிகளை மேற்கொள்ள ஆணைகள் வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(அ)	ரூ.70.00 இலட்சம் செலவில் இலவச செவிலியர் பட்டயப் படிப்பு வழங்குதல்.
(ஆ)	ரூ.82.00 இலட்சம் மதிப்பீட்டில் செங்கற்சூளை அமைத்துத் தருதல்.
(இ)	ரூ.1.00 கோடி செலவில் வன உரிமைச் சட்டம் 2006-ஐ செயல்படுத்துவதற்காக புவியியல் தகவல் அமைப்பு ஏற்படுத்துதல்.
(ஈ)	பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்பு வழங்குவதற்கு ரூ.75.00 இலட்சம் வைப்புத் தொகை செலுத்துதல்.
(உ)	பழங்குடியினருக்கான மானியத்துடன்கூடிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.10.00 கோடி செலவில் தாட்கோமூலம் செயல்படுத்துதல்.
(ஊ)	சேலம் மாவட்டம்-கருமந்துறை, திருப்பத்தூர் மாவட்டம்-புதூர்நாடு, திருச்சிராப்பள்ளி மாவட்டம்-துறையூர் ஆகிய இடங்களில் பழங்குடியின மாணாக்கர் விடுதிகள் கட்டுவதற்கு இரண்டாம் தவணையாக ரூ.1.45 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.34.59 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ரூ.52.12 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. (ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (ITDP)

மொத்த மக்கள்தொகையில் 50 விழுக்காடு மற்றும் அதற்குமேல் பழங்குடியினர் அதிகம் வாழும் பகுதிகளை மேம்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள 7 மாவட்டங்களைச் சார்ந்த கீழ்க்காணும் 10 பகுதிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளாக அரசால் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

வ.எண்	மாவட்டம்	திட்டப் பகுதிகள்
1.	சேலம்	ஏற்காடு, பச்ச மலை, அருநூத்து மலை
2.	நாமக்கல்	கொல்லி மலை
3.	கள்ளக்குறிச்சி	கல்ராயன் மலை
4.	திருவண்ணாமலை	ஜவ்வாது மலை
5.	திருச்சிராப்பள்ளி	பச்ச மலை
6.	தருமபுரி	சித்தேரி மலை
7.	திருப்பத்தூர்	ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலை

2021 செப்டம்பர் 8]

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில், பழங்குடியின மக்களுக்கான நலத் திட்டப் பணிகள் மேற்குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இயங்கிவரும் 7 திட்ட அலுவலகங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2020-2021 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.2.41 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென, 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.2.59 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. (இ) சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் (Vocational Guidance Centre)

அரசாணை (நிலை) எண் 80, சமூக நலத் துறை, நாள் 4.2.1980 இல் ஆணையிடப்பட்டவாறு, பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் இயங்கி வருகிறது.

பழங்குடியின இளைஞர்கள் தமது வேலை மற்றும் தொழிலினை தேர்ந்தெடுத்திட ஏதுவாக அவர்களுக்கு வழிகாட்டிடவும், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளை வழங்கிடவும் இம்மையம் உதவியாக இருந்து வருகிறது.

இம்மையத்தின் செயல்பாட்டிற்காக 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.29.42 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் செயல்பாட்டிற்காக ரூ.28.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. (ஈ) தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs)

சேலம் மாவட்டம்-கருமந்துறை, நாமக்கல் மாவட்டம்-கொல்லிமலை, திருவண்ணாமலை மாவட்டம்-ஜமுனாமரத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம்-ஆனைக்கட்டி, நீலகிரி மாவட்டம்-கூடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம்-சங்கராபுரம் ஆகிய இடங்களில் பழங்குடியினருக்கென பிரத்தியேகமாக ஆறு தொழிற்பயிற்சி நிலையங்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன.

மேற்காணும் ஆறு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கான மாணவர் விடுதிகள் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கி வருகின்றன.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.6.79 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் நிதியாண்டில் இந்த 6 தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாட்டுக்கென ரூ.7.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. (உ) பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதி மேம்படுத்துதல்

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில், ரூ.50 கோடி செலவில் அடிப்படை வசதிகளான வீடு கட்டித் தருதல், இணைப்புச் சாலை மற்றும் பாதைகள் அமைத்தல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் தெரு விளக்கு / சூரிய மின் விளக்கு அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், பழங்குடியினர் பகுதிகளில் ரூ.265.00 கோடி மதிப்பீட்டில் 8803 வீடுகளும், ரூ.395.00 கோடி மதிப்பீட்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள், சூரிய மின் விளக்குகள் மற்றும் குடிநீர் வசதிகள் போன்றவற்றை மூன்றாண்டுகளில் செயல்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் நிதி ஆண்டில் ரூ.160.39 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென இரண்டாம் தவணையாக ரூ.130.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல்

(i) பழங்குடியினர் சாதிச் சான்று வழங்குதல்

பழங்குடியினருக்கான சாதிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் வருவாய் கோட்டாட்சியர்/சார் ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் சான்று வழங்க மறுக்கும்பட்சத்தில், மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்வதன் மூலமும், அதன் பின்னரும் குறைகள் ஏதுமிருப்பின், மாநில கூர்நோக்குக் குழுவினையும் அணுகித் தீர்வு காணலாம்.

(ii) பழங்குடியினர் சாதிச் சான்று மெய்த்தன்மை அறிதல்

உச்ச நீதிமன்ற உரிமையியல் மேல்முறையீட்டு எண் 5854/94, நாள் 02.09.1994 இல் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின்

2021 செப்டம்பர் 8]

மெய்த்தன்மையினை அறிய, மாநில அளவில் மூன்று கூர்நோக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களின் அமைப்பு விவரம் பின்வருமாறு:

மாநில அளவிலான கூர்நோக்குக் குழு

1	*அரசு முதன்மைச் செயலாளர் / அரசு கூடுதல் செயலாளர்கள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை*	*தலைவர்*	*பழங்குடியினர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கும். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டக்கூறு 226-ன்படி சென்னை உயர் நீதிமன்றத்திலும், சட்டக்கூறு 136-ன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.*
2	*இயக்குநர், பழங்குடியினர் நலம் / துணை வனப் பாதுகாவலர்கள்*	*உறுப்பினர் செயலர்*	
3	*இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்/ மானுடவியல் வல்லுநர்கள்*	*உறுப்பினர்*	

கண்காணிப்புப் பிரிவுகள்

பழங்குடியினரின் சாதிச் சான்றிதழின் உண்மைத் தன்மையை அறிந்திட, களஆய்வு செய்து, சரிபார்த்து, மாநில கூர்நோக்குக் குழுவிற்கு அறிக்கை அளிக்க ஏதுவாக சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களில் கண்காணிப்புப் பிரிவுகள் கீழ்க்கண்ட காவல் துறை அலுவலர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

[2021 செப்டம்பர் 8

வ. எண்	பதவியின் பெயர்	எண்ணிக்கை
1.	காவல் துணை கண்காணிப்பாளர்	1
2.	காவல் ஆய்வாளர் அல்லது சார் காவல் ஆய்வாளர்	1
3.	தலைமைக் காவலர்	1

மேற்கண்ட நான்கு மண்டல கண்காணிப்புப் பிரிவுகளுடன், கூடுதல் காவல் துறை இயக்குநர் (சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்) அவர்களின் தலைமையின்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கிவரும் 38 சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவுகளும் (மாவட்டங்களில் 31 பிரிவுகள் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் 7 பிரிவுகள்) அவர்களின் பணிகளுடன் கூடுதலாக பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, கள ஆய்வு மேற்கொண்டு இறுதியறிக்கை சமர்ப்பிக்க ஏதுவாக மாநில கூர்நோக்கு குழுவிற்கு பரிந்துரை செய்கின்றன. மேலும், மாவட்ட அளவில் நடைபெறும் கண்காணிப்புப் பணிக்கு உதவி புரியும் வகையில் 10 மானுடவியல் வல்லுநர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

5. பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியினர் துணைத் திட்டம் 1976-1977 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி பழங்குடியினரின், சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்கென, மாநில ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில், மாநிலத்தில் உள்ள பழங்குடியின மக்கள்தொகை விகிதத்திற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

2021-2022 ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான (மாநில நலத் திட்ட செலவினம்-Welfare Expenditure of State) ரூ.67,097.46 கோடியில், பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் (பழங்குடியினர் நலத் திட்ட செலவினம்-Expenditure on Scheduled Tribes Welfare) ரூ.1306.02 கோடி (1.95 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியானது, தமிழ்நாட்டிலிருக்கும் பழங்குடியின மக்கள்தொகை விழுக்காட்டை (1.10%) காட்டிலும் அதிகமாகும்.

2021 செப்டம்பர் 8]

இத்திட்டத்தின்கீழ் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் அரசு முதன்மைச் செயலர் தலைமையில் இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாகவும் திட்டத்தை மாவட்ட அளவில் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் பழங்குடியினர் நல இயக்குநர், கண்காணிப்பு அலுவலராகவும் நியமிக்கப்பட்டு, துறைத் தலைமை அலுவலர்களுடன் இணைந்து கண்காணிக்கப்படுகிறது.

பழங்குடியினர் துணைத் திட்டம் 48 துறைகளை உள்ளடக்கிய 19 செயலாக்கத் துறைகள்மூலம் பழங்குடியினரின் மேம்பாடு மற்றும் நலனுக்காகச் செயல்படுத்தப்படுகிறது. செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள் பழங்குடியினருக்கான திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்துவதற்காக பழங்குடியினர் நலத் துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

III. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) 15.02.1974 முதல் ஆதி திராவிடர்களின் மேம்பாட்டிற்காக இயங்கி வருகிறது. இக்கழகத்தில் கட்டுமானப் பிரிவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு என இரு பிரிவுகள் உள்ளன. தொடக்க காலத்தில், வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு தீப்பிடிக்காத வீடுகள் கட்டும் பணி கழகத்தின் கட்டுமானப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது. தற்போது பள்ளிகள், விடுதிகள் மற்றும் சமுதாயக் கூடங்கள் ஆகியவற்றின் கட்டுமானப் பணியும் இக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1980-1981 இல் தொடங்கப்பட்ட இக்கழகத்தின் மேம்பாட்டுப் பிரிவு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் தேவைக்கேற்றவாறு பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1. பங்கு மூலதனம்

இக்கழகத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூ.200 கோடி மற்றும் ரூ.143.53 கோடி ஆக உள்ளது. 1980 ஆம் ஆண்டிலிருந்து இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்தை மாநில அரசும், ஒன்றிய அரசும் 51:49 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

2. தாட்கோவின் நடவடிக்கைகள்

1. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

2. திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்.

3. கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

2.1 பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

ரூ.2.00 இலட்சத்திலிருந்து ரூ.3.00 இலட்சம் வரை ஆண்டு வருமானம் பெறும், சமூகத்தின் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக தேவையின் அடிப்படையிலான அரசு மானியம் மற்றும் வங்கி கடனுதவிகளுடன்கூடிய பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தாட்கோ மாவட்ட மேலாளர்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மூலதனச் சொத்துக்களை உருவாக்க தேசியமயமாக்கப்பட்ட மற்றும் கூட்டுறவு வங்கிகளிடம் நிதி உதவி பெற்றிட, ஆதி திராவிடர்களுக்கு திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் இவற்றுள் குறைவான தொகையும், பழங்குடியினருக்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம் இவற்றுள் குறைவான தொகையும் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டங்கள் அவர்களின் சமூக பொருளாதார நிலையில் நல்ல மாற்றத்தினை உருவாக்கியுள்ளது.

2020-2021 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் 18,795 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு, ரூ.114.56 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2.1. அ. மானியத்துடன்கூடிய கடன் திட்டங்கள்

(i) ஆதி திராவிடருக்கான தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (EDP)

ஆதி திராவிட மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆதி திராவிடர் பயன் பெறும் வகையில் அவர்களது கல்வித் தகுதியை கருத்தில்கொள்ளாமல், பல்வேறு தொழில்களுக்கு நிதியுதவி திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம்

2021 செப்டம்பர் 8]

இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தனி நபர் மற்றும் குழுக்கள் பயன் பெறலாம்.

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டு 5,026 பயனாளிகளுக்கு ரூ.65.96 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(ii) பழங்குடியினருக்கான தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (EDP)

இத்திட்டத்தின் வாயிலாகப் பழங்குடியினர் தங்களது பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் பொருட்டு, வருமானம் ஈட்டக்கூடிய தொழில் புரிய மானியம் வழங்கப்படுகிறது. திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது ரூ.3.75 இலட்சம் இவற்றுள் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டு 373 பயனாளிகளுக்கு ரூ.8.24 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(iii) ஆதி திராவிட தொழில்முனைவோர் சிறப்புத் திட்டம்— பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கான நிதியுதவி

பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கும் இச்சிறப்புத் திட்டம் 2012-13 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆதி திராவிட மக்கள், 'அ' மற்றும் 'ஆ' வகைப்பாட்டில் (A & B Category) பெட்ரோல்/ டீசல்/எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைக்க எண்ணெய் நிறுவனங்களின் முகவர்களாக செயல்பட விண்ணப்பிக்கும்பொழுதே தேவையான நிலம் வாங்குவதற்கும், வங்கி உத்தரவாதத்திற்குத் தேவையான வைப்புத் தொகைக்காகவும் நிதியுதவி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. முகவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பின் நடப்பு மூலதனத்திற்காக (Working Capital) நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், எண்ணெய் நிறுவனத்தால் தெரிவு செய்யப்படும் முன்பும் அல்லது தெரிவு செய்யப்படும்பொழுதும் ஆதி திராவிட மக்கள் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[*2021 செப்டம்பர் 8*

(iv) ஆதி திராவிட இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

படித்த, வேலையற்ற 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட ஆதி திராவிட இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த / விருப்பமான சுய தொழில் துவங்க இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டு 1,432 பயனாளிகளுக்கு ரூ.22.43 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(v) பழங்குடியின இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தில் ஓட்டுனர் உரிமம் மற்றும் பேட்ஜ் வைத்துள்ள பழங்குடியின இளைஞர்களுக்குப் பயணியர் வாகனம் / ஈப்பு வாங்கிட திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்ச மானியம் ரூ.4.00 இலட்சம் வரையும், கனரக வாகனத்திற்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.5.50 இலட்சம் வரையும், இதர தொழில்களுக்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம் வரையும் மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டு 13 பயனாளிகளுக்கு ரூ.46.64 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(vi) ஆதி திராவிட இளைஞர்களுக்கான சிறப்பு சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மருத்துவம் (MBBS), *பல் மருத்துவம்* (BDS), *சித்த மருத்துவம்* (BSMS), *ஆயுர்வேத மருத்துவம்* (BAMS) *இயற்கை மருத்துவம் மற்றும் யோகா* (BNYS) *ஆகிய படிப்புகளில் பட்டம் பெற்றவர்கள், சொந்தமாக மருத்துவ சிகிச்சை/ ஆய்வகம் மருந்தகம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் முடநீக்கு வல்லுநர், மருந்தாளுநர், கண்ணாடி வினைஞர்* (optician) *மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர் முதலிய மருத்துவம் சார்ந்த படிப்புகளில் தகுதி பெற்றுள்ளவர்களுக்கு சொந்தமாக மருத்துவ சிகிச்சை மையம் / கண் கண்ணாடி கடை / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கும், விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் உரிய மன்றத்தில் பதிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.*

2021 செப்டம்பர் 8]

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டு 18 பயனாளிகளுக்கு ரூ.32.87 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(vii) ஆதி திராவிட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், ஆதி திராவிட சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களது பொருளாதார ஆளுமையை மேம்படுத்திடும் பொருட்டு, அவர்கள் வருமானம் ஈட்டத்தக்க தொழிலில் முதலீடு செய்வதற்காக குறைந்த வட்டியுடன்கூடிய நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்ட ஆதி திராவிடர் சுய உதவிக் குழுக்கள் தங்களது வருமானம் ஈட்டக்கூடிய தொழிலினை செய்வதற்காக கடன் வழங்கப்படுகிறது. தங்களுக்குத் தெரிந்த வருமானம் ஈட்டக்கூடிய தொழில் அல்லது வணிக நிறுவனத்தினை துவங்குவதற்காக ஒவ்வொரு குழுவிற்கும் திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.50 இலட்சம் இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டு 6,160 உறுப்பினர்கள் கொண்ட 496 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.12.38 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(viii) பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடன்

பழங்குடியின மகளிரை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்ட, இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்கள், வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களான கைவினைப் பொருட்கள் செய்தல், தோட்டக்கலை, பூந்தோட்டக்கலை, சுற்றுலாத் தலங்களில் சிற்றுண்டிக் கடைகள் அமைத்தல், சுற்றுலா மற்றும் உபசரிப்பு சார்ந்த தொழில்கள் செய்ய இத்திட்டத்தின்கீழ் திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் மானியமாக விடுவிக்கப்படுகிறது.

(ix) நில மேம்பாட்டுத் திட்டம்

ஆழ்துளைக் கிணறு அமைத்தல் / திறந்தவெளிக் கிணறுகள், விசைக் கிணறுகள், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் சுழற்சி முறை பாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசன வசதிகளுக்காக வங்கிமூலம்

மானியத்துடன்கூடிய கடனுதவிகள் வழங்குவதன் அடிப்படையில் நிலப்பயன்பாட்டினை அதிகரிப்பதும், வருமானம் ஈட்ட வழி செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து ஆதி திராவிட மற்றும் பழங்குடியின இனத்தைச் சேர்ந்த நில உரிமையாளர்கள் பயன்பெற வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டு 50 பயனாளிகளுக்கு ரூ.65.09 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(x) நிலம் வாங்கும் திட்டம்

நிலவுடைமை சமூக நிலை உயர்வினை காட்டும் அளவுகோல் என்பதால், ஆதி திராவிட மகளிரின் நிலவுடைமையினை அதிகரிக்கவும், அவர்களின் பெயரிலேயே நிலம் வாங்கிட வழிவகுக்கும் சிறப்புத் திட்டம் மாநில அரசால் 2004-2005 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தில் ஆதி திராவிட மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மகளிர் இல்லாத குடும்பங்களில் ஆண்களுக்கு இவ்வுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- நிலம் ஆதி திராவிடர் பயனாளி பெயரில் பதிவு செய்யப்படுகிறது.
- இத்திட்டத்தின்கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- ஆதி திராவிடர் அல்லாத பிற இனத்தவரிடமிருந்து நிலம் வாங்கப்பட வேண்டும்.

2.1. ஆ. முழு மானிய உதவித் திட்டங்கள்

வருமானம் ஈட்டும் தொழில்களுக்கு கடன் மற்றும் மானிய உதவி வழங்குவதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-1 முதன்மை தேர்வு எழுதுவோருக்கும் மற்றும் இந்திய குடிமைப் பணி தேர்வு எழுதுவோருக்கும் நிதி உதவி, இளம் சட்டப் பட்டதாரிகள் மற்றும்

2021 செப்டம்பர் 8]

பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர் சுயமாக தொழில் புரிய ஆதி திராவிடர் இளைஞர்களுக்கும், வேறு எந்த திட்டங்களிலும் உதவிபெறாத மற்றும் மானியம் பெற தகுதியுடையவர் என கருதும் நபர்களுக்கும் 100 விழுக்காடு மானிய உதவியினை தாட்கோ வழங்குகிறது.

(i) இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி

இந்திய குடிமைப் பணி முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆதி திராவிட இளைஞர்கள் முதன்மைத் தேர்விற்கு தங்களைத் தயார்படுத்திக்கொள்ள (Main Examinations) ரூ.50,000/– நிதி உதவி வழங்கப்படுகிறது.

(ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-1 முதன்மைத் தேர்வு எழுதுவதற்கு நிதியுதவி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் மாநில குடிமைப் பணிகள் தொகுதி-1 தேர்வில் முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வு எழுதும் ஆதி திராவிடர்/பழங்குடியின இளைஞர்களுக்கு ரூ.50,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது.

(iii) இளம் சட்டப் பட்டதாரிகளுக்கு சுயமாக தொழில் செய்வதற்காக நிதியுதவி

தமிழ்நாடு சட்டப் பல்கலைக்கழகம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம் மற்றும் சட்டப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற சட்டக் கல்லூரிகளில் முறையான பாடத்திட்டத்தில் பயின்ற, 23 முதல் 45 வயதிற்குட்பட்ட இந்திய பார் கவுன்சில் அல்லது மாநில பார் கவுன்சிலில் பதிவு பெற்ற ஆதி திராவிட சட்டப் பட்டதாரிகள் சுயமாகத் தொழில் துவங்க இத்திட்டத்தின்கீழ் ஒரு முறை நிதியுதவியாக ரூ.50,000/– வழங்கப்படுகிறது.

(iv) பட்டயக் கணக்கர்/செலவுக் கணக்கர் சுயமாகத் தொழில் புரிய நிதி உதவி

ஆதி திராவிடர் இனத்தை சார்ந்த பட்டயக் கணக்கர்/செலவுக் கணக்கர் சுயமாகத் தொழில் செய்வதை ஊக்குவிப்பதற்காக ரூ.50,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது.

[2021 செப்டம்பர் 8

2.1 (இ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கான துரித மின் இணைப்பு மானிய உதவித் திட்டம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற்றிட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வைப்புத் தொகை செலுத்தும் இத்திட்டம் 2008-2009 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த வைப்புத் தொகை ரூ.10,000/-ல் இருந்து 2016-2017 ஆம் ஆண்டு முதல் ரூ.75,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டு ரூ.61.58 இலட்சம் வைப்பீடு செய்யப்பட்டு 95 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2.2 திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களை வேலைவாய்ப்பிற்கு தகுந்தவர்களாக உருவாக்கிடவும், வேலை போட்டிகளுக்கேற்ப அவர்கள் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையிலும், பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் / தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள்மூலம் அளிக்கப்படுகின்றன. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு / சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திட இப்பயிற்சிகள் ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டத்தின் 10 விழுக்காடு நிதியினைக் கொண்டும், விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியின் மூலமும் வழங்கப்படுகின்றன.

தாட்கோமூலம் நடத்தப்படும் முக்கியமான பயிற்சிகள்

- ஆயத்த ஆடை வடிவமைத்தல், வீட்டு அலங்கார பொருட்கள் வடிவமைத்தல் தொடர்பான பயிற்சிகள்
- தானியங்கி மற்றும் தொடர்புடைய பயிற்சிகள்
- வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுத் துறை தொடர்பான பயிற்சிகள்
- அழகு மற்றும் ஆரோக்கியம் தொடர்பான பயிற்சிகள்

2021 செப்டம்பர் 8]

- மின்னணு மற்றும் வன்பொருள் தொடர்பான பயிற்சிகள்
- மருத்துவச் சேவைகள் தொடர்பான பயிற்சிகள்
- தோல் தொழில்நுட்பம் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்
- சரக்கு வாகனப் போக்குவரத்து தொடர்பான பயிற்சிகள்
- ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான பயிற்சிகள்
- குழாய் செப்பனிடுதல் மற்றும் அதன் தொடர்புடைய பணிகள்
- மின்சாரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்
- சில்லறை வணிகம் மற்றும் தொடர்புடைய பயிற்சிகள்

2013-2014 முதல் 2020-2021 வரை 43,046 இளைஞர்களுக்கு 349 நிறுவனங்கள்மூலம் ரூ.62.84 கோடி மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

2.3. கட்டுமானப் பணிகள்

தாட்கோ நிறுவனத்தின் கட்டுமானப் பிரிவு, இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளின் கட்டுமானப் பணிகளையும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக நவீன சமுதாயக் கூடங்கள் கட்டும் பணியினையும் மேற்கொண்டு வருகிறது. ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துதல் முதலிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தாட்கோ கட்டுமானப் பிரிவுமூலம் தற்போது பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.380.64 கோடி மதிப்பிலான 502 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2021 செப்டம்பர் 8

(i) ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகள்

ஆதி திராவிட / பழங்குடியின மாணவ, மாணவியருக்கு பாபு ஜெகஜீவன் ராம் சத்ரவாஸ் யோஜனா திட்டம்மூலம் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ii) மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள்

நிலை உயர்த்தப்பட்ட ஆதி திராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டுதல், விடுதிகள், சுற்றுச்சுவர் மற்றும் நவீன சமுதாயக் கூடங்கள் கட்டுதல், சிறப்பு பழுது பார்க்கும் பணி மற்றும் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின்கீழ் கல்வராயன் மலையில் அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மாநில அரசின் நிதியுதவியின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(iii) நபார்டு திட்டப் பணிகள்:

(ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் நலனுக்காக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்களுக்கு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் கட்டுதல், அடிப்படை வசதிகளான சுற்றுச்சுவர், குடிநீர் வசதி, கழிவறைக் கூடம் ஆகியவற்றை ஏற்படுத்துதல் மற்றும் தொடர்புடைய பணிகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2021 செப்டம்பர் 8]

IV. நலக் குழுக்கள்

1. மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) விதிகள் 1995 மற்றும் திருத்த விதிகள், 2016, விதி 16(1)-ன்படி மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும். அதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு அமைச்சர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு 20.07.2021 அன்று திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு ஆண்டுக்கு குறைந்தபட்சம் இரு முறை கூடி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) விதிகள் 1989 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) திருத்த சட்டம், 2015, ஆகியவற்றின் செயலாக்கம் மற்றும் இச்சட்டத்தின்கீழ பதியப்பட்டுள்ள வழக்குகள் குறித்து ஆய்வு செய்வதோடு, வன்கொடுமைக்கு ஆளானோருக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள் மற்றும் இச்சட்டத்தைச் செயல்படுத்தும் பல்வேறு அலுவலர்கள் / அமைப்புகளின் பணி / பங்கு குறித்தும் ஆய்வு செய்கிறது.

இக்குழுவின் கூட்டம் 19.08.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையில் நடைபெற்றது.

2. மாநில ஆதி திராவிடர் நலக் குழு

ஆதி திராவிட மக்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் முறையாக அம்மக்களுக்கு சென்றடைவதைக் கண்காணிக்கவும் மற்றும் ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் தலைமையில் மாநில ஆதி திராவிடர் நலக் குழு கடந்த 1995 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவில் 3 அலுவல் சார்ந்த உறுப்பினர்களோடு சட்டமன்ற உறுப்பினர்கள் 24 பேரும், கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் 6 நபர்களும் என மொத்தம் 30 அலுவல் சாரா உறுப்பினர்கள் உள்ளனர். ஆதி திராவிடர் நல ஆணையர் அவர்கள் இக்குழுவின் உறுப்பினர்-செயலராக உள்ளார்.

3. தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்

தமிழ்நாட்டில் வாழும் பழங்குடியினரின் நலன் மற்றும் அவர்களது முன்னேற்றத்திற்கு ஆலோசனை வழங்கும்விதமாக

[2021 செப்டம்பர் 8

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் விதி எண் 4(1)-ன்படி பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் 1961 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இம்மன்றத்தின் தலைவராக மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் உறுப்பினர்-செயலராக பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களும் உள்ளனர். இம்மன்றத்தில் 3 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 15 அலுவல் சாரா உறுப்பினர்களும், 2 பழங்குடியினத்தைச் சாராத உறுப்பினர்களும் சேர்த்து 20 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இம்மன்றத்தின் பதவிக்காலம் 3 ஆண்டுகள் ஆகும். ஆண்டுக்கு குறைந்தபட்சம் இரு முறை இம்மன்றத்தின் கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

V. நல வாரியங்கள்

1. புதிரை வண்ணார் நல வாரியம்

ஆதி திராவிட இனத்தின் உட்பிரிவுகளில் ஒன்றான புதிரை வண்ணார் சமுதாயத்தின் சமூக, பொருளாதார கல்வி மேம்பாட்டிற்கென மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 2009 ஆம் ஆண்டு புதிரை வண்ணார் நல வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 12 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆதி திராவிடர் நல ஆணையர் இவ்வாரியத்தின் உறுப்பினர்-செயலராக உள்ளார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்கிட 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ரூ.1.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

2. தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்

தூய்மைப் பணிபுரிவோரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து, அவற்றின் முன்னேற்றத்தை உறுதி செய்திடும் பொருட்டு மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 2007 ஆம் ஆண்டு 'தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்' அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் ஒரு உப தலைவர், 13 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 14 அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தாட்கோ மேலாண்மை இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்-செயலராக உள்ளார்.

2021 செப்டம்பர் 8]

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்கிட 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை ரூ.3.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

3. பழங்குடியினர் நல வாரியம்

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென பழங்குடியினர் நல வாரியம் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு 2007 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 8 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும் 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். பழங்குடியினர் நல இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்-செயலராக உள்ளார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்க 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

VI. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு 2021-2022 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூ. கோடியில்)

வ. எண்	அலுவலகங்கள்	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
1	தலைமைச் செயலகம்	9.64	0.00	0.40	10.04
2	ஆதி திராவிடர் நலத் துறை	3385.39	203.49	0.00	3588.88
3	பழங்குடியினர் நலத் துறை	342.02	201.40	0.00	543.42
	மொத்தம்	3737.05	404.89	0.40	4142.34

இணைப்பு IV

(256 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 25-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

I. முன்னுரை

மாநிலம் முழுவதும் ஒருங்கிணைந்த போக்குவரத்து அமைப்பை உருவாக்குவதில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. நமது போக்குவரத்து அமைப்பில் சாலைப் போக்குவரத்து ஒரு முக்கிய அங்கமாகும். தமிழ்நாட்டில் வாகனங்களின் பெருக்கம் மிகப் பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. குடிமக்கள் மற்றும் வாகன உரிமையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து அனைவருக்கும் திறமையான மற்றும் வெளிப்படையான சேவைகளை வழங்குவதில் போக்குவரத்துத் துறை முழுமையான முயற்சியை மேற்கொண்டு வருகிறது. நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய செயலாக்கம் மற்றும் ஒழுங்குமுறையை பயன்படுத்தி அனைவருக்கும் பாதுகாப்பான சாலையைப் பயன்படுத்துவதில் உரிய பங்கினை அளிப்பதற்கு உறுதி அளிக்கப்படுகிறது.

2. போக்குவரத்துத் துறையின் பங்கு மற்றும் பணிகள்

போக்குவரத்துத் துறை, 1974 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டம் மற்றும் விதிகள், 1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம், 1989 ஆம் ஆண்டின் மத்திய மோட்டார் வாகன விதிகள் மற்றும் 1989 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளின்கீழ் கடமைகளையும் மற்றும் பொறுப்புகளையும் செயல்படுத்துகிறது.

இத்துறையின் முதன்மையான கடமைகள் / பொறுப்புகள் மற்றும் நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) ஓட்டுநர் மற்றும் நடத்துநர் உரிமங்கள் வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் மேற்குறிப்பு செய்தல்

2021 செப்டம்பர் 8]

(ii) ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் ஆய்வு செய்தல்

(iii) வாகனங்களைப் பதிவு செய்தல், வாகனங்களை மறுபதிவு செய்தல், வாகனங்களின் பதிவுச் சான்றிதழைப் புதுப்பித்தல், வாகனங்களின் உரிமம் மாற்றம் செய்தல், தவணைக் கொள்முதல் மேற்குறிப்பு செய்தல் மற்றும் தவணைக் கொள்முதல் ரத்து செய்தல்

(iv) வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்

(v) அனைத்து போக்குவரத்து வாகனங்களுக்கும் அனுமதிச் சீட்டு வழங்குதல், அனுமதிச் சீட்டில் உரிமம் மாற்றம் செய்தல் மற்றும் வாகன மாற்றம் செய்தல்

(vi) போக்குவரத்து வாகனங்களுக்கு தற்காலிக அனுமதிச்சீட்டு வழங்குதல்

(vii) மோட்டார் வாகனங்களுக்கு வரி மற்றும் கட்டணங்களை வசூலித்தல்

(viii) விபத்துக்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்தல்

(ix) மோட்டார் வாகன சட்டங்கள் மற்றும் விதிகளின்படி சாலையில் வாகனங்களை ஆய்வு செய்ய செயலாக்கப் பணி மேற்கொள்ளுதல்

(x) சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல்

(xi) புகை பரிசோதனை மையங்களை நிறுவுவதற்கான உரிமங்களை வழங்குதல்

(xii) மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து ஒப்பந்தங்களை ஏற்படுத்தி மாநிலங்களுக்கிடையே வாகனங்களை இயக்கச் செய்தல்

(xiii) பிற மாநிலங்களிலிருந்து சோதனைச் சாவடிகளில் நுழையும் வாகனங்களுக்கு தற்காலிக அனுமதிச் சீட்டு வழங்குதல்

3. நிருவாக அமைப்பு

போக்குவரத்து ஆணையர் போக்குவரத்துத் துறைக்கு தலைவராக செயல்படுவதுடன், மாநில போக்குவரத்து

[2021 செப்டம்பர் 8

அதிகாரியாகவும், சாலைப் பாதுகாப்பு ஆணையராகவும் செயல்படுகிறார். தலைமையகத்தில் போக்குவரத்து ஆணையருக்கு உதவியாக ஒரு கூடுதல் போக்குவரத்து ஆணையர், மூன்று இணைப் போக்குவரத்து ஆணையர்கள் மற்றும் மூன்று துணைப் போக்குவரத்து ஆணையர்கள் உள்ளனர். களப்பணியில் அவருக்கு உதவியாக நான்கு இணைப் போக்குவரத்து ஆணையர்கள் சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலும் இரண்டு செயலாக்க இணைப் போக்குவரத்து ஆணையர்கள் சென்னை மற்றும் ஸ்ரீரங்கத்தில் உள்ளனர்.

மாநிலப் போக்குவரத்து அதிகாரியின் பணிகளும் அதிகாரங்களும் பின்வருமாறு:-

1) மாநிலத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளின் செயல்களை ஒருங்கிணைத்தல்

2) அரசால் பரிந்துரைக்கப்படும் எந்த ஒரு பணிகளையும் நிறைவேற்றுவது

3) வட்டாரப் போக்குவரத்து அதிகாரி இல்லாத இடங்களில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாக செயல்படுதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்

4) கருத்து வேறுபாடுகளுக்கும் மற்றும் இதர தர்க்கங்களுக்கும் தீர்வு காணல்

போக்குவரத்துத் துறை, 12 சரக அலுவலகங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு சரகமும் இணைப் போக்குவரத்து ஆணையர்/ துணைப் போக்குவரத்து ஆணையர் தலைமையில் இயங்கி வருகிறது. சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு சரக அலுவலகங்கள் இணைப் போக்குவரத்து ஆணையர்களின் தலைமையில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள ஈரோடு, தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, சேலம், விழுப்புரம், விருதுநகர் மற்றும் வேலூர் ஆகிய எட்டு சரக அலுவலகங்கள் துணைப் போக்குவரத்து ஆணையர்களின் தலைமையில் இயங்கி வருகின்றன. மாநிலத்தில், 89 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 56 பகுதி அலுவலகங்கள் மற்றும் 21 சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. மேற்கூறிய விவரங்கள் பிற்சேர்க்கை-I-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2021 செப்டம்பர் 8]

1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டின் மத்திய மோட்டார் வாகன விதிகளின்படி, அந்தந்த மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சியர்கள் மண்டலப் போக்குவரத்து அதிகாரியாக செயல்பட்டு வருகின்றனர். ஆனால், சென்னையை பொறுத்தமட்டில் சென்னை (வடக்கு) மற்றும் சென்னை (தெற்கு) இணைப் போக்குவரத்து ஆணையர்கள், மண்டல போக்குவரத்து அதிகாரியாக செயல்பட்டு வருகின்றனர். மாவட்டத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், மண்டல போக்குவரத்து அதிகாரியின் செயலாளர்களாக செயல்பட்டு வருகின்றனர்.

மாநிலப் போக்குவரத்து அதிகாரி மற்றும் மண்டலப் போக்குவரத்து அதிகாரிகள் பிறப்பித்த உத்தரவுகளுக்கு மேல்முறையீடுகள் செய்யும் தீர்ப்பாயமாக சென்னையில் உள்ள மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் செயல்படுகிறது. செயலர், மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் மற்றும் துறைப் பிரதிநிதி என்ற பதவிகளின் பெயரில், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பணி நிலையில் உள்ள இரண்டு அதிகாரிகள் மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் பணிபுரிந்து வருகின்றனர். போக்குவரத்துத் துறையில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் விவரங்கள் பிற்சேர்க்கை-II-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

4. வாகனங்களின் பெருக்கம்

மோட்டார் வாகனங்கள் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் என இரண்டு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. வாடகை மற்றும் வெகுமதிக்காகவும், சரக்குகள் மற்றும் பயணிகளின் போக்குவரத்திற்காகவும் பயன்படுத்தப்படும் வாகனங்கள் போக்குவரத்து வாகனங்களாகும். அவை, ஆட்டோ ரிக்ஷா, சுற்றுலாச் சீருந்து, மேக்ஸிகேப், நிலைப் பேருந்து, சரக்கு வாகனம், ஆம்னி பேருந்து, பள்ளிப் பேருந்து மற்றும் தனியார் சேவை வாகனங்களாகும். வணிகப் பயன்பாட்டிற்கு அல்லாமல் சொந்த பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் இருசக்கர வாகனங்கள் (மோட்டார் சைக்கிள் / ஸ்கூட்டர்), இலகுரக வாகனங்கள் (சீருந்து / மூன்று சக்கர வாகனங்கள்) மற்றும் மாற்றுத் திறனாளிகள் இயக்கும் வாகனங்கள் (எந்தவொரு உடல் குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட நபரின் பயன்பாட்டிற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட

வாகனங்கள்) போன்றவை போக்குவரத்து அல்லாத வாகனங்கள் ஆகும்.

போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகன வகைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெருக்கம் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை-III முதல் VI வரை கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கையில், போக்குவரத்து வாகனங்கள் 4.25 விழுக்காடும், போக்குவரத்து அல்லாத வாகனங்கள் 95.75 விழுக்காடும் ஆகும். இரண்டு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை 261.45 இலட்சமாகும். இது தமிழ்நாட்டிலுள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கையில் 84.49 விழுக்காடு ஆகும்.

5. ஓட்டுநர் உரிமம் வழங்குதல்

ஓட்டுநர் உரிமம் பெற விரும்பும் விண்ணப்பதாரர் முதலில் பழகுநர் ஓட்டுநர் உரிமம் பெற வேண்டும். 18 வயது நிரம்பியவர்கள் பழகுநர் ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு நேரிடையாகவோ அல்லது ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி மூலமாகவோ https://sarathi.parivahan.gov.in/ என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும். தேவையான விவரங்களைப் பூர்த்தி செய்தபின் வயதிற்கான சான்றிதழ், இருப்பிடத்திற்கான சான்றிதழ் மற்றும் பிற தேவையான ஆவணங்களை பதிவேற்றம் செய்து உரிய கட்டணத்தை இணையதளம் மூலமாக செலுத்த வேண்டும். பிறகு விண்ணப்பதாரர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் / பகுதி அலுவலகம் வரும் நேரத்தை ஆன்லைன்மூலம் பதிவு செய்து கொள்ளலாம். மோட்டார் வாகன ஆய்வாளர்கள் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து ஒப்புதல் அளித்த பிறகு இணையத்திலிருந்து கணினிமயமாக்கப்பட்ட பழகுநர் உரிமத்தை எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறு பெறப்பட்ட பழகுநர் உரிமம் ஆறு மாதங்களுக்கு தகுதியுடையதாகும். 2020-2021 ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்ட பழகுநர் உரிமங்களின் எண்ணிக்கை 12.26 இலட்சமாகும்.

பழகுநர் உரிமம் பெற்ற நபர்கள், 1989 ஆம் ஆண்டின் மத்திய மோட்டார் வாகன விதி 15-ன்படி ஓட்டுநர் தேர்வில் கலந்துகொள்ள, பழகுநர் உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்கு பின்னர் மற்றும் ஆறு மாத காலத்திற்குள் நிரந்தர ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். 2020-2021 ஆம்

2021 செப்டம்பர் 8]

நிதியாண்டில் 8.37 இலட்சம் எண்ணிக்கையிலான புதிய ஓட்டுநர் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் 31.03.2021 வரை வழங்கப்பட்டுள்ள மொத்த ஓட்டுநர் உரிமங்களின் எண்ணிக்கை 2.03 கோடியாகும்.

6. வாகனங்களை பதிவு செய்தல்

ஒவ்வொரு மோட்டார் வாகனமும் எந்தவொரு பொதுச்சாலையில் பயன்படுத்துவதற்கு முன்பு மோட்டார் வாகனச் சட்டம், 1988 சட்டப் பிரிவு 39-ன்கீழ் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பதிவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு வாகனத்திற்கும் நிரந்தர பதிவு எண் வழங்கப்படும். போக்குவரத்து வாகனங்களுக்கு நிரந்தர பதிவெண் பலகை மஞ்சள் நிறத்திலும் போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு நிரந்தர பதிவெண் பலகை வெள்ளை நிறத்திலும் மின்சார வாகனங்களுக்கு நிரந்தர பதிவெண் பலகை பச்சை நிறத்திலும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2020-2021-ஆம் நிதி ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த பதிவுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 14.77 இலட்சமாகும். போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு வழங்கப்படும் பதிவுச் சான்றிதழ், பதிவு செய்த நாளிலிருந்து 15 வருடங்களுக்கு தகுதியுடையதாக இருக்கும். அதன்பிறகு ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் பதிவுச் சான்றிதழ் மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

(அ) தமிழ்நாட்டில் மின்- வாகனங்கள் தமிழ்நாடு மின்சார வாகன கொள்கை, 2019

புகை மற்றும் மாசு இல்லாத நல்ல சுற்றுப்புற சூழலை உருவாக்குவதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசு பேட்டரியால் இயக்கப்படும் அனைத்து போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கும் (மின் வாகனங்கள்) 03.11.2020 முதல் 31.12.2022 வரையிலான காலத்திற்கு 100 சதவீதம் மோட்டார் வாகன வரி கட்டுவதிலிருந்து விலக்கு அளித்துள்ளது. 2020-ஆம் ஆண்டில் 3010 போக்குவரத்து வாகனங்களும் மற்றும் 8927 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் (மின் வாகனங்கள்) பதிவு செய்யப்படுள்ளன.

[2021 செப்டம்பர் 8

அட்டவணை-1

2020-2021 ஆம் நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட மின்-வாகனங்ளின் எண்ணிக்கை

வ. எண்	வாகன வகை	மின் வாகனங்கள்	பெட்ரோல் ஹைபிரிட்	டீசல் ஹைபிரிட்
1.	போக்குவரத்து வாகனங்கள்	3010	0	0
2.	போக்குவரத்து அல்லாத வாகனங்கள்	8927	12039	18
	மொத்தம்	11937	12039	18

7. தகுதிச் சான்றிதழ் வழங்குதல்

வாகனங்களின் தகுதிச் சான்றிதழ்கள் செல்லத்தக்கதாக இருந்தால் மட்டுமே அவ்வாகனங்களின் பதிவு நடப்பில் உள்ளதாக கருதப்படும். தகுதிச் சான்றிதழ் பெறுவதற்கு இணையதளம் மூலமாக விண்ணப்பித்து, தேவையான அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றம் செய்த பின்னர், மோட்டார் வாகனச் சட்டம், 1988 சட்டப்பிரிவு 56 மற்றும் மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989 விதி 62-ன்கீழ் தகுதிச் சான்றிதழ் பெறுவதற்கு வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர்கள் சோதனை செய்யும் பொருட்டு நேரிடையாக கொண்டு செல்ல வேண்டும்.

போக்குவரத்து வாகனங்களைப் பொறுத்தமட்டில், ஆரம்ப பதிவு செய்யப்பட்டது முதல் 8 ஆண்டுகள் வரை 2 ஆண்டுகளுக்கொரு முறையும், ஆரம்பப் பதிவு செய்யப்பட்டு 8 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வாகனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. 2020-2021 ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 7.31 இலட்சமாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2021 செப்டம்பர் 8]

8. உள் கட்டமைப்பு மற்றும் சேவைகளின் திறன் மேம்படுத்துதல்

(அ) அலுவலக உள்கட்டமைப்பு (நிலம் மற்றும் கட்டடம்)

இத்துறையில் 180 அலுவலகங்கள் இயங்குகின்றன. அவற்றில் 114 அலுவலகங்கள் அதாவது 12 சரக அலுவலகங்கள், 62 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 25 பகுதி அலுவலகங்கள் மற்றும் 15 சோதனைச் சாவடிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 9 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 15 பகுதி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கென அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போக்குவரத்து ஆணையரகத்திற்கு கிண்டியில் புதிய கட்டடம் கட்டுவதற்கென ரூ.36.00 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து அலுவலகங்களிலும் காத்திருப்போர் அறையில் போதுமான இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், சாலைப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து விதிகளின் முக்கியத்துவத்தை பொதுமக்களுக்கு கற்பிப்பதற்காக மல்டிமீடியா ப்ரொஜெக்டர் மற்றும் காட்சிபலகைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்துறையில் உள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், பகுதி அலுவலகங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளிலும் சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

(ஆ) ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி

திருவள்ளூர் மாவட்டம் தேசிய நெடுஞ்சாலை எண் 5-லுள்ள பெத்திக்குப்பத்தில் ஒருங்கிணைந்த நவீனமயமாக்கப்பட்ட சோதனைச்சாவடி (உள் வருகை மற்றும் வெளி செல்லுகை) 20.06.2018 முதல் பயன்பாட்டிலுள்ளது. இந்த ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி ரூ.136.00 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. இந்த ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியில் போக்குவரத்து, வருவாய், கால்நடை பராமரிப்பு, உணவு மற்றும் நுகர்வோர் உற்பத்தி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் காவல் துறைகள் உள்ளன.

[2021 செப்டம்பர் 8

(இ) ஓட்டுநர் தேர்வுதளங்கள்

ஓட்டுநர் உரிம விண்ணப்பதாரர்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்குமுன் அவர்களின் ஓட்டுநர் திறனை திறம்பட சோதனை செய்வதற்கு ஓட்டுநர் தேர்வுதளங்கள் அவசியமாகிறது. தற்போது 41 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 9 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களில் சொந்த ஓட்டுநர் தேர்வுதளங்கள் உள்ளன. மேலும், இந்த ஓட்டுநர் தேர்வுதளங்களின் அருகாமையில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் (பகுதி அலுவலகங்கள்) இந்த ஓட்டுநர் தேர்வு தளங்களை உபயோகித்துக்கொள்கின்றன. மிக விரைவில் மற்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் ஓட்டுநர் தேர்வுத்தளங்கள் படிப்படியாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஈ) செயலாக்கப் பிரிவு

1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் அதன்கீழ் வகுக்கப்பட்ட விதிகளை செயலாக்கம் செய்வது இத்துறையின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். போக்குவரத்துத் துறையில் 13 செயலாக்கப் பிரிவுகள், மண்டல அலுவலகங்களுடன் கூடிய செயலாக்கப் பிரிவுகள் சென்னை மற்றும் ஸ்ரீரங்கம் ஆகிய இரண்டு இடங்களில் உள்ளன. இவை இணைப் போக்குவரத்து ஆணையர்கள் (செயலாக்கம்) தலைமையில் இயங்கி வருகிறது. மண்டல அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ள ஒவ்வொரு செயலாக்கப் பிரிவிலும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மற்றும் அவரின்கீழ் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். மேலும், செயலாக்கப் பணிகளை வலுப்படுத்துவதற்காக ஒரு மோட்டார் வாகன ஆய்வாளர் அடங்கிய 15 செயலாக்கப் பிரிவுகள், 15 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் 2016 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

செயலாக்கப் பணியாளர்கள்மூலம் 2020-2021 ஆம் நிதியாண்டில் 5.06 இலட்சம் வாகனங்கள் தணிக்கை செய்யப்பட்டு அவற்றில் 0.93 இலட்சம் வாகனங்களுக்கு சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் வரியாக ரூ.5.70 கோடியும், இணக்கக் கட்டணமாக ரூ.9.70 கோடியும் வசூலிக்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

(உ) இ-சலான் செயலி

இ-சலான் என்பது சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தினரால் உருவாக்கப்பட்ட ஒரு செயலியாகும். செயலாக்கப் பணியாளர்கள் பாய்ன்ட் ஆப் சேல் (POS) கருவிமூலம் அபராதங்களை இணையதளத்திலேயே வசூலிக்கிறார்கள்.

(ஊ) பள்ளிப் பேருந்துகளின் இயக்கங்களை ஒழுங்குபடுத்துதல்

மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை கருத்தில் கொண்டும் மற்றும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதலின்படியும் பள்ளிப் பேருந்துகளில் பயணம் செய்யும் மாணவ மாணவியர்களின் பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (பள்ளிப் பேருந்துகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சிறப்பு விதிகள், 2012 வெளியிடப்பட்டுள்ளது.

9. உயர் பாதுகாப்பு பதிவெண் பலகை

இந்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையால் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் GSR No.1162(E) நாள் 04.12.2018-ன்படி, 01.04.2019 முதல் புதியதாக பதிவு செய்யப்படும் அனைத்து வாகனங்களுக்கும் வாகனங்களை வாடிக்கையாளருக்கு டெலிவரி செய்வதற்கு முன்பாகவே உயர்பாதுகாப்பு பதிவெண் பலகை பொருத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

10. வருவாய் ஈட்டுதல்

மாநில அரசின் முக்கிய வருவாய் ஈட்டும் துறைகளில் போக்குவரத்துத் துறையும் ஒன்றாகும். இவ்வருவாயில் கட்டணம், வரிகள், உபரி வரிகள், பசுமை வரிகள், சாலைப் பாதுகாப்பு வரி, இணக்கக் கட்டணம், அபராதங்கள் மற்றும் சேவை வரிகள் ஆகியன அடங்கும். 2020-2021 ஆம் நிதியாண்டில் இத்துறையினால் ஈட்டப்பட்ட மொத்த வருவாய் ரூ.4561.17 கோடி ஆகும். வரிகள், கட்டணங்கள் மற்றும் இணக்கக் கட்டணங்கள் வசூலித்தல்மூலம் கடந்த ஐந்தாண்டுகளில் இத்துறை ஈட்டிய மொத்த வருவாய் விவரங்கள் பிற்சேர்க்கை-VII முதல் IX வரை கொடுக்கப்பட்டுள்ளன.

[2021 செப்டம்பர் 8

11. மின்ஆளுமை நடவடிக்கைகள்

(அ) மின் ஆளுமை

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் குடிமக்களுக்கு தரமான சேவை வழங்கவும் மற்றும் பணிச்சூழலின் தரத்தை மேம்படுத்தவும் போக்குவரத்துத் துறை தொடர்ந்து பாடுபடுகிறது. அனைத்து சேவைகளையும் (G2C அரசால் குடிமக்களுக்கும் மற்றும் G2B அரசால் வணிகங்களுக்கும்) இணையதளம் வாயிலாக வழங்குவதே இத்துறையின் முக்கிய குறிக்கோளாகும். "வாகன்" இணையதள முகவரி (https://vahan.parivahan.gov.in/vahan/) மூலம் வாகனங்கள் தொடர்பான பதிவுச் சான்றிதழ், தகுதிச் சான்றிதழ், வரிகள் மற்றும் கட்டணங்கள் வசூலித்தல், பெயர் மாற்றம், தவணைக் கொள்முதல், முகவரி மாற்றம் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதேபோல், "சாரதி" இணையதளமுகவரி (https://sarathi.parivahan.gov.in) மூலம் ஓட்டுநர் உரிமங்கள் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் செயலியின்மூலம் குடிமக்களுக்கு விரைவான, வெளிப்படையான மற்றும் திறமையான சேவைகள் வழங்கப்படுகின்றன.

இந்த மென்பொருள் சேவைதளத்தைப் பயன்படுத்தி குடிமக்கள் எந்தவொரு இடத்திலிருந்தும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் எந்தவொரு சேவைக்கும் விண்ணப்பிக்கலாம்.

(ஆ) தேசிய பதிவேடு

வாகனப் பதிவுகள் மற்றும் ஓட்டுநர் உரிமங்கள் அடங்கிய தேசிய பதிவேட்டில் தரவுகள் அனைத்தும் நேரடியாக புதுடில்லியில் உள்ள மத்திய கிளவுட் சர்வரில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. அனைத்து அலுவலகங்களிலும் வலைதள அடிப்படையிலான "சாரதி" மற்றும் "வாகன்" மென்பொருள் பயன்படுத்துவதன்மூலம் போலியான பதிவுகள் தவிர்க்கப்படுகின்றன. மேலும் விவரங்களை சரியாகவும் மற்றும் விரைவாகவும் பெறுவதற்கு உதவுகிறது.

(இ) வலைதள அடிப்படையிலான ஓட்டுநர் உரிமங்கள் / பதிவுச் சான்றிதழ்கள் நடைமுறைப்படுத்துதல் விரைவூக்க அட்டை (Smart Card) மூலம் பதிவு சான்றிதழ்கள் மற்றும் ஓட்டுநர் உரிமங்கள் வழங்குதல்வ வலைதள அடிப்படையிலான "சாரதி" மற்றும் "வாகன்" மென்பொருள் மாநிலத்திலுள்ள அனைத்து போக்குவரத்து

2021 செப்டம்பர் 8]

அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து ஓட்டுநர் உரிமங்களும் பதிவு சான்றிதழ்களும் விரைவூக்க அட்டைமூலம் வழங்கும் திட்டம் கடந்த 22.01.2019 முதல் அனைத்து போக்குவரத்து அலுவலகங்களிலும் நடைமுறையிலுள்ளது.

(ஈ) இணையதளம் வாயிலாக வரி மற்றும் கட்டணம் செலுத்துதல்

இணையதளம் https://tnsta.gov.in வாயிலாக வரி மற்றும் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. இணையதளம் வாயிலாக வரி மற்றும் கட்டணம் செலுத்துவதன்மூலம் அலுவலகங்களில் தேவையற்ற நெரிசல் குறைவதுடன், பணம் செலுத்துவதற்கு குடிமக்களுக்கு எளிதான முறையாக உள்ளது. 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.4352.29 கோடி இணையதளம் வாயிலாக வசூலிக்கப்பட்டுள்ளது. இது மொத்த வருவாயில், அதாவது ரூ.4561.17 கோடியில் 95.42 சதவீதம் ஆகும்.

(உ) தகுதிச் சான்றிதழ் செயலி

தகுதிச் சான்றிதழ் செயலிமூலம் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்குகிறார்கள். மோட்டார் வாகன ஆய்வாளர்கள் வாகனத்தை ஆய்வு செய்த பின்னர், இந்த செயலியைப் பயன்படுத்தி டேப்லெட்மூலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக வளாகத்தில் அந்த வாகனத்தை எல்லா கோணத்திலும் புகைப்படம் எடுத்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்வார்கள். இதனால் வாகனங்கள் ஆய்விற்காக வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு கொண்டு வரப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

12. போக்குவரத்து வசதியை மேம்படுத்துதல்: மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து ஒப்பந்தங்கள்

அண்டை மாநிலங்களுக்கிடையே வாகனங்களின் இயக்கத்தை ஒழுங்குபடுத்துவதற்காக மோட்டார் வாகனச் சட்டம், 1988-பிரிவு 88(5) மற்றும் 88(6)-ன்கீழ் அண்டை மாநிலங்களுடன் போக்குவரத்து ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

[2021 செப்டம்பர் 8

அண்டை மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து ஒப்பந்தங்கள் பின்வருமாறு:

அட்டவணை-2

வ. எண்	அண்டை மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து ஒப்பந்தங்கள்	முதன்மை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு	துணை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு
1.	கர்நாடகம்	1973	1973, 1975, 2005, 2008
2.	கேரளா	1976	1979, 1984, 1995, 1999, 2008, 2019
3.	ஆந்திரப் பிரதேசம்	1975	1976, 1993, 1994
4.	புதுச்சேரி	1985	2011

13. வேகக் கட்டுப்பாட்டுக் கருவி

சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, போக்குவரத்து வாகனங்களில் அதிவேகத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகளைப் பொருத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளர்கள் தகுதிச் சான்றிதழ் வழங்கும்போது வேகக் கட்டுப்பாட்டுக் கருவி இயங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

14. வாகன இருப்பிட கண்காணிப்பு சாதனம் (Vehicle Location Tracking Device)

"நிர்பயா" சம்பவத்திற்குப் பிறகு மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை, மத்திய மோட்டார் வாகன விதி, 1989-ல் அறிவிக்கை எண் GSR1095 (E) விதி எண் 125 H-ன்படி, அனைத்து பொது சேவை வாகனங்களுக்கும் அவசர பொத்தான்களுடன் கூடிய வாகன இருப்பிட கண்காணிப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும். இக்கருவியின்மூலம் வாகனங்களின் இயக்கத்தை கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறை (command and control room) மூலம் கண்காணிக்க முடியும்.

2021 செப்டம்பர் 8]

15. சாலைப் பாதுகாப்பு

சாலை உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து கொண்டே செல்வதால் பாதசாரிகள், சைக்கிள் ஓட்டுபவர்கள், பயணிகள் மற்றும் இதர வாகன ஓட்டுநர்கள் ஆகியோருக்கு சாலை மிகவும் பாதுகாப்பாக அமைய வேண்டும் என உறுதி செய்வது மிகவும் கடினமான பணிகளில் ஒன்றாகும். சாலை விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் உயிர் இழப்புகள் ஆகியவற்றைத் தடுப்பதே அரசின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். சாலை விபத்துகளில் பாதிப்பு அடைந்தவர்களுக்கு தனிப்பட்ட முறையில் இழப்பு ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் அரசிற்கும் இழப்பை ஏற்படுத்துகிறது. தமிழ்நாடு அரசு சாலை விபத்துகளைக் குறைத்து சாலைப் பாதுகாப்பினை மேம்படுத்த அனைத்து உபயோகிப்பாளர் துறைகளான காவல், நெடுஞ்சாலை, சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளின் பங்களிப்போடுகூடிய சாலைப் பாதுகாப்பு கொள்கை ஒன்றினை உருவாக்கியுள்ளது.

(அ) மாநில சாலைப் பாதுகாப்பு மன்றம்

1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம், பிரிவு 215(2)-ன்கீழ் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், 20 நபர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு மாநில சாலைப் பாதுகாப்பு மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மன்றம் சாலைப் பாதுகாப்பு தொடர்பாக அரசிற்கு கொள்கை அளவில் ஆலோசனைகள் வழங்கும் ஒரு உயர்நிலை அமைப்பு ஆகும்.

(ஆ) தமிழ்நாடு சாலைப் பாதுகாப்பு இயக்கம்

தமிழ்நாடு சாலைப் பாதுகாப்பு இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:-

1) *தீவிரமான முறையில் திறம்பட்ட மற்றும் தரம்வாய்ந்த சாலைப்பாதுகாப்பு குறித்த வரையறை செய்யப்பட்ட விதிகளை உருவாக்குதல்.*

2) *சாலைப் பாதுகாப்பை வலுவாகவும் மற்றும் பலம்வாய்ந்ததாகவும் கொண்ட ஒரு தகவல் மேலாண்மை மையம் ஏற்படுத்துதல்.*

3) *சாலைப் பாதுகாப்பு உயர்நிலை மையம்.*

[2021 செப்டம்பர் 8

4) சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்துகளைத் தடுப்பது தொடர்பாக விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல்.

5) தரவு பகுப்பாய்வுகளின் அடிப்படையில் 108 ஆம்புலன்ஸ்களின் நிறுத்தப்பட வேண்டிய நிலைகளை மேம்படுத்துதல்.

6) பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் சாலைப் பாதுகாப்பு பற்றிய பாடத்திட்டங்களை சேர்த்தல்.

7) விபத்துக்கள் நடந்த இடங்களைப் பகுப்பாய்வு செய்தல்.

8) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை நவீனப்படுத்துதல்.

(இ) மாவட்ட சாலைப் பாதுகாப்பு குழு

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும் மேலும் 13 நபர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட சாலைப் பாதுகாப்பு குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது மாதம் ஒரு முறை கூடி கீழ்க்கண்ட பொருள்களை ஆய்வு செய்ய வேண்டும்.

1) சாலை விபத்துக்கள் குறித்த தரவுகளை பகுப்பாய்வு செய்தல்.

2) சாலை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் அவற்றின் தரத்தை மேம்படுத்துதல்.

3) சாலைத் தளவாடங்கள், தேவையான வழிகாட்டி பலகைகள், புதிய திட்டங்கள் கட்டுமானம் மற்றும் வடிவமைப்பு ஆகியவற்றை ஆய்வு செய்தல்.

4) சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.

5) தலைக்கவசம் மற்றும் இருக்கைப் பட்டை (சீட் பெல்ட்) அணிவது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

6) சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்படுத்துதல்.

7) சென்னை நகருக்கென்று தனியாக காவல் துறை ஆணையரை தலைவராகவும் மற்றும் பதினெட்டு உறுப்பினர்களையும் கொண்டு சென்னை பெருநகர மாவட்ட சாலைப் பாதுகாப்பு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

அனைத்து மாவட்ட ஆட்சியர்களைக் கொண்டு ஒவ்வொரு மாதமும், மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தை நடத்தி சாலைப் பாதுகாப்பு குறித்த பணிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. மேற்கூறிய கூட்டத்தில் எடுத்த முக்கிய முடிவுகள் போக்குவரத்து ஆணையர் / சாலைப்பாதுகாப்பு ஆணையர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழு வழிகாட்டுதலின்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் சாலை விபத்து மற்றும் உயிரிழப்புகளை வெகுவாகக் குறைக்கும் பொருட்டு சீரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளதால், சாலை விபத்துகளைக் குறைப்பதற்கான இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய இலக்குகள் குறித்து போக்குவரத்து ஆணையர் ஆய்வு செய்ததன் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு 10,525 ஆக இருந்த சாலை விபத்து உயிரிழப்புகள் 2020 ஆம் ஆண்டில் 8,060 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு 2020 ஆம் ஆண்டிற்குள் சாலை விபத்துக்கள் 50 விழுக்காடு குறைக்கப்பட வேண்டுமென உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழு அனைத்து மாநில அரசுகளையும் அறிவுறுத்தியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழு நிர்ணயித்த இலக்கினைக் காட்டிலும் அதிகமாக, அதாவது 53.19 விழுக்காடு சாலை விபத்து உயிரிழப்புகள் குறைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை-3

2016 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு
விபத்துகளின் ஒப்பீடு அட்டவணை

ஆண்டு	மொத்த விபத்துக் கள்	2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு சதவீதம்	உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துக்கள்	2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு சதவீதம்	உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை	2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு சதவீதம்
2016	71431		16092		17218	
2020	45489	-36.32	7560	-53.02	8060	-53.19

[2021 செப்டம்பர் 8

உச்ச நீதிமன்ற ஆணையின்படி அமைக்கப்பட்ட உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழு அனைத்து மாநில அரசுகளும் எடுத்த நடவடிக்கைகளை முறையாக ஆய்வு செய்து வருகிறது. சாலை விபத்துகளைக் குறைக்கும் பொருட்டு கீழ்க்கண்ட ஆறு போக்குவரத்து விதிமீறல்கள் குறித்து அதிகக் கவனம் செலுத்துமாறு அனைத்து மாநில அரசுகளுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

1) அதிவேகம்

2) அதிக பாரம் ஏற்றுதல்

3) சரக்கு வாகனங்களில் ஆட்களை ஏற்றிச் செல்லுதல்

4) சிவப்பு விளக்கை தாண்டுதல்

5) குடிபோதையில் வாகனத்தை இயக்குதல்

6) வாகனம் ஓட்டும்போது கைபேசி உபயோகித்தல்

மேற்கூறிய போக்குவரத்து விதிமீறல்களை ஆய்வு செய்து அனைத்து மாநில அரசுகளுக்கும் தகுந்த அறிவுரைகளை அவ்வப்போது வழங்கி வருகிறது. மேற்கூறிய விதிமீறல்கள் குறித்து ஓட்டுநர் உரிமங்களை தற்காலிக தடை அல்லது நிரந்தர தடை செய்வது குறித்து காலாண்டு அறிக்கையினை மாநில அரசுகள் உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழுவிற்கு அனுப்பி வருகின்றன. மேலும், 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை தற்காலிகமாக தடை செய்யப்பட்ட ஓட்டுநர் உரிமங்கள் தொடர்பான விவரங்கள் பிற்சேர்க்கை–XIII-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) சாலைப் பாதுகாப்பு நிதி

மாநில அரசு சாலைப் பாதுகாப்பு நிதியினை ஆண்டுதோறும் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுமூலம் வழங்கி வருகிறது. இந்நிதியானது, போக்குவரத்துத் துறை மற்றும் காவல் துறைமூலம் விதிக்கப்படும் உடனடி அபராதம் மற்றும் இணக்கக் கட்டணம் மூலமாக பெறப்படும் தொகையிலிருந்து சாலைப் பாதுகாப்பு திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்நிதியினை உள் துறை செயலாளரை தலைவராகவும் மற்றும் எட்டு உறுப்பினர்களை கொண்ட குழு நிர்வகித்து வருகிறது. அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் இதர பயன்பாட்டுத் துறைகள் மூலமாக வரப்பெற்ற செயற்குறிப்புகளின்

2021 செப்டம்பர் 8]

அடிப்படையில் இந்நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. 13.03.2018 ஆம் நாளிட்ட உள்(போ.வ.5) துறை, அரசாணை (நிலை) எண் 198-ல் இச்சாலைப் பாதுகாப்பு நிதியானது, ஒவ்வொரு நிதியாண்டிற்கு பின்னரும் நீட்டித்து பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டு முதல் 2021-2022 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டும் சாலைப் பாதுகாப்பு நிதிக்கு அரசு ரூ.65.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(உ) முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி

சாலை விபத்துகளில் இறந்தவர்களின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள் மற்றும் அவ்விபத்துகளில் கொடுங்காயம்/ சிறுகாயம் அடைந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு 03.07.1978 ஆம் நாளிட்ட உள் (போக்குவரத்து-4) துறை, அரசாணை (நிலை) எண் 1530-ல் முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதி, தமிழ்நாட்டிற்குள் இயக்கப்படும் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து இயக்கப்படும் அரசு பேருந்துகளில் ஏற்படும் விபத்துகளில் காயமடைந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நிவாரண நிதி தொடர்பான விவரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை-4

வ. எண்	விபத்தின் தன்மை	2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு வரும் நிதி அளவு (ரூபாயில்)
1.	இறப்பு	1,00,000/-
2.	நிரந்தர செயலிழப்பு	50,000/-
3.	கொடுங்காயம்	50,000/-
4.	ஒரு கண் அல்லது ஒரு உறுப்பு அதாவது ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு	30,000/-
5.	இதர சிறுகாயங்கள்	10,000/-

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2021 செப்டம்பர் 8

முதலமைச்சர் விபத்து நிவாரண நிதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் விவரங்கள் பின்வருமாறு:-

அட்டவணை-5

வ. எண்	ஆண்டு	ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)
1.	2011 –2012	9.99
2.	2012 – 2013	10
3.	2013 – 2014	20
4.	2014 – 2015	40
5.	2015 – 2016	70
6.	2016 – 2017	50
7.	2017 – 2018	80
8.	2018 – 2019	80
9.	2019 – 2020	100
10.	2020 – 2021	100
11.	2021 – 2022	100

(ஊ) சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு

சாலைப் பாதுகாப்பு பிரச்சாரங்கள் அனைத்தும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு நடத்தப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் சனவரி மாதம் முதல் வாரத்தில் சாலைப்பாதுகாப்பு வாரம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. 2021 ஆம் ஆண்டில் சாலைப்பாதுகாப்பு மாதம் 18.01.2021 முதல் 17.02.2021 வரை கடைபிடிக்கப்பட வேண்டுமென மத்திய தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தால் ரூ.105.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தமிழக அரசால் அனைத்து மாவட்டங்களுக்கும் ரூ.185.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. (ஒவ்வொரு மாவட்டத்திற்கும்

2021 செப்டம்பர் 8]

ரூ.5.00 இலட்சம் வீதம்) கூடுதலாக அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் ரூ.87.00 இலட்சம் (ரூ.1.00 இலட்சம் வீதம்) சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த வழங்கப்பட்டது.

இது தவிர அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், சுற்றுலா சீருந்து, மேக்சிகேப் ஓட்டுநர்களுக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மூலமாக சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(எ) ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவுதளம்

மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம், 31-வது தேசிய சாலைப்பாதுகாப்பு வார விழா நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவுதளம் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்தது.

இத்திட்டமானது சாலை விபத்துகளை மின்னணு முறையில் பதிவு செய்ய ஏதுவாக கைப்பேசி செயலிமூலம் தரவுகளை பதிவேற்றம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. விபத்து நடைபெற்ற இடங்களில் நேரடியாக சென்று புகைப்படங்கள் மற்றும் விபத்து குறித்த இதர விவரங்களை கைப்பேசி செயலிமூலம் பதிவேற்றம் செய்வதால் விபத்து குறித்த விசாரணை மிகத் துல்லியமாக அமையப் பெறும். தற்போது நடைமுறையில் உள்ள சாலை விபத்து தகவல் மேலாண்மைத் திட்டமானது, உலக வங்கியின் நிதியுதவியுடன் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவுதளம் மேற்கூறிய RADMS என்ற திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட வடிவமாகும். இத்திட்டம் இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை மற்றும் தேசிய தகவல் மையம் ஆகியவற்றுடன் இணைந்து வடிவமைக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம், 15.3.2021 ஆம் நாள் முதல் தமிழ்நாடு முழுவதும் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின் சார்புடைய பிற துறைகளான காவல், போக்குவரத்து, நெடுஞ்சாலை மற்றும் சுகாதாரத் துறைப் பணியாளர்களுக்கு இத்திட்டத்தினைக் கையாளும் பொருட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஏ) சிறந்த மாநில விருது

தொடர்ந்து இரு ஆண்டுகளாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் சாலை விபத்துகளை பெருமளவு குறைத்தமைக்காக இந்திய அரசின் தரைவழி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தால் சிறந்த செயல்பாட்டிற்கான விருது தமிழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஐ) பள்ளிப் பாடத்திட்டத்தில் சாலைப் பாதுகாப்பு

சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வுகளை மாணவர்களுக்கு இளம் வயதிலேயே ஏற்படுத்தும் பொருட்டு சாலைப்பாதுகாப்பு குறித்த பொருண்மை பள்ளிப் பாடத்திட்டத்தில் முதல் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை சேர்க்கப்பட்டுள்ளது.

(ஒ) சாலைப் பாதுகாப்பு மன்றம்

பள்ளி மாணவர்களிடையே சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு, அடிப்படை போக்குவரத்து விதிகள் குறித்து புரிந்துணர்வு மற்றும் முதலுதவி பயிற்சிகள் ஏற்படுத்தும் பொருட்டு 7,000 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சாலைப்பாதுகாப்பு மன்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பணிக்காக 2019-2020 ஆம் ஆண்டில் சாலைப்பாதுகாப்பு நிதியிலிருந்து பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ரூ.5.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

(ஓ) சாலைப் பாதுகாப்பு குறித்த முதலமைச்சர் விருது

சாலை விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் இறப்புகளைக் குறைத்ததற்காக, சிறந்த மூன்று மாவட்டங்கள் மற்றும் ஒரு காவல் ஆணையரை தேர்ந்தெடுப்பதற்குத் தேவையான தகுதியை தீர்மானிக்க ஒரு நிர்வாகக் குழுவை அரசு அமைத்துள்ளது. தேர்வுக்கான அளவுகோல்களும் வடிவமைக்கப்பட்டு மூன்று சிறந்த மாவட்டங்கள் மற்றும் ஒரு காவல் ஆணையருக்கு கீழ்க்கண்டவாறு விருது வழங்கப்படுகிறது.

சிறந்த மாவட்டங்களுக்கான கேடயம்	
முதல் பரிசு :	ரூ.25.00 இலட்சம்
இரண்டாவது பரிசு:	ரூ.13.00 இலட்சம்
மூன்றாவது பரிசு:	ரூ.10.00 இலட்சம்
காவல் ஆணையர்	
ரூ.15.00 இலட்சத்துடன்கூடிய கேடயம்	

TRUTH ALONE TRIUMPHS

(ஔ) மனித உயிர்களைக் காப்பாற்றுதல்

சாலை விபத்தில் பாதிக்கப்பட்ட மனித உயிர்களை காப்பாற்றும் பொருட்டு அவசர விபத்து சிகிச்சை மையங்கள் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் 50 கி.மீ. இடைவெளியில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்களின் முக்கிய நோக்கம் விபத்துகளில் சிக்கியவர்களை மிகக் குறைவான நேரத்தில் (பொன்னான நேரம்) உரிய சிகிச்சைக்காக அருகாமையில் உள்ள மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்வது ஆகும். 2002 ஆம் ஆண்டில் 100 மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. தற்போது 1,303 ஆம்புலன்ஸ்கள் (108 ஆம்புலன்ஸ்கள்) முக்கியமான இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டதன்மூலம் பல மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டு வருகிறது. விபத்து விவரங்கள் பிற்சேர்க்கை–X–XII-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

16. முடிவுரை

போக்குவரத்துத் துறை அனைத்து குடிமக்களுக்கும் உரிய சேவைகள் கிடைக்கும் பொருட்டு அயராது பாடுபட்டு வருகிறது. இத்துறை அனைத்து குடிமக்கள் மற்றும் இதர பயன்பாட்டு துறைகளுக்கும் வெளிப்படைத் தன்மை கொண்டு சேவைகளை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. சாலைப் பாதுகாப்பு தரத்தினை மேம்படுத்த இத்துறை அயராது செயல்பட்டு வருகிறது.

சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளைக் குறைக்க குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சாலைப் பாதுகாப்பினை மேம்படுத்த இத்துறை மேலும் அயராது பாடுபடும்.

[2021 செப்டம்பர் 8

பிற்சேர்க்கை - I

போக்குவரத்துத் துறையின்கீழ் செயல்படும் அலுவலகங்களின் விவரம்

வ. எண்	சரக அலுவலகம்	செய-லாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
1.	இ.போ.வ. சென்னை (வடக்கு) வ.போ.அ. -9 வ.போ.அ (செ) 1 ப.அ. -2 சோ.சா-4	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை	1. சென்னை (கிழக்கு)		
			2. சென்னை (மையம்)		
			3. சென்னை (வடக்கு)		
			4. சென்னை (வடமேற்கு)		
			5. சென்னை (வடகிழக்கு)		
			6. திருவள்ளூர்	திருத்தணி	திருத்தணி
					பாலவாக்கம்
			7. செங்குன்றம்	கும்மிடிப் பூண்டி	பெத்திக்-குப்பம்
			8. பூந்தமல்லி		பூந்தமல்லி
			9. அம்பத்தூர்		
			10.வ.போ.அ (செ)		

2021 செப்டம்பர் 8]

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
2.	இ.போ.ஆ சென்னை (தெற்கு) வ.போ.அ. 11 வ.போ.அ (செ)-1 ப.அ. 2	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை	1. சென்னை (தெற்கு)		
			2. சென்னை (மேற்கு)		
			3. சென்னை (தென்மேற்கு)		
			4. சென்னை (தென்கிழக்கு)		
			5. மீனம்பாக்கம்		
			6. குன்றத்தூர்		
			7. தாம்பரம்		
			8. காஞ்சிபுரம்		
			9. செங்கல்பட்டு	மதுராந்தகம்	
				திருக்கழுக்குன்றம்	
			10. சோழிங்கநல்லூர்		
			11. ஸ்ரீபெரும்புதூர்		
			12. வ.போ.அ (செ)		

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	சரக அலுவலகம்	செய-லாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
3.	விழுப்புரம்	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை	1. விழுப்புரம்		
	வ.போ. அ.-8, வ.போ.அ. (செ)-1 ப.அ.-5 சோ.சா-1		2. உளுந்தூர் பேட்டை		
			3..கள்ளக்குறிச்சி		
			4. திண்டிவனம்	செஞ்சி	திருச்சிற்-றம்பலம்
			5. கடலூர்	பண்ருட்டி, நெய்வேலி	
			6. திருவண்ணா-மலை		
			7. சிதம்பரம்	விருத்தாசலம்	
			8. ஆரணி	செய்யாறு	
			9.வ.போ.அ (செ)		
4.	வேலூர்	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை	1. வேலூர்	குடியாத்தம்	சேர்க்காடு
					காட்பாடி
	வ.போ.அ.6 வ.போ.அ (செ)-1 ப.அ.-3 சோ.சா6		2.வாணியம்பாடி	ஆம்பூர்	
			3.திருப்பத்தூர்		
			4. ராணிப் பேட்டை	அரக்கோணம்	
			5. கிருஷ்ணகிரி		காளிக்-கோயில்
			6. ஓசூர்		ஓசூர் (உள் வருகை)
					ஓசூர் (வெளிச் செல்லுதல்) பாகலூர்
			7.வ.போ.அ (செ)		

2021 செப்டம்பர் 8]

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
5.	சேலம் வ.போ.அ. -7, வ.போ.அ. (செ)-1 ப.அ. - 4	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை	1. சேலம் (கிழக்கு)		
			2. சேலம் (மேற்கு)	ஓமலூர்	
			3. ஆத்தூர்	வாழப்பாடி	
			4. சேலம் (தெற்கு)		
			5. சங்ககிரி		
			6. தருமபுரி	அரூர்	
				பாலக்கோடு	
			7. மேட்டூர்		
			8.வ.போ.அ (செ)		
6.	ஈரோடு வ.போ.அ.7, வ.போ.அ (செ)-1 ப.அ. 5 சோ.சா1	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை	1. ஈரோடு (கிழக்கு)		
			2. ஈரோடு (மேற்கு)		
			3. பெருந்துறை		
			4. கோபிச்செட்டி பாளையம்	பவானி	பண்ணாரி
				சத்திய மங்கலம்	
			5. நாமக்கல் (வடக்கு)	ராசிபுரம்	
			6. நாமக்கல் (தெற்கு)	பரமத்தி வேலூர்	
			7. திருச்செங்கோடு	குமார-பாளையம்	
			8.வ.போ.அ (செ)		

[2021 செப்டம்பர் 8

வ. எண்	சரக அலுவலகம்	செய-லாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
7.	கோயம்-புத்தூர் வ.போ.அ.10 வ.போ.அ (செ)-1 ப.அ.-6 சோ.சா-6	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை	1. கோயம்புத்தூர் (தெற்கு)	சூலூர்	கே.ஜி. சாவடி
					(செயலாக்கம்), சென்னை
					கே.ஜி. சாவடி (வெளிச் செல்லுதல்)
			2. கோயம்புத்தூர் (வடக்கு)		
			3. கோயம்புத்தூர் (மையம்)		
			4. கோயம்புத்தூர் (மேற்கு)		
			5. திருப்பூர் (வடக்கு)	அவினாசி	
			6. திருப்பூர் (தெற்கு)	காங்கேயம்	
			7. தாராபுரம்	உடுமலைப் பேட்டை	
			8. பொள்ளாச்சி	வால்பாறை	கோபால புரம்
					வலந்தயா-மரம்
			9. மேட்டுப் பாளையம்		
			10. ஊட்டி	கூடலூர்	தலைகுந்தா கூடலூர்
			11.வ.போ.அ (செ)		வலந்தயா மரம்

வ. எண்	சரக அலுவலகம்	செய-லாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
8.	தஞ்சாவூர் வ.போ.அ.-6, வ.போ.அ. (செ)-1 ப.அ.- 7	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம்	1. தஞ்சாவூர்	பட்டுக்-கோட்டை	
			2. கும்பகோணம்		
			3. திருவாரூர்	மன்னார்குடி	
			4. நாகப்பட்டினம்		
			5. மயிலாடுதுறை	சீர்காழி	
			6. புதுக்கோட்டை	அறந்தாங்கி	
				இலுப்பூர்	
				ஆலங்குடி	
			7. வ.போ.அ (செ)		
9.	திருச்சி வ.போ.அ.-6, வ.போ.அ. (செ)-1 ப.அ.-8	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம்	1. திருச்சி (மேற்கு)	மணப்பாறை	
			2. திருச்சி (கிழக்கு)	திருவெறும்பூர்	
			3. திருவரங்கம்	துறையூர்	
			4. கரூர்	முசிறி	
				லால்குடி	
				குளித்தலை,	
				மண்மங்கலம்	
				அரவக்குறிச்சி	
			5. பெரம்பலூர்		
			6. அரியலூர்		
			7. வ.போ.அ (செ)		

[2021 செப்டம்பர் 8

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
10.	மதுரை வ.போ.அ. -6, வ.போ.அ (செ)-1 ப.அ.-9 சோ.சா-1	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம்	1. மதுரை (வடக்கு)	மேலூர்	
				வாடிப்பட்டி	
			2. மதுரை (தெற்கு)	திருமங்கலம்,	லோயர் கேம்ப்
				உசிலம்பட்டி	
			3. மதுரை (மையம்)		
			4. பெரியகுளம்	உத்தம-பாளையம்	
			5. திண்டுக்கல்	வேடச்சந்தூர்	
				வத்தல குண்டு	
				நத்தம்	
			6. பழநி	ஒட்டன்-சத்திரம்	
			7. வ.போ.அ. (செ)		
11.	விருதுநகர் வ.போ.அ. -5, வ.போ.அ (செ)-1 ப.அ.-3	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம்	1. விருதுநகர்	அருப்புக்-கோட்டை	
			2. சிவகங்கை	காரைக்குடி	
			3. ஸ்ரீவில்லிபுத்தூர்		
			4. ராமநாதபுரம்	பரமக்குடி	
			5. சிவகாசி		
			6. வ.போ.அ (செ)		

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
12.	திருநெல்வேலி வ.போ. அ.-8, ப.அ. 2 சோ.சா-2	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம்	1. திருநெல்வேலி	வள்ளியூர்	புளியரை
				அம்பாசமுத்திரம்	
			2. தென்காசி		
			3. சங்கரன் கோயில்		
			4. தூத்துக்குடி		
			5.மார்த்தாண்டம்		களியக்காவிளை
			6. நாகர்கோவில்		
			7. திருச்செந்தூர்		
			8. கோவில்பட்டி		
மொத்தம் 12		2	89	56	21

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2021 செப்டம்பர் 8

பிற்சேர்க்கை—II

31.03.2021 வரை போக்குவரத்துத் துறையில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் விவரம்

வ. எண்	பதவியின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை
1.	போக்குவரத்து ஆணையர்	1
2.	கூடுதல் போக்குவரத்து ஆணையர்	1
3.	இணைப் போக்குவரத்து ஆணையர்	6
4.	இணைப் போக்குவரத்து ஆணையர் (சாலைப்பாதுகாப்பு)	1
5.	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்)	2
6.	துணைப் போக்குவரத்து ஆணையர்	11
7.	தலைமை கணக்கு அலுவலர்	1
8.	வட்டாரப் போக்குவரத்து அலுவலர் (உதவி செயலர், துறை பிரதிநிதி, உதவி செயலர், மா.போ.மே.தீ உட்பட)	108
9.	கணக்கு அலுவலர்	1
10.	உதவி கணக்கு அலுவலர்	12
11.	உதவி இயக்குநர் (புள்ளியியல்)	1
12.	சட்ட அலுவலர்	1
13.	உதவி இயக்குநர் (உள் தணிக்கை)	1
14.	சாலை பாதுகாப்பு வழிகாட்டு முகமை (துணை இயக்குநர் (போக்குவரத்து) உதவி பொறியாளர்/ உதவி பொறியாளர் / உதவி இயக்குநர்/ காவல் ஆய்வாளர் / கண்காணிப்பாளர்)	5

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2021 செப்டம்பர் 8]

வ. எண்	பதவியின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை
15.	மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I	233
16.	மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை- II	181
17.	நேர்முக உதவியாளர்	118
18.	மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாத)	82
19.	கண்காணிப்பாளர்	244
20.	புள்ளியியல் ஆய்வாளர்	2
21.	உதவியாளர்	624
22.	சுருக்கெழுத்து தட்டச்சர்	26
23.	இளநிலை உதவியாளர்	423
24.	தட்டச்சர்	185
25.	பரிசோதகர்	1
26.	வாசிப்பாளர் (Reader)	1
27.	காசாளர்	14
28.	பதிவுறு எழுத்தர்	148
29.	ஓட்டுநர்	124
30.	அலுவலக உதவியாளர்	349
31.	இரவுக் காவலர்	158
32.	துப்புரவுப் பணியாளர்	19
33.	ஓவியர்	1
	மொத்தம்	3085


பிற்சேர்க்கை-III
வாகனங்களின் விவரம்

நிதி ஆண்டு	போக்கு-வரத்து வாகனங் கள்	போக்குவரத்து அல்லாத வாகனங்கள்		மொத்த வாகனங் கள்	வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு (சதவீதத்தில்)
		இரு சக்கர வாகனங்கள்	பிற வாகனங் கள்		
2006-07	6,08,325	75,03,426	9,91,869	91,03,620	10.73
2007-08	7,06,869	82,60,019	11,02,122	1,00,69,010	10.60
2008-09	7,84,714	90,36,783	12,18,872	1,10,40,369	09.65
2009-10	8,33,948	99,69,598	13,53,415	1,21,56,961	10.11
2010-11	9,28,553	1,12,07,338	15,24,840	1,36,60,731	12.37
2011-12	10,01,025	1,26,59,928	17,07,672	1,53,68,625	12.50
2012-13	10,42,642	1,41,50,373	18,98,753	1,70,91,768	11.21
2013-14	11,34,446	1,55,95,140	20,77,919	1,88,07,505	10.04
2014-15	11,82,700	1,69,91,527	22,44,961	2,04,19,188	08.56
2015-16	12,13,007	1,84,00,635	24,20,138	2,20,33,780	07.91
2016-17	12,34,360	1,99,87,302	26,23,402	2,38,45,064	8.22
2017-18	12,28,259	2,15,86,210	28,47,087	2,56,61,556	7.62
2018-19	12,64,623	2,33,46,216	30,77,346	2,76,88,185	7.90
2019-20	12,99,655	2,49,18,384	32,91,824	2,95,09,863	6.58
2020-21	13,13,661	2,61,45,113	34,86,042	3,09,44,816	4.86

2021 செப்டம்பர் 8]


பிற்சேர்க்கை—IV

வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



பிற்சேர்க்கை–V

வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



2021 செப்டம்பர் 8]

பிற்சேர்க்கை—VI

31.03.2021--ன்படி தமிழ்நாட்டிலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை

போக்குவரத்து வாகனங்கள்		போக்குவரத்து அல்லாத வாகனங்கள்	
பயணிப் பேருந்துகள்		இரு சக்கர வாகனங்கள்	
மாநிலப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்து	20,926	மோட்டார் சைக்கிள்	1,69,08,062
தனியாரால் இயக்கப்படும் பயணிப் பேருந்து	7,662	ஸ்கூட்டர்	36,91,558
மொத்தம்	28,588	மொபெட்	55,45,493
சிற்றுந்து	4,056	மொத்தம்	2,61,45,113
ஒப்பந்த வாகனங்கள்		மோட்டார் கார்	28,95,959
ஆட்டோ ரிக்ஷா	3,03,232		
வாடகை சீருந்து	4,330	ஈப்பு	46,232
சுற்றுலா சீருந்து (மாநில அனுமதி)	1,14,526	டிராக்டர்	3,69,253
சுற்றுலா சீருந்து (தேசிய அனுமதி)	14,367	மூன்று சக்கர ஆட்டோ	4,358
மேக்ஸி கேப் (மாநில அனுமதி)	85,069	மூன்று சக்கர வாகனம்	63,105
மேக்ஸி கேப் (தேசிய அனுமதி)	6,299	நான்கு சக்கர வாகனம்	17,537
ஆம்னி பேருந்து (மாநில அனுமதி)	1,354		
ஆம்னி பேருந்து (தேசிய அனுமதி)	180		
மொத்தம்	5,29,357	ரோடு ரோலர்	2,535
பிற இனங்கள்			
தனியார் சேவை வாகனம்	13,113		
கல்வி நிறுவன பேருந்து	34,628	இதர வாகனங்கள் முதலியன	87,063
அவசர கால ஊர்திகள்	11,871		

போக்குவரத்து வாகனங்கள்		போக்குவரத்து அல்லாத வாகனங்கள்	
பயணிப் பேருந்துகள்		இரு சக்கர வாகனங்கள்	
தீயணைப்பு வாகனம்	*1,699*		
மொத்தம்	*61,311*		
சரக்கு வாகனங்கள்			
சுமையுந்து (மாநில அனுமதி)	*2,71,596*		
சுமையுந்து (தேசிய அனுமதி)	*1,00,653*		
உழுவை, இழுவை வண்டி	*78,025*		
இலகு ரக வாகனம்	*2,24,095*		
தொடர் வண்டி	*15,980*		
மொத்தம்	*6,90,349*		
போக்குவரத்து வாகனங்களின் மொத்த எண்ணிக்கை	*13,13,661*	போக்குவரத்து அல்லாத வாகனங்களின் மொத்த எண்ணிக்கை	*2,96,31,155*
வாகனங்களின் மொத்த எண்ணிக்கை			*3,09,44,816*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிற்சேர்க்கை–VII


வருவாய் வளர்ச்சி

(ரூபாய் கோடியில்)

வருவாய் ஆண்டு	ஆண்டு இலக்கு	மோட்டார் வாகன வரிகள் மற்றும் கட்டணங்கள் வசூல் செய்தது	வசூல் சதவிகிதம்	வளர்ச்சி விகிதம்
2006-07	*1254.16*	*1272.69*	*101.47*	*12.61*
2007-08	*1441.00*	*1494.58*	*103.71*	*17.43*
2008-09	*1726.34*	*1718.81*	*99.56*	*15.05*
2009-10	*1995.00*	*2034.24*	*101.97*	*18.35*
2010-11	*2397.68*	*2666.94*	*111.41*	*31.10*
2011-12	*3235.25*	*3108.95*	*96.10*	*16.57*
2012-13	*4191.43*	*3876.99*	*92.50*	*24.70*
2013-14	*4583.02*	*3677.52*	*80.24*	*-5.14*
2014-15	*4279.53*	*3847.15*	*89.90*	*4.61*
2015-16	*4384.99*	*4234.24*	*96.56*	*10.06*
2016-17	*4733.07*	*4855.14*	*102.58*	*14.66*
2017-18	*5635.22*	*5362.91*	*95.17*	*10.46*
2018-19	*5918.82*	*5572.77*	*94.15*	*3.91*
2019-20	*6018.63*	*5674.54*	*94.28*	*1.83*
2020-21	*4566.46*	*4561.17*	*99.88*	*-19.62*

பிற்சேர்க்கை–VIII

வருவாய் வளர்ச்சி




2021 செப்டம்பர் 8]

பிற்சேர்க்கை–IX

2020-21 -ஆம் ஆண்டின் தலைப்பு வாரியாக வருவாய் வசூல் விவரம்

(ரூபாய் கோடியில்)



[2021 செப்டம்பர் 8

பிற்சேர்க்கை—X


தமிழகத்தில் விபத்துக்கள் விவரம்

ஆண்டு	மொத்த வாகனங்களின் எண்ணிக்கை	மொத்த விபத்துக்கள்	உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துக்கள்	உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை	உயிரிழந்தவர்களின் கடந்த ஆண்டுடன் ஒப்பீடு சதவீதம்
2006	8851672	55145	10055	11009	12.80
2007	9807155	59140	11034	12036	9.33
2008	10789970	60409	11813	12784	6.21
2009	11820613	60794	12727	13746	7.53
2010	13220752	64996	14241	15409	12.10
2011	14861695	65873	14359	15422	0.08
2012	16625653	67757	15072	16175	4.88
2013	18286774	66238	14504	15563	-3.78
2014	19995382	67250	14165	15190	-2.40
2015	21558272	69059	14524	15642	2.98
2016	23354026	71431	16092	17218	10.08
2017	25147056	65562	15061	16157	-6.16
2018	27141431	63920	11375	12216	-24.39
2019	29012556	57228	9813	10525	-13.84
2020	30450289	45489	7560	8060	-23.42

2021 செப்டம்பர் 8]

பிற்சேர்க்கை—XI

மொத்த விபத்துக்களுடன் உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துக்கள் குறித்த ஒப்பீட்டு அட்டவணை



பிற்சேர்க்கை—XII

விபத்துக்களை வாகனங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பீட்டு அட்டவணை

ஆண்டு	தமிழ்நாட்டில் சாலை விபத்துக்கள் விவரம்			மொத்த வாகனங்களின் எண்ணிக்கை (31 டிசம்பர் அன்று நிலவரப்படி)	வாகனங்களுடன் ஒப்பீட்டு விபத்துக்கள் சதவீதம்	வாகனங்களுடன் ஒப்பீட்டு உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துக்கள் சதவீதம்	10000 வாகனங்களுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை
	மொத்த விபத்துக்கள்	உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துக்கள்	உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை				
2005	53878	8844	9760	7966200	0.676	0.111	12
2006	55145	10055	11009	8851672	0.623	0.114	12
2007	59140	11034	12036	9807155	0.603	0.113	12
2008	60409	11813	12784	10789970	0.560	0.109	12
2009	60794	12727	13746	11820613	0.514	0.108	12
2010	64996	14241	15409	13220752	0.492	0.108	12
2011	65873	14359	15422	14861695	0.443	0.097	10
2012	67757	15072	16175	16625653	0.408	0.091	10
2013	66238	14504	15563	18286774	0.362	0.079	9
2014	67250	14165	15190	19995382	0.34	0.07	8
2015	69059	14524	15642	21558272	0.32	0.067	7
2016	71431	16092	17218	23354026	0.31	0.07	7
2017	65562	15061	16157	25147056	0.26	0.06	6
2018	63920	11375	12216	27141431	0.23	0.04	5
2019	57228	9813	10525	29012556	0.20	0.03	4
2020	45489	7560	8060	30450289	0.15	0.02	3

மூலம் எஸ்.சி.ஆர்.பி.

2021 செப்டம்பர் 8]

(i)	10000 வாகனங்களுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை	(உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை * 10000) / வாகனங்களின் எண்ணிக்கை
(ii)	வாகனங்களுடன் ஒப்பீட்டு உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துக்கள் சதவீதம்	(உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துக்கள்* 100) / வாகனங்களின் எண்ணிக்கை
(iii)	வாகனங்களுடன் ஒப்பீட்டு விபத்துக்கள் சதவீதம்	(மொத்த விபத்துக்கள்* 100) / வாகனங்களின் எண்ணிக்கை

பிற்சேர்க்கை–XIII

உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழுவில் குறிப்பிட்டுள்ள குற்றங்களுக்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை ஓட்டுநர் உரிமங்கள் தற்காலிக தடை செய்யப்பட்ட விவரங்கள்

குற்றங்கள்	2017	2018	2019	2020
அதிவேகம்	17615	33263	10151	13373
அதிக பாரம் ஏற்றுதல்	8897	14283	4718	5178
சரக்கு வாகனங்களில் ஆட்களை ஏற்றிச் செல்லுதல்	23486	64949	24321	26393
வாகனம் ஓட்டும்போது கைபேசி உபயோகித்தல்	57158	126181	35834	32067
குடிபோதையில் வாகனத்தை இயக்குதல்	30393	45113	20212	7290
சிவப்பு விளக்கைத் தாண்டுதல்	19145	51363	18297	23893
மொத்தம்	156694	335152	113533	108257

இணைப்பு V

(256 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

அத்தியாயம்-1

1.1 முன்னுரை:

இந்தியாவிலேயே மிகவும் வளர்ச்சியடைந்த மாநிலங்களுள் ஒன்றாக விளங்கும் தமிழ்நாட்டின் வளர்ச்சி, பொதுப் போக்குவரத்து அமைப்பின்மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. மக்களுக்கான சேவை, வேலைவாய்ப்பு, கல்வி, மருத்துவ பராமரிப்பு, சந்தைக்கு செல்லுதல், சமூக மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள், நகரங்கள்/பெருநகரங்கள் போன்றவற்றின் விவசாயப் பொருட்களை விற்பனை செய்தல்/வாங்குதல் ஆகியவற்றிற்கு பொதுப் போக்குவரத்து சேவை புரிகிறது. மேலும், பொதுப் போக்குவரத்து என்பது பொது மக்களின் வசதிக்காக நிர்ணயிக்கப்பட்ட வழித்தடங்களில், ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மக்கள் பயணம் மேற்கொள்வதற்கு உகந்த திறமையான மற்றும் நன்மை பயக்கும் அமைப்பாகத் தொடர்கிறது.

பேருந்து போக்குவரத்து என்பது உள்ளூர், நகர பகுதி, கிராமப் பகுதி, நகரங்களுக்கு இடையே மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான பகுதிகளுக்கு மக்கள் செல்வதற்கு வசதி செய்வதை இலக்காகக் கொண்ட பொதுவான போக்குவரத்து முறையாகும். சிறந்த போக்குவரத்தானது பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முக்கிய ஊக்கமாகவும், வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் காரணமாக அமைகிறது. எனவே, பேருந்து போக்குவரத்து அமைப்பின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு தொலைநோக்குப் பார்வை தேவைப்படுகிறது.

- *பேருந்து போக்குவரத்தானது சூழலுக்கு உகந்த, நம்பகமான, திறமையான, குறைந்த கட்டணம் மற்றும் கடைக்கோடி மக்களுக்கும் பேருந்து வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.*

- *நகரங்கள், கிராமப்புறங்கள், நீண்டதூர பயணங்கள் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து வசதிகளை பொது மக்களுக்கு உறுதிசெய்தல்.*

- *மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயணிக்கக்கூடிய பேருந்துகளை அறிமுகம் செய்தல்.*

2021 செப்டம்பர் 8]

மின்சார பேருந்துகள், அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு மற்றும் திரவநிலை இயற்கை எரிவாயு போன்ற மாற்று எரிபொருளுடன்கூடிய பேருந்துகளை பொது மக்கள் பயணிக்கும் வகையில் வழங்குதல்.

1.2 தமிழ்நாட்டில் பொதுப் போக்குவரத்து

நகரங்கள் மற்றும் கிராமப்புற மக்களின் வேலை, கல்வி, பொழுதுபோக்கு மற்றும் பிற தேவைகளுக்கு திறமையான, பாதுகாப்பான, வசதியான, நம்பகமான, நிலையான மற்றும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கட்டணத்தில் போக்குவரத்து சேவை வழங்குவதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது. மாநிலத்தின் பிற பகுதிகள் நம்பகமான சாலை போக்குவரத்து இணைப்பின்மூலம் ஒன்றுடன் ஒன்று நன்கு இணைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலுள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்களுள் தமிழக அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் முன்னோடியாகத் திகழ்கிறது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின்மூலம் தினமும் சுமார் 1.3142 கோடி பயணிகள் பயணம் மேற்கொண்டனர் மற்றும் அனைத்து வகையான சலுகை கட்டணத்தில் பயணம் செய்பவர்களையும் சேர்த்து சுமார் 1.7 கோடி பயணிகள் 2019-2020 ஆம் ஆண்டில் பயணம் மேற்கொண்டனர். கொரோனா பெருந்தொற்று காரணமாக 2020-2021 ஆம் ஆண்டில் 0.7 கோடியாக தற்காலிகமாகக் குறைந்து, மீண்டும் 2021-2022 ஆம் ஆண்டில் பொதுப் போக்குவரத்தினை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 0.76 கோடியாக (ஜூலை 2021 வரை) உயர்ந்துள்ளது.


தமிழக அரசின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றும் நோக்கத்துடன், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் எதிர்காலத்தில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொதுப் பேருந்து போக்குவரத்தினை மேம்படுத்திட KfW*(ஜெர்மனி மேம்பாட்டு வங்கியின்) நிதியுதவியுடன் மின்சாரப் பேருந்துகளை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.*

பெண்கள் சமூகத்தோடு ஒன்றிணைவதை எளிதாக்கும் நோக்கத்துடன், அனைத்து பெண் பயணிகளுக்கும் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின்மூலம் இயக்கப்படும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் (வெள்ளைப் பலகை) மட்டும் இலவசமாக பயணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்திற்காக தமிழகம் முழுவதும் 7,312 சாதாரண நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டுவருகின்றன. அரசு போக்குவரத்துக்

கழகங்கள் 12.07.2021 முதல் கணக்கெடுப்பு நோக்கங்களுக்காக பூஜ்ஜிய மதிப்பு பயணச்சீட்டுகளை பெண் பயணிகளுக்கு வழங்குகின்றன. 12.07.2021 முதல் 26.08.2021 வரை 1,463.15 இலட்சம் பெண் பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர், இது சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் மொத்த பயணிகளில் சுமார் 60.70% ஆகும்.இந்த இலவச பயண வசதி திருநங்கைகள் 40% மற்றும் அதற்கு மேலுள்ள மாற்றுத்திறனாளிகளின் துணையாளர் ஆகியோருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. திருக்குறளின் நெறிகளை பரப்புவதற்காக தமிழ் புலவர் திருவள்ளுவரின் திருவுருவம், திருக்குறள் மற்றும் திருக்குறளின் விளக்கங்களுடன்கூடிய பலகைகள் 20,557 அரசுப் பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ளன.

1.3 போக்குவரத்துத் துறையின் நிருவாக அமைப்பு

போக்குவரத்துத் துறை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது.



2021 செப்டம்பர் 8]

போக்குவரத்துத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் அலுவல்வழி தலைவராகவும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராகவும் செயல்படுகிறார். மேலும், இத்துறை தென்னக இரயில்வே மற்றும் விமான நிலைய விரிவாக்கத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான முகமை துறையாக செயல்படுகிறது.

அத்தியாயம்-2

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்

2.1 அரசுப் போக்குவரத்து கழகங்களின் பங்களிப்பு

தமிழ்நாட்டில் பொதுப் போக்குவரத்து சேவைகள் அரசுக்கு சொந்தமான எட்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தனியார் பேருந்து சேவைகளின் மூலமாக வழங்கப்படுகின்றன. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் போக்குவரத்துத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகளை உள்ளடக்கிய மண்டல மற்றும் மாவட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்	மண்டலம்	உள்ளடக்கிய மாவட்டங்கள்
1.	மாநகர்போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட்..	சென்னை	சென்னை பெருநகரம்
2.	அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை.	சென்னை	தமிழ்நாடு முழுவதும், கேரளா, கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் புதுச்சேரி
3.	தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட்.	விழுப்புரம்	விழுப்புரம், கள்ளக்குறிச்சி
		வேலூர்	வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர்
		காஞ்சிபுரம்	காஞ்சிபுரம், செங்கல்பட்டு

[2021 செப்டம்பர் 8

வ. எண்	அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்	மண்டலம்	உள்ளடக்கிய மாவட்டங்கள்
	தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட்.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை
		திருவள்ளூர்	திருவள்ளூர்
		கடலூர்	கடலூர்
4.	தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட்.	சேலம்	சேலம் மற்றும் நாமக்கல்
		தருமபுரி	தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி
5.	தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட்.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்
		உதக மண்டலம்	நீலகிரி
		ஈரோடு	ஈரோடு
		திருப்பூர்	திருப்பூர்
6.	தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட்.	கும்பகோணம்	தஞ்சாவூர்
		நாகப்பட்டினம்	நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை
		திருச்சி	திருச்சி, பெரம்பலூர் மற்றும் அரியலூர்
		கரூர்	கரூர்
		காரைக்குடி	சிவகங்கை மற்றும் இராமநாதபுரம்
		புதுக்கோட்டை	புதுக்கோட்டை
7.	தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட்.	மதுரை	மதுரை
		திண்டுக்கல்	திண்டுக்கல் மற்றும் தேனி
		விருதுநகர்	விருதுநகர்

வ. எண்	அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்	மண்டலம்	உள்ளடக்கிய மாவட்டங்கள்
8.	தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட்.	திருநெல்வேலி	திருநெல்வேலி மற்றும் தென்காசி
		தூத்துக்குடி	தூத்துக்குடி
		நாகர்கோயில்	கன்னியாகுமரி

2.2 அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் உள்கட்டமைப்பு

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் உள்கட்டமைப்பு விவரம் 31.07.2021 அன்றுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

வ. எண்	விவரம்	மா.போ.கழகம்	அ.வி.போ. கழகம்	அ.போ.க(விழுப்புரம்)	அ.போ.க (சேலம்)	அ.போ.க (கோயம்புத்தூர்)	அ.போ.க(கும்பகோணம்)	அ.போ.க (மதுரை)	அ.போ.க(திருநெல்வேலி)	மொத்தம்
1.	மண்டலம்	1	1	6	2	4	6	3	3	26
2.	பணிமனைகள்	31	22	60	32	44	60	40	30	319
3.	தொழிற்கூடம்	2	2	3	2	2	4	3	2	20
4.	வாகனஓட்டுநர் பயிற்சிப்பள்ளி	1	1	6	4	2	7	3	2	26
5.	பணியாளர்களின் எண்ணிக்கை	21,199	4,925	20,854	12,239	16,926	20,802	14,320	10,615	1,21,880

2.3 பேருந்து இயக்கங்கள்

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள நகர பேருந்து சேவைகள் வேறுபட்ட கட்டணத்துடன் சாதாரண, விரைவு, குறிப்பிட்ட நிறுத்தப் பேருந்து, சொகுசு மற்றும் குளிர்சாதனப் பேருந்து என வகைப்படுத்தப்பட்டு இயக்கப்படுகின்றன. புறநகரப்

[2021 செப்டம்பர் 8

பேருந்து சேவையானது சாதாரண, சாதாரண சொகுசு / விரைவு, நவீன சொகுசு, அதிநவீன சொகுசு, குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை), அதிநவீன குளிர்சாதனமில்லா சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன், அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் குளிர்சாதனமில்லா இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன், குளிர்சாதன பேருந்து இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன் மற்றும் முதல்தர (Classic)வகைப் பேருந்து கழிப்பறை வசதியுடன் என வகைப்படுத்தப்பட்டு இயக்கப்படுகின்றன. மலைப் பகுதிகளில் இயக்கப்படும் பேருந்துகள் சாதாரண மற்றும் சொகுசு/விரைவு பேருந்துகள் என வகைப்படுத்தப்பட்டு இயக்கப்படுகின்றன.

மாநிலத்தில் உள்ள மொத்த அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் எண்ணிக்கை 20,557 ஆகும், அதில் 10,535 வழித்தடங்களில் 19,290 வரையறுக்கப்பட்ட சேவைகளில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதன் விவரம் 31.07.2021 அன்றுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

அரசு போக்குவரத்துக் கழகங்கள்	நகர்ப்புறம்		புறநகர்/ விரைவு	மலைப்பகுதி	வரையறுக்கப்பட்ட சேவைகள்	மாற்று பேருந்துகள்	மொத்தம்
	சாதாரண/மகளிர் இலவசபயணம்	வரையறுக்கப்பட்ட நிறுத்தங்கள்/விரைவு/ சொகுசு					
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(6)+(7)
மா.போ.க. சென்னை, லிட்.,	1,559	1,674	0	0	3,233	235	3,468
அ.வி.போ.க. தமிழ்நாடு, லிட்.,	0	0	1,082	0	1,082	41	1,123
அ.போ.க. (விழுப்புரம்) லிட்.,	1,065	9	2,063	29	3,166	199	3,365
அ.போ.க. (சேலம்) லிட்.,	813	24	1,038	25	1,900	213	2,113


2021 செப்டம்பர் 8]

அரசு போக்குவரத்துக் கழகங்கள்	நகர்ப்புறம்		புறநகர்/ விரைவு	மலைப்பகுதி	வரையறுக்கப்பட்ட சேவைகள்	மாற்று பேருந்துகள்	மொத்தம்
	சாதாரண/மகளிர் இலவசபயணம்	வரையறுக்கப்பட்ட நிறுத்தங்கள்/விரைவு/சொகுசு					
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(6) + (7)
அ.போ.க (கோவை) லிட்.,	1,141	182	1,055	369	2,747	214	2,961
அ.போ.க. (கும்பகோணம்) லிட்.,	1,257	28	2,050	0	3,335	91	3,426
அ.போ.க. (மதுரை) லிட்.,	890	380	832	64	2,166	162	2,328
அ.போ.க, (திருநெல்வேலி) லிட்.,	587	234	840	0	1,661	112	1,773
மொத்தம்	7,312	2,531	8,960	487	19,290	1,267	20,557

2.4 அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன்

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் குறைந்தபட்சம் 1000 மக்கள்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமங்களுக்கும் பேருந்து வசதி வழங்குகின்றன. இதன்மூலம் நகர்ப்புறங்களில் உள்ள அனைத்து வாழ்விடங்கள், மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்கள் இணைக்கப்படுகின்றன. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின்மூலம் 2019-2020 ஆம் ஆண்டில், தினமும் சுமார் 1.3142 கோடி பயணிகள் பயணம் மேற்கொண்டனர் மற்றும் அனைத்து வகையான சலுகை கட்டணத்தில் பயணம் மேற்கொள்பவர்களையும் சேர்த்து சுமார் 1.7 கோடி பயணிகள் பயணம் மேற்கொண்டனர். கொரோனா பெருந்தொற்று காரணமாக 2020-2021 ஆம் ஆண்டில் 0.7 கோடியாக தற்காலிகமாக குறைந்து மீண்டும் 2021-2022 ஆம் ஆண்டில் முதல் காலாண்டில் குறைந்து, பின் பொதுப் போக்குவரத்தினை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 0.76 கோடியாக (ஜீலை 2021 வரை) உயர்ந்துள்ளது.

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிப்போரின் எண்ணிக்கை 2011 முதல் 2021 வரை குறைந்து வருவதை கீழ்க்கண்ட வரைப்படத்தில் காணலாம்:



இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் குறைந்த கட்டணத்தில், அதிகப்படியான வழித்தடப் பயன்பாட்டில், பேருந்துகளை இயக்கி வருகின்றன. 29.01.2018 முதல் நடைமுறையில் உள்ள கட்டண அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

சேவை வகைகள்	இயக்க வகைகள்	கட்டணம் (தீர்வை தவிர்த்து)
நகரப் பேருந்துகள் (குறைந்தபட்ச கட்டணம்)	சாதாரணம்	ரூ.4
	குறிப்பிட்ட பேருந்து நிறுத்தம்	ரூ .5
	விரைவு	ரூ .6
	சொகுசு	ரூ .10
	இரவு பேருந்து	ரூ .10

2021 செப்டம்பர் 8]

சேவை வகைகள்	இயக்க வகைகள்	கட்டணம் (தீர்வை தவிர்த்து)
புறநகர் பேருந்துகள்	சாதாரணம்	ஒரு கிலோ மீட்டருக்கு 58 பைசா
	சாதாரண சொகுசு	ஒரு கிலோ மீட்டருக்கு 75 பைசா
	விரைவு/ நவீன சொகுசு பேருந்து	ஒரு கிலோ மீட்டருக்கு 85 பைசா
	அதிநவீன சொகுசு	ஒரு கிலோ மீட்டருக்கு 100 பைசா
	அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை)	ஒரு கிலோ மீட்டருக்கு 130 பைசா
	அதிநவீன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன்	ஒரு கிலோ மீட்டருக்கு 155 பைசா
	அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன்	ஒரு கிலோ மீட்டருக்கு 200 பைசா

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2021 செப்டம்பர் 8

அண்டை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான பயணக் கட்டண ஒப்பீடு பின்வருமாறு:—

மாநிலம்	திருத்தியமைக்கப்பட்ட கட்டண நாள்	புறநகர் பேருந்துகள் (ஒருகிலோ மீட்டருக்கு பைசாவில்)									
		சாதாரணம்	சாதாரண சொகுசு	விரைவு/ நவீன சொகுசு பேருந்து	அதிநவீன சொகுசு	அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை)		அதிநவீன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் (குளிர்சாதன வசதியில்லாதது)		அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன்	
						வேலை நாட்கள்	இதர நாட்கள்	வேலை நாட்கள்	இதர நாட்கள்	வேலை நாட்கள்	இதர நாட்கள்
தமிழ்நாடு	29.01.2018	58	75	85	100	130	110	155	135	200	180
ஆந்திர பிரதேசம்	11.12.2019	73	118	—	136	156	156	—	—	220	220
கர்நாடகா	26.02.2020	66	123	—	145	214	—	163	—	240	—

அண்டை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான பயணக் கட்டண விகிதத்தை ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் இயக்கப்படும் நகரப் பேருந்துகளில் 10 கிலோ மீட்டருக்கான கட்டண விகிதம் குறைவாக உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

(ரூபாயில்)

மாநிலம்	சாதாரண பேருந்துகட்டணம்	விரைவு பேருந்துகட்டணம்
தமிழ்நாடு	8.00	12.00
ஆந்திர பிரதேசம்	10.00	15.00
கர்நாடகா	15.00	16.00

2021 செப்டம்பர் 8]

மேலும், அண்டை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான பயணக் கட்டண விகிதத்தை ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் இயக்கப்படும் புறநகரப் பேருந்துகளில் 100 கிலோ மீட்டருக்கான கட்டண விகிதம் குறைவாக உள்ளது அதன் விவரம் பின்வருமாறு:—

(ரூபாயில்)

மாநிலம்	சாதாரண பேருந்து கட்டணம்	விரைவு பேருந்து கட்டணம்	அதிநவீன சொகுசு	குளிர்சாதன பேருந்து கட்டணம்	
				இருக்கை	படுக்கை
தமிழ்நாடு	58.00	75.00	100.00	130.00	200.00
ஆந்திர பிரதேசம்	73.00	118.00	136.00	156.00	220.00
கர்நாடகா	66.00	123.00	145.00	216.00	240.00

2.5 இயக்கச் செயல்பாட்டு திறன் குறியீடுகள்

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இயக்கச் செயல்பாட்டு திறன்குறியீடுகளின் விவரங்கள் பின்வருமாறு:—

பொருள்	2019-2020 (கொரோனாவிற்கு முன்)	2020-2021 (கொரோனா காலங்களில்)	2021-2022 (கொரோனா காலங்களில்) (ஜூலை 2021 வரை)
பேருந்துகளின் எண்ணிக்கை	21513	20670	20557
அட்டவணைப் படுத்தப்பட்ட சேவைகள்	19290	19290	19290
ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ)	83.68	60.25	61.02
எரிபொருள் செயல் திறன் (கி.மீ/ லிட்டருக்கு) சராசரியாக	5.33	5.39	5.35
கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஓடிய தூரம் (இலட்சம் கிலோ மீட்டர்)	2.54	2.77	2.79

பொருள்	2019-2020 (கொரோனாவிற்கு முன்)	2020-2021 (கொரோனா காலங்களில்)	2021-2022 (கொரோனா காலங்களில்) (ஜூலை 2021 வரை)
ஆள் /பேருந்து ஒன்றுக்கு	6.45	6.35	6.31

2.6 அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நிதி செயல்திறன்

டீசல் விலை அடிக்கடி உயர்ந்து வருவதாலும், உதிரி பாகங்களின் விலை உயர்வாலும், ஊதிய ஒப்பந்தத்தாலும் மற்றும் தொழிலாளர்களுக்கான அகவிலைப்படி உயர்வு வழங்குவதாலும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் கூடுதல் செலவினங்கள் ஏற்படுகின்றன. கொரோனா பெருந்தொற்றின் காரணமாக 2019-2020 மற்றும் 2020-2021 ஆகிய ஆண்டுகளில் முழு ஊரடங்கு அமல்படுத்தியதன்மூலம் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பெரும் இழப்பை சந்தித்துள்ளன. பேருந்துகள் 2019-2020 ஆம் ஆண்டில் 8 நாட்களும், 2020-2021 ஆம் ஆண்டில் 141 நாட்களும், 2021-2022 ஆம் ஆண்டில் 42 முதல் 56 நாட்களுக்கு இயக்கப்படாமல் இருந்தன. 2019-2020, 2020-2021 மற்றும் 2021-2022 (ஜூலை வரை) வரையிலான ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நிதி செயல்திறனின் விவரங்கள் பின்வருமாறு:


(ரூபாய் கோடியில்)

வ. எண்	விவரங்கள்	2019-2020 (கொரோனாவிற்கு முன்)	2020-2021 (கொரோனா காலம்) தணிக்கைக்கு முன்	2021-2022 (கொரோனா காலம்) தணிக்கைக்கு முன்
	வருவாய்			
1	இயக்க வருவாய்	8827.39	3517.31	1004.54
	ஒப்பந்த பேருந்து	6.08	59.51	7.78
	கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை விற்ற தொகை	24.04	18.69	1.69
	இயக்கம் அல்லாத ஏனைய வருவாய்	1694.91	1459.18	696.59
	இதர கழிவுகள் விற்பனை	20.10	19.79	0.66
	மொத்த வருவாய்	**10572.52**	**5074.48**	**1711.26**
	செலவு			
2	**மாறுபடும் செலவு**			
	உயர்வேக டீசல் எண்ணெய்	3860.32	1966.85	756.70
	இதர செலவுகள்(மசக்கெண்ணெய், டயர், உதிரி பாகங்கள் மற்றும் இதர)	312.15	123.99	44.21
	மொத்தம்	**4172.47**	**2090.84**	**800.91**
3	**நிலையான செலவு**			
	நிர்வாகச் செலவுகள் (வருங்கால வைப்புநிதி, பங்களிப்பு ஓய்வூதிய திட்டம், பணிக்கொடை மற்றும் இதர செலவுகள்)	8849.63	8235.94	2715.23
	மோட்டார் வாகன வரிகள்	196.45	104.60	53.30
	தேய்மானம்	540.65	634.39	138.61
	வட்டி	1177.65	1871.38	601.30
	இதர செலவுகள் (வருங்கால வைப்பு நிதி இழப்பு, சுங்கவரி, விபத்து இழப்பீடு, பங்களிப்பு ஓய்வூதிய வட்டி)	866.23	121.38	133.57
	மொத்தம்	**11630.61**	**10967.69**	**3642.01**
	மொத்த செலவுகள்	**15803.08**	**13058.53**	**4442.92**
	இழப்பு	**-5230.56**	**-7984.05**	**-2731.66**

[2021 செப்டம்பர் 8

2.7 இயக்கச் செலவினம்

2011 முதல் 2021 வரையிலான ஆண்டிற்கான பல்வேறு செலவினங்களின் விவரங்கள் சதவீதத்தில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.



நிருவாகச் செலவினங்களான சம்பளம், தொழிலாளர் வைப்பு நிதி, கருணைத்தொகை போன்ற செலவினங்கள் தற்பொழுது அதிகரித்துள்ளது, அதேபோல மற்ற செலவுகளின்கீழ் வரும் வட்டிக்கான செலவினங்களும் அதிகரித்துள்ளது. டீசல் விலை மற்றும் பராமரிப்புச் செலவுகள் போன்றவை சந்தை அடிப்படையிலான விலைகள் மற்றும் பயன்பாட்டின் அளவு ஆகியவற்றுடன் தொடர்புடையது, 2020-2021 ஆம் ஆண்டின் கொரோனா ஊரடங்கு காலத்தில் பேருந்துகள் முழுமையாக நிறுத்தப்பட்டதால், மேற்கண்ட இரண்டு அளவீடுகளும் குறைந்துவிட்டன.

2021 செப்டம்பர் 8]

2.8 அரசின் நிதி உதவி

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பேருந்துகளைக் கொள்முதல் செய்தல், மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருதல் மற்றும் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு சட்டரீதியான ஓய்வூதிய நிலுவைத் தொகைகளை வழங்குதல் போன்றவற்றிற்காக பங்கு மூலதன உதவி, கடன்கள், வழிவகை முன்பணம் மற்றும் அரசின் நிதி உதவியின்மூலம் தொடர்ந்து உதவிகளை வழங்கி வருகிறது. மாணவர்கள், மூத்த குடிமக்கள் மற்றும் இதர இலவச பேருந்து கட்டணப் பயண அட்டைதாரர் போன்ற பல்வேறு பிரிவினரால் ஏற்படும் நிதி இழப்பீட்டினை, போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு ஈடு செய்கிறது. அதிவேக டீசலின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதன்மூலம் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் இழப்பினை திரும்பப்பெறவும் அரசு அனுமதித்துள்ளது. 2021-2022-ஆம் நிதியாண்டின் திருத்தப்பட்ட வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், கீழ்க்கண்ட இனங்களுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது:—

(ரூபாய் கோடியில்)

வ. எண்.	பொருள்	திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு 2021-2022
1.	பங்கு மூலதனம்	596.5609
2.	மாணவர்பயணச் சலுகை	1300.000
3.	மகளிர்இலவசபயணச் சலுகை	670.0000
4.	கடன்கள்(KfW)	451.5000
5.	மூத்த குடிமக்கள் பயணச் சலுகை	52.0000
6.	உயர்வேக டீசல்	750.0000

அரசு இந்நிதியாண்டில் (31-07-2021 அன்றுள்ளவாறு), (i) ரூபாய் 649.07 கோடியினை மாணவர் பயணச் சலுகைக்காக அனுமதித்துள்ளது. (ii) மூத்த குடிமக்களுக்கான இலவச பயணச் சலுகை அளித்ததற்கு ரூ.3.57 கோடியினை மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு திருப்பி செலுத்தப்பட்டது. (iii) அதிவேக டீசல் விலை உயர்வினால் ஏற்படும் இழப்பினை ஈடு செய்வதற்காக அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் ரூ.196.4983 கோடியை வழங்கியுள்ளது. (30 ஜுன் 2021 வரை) மேலும், (iv) ரூ.424.47 கோடி பங்கு மூலதனமாக தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

2.9 அரசு உத்தரவாதம்

கொரோனா பெருந்தொற்றை கட்டுப்படுத்துவதற்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக, அரசு போக்குவரத்துக் கழகங்கள் அத்தியாவசிய சேவைகளை தவிர மற்ற சேவைகள் அனைத்தும் நிறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டன. அதன் விளைவாக, அரசு போக்குவரத்துக் கழகங்கள் தற்போது கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன. எனவே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு உதவும் பொருட்டு அவற்றின் செயல்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து கடன் பெறுவதற்காக அரசு உத்தரவாதத்தை வழங்கி வருகின்றது. அவ்வகையில் தற்போது அரசாணை (நிலை) எண் 80, போக்குவரத்து (ட்டி1) துறை, நாள்: 03.08.2021—ன்படி, ஜூன் 2021 முதல் ஆகஸ்ட் 2021 வரையிலான காலங்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் மூலதன செயல்பாட்டு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூ.1,500.81 கோடியினை கடனாகப் பெறுவதற்கு அரசின் உத்தரவாதத்தை வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2.10 பொது சேவைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

அ) புதிய பேருந்து வழித்தடங்கள் அறிமுகம் மற்றும் நிறுத்தப்பட்ட பேருந்து வழித்தடங்களை மீண்டும் இயக்குதல்.

பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையில், வேலைக்குச் செல்வதற்கும், மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கும், சந்தைக்கு செல்வதற்கும், கிராம மக்கள் அண்டை நகரங்களுக்கு செல்வதற்கும் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஒரு சமூக கடமையாக பேருந்துகளை இயக்கி வருகின்றன. பொதுமக்களுக்கு சிறந்த சேவையினை வழங்கும் பொருட்டு தற்போது இயக்கப்பட்டு வரும் வழித்தடங்களை மாற்றம் செய்து புதிய வழித்தடங்களை உருவாக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. 07-05-2021 முதல் 22-08-2021 வரை 54 புதிய வழித்தடங்களில் 70 பேருந்து சேவைகளை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அதேபோன்று, முன்பு நிறுத்தப்பட்ட சில வழித்தடங்களுள் 123 வழித்தடங்களில் 140 பேருந்து சேவைகள் அரசால் மீண்டும் இயக்கப்பட்டு வருகின்றன.

2021 செப்டம்பர் 8]

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்	அறிமுகப்படுத்தப்-பட்டுள்ளபுதிய வழித்தடங்கள் (எண்ணிக்கையில்)		மீண்டும் தொடங்கப்பட்ட வழித்தடங்கள் (எண்ணிக்கையில்)	
	வழித் தடங்கள்	பேருந்து சேவைகள்	வழித் தடங்கள்	பேருந்து சேவைகள்
மா.போ.க சென்னை, லிட்.,	17	25	21	36
அ.வி.போ.க தமிழ்நாடு, லிட்.,	11	20	8	10
அ.போ.க (விழுப்புரம்) லிட்.,	11	10	10	10
அ.போ.க (சேலம்) லிட்.,	0	0	4	6
அ.போ.க (கோயம்புத்தூர்) லிட்.,	2	2	11	11
அ.போ.க (கும்பகோணம்)லிட்.,	11	10	39	34
அ.போ.க (மதுரை) லிட்.,	0	0	22	25
அ.போ.க (திருநெல்வேலி) லிட்.,	2	3	8	8
மொத்தம்	54	70	123	140

ஆ) சென்னையில் சிறிய பேருந்துகள் இயக்கம்

மாநகரப் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட் 210 சிறிய பேருந்துகளைக் கொண்டுள்ளது. இவற்றுள், 66 சிறிய பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன, பயணிகளின் பயன்பாடு குறைந்து அதிக இழப்பு ஏற்பட்டதால் மீதமுள்ள 144 சிறிய பேருந்துகள் இயக்கப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளன. எனவே, நிறுத்தப்பட்டுள்ள இச்சிறிய பேருந்துகளை சிறந்த முறையில் பயன்படுத்திட, பிற பகுதிகளிலிருந்து மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு இயக்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சென்னை மெட்ரோ பயணிகளின் எண்ணிக்கை உயர்வதுடன், மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு வருவாய் அதிகரிக்கும். இதனைச் செயல்படுத்திட மாநகர் போக்குவரத்துக்

[2021 செப்டம்பர் 8

கழகம் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இ) இணையவழி முன்பதிவு

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தொலைதூரப் பயணம் செய்யும் பயணிகளுக்கு உதவும் வகையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் இணையதளமான https://www.tnstc.in மூலம் பயணச்சீட்டு முன்பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2021-2022 ஆண்டில் (ஜூலை 2021 வரை) சராசரியாக இணையவழி முன்பதிவு 76.14% ஆக அதிகரித்துள்ளது.

2.11 கட்டணச் சலுகைகள்

அ) பயணக் கட்டணச் சலுகை வழங்கப்படும் பயனாளிகளின் வகைகள் பின்வருமாறு:—

அ.	நாடாளுமன்ற/சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர்கள்.
ஆ.	பெண் பயணிகள், திருநங்கைகள், 40% மற்றும் அதற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களுடன் வரும் துணையாளர்.
இ.	அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள்/ ஊடக நபர்கள்.
ஈ.	மத்திய / மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள், வாரிசுதாரர்கள், தமிழறிஞர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள்.
உ.	புற்று நோயாளிகள்.
ஊ.	நாடகக் கலைஞர்கள் அவர்கள் கொண்டு வரும் இசைக் கருவிகள்.
எ.	எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயாளிகள்.
ஏ.	மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டை (60 வயதிற்கு மேற்பட்டோர்) - குளிர்சாதன பேருந்துகளை தவிர்த்து சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மட்டும்.

2021 செப்டம்பர் 8]

ஆ) மாணவர்களுக்கான சிறப்புச் சலுகைகள்

பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், பின்வரும் கட்டணமில்லாப் பயணச் சலுகை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) வழங்கப்பட்டு வருகிறது. இச்சலுகைக்கானத் தொகையை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படுகிறது.

(அ)	அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகள் (1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை).
(ஆ)	தேசிய குழந்தை மற்றும் தொழிலாளர் திட்ட நலப் பள்ளி.
(இ)	அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்.
(ஈ)	அரசு தொழிற்பயிற்சிக் கூடங்கள்.
(உ)	அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.
(ஊ)	சமுதாயக் கல்லூரிகள்.
(எ)	அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.
(ஏ)	இசைக் கல்லூரிகள்.
(ஐ)	சென்னை மாநகராட்சித் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

இ) 50% பயணக் கட்டணச் சலுகை

(அ) தனியார் கல்லூரிகள்
(ஆ) தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள்
(இ) தனியார் பொறியியல் கல்லூரிகள்

} அரசு அங்கீகாரம் பெற்றவை

ஈ) விருப்பம் போல் பயணம் செய்ய மாதாந்திரப் பயணச்சீட்டுகள்

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், ஈரோடு, மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளிலுள்ள அரசு நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் மாதாந்திரப் பயணச் சீட்டானது, ஒரு சீட்டுக்கு ரூ.1,000/- கட்டண விகிதத்தில் விருப்பம் போல் பயணம் செய்ய பயணச் சீட்டுகள் சில நிபந்தனைகளுடன் வழங்கப்படுகின்றன.

[2021 செப்டம்பர் 8

உ) மூன்றில் ஒரு பங்கு கட்டணச் சலுகை

மாநகர் மற்றும் நகரப் பகுதிகளில் தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக நடைமுறையில் இருந்து வரும் மூன்றில் ஒரு பங்கு பயணக் கட்டணச் சலுகையானது புறநகர் பேருந்துகளுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் பயணிகளிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது

2.12 பணியாளர் நல நடவடிக்கைகள்

அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி.

அரசுப் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தினை செயல்படுத்த, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சியானது ஒருங்கிணைப்பு முகமையாக உள்ளது. அரசுப் போக்குவரத்துக் கழக பணியாளருக்கு ஓய்வூதிய திட்டம் அரசால் 01-09-1998 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. 31-03-2003 அன்றும் அதற்கு முன்பும் பணியில் சேர்ந்த பணியாளர்கள் இத்திட்டத்தின்கீழ் வருவர். தற்போது, இத்திட்டத்தின்கீழ் 1,28,362 பணியாளர்கள் உள்ளனர். அவர்களுள் 83,222 பணியாளர்கள் (31-07-2021 அன்றுள்ளவாறு) ஓய்வு பெற்றுள்ளனர் மற்றும் அவர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.107.25 கோடி வழங்கப்பட்டு வருகின்றது.

ஆ) சட்டரீதியான ஓய்வூதியப் பணப்பலன்களை அளிப்பது

ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேமநல நிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு ஊதியம், ஓய்வூதிய ஒப்பளிப்பு மற்றும் பங்களிப்புடன்கூடிய ஓய்வூதிய திட்டம் ஆகிய சட்டரீதியான ஓய்வூதியப் பணப்பலன்களை வழங்கும் பொருட்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதன உதவி, குறுகிய காலக் கடன்கள் மற்றும் வழிவகை முன்பணம் ஆகியவற்றின் மூலமாக அரசு தொடர்ந்து நிதி உதவி வழங்கி வருகின்றது.

ஜனவரி 2020 முதல் ஏப்ரல் 2020 வரை ஓய்வு பெற்ற அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு சட்டரீதியான ஓய்வூதியப் பணப்பலன்களை வழங்கிட அரசு ரூ.497.32 கோடி அனுமதித்துள்ளது.

2021 செப்டம்பர் 8]

2.13 பேருந்து போக்குவரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

அ) *(KfW)* ஜெர்மனி நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள திட்டம்

பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்குவதற்கு, (KfW) ஜெர்மனி நிதி நிறுவனத்துடன் அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி, 12,000 BS-VI ரகப் பேருந்துகள் மற்றும் 2,000 மின்சாரப் பேருந்துகளை 2021 ஆம் ஆண்டு முதல் 5 வருட காலங்களில் கொள்முதல் செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான தொகையில் 80% ஜெர்மனி நிதி நிறுவனம் (KfW)வட்டி இல்லா கடனாகவும், மீதமுள்ள 20% தமிழக அரசு பங்காகவும் இருக்கும்.

முதல் இரண்டு கட்டங்களில் 2,213 டீசல் பேருந்துகள் மற்றும் 500 மின்சாரப் பேருந்துகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்படும். இது தவிர, தகவல் தொழில்நுட்ப மென்பொருள் மற்றும் வன்பொருள் மேம்பாடு, பயணிகள் தகவல் அமைப்பு, பணமில்லா பரிவர்த்தனை போன்றவை அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பிற முக்கிய முதலீட்டுக் கூறுகள் ஆகும்.

ஆ) புதிய முயற்சிகள்

- *வணிக மேம்பாட்டிற்காக தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள 16 பேருந்து பணிமனைகள் / முனையங்கள் நவீனமயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.*
- *அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய மின் உற்பத்தி அலகுகள் நிறுவுதல்.*
- *அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு கூடுதல் வருவாயை அதிகரிக்க முதற்கட்டமாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான இடங்களில் எண்ணெய் விற்பனை நிறுவனங்களின் முகமையின்கீழ் (Dealership) பொதுமக்களும் எரிபொருள் வாங்குவதற்கு பெட்ரோல் / டீசல் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைத்தல்.*

[2021 செப்டம்பர் 8

2.14 விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம்

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும், விரைவாக விபத்து இழப்பீட்டை வழங்கும் பொருட்டு, 2010-2011 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டிற்கும் முறையே அரசின் பங்காக ரூ.20 கோடியும், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.20 கோடியும் சேர்த்து ஆகமொத்தம் ரூ.40 கோடியில் விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் 2015-16 ஆம் ஆண்டு முதல் ரூ.40 கோடியிலிருந்து ரூ.60 கோடியாக உயர்த்தப்பட்டு, இதில், அரசின் பங்களிப்பாக ரூ.30 கோடியும், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பாக ரூ.30 கோடியும் என உயர்த்தப்பட்டுள்ளது. மேற்படி நிதியம், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

20-01-2018 முதல் பேருந்து பயணிகளிடம் தீர்வை (Cess) வசூல் செய்து அதனைக் கொண்டு விபத்து இழப்பீடு, விபத்து தடுப்பு மற்றும் சுங்கக் கட்டணத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. இதற்கென தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழக விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டணத்திற்கான நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வைக் கட்டணம் பின்வருமாறு:—

(ரூபாயில்)

வ. எண்.	பயண கட்டண வரம்பு	நகர்	புறநகர்
		பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வை	பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வை
1.	ரூ.25 வரை	1	1
2.	ரூ.26 முதல் ரூ.50 வரை	—	2
3.	ரூ.51 முதல் ரூ.75 வரை	—	3

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 8]

4.	ரூ.76 முதல் ரூ.100 வரை	—	4
5.	ரூ.101 முதல் ரூ.200 வரை	—	5
6.	ரூ.201 முதல் ரூ.300 வரை	—	6
7.	ரூ.301 முதல் ரூ.400 வரை	—	7
8.	ரூ.401 முதல் ரூ.500 வரை	—	8
9.	ரூ.501-க்கு மேல்	—	10

20-01-2018 முதல் 31-07-2021 வரை ரூ.1,431.86 கோடி தீர்வையாக வசூலிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ரூ.477.52 கோடி சுங்கக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. 10,081 விபத்துகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.531.79 கோடி நேர் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, 10,081 விபத்து இழப்பீடுகளுள், நீதிமன்ற உத்தரவின்படி, 6,342 விபத்து இழப்பீடுகளுக்கு ரூ.326.68 கோடியும், மக்கள் நீதிமன்றத்தின்மூலம் தீர்வு செய்யப்பட்ட 3,739 விபத்து இழப்பீட்டு வழக்குகளுக்கு ரூ.205.11 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

விபத்து இழப்பீட்டு வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதற்கு ஒரு குழுவும் மற்றும் இழப்பீடு வழங்கிட வழிமுறையும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் 2021-2022 ஆம் ஆண்டில் (ஜூலை 2021 வரை) 12 வழக்குகளுக்கு ரூ.0.19 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

2.15 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை.

இக்கழகம் மேலாண் இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ், இயங்கி வருகின்றது. இக்கழகத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள பல்லவன் சாலையில் அமைந்துள்ளது. இக்கழகத்தின் பேருந்து இயக்கம் கேரளா, கர்நாடகா, ஆந்திரம் மற்றும் புதுச்சேரி ஆகிய அண்டை மாநிலங்களுக்கு விரிவடைந்துள்ளது.

[2021 செப்டம்பர் 8

- 31-07-2021 அன்றுள்ளவாறு, 22 பணிமனைகள்மூலம் 1,123 பேருந்துகளை இயக்குகின்றது. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் 251 வழித்தடங்களை இயக்கி வருகின்றது. அவற்றில் தமிழ்நாட்டின் உட்பகுதிகளுக்கு 139 வழித்தடங்களும் ஆந்திரம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய அண்டை மாநிலங்களுக்கு 112 வழித்தடங்களும் இக்கழகத்தால் இயக்கப்படுகின்றன.

- இக்கழகத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 31-07-2021 அன்றுள்ளவாறு 4,925 ஆகும். இக்கழகம் அதிநவீன மிதவை பேருந்து, குளிர்சாதன பேருந்து, குளிர்சாதன படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதன படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து மற்றும் கழிப்பறை வசதியுடன்கூடிய பேருந்துகள் ஆகிய பேருந்து வகைகளை இயக்கி வருகின்றது.

- இந்திய ரயில்வே துறை மற்றும் விமான துறை ஆகியவைகளைப் போலவே இணையதளம் மற்றும் கைபேசி (Online Ticket Reservation System) மூலமாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் மற்றும் இதர போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் தொலைதூரப் பேருந்துகளில் பயணம் செய்ய முன்பதிவு செய்யும் வசதி பயணிகளுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

- இணையதள முன்பதிவு வசதியானது (Online Ticket Reservation System) தமிழ்நாடு மற்றும் ஆந்திரம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி போன்ற அண்டை மாநிலங்களில் 58 இடங்களில் 64 முன்பதிவு மையங்களின் மூலமாக முன்பதிவு செய்யப்படுகின்றன.

- இப்போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் ஒருவழித் தடத்தில், முன்பதிவு மையங்கள் இல்லாத இடத்தில் முன்பதிவு செய்யும் பயணிகள் வசதிக்காக தற்போது இணையதளம் மூலமாக எதிர்முனையிலிருந்து திரும்ப வருவதற்கான இருக்கைகள் முன்பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

- அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் கழிப்பறை வசதிகொண்ட “கிளாசிக்” பேருந்துகளை சென்னையிலிருந்து பிற ஊர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

- தலைமை அலுவலகம், பேருந்து நிலையம் போன்ற முக்கிய இடங்களைக் கண்காணிக்கவும் பயணிகள் போக்குவரத்தைக் கண்காணிக்கவும் ஆங்காங்கே கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

- முக்கிய இடங்களுக்கு குறிப்பிட்ட அடையாள பெயர்களுடன் (Brand Names) 50 “பிரீமியம் சர்வீஸ்கள்” (Premimum Services) இயக்கப்படுகின்றன. முன்பதிவு செய்த பயணிகளின் நன்மைக்காக, குறிப்பிட்ட இடங்களில் ஏறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இவ்வசதி கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற முக்கிய நகரங்களிலுள்ள 13 இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பொது மக்கள் எளிதாகப் பயணம் செய்யும் வகையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையிலும், தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகை நாட்களின் போது சிறப்புப் பேருந்துகள் சென்னை மாநகரப் பகுதிகளில் 5 தற்காலிக பேருந்து முனையங்களிலிருந்து பிரித்து இயக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் பொதுமக்கள் போக்குவரத்து இடையூறின்றி பயணிக்க முடிகின்றது.

- முன்பதிவு செய்யப்பட்ட பயணிகளுக்கு பேருந்து நடத்துனரின் பெயர், பேருந்து பதிவு எண் மற்றும் கைபேசி எண், குறுஞ்செய்தியாகப் பயணம் தொடங்க 30 நிமிடங்களுக்குமுன் அனுப்பப்படுகின்றது. இதன்மூலம் பேருந்து புறப்படும் நேரம் மற்றும் இடம் முதலியவற்றை பயணிகள் தெரிந்துக்கொள்ளலாம்.

- சென்னை, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள முக்கிய பணிமனைகளில் நவீன பயிற்சி வசதிகளுடன்கூடிய மூன்று பயிற்சி மையங்கள் கட்டப்பட்டுள்ளன. ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கு விபத்தில்லா

ஓட்டுநர் பயிற்சி, எரிபொருள் திறன் மேம்பாட்டு பராமரிப்பு நடைமுறைகள், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் மன அழுத்த மேலாண்மை போன்ற பயிற்சிகளை பல்வேறு தொழில்களைச் சேர்ந்த அனுபவமிக்க மற்றும் அறிவார்ந்த பயிற்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் உதவியுடன் அளிக்கப்படுகிறது.

2.16 மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை.

- மாநகர் போக்குவரத்துக் கழகம் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இக்கழகம் சென்னை நகரில் பேருந்துகளை இயக்கும் தனியுரிமை பெற்ற நிறுவனமாகும். இக்கழகம் சென்னை பெருநகர் மற்றும் அதனை ஒட்டியுள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களிலும் நகரப் பேருந்துகளை இயக்குகின்றது.

- 31-07-2021 அன்றுள்ளவாறு, இப்போக்குவரத்துக் கழகம் 31 பணிமனைகளையும், 3,468 பேருந்துகளைக் கொண்டு 3,233 சேவைகளை 578 வழித்தடங்களில் இயக்கி வருகின்றது. இக்கழகத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 21,199 ஆகும். இக்கழகம் சாதாரண பேருந்து, விரைவு பேருந்து, சொகுசு பேருந்து, குளிர்சாதன பேருந்து ஆகியவற்றை இயக்கி வருகின்றது. இக்கழகத்தின் இரண்டு பேருந்து கூண்டு கட்டும் பிரிவு குரோம்பேட்டையில் அமைந்துள்ளது.

- பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் அமைப்பதன்மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

- நகரங்களில் பெண்கள் மற்றும் சிறார்களுக்கு எதிரான வன்முறையினைக் கட்டுப்படுத்தவும், பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பை அதிகரிக்கவும் நிர்பயா நிதியின்கீழ் பெண்கள் பாதுகாப்புத் திட்டம் சென்னை மாநகரப் பகுதிகளில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் குழந்தை மற்றும் பெண் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு இணைய நெறிமுறை (Internet Protocol) அடிப்படையிலான மறைகாணிகளை (CCTV Cameras) மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகள், பணிமனைகள்

மற்றும் பேருந்து முனையங்கள் ஆகியவற்றில் பொருத்துவதன்மூலம் அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. இதன்மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குகிறது. பேருந்துகளில் இருக்கும் கண்காணிப்பு கேமராக்கள்மூலம் நிகழ்வுகள் பதிவு செய்யப்படும். ஆயினும் தேவைப்படும்போது அதன் நடப்பு நிகழ்வுகள் கண்காணிப்பு நிலையங்களிலிருந்து கண்காணிக்கப்படும். SOS Panic பொத்தானை அழுத்தும்போது அவசரகால பதிலுக்காக காவல் கட்டுப்பாட்டு மையத்துடன் இணைக்கப்படும். 2500 மாநகரப் பேருந்துகளிலும், பணிமனைகள், பேருந்து முனையங்கள் மற்றும் பிற அலகுகளில் (Units) 66 இடங்களிலும் மறைகாணிகள் (CCTV Cameras) பொருத்தும் பணி ரூ.72.71 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

- இப்போக்குவரத்துக் கழகம், காற்று மாசினை கட்டுப்படுத்திடவும் இயக்க செலவினை குறைத்திடவும் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு / திரவ இயற்கை எரிவாயு பேருந்துகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

சென்னை சீர்மிகு நகரம் திட்டத்தின்கீழ் நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை அமைப்பை (ITMS) செயல்படுத்துதல்

- மேம்படுத்தபட்ட நவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் (ICT) பயன்படுத்தி பேருந்துகள் இயக்கம், பேருந்து இயக்க அட்டவணை கடைபிடித்தல், பணிமனைகளில் இருந்து வாகனங்களை அனுப்புதல், பணிமனை மேலாண்மை மற்றும் நிகழ்வுகளைக் கையாளுதல் ஆகியவற்றை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் சென்னை சீர்மிகு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. மேலும், பேருந்துகளின் இயக்க தகவல்கள் நேரலையாக கீழ்க்கண்ட முறைகளில் பயணிகளுக்கு வழங்கப்படுகிறது.

அ) தானியங்கி வாகன இருப்பிடம். (Automatic Vehicle Location)

ஆ) பயணிகள் தகவல் அமைப்பு. (Passenger Information System)

இ) பணிமனை மேலாண்மை அமைப்பு (Operation Related)

- சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்த, 65 பேருந்துகளுக்கு பேருந்து பக்கவாட்டு பாதுகாப்பு அலகு (Under Run Protection Unit) பொருத்தப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 8

2.17 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்.

இப்போக்குவரத்துக் கழகம் விழுப்புரம் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. போக்குவரத்துச் சேவையைக் கண்காணித்து மேம்படுத்த விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம், நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளுக்கு பேருந்து சேவைகளை அளித்து வருகின்றது.

- *31-07-2021 அன்றுள்ளவாறு, இக்கழகத்திற்கு சொந்தமான பணிமனைகளின் எண்ணிக்கை 60 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 3,365 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 3,166 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 20,854 ஆகும்.*

- *இக்கழகம், சாதாரண, விரைவு, சொகுசு, இடைநில்லா பேருந்து மற்றும் 3 X 2 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன பேருந்துகளை இயக்கி வருகின்றது.*

இக்கழகம் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் வசதிக்காக இயக்க பகுதிகளுக்குட்பட்ட அனைத்து பேருந்து நிலையங்களிலிருந்தும் பிரதி அமாவாசை (மேல்மலையனூர்), பௌர்ணமி (திருவண்ணாமலை), ஆடிக் கிருத்திகை (திருத்தணி), தைப் பூசம் (வடலூர்), கூவாகம், சித்திரை பௌர்ணமி, தீபம், பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய திருவிழா மற்றும் விசேஷ நாட்களில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

மலைவாழ் மக்கள் மற்றும் மலைப்பாங்கான தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலனுக்காக கல்வராயன்மலை, சேராப்பட்டு மலை, வெள்ளிமலை, ஜமுனாமரத்தூர் மலை, புதூர்நாடு, ஏலகிரி, வெலத்திகாமணிபென்டா, அரவட்லா, பாலமதி மற்றும் செங்காநத்தம் போன்ற மலைப் பகுதிகளுக்கு 29 மலை வழித்தட சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

விழுப்புரம், காஞ்சிபுரம், புதுச்சேரி, வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய ஐந்து இடங்களிலிருந்து சென்னைக்கு நேரடி பயணிகளின் வசதிக்காக 95 இடைநில்லா பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

2021 செப்டம்பர் 8]

குளிர்சாதனப் பேருந்துகள்

துவக்கத்தில் 3X2 இருக்கை வசதிகளுடன் கூடிய இரு குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதிக பயணிகளை கவரும் பொருட்டு தற்போது 92 குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன்மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

ஓட்டுநர் பயிற்சி நிலையங்கள்

இக்கழகத்திலுள்ள 6 மண்டலங்களிலும் ஓட்டுநர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இரு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சித் தடம் இக்கழகத்தில் அமைந்துள்ளன.

2.18 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்.

இப்போக்குவரத்துக் கழகம் சேலம் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் தலைமையின்கீழ் இயங்கி வருகின்றது. சேலம் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தின் சில பகுதிகள் இப்போக்குவரத்துக் கழகத்தின் இயக்கப் பகுதிகளாகும்.

31-07-2021 அன்றுள்ளவாறு, இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 32 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,113 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,900 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தில் பணியாளர்களின் எண்ணிக்கை 12,239 ஆகும்.

பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன்மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

இக்கழகம் கீழ்க்கண்ட கூடுதல் வசதிகளை பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு செய்து வருகின்றது:—

(அ) வார இறுதி நாட்கள் மற்றும் முக்கிய விசேஷ நாட்களில் ஏற்காடுமலை, கொல்லிமலை, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி

மற்றும் மேட்டூர் அணை போன்ற சுற்றுலாத் தலங்களுக்கு சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகிறது.

(ஆ) பண்டிகை மற்றும் முக்கிய நாட்களில் மாதேஸ்வரன் மலைசிவன் கோயில் அமைந்துள்ள தாரமங்கலம், திருச்செங்கோடு, பேளூர் மற்றும் அரகளூர் பகுதிகளுக்கும், முருகன் கோயில் அமைந்துள்ள காளிபட்டி மற்றும் கபிலர்மலை பகுதிகளுக்கும், நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில் ஆகிய வழிப்பாட்டுத் தலங்களுக்கும் சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகின்றது.

இக்கழகம், ஏற்காடு மலை, கொல்லிமலை, கல்ராயன்மலை (வெள்ளிமலை) மற்றும் நல்லமதிமலை (பச்சமலை) ஆகிய மலைப் பகுதிகளுக்கு 25 சேவைகளை மலைவாழ் மக்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இயக்கி வருகின்றது.

2.19 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்.

இக்கழகம், கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின்கீழ் இயங்கி வருகின்றது. இக்கழகம், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கு பேருந்து சேவையினை அளித்து வருவதுடன், கேரளா, கர்நாடகா போன்ற அண்டை மாநிலங்களுக்கும் பேருந்து சேவையினை அளித்து வருகிறது.

31-07-2021 அன்றுள்ளவாறு இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 44 ஆகும். இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 2,961 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,747 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 16,926 ஆகும்.

பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன்மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

பணியாளர்களுக்கு பயிற்சி தரும் பொருட்டு இப்போக்குவரத்துக் கழகத்தால் பொள்ளாச்சி மற்றும் ஈரோடு மண்டலத்திலுள்ள பவானிசாகரில் பயிற்சி நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 8]

புதியதாக பணியமர்த்தப்படும் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கவும், பணியிலுள்ள ஓட்டுநர்களின் திறமையினை மேம்படுத்திடவும் ஒரு ஓட்டுநர் ஒத்த கருவி (Simulator) பொள்ளாச்சியில் உள்ள பயிற்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிறுவனத்தில் இதுநாள்வரை 3,975 ஓட்டுநர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். சாலைப் பாதுகாப்பு நிதியின்கீழ் கொள்முதல் செய்யப்பட்ட மற்றுமொரு ஓட்டுநர் ஒத்த கருவி (Simulator), ஓட்டுநர்களின் திறமையை மேம்படுத்திட, பவானிசாகரிலுள்ள பயிற்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளது.

- இக்கழகம் வால்பாறை, மருதமலை, உதகமண்டலம் மற்றும் கூடலூரில் பேருந்து நிலையங்களை அமைத்து பராமரித்து வருகின்றது.
- பயணிகளின் வசதிக்காக இக்கழகம் பர்லியார் மற்றும் ஆசனூரில் சாலையோர சிற்றுண்டி விடுதிகளை பராமரித்து வருகின்றது.
- பணியாளர்களின் நலனுக்காக கோயம்புத்தூர், பொள்ளாச்சி, பவானிசாகர் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் பயிற்சி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

2.20 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்

இக்கழகம், கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின்கீழ் இயங்கி வருகிறது. கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, காரைக்குடி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் கரூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

31.07.2021 அன்றுள்ளவாறு, இப்போக்குவரத்துக் கழகத்தின் மொத்த பணிமனைகளின் எண்ணிக்கை 60 ஆகும். இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 3,426. மேலும், 3,335 வரையறுக்கப்பட்ட சேவைகளை இயக்கி வருகின்றது. இக்கழகத்தில் உள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 20,802 ஆகும்.

இக்கழகம், சாதாரணம், விரைவு, அதிசொகுசு மற்றும் 3 x 2 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன பேருந்துகளை இயக்கி வருகின்றது. இப்போக்குவரத்துக் கழகத்தின் கூண்டு கட்டும் பிரிவுகள் உதிரி பாகங்கள் புதுப்பிக்கும் பிரிவுகளுடன் பொறையார்,

கரூர் (மண்மங்கலம்), காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் மற்றும் உருளிப்பட்டை புதுப்பிக்கும் பிரிவுகள் கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, தேவகோட்டை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் இயக்கி வருகின்றது.

இப்போக்குவரத்துக் கழகத்தின் இயக்க எல்லை 11 வருவாய் மாவட்டங்களும் மற்றும் யூனியன் பிரதேசமான புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகியவையாகும். இக்கழகத்தின் இயக்க எல்லைக்குட்பட்ட உலகப் புகழ் பெற்ற வேளாங்கன்னி ஆலயம், உலக புராதன சின்னமான தஞ்சை பெருவுடையார் கோயில், திருவரங்கம் கோயில், நவக்கிரக கோயில்கள் மற்றும் சமயபுரம் கோயில் ஆகிய வழிபாட்டுத்தலங்களுக்கு பேருந்துகளை சிறப்பாக இயக்கி வருகின்றது. திருவிழாக் காலங்களில் வழிபாட்டுத்தலங்களான பழநி, சமயபுரம், நவக்கிரகக் கோயில்கள், தாயமங்கலம், நாகூர் மற்றும் ஏர்வாடி தர்கா போன்ற இடங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

குளிர்சாதனப் பேருந்துகள்

துவக்கத்தில் 3 x 2 இருக்கை வசதிகளுடன்கூடிய குளிர்சாதனப் பேருந்துகள் திருச்சி மற்றும் கரூர் மண்டலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டன. அதிக பயணிகளை கவரும் பொருட்டு தற்போது 52 குளிர்சாதன பேருந்துகள் ஆறு மண்டலங்களிலும் இயக்கப்பட்டு வருகின்றன.

பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன்மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

சூரிய மின்னாற்றல்

கும்பகோணத்திலுள்ள தலைமை அலுவலக கட்டடத்தின் மேற்கூரையில் 10 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய மின்னாற்றல் தகடு அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 20 சதவீத அளவிற்கு மின் கட்டணம் குறைந்துள்ளது.

2.21 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை.

இக்கழகம், மேலாண் இயக்குநரின் தலைமையின்கீழ் மதுரை மாநகரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. நகர், புறநகர் மற்றும் மலைப் பகுதிகளில் பேருந்து சேவைகளைக் கண்காணிக்க, மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

- 31.07.2021 அன்றுள்ளவாறு, இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 40 ஆகும். இக்கழகத்தின்

மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,328 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,166 ஆகும்.

- *31-07-2021 அன்றுள்ளவாறு, இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 14,320 ஆகும். இக்கழகம், சாதாரணம், விரைவு மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.*
- *இக்கழகத்தில் மதுரை, வத்தலக்குண்டு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன.*
- *பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன்மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.*
- *மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் மண்டலங்களில் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய ஓட்டுதல் ஒத்த கருவி* (Simulator) *மூலம் 210 ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.*
- *பணிமனைகள் / மண்டல அலுவலகக் கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய மின்னாற்றல் தகடு அமைக்கப்பட உள்ளது.*
- *இக்கழகத்தில் பயணிகளின் வசதிக்கேற்ப நகர மற்றும் புறநகர் பேருந்துகளில் பயணம் செய்ய ஏதுவாக மாதாந்திர சலுகைக் கட்டண அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.*
- *இப்போக்குவரத்துக் கழகத்தால் 30 இரவு நகரப் பேருந்து சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன.*
- *மதுரை நகரில் இயக்கப்படும் 75 பேருந்துகளில் பேருந்து நிறுத்தத்தின் பெயரை முன்னரே அறிவிப்பு செய்யும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.*
- *திருவிழாக்களை முன்னிட்டு இக்கழகத்தினால் பின்வரும் இடங்களுக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.*

1.	வீரபாண்டி	6.	அழகர்கோயில்
2.	இருக்கன்குடி	7.	திருச்செந்தூர் கோயில்
3.	வேளாங்கன்னி	8.	மாசானியம்மன் கோயில்
4.	பழநி	9.	திருவண்ணாமலை கோயில்
5.	சபரிமலை ஐயப்பன் திருக்கோயில்	10.	திருப்பரங்குன்றம் கோயில்

- வெளி மாநிலங்களிலிருந்து மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வழிபட வரும் பக்தர்களின் வசதிக்காக நான்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

- மதுரை, அதிகமான சுற்றுலாத் தலங்களைக் கொண்ட ஒரு பண்டைய நகரம் என்பதால், மதுரையிலிருந்து 10 கி. மீ தூரத்தில் உள்ள திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கும், சுமார் 23 கி.மீ தொலைவில் உள்ள கள்ளழகர் திருக்கோயிலுக்கும் பொதுமக்களின் தேவைகளின் அடிப்படையில் சுற்றுலா பேருந்துகளை இக்கழகம் இயக்கி வருகின்றது.

2.22 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி

இக்கழகம், மேலாண் இயக்குநர் தலைமையின்கீழ், திருநெல்வேலி நகரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. போக்குவரத்து சேவையை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் கண்காணித்து மேம்படுத்த, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர் மற்றும் புறநகர் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- 31-07-2021 அன்றுள்ளவாறு, இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 30 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,773 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,661 ஆகும். இக்கழகத்தின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 10,615 ஆகும். இக்கழகம், சாதாரணம், விரைவு, அதி சொகுசு, மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- இப்போக்குவரத்துக் கழகத்தால் திருச்செந்தூர், சங்கரன்கோவில், திருவில்லிபுத்தூர், உவரி, கன்னியாகுமரி

2021 செப்டம்பர் 8]

மற்றும் குற்றாலம் போன்ற முக்கிய சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

- *இக்கழகத்தால் இரவு பேருந்து சேவைகள் திருநெல்வேலி நகரத்திலும் மற்றும் நாகர்கோவில் நகரத்திலும் இயக்கப்பட்டு வருகின்றன.*
- *திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் மண்டலத்தின் 24 வழித்தடங்களில் 53 தனி நடைகள் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கென இயக்கப்பட்டு வருகின்றன.*
- *பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன்மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.*
- *ஓட்டுநர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் பொருட்டு ஓட்டுநர் பயிற்சி ஓடுதளம் கன்னியாகுமரியிலுள்ள ராணித்தோட்டத்தில் கட்டப்பட்டுள்ளது.*

அத்தியாயம்-3

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்

3.1 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் அறிமுகம்.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனமானது தமிழக அரசிற்குச் சொந்தமான வங்கியல்லாத நிதி நிறுவனமாகும். இந்நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியல்லாத நிதி நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு, 25.03.1975 அன்று தொடங்கப்பட்டது. பொது மக்கள், அரசு துறைகள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து வைப்பீடுகள் பெற்று தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான மூலதனம் மற்றும் நடைமுறை மூலதன நிதியுதவியைப் பூர்த்தி செய்வதே தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

3.2 நிதிச் செயல்பாடு

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட 1975 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனம் கடந்த 2019-2020 ஆம் ஆண்டிலிருந்து ஈட்டிய இலாபம் பின்வருமாறு:

[2021 செப்டம்பர் 8

(ரூபாய் இலட்சங்களில்)

ஆண்டு	வட்டி தள்ளு படிக்கு முந்தைய இலாபம்	அ.போ. கழகங்க ளுக்கு வட்டி தள்ளுபடி செய்தது	வட்டி தள்ளு படிக்கு பின்பும் ஆனால் வருமான வரிக்கு முன்பும் இலாபம்	வருமான வரி	வருமான வரிக்குப் பிந்தைய இலாபம்
2019-2020	1874.64	-	1874.64	656.24	1218.40
2020-2021	6145.75	-	6145.75	1236.72	4909.03
2021-2022 (ஜூலை 2021 வரை)	2083.29	-	2083.29	524.32	1558.97

3.3 வைப்பீடுகள்

இந்நிறுவனம் பொது மக்கள் மற்றும் இதர முதலீட்டாளர்களிடம் முதலீட்டிற்கு ஏற்ற நிறுவனம் என்ற நம்பகத்தன்மையைத் தொடர்ந்து பெற்று வந்துள்ளது. 31.07.2021 அன்றுள்ளபடி, இந்நிறுவனத்தில் செய்துள்ள மொத்த வைப்புத்தொகை ரூபாய் 7,228.56 கோடியாகும்.

3.4 வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள்

வைப்பீடுகளுக்கான வட்டி வீதம் சந்தை நிலவரத்திற்கேற்பவும், போக்குவரத்துக் கழகங்களின் நிதித் தேவை மற்றும் கடனை திருப்பிச் செலுத்தும் தன்மைக்கேற்ப மாற்றியமைக்கப்படுகின்றது. வட்டி வீதங்கள், பிற அரசு நிதி நிறுவனங்களால் கொடுக்கப்படும் வட்டி வீதங்களுக்குகேற்ப நிர்ணயிக்கப்படுகிறது. தற்போதைய வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள் பின்வருமாறு:—

2021 செப்டம்பர் 8]

காலம்	வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள் (கூட்டு வட்டி காலாண்டு அடிப்படையில் கணக்கிடப்படுகிறது) 18.01.2021 முதல்	
	பொதுமக்கள்	மூத்த குடிமக்கள்
12 மாதங்கள்	*7.00%*	*7.25%*
24 மாதங்கள்	*7.25%*	*7.50%*
36-லிருந்து 48 மாதங்கள்	*7.75%*	*8.25%*
60 மாதங்கள்	*8.00%*	*8.50%*

3.5 வைப்பீட்டுத் திட்டங்கள்

தற்போது கீழ்க்கண்ட இரு வைப்பீட்டுத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன:

விவரம்	திட்டம் 1	திட்டம் 2
	குறித்த காலம்தோறும் வட்டி வழங்கும் திட்டம்	பணப்பெருக்குத் திட்டம்
குறைந்தபட்ச வைப்பீடு	ரூபாய் 50,000/-	ரூபாய் 50,000/-
காலம் (மாதங்களில்)	24,36,48 மற்றும் 60	12, 24, 36, 48 மற்றும் 60
வட்டி வழங்கும் வீதம்	24 மாதங்கள் – காலாண்டு36 - 60 மாதங்கள் -மாதந்தோறும், காலாண்டு மற்றும் ஆண்டு வட்டி	முதிர்வுறும்போது (கூட்டுவட்டி காலாண்டு அடிப்படையில் கணக்கிடப்படுகிறது)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

3.6 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட வைப்பீடுகள்

இத்திட்டம் தமிழக அரசால் சமூக நலத் துறையின்மூலம் வழங்கப்படும் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டமாகும். 31.07.2021 அன்றுள்ளவாறு, இத்திட்டத்தின்கீழ் 83,657 வைப்பீடுதாரர்களின்மூலம் பெறப்பட்ட வைப்பீடு ரூ.12.67 கோடியாகும்.

3.7 நிறுவனத்தின் நிதி நிலை

31.07.2021 அன்றுள்ளவாறு, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மொத்த நிதி ஆதாரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

பங்கு மூலதனம் -		
அ) அரசு பங்குத்தொகை	2032.10	
ஆ) அரசுபோக்குவரத்துக் கழகங்களின் பங்குத்தொகை	18.71	2050.81
இருப்புகள் மற்றும் உபரி		183.24
வைப்பீடுகள்		7,228.56
பாரத ஸ்டேட் வங்கி மற்றும் பரோடா வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன்கள்		3,439.00
மொத்தம்		12,901.61

3.8 கடன்கள்

2021-2022 (ஜூலை 2021 வரை) ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களுக்கு அளிக்கப்பட்ட கடன் உதவிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

2021 செப்டம்பர் 8]

(ரூபாய் கோடியில்)

வகைகள்	தொகை
1. தவணைக் கொள்முதல் கடன்கள்	—
2. வங்கியிடமிருந்து பெறப்பட்ட குறுகிய காலக் கடன்	—
3. நடைமுறை மூலதனத்திற்காக பருவக்கடன்கள்	3,333.17
மொத்தம்	3,333.17

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு அளித்த நிதியுதவி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	நிதியுதவிகள்
2019-2020	6190.11
2020-2021	7725.25
2021-2022 (ஜூலை 2021 வரை)	3,333.17

3.9 நிலுவையிலுள்ள கடன்கள் (31.07.2021 அன்றுள்ளவாறு)

(ரூபாய் கோடியில்)

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்	நிலுவையிலுள்ள மூலதனம்			
	தவணைக் கொள்முதல் கடன்கள்	குறுகிய காலக் கடன்கள்	நீண்ட காலக் கடன்கள்	மொத்தம்
அ.போ.க (கோயம்புத்தூர்) லிட்.,	123.26	481.41	1,698.97	2,303.64

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2021 செப்டம்பர் 8

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்	நிலுவையிலுள்ள மூலதனம்			
	தவணைக் கொள்முதல் கடன்கள்	குறுகிய காலக் கடன்கள்	நீண்ட காலக் கடன்கள்	மொத்தம்
அ.போ.க (கும்பகோணம்) லிட்.,	152.95	338.31	1,154.61	1,645.87
அ.போ.க (மதுரை) லிட்.,	51.33	282.12	1,106.28	1,439.73
மா.போ.க (சென்னை), லிட்.,	185.57	289.40	1,290.93	1,765.90
அ.வி.போ. க தமிழ்நாடு, லிட்.,	202.33	159.62	1,019.95	1,381.90
அ.போ.க (சேலம்) லிட்.,	123.95	244.70	982.66	1,351.31
அ.போ.க (திருநெல்வேலி) லிட்.,	58.41	427.10	1,434.25	1,919.76
அ.போ.க (விழுப்புரம்) லிட்.,	155.43	316.34	873.31	1,345.08
மொத்தம்	1,053.23	2,539.00	9,560.96	13,153.19

3.10 புதிய கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டி வீதம்

இந்நிறுவனம் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கிய புதிய கடன்களுக்கான வட்டி வீதம் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது:

	வட்டி வீதம்	அன்றைய தேதியில்
தவணைக் கொள்முதல் கடன்கள்	7.60%	01.04.2019
ரூ.600 கோடி தவணைக் கொள்முதல் கடன் (அரசாணை (நிலை) எண். 26, போக்குவரத்து (அ) துறை, நாள்: 28.02.2019).	2.00%	28.02.2019

2021 செப்டம்பர் 8]

ரூ.302.06 கோடி தவணைக் கொள்முதல் கடன் (அரசாணை (நிலை) எண். 117, போக்குவரத்து (ட்டி1) துறை, நாள்: 10.7.2019).	*2.00%*	*24.07.2019*
ரூ.150 கோடி தவணைக் கொள்முதல் கடன் (அரசாணை (நிலை) எண். 26, போக்குவரத்து (ட்டி1) துறை, நாள்: 26.02.2020).	*2.00%*	*26.02.2020*
*குறுகிய காலக் கடன்கள் (*TDFC Fund*)*	*8.50%*	*01.04.2019*
*நீண்ட காலக் கடன்கள் (*TDFC Fund*)*	*7.65%*	
நீண்ட காலக் கடன்கள்	*8.15%*	*01.04.2020*
ரூ.900 கோடி ரொக்க கடன் வசதி (பாரத ஸ்டேட் வங்கி)	*7.95%*	*30.09.2019*
ரூ.1,200 கோடி குறுகிய காலக்கடன் (பாரத ஸ்டேட் வங்கி)	*7.20%*	*29.06.2020*
ரூ.1,900 கோடி குறுகிய காலக்கடன் (பாரத ஸ்டேட் வங்கி)	*6.25%*	*30.09.2020*
ரூ.639 கோடி குறுகிய காலக்கடன் (பரோடா வங்கி)	*6.25%*	*26.03.2021*

3.11 போக்குவரத்துக் கழகங்களின் மூலதன ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல்

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் கொரோனா ஊரடங்கு மற்றும் வருவாய் பெருக்கமின்றி கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டதன் காரணமாக 2020-2021 ஆம் ஆண்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு உதவும் பொருட்டு அவற்றின் செயல்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் பாரத ஸ்டேட் வங்கியிடமிருந்து ரூ.3,100 கோடியினை அரசு உத்தரவாதத்துடன் கடனாகப் பெற்று அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கடனாக வழங்கியுள்ளது. மேற்படி தொகையில் ரூ.1200 கோடியை பாரத

[2021 செப்டம்பர் 8

ஸ்டேட் வங்கியிடம் 22.04.2021 அன்று திருப்பிச் செலுத்தப்பட்டது. மேலும், எண்ணெய் நிறுவனங்களுக்கு அளிக்க வேண்டிய நிலுவைத் தொகையினை நேர்செய்யும் பொருட்டு ரூ.639 கோடியினை பரோடா வங்கியிடமிருந்து அரசு உத்தரவாதத்துடன் 26.03.2021 அன்று கடனாகப் பெற்று அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குக் கடனாக வழங்கியுள்ளது.

அத்தியாயம்–4

சாலை போக்குவரத்து நிறுவனம்

4.1 சாலை போக்குவரத்து நிறுவனம் ஓர் அறிமுகம்

சாலை போக்குவரத்து நிறுவனம் 1860-ஆம் ஆண்டின் சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 1976-ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது. சாலை போக்குவரத்து நிறுவனம், பேருந்து போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டுப் பணிகள், சாலைப் பாதுகாப்பு ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பணிகள், பேருந்து தரம் மற்றும் பேருந்து மேலாண்மை, போக்குவரத்துக் கழக அலுவலர்கள் / பணியாளர்கள் புத்தாக்கப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. அரசு போக்குவரத்துக் கழகங்களால் கொள்முதல் செய்யப்படும் உதிரி பாகங்களின் தரத்தினை பரிசோதித்தல் பணியையும் செய்து வருகின்றது.

4.2 கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

சாலை போக்குவரத்து நிறுவனம், தற்போது கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்களை கும்மிடிபூண்டி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து கீழ்க்கண்ட 15 இடங்களிலும் பயிற்சி அளித்து வருகிறது:—

1.	திருவள்ளூர்	6.	மதுரை	11.	பொள்ளாச்சி
2.	வேலூர்	7.	திண்டுக்கல்	12.	ஈரோடு
3.	விழுப்புரம்	8.	திருநெல்வேலி	13.	கும்பகோணம்
4.	சேலம்	9.	நாகர்கோவில்	14.	காரைக்குடி
5.	தருமபுரி	10.	விருதுநகர்	15.	புதுக்கோட்டை

2021 செப்டம்பர் 8]

இவ்வோட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி பெற்றோர் விவரம் பின்வருமாறு:—

வ. எண்	விவரம்	பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை		
		2019-2020 வரை	2020-2021	2021-2022 (ஜூலை 2021 வரை)
1.	கும்மிடிப்பூண்டி	23515	758	267
2.	திருச்சிராப்பள்ளி	2519	48	19
3.	தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக கனரக வாகன பயிற்சி மையங்கள்	36248	305	116
	மொத்தம்	62282	1111	402
4	புத்தாக்கப் பயிற்சிகள் (கும்மிடிப்பூண்டியில் மட்டும்)	64011	1385	226

4.3 இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள்

1997-98 ஆம் ஆண்டு முதல் இரு இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் இயங்கி வருகின்றன. தற்பொழுது ஈரோட்டில் உள்ள சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரியிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பள்ளிகளில் இதுவரை இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி முடித்தவர்களின் விவரம் வருமாறு:—

வ. எண்	விவரம்	பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை		
		2019-2020 வரை	2020-2021	2021-2022 (ஜூலை 2021 வரை)
1.	தரமணி, சென்னை	2817	173	15
2.	திருச்சிராப்பள்ளி	1069	30	13
3.	ஈரோடு	350	-	16
	மொத்தம்	4236	203	44

[2021 செப்டம்பர் 8

மேலும் அரசு ஆணைப்படி, அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களின் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தலுக்காக ஒரு நாள் சிறப்புப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் கலந்துகொண்டு பயனடைந்தோர் விவரம் வருமாறு:—

வ. எண்	விவரம்	பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை		
		2019-2020 வரை	2020-2021	2021-2022 (ஜூலை 2021 வரை)
1.	தரமணி, சென்னை	6747	342	50
2.	கும்மிடிப்பூண்டி	3420	188	3
3.	திருச்சிராப்பள்ளி	25254	345	19
	மொத்தம்	35421	875	72

4.4 திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம்

போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, சாலைப் போக்குவரத்து நிறுவனம், தரமணி மற்றும் சாலைப் போக்குவரத்து நிறுவன சாலை மற்றும் போக்குவரத்து தொழில்நுட்பக் கல்லூரி, ஈரோடு போன்ற இடங்களில் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 31.07.2021 அன்றுள்ளவாறு 1,944 பயிற்சிகளின்மூலம் மொத்தம் 41,055 போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

மேலும், போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான தேர்வுகள் ஆண்டுதோறும் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.

4.5 சாலைப் போக்குவரத்து இதழ்

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு இதுவரை 526 ஆராய்ச்சி அறிக்கைகள், 30 ஆலோசனை அறிக்கைகள் வெளியிட்டுள்ளது. மேலும், அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு பயன்படும் வகையில் விபத்து விசாரணை கையேடு என்ற வழிகாட்டியினை வெளியிட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

இந்நிறுவனம், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பயன்பெறும் வகையில் தொழில்நுட்பக் கையேட்டினை வெளியிட்டுள்ளது. சாலைப் போக்குவரத்து, சாலைப் பாதுகாப்பு, மின்னணு பயணச்சீட்டு மற்றும் விபத்து ஒப்பீடு குறித்த தகவல்கள் அடங்கிய "சாலைப் போக்குவரத்து கையேடு" என்ற காலாண்டு இதழினை சாலைப் போக்குவரத்து நிறுவனம் வெளியிடுகிறது.

4.6 கொள்முதல் நடவடிக்கைகள்

அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், உருளிப்பட்டை, முழுவதுமாக கட்டப்பட்ட பேருந்துகள், பேருந்து கூண்டு கட்டுதல், பயணச்சீட்டு அச்சிடுதல், உருளிப்பட்டை புதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள் மற்றும் மசகு எண்ணெய் (Lubricants) ஆகியவற்றினை வாங்குவதற்கு சாலைப் போக்குவரத்து நிறுவனம் ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) செயல்பட்டு வருகிறது.

4.7 கல்வி நிறுவனங்கள்

போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகன ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காகவும், போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் வாரிசுதாரர்களின் நலனுக்காகவும், 1984 ஆம் ஆண்டில் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி இந்நிறுவனத்தால் ஈரோடு மாவட்டம் சித்தோட்டில் துவக்கப்பட்டது. இக்கல்லூரியில், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் ஆண்டுதோறும் 462 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இக்கல்லூரியில் இதுவரை 9,902 மாணவர்கள் இளநிலை பொறியியலிலும் (பி.இ), 228 மாணாக்கர்கள் முதுகலை (கட்டடவியல்) பொறியியலிலும் (எம்.இ), 35 மாணாக்கர்கள் முதுகலை (கணினி) அறிவியலிலும் பட்டங்கள் பெற்றுள்ளனர். தற்போது இக்கல்லூரி உயர் கல்வி துறையின்கீழ் 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுமென்றும், அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு 35 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படுமென்றும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண்.165, (உயர் கல்வித் (ஜே2) துறை), நாள் 27.08.2021).

இக்கல்லூரியில் உள்ள மொத்த இடங்கள் மற்றும் நிரப்பப்படும் இடங்களின் விவரம் பின்வருமாறு:—

வ. எண்	விவரம்	மொத்த இடங்கள்	நிரப்பப்படும் இடங்களின் எண்ணிக்கை	
			அரசு ஒதுக்கீட்டு இடங்கள்	நிருவாக ஒதுக்கீட்டு இடங்கள்
1.	இளங்கலை பொறியியல் பட்டப் பிரிவு	462	300 (65%)	162 (35%)
2.	முதுகலைப் பட்டம் (கட்டடவியல்)	24	16 (65%)	8 (35%)
3.	முதுகலைப் பட்டம் (கணினி பொறியியல்)	12	8 (65%)	4 (35%)

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் மூன்று தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகள், குரோம்பேட்டை, பர்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. தற்போது, இம்மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் ஆண்டுதோறும் மொத்தம் 770 மாணவர்கள் பட்டய பொறியாளர் படிப்பில் நான்கு பிரிவுகளில் அனுமதிக்கப்படுகிறார்கள்.31.07.2021 அன்றுள்ளவாறு, இம்மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் சேர்த்து 10,107 மாணவர்கள் பட்டயங்கள் பெற்றுள்ளனர்.

இம்மூன்று தொழில்நுட்பப் பயிலகங்களில் உள்ள மொத்த இடங்கள் மற்றும் நிரப்பப்படும் இடங்களின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	விவரம்	மொத்த இடங்கள்	நிரப்பப்படும் இடங்களின் எண்ணிக்கை	
			அரசு ஒதுக்கீட்டு இடங்கள்	நிருவாக ஒதுக்கீட்டு இடங்கள்
1.	பட்டயப் பொறியியல்	770	385 (50%)	385 (50%)

2021 செப்டம்பர் 8]

4.8 உபகரணங்கள் பரிசோதனை மற்றும் தரக்கண்காணிப்பு

சாலைப் போக்குவரத்து நிறுவனத்திலுள்ள உபகரணங்கள் பரிசோதனைக் கூடத்தில் 54 வகையான மோட்டார் வாகன உதிரிபாகங்கள் ASRTU *மற்றும்* BIS *விவரக் குறிப்பீடுகளின்படி, பரிசோதனை செய்யும் வசதி உள்ளது. இப்பரிசோதனைக் கூடத்தில் 31.07.2021 அன்றுள்ளவாறு 5,916 மாதிரிக் கூறுகள் (*Samples*) பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.*

அத்தியாயம்–5

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவானது, 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ.50 இலட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன், ரூ.10 இலட்சம் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்துடன், தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. சாலை போக்குவரத்துத் தொடர்பான ஆலோசனைகள் வழங்குவதே இந்நிறுவனத்தின் முக்கிய அடிப்படை நோக்கமாகும்.

*இந்நிறுவனம் தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் தயாரிப்பு, ஆவணங்களை கணினி மயமாக்குதல், போக்குவரத்துப் பணி, அறிவார்ந்த போக்குவரத்து முறைகள் ஆகிய பல்வேறு துறைகளில் தனது ஆலோசனை சேவைகளை அளித்து வருகிறது. இந்நிறுவனம் பின்வரும் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது 1. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்காக, சென்னை பேருந்து விரைவுப் போக்குவரத்து அமைப்பு (*BRTS*)-க்கான விரிவான திட்ட அறிக்கை (*DPR*) தயாரித்தல், 2. நிகழ்நிலை இணையதள முன்பதிவு வசதியைக் கண்காணித்தல் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மேற்கொள்ளுதல்.*

அத்தியாயம்–6

தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை

6.1 தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை ஓர் அறிமுகம்

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுத் துறை வாகனங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு, தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயங்கி வருகிறது. பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் 20 அரசு தானியங்கி பணிமனைகளையும்,

[2021 செப்டம்பர் 8

அவற்றின் செயல்பாடுகளை முறையாகக் கண்காணித்து, நடைமுறைப்படுத்த திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் மூன்று மண்டல துணை இயக்குனரகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இத்துறையின்கீழ் இருபது அரசு தானியங்கி பணிமனைகள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன:

1	சென்னை	6	வேலூர்	11	கடலூர்	16	இராமநாதபுரம்
2	சேலம்	7	ஈரோடு	12	காஞ்சிபுரம்	17	திருநெல்வேலி
3	தருமபுரி	8	திருச்சிராப் பள்ளி	13	விழுப்புரம்	18	விருதுநகர்
4	கோயம்புத்தூர்	9	தஞ்சாவூர்	14	மதுரை	19	தூத்துக்குடி
5	உதகமண்டலம்	10	திண்டுக்கல்	15	சிவகங்கை	20	நாகர்கோவில்

அரசுத் துறை ஊர்திகளுக்கான தரமான பராமரிப்புப் பணிகளை சிக்கனமான செலவில் திறம்பட அளிப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

6.2 அரசு மத்திய தானியங்கி பணிமனை

சென்னை அரசு மத்திய தானியங்கி பணிமனை, பொது மேலாளர் அவர்களின் மேற்பார்வையின்கீழ் இயங்கி வருகிறது. இப்பணிமனையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பாதுகாப்பு வாகனங்கள், அமைச்சர் பெருமக்கள், முக்கிய பிரமுகர்கள், அரசுச் செயலாளர்கள் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் ஆகியோரின் வாகனங்களின் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. புதிய தொழில்நுட்பம், எரிபொருள் சிக்கனம், பாதுகாப்பு போன்றவற்றினை கருத்திற்கொண்டு அரசுத் துறைக்கு புதிய தலைமுறை வாகனங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. அவ்வாகனங்கள் அரசு மத்திய தானியங்கி பணிமனையில் பராமரிப்பு செய்யப்படுகின்றன.

6.3 மாவட்டங்களில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகள்

திருச்சி, மதுரை மற்றும் சேலத்தில் மண்டல துணை இயக்குநரின் கட்டுப்பாட்டில் மூன்று அரசு தானியங்கி பணிமனைகள் இயங்கி வருகின்றன. பிற சார்நிலை அலுவலகங்கள் கோயம்புத்தூர், வேலூர், தருமபுரி, நாகர்கோவில், கடலூர், ஈரோடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், காஞ்சிபுரம், திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல்

2021 செப்டம்பர் 8]

ஆகிய இடங்களில் உள்ள அரசுதானியங்கி பணிமனைகள், தானியங்கி பொறியாளர்கட்டுப்பாட்டிலும், தூத்துக்குடி, விழுப்புரம், உதகமண்டலம், விருதுநகர் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகள் பொது முதலாள் / தொழில்நுட்ப உதவியாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன.

சுமார் 21,469 அரசுத் துறை வாகனங்களை இத்துறை பராமரித்து வருகிறது. முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசுச் செயலர்களின் வாகனங்களுக்கான சிறுசிறு பழுதுகளை நீக்கி, பராமரிப்பு சுத்திகரிப்புப் பணிகளை கவனிப்பதற்காக சேவை மையம் மற்றும் இவ்வாகனங்களுக்குத் தேவையான எரிபொருள் வழங்கும் நிலையம் சென்னையில் தலைமைச் செயலகத்தின் அருகில் செயல்பட்டு வருகிறது. அரசுத்துறை ஊர்திகளுக்கு எரிபொருள் வழங்குவதற்காக இத்துறையின் பல்வேறு பணிமனைகளில் மொத்தம் 10 எரிபொருள் கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன.

2021-2022 ஆம் நிதியாண்டில் (31.07.2021 வரை), இத்துறையின்மூலம் பழுதுநீக்கம் செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 7,790 ஆகும்.

மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கும் திருச்சி, சேலம் மற்றும் மதுரை ஆகிய அரசு தானியங்கி பணிமனைகளில் அரசுத் துறை ஓட்டுநர்களின் பணித் திறமையை மேம்படுத்தவும் அவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி, அவ்வப்போது அளிக்கும் பொருட்டு ஓட்டுநர் பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

6.4 அரசு தானியங்கி நடமாடும் பணிமனை

அரசு தானியங்கி பணிமனை இல்லாத பிற மாவட்டங்களில் இயக்கப்படும் அரசு துறை ஊர்திகள் அருகில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகளுக்கு பழுது நீக்குவதற்காக எடுத்துச் செல்லப்படுகின்றன. இதனால் ஏற்படும் எரிபொருள் செலவு மற்றும் கால விரயத்தினைத் தவிர்க்கும் பொருட்டு தேவையான ஆய்வு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அரசு தானியங்கி நடமாடும் பணிமனையினை முன்னோட்ட அடிப்படையில் திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இந்நடமாடும் அரசு தானியங்கி பணிமனைகள் அருகில் அமைந்துள்ள அரசு தானியங்கி பணிமனை இல்லாத மாவட்டங்களான புதுகோட்டை, அரியலூர், பெரம்பலூர்,

நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை ஆகியவற்றிற்கு நேரடியாகச் சென்று அங்கு இயக்கப்படும் அரசுத் துறை வாகனங்களுக்கு பழுதுகளை நீக்கி வருகின்றன.

6.5 அரசுத் துறை வாகனங்களை கழிவு செய்தல்

இத்துறை, அரசாணை (நிலை) எண்.2275, உள்(போக்குவரத்து-இ) துறை நாள் 10.10.1990-ன்மூலம் வெளியிடப்பட்ட வழிக்காட்டுதலின்படி அரசு வாகனங்களை கழிவு செய்து வருகிறது. மேலும் ஒன்றிய அரசு / அரசு நிறுவனங்கள் / அரசு வாரியங்கள் ஆகியவற்றின் வாகனங்களை நடைமுறையிலுள்ள வழிகாட்டுதலின்படி, கழிவு செய்ய இத்துறை தகுதிபெற்றுள்ளது.

அரசாணை (நிலை) எண்.51. போக்குவரத்து (எச்-2) துறை, நாள் 06.05.2019-ன்படி கழிவு செய்யப்பட்ட அரசுத் துறைகளுக்கு சொந்தமான வாகனங்களை மின்னணு ஏல விற்பனை முறையில் (Ėdauction) திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி (M/s. MSTC) மூலம், வாகன சான்று புத்தகத்தை அதற்குண்டான மண்டல போக்குவரத்து அதிகாரியிடம் ஒப்படைப்பு செய்தபின், இத்துறை கழிவு செய்து வருகிறது.

01.04.2021 முதல் 31.07.2021 வரை பயனற்றதென கழிவு செய்யப்பட்ட அரசுத் துறை வாகனங்களின் எண்ணிக்கை

கனரக மோட்டார் வாகனங்கள்	மகிழுந்து	ஈப்பு	வேன்	மோட்டார் சைக்கிள்	மொத்தம்
10	26	60	21	63	180

அத்தியாயம் –7

துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு

விமான நிலையங்கள் மற்றும் ரயில்வே திட்டங்கள்

7.1 தமிழ்நாடு மாநிலத்தில் நில நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் விமான நிலையங்களை விரிவாக்கம் செய்வதற்கும், புதிய இரட்டை இரயில் பாதை / இரயில் பாதை உருவாக்குவதற்கும் நிலங்களை கையகம்

2021 செப்டம்பர் 8]

செய்து இரயில்வே துறை மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைக்கு வழங்குவதற்கு போக்குவரத்துத் துறை முகமை துறையாக செயல்படுகிறது.

7.2 தமிழ்நாட்டில் விமான நிலைய விரிவாக்கத் திட்டங்கள்

2007 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கொள்கை முடிவின்படி புதிய விமான நிலையம் அமைக்கவும், விரிவாக்கம் செய்யவும் நிலங்களை கையகப்படுத்தி, அதை இலவசமாகவும், எந்தவித வில்லங்கமும் இல்லாமல் விமான நிலைய ஆணையத்திற்கு ஒப்படைக்கப்படுகிறது.

சென்னை விமான நிலையம்:

இந்திய விமான நிலைய ஆணையம் 64.57 ஏக்கர் பட்டா நிலம் கையகம் செய்யவும் மற்றும் 11.58 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தை நில உரிமை மாற்றம் செய்யவும் மாநில அரசை கேட்டுக் கொண்டுள்ளது. ஓடுபாதைகள் விரிவாக்கம், எளிய அணுகுமுறை விளக்கு வசதி, ஹேங்கர்கள் கட்டுதல் மற்றும் இணையான டாக்ஸி டிராக் கட்டுமானம், கேட் (CAT) அணுகுமுறை விளக்கு நிறுவுதல், எரிபொருள் பண்ணை நிறுவுதல் போன்றவற்றுக்காக பட்டா நிலத்தை கையகப்படுத்தும் பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

மேலும், பாதுகாப்பு அமைச்சகத்திற்கு சொந்தமான 16.89 ஏக்கர் நிலத்தை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு நில மாற்றம் செய்ய தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மதுரை விமான நிலையம்:

தென் மாவட்டங்களில் உள்ள முக்கியமான விமான நிலையங்களில் ஒன்றான மதுரை விமான நிலையம், மதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களின் தேவைகளை பூர்த்தி செய்கிறது. அதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இந்தியக் விமான நிலைய ஆணையம் மதுரை விமான நிலையத்தினை விரிவாக்கம் செய்ய முடிவு செய்தது. அதன்படி நிலத் திட்ட அட்டவணை பெறப்பட்டு, 460.15 ஏக்கர் பட்டா நிலத்தை கையகப்படுத்த நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது, அவை கையகப்படுத்தப்பட்டு இந்திய விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான 161.53 ஏக்கர் புறம்போக்கு நிலங்களில் 75.38 ஏக்கர்

[2021 செப்டம்பர் 8

ஏற்கெனவே நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. மீதமுள்ள 86.15 ஏக்கர் (நீர்நிலை புறம்போக்கு) நில உரிமை மாற்றம் செய்வதற்கு நில நிருவாக ஆணையர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.

கோயம்புத்தூர் விமான நிலையம்:

கோயம்புத்தூர் விமான நிலையத்தில் ஓடுதளம் விரிவாக்கத்திற்காக 612.97 ஏக்கர் பட்டா / புறம்போக்கு நிலத்தைக் கையகப்படுத்தி / நில உரிமை மாற்றம் செய்து மேற்படி நிலங்களை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு எவ்வித வில்லங்கம் இன்றி இலவசமாக வழங்கிட அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. கள ஆய்வின் போது, கோரப்பட்ட அசல் நிலப்பரப்பளவு 627.89 ஏக்கராக (612.97+14.92) அதிகரிக்கப்பட்டுள்ளது. அவற்றில், 490.27 ஏக்கர் (461.90 ஏக்கர் பட்டா மற்றும் 28.37 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள்) நிலங்களுக்கு திருத்தப்பட்ட நிருவாக அனுமதி 2017-இல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 28.37 ஏக்கர் புறம்போக்கு நிலம் மற்றும் 3.3 ஏக்கர் பிற துறை சார்ந்த நிலம் போன்றவற்றை நில உரிமை மாற்றம் செய்ய கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், 134.54 ஏக்கர் பாதுகாப்புத் துறை சார்ந்த நிலங்கள் கோயம்புத்தூர் விமான நிலைய விரிவாக்கத்திற்காக தேவைப்படுவதால், மேற்படி நிலத்தை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி விமான நிலையம்:

திருச்சிராப்பள்ளி விமான நிலைய விரிவாக்கத்திற்காக, 294.06 ஏக்கர் பட்டா நிலம், 33.23 ஏக்கர் புறம்போக்கு நிலம் மற்றும் 337.49 ஏக்கர் பாதுகாப்புத் துறை நிலம் ஆகியவற்றை கையகப்படுத்த அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை, 38.88 ஏக்கர் பட்டா நிலம் மட்டும் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 255.18 ஏக்கர் பட்டா நிலங்களை கையகப்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரால் 33.23 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் சென்னை நில நிருவாக ஆணையருக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2021 செப்டம்பர் 8]

மேலும், விரிவாக்க நோக்கத்திற்காகத் தேவைப்படும் 337.49 ஏக்கர் பரப்பளவில் பாதுகாப்புத் துறை நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பாதுகாப்புத் துறை நிலங்களுக்குப் பதிலாக மாற்று நிலத்தை வழங்க மாநில அரசு பரிந்துரைத்துள்ளது.

சேலம் விமான நிலையம்:

சேலம் விமான நிலைய விரிவாக்கத்திற்காக தேவைப்படும் 535.10 ஏக்கர் பட்டா நிலத்தை கையகப்படுத்தவும், 32.33 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்யவும் அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. பட்டா நிலங்களைக் கையகம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சியரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தூத்துக்குடி விமான நிலையம்:

தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத்திற்காக தேவைப்படும் 605.77 ஏக்கர் நிலம் கையகப்படுத்துதல்/ நில உரிமை மாற்றம் செய்தல் போன்றவற்றிற்காக அரசு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான பணிகள் முடிவடைந்து, இந்திய விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத்திற்காக தேரி சாலையை மாற்றுவதற்கு 96.79 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7.3 மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டம் (உதான்)

குறைந்த விலையில் விமானப் பயணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒன்றிய அரசின் விமானப் போக்குவரத்து அமைச்சகம் மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தை (உதான்) அறிமுகப்படுத்தியுள்ளது. தமிழக அரசு மண்டலங்களுக்குள் விமான நிலைய இணைப்பு (உதான்) திட்டத்தை செயல்படுத்த ஒன்றிய அரசின் விமான போக்குவரத்து அமைச்சகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. மண்டலங்களுக்கு இடையேயான விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின்கீழ் உள்ள விமான நிலையங்களுக்கு பின்வரும் சலுகைகள் தமிழக அரசால் வழங்கப்படுகின்றன:

- *இத்திட்டத்தின்கீழ் இயங்கும் விமான நிலையங்கள் மற்றும் விமானங்களுக்கு வழங்கப்படும் விமான எரிபொருளுக்கான (Air Turbine fuel) மதிப்புக் கூட்டு வரி (VAT) 1% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.*

- *இத்திட்டத்தின்கீழ் உள்ள விமான நிலையங்களுக்கு பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு சேவைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.*

- *20% சாத்தியக் கூறு இடைவெளி நிதி (Viability Gap Fund) தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின்மூலம் விமானம் இயக்கும் நிறுவனத்திற்கு (Air Line Operators) வழங்கப்பட்டு வருகிறது.*

- *உதான் திட்டத்தின்கீழ் செயல்பாட்டிற்கு வரும் ஒவ்வொரு விமான நிலையத்திற்கும் 50% இருக்கைகளேனும் விற்பனை செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடன்கூடிய உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.*

அ) சேலம் விமான நிலையம்

சேலம் விமான நிலையத்திலிருந்து 25.03.2018 முதல் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இது பயணிகளிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

ஆ) நெய்வேலி விமான நிலையம்

நெய்வேலி விமான நிலையத்தில் விமானங்களை இயக்குவதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் தயாராக உள்ளன. விமானப் போக்குவரத்து இயக்குனரகத்தின் உரிமம் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விமான நிலையத்திலிருந்து விமானங்கள் விரைவில் இயக்கப்படும்.

இ) ஒசூர் விமான நிலையம்

ஒசூர் விமான நிலையத்தை மேம்படுத்துவதற்காக தமிழக அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மேலும், இந்த தனியார் விமான நிலையத்தினை பொது விமான நிலையமாக மாற்றுவதற்கு ஒன்றிய அரசின் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் சில பிரிவுகள் தொழில்நுட்ப

2021 செப்டம்பர் 8]

சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்தது. பயணிகளுக்குத் தேவையான வசதிகள் இந்த விமான நிலையத்தில் இல்லாமலிருந்தபோதிலும், தொழில்நுட்பக் குழு இவ்விமான நிலையத்தினை ஆய்வு செய்து, கட்டுமானம் மற்றும் மின்சாரப் பணிகளை மேற்கொள்வதற்கும் தற்போதுள்ள ஓடுதளத்தின் இரண்டு பகுதிகளிலும் 75 மீட்டர் விரிவாக்கம் செய்யவும் தோராயமாக ரூ.30 கோடி தேவையென்று மதிப்பீடு செய்தது. ஒன்றிய அரசின் விமானப் போக்குவரத்து அமைச்சக தொழில்நுட்பக் குழு தெரிவித்தவாறு பயணிகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக கட்டுமானப் பணிகள் மற்றும் மின்சாரப் பணிகளுக்குத் தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்வதுடன் தற்போதுள்ள ஓடுதளத்தினை இருபக்கமும் விரிவாக்கம் செய்வதற்குத் தேவையான 75 மீட்டர் நிலத்தினை கையகம் செய்து ஒப்படைக்குமாறு தமிழக அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. தமிழக அரசும் ஓசூர் விமான நிலையத்தை ஒரு முழுமையான விமான நிலையமாக மாற்றுவதற்குத் தேவையான முதலீடு செய்வதற்கு தனது இசைவினைத் தெரிவித்துள்ளது.

ஈ) வேலூர் விமான நிலையம்

இரண்டாம் உலகப் போரின்போது இருந்த வேலூர் விமான நிலையத்தினை தற்போது விரிவுபடுத்திட 10 ஏக்கர் பட்டா மற்றும் 51.57 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை கையகம் / நில உரிமை மாற்றம் செய்திட அரசின் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நில எடுப்புப் பணிகள் மற்றும் மாநில நெடுஞ்சாலையை மாற்றியமைக்கும் பணிகள் தற்பொழுது நடைப்பெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள ரயில்வே திட்டங்கள்

7.4 (அ)இரட்டை இரயில் பாதை திட்டங்கள்

விழுப்புரம் - திண்டுக்கல் இரட்டை அகல இரயில் பாதை மற்றும் மின்மயமாக்கல் திட்டம்.

இத்திட்டம், தமிழகத்தின் வடக்கு மற்றும் தெற்கு மாவட்டங்களை இணைத்து அதிக பயணிகளின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்யும் மதிப்புமிக்க திட்டமாகும். இத்திட்டத்திற்காக விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள 319.93 ஏக்கர் பட்டா நிலம், 121.67 ஏக்கர் புறம்போக்கு நிலம், இரட்டை அகல இரயில்பாதை மற்றும் மின்மயமாக்கல் திட்டத்தின்கீழ் நில

எடுப்பு செய்ய நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 144.16 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 175.77 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் இரட்டை இரயில் பாதை அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. இதனை வருவாய் பதிவேடுகளில் பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புறம்போக்கு நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கை மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

ஓமலூர் - மேட்டூர் அணை இரட்டை அகல இரயில் பாதை திட்டம்

இத்திட்டத்திற்காக சேலம் மாவட்டத்தில் உள்ள 15 கிராமங்களில் 61.16 ஏக்கர் பட்டா நிலம் மற்றும் 11.00 ஏக்கர் புறம்போக்கு நிலங்களைக் கையகம் செய்ய நிருவாக அனுமதி வழங்கி நில எடுப்பு செய்யும் பணி நிறைவடைந்து வருவாய் பதிவேடுகளில் பதியும் பணி நடைபெற்று வருகிறது. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கை மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

மதுரை — தூத்துக்குடி இரட்டை அகல இரயில் பாதை திட்டம்

இவ்வழித்தடம் மதுரை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களின் வழியாகச் செல்கிறது. இம்மாவட்டங்களில் உள்ள 245.23 ஏக்கர் பட்டா நிலம் மற்றும் 48.12 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, நில எடுப்புப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

கன்னியாகுமரி — திருவனந்தபுரம் இரட்டை அகல இரயில் பாதை திட்டம்

இந்த இரயில் பாதையானது 3 வகையான வழித்தடங்களுக்கான அதாவது கன்னியாகுமரியிலிருந்து நாகர்கோவில் வரை, நாகர்கோவிலிலிருந்து இரணியல் வரை மற்றும் இரணியலில் இருந்து பாரசாலா வரையிலான வழித்தடங்களில் செல்கிறது. கன்னியாகுமரியில் இருந்து நாகர்கோவில் வரையிலான வழித்தடத்திற்குத் தேவையான 10.81 ஏக்கர் நிலம் கையகம்

2021 செப்டம்பர் 8]

செய்வதற்கும் மற்றும் நாகர்கோவிலிலிருந்து இரணியல் வரையிலான வழித்தடத்திற்குத் தேவையான 26.25 ஏக்கர் நிலம் கையகம் செய்வதற்கும் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இரணியலிலிருந்து பாரசாலா வரையிலான வழித்தடத்திற்குத் தேவையான நிலம் எடுப்பதற்கு நிருவாக அனுமதி வழங்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

மணியாச்சி - நாகர்கோவில் இரட்டை அகல இரயில் பாதை திட்டம்

இத்திட்டத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 3 மாவட்டங்கள் உள்ளடங்கியுள்ளன. மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள 208.41 ஏக்கர் பட்டா நிலம் மற்றும் 39.48 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை நில எடுப்பு செய்ய நிருவாக அனுமதியினை அரசு வழங்கியுள்ளது. நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள சிறப்புப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு, நில எடுப்புப் பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

(ஆ) புதிய இரயில்வே வழித்தடங்கள்

மீளவிட்டான் – மேலமருதூர் (மதுரை – தூத்துக்குடி வழி அருப்புகோட்டை) புதிய அகல இரயில் பாதை திட்டம்

இப்புதிய இரயில் பாதை தூத்துக்குடி துறைமுகம் மற்றும் இப்பகுதியில் வரவிருக்கும் மின் உற்பத்தி நிலையங்களுக்கு முக்கிய இணைப்பை வழங்கும். தூத்துக்குடி மாவட்டத்தில் 175.58 ஏக்கர் பட்டா நிலம் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டு தெற்கு இரயில்வேயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் தாலுகாவில் உள்ள வாளசமுத்திரம் கிராமத்தில் பாலம் அமைப்பதால் 200 மீட்டர் தூரத்தைத் தவிர வடசிலுக்கான்பட்டியிலிருந்து மேலமருதூர் வரை சுமார் 17.15 கி.மீ தூரத்திற்கு இரயில் பாதை அமைக்கும் பணி ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளது. 10.47 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான கருத்துரு மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

சின்னசேலம் – கள்ளக்குறிச்சி அகல இரயில் பாதை திட்டம்

இது சின்னசேலத்திலிருந்து கள்ளக்குறிச்சியை 16 கி.மீ. தூரத்திற்கு இணைக்கும் புதிய ரயில் பாதை ஆகும். கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் 11 கிராமங்களில் 118.63 ஏக்கர் பட்டா நிலம் மற்றும் 7.51 ஏக்கர் புறம்போக்கு நிலத்தைக் கையகப்படுத்த அரசு நிருவாக

[2021 செப்டம்பர் 8

அனுமதி வழங்கியுள்ளது. 36.60 ஏக்கர் பட்டா நிலங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டு தெற்கு இரயில்வேயிடம் நிலம் ஒப்படைக்கப்பட்டது. மீதமுள்ள 74.52 ஏக்கர் பட்டா நிலத்தை கையகப்படுத்துவது தொடர்பான நடவடிக்கை பல்வேறு கட்டங்களில் உள்ளது. 7.51 ஏக்கர் புறம்போக்கு நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கை மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

திண்டிவனம் — நகரி அகல இரயில் பாதை திட்டம்

இத்திட்டம் திண்டிவனம் (தமிழ்நாடு) - நகரி (ஆந்திர பிரதேசம்) இடையே, விழுப்புரம், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை மற்றும் திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களைக் கடந்து செல்லும் வகையில் இரயில் பாதை அமையவுள்ளது. 1345.22 ஏக்கர் பட்டா நிலம் மற்றும் 299.89 ஏக்கர் புறம்போக்கு நிலத்தைக் கையகப்படுத்த அரசு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 194.61 ஏக்கர் நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1150.61 ஏக்கர் பட்டா நிலங்களைக் கையகப்படுத்துவது தொடர்பான நடவடிக்கை பல்வேறு நிலைகளில் உள்ளது. 299.89 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கை மாவட்ட ஆட்சியர்களின் பரிசீலனையில் உள்ளது.

சென்னை கடற்கரை - கொருக்குப்பேட்டை இடையே 3-வது மற்றும் 4-வது புதிய இரயில் பாதை திட்டம்

சென்னை கடற்கரை – கொருக்குப்பேட்டை இடையே 3-வது மற்றும் 4-வது புதிய இரயில் பாதை சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் வழியாக செல்கிறது. இது சென்னை கடற்கரை மற்றும் கும்மிடிப்பூண்டி இடையே புறநகர் இரயில் பயணிகளின் சேவைக்காக அமைக்கப்பட்டுள்ளது. 506 சதுர மீட்டர் நிலப்பரப்பை கையகப்படுத்த அரசு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, இழப்பீட்டுத் தொகை வழங்கும் நிலையில் உள்ளது.

கொருக்குப்பேட்டை - எண்ணூர் இடையே 4-வது புதிய இரயில் பாதை அமைக்கும் திட்டம்

கொருக்குப்பேட்டை முதல் எண்ணூர் வரை 4-வது இரயில் பாதை அமைப்பதற்காக 12516 சதுர மீட்டர் நிலத்தை கையகப்படுத்த தெற்கு ரயில்வே துறையில் நிலத் திட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது திருத்தப்பட்ட நிலத் திட்ட அட்டவணை 12629 சதுர மீட்டர் பரப்பளவில் பெறப்பட்டு,

2021 செப்டம்பர் 8]

நிருவாக ஒப்புதல் வழங்குவதற்கான நடவடிக்கை பரிசீலனையில் உள்ளது.

கொருக்குப்பேட்டை - எண்ணூர் இடையே 3-வது மற்றும் 4-வது இரயில் பாதை அமைக்கும் திட்டம்

இத்திட்டத்திற்காக, 2429 சதுர மீட்டர் நிலப்பரப்பைக் கையகப்படுத்த அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆனால் கேட்புத் துறை (இரயில்வே) தற்போது திருத்தப்பட்ட நிலத் திட்ட அட்டவணையை 537 சதுர மீட்டருக்கு சமர்ப்பித்துள்ளது. இந்தக் கருத்துரு நில நிருவாக ஆணையர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.

அத்தியாயம் - 8

சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

8.1 சாலைப் பாதுகாப்பு

நாட்டில் அதிக எண்ணிக்கையிலான மோட்டார் வாகனங்களைக் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். தற்போது அது 3 கோடியைத் தாண்டியுள்ளது. மேலும், நாட்டின் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது மாநிலத்தில் அதிக வாகன நகர்வுகள் உள்ளன. இதன் விளைவாக அதிக போக்குவரத்து நெரிசல், சாலையில் விபத்துகள் மற்றும் அதிக மாசு ஏற்படுகிறது. சாலைப் பாதுகாப்பில் அரசுப் போக்குவரத்து கழகங்களின் பங்கு முக்கியமானதாகும்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின்மூலம் விபத்து இல்லாத தமிழகத்தை நோக்கி என்ற அரசின் தொலைநோக்கு இலக்கை அடைய போக்குவரத்துத் துறை, போக்குவரத்து ஆணையரகத்துடன் இணைந்து செயல்படுகிறது.

மாநில சாலைப் பாதுகாப்பு ஆணையரகம் மாநிலத்தில் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. போக்குவரத்து ஆணையர் சாலைப் பாதுகாப்பு ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கள அளவிலான நடவடிக்கைகளைக் கண்காணித்து சாலைப் பாதுகாப்பு கொள்கைகளை செயல்படுத்துவது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவார்.

[2021 செப்டம்பர் 8

8.2 மாநில சாலைப் பாதுகாப்பு மன்றம்

தமிழ்நாடு ஏற்கெனவே சாலைப் பாதுகாப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தி அதற்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் நிருவாக அமைப்பினை ஏற்படுத்தியுள்ளது. சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்ய, உயர் மட்ட சாலைப் பாதுகாப்பு மன்றம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 20 உறுப்பினர்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இம்மன்றம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடுகிறது.

8.3 மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு

மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படுகிறது. அது மாவட்டங்களில் எழும் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்கிறது. இக்குழு அந்தந்த மாவட்டங்களில் தேவையான சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இந்த மாவட்ட சாலைப் பாதுகாப்பு குழு மாதம் ஒருமுறை கூடும். இக்குழு சாலைப் பாதுகாப்பை ஊக்கப்படுத்துவதுடன், சாலைகளில் அடிக்கடி விபத்துகள் ஏற்படும் பகுதிகளைக் கண்டறிதல், சாலைகளை பராமரித்தல், ஓட்டுநர்கள் பயிற்சி, விபத்து பகுப்பாய்வு, விளம்பர முயற்சிகள், போக்குவரத்து திட்டமிடல், நெடுஞ்சாலை ரோந்து, பயணிகள் வசதிகள் போன்றவற்றில் சிறப்பு கவனமும் செலுத்துகிறது.

சென்னை நகரைப் பொறுத்தவரையில், சென்னை நகரத்தில் சாலைப் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு சிக்கல்களைத் தீர்க்க சென்னை மாநகர காவல் ஆணையர் தலைமையில் சென்னை மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

8.4 சாலைப் பாதுகாப்பு நிதி

சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைக்காக போக்குவரத்து / காவல் துறைகளால் சேகரிக்கப்பட்ட இணக்கக் கட்டணம் மற்றும் உடனடி அபராதங்களின்மூலம் கிடைக்கப்பெறும் நிதியிலிருந்து “சாலைப் பாதுகாப்பு நிதி” அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. சாலைப் பாதுகாப்பு நிதி, உள் துறை செயலாளர் தலைமையில் உள்ள துறைகளுக்கிடையிலான குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கப்படுகிறது.

2021 செப்டம்பர் 8]

8.5 சாலை விபத்து தரவு மேலாண்மை முறை

சாலை விபத்து தரவு மேலாண்மை முறை என்பது தமிழ்நாடு சாலை கட்டமைப்பு திட்ட நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் ஒரு மென்பொருள் மேலாண்மை முறையாகும். இத்திட்டத்தில் சாலை விபத்துகளின் காரணங்கள் குறித்து பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையில் அடிக்கடி விபத்து நடக்கும் பகுதிகளைக் கண்டறிந்து அதனை மேம்படுத்திட தகுந்த தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க இயலும்.

இத்திட்டத்தில் காவல் துறையானது சாலை விபத்து அறிக்கை படிவத்தில் தங்கள் துறை தொடர்பான விவரங்களைப் பதிவேற்றம் செய்து பின்னர் பிற துறைகள் அவரவர் துறைகளின் தகவல்களைப் பதிவு செய்யும் பொருட்டு உள் (போக்குவரத்து)த் துறைக்கு அனுப்பி வைக்கிறது. உள்(போக்குவரத்து)த் துறை மோட்டார் வாகனங்கள் குறித்த விவரங்களைப் பதிவேற்றம் செய்து நெடுஞ்சாலைத் துறைக்கு அனுப்பி வைக்கிறது. இப்பணிகள் முடிவடைந்த பின்னர் சாலை விபத்து தகவல் மேலாண்மைத் திட்டத்தின்மூலம் பல்வேறு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

8.6 சாலைப் பாதுகாப்பிற்கான தனி நடவடிக்கைகள்

சாலை விபத்துகளைத் தடுக்கவும், விபத்துகளினால் பாதிக்கப்படும் விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றவும், சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் கீழ்க்கண்ட மூன்று முக்கிய பகுதிகளை இலக்காகக் கொண்டு அரசு செயல்படுகிறது:—

அ) தடுப்பு நடவடிக்கைகள்.

ஆ) பொன்னான நேரத்தில் அவசர சிகிச்சை.

இ) அமலாக்க நடவடிக்கைகள்.

மாநிலத்தில் நிகழும் ஒவ்வொரு அபாயகரமான விபத்துகளையும் பகுப்பாய்வு செய்வதற்காக, காவல் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளைச் சார்ந்த அலுவலர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு அதிகமாக விபத்து நடைபெறும் இடத்திற்கு, விபத்து நடைபெறும் நாளிலோ அல்லது மறுநாளோ சென்று பல்வேறு கோணங்களில் ஒரு விரிவான ஆய்வை மேற்கொண்டு பெறக்கூடிய விவரங்களை விரிவாகப் பகுப்பாய்வு செய்து, குறிப்பிட்ட தகவலை வழங்கி,

[2021 செப்டம்பர் 8

எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளைத் தடுக்கத் தேவையான பொருத்தமான நடவடிக்கைகள் தடுப்பு, நிவாரணம் மற்றும் தண்டனைகளைப் பரிந்துரைக்கும் ஒரு விரிவான அறிக்கையைத் தயாரித்து அளிக்கிறது.

8.7 சாலைப் பாதுகாப்பு வாரம்

சாலையைப் பயன்படுத்துபவரிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தில் சாலைப் பாதுகாப்பு வாரம் அனுசரிக்கப்படுகிறது.

சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உயர்த்துவதற்கும், மாநில போக்குவரத்துக் கழக பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளைக் குறைப்பதற்கும் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம் சாலை விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புகள் ஆண்டுதோறும் குறைந்துவருவதை அறிந்துகொள்ளலாம்.

சாலை விபத்துகள் ஏற்படுத்தும் காரணிகளான பேருந்துகளின் பகுதிகள், சாலை விபத்து ஏற்பட்ட நேரம், சாலை விபத்து அடிக்கடி ஏற்படும் மாதங்கள், சாலையைப் பயன்படுத்துவோரின் பிரிவுகள், பாலினம், வயது, ஓட்டுநர்களின் விபத்து வரலாறு மற்றும் அவரது கண்பார்வை பரிசோதனைகள் கண்காணிக்கப்பட்டு தொடர்ந்து ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதன்மூலம் விபத்துகளைக் குறைத்து இறுதியில் அதனை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சாலைப் போக்குவரத்து நிறுவனம் ஒரு விபத்து விசாரணை கையேட்டை வெளியிட்டுள்ளது, இது அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகள் குறித்து ஆய்வு செய்வதற்கு வழிகாட்டியாக செயல்படுகிறது.

8.8 சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கு அரசு போக்குவரத்துக் கழகத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள்

அ) ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான காலமுறை பயிற்சி, பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு மற்றும் சம்பந்தப்பட்டவர்களை ஊக்குவித்தல்.

ஆ) விபத்துக்கள் அதிகமாக நடைபெறும் இடங்களைக் கண்டறிதல்.

2021 செப்டம்பர் 8]

இ) வாகனம் ஓட்டும்பொழுது ஓட்டுநர்கள் கைபேசி உபயோகித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

ஈ) ஓட்டுநர், பேருந்தினை பணிமனையில் ஒப்படைக்கும்போது சுவாசப் பரிசோதனைக் கருவிகளைக் கொண்டு, மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய சோதனைகள் நடத்தப்படுகின்றன.

உ) போக்குவரத்துத் துறை மற்றும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பறக்கும் படை உதவியுடன் சுவாசப் பரிசோதனைக் கருவிகளைக் கொண்டு, பணியில் மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய திடீர் சோதனைகள் நடத்துதல். மேலும் காவல் துறையின் மூலமும் தொடர் கண்காணிப்பில் ஈடுபடச் செய்தல்.

ஊ) ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நன்கு ஓய்வு எடுக்கும் வகையில், ஓய்வு அறைகளின் தரம் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

எ) அடிக்கடி விபத்து ஏற்படும் பகுதிகளைக் கண்டறிந்து நெடுஞ்சாலைத் துறை, தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் மற்றும் காவல்துறை உதவியுடன் சாலைகளை மேம்படுத்துதல், போக்குவரத்து தொடர்பான அறிவிப்பு பலகைகளை வைப்பது மற்றும் விபத்து ஏற்படும் பகுதிகளில் எச்சரிக்கை பலகைகளை நிறுவுதல் ஆகியவற்றின்மூலம் விபத்து ஏற்படுவதைத் தடுத்தல்.

ஏ) விபத்தின்றிப் பணிபுரியும் அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதலமைச்சரின் விருதுகள் வழங்கி ஊக்கப்படுத்துதல்.

ஐ) கடந்த சில ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளின்மூலம் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றன. வாகன விபத்துகளின் விவரங்கள் பின்வருமாறு:—

ஆண்டு	இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை	உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் எண்ணிக்கை	உயிரிழப்புகளின் எண்ணிக்கை
2019-2020 (கொரோனாவிற்கு முன்)	19,290	867	969
2020-2021 (கொரோனா காலத்தில்)	19,290	343	381
2021-2022 (கொரோனா காலத்தில்) (ஜூலை 2021 வரை)	19,290	113	123

முடிவுரை

தமிழக அரசு, சமூகத்திலுள்ள அனைத்துத் தரப்பு மக்களும் குறைந்த கட்டணத்தில் பேருந்து சேவையினை பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு 1972 ஆம் ஆண்டு பொதுப் போக்குவரத்து பேருந்து முறையை நாட்டுடைமையாக்கி, கடந்த 50 ஆண்டு காலமாக அதனை நடைமுறைப்படுத்தி வருகின்றது. கல்வி, சமூக நடவடிக்கைகள், சந்தை அணுகுதல் மற்றும் தனி மனித பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கும் வகையில் வேலைவாய்ப்பினை உருவாக்கிக்கொள்ள கிராமங்களை நகரங்களுடன் இணைக்கும் நோக்கத்துடன் பொதுப் போக்குவரத்து செயல்படுகின்றது.

அனைத்து வகையான போக்குவரத்து வளர்ச்சியானது, பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ளது. எனவே, மாநிலத்தில் பொதுப் போக்குவரத்து முறைகளான புறநகர் இரயில், சென்னை மெட்ரோ இரயில், ரயில்வே மற்றும் விமான நிலைய வளர்ச்சிகளுக்கான நடவடிக்கைகளில் போக்குவரத்துத் துறை முக்கிய பங்காற்றுகிறது.

கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு முன்பிருந்த நிலையை அடைய, பயணிகளின் எண்ணிக்கையினை

2021 செப்டம்பர் 8]

அதிகரிப்பதற்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் நடவடிக்கை மேற்கொள்கின்றன. நடப்பாண்டில், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற BS—VI *இணக்கமான டீசல் பேருந்துகள் மற்றும் மின்சாரப் பேருந்துகள் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்படுவதால், பெருமளவு மாசினை கட்டுப்படுத்தலாம்.*

அரசுப் போக்குவரத்துக் கழக சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் (வெள்ளை பலகை) பெண்கள், திருநங்கைகள் மற்றும் 40% மற்றும் அதற்கு மேலுள்ள மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களின் துணையாளர் ஒருவருடன் இலவசமாக பயணம் செய்யலாமென்று அரசாணை வெளியிடப்பட்டு, இதன் மூலம், பெண்கள் தங்களின் அடிப்படை தேவையான வேலை, கல்வி மற்றும் சமூக நடவடிக்கைகள் போன்றவற்றினைப் பூர்த்தி செய்துகொள்ள பேருந்துகளில் பயணம் செய்ய ஊக்கப்படுத்தப்படுகின்றனர். அவற்றில் பேருந்து பயணம் செய்பவர்களில் சுமார் 60 சதவீதத்திற்கு மேலானவர்கள் பெண்கள் ஆவர். திறமையான, வசதியான மற்றும் குறைந்த பயணக் கட்டண அளவில், பொதுப் போக்குவரத்தினை அளிப்பதன்மூலம் சூழலுக்கு உகந்த முன்மாதிரி பொதுப் போக்குவரத்து சேவையை அதிகரிக்கலாம் என அரசு கருதுகிறது.

அரசுப் பேருந்துகளில், தொழில்நுட்பங்கள் உபயோகிப்பதன்மூலம் பெண் பயணிகள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்தல், பேருந்து நிறுத்தத்திற்கு வரும் பேருந்து வருகை நேரத்தை கைபேசி மூலம் அறிந்துகொள்ளுதல், ரொக்கமில்லா பயணச்சீட்டு அமைப்பு, பணிமனை மேலாண்மை அமைப்பு மற்றும் பேருந்து நகர்வினை அறிந்துகொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறையைக் களைந்து வருவாயினைப் பெருக்கும் இதர வழிமுறைகளைக் கண்டறிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பயணக் கட்டணம் அல்லாத வருமானத்தைப் பெருக்க பணிமனைகளில் வணிக வளாகங்களை ஏற்படுத்துதல், கழகங்களின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களில் ஒரு பகுதியினை பெட்ரோல் / டீசல் விநியோகிக்கும் நிலையங்களாக மாற்றுதல் மற்றும் மின்சார செலவினைக் குறைக்க, சூரிய சக்தியினால் மின் உற்பத்தி செய்தல் போன்ற வழிகளில் முடியும் என அரசு நம்புகிறது.

[*2021 செப்டம்பர் 8*

விபத்தில்லா தமிழ்நாட்டினை உருவாக்குவது என்ற அரசின் நோக்கத்தினைப் பூர்த்திசெய்யும் வகையில் சாலை விபத்தினைக் குறைப்பதற்கு போக்குவரத்துத் துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

உலகப் பொதுமறையான திருக்குறளின் கருத்துகளை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின்மூலம் கொண்டு செல்லுதல் மற்றும் இத்துறையில் அனைத்து நிலைகளிலும் தமிழ் பயன்பாட்டினை உறுதிசெய்தல்.

அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பயணக் கட்டணத்தில், பொது மக்களின் பயன்பாட்டிற்கு சேவை வழங்குவதில் பொதுப் போக்குவரத்து முதன்மை பங்காற்றவும், தமிழ்நாட்டில் உள்ள கடைகோடிப் பகுதிகளை இணைப்பதற்கும், இதர பொதுப் போக்குவரத்து முறைகளை ஊக்குவிக்கவும் அரசு முயற்சிக்கும்.

இணைப்பு

மானியக் கோரிக்கை எண். 48

போக்குவரத்துத் துறை

திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2021–2022

(ரூபாய் ஆயிரத்தில்)

வ. எண்	துறை தலைமையகம்	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
1	தலைமைச் செயலகம்	*2,811,79,96*	*2,167,48,81*	*451,70,01*	*5,430,98,78*
2	மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை	*65,65,05*	——	——	*65,65, 05*
	மொத்தம்	*2,877,45,01*	*2,167,48,81*	*451,70,01*	*5,496,63,83*

இணைப்பு VI

(257 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022

அத்தியாயம் - I

1. முன்னுரை

மென்பொருள் துறையில் சக்திவாய்ந்த மையமாகத் தமிழ்நாடு வேகமாக உருவாகி வருகிறது. உள்ளார்ந்த வாய்ப்புகளைக் கொண்டிருப்பதால் மென்பொருள் சேவையை அளிப்பதிலும், மென்பொருள் ஏற்றுமதியிலும் முன்னணியில் உள்ளது. துடிப்பான கல்விச் சூழல் அமைப்பு, சிறந்த தொழில்நுட்பத் திறன்கொண்ட மனிதவளம், உகந்த அமைவிடம், வலுவான இணைப்பு வசதி மற்றும் வெற்றிகரமான உற்பத்திச் சூழல் போன்றவை இதில் அடங்கும். மிகப்பெரிய மனிதவளத்தைக் கொண்டிருப்பது மற்றும் அதனைத் தக்கவைக்கும் திறன், குறைந்த செலவினம் ஆகியவை தமிழகத்தின் போட்டித் திறனை மேலும் உயர்த்தியுள்ளன. கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக ஊரடங்கு அறிவிக்கப்பட்டதால் பொருளாதார டிஜிட்டல் மயமாக்கம் மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளின் பயன்பாடுகள் குறுகிய காலத்தில் அதிகரித்துள்ளன. இத்தகைய வளர்ச்சி மாநிலத்திற்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கியுள்ளது.

இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்து இங்கே
திலக வாணுதலார் தங்கள் பாரத தேசம் ஓங்க
உழைத்திடல் வேண்டுமாம்.

—மகாகவி பாரதியார்

இதன் பொருள் "நான்கு திசைகளில் உள்ள நாடுகளுக்கும் சென்று புதுமைகளைக் கொணர்ந்து, நாட்டின் வளர்ச்சிக்காக நாம் உழைக்க வேண்டும்" என்பதே.

பெண்களுக்காக பாரதியார் இயற்றிய இக்கவிதை, நாம் வளர்ச்சி அடையவும், வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும்,

[2021 செப்டம்பர் 8

வளர்ந்து வரும் மற்றும் ஆழ்நிலைத் தொழில்நுட்பங்களில் (Emerging and Deep Technologies) புலமை பெற்று, பொருளாதார வளர்ச்சியையும், வேலைவாய்ப்புகளையும் உருவாக்க வேண்டிய சூழலுக்குப் பொருத்தமான ஒன்றாக விளங்குகிறது. செயற்கை நுண்ணறிவு (AI), தரவுப் பகுப்பாய்வு (Data Analytics), இயற்கை மொழிச் செயலாக்கம் (NLP), செறிவூட்டப்பட்ட உண்மை (AR) / மெய்நிகர் உண்மை (VR), ஆளில்லா விமானத் தொழில்நுட்பம் (Drone Technology), நம்பிக்கை இணையம் (Blockchain), 5ஜி/6ஜி இணைப்புகள், இணையப் பாதுகாப்பு (Cyber Security), குவாண்டம் கணினியம் (Quantum Computing), தானியங்கு வாகனங்கள் (Automated Vehicles), குறியாக்கவியல் (Cryptography), பொருட்களின் இணையம் (Internet of Things) போன்ற ஆழ்நிலைத் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியுடன் நாம் பயணிப்பதன்மூலம், அடுத்த பத்தாண்டுகளில் நாட்டின் வளர்ச்சியைத் தீர்மானித்து, அதிக அனுகூலம் பெற்றிடவும், பொருளாதார வளம் மற்றும் வேலைவாய்ப்புகளையும் உருவாக்க இயலும்.

செயற்கை நுண்ணறிவு, நம்பிக்கை இணையம் மற்றும் தரவுப் பகுப்பாய்வு மற்றும் பொருட்களின் இணையம் ஆகியவற்றில் கவனம் செலுத்த, "உயர்தனிச் சிறப்பு மையம்" (centre of excellence) அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையம் இத்தொழில்நுட்பங்களை முக்கியத் துறைகளான மருத்துவம், விவசாயம் மற்றும் கல்வி போன்றவற்றில் பயன்படுத்த உதவி வருகிறது. "இ—பார்வை" எனப்படும் செயற்கை நுண்ணறிவுமூலம் கண்புரையைக் கண்டறியும் கைபேசிச் செயலி அதன் துல்லிய அளவீட்டிற்காக சமீபத்தில் "நாஸ்காம்" (NASSCOM) நிறுவனத்தின் விருதினைப் பெற்றுள்ளது. மாநிலத்தில் அரசுத் துறைகளின் அதிமுக்கிய மென்பொருள் பயன்பாடுகளுக்கு மாறாத மற்றும் சரிபார்க்கக்கூடிய தீர்வினை வழங்கிடும் வகையில் அமைந்த "நம்பிக்கை இணையம்" எனும் தளம் உருவாக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் பொருளாதாரம் வளர்ந்துவரும் வேளையில், புதிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் பெருக்கத்தின் காரணமாக சேவைகள் துறையும் வேகமாக வளர்ந்து வருகிறது. இதற்கு தகவல் தொழில்நுட்பம் முக்கிய உந்து சக்தியாகத் திகழும். மருத்துவம், சுற்றுலா, கல்வி, பொறியியல் துறை, தகவல் தொடர்பு, போக்குவரத்து, வங்கியியல் மற்றும் நிதித் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் தகவல் தொழில்நுட்பத்தைப் புகுத்துவதன்

2021 செப்டம்பர் 8]

வாயிலாக ஏற்படும் கண்டுபிடிப்புகளால், தமிழ்நாட்டில் தொழில் முனைவோருக்கான சூழலும் வேகமாக வளர்ந்து வருகிறது.

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் தொழில் முனைவோருக்கான சூழலை மேம்படுத்தும் பணிகளில் அரசு முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. இது அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய, விரிவான வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், தேசிய அளவில் தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பத் துறையில் மாநிலம் முன்னிலை அடையவும் உதவும். தமிழ்நாடு திறன் வாய்ந்த மனிதவள ஆதாரத்தைக் கொண்டுள்ளது. மேலும், திறன்மிகு மனிதவளத்தை ஆதாரமாகக் கொண்ட "உலகளாவிய திறன் மையங்கள் (GCCs)" அமைவது, தமிழ்நாடு தனது உத்திகளை மேம்படுத்தி தனது தகுதி மதிப்பினை மென்மேலும் உயர்த்திட சிறந்த வாய்ப்பினை வழங்குகிறது. இத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்திடும் வகையில் இந்நிறுவனங்களை தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கு தகவல் தொழில்நுட்பவியல் துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

தரவு மையங்களை நிறுவுவதன் மூலமும், டிஜிட்டல் இணைப்பை தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்குவதன் மூலமும், டிஜிட்டல் உட்கட்டமைப்பை மாநிலம் மேம்படுத்தி வருகிறது. உகந்த அமைவிடம், சிறந்த இணைப்பு வசதி, நிலையான மற்றும் உபரி மின் சக்தி ஆகியவற்றைக் கொண்டிருப்பதன் காரணமாக சென்னை ஒரு தரவு மைய முனையமாக வளர்ந்து வருகிறது. பாரத்நெட் திட்டம் வாயிலாக தமிழகத்தில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளுக்கும் குறைந்தபட்சம் 1 Gbps அளவிலான அதிவேக இணைப்பு, கண்ணாடி இழை வடம் வழியாக வழங்கப்படுவதுடன், குரல், தரவு மற்றும் காணொளி போன்ற மூன்று சேவைகளும் குறைந்த விலையில் வழங்கப்படும்.

நல் ஆளுகையில் தமிழகம் ஒரு உதாரண மாநிலமாகத் திகழ்கிறது. குடிமக்களின் தேவைகளை அறிந்து, அவர்களுக்கு சேவைபுரிய தகவல் தொழில்நுட்பம் அரசுக்கு பேருதவி புரிகிறது. ஒருங்கிணைந்த மற்றும் உள்ளடக்கிய முதலமைச்சரின் பொதுமக்கள் குறைதீர் மேலாண்மை அமைப்பு (IIPGCMS), குடிமக்களின் கோரிக்கைகளை பல்வேறு தளங்கள் வாயிலாகப் பதிவு செய்வதற்கும், "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டம் வாயிலாக அக்கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்படுவதற்கும் உதவுகிறது.

[2021 செப்டம்பர் 8

முன்னேற்றத்திற்கான பாதையில், காகிதமற்ற, நேரடித் தொடர்பற்ற, வெளிப்படையான சேவைகளை குடிமக்களுக்கு அளிப்பதன் வாயிலாக ஆளுகையை மாற்றியமைத்திட தமிழகம் உறுதிபூண்டுள்ளது. ஒரு முன்னுதாரண மாற்றத்தைக் கொண்டு வரும் வகையில், ஆளுகையில் விளைவுகளுக்குப் பதிலாக தீர்வுகளைப் பெறுவதிலும், எதிர்வினையாற்றலுக்குப் பதிலாக செயல்வினை ஆற்றுவதிலும் கவனம் செலுத்துவதை முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.

தொழில்நுட்பம் என்பது இலக்கினை அடையத்தக்க ஒரு வழிமுறையாகும். தமிழகத்தில் குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் வகையிலமைந்த SMART எனப்படும் துரிதமான (Swift), கண்காணிக்கக்கூடிய (Monitorable), எளிதில் அணுகக்கூடிய (Accessible), பொறுப்புடன்கூடிய (Responsive) மற்றும் வெளிப்படையான (Transparent) ஆளுகையை அளிக்க தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். தகவல் தொழில்நுட்ப முதலீடுகளில் ஏற்படும் வளர்ச்சி மாநிலத்தில் பொருளாதார மேம்பாடு மற்றும் செழிப்பினை ஏற்படுத்தும்.

அத்தியாயம் - II

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)

1. முன்னுரை

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், நிறுவனங்கள் சட்டம் 1956-ன்கீழ், 21.03.1977 அன்று பதிவு செய்யப்பட்டு மாநிலத்தில் மின்னணுத் துறையை மேம்படுத்தும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட, தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான பொதுத் துறை நிறுவனம் ஆகும். தமிழ்நாடு மின்னணு நிறுவனம், மாநிலத்தில் மின்னணுத் தொழில் துறை வளர்ச்சி பெறுவதற்கு தனது பங்களிப்பை அளித்து வருகிறது. மாநிலத்தின் மின்னணுத் துறை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்தி மற்றும் சேவைகள், தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு ஆகியவற்றின் வளர்ச்சியில் இது முக்கியப் பங்கினை வகிக்கிறது.

2. செயல்பாடுகள்

2.1 தகவல் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் வளர்ச்சி

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த தொழில் நிறுவனங்களின் விருப்ப இலக்காக தமிழகத்தை உருவாக்குவதில் இந்நிறுவனம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

2021 செப்டம்பர் 8]

தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களில் முதலீடுகளை ஈர்த்து, உள்கட்டமைப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதன்மூலம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் துறையில் மாநிலம் வளர்ச்சி பெறுவதற்கு இந்நிறுவனம் பெரிதும் உதவியுள்ளதுடன், மாநிலத்தில் அதிக அளவிலான வேலைவாய்ப்பினையும் உருவாக்கியுள்ளது.

எல்காட் நிறுவனம், முதலீட்டு ஊக்குவிப்பு, தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டில் முக்கியப் பங்கு வகிப்பதுடன், தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றத்திற்கு கீழ்க்கண்ட வகையில் பங்களித்துள்ளது:

- சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, ஓசூர் ஆகிய இடங்களில் 8 தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZs) உருவாக்கம்.

- சுமார் 1588.16 ஏக்கர் (1321.61 ஏக்கர் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் + 266.55 ஏக்கர் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அல்லாத நிலப்பரப்பு) நிலப்பரப்பில், ரூ.745 கோடி முதலீட்டில் எல்காட் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZs) உருவாக்கம்.

- இந்த எல்கோசெஸ்கள் இந்திய நிறுவனங்களை பன்னாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து, மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான துறையில் ஏற்றுமதி, முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க வகையில் பங்களிப்பு செய்துள்ளன. 2020-2021 ஆம் ஆண்டிற்கான இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் (ELCOSEZs) மென்பொருள் ஏற்றுமதி ரூ.23,590 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்களின்மூலம் தோராயமாக 90,000 நபர்கள் நேரடி வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர். மேலும், EMC 2.0 திட்டம் மூலமாக மின்னணுப் பொருட்கள் உற்பத்தியை ஊக்குவிக்கவும் எல்காட் நிறுவனம் முயற்சி மேற்கொள்ளும்.

[2021 செப்டம்பர் 8

- தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சேவைகளுக்கான முதலீடுகளுக்கு சிறந்ததொரு இடமாகத் தமிழகத்தை உருவாக்கிடும் வகையில்,

➢ எலெக்ட்ரானிக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியா (ELCINA)-வின் 'சோர்ஸ் இந்தியா' (SOURCE INDIA) – மின்னணு வழங்கு தொடர் நிகழ்வு 9 மற்றும் 10 செப்டம்பர் 2020–இல் நடைபெற்றது.

➢ உலகளாவிய "யாதும் ஊரே" மாநாடு மற்றும் கண்காட்சி (Conclave-cum-Expo) 29 அக்டோபர் முதல் 31 அக்டோபர் 2020 வரை நடைபெற்றது.

➢ உலகளாவிய TiE மாநாடு - மெய்நிகர் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி 2 மற்றும் 3 செப்டம்பர் 2020-ல் அமெரிக்காவில் நடைபெற்றது.

➢ உலகளாவிய TiE மாநாடு - தொழில் முனைவு 360° – 8 டிசம்பர் 2020 முதல் 10 டிசம்பர் 2020 வரை நடைபெற்றது.

➢ CONNECT தொடர் நிகழ்ச்சிகள் சென்னை, ஓசூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் முறையே 15 முதல் 19 செப்டம்பர் 2020, 18 டிசம்பர் 2020 மற்றும் 22 டிசம்பர் 2020 ஆகிய நாட்களில் நடைபெற்றன.

➢ தேசிய நிதித் தொழில்நுட்ப நிகழ்ச்சி (FinTERACT) 27 ஜனவரி முதல் 29 ஜனவரி 2021 வரை நடைபெற்றது.

➢ இந்திய மற்றும் பிரெஞ்சு வர்த்தக சபை மற்றும் தொழில் துறை (IFCCI) மூலம் இந்திய பிரெஞ்சு முதலீட்டு மூன்றாவது மாநாடு 11 மற்றும் 12 பிப்ரவரி 2021 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

- தகவல், தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்பக் கொள்கை, 2018-ன்படி (ICT Policy-2018) தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு கூடுதல் FSI பலன்களை CMDA/DTCP-ல் இருந்து பெறுவதற்கு சான்றளிக்கும் நிறுவனமாகச் செயல்படுகிறது.

- உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் (GIM) வாயிலாகத் தமிழகத்திற்குப் பெறப்பட்ட முதலீடுகளுக்கான தொடர் நடவடிக்கை.

2021 செப்டம்பர் 8]

2.2 எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZs)

2.2.1 எல்கோசெஸ் (ELCOSEZ) சோழிங்கநல்லூர், சென்னை

எல்காட் நிறுவனம் சென்னை சோழிங்கநல்லூரில் 377.08 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.228 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது.

எல்காட் இதில் அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி, 6,358 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாகக் கட்டடத்தையும் கட்டியுள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்.	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
1	விப்ரோ லிமிடெட்	80
2	எச்.சி.எல் பிரைவேட் லிமிடெட்	50
3	டெக் மஹிந்திரா பிரைவேட் லிமிடெட்	50
4	ஃபோர்ட் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்	28
5	காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்	20
6	சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட்	15
7	தமிழ்நாடு மின்சார வாரியம்	16

*இந்த நிறுவனங்கள் 109.31 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தங்களுடைய கட்டடப் பணிகளை முடித்து தோராயமாக 67,000 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. இந்தத் தனியார் நிறுவனங்கள், மென்பொருள் உருவாக்கம் (*Software Development*), பராமரிப்பு மற்றும் சோதனை (*Maintenance &

Testing), ஆலோசனை (Consulting) மற்றும் வணிக வெளிப்பணி சேவைகள் (Business Process Outsourcing) போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஏற்றுமதி சார்ந்த நடுத்தர, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் (MSME) மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்களின் இடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், 2.33 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள், ரூ.88.21 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

2.2.2 எல்கோசெஸ் (ELCOSEZ) - விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்

எல்காட் நிறுவனம் கோயம்புத்தூர் விளாங்குறிச்சியில் 62 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.167 கோடி முதலீட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது.

எல்காட் இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி, 3,524 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாகக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
1	விப்ரோ லிமிடெட்	9.5
2	டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட்	9.5

இந்த நிறுவனங்கள் 23 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்து, 13,200 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

மேலும் 2.66 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ரூ.114.16 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

2021 செப்டம்பர் 8]

2.2.3 எல்கோசெஸ் (ELCOSEZ) - இலந்தைக்குளம், மதுரை

எல்காட் நிறுவனம், மதுரை மாவட்டம் இலந்தைக்குளத்தில், 28.91 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.34 கோடி முதலீட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது. இதில் எல்காட் நிறுவனம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கி, 60,205 சதுர அடி கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
1	ஹனிவெல் டெக்னாலஜிஸ் லிமிடெட்	11.25
2	எச்.சி.எல். இன்ஃபோ சிஸ்டம்ஸ் லிமிடெட்	6.75
3	செல்லா சாஃப்ட்வேர் பிரைவேட் லிமிடெட்	2.25
4	தமிழ்நாடு மின்சார வாரியம்	0.58

இது தவிர, 6,000 சதுர அடி நிலப்பரப்பு, ரீபார் டிசைன் அன்டு டீடெய்ல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தனியார் நிறுவனங்கள் 7.22 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி இயங்கி வருகின்றன.

மேலும், நிருவாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் கீழ்க்காணும் நிறுவனங்களுக்கு பின்வருமாறு இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)
1	கேலக்சி இன்ஃபோடெக்	2,508
2	ஏ.எம்.பி.சி. டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட்	3,277
3	சாய் பி.பி.ஓ. சர்வீசஸ் லிமிடெட்	15,181
4	நியாமோ என்டர்பிரைசஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்	30,103
5	சிவிஜஏசி கன்சல்டிங்	9,136

இந்த நிறுவனங்கள் ஆலோசனை, செயலி மேம்பாடு, வணிக வெளிப்பணி சேவைகள் (BPO) மற்றும் தரவு மின் உருவாக்கம் போன்ற பணிகளை மேற்கொண்டு தோராயமாக 7,200 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

2.2.4 எல்கோசெஸ்-(ELCOSEZ) வடபழஞ்சி, மதுரை

மதுரையிலுள்ள வடபழஞ்சி கிராமத்தில் எல்காட் நிறுவனம் 245.17 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.70 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் எல்கோசெஸ்க்குத் தேவைப்படுகின்ற மேம்பாலத்தையும் உருவாக்கி, 70,139 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 8]

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
1	எச்.சி.எல்.	60
2	செயின்—சிஸ் சாஃப்ட்வேர் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்	20
3	பினாக்கிள் இன்ஃபோடெக் சொல்யூஷன்ஸ்	10

இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு 59,166 சதுர அடி பரப்பளவில் இடவசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)
1	நியாமோ என்டர்பிரைசஸ் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்	46,968
2	நியாமோ ஒர்க்ஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	11,543
3	செயின்—சிஸ் சாப்ட்வேர் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்	655

இந்த நிறுவனங்கள், ஆலோசனை, சம்பளப்பட்டியல் செயலாக்கம் மற்றும் தரவு மின் உருவாக்கம் போன்ற பணிகளை மேற்கொள்கின்றன.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2021 செப்டம்பர் 8

2.2.5 எல்கோசெஸ் (ELCOSEZ) - நவல்பட்டு, திருச்சிராப்பள்ளி

திருச்சியிலுள்ள நவல்பட்டில், எல்காட் நிறுவனம் 147.61 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.60 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதில் 123.23 ஏக்கர் நில பரப்பளவிற்கு சிறப்புப் பொருளாதார மண்டலமாக உள்ளது. இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி, 59,960 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் ஐலிங்க் மல்டிடெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (iLink Multitech Solutions Pvt. Ltd.) நிறுவனத்திற்கு 2 ஏக்கர் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு 59,960 சதுர அடி இட வசதி முழுமையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)
1	ஐலிங்க் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட்	6,668
2	சயின்டிஃபிக் பப்ளிஷிங் நிறுவனம்	30,250
3	உரம் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்	5,976
4	விடார்ட் டெக்னாலஜிஸ்	3,643
5	பேரிடர் மீட்பு மையம்	5,963
6	ஜிஐ டெக் கேமிங் கம்பெனி இண்டியா பிரைவேட் லிமிடெட்	4,919
7	விஆர் டெல்லா ஐடி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்	2,541

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இந்த நிறுவனங்கள் மின் வெளியீடு (e—Publishing), மென்பொருள் உருவாக்கம் (Software Development), வணிக செயல்முறை மேலாண்மை சேவைகள் மற்றும் தீர்வுகள் (Business Process Management Services & Solutions), விளையாட்டு மென்பொருள் உருவாக்கம் (Gaming Software Development) போன்ற பணிகளை மேற்கொண்டு தோராயமாக 1,390 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு முழுமையாக இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 1.16 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ரூ.48.10 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

2.2.6 எல்கோசெஸ் (ELCOSEZ) - கங்கைகொண்டான், திருநெல்வேலி

திருநெல்வேலியிலுள்ள கங்கைகொண்டானில் எல்காட் நிறுவனம் 500 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூ.55 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதில் 290 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு சிறப்புப் பொருளாதார மண்டலமாக உள்ளது.

இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 56,720 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது. இந்தத் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் கேலிபர் இன்டர்கனெக்ட் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (Caliber Interconnect Solutions Pvt. Ltd.) நிறுவனத்திற்கு 5,994 சதுர அடி பரப்பளவில், இட வசதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த எல்கோசெஸ்ஸில் சின்டெல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (Syntel International Pvt. Ltd.) நிறுவனத்திற்கு 100 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 2.60 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்து, தோராயமாக 200 பணியாளர்களுடன் மென்பொருள் சேவைகளை வழங்கி வருகின்றது.

[2021 செப்டம்பர் 8

2.2.7 எல்கோசெஸ் (ELCOSEZ) - ஜாகீர் அம்மாபாளையம், சேலம்

எல்காட் நிறுவனம், சேலம் ஜாகீர் அம்மாபாளையத்தில் 53.33 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.44 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி உள்ளது.

மேலும், அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன், 62,174 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் 27.87 ஏக்கர் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
1	மகிமா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	3
2	வீ. டெக்னாலஜிஸ்	9.49
3	டேன்ட்ரான்ஸ்கோ லிமிடெட் (TANTRANSCO LTD.)	7.88
4	இ—முத்ரா லிமிடெட்	2.5
5	அன்மால் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	1
6	ஃபோகஸ் ஆர் கன்சல்டன்சி அண்டு டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	1
7	நியூராடெக் கன்சல்டன்சி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்	3

2021 செப்டம்பர் 8]

இந்தத் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு *37,958* சதுர அடி பரப்பளவில், இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)
1	இ—முத்ரா லிமிடெட்	*2,989*
2	ரேவேல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	*3,704*
3	நியூரா டெக் கன்ஸல்டன்சி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்	*3,704*
4	டைலாஜி சொல்யூஷன்ஸ் எல்எல்பி	*1,000*
5	நாலெட்ஜ் லென்ஸ் பிரைவேட் லிமிடெட்	*1,000*
6	ஸ்டின்சாஃப்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	*989*
7	வீ டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	*10,562*
8	வீ இமேஜிங் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்	*10,562*
9	மஹிமா டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட்	*3,448*

இந்த நிறுவனங்கள் தோராயமாக 614 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

2.2.8 எல்கோசெஸ் (ELCOSEZ) - விஸ்வநாதபுரம், ஓசூர் எல்காட் நிறுவனம், ஓசூர், விஸ்வநாதபுரத்தில் 174.47 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.85 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன், 62,100 சதுர அடி பரப்பளவில் நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது.

இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு 44,589 சதுர அடி பரப்பளவில், இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)
1	யு.எஸ். டெக்னாலஜி இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்	21,100
2	சந்துசாஃப்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	10,550
3	தென்றல் இன்ஃபோடெக்	2,989
4	எமினென்ட் லேப்ஸ் சாஃப்ட்வேர் பிரைவேட் லிமிடெட்	9,950

2.3 தொழில்முனைவோர் மையம் (Start-up Warehouse)

எல்காட் நிறுவனம், 'நாஸ்காம்' நிறுவனத்தை அறிவுசார் பங்குதாரராகக் கொண்டு சென்னையிலுள்ள டைடல் பார்க்கில் 6,860 சதுர அடி பரப்பளவில், 90 இருக்கை வசதி கொண்ட தொழில் முனைவோர் மையத்தை ரூ.3.53 கோடி முதலீட்டில் அமைத்துள்ளது. 44 தொடக்க நிலை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக அடுத்த நிலையை அடைந்துள்ளன.

2021 செப்டம்பர் 8]

2.4 ஃபின்ப்ளூ - நிதி தொழில்நுட்ப உயர்தனிச் சிறப்பு மையம் (Centre of Excellence in FinTech)

சென்னையில் உள்ள இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவில் (STPI) "ஃபின்ப்ளூ" (FinBlue) என்ற நிதித் தொழில்நுட்ப உயர்தனிச் சிறப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில், தமிழக அரசு ரூ.5.75 கோடி முதலீடு செய்துள்ளது. தொடக்க நிலை நிறுவனங்களுக்கு (Start—ups) தேவையான உதவிகள், வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. தேசிய மற்றும் பன்னாட்டு நெறிப்படுத்தும் அமைப்புகளுடன் இணைந்து தமிழகத்தில் நிதித் தொழில்நுட்பச் செயல்பாடுகளை செயல்படுத்தி மாநிலத்தில் நிதித் தொழில்நுட்பத்திற்கான முதலீடுகளை ஈர்க்கும் மையமாகவும் "ஃபின்புளூ" (FinBlue) உள்ளது.

2.5 தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

குடிமக்களுக்கு மின்னாளுமை சேவைகளை வழங்குவதற்கும் அரசுத் துறைகளுக்கு இணைப்புகளை வழங்குவதற்கும் தேவையான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை எல்காட் நிறுவனம் உருவாக்கிப் பராமரித்து வருகிறது.

2.5.1 வலையமைப்பு சேவைகள்

2.5.1.1 தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பானது தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின்கீழ் (NeGP) மத்திய மற்றும் மாநில அரசுகளினால் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும்.

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு 708 இருப்பு முனைகளுடன் (PoPs) தொடங்கப்பட்டது. தற்போது 829 இருப்புமுனைகளுடன் இயங்கி வருகிறது. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு, மாநில அரசுத் துறைகள், தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தமது பயன்பாடுகள், சேவைகள் மற்றும் சேவையகங்களை பாதுகாப்பான முறையில் அணுக உதவுகிறது. பல்வேறு அரசுத் துறைகளின் சுமார் 3000 அலுவலகங்களுக்கு TNSWAN இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு அரசுத் துறைகளுக்கு, குரல், தரவு மற்றும் காணொளி சேவைகளை வழங்குவதன்மூலம், அரசுத் துறைகள் பொதுமக்களுக்கு தரமான சேவைகளை வழங்க வழிவகை செய்கிறது.

மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் (MeitY, GoI) வழிகாட்டுதலின்படி தேசிய அறிவுத்திறன் வலையமைப்புடன் (National Knowledge Network—NKN) தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் மாவட்ட இருப்பு முனைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

2.5.1.1.1 தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட விரிவாக்கம்

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட செயல்பாட்டினை, மூன்று வருட காலத்திற்கு, பிப்ரவரி 2022 வரை நீட்டித்து அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

2.5.1.2 பிற இணைப்பு சேவைகள்:

2.5.1.2.1 MPLS VPN இணைப்பு

Multi—Protocol Label Switching Virtual Private Network (MPLS VPN) இணைப்பானது பதிலி இணைப்பாக வழங்கப்படுகின்றது. எல்காட் நிறுவனம், ஏறத்தாழ 60 தமிழக அரசு அலுவலகங்களுக்கு MPLS VPN இணைப்பை வழங்கி வருகிறது.

2.5.1.2.2 இணையக் குத்தகை இணைப்பு

இணையக் குத்தகை இணைப்பு சுமார் 248 அரசு அலுவலகங்களுக்கு தனிப்பட்ட இணைப்பாக வழங்கப்பட்டு வருகிறது.

2.5.1.2.3 VPNoBB இணைப்பு

Virtual Private Network over Broadband (VPNoBB) இணைப்பு குறைந்த செலவில் அகஇணைய (Intranet) குறைந்த அலைவரிசையை வழங்குவதற்கான மாற்றாகும். எல்காட் நிறுவனம், ஏறத்தாழ 273 அரசு அலுவலகங்களுக்கு VPNoBB இணைப்பு சேவைகளை வழங்கி வருகிறது.

2021 செப்டம்பர் 8]

2.5.2 பதிவேற்றம் மற்றும் தொடர்புடைய சேவைகள்

அரசின் மின்னணு சேவைகளைப் பாதுகாப்பான முறையில் வழங்குவதற்கான மிக முக்கியமான கட்டமைப்பாகத் தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசுத் துறைகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் தங்களது தரவு, மென்பொருள் பயன்பாடுகள், சேவைகள் மற்றும் சேவையகங்களை பொதுவான, மேம்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கட்டமைப்பில் ஏற்றம் செய்திடல் மற்றும் ஒருங்கிணைப்பதன்மூலம் எளிதாக செயல்படுத்தவும் இத்தரவு மையம் உதவிபுரிகிறது.

2.5.2.1 தமிழ்நாடு மாநில தரவு மையம் - 1 (TNSDC - 1)

தமிழ்நாடு மாநில தரவு மையம், நாட்டிலேயே முதன்முறையாக ISO சான்றிதழ் பெற்ற மாநில தரவு மையமாகும். இம்மையத்தின் செயற்பாடுகள் சுமார் 65 அடுக்குகளுடன், 12 வருடத்திற்கான திட்ட மதிப்பீடான ரூ.138 கோடி செலவினத்தில் 2011-ல் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது.

2.5.2.2 தமிழ்நாடு மாநில தரவு மையம் - 2 (TNSDC-2)

தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் முதல் பகுதி முற்றிலும் பயன்படுத்தப்பட்ட நிலையில், இரண்டாம் பகுதி நிறுவப்பட்டு 2020 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதன் திட்டச் செலவினம் ரூ.74.7 கோடி ஆகும். இந்த தரவு மையம் 195 அடுக்குகளுக்கு இடமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் முழு வடிவமைப்பும் தொகுப்பு அமைப்பாக உள்ளதால், தடையற்ற அளவு அதிகரிக்கும் திறனுடையது.

தற்போதுவரை, 231—க்கும் மேற்பட்ட பயன்பாடுகள் மற்றும் சேவைகள் TNSDC—1 மற்றும் TNSDC—2-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

2.5.2.3 தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (TNDRC)

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அரசுத் துறைகளின் முக்கிய மின்ஆளுகைப் பயன்பாடுகளை பேரிடர்களின்போதும் தடையின்றி தொடர்ச்சியாகச் செயல்படுத்திட ஏதுவாக, எல்கோசெஸ், திருச்சிராப்பள்ளியில் பேரிடர் மீட்பு மையம், 2018 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

[2021 செப்டம்பர் 8

2.5.2.4 தமிழ் மேகம் - தமிழ்நாடு மேகக் கணினிய சேவைகள்

எளிய மேலாண்மையுடன் கணினி வளங்களைப் பகிர்ந்தளிக்கக் கூடிய மேகக் கணினியச் சேவை, தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் 2016 ஆம் ஆண்டு முதல் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது . இதன் 5 வருட காலத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.13.88 கோடி ஆகும்.

*மேகக் கணினியச் சேவையில் உட்கட்டமைப்பு (*infrastructure*) மற்றும் இயங்குதளம் (*platform*) ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன. தற்போதுவரை, 116 மென்பொருள் பயன்பாடுகள் மற்றும் சேவைகள் பதிவேற்றம் செய்யப்பட்டு, இயங்கி வருகின்றன.*

ரூ.9.98 கோடி மதிப்பீட்டில் மேகக் கணினிய உள்கட்டமைப்பை மேம்படுத்த மற்றும் பேரிடர் மீட்பு வசதியை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2.5.3 மின்னணுப் பாதுகாப்பு

2.5.3.1 தமிழ்நாடு மாநில தரவு மையத்திற்கான பாதுகாப்புக் கட்டமைப்பு

அனைத்து அரசுத் துறைகளின் மென்பொருட்கள் மற்றும் சேவைகளின் தரவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பின்வரும் உயர்நிலை பாதுகாப்புக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன :

*பாதுகாப்புத் தகவல் மற்றும் நிகழ்வு மேலாண்மை கருவி (*Security Information & Event Management - SIEM Tool*)*

*பாதுகாப்பு மதிப்பீடு மற்றும் ஊடுருவல் சோதனை (*Vulnerability Assessment and Penetration Testing — VAPT*)*

இவை இணையத் தாக்குதலுக்கு எதிரான தடுப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகின்றன.

2.5.3.2 தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பு (CSA –TN)

பாதுகாப்பு அச்சுறுத்தலில் இருந்து இணையத் தாக்குதலை எதிர்கொள்ள, தமிழகத்திற்கான தகவல் பாதுகாப்புக் கட்டமைப்பானது, சென்னையிலுள்ள C—DAC *நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டுள்ளது. இணையப் பாதுகாப்புக்*

2021 செப்டம்பர் 8]

கட்டமைப்பின் 3 வருட காலத்திற்கான திட்டச் செலவினம் ரூ.21.39 கோடி ஆகும்.

2.6 அரசின் வெளிப்படைத் தரவு

*அரசின் வெளிப்படைத் தரவு (*Open Government Data*) இணையதளம் அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் வெளிப்படையான தரவுத் தொகுப்புகளை, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வெளியிட உதவுகிறது.*

*அரசு வெளிப்படைத் தரவுகளுக்கான மாநில நிகழ்வு (*State instance*) உருவாக்கப்பட்டு* https:/data.tn.gov.in *என்னும் இணைய முகவரியில் இயங்கி வருகின்றது. தற்போது, இந்த இணையதளத்தில் 64 தமிழக அரசுத் துறைகள் மற்றும் முகமைகள் தொடர்பான 31,585 தரவுத் தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.*

2.7 ஆதார் நிரந்தரப் பதிவு மையங்கள் (PECs)

*இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தினால் (*UIDAI*) அங்கீகரிக்கப்பட்ட முகமைகளுள் ஒன்றான எல்காட் நிறுவனம், ஆதார் பதிவு நடவடிக்கைகளைச் செயல்படுத்தி வருகிறது. இதன் பொருட்டு, எல்காட் நிறுவனம் 227 நிரந்தரப் பதிவு மையங்களை 32 மாவட்ட ஆட்சியரகங்கள், 11 மாநகராட்சித் தலைமை அலுவலகங்கள், 45 நகராட்சி மண்டல அலுவலகங்கள், 124 நகராட்சி அலுவலகங்கள், 2 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள், 5 பேரூராட்சி அலுவலகங்கள், 4 வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் 4 பொதுவைப்பு நிதி அலுவலகங்களில் ஏற்படுத்தியுள்ளது.*

இதுவரையில் ஒட்டுமொத்தமாக இந்த மையங்களின் வாயிலாக, 31.08.2021 வரை 67,52,011 ஆதார் பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளன.

2.8 திறன் மேம்பாடு (Capacity Building)

தமிழக அரசுத் துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கணினிசார்ந்த பயிற்சி வழங்குவதில் தமிழ்நாடு மின்னணு நிறுவனமானது முக்கிய பங்கு வகித்து வருகிறது. பயிற்சி அளிப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை பெருங்குடி வளாகத்திலும் மற்றும் 12 மாவட்டங்களிலும் ஏற்படுத்தியுள்ளது.

மின் ஆளுகைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்களுக்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை மாநிலம் முழுவதிலிருந்தும் பல்வேறு அரசுத் துறைகளிலிருந்து 1,21,378 நபர்கள் பயிற்சியில் பங்கேற்றுப் பயனடைந்துள்ளனர்.

2.9 வலையமைப்புச் சேவைகள்

எல்காட் நிறுவனம்

- பல்வேறு அரசுத் துறைகளின் காணொளிக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.
- மிக முக்கிய பிரமுகர்கள் வருகை தரும்பொழுது தேவைப்படும் வலையமைப்பு சிறப்பு உபகரணங்களை வழங்கி வருகின்றது.
- காணொளிக்காட்சி அமைப்புகள், பொது ஒலிப்பெருக்கி அமைப்பு, காணொளித்திரை (Video Wall) மற்றும் IVRS உபகரணங்களைக் கொள்முதல் செய்து நிறுவி வருகின்றது.
- தலைமைச் செயலகத்தில் வலையமைப்பு வசதிகளை (SECNET) முழு நேரமும் (24X7) பராமரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

2.10 கொள்முதல் சேவைகள்

எல்காட் நிறுவனம், அரசுத் துறை/பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளுக்கு மின்னணு வன்பொருள் மற்றும் மென்பொருள்களுக்கான விருப்பக் கொள்முதல் முகமையாகச் செயல்பட்டு வருகிறது.

எல்காட் நிறுவனம், அரசுத் துறைகளுக்கு தரமான மின்னணுப் பொருட்களைக் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. கோவிட்—19 நோய்த்தொற்றுக் காலத்திலும் அரசுத் துறைகளான மருத்துவம் மக்கள் நல்வாழ்வு மற்றும் காவல் துறைகளுக்கு அவசர கொள்முதல் தேவைகளை எல்காட் நிறுவனம் உடனடியாகப் பூர்த்தி செய்துள்ளது.

2021 செப்டம்பர் 8]

மேசைக்கணினி, மடிக்கணினி, அச்சு இயந்திரம் மற்றும் பல்நோக்கு செயல்திறன் கொண்ட சாதனங்களை உற்பத்தி செய்யும் தயாரிப்பாளர்கள், எல்காட் நிறுவனத்தின்மூலம் ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்படும் மிக அதிகமான தேவைகளைக் கருத்தில் கொண்டு, அதில் பங்கு பெறுவதற்கு சிறந்த விலைப்புள்ளிகளை அளிக்கின்றனர். இதன்மூலம் தகவல் தொழில்நுட்பவியல் வன்பொருட்களின் விலைகளை சந்தை விலையை விட மிகவும் குறைவான விலையில் கொள்முதல் செய்து வழங்கி கணிசமான சேமிப்பு ஏற்படுவதை உறுதி செய்கிறது.

கடந்த 2020-21 ஆம் ஆண்டில், ரூ. 245.15 கோடி மதிப்பிலான தகவல் தொழில்நுட்ப சாதனங்களைக் கொள்முதல் செய்துள்ளது. வரும் 2021-22 நிதியாண்டில் ரூ.300 கோடி மதிப்பிலான தகவல் தொழில்நுட்ப சாதனங்களைக் கொள்முதல் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் - III

மின்–ஆளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின்–ஆளுமை முகமை

1. முன்னுரை

மின்–ஆளுமை இயக்குநரகம், 2006 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA), தேசிய மின்–ஆளுமைக் கொள்கையைச் செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னாட்சி அமைப்பாக, உருவாக்கப்பட்டது.

2. குறிக்கோள்கள்

- i *தரமான தகவல் தொழில்நுட்பச் சேவைகளை வழங்குதல் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் புதுமையாக்கம் செய்தல்.*
- ii *மின் ஆளுகையை மாநிலம் முழுமையும் செயல்படுத்திட உரிய உட்கட்டமைப்பினை உருவாக்க உதவுவது.*
- iii *டிஜிட்டல் மாற்றத்திற்கான திட்டங்களில் நிர்வாக மாற்றத்திற்கான மேலாண்மைக்கு உதவுவது.*

[2021 செப்டம்பர் 8

iv மாநிலத்தின் போட்டித் தன்மையை மேம்படுத்தி, மாநிலத்தின் திறனை எதிர்காலத்திற்கு ஏற்றவாறு தயார் செய்ய உதவுவது.

v தகவல் தொழில்நுட்பத்தின் பலன்களை, மக்களுக்கும், நிறுவனங்களுக்கும் மற்றும் அரசுக்கும் அளிப்பது.

vi தரவு, ஒத்திசைந்து இயங்குதல் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றிற்கான தர நிர்ணயங்களை உருவாக்குவது.

vii கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், துவக்க நிறுவனங்கள், நிதி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் புகழ்மிக்க தனிமனிதர்களை உள்ளடக்கிய ஒரு சூழலை உருவாக்குவது.

viii அரசு ஊழியர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவுத்திறனை மேம்படுத்த உதவுவது.

3. தொழில்நுட்ப அமைப்புகள்

3.1 தகவல் தொழில்நுட்பப் பணிநிலைப் பிரிவு (IT Cadre)

மின்–ஆளுகைத் திட்டங்களைச் செயல்படுத்த அரசுத் துறைகளின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளை நிறைவேற்றும் வகையில், ஒரு தகவல் தொழில்நுட்பப் பணிநிலைப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

3.2 மாநில மின்-குறிக்கோள் குழு (SeMT)

ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட மாநில மின்-குறிக்கோள் குழுவானது, தொழில்முறை அறிவுத்திறனை மேம்படுத்தவும் மற்றும் திட்ட நிர்வாகச் செயல்பாடு, தொழில்நுட்பம், நிறுவனம் சார்ந்த கட்டமைப்பு மற்றும் மாற்று மேலாண்மை ஆகியவற்றிற்கும் உதவுகிறது.

3.3 வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கான உயர்தனிச் சிறப்பு மையம் - Centre of Excellence for Emerging Technologies (CEET)

செயற்கை நுண்ணறிவு, நம்பிக்கை இணையம், தரவுப் பகுப்பாய்வு மற்றும் பொருட்களின் இணையம் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை ஊக்குவித்திடவும் மற்றும்

2021 செப்டம்பர் 8]

போட்டித் திறனை மேம்படுத்தவும் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களுக்கான உயர்தனிச் சிறப்பு மையத்தை (CEET) தமிழக அரசு நிறுவியுள்ளது. இது சுகாதாரம், வேளாண்மை மற்றும் கல்வி போன்ற பல்வேறு முன்னுரிமைத் துறைகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் நம்பிக்கை இணையத் தொழில்நுட்பத்தை (Blockchain) புகுத்துவதன் வாயிலாக மேம்பட்ட ஆளுகை மற்றும் குடிமக்களுக்கான சிறந்த சேவை அளிக்கவும் உதவுகிறது.

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான உயர்தனிச் சிறப்பு மையம் (CEET) புதுமையாக்கத்தை கீழ்க்கண்ட வழிகளில் பரவச் செய்வதற்கான கிரியா ஊக்கியாகத் திகழ்கிறது:

I அரசுத் துறைகளுக்கு குறைந்த செலவிலான, மேம்படுத்தக்கூடிய தீர்வுகளைக் கண்டறிதல்.

II வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அரசுத் துறைகள், முகமைகள், தொழில் நிறுவனங்கள், தொழில் அமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை உருவாக்குதல் மற்றும் கூட்டாகச் செயல்படுதல்.

III சர்வதேச அளவில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் உள்ள சிறந்த செயல்பாடுகளை வரையறுத்தல் மற்றும் தரப்படுத்தி ஊக்குவித்தல்.

IV அரசுத் துறைகளில் பல்வேறு நிலைகளில் உள்ள அலுவலர்களின் திறன் மேம்பாடு, பயிற்சி மற்றும் நெறிப்படுத்தலில் ஈடுபடுதல்.

V உயர் தொழில்நுட்பம் மற்றும் அதற்கு நிகரான, தொழில்நுட்பங்களை அளிக்கும் பிற நிறுவனங்களைத் தொடர்புகொள்ளுதல்,

VI வளர்ச்சித் திட்டங்கள், பயிற்சி வகுப்புகள், மாநாடுகள், கருத்தரங்குகள், சிறப்பு விரிவுரைகள் மற்றும் இதர நிகழ்வுகளை நடத்துதல்.

VII ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆய்வறிக்கைகள், தொழில் சார்ந்த ஆய்வறிக்கைகள் ஆகியவற்றைத் தயாரித்து சிறந்த மதிப்பாய்வுமிக்க சஞ்சிகைகள் மற்றும் மாநாடுகளில் வெளியிடுதல்,

VIII அரசுத் துறைகளுக்கு, தேவையின் அடிப்படையில், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் குறிப்பிட்ட முன்மாதிரி வடிவத்தை உருவாக்கி வழங்குவது அல்லது வளர்ச்சி சார்ந்த பணிகளை மேற்கொள்வது.

TRUTH ALONE TRIUMPHS

[2021 செப்டம்பர் 8

IX அரசுத் துறைகளின் சொத்து உருவாக்கம் மற்றும் நுகர்வுக்கான செயல்முறைகள் மற்றும் அவற்றின் மறுபயன்பாட்டிற்கான மென்பொருள் உத்திகளை வகுப்பது.

3.4 மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் (District e-Governance Societies)

மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் மாவட்ட அளவில் மின்னாளுமைத் திட்டங்கள் தொடர்பான அனைத்து வழிகாட்டுதல்களையும் வழங்க உருவாக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழும், சென்னையைப் பொறுத்தவரை, பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையரது தலைமையின்கீழும் இச்சங்கங்கள் இயங்கி வருகின்றன. இ—சேவை மையங்கள் ஈட்டும் வருவாயில் இருந்து 5 சதவீதத்தினை மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் பெறுகின்றன.

4. தரவுகள் அடிப்படையிலான நிர்வாகம்

4.1 முதலமைச்சர் மேற்கொள்ளும் முடிவுகளுக்கு உதவும் அமைப்பு

திட்டங்களின் செயலாக்கத்தை சிறப்பாகக் கண்காணித்திடவும், தரவு சார்ந்த ஆளுகையை வழங்கிடவும் முதலமைச்சர் மேற்கொள்ளும் முடிவுகளுக்கு உதவும் அமைப்பு ஒன்று வடிவமைக்கப்பட்டு வருகிறது. பல்வேறு துறைத் திட்டங்கள்/பணிகளின் செயல்திறன் சார்ந்த காரணிகளுக்கான நிகழ்நேர காட்சிவழிக் குறிப்புகளை கொண்டதாக இது அமையப்பெற்று, முடிவெடுப்பதில் உதவி புரியும். ஒரு துறையைப் பொறுத்தமட்டில், இந்த அமைப்பு, தரவுகளைக் கூராய்ந்து, தனது ஒருங்கிணைக்கப்பட்ட தரவுப் பகுப்பாய்வுத் திறனைக் கொண்டு, தடைகளைக் கண்டறிவதிலும், மேலாண்மை செய்வதிலும் அவற்றைத் தகர்த்தெறிவதிலும் உதவுவதன் வாயிலாக துறையின் செயல்திறனை மேலும் மேம்படுத்த உதவும்.

4.2 மாநில குடும்ப தகவல் தொகுப்பு (SFDB)

தகவல் தொழில்நுட்பவியல் துறை, ரூ.47.5கோடி செலவினத்தில், மாநில குடும்ப தகவல் தொகுப்பினை உருவாக்கி வருகிறது.

2021 செப்டம்பர் 8]

மாநில குடும்ப தகவல் தொகுப்பு, நிர்வாக மேம்பாட்டிற்கான தரவுகள் அடிப்படையில் முடிவெடுத்தலுக்கு ஆதரவு அளிக்கும் உட்கட்டமைப்பாக அமைய திட்டமிடப்பட்டுள்ளது. இது அனைத்து அரசுத் திட்டப் பயனாளிகளுக்கான ஒற்றை ஆதாரமாக விளங்கும். பல்வேறு துறைகளுக்கு இடையே தரவுகளை ஒத்திசைவு மற்றும் ஒருங்கிணைப்பதன்மூலம் ஏற்கெனவே உள்ள துறை கட்டமைப்பினை இது மேம்படுத்துவதாக அமையும். மக்களுக்கு அரசின் சேவைகள் தடையின்றி கிடைக்க இது உதவும் என்பதோடு, அரசுத் திட்டங்களின் உள்ளார்ந்த தன்மை மேம்படவும் உதவும்.

4.3 தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS)

தமிழகத்தின் அனைத்து புவிசார் தரவுகளுக்கான ஒரே தளமாக தமிழ்நாடு மாநில இடம் சார்ந்த தரவுகள் உட்கட்டமைப்பு (TNSSDI) மற்றும் அதன் வலைதளம் (www.tngis.tn.gov.in) விளங்குகிறது.

இதுவரை, தொடர்புடைய 29 துறைகள் மற்றும் முகமைகள் இதில் அங்கம் வகிக்கின்றன. பல்வேறு துறைகளின் 358 அடுக்கு GIS தகவல்கள் ஏற்கெனவே பதிவேற்றப்பட்டுள்ளன.

மறுசுழற்சி பாகங்களை அடிப்படை கட்டமைப்பாகக் கொண்ட புதிய வலை—GIS வரைவுத் திட்டம் ஒன்று எதிர்காலப் பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டு வருகிறது.

5. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG)

அனைவருக்கும் சிறந்த மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்கிடும் வகையில், அமைந்த 17 தொடர்புடைய இலக்குகளின் தொகுப்பாக நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG) விளங்குகின்றன.

அனைத்துத் துறைகளின் நீடித்த நிலையான வளர்ச்சி மற்றும் தொடர்புடைய இணை இலக்குகளின் தரவுகளைச் சேகரிப்பதற்காக தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் ஒரு செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 8

அட்டவணை 1: தகவல் தொழில்நுட்பவில் துறை தொடர்பான நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு சாதனைகள்

வ எண்	குறியீடுகள்	2020-2021 சாதனைகள்
1	16.6.1: பொதுமக்களுக்கு இணையதளம் வழியாக வழங்கப்படும் அரசு சேவைகளின் எண்ணிக்கை	130
2	16.6.1a: கைபேசி ஆளுகைக்காக ஒன்றிணைக்கப்பட்ட துறைகள்/ முகமைகளின் எண்ணிக்கை	27
3	16.6.1b: இ-தால் (e-Taal) வலை தளத்தில் மின் பரிமாற்றங்களின் எண்ணிக்கை	41.3 கோடி
4	16.6.1c: செயல்பாட்டில் இருக்கும் பொது சேவை மையங்களின் எண்ணிக்கை	10,818

6. பொதுமக்களுக்கான அரசு சேவைகள்

6.1 பொது சேவை மையங்கள் (இ-சேவை)

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, மின்னணு சேவைகளை அரசு இ—சேவை மையங்கள் மற்றும் குடிமக்களுக்கான பொது இணையதளம் (https://www.tnesevai.tn.gov.in/Citizen/PortalLogin.aspx) வாயிலாக, வழங்கி வருகின்றது. இச்சேவை மையங்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள், கிராமப்புற வறுமை ஒழிப்பு குழுக்கள், மகளிர் திட்டம் - தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மீன் வளத் துறை, கிராமப்புற தொழில்முனைவோர் மற்றும் கண்டோன்மெண்ட் போர்டு போன்ற சேவை மைய முகமைகள் வாயிலாக அமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கான அரசின் சேவைகள் அவர்களின் இருப்பிடத்தின் அருகாமையிலேயே வழங்கப்படுவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

2021 செப்டம்பர் 8]

31.08.2021 வரை தமிழகம் முழுவதும் மொத்தம் 10,818 பொது இ—சேவை மையங்கள் பல்வேறு முகமைகளின்கீழ் இயங்கி வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2: அரசு இ-சேவை மையங்களை நடத்தும் முகமைகளின் பட்டியல்

வ. எண்	சேவை முகவர்கள்	மையங்களின் எண்ணிக்கை
1.	தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள்	4,225
2.	தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்	580
3.	தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தனியார் மையங்கள்	1,553
4.	மகளிர் திட்டம் — தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்	2,386
5.	மீன் வளத் துறை	153
6.	கன்டோன்மெண்ட் போர்டு	3
7	கிராமப்புற தொழில் முனைவோர்	1,918
	மொத்தம்	10,818

அட்டவணை 3: அரசு இ-சேவை மையங்கள் வாயிலாக வழங்கப்படும் 130 சேவைகளின் பட்டியல்

அரசு இ-சேவை மையங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள்	
துறை	**வழங்கப்படும் சேவைகளின் பெயர்**
	வருமானச் சான்றிதழ்
	பிறப்பிடச் சான்றிதழ்
	இருப்பிடச் சான்றிதழ்
	சாதிச் சான்றிதழ்
	முதல் பட்டதாரிச் சான்றிதழ்
	கணவனால் கைவிடப்பட்டவர் சான்றிதழ்
	பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்களுக்கான வருமானம் மற்றும் சொத்துச் சான்றிதழ்

துறை	வழங்கப்படும் சேவைகளின் பெயர்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை—40)	குடும்ப இடப் பெயர்வுச் சான்றிதழ்
	வேலையில்லாச் சான்றிதழ்
	விதவைச் சான்றிதழ்
	விவசாய வருமானச் சான்றிதழ்
	கல்வி ஆவணங்கள் பேரிடரின்போது தொலைந்தமைக்கான சான்றிதழ்
	ஆண் வாரிசு இல்லாச் சான்றிதழ்
	திருமணம் ஆகாதவர் என்பதற்கான சான்றிதழ்
	கலப்புத் திருமணச் சான்றிதழ்
	வாரிசுச் சான்றிதழ்
	சொத்து மதிப்புச் சான்றிதழ்
	அடகு பிடிப்போர் உரிமம் சட்டத்தின்கீழ் உரிமம் வழங்குதல்
	வட்டிக்குப் பணம் கொடுப்போர் சட்டத்தின்கீழ் உரிமம் வழங்குதல்
	இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ்
	சிறு / குறு விவசாயி சான்றிதழ்

[2021 செப்டம்பர் 8

துறை	வழங்கப்படும் சேவைகளின் பெயர்
	இ—அடங்கல்
	தற்காலிக பட்டாசு விற்பனை உரிமம் வழங்குதல்
	சமணச் சிறுபான்மை மதச் சான்றிதழ் வழங்குதல்
	பொதுக் கட்டடங்கள் உரிமம்
	ஆதரவற்ற விதவையர் சான்றிதழ்
	இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம்
	இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம்
	இந்திராகாந்தி தேசிய மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்
	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்
	ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம்
	திருமணமாகாத பெண்கள் ஓய்வூதியத் திட்டம்
	ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்
	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்
	குறைதீர் நாள் மனு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 8]

துறை	வழங்கப்படும் சேவைகளின் பெயர்
	தமிழ்நிலம் — முழுநிலப் பட்டா மாறுதல்
	தமிழ்நிலம் — கூட்டுப்பட்டா மாறுதல்
	தமிழ்நிலம் – உட்பிரிவு பட்டா மாறுதல்
	தமிழ்நிலம் — ‘அ’ பதிவேடு விவரம்
	தமிழ்நிலம் – சிட்டா விவரம்
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —7)	அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —7)	முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்—I
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —7)	முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்—II
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —7)	டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம்
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —7)	டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —7)	ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம்

[2021 செப்டம்பர் 8

துறை	வழங்கப்படும் சேவைகளின் பெயர்
	மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்
	சமூக சேவைப் பதிவேடு நிலை
	முதல் தகவல் அறிக்கை நிலை
	இணையவழி புகார் பதிவு செய்தல்
	புகார் நிலை அறிதல்
காவல் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை—9)	வாகன விவரம் அறிதல்
	முதல் தகவல் அறிக்கை பார்வையிடுதல்
	சாலை விபத்து வழக்குகளில் ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்தல்
	காவல் துறையின் சரிபார்த்தல் சேவை
	தொலைந்த ஆவணங்களின் அறிக்கை
தமிழ்நாடு வக்ஃப் வாரியம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —1)	உலமா ஓய்வூதியத் திட்டம்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —1)	மகப்பேறு முன்பதிவுத் திட்டம்

2021 செப்டம்பர் 8]

துறை	வழங்கப்படும் சேவைகளின் பெயர்
கொதிகலன் இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —5)	கொதிகலன் சட்டத்தின்கீழ் உரிமம் பதிவு செய்தல்
	கொதிகலன் சட்டத்தின்கீழ் உரிமம் புதுப்பித்தல்
	உற்பத்தி மற்றும் கட்டமைப்பு உரிமம் அனுமதிக்கான விண்ணப்பம்
	உற்பத்தி மற்றும் கட்டமைப்பு உரிமம் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம்
	கொதிகலன்களுக்கான நீராவி சோதனை
நகராட்சி நிர்வாக ஆணையரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —5)	வரி இல்லா இதர கட்டணங்கள்
	தொழில் வரி வசூலித்தல்
	சொத்து வரி வசூலித்தல்
	பாதாள வடிகால் வரி வசூலித்தல்
	குடிநீர் வரி வசூலித்தல்
சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —1)	குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி

துறை	வழங்கப்படும் சேவைகளின் பெயர்
பெருநகர சென்னை மாநகராட்சி (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —6)	பிறப்புச் சான்றிதழ் அச்சிடுதல்
	இறப்புச் சான்றிதழ் அச்சிடுதல்
	வர்த்தக உரிமம் புதுப்பித்தல்
	நிறுவன வரி வசூலித்தல்
	தொழில் வரி வசூலித்தல்
	சொத்து வரி வசூலித்தல்
தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் இயக்ககம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —5)	பலமாடிக் கட்டடத்திற்கான தடையின்மை இணக்கச் சான்றிதழ்
	பலமாடிக் கட்டடத்திற்கான திட்ட அனுமதிக்கான தடையின்மைச் சான்றிதழ்
	பலமாடிக் கட்டடம் அல்லாத கட்டடத்திற்கான திட்ட அனுமதிக்கான தடையின்மைச் சான்றிதழ்
	பலமாடிக் கட்டடத்திற்கான தீ பாதுகாப்பு உரிமம் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல்
	பலமாடிக் கட்டடம் அல்லாத கட்டடத்திற்கான தீ பாதுகாப்பு உரிமம் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல்

2021 செப்டம்பர் 8]

துறை	வழங்கப்படும் சேவைகளின் பெயர்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —3)	மின் கட்டணம் செலுத்துதல்
	புதிய குறைந்த மின் அழுத்த இணைப்பு பதிவு செய்தல்
	புதிய குறைந்த மின் அழுத்த இணைப்பிற்கான கட்டணம் செலுத்துதல்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —4)	பதிவு அடையாள அட்டை அச்சிடுதல்
	பதிவுப் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம்
	சுய விவரம் திருத்தம் செய்வதற்கான விண்ணப்பம்
	பதிவு செய்ய விண்ணப்பித்தல்
மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை—18)	அலோபதி மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமம் வழங்குதல் / புதுப்பித்தலுக்கான விண்ணப்பம்
	ஓமியோபதி மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமம் வழங்குதல் / புதுப்பித்தலுக்கான விண்ணப்பம்
	கட்டுப்படுத்தப்பட்ட அலோபதி மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமம் வழங்குதல் / புதுப்பித்தலுக்கான விண்ணப்பம்

துறை	வழங்கப்படும் சேவைகளின் பெயர்
	அட்டவணை X–ல் உள்ள மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமம் வழங்குதல்/புதுப்பித்தலுக்கான விண்ணப்பம்
	நகல் உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம்
	அலோபதி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான உரிமம் வழங்குதல் /புதுப்பித்தலுக்கான விண்ணப்பம்
	கூடுதல் உற்பத்தி பொருளுக்கான அனுமதி வழங்குதல்
	தொழில்நுட்ப நபரை மாற்றம் செய்தல்
	சோதனை உரிமம் வழங்குதல்
	அலோபதி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான கடன் உரிமம் / புதுப்பித்தல்
	அலோபதி மருந்துகளை மறு உறையிடுதலுக்கான உரிமம் வழங்குதல் / புதுப்பித்தல்
	ஓமியோபதி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான உரிமம் வழங்குதல் / புதுப்பித்தல்
	அலோபதி மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமத்தினைத் தக்கவைத்தல்

துறை	வழங்கப்படும் சேவைகளின் பெயர்
	கட்டுப்படுத்தப்பட்ட அலோபதி மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமத்தினைத் தக்கவைத்தல்
	அட்டவணை X-ல் உள்ள மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமத்தினைத் தக்கவைத்தல்
	அலோபதி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான உரிமத்தினைத் தக்கவைத்தல்
	அலோபதி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான கடன் உரிமத்தினைத் தக்கவைத்தல்
	அலோபதி மருந்துகளை மறு உறையிடுதலுக்கான உரிமத்தினைத் தக்கவைத்தல்
எரிசக்தித் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —2)	வரைபட ஒப்புதல் சான்றிதழ் வழங்குதல்
	பாதுகாப்புச் சான்றிதழ் வழங்குதல்
பெருநகர சென்னை போக்குவரத்து காவல் (GCTP)	இ— ரசீது செலுத்துதல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

துறை	வழங்கப்படும் சேவைகளின் பெயர்
மீன் வளம் மற்றும் மீனவர் நலன் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை — 6)	மீன்பிடித் தடைக்காலத்தில் மீனவக் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணம் வழங்குதல்
	மீன்பிடி குறைந்த காலத்தில் மீனவக் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணம் வழங்குதல்
	தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணம்
	தேசிய கடல் மீனவர் மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணம்
	மீன்பிடித் தடைக்காலத்தில் மீனவக் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணம் - புதுப்பித்தல்
	மீன்பிடி குறைந்த காலத்தில் மீனவக் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணம் — புதுப்பித்தல்
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை — 3)	கடன் உதவித் திட்டத்திற்கான விண்ணப்பம்
	திருமண உதவித் திட்டம்
	மாற்றுத் திறனாளிகள் பராமரிப்புப் படி


துறை	வழங்கப்படும் சேவைகளின் பெயர்
கைத்தறி இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை — 6)	டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர்கள் நல அறக்கட்டளையின்கீழ் உதவித் தொகை வழங்குதல்
	தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்
	தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம்
	தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டம்
	மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா
	மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனாகீழ் சிக்ஷா சகயோக் யோஜனா திட்டம்.
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை — 1)	தமிழ்நாடு அரசு நில உரிமையாளர் மற்றும் குடியிருப்போர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் ஒழுங்குமுறைச் சட்டம்
போக்குவரத்துத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை —1)	இ—ரசீது செலுத்துதல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[*2021 செப்டம்பர் 8*

துறை	வழங்கப்படும் சேவைகளின் பெயர்
வணிக வரி மற்றும் பதிவுத் துறை	வில்லங்கச் சான்றிதழ் வழங்குதல்
(மொத்த சேவைகளின் எண்ணிக்கை —2)	சான்றளிக்கப்பட்ட நகல் வழங்குதல்
பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவ	CRS—இறப்பு பதிவு செய்தல்
இயக்குநரகம்	பிறப்புச் சான்றிதழ்
(மொத்த சேவைகளின் எண்ணிக்கை — 3)	இறப்புச் சான்றிதழ்
மொத்தம்	*130*

படம் 1: இ-சேவை மையங்கள்மூலம் வழங்கப்படும் முக்கிய 10 சேவைகளின் பரிவர்த்தனை எண்ணிக்கை



2021 செப்டம்பர் 8]

அட்டவணை 4: ஆண்டு வாரியான பரிவர்த்தனை எண்ணிக்கை

ஆண்டு வாரியாக பரிவர்த்தனை எண்ணிக்கை

ஜனவரி 2016 - ஆகஸ்ட் 2021

ஆண்டு (ஜனவரி – டிசம்பர்)	இ—சேவை (CSC)	இ—சேவை (குடிமக்கள் இணையதளம்)	மொத்தம்
2016	1,02,91,198	—	1,02,91,198
2017	1,12,62,238	—	1,12,62,238
2018	1,04,11,812	1,83,304	1,05,95,116
2019	97,63,563	9,49,460	1,07,13,023
2020*	75,86,335	14,00,513	89,86,848
2021* (ஜனவரி – ஆகஸ்ட்)	41,41,553	15,31,242	56,72,795
மொத்தம்	5,34,56,699	40,64,519	5,75,21,218

***கோவிட்-19 காலகட்டம்**

ஆரம்ப காலகட்டத்தில் மக்கள் பொது சேவை மையங்களுக்கு நேரில் சென்று இ—சேவைகளைப் பெற வேண்டியிருந்தது. 2018—ல் மக்கள், எங்கிருந்தும், எப்பொழுதும் இ—சேவைகளைப் பெறும் வகையில் குடிமக்கள் பொது இணையதளம் துவக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்த இணையதளம் வாயிலான பரிவர்த்தனைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. கடந்த 2018 ஆம் ஆண்டில் 2 சதவீதம் இ—சேவை பரிவர்த்தனைகள் மட்டுமே குடிமக்கள் பொது இணையதளம் (Open Citizen Portal) மூலமாக வழங்கப்பட்டு வந்த நிலையில், 2021 ஆம் ஆண்டில் 20 சதவீதத்திற்கும் மேற்பட்ட இ—சேவை பரிவர்த்தனைகள் குடிமக்கள் பொது இணையதளம்மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2021 செப்டம்பர் 8

6.2 ஆதார் நிரந்தர பதிவு மையங்கள்

தமிழ்நாட்டில் ஆதார் நிரந்தரப் பதிவு மையங்களை அமைத்து ஆதார் பதிவினை மேற்கொள்ளும் பதிவாளராக மின்னாளுமை இயக்குநரகம் / தமிழ்நாடு மின்னாளுமை முகமை, இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தினால் (UIDAI) நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆதார் பதிவு சேவை பொதுமக்களுக்கு கட்டணமின்றி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஆகியவை தமிழ்நாடு மின்னாளுமை முகமையின்கீழ் ஆதார் பதிவு முகமைகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆதார் சேர்க்கைக்கான நிரந்தரப் பதிவு மையங்கள் தலைமைச் செயலகம், எழிலகம், தமிழ்நாடு முழுவதிலும் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையகம் மற்றும் மண்டல அலுவலகங்களில் அரசு கேபிள் டிவி நிறுவனத்தாலும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் தலைமையகங்களிலும் (சென்னை நீங்கலாக) தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தாலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அட்டவணை 5: 2020–2021 ஆம் நிதியாண்டிற்கான ஆதார் பதிவு மற்றும் ஆதார் உருவாக்கப்பட்ட விவரங்கள்

பதிவு முகமை	மையங்களின் எண்ணிக்கை	பதிவுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)	ஆதார் எண் உருவாக்கப் பட்ட எண்ணிக்கை (இலட்சத்தில்)
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV)	318	10.4	9.7
தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT)	227	5.9	4.3
மொத்தம்	545	16.3	14

2021 செப்டம்பர் 8]

7. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) மற்றும் முதலமைச்சரின் உதவி எண் (1100)

முதலமைச்சரின் உதவி எண் அல்லது ஒருங்கிணைந்த மற்றும் உள்ளடக்கிய பொதுமக்கள் குறைகளுக்கான முதலமைச்சரின் உதவி எண் மேலாண்மை அமைப்பு (IIPGCMS), பொதுமக்கள் பல்வேறு வழிகளில் தங்கள் குறைகளைப் பதிவு செய்யும் வகையில் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த முறையாகும். இதில், 1100 எண்ணுக்கு அழைப்பதன் வாயிலாகவும், இணையதளம், கைபேசி செயலி, மின்னஞ்சல், சமூக ஊடகம் வழியாகவும் அல்லது நேரடியாகவும் பதிவு செய்யலாம். இது மாநில அளவில் குறைகளைக் கையாளுவதற்கு ஏற்ற ஒற்றை வழித் தடமாகும்.

இந்த அமைப்பு, 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM)' திட்டத்தில் பெறப்பட்ட பொது மக்களின் மனுக்களை கள அலுவலர்களுக்கு அனுப்புவதுடன், மனுக்கள் செயலாக்கத்தைக் கண்காணித்து மக்களுக்கு அவற்றின் மீதான நடவடிக்கையைத் தெரிவிக்கிறது. இத்திட்டம், மாவட்ட ஆட்சியர்கள், துறைத் தலைவர்கள், துறைச் செயலாளர்கள் ஆகியோர் குறைதீர்ப்பின் தரத்தைக் கண்காணிக்க ஏற்ற வகையில், முகப்புப்பலகை மற்றும் உடனடி அறிக்கைகளை அளிக்கும்.

8. முனைப்பான ஆளுகை

8.1 முனைப்பான சேவை வழங்கல்

முனைப்பான சேவைகள் வழங்குதல் என்பது, பொதுமக்கள் சேவைகளைப் பெற தகுதி பெறும்போது, அவர்கள் இல்லத்திற்கே சென்று அச்சேவைகளை வழங்கும் கோட்பாடாகும்.

தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் மற்றும் பயன்பாடுகளை ஒருங்கிணைத்து, மாநில குடும்ப தரவுத் தொகுப்பை (SFDB) அடிப்படையாகக் கொண்டு ஆதார கோட்பாடு ஒன்று (proof of concept) வடிவமைக்கப்படும்.

9. வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள்

9.1 இ-பார்வை (e-Paarvai) : செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) அடிப்படையிலான கண்புரை கண்டறிதல் அமைப்பு (AI-based Cataract Detection System)

கண்புரை, இந்தியாவில் பார்வை இழப்பிற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். ஆரம்ப நிலையிலேயே கண்புரையைக் கண்டறிவது பார்வை இழப்பைத் தவிர்க்கும். தமிழ்நாடு மின்னாளுமை முகமை, கண்புரையை வேகமாகக் கண்டறிவதற்காக செயற்கை நுண்ணறிவு சார்ந்த கைபேசி செயலியை உருவாக்கியுள்ளது. மதுரை, நாகப்பட்டினம் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் இது பரிசோதிக்கப்பட்டு, 14 மாவட்டங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நாஸ்காம் சிறப்பு விருது சமீபத்தில் வழங்கப்பட்டது.

9.2 முக அடையாளம் கண்டறியும் முறை - Face Recognition System (FRS)

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான முக அடையாளம் காணும் முறை உருவாக்கப்பட்டுள்ளது. நவம்பர் 2020 முதல், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் அன்றாட வருகைப் பதிவுக்கு இந்த தொழில்நுட்பம் பயன்பாட்டில் உள்ளது. இந்த அமைப்பு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக (TANGEDCO) அலுவலகத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதர அலுவலகங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வேறு சில பயன்பாடுகள்:

I திறன்மிகு உரையாடல் செயலி (Chatbot) – *பொதுமக்கள், அரசின் பல்வேறு சேவைகள் தொடர்பான உரையாடல் வசதியை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெற, தமிழ்நாடு மின்னாளுமை முகமை, அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து திறன்மிகு உரையாடல் செயலியை உருவாக்கியுள்ளது. இதனைப் பெற இ—சேவை இணையதளத்தை அணுகலாம். (https://www.tnesevai.tn.gov.in).*

II பூச்சி மற்றும் நோய் அடையாளம் காணல் - *தமிழ்நாடு மின்னாளுமை முகமையினால் செயற்கை நுண்ணறிவு*

2021 செப்டம்பர் 8]

தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மென்பொருள் வாயிலாக விவசாயிகள் நெற்பயிரில் உள்ள பூச்சிகளைக் கண்டறியவும், மக்காச்சோளத்தில் உள்ள நோய் தாக்குதலைக் கண்டறிந்து அவற்றை அழித்திடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் இயலும். விவசாயிகள், பாதிக்கப்பட்ட பயிர்களை தங்கள் கைபேசியில் படம் பிடித்து உழவன் செயலிமூலம் பதிவேற்றம் செய்யலாம்.

9.3 தமிழ்நாடு நம்பிக்கை இணைய பின்புலக் கட்டமைப்பு

தமிழக அரசுத் துறைகள், பொருத்திப் பயன்படுத்தும் (plug–n—play) *முறையில், உபயோகிக்க மாநில அளவிலான நம்பிக்கை இணைய கட்டமைப்பு வழிவகை செய்யும். நம்பிக்கை இணையக் கட்டமைப்பில் சேகரிக்கப்படும் தரவுகள் அனைத்து துறைகளின் நம்பிக்கைக்கு உரியது மற்றும் மேற்கொண்டு எந்த சரிபார்த்தலும் தேவையில்லாமல், அனைத்து செயல்முறைகளுக்குமான ஒருமித்த உண்மை ஆதாரமாகப் பயன்படும். உதாரணமாக, இந்து சமய அறநிலைத் துறையின் ஆவணங்கள் மற்றும் பதிவுகள், நிலம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் அவற்றின் மாற்றங்கள், கல்விச் சான்றிதழ்கள், மதிப்பெண் சான்றிதழ்கள், இ—சேவை இணைய தளத்தின்மூலம் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் உரிமங்கள், விதைச் சான்று மற்றும் கைவினைப் பொருட்களுக்கான சான்று போன்றவற்றைப் பாதுகாப்பதற்கான பல பயன்பாடுகளை உருவாக்க நம்பிக்கை இணையம் பயன்படுத்தப்படும்.*

9.4 குறைந்த அளவில் காகித பயன்பாட்டிற்கான மின்னணு உட்கட்டமைப்பு

9.4.1 தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான மின்னஞ்சல் கணக்குகள்

தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கு அலுவலக தகவல் தொடர்பில் பயன்படுத்த பாதுகாப்பான மின்னஞ்சல் சேவை வழங்கப்பட்டு வருகிறது. தேசிய தகவலியல் மையம் (NIC) *உதவியுடன், 2020-2021-ல் 19,000 மின்னஞ்சல் கணக்குகள் உருவாக்கப்பட்டன. தற்போதைய மின்னஞ்சல் சேவையை மேம்படுத்தி, 50,000 பயனாளிகளுக்கு கூடுதலாக உருவாக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

9.4.2 மின்-அலுவலகம்

மின் அலுவலகம் என்பது அரசு அலுவலகங்களுக்குள் வழக்கமான பணிகள் மற்றும் செயல்முறைகளை தன்னியக்கமாக்க அனுமதிக்கும் பயன்பாட்டுத் தொகுப்பாகும். இத்தொகுப்பு குறைவான காகிதப் பயன்பாட்டிற்கும், அலுவலகக் கோப்புகளின்மீது விரைவாக நடவடிக்கை எடுக்கவும், நிர்வாகத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. தணிக்கை மற்றும் வரலாற்று அம்சங்கள் செயல்முறைகளின் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கின்றன.

இதுவரை 61 அலுவலகங்களில் 10,000 பயனர்கள் இந்த மென்பொருளைப் பயன்படுத்துகின்றனர், மாநில அளவில் இத்திட்டம் படிப்படியாகச் செயற்படுத்தப்படும். முதற்கட்டமாக தலைமைச் செயலகத் துறைகளில் இது நடைமுறைப்படுத்தப்படும்.

10. திறன் மேம்பாடு

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை பயிற்சி உட்கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கியுள்ளது. இந்த உட்கட்டமைப்பு மின் அலுவலகச் செயற்பாட்டிற்கான அரசு அதிகாரிகளின் திறன் மேம்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும்.

11. நமது அரசு (MyGov)

“நமது அரசு” இணையதளமானது, கொள்கைகள், திட்டங்கள் மற்றும் பணிகள் தொடர்பான யோசனைகள் மற்றும் ஆலோசனைகளைப் பகிர்வது வாயிலாக, தமிழ்நாடு மக்கள் அரசு நிர்வாகத்தில் பங்கேற்பதற்கான தனித்துவ தளத்தை அளிக்கிறது.

12. அரசு இணையதளங்களுக்கான தர நிர்ணயம்

அரசு இணையதளங்களில் தகவல்கள் மற்றும் சேவைகளின் பயன்பாடு மற்றும் அணுகலை மேம்படுத்த, இந்திய அரசு, “இந்திய அரசாங்க இணையதளங்களுக்கான நெறிமுறைகள்” (GIGW) எனும் பெயரில் இணையதளங்களை வடிவமைத்து, உருவாக்கி, பராமரிப்பதற்கான நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. இந்த நெறிமுறைகளுக்கு ஏற்ப, மாவட்ட இணையதளங்களின் தர நிர்ணயம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அணுகும் வசதி ஆகியவற்றினை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை செயல்படுத்தி வருகிறது.

2021 செப்டம்பர் 8]

13. தேர்வு ஒரு சேவையாக (EaaS)

இணையத் தேர்வுமூலம் பணிகளுக்கு விரைவாக தேர்வு செய்ய, துறைகள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அளிக்கும் சேவைகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். பல்வேறு பணிகளுக்காக பாதுகாப்பான முறையில் துறைத் தேர்வுகளை நடத்த இது எளிதான விரைவான வழியாகும். இதுவரை, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB), தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், (TNPCB), தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நிறுவனம் (TEXCO) ஆகிய நான்கு துறைகள் இந்த முறையை வெற்றிகரமாகப் பயன்படுத்தி 7,229 பணியிடங்களைப் பாதுகாப்பாக நிரப்பியுள்ளன. 13.5 இலட்சம் பேர் இந்தத் தேர்வுகளை எழுதியுள்ளனர்.

14. தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு தணிக்கை

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, அரசுத் துறை இணையதளங்கள் மற்றும் செயலிகளுக்கான பாதுகாப்பு தணிக்கையினை, கணினி அவசர நிலை எதிர்வினை குழுவில் (சி.இ.ஆர்.டி—இன்) உள்ள தணிக்கை அதிகாரிகள் வாயிலாக மேற்கொள்கிறது.

2020—2021-ல் 72 அரசு இணையதளங்கள் மற்றும் செயலிகள் பாதுகாப்பு தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

15. பல்வேறு அரசுத் துறைகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள மென்பொருட்கள்

பல்வேறு அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப, தமிழ்நாடு மின்னாளுமை முகமை பின்வரும் மென்பொருள் சேவை மையங்களை உருவாக்கியுள்ளது:

வ. எண்	துறைகள்	திட்டத்தின் பெயர்	இணைய முகவரிகள்
1	தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை	தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமைக்கு வலைதளம் உருவாக்குதல்	https://tnsdma.tn.gov.in/

வ. எண்	துறைகள்	திட்டத்தின் பெயர்	இணைய முகவரிகள்
2	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	சட்ட அளவியல் புகார் கண்காணிப்பு அமைப்பு	https://tnlegal metrology.in/
3	தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறை	தமிழ்நாடு மின் ஆவண காப்பக வலைவாசல்	https://digi archives.tn.gov.in
4	சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்	இணைய வழியில் திட்ட அனுமதி வழங்கல், கட்டடம் கட்டுவதற்கான அனுமதி வழங்குதல், நிறைவு சான்று வழங்குதல் மற்றும் வசித்தலுக்கான சான்று வழங்குதல் போன்ற சேவைகளை இணையம் வழியாக ஒற்றைச் சாளர முறையில் உருவாக்குதல்	https://online ppacmda.tn. gov.in
5	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	TNFUSRC—க்கு இணையவழி தேர்வுகள் நடத்த மென்பொருள் உருவாக்குதல்	https://www.forests. tn.gov.in/pages/ view/tn—forest— news
6	வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை	மெய்நிகர் கற்றல் இணையதளம் மற்றும் இணைய வழி கற்றலுக்கான பகுப்பாய்வு முகப்புப் பக்கம்	https://tamilnadu careerservices.tn. gov.in/

வ. எண்	துறைகள்	திட்டத்தின் பெயர்	இணைய முகவரிகள்
7	அனைத்து அரசுத் துறைகள்	மின்னணு பரிவர்த்தனை ஒருங்கிணைப்பு மற்றும் பகுப்பாய்வு அடுக்கு (e—Taal)	https://etaal.gov.in
8	நிலச் சீர்த்திருத்த ஆணையரகம்	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்	https://oap.tn.gov.in/cmupt/
9	மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம்	ஆணையரக இணையதளம் முழு அளவில் கணினி மயமாக்குதல்	https://crdpr.tn.gov.in
10	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்	தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வாடகை மேலாண்மைத் திட்டம்	https://tnhb.tn.gov.in/
11	பெரியார் பல்கலைக்கழகம்	தொலைதூர கல்வி பயிலும் மாணவர்களுக்கான இணையவழி சேர்க்கை	http://pride.periyaruniversity.ac.in
12	மாநில திட்ட ஆணையம்	நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கு உரிய இணையவழி கண்காணிப்பு தளம்	https://tnsdg.tn.gov.in
13	தமிழ்நாடு தொழில் துறை வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு பணியகம்	வாடிக்கையாளர் குறைதீர்ப்பு வலைவாசல்	https://www.bizbuddy.tn.gov.in/

வ. எண்	துறைகள்	திட்டத்தின் பெயர்	இணைய முகவரிகள்
14	சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்	தொழில் நிறுவனங்களுக்கான புதிய குடிநீர் இணைப்பிற்கான இணையவழி விண்ணப்பம்	https://cmwssbindust.in/waternew
15	மாநில திட்ட ஆணையம்	மாநில திட்ட ஆணையத்தின் திட்டங்களுக்கான வலைகண்காணிப்புத் தளம்	http://pndschemes.tn.gov.in
16	தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை	தொழிலாளர் துறை வலைவாசல் உருவாக்குதல்	https://labour.tn.gov.in
17	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	மேகக்கணிமை அடிப்படையிலான சொத்து மேலாண்மை அமைப்பு	https://ams.tnegov.in
18	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	மின்மாவட்டம்— முதற்கட்டம், இரண்டாம் கட்டம்	https://tnesevai.tn.gov.in/
19	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	மாநில வலைவாசல்	http://www.tn.gov.in/
20	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	நிரந்தர சேர்க்கை மையம் (5 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஆதார் பதிவு செய்தல்)	https://uidai.gov.in/aadhaar dashboard/
21	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	குறுஞ்செய்தி வாயிலாக சேவை நிலை கண்காணிப்பு வசதி	https://services.mgov.gov.in/


2021 செப்டம்பர் 8]

வ. எண்	துறைகள்	திட்டத்தின் பெயர்	இணைய முகவரிகள்
22	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	இணையவழி பட்டா மாற்றம்	https://tamilnilam.tn.gov.in/ CSC https://tamilnilam.tn.gov.in/revenue/.html
23	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	சிறு URL	https://tnegov.in/login
24	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு	https://tngis.tn.gov.in
25	இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி	இந்திய மருந்துகளுக்கான உரிமம் வழங்கும் மாநில அதிகார அமைப்பு - வலைத்தளம்	https://www.tnslaim.tn.gov.in/
26	தமிழ்நாடு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியம்	அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு ஒருங்கிணைந்த பயன்பாட்டு மென்பொருள் உருவாக்குதல்	https://tnuwwb.tn.gov.in
27	தமிழ்நாடு நடுவர் மற்றும் சமரச மையம்	இணையதளம் உருவாக்கம்	https://tnmcc.tn.gov.in
28	சட்டத் துறை	சான்று அலுவலர் பதவிக்கு இணைய வழி மூலம் விண்ணப்பம் செய்தல் / நடைமுறை புதுப்பித்தல்	https://tnnotary.tn.gov.in/

[2021 செப்டம்பர் 8

வ. எண்	துறைகள்	திட்டத்தின் பெயர்	இணைய முகவரிகள்
29	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	தமிழ்நாடு மின்னாளுமை முகமைக்கான வலைவாசல்	https://tnega.tn.gov.in
30	இந்திய தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்	புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்ட வலைவாசல்	https://editn.in/
31	வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை	வேலைவாய்ப்பு ஈடுபாடு மற்றும் கண்காணிப்பு அலகு	https://www.tnprivatejobs.tn.gov.in

படம் 1: இ–சேவை மையங்கள் மூலம் வழங்கப்படும் முக்கிய 10 சேவைகளின் பரிவர்த்தனை X எண்ணிக்கை



2021 செப்டம்பர் 8]

அத்தியாயம் - IV

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

1. முன்னுரை

"அரசு கேபிள் டிவி நிறுவனம்" குறைந்த கட்டணத்தில், தரமான கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956-ன் கீழ் 04.10.2007 அன்று உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் 26.08.2011 அன்று, "தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

2. நோக்கங்கள்

கேபிள் டிவி துறையில் டிஜிறட்டல் கேபிள் டிவி சேவையை வழங்குவதற்கான Digital Addressable System (DAS) உரிமம் பெற்ற மாநில அரசு நிறுவனம் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஆகும். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 01.09.2017 முதல் பொதுமக்களுக்கு இலவச தரநிலை வரையறை (SD) செட்—டாப் பாக்ஸ்களை (Set—top Box) வழங்கி டிஜிட்டல் சேவையைத் துவக்கியது. 02.07.2018 அன்று சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய 5 இடங்களில் உயர்வரையறை (HD) சேவையைத் துவக்கியது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 201 சேனல்களை (140 கட்டணமில்லா சேனல்கள் + 61 கட்டண சேனல்கள்) ரூ. 14 GST என்ற மாதக் கட்டணத்தில் டிஜிட்டல் முறையில் வழங்குகிறது.

3. அரசு இ-சேவை மையங்கள்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 2014 ஆம் ஆண்டு அரசின் சேவைகளை குடிமக்களுக்கு வழங்குவதற்காக அரசு இ—சேவை மையங்களை நிறுவியது. தற்பொழுது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 580 அரசு இ—சேவை மையங்களை தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புறங்களில் நிர்வகித்து வருவதுடன், 130 வகையான சேவைகளை வழங்குகிறது. இவற்றுடன் கூடுதலாகப் பின்வரும் சேவைகளும் வழங்கப்படுகின்றன:

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்படுபவர்களின் சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்யும் சேவை.

2. வாக்காளர் அடையாள மாற்று அட்டைகளை அச்சிட்டு வழங்கும் சேவை.

3. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விக் கழகம் விற்பனை செய்யும் பாடப் புத்தகங்களைப் பெறுவதற்கு ஆன்லைனில் பதிவு செய்யும் சேவை.

நாளது தேதிவரை, 1,800 விண்ணப்பதாரர்களுக்கு அரசு சேவைகளை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4. ஆதார் நிரந்தர பதிவு மையங்கள்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 318 ஆதார் நிரந்தர பதிவு மையங்களை மாநிலம் முழுவதும் அமைத்துள்ளது. மேலும், மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்காகவும், வயது முதிர்ந்தவர்களுக்காகவும் சென்னைப் பெருநகர மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு "நடமாடும் ஆதார் சேர்க்கை மையமும்" செயல்பட்டு வருகிறது.

அத்தியாயம் - V

தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் எடுத்து செல்லும் நோக்கில், தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) இந்திய நிறுவனங்கள் சட்டம் 2013—ன்கீழ் 08.06.2018 அன்று, தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனமாக உருவாக்கப்பட்டது. இந்நோக்கம் "பாரத்நெட்" மற்றும் "தமிழ்நெட்" திட்டங்களின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றை கண்ணாடி இழை கம்பி வடம் (Optical Fibre Cable)மூலம் அதிவேக அலைக்கற்றை கொண்டு இணைப்பதன்மூலம் எட்டப்படும்.

2021 செப்டம்பர் 8]

1. பாரத்நெட்

ஒன்றிய அரசின் பாரத்நெட் திட்டமானது கண்ணாடி இழை கம்பிவடம் (Optical Fibre Cable) கொண்டு அனைத்து ஊராட்சிகளையும் இணைத்து அதிவேக அலைக்கற்றை வழங்கும் திட்டமாகும். இத்திட்டத்தினை ரூ.1815.31 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்து ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் உள்ள 12,525 ஊராட்சிகளுக்கும் குறைந்தபட்சமாக 1 Gbps மேம்படுத்தக்கூடிய அலைக்கற்றை வழங்கப்படும்.

பணி ஆணை வழங்கிய ஓராண்டு காலத்திற்குள் இத்திட்டமானது செயல்படுத்தி முடிக்கப்படும். இத்திட்டம் நான்கு தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்.

தொகுப்பின் பெயர்	வட்டாரங்களின் எண்ணிக்கை	கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை	கண்ணாடி இழை கம்பிவடம் உயர்மட்ட கம்பத்தின் வழியாக (கிலோ மீட்டரில்)	கண்ணாடி இழை கம்பிவடம் நிலத்தடி வழியாக (கிலோ மீட்டரில்)
A	75	3,095	11,906	1,591
B	94	3,001	9,615	1,570
C	110	3,326	11,335	1,486
D	109	3,103	10,148	1,849
மொத்தம்	388	12,525	43,004	6,496

2. தமிழ்நெட்

பாரத்நெட் திட்டத்துடன் கூடுதலாக, தமிழ்நெட் எனும் திட்டம்மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளும் பயன்பெறும் வகையில், அனைத்துப் பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் மாவட்ட தலைமையிடங்களை கண்ணாடி இழை கம்பிவடம்மூலம் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 8

3. பாரத்நெட் திட்டத்தின் பயன்கள்

பாரத்நெட் உள்கட்டமைப்பின்மூலம் கிராமப்புறங்களுக்கு குறைந்த விலையில் மின்—கல்வி (e—Education), தொலைமருத்துவம் (Tele—Medicine), ஒரே இணைப்பில் மூன்று சேவைகள்— தொலைக்காட்சி, தொலைபேசி மற்றும் இணையதள சேவைகள் (Triple Play Services) ஆகிய டிஜிட்டல் சேவைகளை வழங்க இயலும். அரசு அலுவலகங்கள், பொது நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில் நிறுவனங்கள் அதிவேக அலைக்கற்றையைப் பயன்படுத்தி, அரசின் பொதுமக்களுக்கான சேவையை கிராம அளவில் வழங்க இத்திட்டம் வழிவகுக்கும். இத்திட்டமானது, கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு மற்றும் சேவைகளை ஏற்படுத்துவதன்மூலம், சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும்.

அத்தியாயம் - VI

தமிழ் இணையக் கல்விக்கழகம்

1. முன்னுரை

தமிழ் இணையக் கல்விக்கழகம் (த.இ.க) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975—ன்கீழ் தமிழ் இணையப் பல்கலைக்கழகமாக (த.இ.ப.) நிறுவப்பட்டு தகவல் தொழில்நுட்பவியல் துறையின்கீழ் இயங்கி வருகிறது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம், தமிழ் இணையக் கல்விக்கழகமாக 2010 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் நாள் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் முக்கியமான குறிக்கோள் தமிழ்க் கல்வியை இணையம்மூலம் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு அளிப்பது மற்றும் கணினித் தமிழை மேம்படுத்துதலாகும்.

2. நோக்கங்கள்

- கணினித் தமிழை மேம்படுத்துதல்.
- தமிழர் பண்பாடு மற்றும் நாகரிகம் பற்றிய தகவல்களை உலகம் முழுவதும் உள்ள புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும், மற்றவர்களுக்கும் அளித்தல்.
- தமிழ் மொழியில் சான்றிதழ்க் கல்வி, மேற்சான்றிதழ்க் கல்வி, பட்டயம் மற்றும் பட்டம் போன்ற கல்வித் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

2021 செப்டம்பர் 8]

- ❖ தமிழ் மின்நூலகம் மற்றும் பண்பாட்டு மின்களஞ்சியத்தை நிர்வகித்தல்.
- ❖ அனைத்துப் பொருளடக்கத்தையும் www.tamilvu.org இணையதளம்மூலம் அளித்தல்.

3. கல்வித் திட்டங்கள்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் மழலைக் கல்வி, சான்றிதழ்க் கல்வி, மேற்சான்றிதழ்க் கல்வி, பட்டயம், மேற்பட்டயம், மற்றும் தமிழியலில் இளங்கலைப் பட்டம் முதலான கல்வித் திட்டங்கள் அளிக்கப்படுகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

மழலைக் கல்வி என்பது இளஞ்சிறார்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சான்றிதழ்க் கல்வி பின்வரும் மூன்று நிலைகளில் வழங்கப்படுகின்றன :

- அடிப்படைநிலை (1 மற்றும் 2 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- இடைநிலை (3 மற்றும் 4 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- மேல்நிலை (5 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)

இக்கல்வித் திட்டத்தின் வாயிலாக இதுவரை மொத்தம் 9,015 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மேற்சான்றிதழ்க் கல்வி பின்வரும் மூன்று நிலைகளில் வழங்கப்படுகின்றன :

- நிலை 1 (7 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- நிலை 2 (9 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- நிலை 3 (11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)

இக்கல்வித் திட்டத்தின் வாயிலாக இதுவரை மொத்தம் 876 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இளங்கலைப் பட்டம் (தமிழியல்) பாடத்திட்டத்தில் பட்டயம், மேற்பட்டயம் மற்றும் பட்டம் முதலான நிலைகள் உள்ளன. இக்கல்வித் திட்டத்தின் வாயிலாக இதுவரை தேர்ச்சி பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு :

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2021 செப்டம்பர் 8

- ❖ பட்டயப் படிப்பு - 1,591
- ❖ மேற்பட்டயப் படிப்பு - 1,107
- ❖ பட்டப் படிப்பு - 773

மேற்குறிப்பிட்ட திட்டங்கள் 22 நாடுகளில் அமைந்துள்ள 110 தொடர்பு மையங்களின்மூலமாக வழங்கப்படுகின்றன.

4. தமிழ் – மின்நூலகம் (Tamil Digital Library)

மின்நூலகம் உருவாக்குவதற்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முழுவதும் பயன்படுத்தப்பட்டது. மேலும், டாக்டர் உ.வே.சா. நூலகம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் உள்ள ஓலைச்சுவடிகளை மின்னுருவாக்கம் மற்றும் நூலடைவு செய்வதற்கு ரூ.1.05 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் இணையக் கல்விக் கழகம் மின்நூலக இணையதளம் (https://www.tamildigitallibrary.in) ஒன்றை உருவாக்கியுள்ளது. இம்மின்நூலகத்தில் 16 ஆம் நூற்றாண்டு முதல், இலக்கியம், சமயம், வரலாறு, மருத்துவம் மற்றும் அறிவியல் போன்ற பொருண்மைகளைக் கொண்ட அரிய நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் ஓலைச்சுவடிகள் வெளியிடப்பட்டுள்ளன. இது தெற்காசிய மொழிகளில் தமிழுக்கான மிகப்பெரிய மின்நூலகமாகத் திகழ்கிறது. இதுவரையில், 35,629 நூல்கள், பருவ வெளியீடுகள் மற்றும் 7,68,097 ஓலைச்சுவடிப் பக்கங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்த இணையதளத்தால் 1,45,06,345 பயனர்கள் பயனடைந்துள்ளனர்.

5. தமிழர் தகவலாற்றுப்படை

தொல்லியல், வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் பண்பாட்டுத் தடயங்களை உள்ளடக்கிய ஒளிப் படங்களைக் கொண்ட தமிழர் தகவலாற்றுப்படை (https://www.tagavalaatruppadai.in) என்ற இணையதளத்தை தமிழ் இணையக் கல்விக் கழகம் உருவாக்கியுள்ளது.

இந்தக் கலாச்சாரக் களஞ்சியமானது சிற்பங்கள், கல்வெட்டுகள், கோயில்கள், நாணயங்கள், அகழாய்வுகள், செப்பேடுகளுக்கான தகவல்கள் மற்றும் ஒளிப்படங்களை வழங்குகின்றது.

2021 செப்டம்பர் 8]

இந்த இணையதளத்தை இதுவரை 11,12,087 நபர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

6. இ - ஆசிரியர் திட்டம்

தமிழ் இணையக் கல்விக் கழகம், உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்களுக்கு இணையம்மூலம் தமிழ்க் கல்வியை வழங்கி வருகிறது. இ—ஆசிரியர் என்னும் திட்டத்தின்மூலம் முப்பரிமாண அசைவூட்டப் படங்கள், மெய்நிகர்ப் பலகை, மெய்நிகர் உண்மை போன்ற நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றைக் கொண்ட ஒருங்கிணைந்த கற்றல்தளம் வடிவமைக்கப்படவுள்ளது.

7. தமிழ் கணினியம்

தமிழ் கணினியம், தமிழ் மொழியை கணினிகள் புரிந்து கொள்ள உதவுகிறது. தமிழ் இணையக் கல்வி கழகம் தற்போது படச்செயலாக்கம், ஒளி எழுத்துணரி, கணினி மொழியியல் குறித்த பயன்பாடுகள், தமிழ் மென்பொருள் கருவிகள் உருவாக்கம் ஆகியவற்றினைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், சொற்றொடர் அமைப்பு, கட்டமைப்புகள், விதிமுறைகள், இலக்கண சரிபார்ப்புக் கருவி மற்றும் பேச்சு செயலாக்கக் கருவி ஆகியவற்றுக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

8. தமிழ் ஒருங்குறி (Unicode)

தமிழ் இணையக் கல்விக் கழகம், அமெரிக்காவிலுள்ள ஒருங்குறி சேர்த்தியத்தில் (Unicode Consortium) நிறுவன உறுப்பினராக உள்ளது. இதன்மூலம் தமிழ் மொழியின் அனைத்து எழுத்துகள், பழைய தமிழ்ச்சின்னம் மற்றும் பின்னக் குறியீடுகள், தமிழ் வட்டெழுத்துகள் போன்றவற்றை ஒருங்குறி சேர்த்தியத்தின் தரவு தளத்தில் சேர்க்க முடிகிறது.

9. பரப்புரைப் பணிகள்

9.1 கணித்தமிழ்ப் பேரவை

கணித்தமிழ்ப் பேரவை என்பது கணினித்தமிழ் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த உருவாக்கப்பட்ட ஒரு திட்டமாகும். அதன்படி, இதுவரையில் தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கணித்தமிழ்ப் பேரவையின் 200 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

9.2 கான் கல்விக்கழகக் கல்விக் காணொலிகளைத் தமிழாக்கம் செய்தல்

"கான் அகாடமி" என்ற நிறுவனம் கல்வி சார்ந்த காணொலிகளை கணிதம், அறிவியல், வரலாறு, கலை, மானிடவியல், பொருளாதாரம், நிதி போன்ற துறைகளில் ஆங்கிலத்தில் உருவாக்கியுள்ளது. இக்காணொலிகளைத் தமிழ் இணையக் கல்விக்கழகமானது பேரளவில் பயன்படுத்தும் நோக்கில் தமிழாக்கம் செய்துள்ளது. இதுவரை 4000—க்கும் மேற்பட்ட காணொலிகள் தமிழ்க்குரல் மற்றும் துணைத்தலைப்புகளுடன் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன.

10. மாதாந்திர தொடர்ச் சொற்பொழிவு

தமிழர் பாரம்பரியம், கலை, நாகரிகம் போன்றவற்றை ஊக்குவிக்கும் வகையில், முனைவர் அவ்வை நடராசன், முனைவர் மயில்சாமி அண்ணாதுரை, முனைவர் ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப, (ஓய்வு) முனைவர் நாகசாமி மற்றும் திரு. திருப்பூர் கிருஷ்ணன் போன்ற அறிஞர்களைக் கொண்டு மாதாந்திர தொடர்ச் சொற்பொழிவுகளை தமிழ் இணையக் கல்விக்கழகம் நடத்தி வருகிறது. இதுவரை 56 சொற்பொழிவுகள் நடத்தப்பட்டுள்ளன.

11. மாநாடுகள் மற்றும் இணையக் கருத்தரங்குகள்

11.1 ஆசிரியர் திறன் மேம்பாட்டு இணையவழிப் பயிலரங்கம்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் முன்முயற்சியாக "நவீன காலத் தமிழ்க் கணினியின் வளர்ச்சியும் அதன் புதிய நுட்பங்களும்" என்ற பொருண்மையில் ஆசிரியர் திறன் மேம்பாட்டு இணையவழிப் பயிலரங்கம் ஆகஸ்ட் 2020—ல் ஏழு நாட்கள் நடத்தப்பட்டது. இதில், சுமார் 800 பேர் பங்கேற்றனர்.

11.2 பன்னாட்டு இணையவழிப் பயிலரங்கம் - தமிழ் மொழியில் தொழில்நுட்பங்கள்

"தமிழ் மொழியில் தொழில்நுட்பங்கள்" என்னும் தலைப்பில் ஒரு வார பன்னாட்டு இணையவழிப் பயிலரங்கம் அக்டோபர் 2020—ல் நடத்தப்பட்டது. இது போன்ற பயிலரங்கங்கள் இனிவரும் காலங்களில் தொடர்ந்து நடத்தப்படும்.

2021 செப்டம்பர் 8]

11.3. பேச்சுப் போட்டி

தமிழ் இணையக் கல்விக்கழகம் அயல்நாட்டில் பயிலும் மாணவர்களின் தமிழ்மொழித் திறன்களை வெளிக் கொணர்வதற்கு ஏதுவாக, காணொலிப் பேச்சுப் போட்டிகளை நடத்தி வருகிறது. கடந்த வருடம் டிசம்பர் 2020—ல் நடத்தப்பட்ட போட்டியில் பல நாடுகளில் பயிலும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் 31 மாணவர்கள் பங்கேற்றனர்.

11.4. கணினித் தமிழ் - பன்னாட்டு மாநாடு

கணினித் தமிழில் மாணவர்களின் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், மார்ச் 2021—ல் "கணினித் தமிழ் வளர்ச்சியும், சவால்களும்" என்ற தலைப்பில் இரண்டு நாள் பன்னாட்டு மாநாடு நடைபெற்றது.

அத்தியாயம்-VII

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT)

1. முன்னுரை

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT) என்பது தமிழக அரசால் 2009 ஆம் ஆண்டில் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் அமைக்கப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்பாகும். ICTACT—ன் நோக்கம் உயர் கல்வி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், குறிப்பாக 2 மற்றும் 3 ஆம் நிலை நகரங்களில் பல்வேறு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களில் பயிற்சி அளிப்பதாகும்.

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் "ஏழு தூண்கள் அணுகுமுறை"யைக் கடைப்பிடிக்கிறது. இதன் ஏழு தூண்களாவன— ஆசிரியர் திறன் மேம்பாடு, மாணவர் திறன் மேம்பாடு, தொழில் முனைவோர் மேம்பாடு, இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல், டிஜிட்டல் அதிகாரமளித்தல், தொழில்—நிறுவனத் தொடர்பு, ஆராய்ச்சி மற்றும் ஆய்விதழ் வெளியீடுகள் ஆகியவை ஆகும். தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல்

நிறுவனம் தகவல் தொழில்நுட்பவியல் துறையைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் கொண்ட தன்னாட்சி குழுமூலம் நிர்வகிக்கப்படுகிறது.

2. தமிழ்நாடு ஐ.சி.டி அகாடமியின் செயல்பாடுகள்

தமிழ்நாடு ஐசிடி அகாடமியின் 2020—2021—ஆம் ஆண்டிற்கான முக்கிய செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் பின்வருமாறு :

2.1 ஆசிரியர் மேம்பாடு

91 உயர் கல்வி ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தமிழகத்தில் நடத்தப்பட்டு, அதன்மூலம் 2,239 உயர் கல்வி ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

2.2 திறன் மேம்பாடு

தமிழகத்தின் கிராமப்புறக் கல்லூரிகளில் இருந்து 7,578 பட்டதாரி மாணவர்களுக்கு அவர்களின் வேலைவாய்ப்பினை மேம்படுத்த ஐசிடி அகாடமியால் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.3 தொழில்முனைவோர் மேம்பாடு

தமிழகம் முழுவதும் 243 கல்லூரிகளைச் சேர்ந்த 76,733 மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில், 568 தொழில் முனைவோர் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

2.4 இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் (Youth Empowerment)

லேனத்தான் (Learnathons) — கல்லூரி மாணவர்களுக்கு சுயமாகக் கற்றல் பழக்கத்தை வளர்ப்பதற்கு ஏதுவாக, "நியூ இந்தியா லேனத்தான் 2020" (New India Learnathon 2020) நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் 1,25,818 மாணவர்கள் பங்கேற்று 2,84,881 ஆன்லைன் படிப்புகளை முடித்துள்ளனர்.

முதலாம் ஆண்டு கல்லூரி மாணவர்களுக்காக பிரத்தியேகமாக நடத்தப்பட்ட "ஸ்கில்எட்ஜ்" (SkillEdge) என்னும் புதிய திட்டத்தில், 19,534 மாணவர்கள் பங்கேற்றனர்.

2021 செப்டம்பர் 8]

கோவிட்19— பெருந்தொற்று காரணமாக கல்லூரிகள் மூடப்பட்ட சூழ்நிலையில், மாணவர்களுக்கு, தொழில் துறை சார்ந்த நிபுணர்களுடன் கலந்துரையாடி வகுப்பறைக்குச் சென்று கல்வி கற்க இயலாத நிலையை ஈடுகட்டும் விதத்தில் GET—SET—GO எனும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்முலம் 59,873 முதலாமாண்டு கல்லூரி மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

2.5 ஆய்விதழ்கள்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் தற்போது 6 சக மதிப்பாய்வு செய்யப்பட்ட சர்வதேச ஆராய்ச்சி ஆய்விதழ்களை காலாண்டு அடிப்படையில் வெளியிட்டு வருகிறது. 2020—21 ஆம் ஆண்டில், 188 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. இந்த ஆய்விதழ்கள் பல்வேறு சர்வதேச தரவுத்தளங்களில் குறியிடப்பட்டுள்ளன.

- ஐசிடிஏசிடி (ICTACT) தகவல் தொழில்நுட்ப ஆய்விதழ் (IJCT)
- ஐசிடிஏசிடி (ICTACT) ஒளிப்பேழை மற்றும் காட்சி ஒளிப்பேழை ஆய்விதழ் (IJIVP)
- ஐசிடிஏசிடி (ICTACT) மென்கணினி ஆய்விதழ் (IJSC)
- ஐசிடிஏசிடி (ICTACT) நுண்மின்னணுவியல் ஆய்விதழ் (IJME)
- ஐசிடிஏசிடி (ICTACT) மேலாண்மை ஆய்வுசார் ஆய்விதழ் (IJMS)

மேலும், தரவு அறிவியல் மற்றும் இயந்திரக் கற்றலின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம், 2020 ஆம் ஆண்டு முதல் “தரவு அறிவியல் மற்றும் இயந்திரக் கற்றல் குறித்த ஐசிடிஏசிடி ஜர்னல் (IJDSML)” என்ற பெயரில் ஒரு புதிய ஆய்விதழை அறிமுகப்படுத்தியுள்ளது.

2.6 டிஜிட்டல் அதிகாரமளித்தல் (Digital Empowerment)

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் மத்திய அரசின் திட்டமான பிரதான் மந்திரி கிராமின்

[2021 செப்டம்பர் 8

டிஜிட்டல் சக்க்ஷார்த்தா அபியான் (PMGDISHA) திட்டத்தின் மதிப்பீடு மற்றும் சான்றிதழ் முகமையாக உள்ளது. 2020-21 ஆம் ஆண்டுகளில் 14,79,812 நபர்களை டிஜிட்டல் கல்வியறிவில் சோதித்து, சான்றிதழ் வழங்கியுள்ளது.

2.7 குளோபல் டெக்னாலஜி ஃபோரம்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம், தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து வருடந்தோறும் "குளோபல் டெக்னாலஜி ஃபோரம்" (Global Technology Forum) என்ற மாநாட்டை நடத்தி வருகிறது. புதுமை மற்றும் தொழில்நுட்பம் குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த மெய்நிகர் மாநாட்டில், பல தொழில்களில் பல்வேறு உலகளாவிய நிபுணர்களைக் கொண்டு தொழில்நுட்ப அறிமுகவுரைகள், முக்கிய அமர்வுகள் மற்றும் பயிற்சி அமர்வுகள் ஆகியவை இடம் பெறும்.

குளோபல் டெக்னாலஜி ஃபோரம்-2020 மாநாடு ஐந்து நாட்கள் நடைபெற்றது. இதில், 51 முக்கியப் பேச்சாளர்கள், 21 சர்வதேச பேச்சாளர்கள் பங்கேற்றனர். 10 ஆழ்நிலைத் தொழில்நுட்பப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் 300—க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப ஆராய்ச்சி விளக்கக்காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

2.8 ஸ்கை கேம்பஸ் – கல்வியாளர்களுக்கான டிஜிட்டல் அறிவு இணையவழிக் கருத்தரங்குகள்

கோவிட்—19 பெருந்தொற்றினால் ஏற்பட்ட இடர்களை எதிர்கொள்ளும் வகையில், தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT), ஆசிரியர்களுக்கான டிஜிட்டல் அறிவு இணையவழிக் கருத்தரங்குகளை, தொடர்புடைய பல்வேறு தலைப்புகளில், தொழில் நிபுணர் அமர்வுகளுடன் அதன் ஸ்கை கேம்பஸ் தளத்தின்மூலம் அறிமுகப்படுத்தி நடத்தியது. 51 அமர்வுகளில், 8 பருவங்களில் நடத்தப்பட்ட இத்தொடரில் 1,91,023 கல்வியாளர்கள், 86 சிறந்த பேச்சாளர்களின் சிறப்புரைகளின்மூலம் பயனடைந்தனர்.

2021 செப்டம்பர் 8]

அத்தியாயம்-VIII

முடிவுரை

மக்களுக்குத் தூய்மையான நிர்வாகத்தை வழங்குவதும், தகவல் மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் தமிழகத்தை முதல் மாநிலமாக மாற்றுவதுமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய நோக்கமாகும். பங்கேற்கும் முறையில் அமைந்த, தரவுகளின் அடிப்படையிலான நிர்வாகத்தைச் செயல்படுத்துவதன் மூலமும், பொதுமக்களுக்கு விரைவான சேவைகளை வழங்குவதன் மூலமும் இந்த நோக்கம் நிறைவேற்றப்படும்.

*மாண்புமிகு முதலமைச்சரின் ஒட்டுமொத்த வழிகாட்டுதலின்கீழும், வருங்காலத்திற்கான ஆலோசனைக் குழுவின் (*Advisory Council for Future*) அறிவுரையின்படியும் இத்துறையின் குறிக்கோள் எட்டப்படும். தமிழகத்தின் வளங்களை மேம்படுத்தி தகவல் தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்ப நிறுவனங்களின் முதலீட்டினைத் தமிழகத்திற்கு ஈர்க்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இது, தமிழ்நாடு திறன்வாய்ந்த நன்மைகள் பெறவும், நீடித்த பொருளாதார வளர்ச்சியை அடையவும் மற்றும் தமிழக இளைஞர்களுக்கான உயர்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உதவும்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the
Tamil Nadu Legislative Assembly Rules and
printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.